(22a)

834/87

# தமிழ் நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# செயலக வெளியீடு
# OFFICIAL REPORT


வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 25, 1986-தொகுதி 224 எண் 3.
Friday, 25th April 1986-Volume 224 No. 3.



சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரு. 2.00]

(239)

பொருளடக்கம்.


| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்—விடைகள் .. .. .. | 379—397 |
| 2 கவன ஈர்ப்பு— | |
| (1) நெல்லிக்குப்பம், E. I. D. பாரி கம்பெனியிலிருந்து வெளியாகும் கழிவு நீர் கெடிலம் நதியில் கலப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்து | 397—400 |
| (2) 22 வகை கைத்தறித் துணி ரகங்களை ஆலைகளும் விசைத்தறிகளும் தயாரிக்கக் கூடாது என்ற சட்டத்தை அமுல் படுத்தக் கூடாது என்று சென்னை உயர்நீதி மன்றம் தடை விதித்திருப்பதால் நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து | 400—404 |
| 3 மேலவைத் துணைத் தலைவர் தேர்தல் .. | 404—42 |
| 4 அரசின் தீர்மானம்— | |
| கூட்டுறவுத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு | 416—49 |
| 5 அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் | 49 |

2.39

143554

D

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1985 ஏப்ரல் 25.

சித்திரை 12, அட்சய, திருவள்ளுவராண்டு—2017.

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10.00 மணி அளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள் விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா எண்கள் 191 மற்றும் 192 ஒத்திவைக்கப்படுகின்றன.

### காச நோயாளிகள்

* 193 வினா—திரு. க. சுப்பு (திரு. அ. ப. சிவராமன் சார்பில்) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் காச நோயாளிகளின் சிகிச்சைக்காக, 1985-86 ஆம் நிதியாண்டில், செலவு செய்ய அரசு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு?

(இ) அதை கூடுதலாக்கும் கருத்து அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் காச நோயாளிகளின் சிகிச்சைக்காக 1985-86-ம் நிதியாண்டில் செலவு செய்ய அரசு ஒதுக்கியுள்ள தொகை ரூ. 219.50 லட்சம். அதில் மருந்துகளுக்கான ஒதுக்கீடு ரூ. 39.50 லட்சம் ஆகும்.

(இ) மேற்கூறிய தொகைகளை கூடுதலாக்கும் கருத்து அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

### அம்மை நோய்

* 194 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திண்டிவனத்தை அடுத்த செங்காணிகுப்பத்தில், 1985 அக்டோபரில், ஒருவித அம்மைநோய் கண்டதில் சில குழந்தைகள் இறந்துவிட்டன என்பது உண்மையா?

**(இ)** ஆம் எனில், இறந்துபோன குழந்தைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

**(உ)** அந்நோயைக் குணப்படுத்தவும், அது மேலும் பரவாமல் தடுக்கவும், அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) ஆம்.

**(இ)** இறந்துபோன குழந்தைகளின் எண்ணிக்கை 21.

**(உ)** தட்டம்மை நோய் கண்ட குழந்தைகள் திண்டிவனம், அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. மருத்துவக் குழுவும் அக்கிராமத்திற்குச் சென்று அங்குள்ள குழந்தைகளைப் பரிசோதித்து நோய் மேலும் பரவாமல் இருக்க கண்காணிப்புப் பணிகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. தற்சமயம் நிலவரம் கட்டுக்குள் அடங்கியுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, தட்டம்மை நோய் வந்ததற்குப் பின்னாலே அந்தப் பகுதிக்கு மருத்துவக் குழு சென்று, ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி அம்மை நோய்கள் வராது இருப்பதற்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாக அறிகிறேன். அதைச் சிறந்த முறையில் நாடு முழுவதும் சிறப்பாகச் செயல்படுத்தியிருந்தால், அங்கு இப்படிப்பட்ட நோய்களுக்கு ஆளாகி 21 குழந்தைகள் இறப்பதற்கு அவசியம் இருந்திருக்காது. எனவே மருத்துவத் துறையை மேலும் முடுக்கிவிட்டு, இப்படிப்பட்ட நிலை இனிமேல் வராத அளவுக்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படுவதற்கு முன்கூட்டியே, ஒரு நோயாளி வந்த உடனே, அந்தத் தகவல் கிடைத்த உடனே அங்கு குழந்தைகள் ஸ்பெஷலிஸ்ட் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அதற்கு தடுப்பு நடவடிக்கைகள் இன்னும் தீவிரப்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். தடுப்பு நடவடிக்கைகளைப் பொறுத்தவரை, 'மீசல் வாக்சின்' கொடுக்க வேண்டும். அதை மத்திய அரசு ஒதுக்கீடு செய்கிறது. சென்ற 4 ஆண்டுகளாக, 1983-84-ல் மட்டும் ரோட்டரி சங்கத்தின் மூலமாக, அகில உலக சங்கத்தின் மூலமாக மீசல் வாக்சின் அரசால் குழந்தைகளுக்குக் கொடுக்க முடிந்தது. அதை அரசு மிக நல்ல முறையில் செய்திருக்கிறது என்று ரோட்டரி சங்கத்தின் தலைவராக





இருக்கக்கூடிய கவர்னர் கூட பாராட்டியிருக்கிறார்கள். அந்த மீசல் வாக்சி அடுத்த ஆண்டு அரசுக்குக் கிடைக்கவில்லை. இரண்டு மாவட்டங்களுக்கு தான் அது கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டு ஒரு நல்ல மகிழ்ச்சிகரமா செய்தியைத் தர விரும்புகிறேன். தமிழக அரசு மத்திய அரசிடம் பேசியிரு இறது. அதை 10 லட்சம் குழந்தைகளுக்குக் கொடுப்பதற்காக ஏற்பா செய்திருந்தார்கள். உண்மையிலேயே கடந்த 21 ஆம் தேதியன்று நல்வாழ்வு துறைச் செயலாளர் அவர்களை அனுப்பி 13 லட்சம் குழந்தைகளுக்காவது ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்குப் பிறகு மத்திய அமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந் ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் கூறிய மாதிரி, தமிழகமெங்கும் எல்லா குழந்தைகளுக்கும் மீசல் வாக்சின் போடுவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது

(முற்பகல் 10-05)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, மத்திய அரசிலிருந்து சென்ற ஆண்டுக்கு முன் ஆண்டில் போதிய அளவுக்குத் தட்டம்மை நோய்க் கான மருந்து வழங்கியதாகவும், அடுத்த ஆண்டு சரியாக வழங்கவில்லை என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த 'அலாட்மென்ட்' மத்திய அரசுதான் தர வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். மாநில அரசே தடுப்பு ஊசி மருந்துகளைத் தயாரிக்கக் கூடிய வாய்ப்பு இல்லையா? அல்லது அந்த மருந்து அங்கே இருந்துதான் வர வேண்டுமா? அப்படி அங்கிருந்துதான் பெறப்பட வேண்டுமென்றால், ஒரு ஆண்டுக்கு முன்கூட்டியே திட்டமிட்டு மத்திய அரசிடமிருந்து உரிய காலத்தில் அதைப் பெற முடியாதா? அப்படிப் பெற முடியாததற்குக் காரணம் என்ன? எனவே அதை இங்கேயே தயாரிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இது நல்ல கேள்வி. நாம் எந்த அளவுக்கு இந்தத் திட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்த வாய்ப்பு அளிப்பதாக இந்தக் கேள்வி அமைந்திருக்கிறது. மத்திய அரசுக்கும் இதில் பிரச்சினை இருக்கிறது. ஒட்டுமொத்தமாக எல்லா மாநிலங்களும் இந்த மருந்தைக் கேட்கிறார்கள். அந்த நிலையில் மத்திய அரசைப் பொறுத்த வரையில், அகில இந்திய அளவில் 40 சதவீதக் குழந்தைகளுக்குத்தான் மருந்து ஸ்டாக் இருக்கிறது. அதனையும் மத்திய அரசு வெளிநாட்டிலிருந்து தான் இறக்குமதி செய்ய வேண்டும். கசோலி என்கிற ஒரே ஒரு இடத்தில் மட்டும் இந்தியாவில் அந்த மருந்தைத் தயாரிக்கிறார்கள். எனவே மத்திய அரசுக்கு இருக்கிற பிரச்சினையை நாம் உணர்ந்திருக்கிறோம். 1983-84 ஆம் ஆண்டில் மத்திய அரசே அவ்வளவு மருந்தையும் கொடுக்கவில்லை. ரோட்டரி சங்கத்தின் மூலமாகவும் நாம் வாங்கியதால், தப்பித்துக் கொண்டோம். அதற்

காக ரோட்டரி சங்கத்திற்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், அவர்கள் இந்த ஆண்டும் கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வெளிநாடுகளிலிருந்து மருந்தை வாங்கியிருப்பதால், இப்போது ஸ்டாக் பொசிஷன் நன்றாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அந்த மருந்தை இங்கே கிங் இன்ஸ்டிடியூட்டில் நாமே தயார் செய்யும் கருத்தும் இருக்கிறது. கென் ஹாக் என்பவர் நமக்கு உதவி செய்கிறேன் என்று சொல்லி இருக்கிறார். அந்த முயற்சியிலும் ஈடுபட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** 1980 ஆம் ஆண்டில் நான் ரோட்டரி சங்கத்தின் ஆளுநராக இருந்தபோது, தமிழ் நாட்டில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் ரோட்டரி சங்கத்தின் சார்பாக தட்டம்மைத் தடுப்பு ஊசி போடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தேன். அந்த அடிப்படையில் லட்சக் கணக்கான குழந்தைகளுக்கு 5 ஆண்டுகளுக்கு அது தரப்பட்டது. அண்மையில் நான் சிக்காகோ சென்றிருந்தபோது, இன்னும் 5 ஆண்டுக் காலத்திற்கு இலவசமாக ரோட்டரி சங்கம் — அதாவது சர்வதேச ரோட்டரி சங்கத்தின் அறக்கட்டளை தயாராக இருக்கிறது. அதன் அடிப்படையில் அமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு பேச வேண்டும். இதற்கு "போர்டு காம்ப்ளெக்ஸ் அக்ரிமெண்ட்" தடையாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. தட்டம்மை தடுப்பு ஊசி செய்வதற்கான நோ-ஹவ்வைத் தருவதற்கு சர்வதேச ரோட்டரி சங்கம் தயாராக இருக்கிறது. எனவே அரசே கூட முயற்சித்தால், அதை இங்கேயே நாம் தயாரிக்கலாம். ரோட்டரி சங்கமும் உதவி செய்யும். எனவே அதற்கான முயற்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னது முற்றிலும் உண்மை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவர் இன்னும் துணைத் தலைவர் ஆகவில்லை. (சிரிப்பு).

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னது அனைத்தும் உண்மை. இதில் என்ன பிரச்சினை என்றால், மத்திய அரசாங்கம் இதற்கு 'கிளியரன்ஸ்' கொடுக்க வேண்டும். மத்திய அரசு 'கிளியரன்ஸ்' கொடுக்கவில்லை என்றால், நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. சாதாரணமாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிற எந்த மருந்தானாலும் சரி, அதை ஒரு '[illegible]



கட்டுப்படுத்துகிற நிலை இருக்கிறது. எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட்டுவிட கூடாது என்று சில நிபந்தனைகளை வைத்து, அதற்கெல்லாம் நாம் உட பட்டுத்தான் நாம் மருந்துகளை வாங்குவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கிறார்கள் அண்மையில் மத்திய அரசாங்கத்தினுடைய துறையோடு தொடர்பு கொண் 'கிளியரன்ஸ்' வாங்கியிருக்கிறோம். இருந்தாலும் 2, 3 நிபந்தனைகளை போட்டுத்தான் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ரோட்டரி சங்கத்தின் சார்பாக அதன் மூலமாக போலியோ வேக்சின் தருகிறோம் என்று சொல்லியிரு கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதை போல், அவர்கள் இந்த மருந்து உற்பத்திக்கான டெக்னிகல் நோ-ஹவ் கொடு கிறோம் என்று சொன்னார்கள். அதற்குக்கூட மத்திய அரசிடம் அனுமதி ஏற்பாடு செய்து வருகிறோம். இதிலே இருக்கிற சிக்கல் என்னவென்றால், வெளிநாடுகளிலிருந்து எந்த ஒரு சின்ன உதவியைப் பெறுவதாக இருந்தாலும், மத்திய அரசினுடைய ஒப்புதல்—முதலில் 'அபிஷியல் கிளியரன்ஸ்', பிறகு அமைச்சர் 'கிளியரன்ஸ்' என்று வாங்கிய பிறகுதான் பெற முடியும். கிளியரன்ஸ் இல்லாமல், நாம் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே எதிர்பார்த்த அளவுக்கு வேகமாக நம்மால் செயல்பட முடியாமல், தாமதமாகச் செய்ய வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு எம். பி. சுப்பிரமணியம் :** அம்மை தடுப்பு நோய்பற்றி அமைச்சர் அவர்கள் இங்கே விவரித்திருக்கிறார்கள். ஆனால் கேள்வியில் குறிப்பிடப் பட்டிருப்பது அம்மை நோய் அல்ல. ஒரே கிராமத்தில் 21 குழந்தைகள் சாகிற அளவுக்கு அது இன்ன நோய் என்று கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு அதற்குச் சரியான மருத்துவம் இல்லாத நிலைமையில் குழந்தைகள் இறந்ததாகவும் 2 மாதம் கழித்துத்தான் அது தெரிய வந்ததாகவும் சொல்லப் படுகிறதே. அப்படியானால் அது என்ன நோய் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மூலக் கேள்விக்குப் பதில் சொல்லும்போதே சொல்லியிருக்கிறேன். இறந்து போன குழந்தைகளின் எண்ணிக்கை 21. தென்னாற்காடு மாவட்டத்திலே மட்டும் இப்படி ஏன் வந்தது என்று ஆராய்ச்சி செய்திருக்கிறோம். அங்குள்ள குழந்தைகளுக்கு உடல்நலம் சரியில்லாமல் இருப்பதோடு மட்டுமல்லாமல் நியூட்ரிஷன் லெவலும் மிகக் குறைவாக இருக்கிறது என்பது அந்த ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்டது. அதாவது அந்தக் குழந்தைகள் மிகவும் நல்ல வகையிலே சத்துணவு இல்லாமல், வைட்டமின்கள் இல்லாமல், ஆரோக்கியமற்ற [illegible]

இருக்கக் கூடிய குழந்தைகளாக இருப்பதால், இந்த அணு வந்தவுடனே 'ரீயாக்ஷன்' மாதிரியாகி இந்த வியாதி வந்தது என்று கண்டுபிடிக்கப்பட்டது. குழந்தை நிபுணர்கள், டாக்டர்கள் சென்று கண்டுபிடித்த தகவல் இது. ஒட்டுமொத்தமாகத் தடுக்க வேண்டிய சக்தி குழந்தைகளுக்குத் தேவை என்ற வகையிலே அந்தக் குழந்தைகளுடைய நியூட்ரிஷன் லெவலை அதிகமாக்க வேண்டும். அதற்காகத்தான் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அந்த வகையிலே எல்லா வகையான பாதுகாப்பான நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது.

**திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** இரண்டு நாட்களுக்கு முன்பு, தடுப்பு ஊசி போடப்பட்டதால், குழந்தைகள் இறந்துவிட்டதாக ஒரு செய்தியைப் பத்திரிகையில் பார்த்தேன். இது நம்முடைய மாநிலத்தில் அல்ல. நோய்களைத் தடுப்பதற்காக போடப்படும் இப்படிப்பட்ட தடுப்பு ஊசி மருந்துகள் நல்ல மருந்துகளாக, இப்படிப்பட்ட பீதியைக் கிளப்பாத மருந்துகளாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மகாராஷ்டிரா மாநிலத்தில் ஏற்பட்டதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறார் என்று நினைக்கிறேன். மகாராஷ்டிராவில் நடந்தது, அவர்களுக்குத்தான் தெரியும். அதை அவர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காக, மகாராஷ்டிராவில் ஏற்பட்டிருக்கக்கூடிய அந்த நிலைமைகள் நமக்குப் பாடமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அம்மை நோயில் பலவகைகள் இருக்கின்றன. எந்த வகையாக இருந்தாலும் கோடைக் காலத்திலேதான் அவை அதிகமாகத் தாக்குகின்றன. குழந்தைகளை மிக அதிகமாக நோய் தாக்கக் கூடிய அந்தக் கோடைக் காலம் ஆரம்பித்துவிட்டதால், அதிகமான குழந்தைகள் இத்தகைய நோய்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்ற செய்தி எங்களுக்கு வந்திருக்கிறது. ஆகவே கோடைக் காலத்திற்கென்று சிறப்பு நடவடிக்கை, தீவிர தடுப்பு நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தட்டம்மையைப் பொறுத்த வரையில், மருந்துகள் இருக்கின்றன. துரதிருஷ்டவசமாக சிக்கன்பாக்ஸைப் பொறுத்த வரையில், தடுப்பு மருந்துகள் கிடையாது. சுமால்-பாக்ஸ் அறவே ஒழிக்கப்பட்டிருக்கின்றது. சிக்கன்-பாக்ஸைப் பொறுத்த வரையில், அது



வராமலிருக்க குழந்தைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று அறிவுரை வழங்கலாமே தவிர, தடுப்பு ஊசி போட முடியாத நிலையில் இருக்கிறோம்.

**திரு. மு. மாசிலாமணி :** திண்டிவனத்தை அடுத்த சின்னக்குப்பத்தில் 21 குழந்தைகள் இறந்துவிட்டன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த 21 குழந்தைகளில் ஆண் குழந்தைகள் எத்தனை, பெண் குழந்தைகள் எத்தனை? பொதுவாக இன்றைய தினம் செங்கற்பட்டு மாவட்டம் மற்றும் சென்னை பூராவும் அம்மை நோய் கண்டு குழந்தைகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். தட்டம்மை, பயிர் அம்மை, பெரிய அம்மை போன்ற வியாதிகளை இயற்கை வைத்தியத்தின் மூலமாக தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் மருத்துவமனையில் உள்ள செவிலியர்கள், ஆயாக்கள், டாக்டர்கள் ஆகியவர்கள் மருத்துவமனைகளை போதிய அளவிற்குச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் அரசு அறிவுரை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** ஆண் குழந்தைகள் எத்தனை, பெண் குழந்தைகள் எத்தனை என்ற குறிப்பு என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை சொல்லியிருக்கிறார். குழந்தைகளுக்கு நியூட்ரிஷன் லெவல் நல்ல வகையில் அமைய வேண்டும் என்பதற்காக, பால் போன்றவைகளும், மல்டி விட்டமின் டிராப்ஸும் கொடுக்க வேண்டும் என்ற உணர்வைக் கொண்டிருக்கிறோம். இத்தகைய பணியில் பொதுவாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

சேலம், தென்னார்க்காடு ஆகிய இரண்டு மாவட்டங்களில் உள்ள குழந்தைகளின் நியூட்ரிஷன் லெவல் குறைவாக இருக்கிறது என்று பல ஆண்டுகளுக்கு முன்பே 'டானிடா' நிபுணர்கள் பார்த்து வந்துதான் இந்தத் திட்டத்தை இரண்டு மாநிலங்களுக்கும் கொடுத்தார்கள். இந்த இரண்டு திட்டங்கள் மாத்திரமல்லாமல், எங்கெங்கே குழந்தைகளுக்கு 'நியூட்ரிஷன் லெவல்' குறைவாக இருக்கிறதோ அங்கெல்லாம் உள்ள ஹெல்த் ஆபிசர்களிடம் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தட்டம்மை குறித்து தமிழக அரசும், ரோட்டரி சங்கமும் இணைந்து தடுப்பூசி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ரோட்டரி சங்க உறுப்பினர் என்ற முறையில் பல இடங்களில் இதை நேரிடையாகப் பார்த்தவன் நான். தமிழகத்திலே எத்தனை குழந்தைகளுக்குத் தட்டம்மை தடுப்பு ஊசி போடப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்

[1986 ஏப்ரல் 25

(முற்பகல் 10-15)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, என்னால் ஒட்டுமொத்தமாகச் சொல்ல முடியும். 10 லட்சம் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தமிழ் நாட்டிற்குக் கூடுதல் அரிசி

*195 வினா.—திரு. க. சுப்பு (திரு. அ. ப. சிவராமன் சார்பில்): மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மத்திய அரசிடம், மாநில அரசு, இவ்வாண்டு கூடுதல் அரிசி ஏதேனும் கோரியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு சு. திருநாவுக்கரசு: (அ) மற்றும் (இ) ஆம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசுக்கு கடிதம் மூலமாகவும், நேரடியாகவும் வற்புறுத்தியதற்கு இணங்க ஆகஸ்ட் மாதத்தில் 20 ஆயிரம் மெட்ரிக் டன்னும், செப்டம்பரில் 30 ஆயிரம் மெட்ரிக் டன்னும், அக்டோபரில் 40 ஆயிரம் மெட்ரிக் டன்னும், நவம்பர் டிசம்பர் மாதங்களில் தலா 90 ஆயிரம் மெட்ரிக் டன்னும், ஜனவரி மாதம் 86-ல், 65 ஆயிரம் மெட்ரிக் டன்னும், பிப்ரவரி மாதம் 86-ல், 40 ஆயிரம் மெட்ரிக் டன்னும், மார்ச் மாதம் 86-ல் 40 ஆயிரம் மெட்ரிக் டன்னும் என்ற அளவுக்கு மத்திய அரசு மத்திய தொகுப்பிலிருந்து மாநில அரசுக்கு அளித்திருக்கின்றது. தொடர்ந்து வரும் சில மாதங்களுக்கும் மீண்டும் ஒரு லட்சம் டன் ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசுக்கு, மாநில அரசு கடிதம் எழுதி உள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, மத்திய தொகுப்பிலிருந்து நாம் அரிசி கேட்கிறோம். அதே நேரத்தில் மத்திய தொகுப்பிற்கு மாநிலத்தில் இருந்தும் செலுத்துகிறோம். நம்முடைய மாநிலத்திலிருந்து இவ்வாண்டு செலுத்தப்பட்டிருக்கின்றதா? இப்போது நாம் கேட்கின்ற அளவுக்கு அவ்வப்போது அவர்கள் தருகின்றார்களா? நாம் கேட்கின்ற அளவுக்குக் குறைவாக அவர்கள் நிர்ணயம் செய்கின்றார்களா? அதை தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே இந்த ஆண்டு மத்திய தொகுப்புக்கு நாம் எதும் ஒதுக்கீடு செய்யவில்லை. அதற்குக் காரணம் நம்மிடத்திலே கையிருப்பு



1986 ஏப்ரல் 25]

இல்லாதது. அதனாலே நாமே அவர்களிடத்திலே ஒதுக்கீடு கேட்டுக்கொண்டிருக்கிறோம். சுமார் 2 ஆண்டுகளுக்கு ஒரு லட்சம் டன் அளவுக்கு மத்திய தொகுப்புக்கு தமிழ்நாடு அரசு ஒதுக்கியிருந்தது. நாம் கேட்கின்ற அளவில் பெரும்பாலும் ஒரு லட்சம் டன்னுக்கு 90 ஆயிரம் டன் வரைக்கும் 2 மாத காலம் தந்துவந்தார்கள். இப்போது கடந்த 3 மாத காலமாக 40 ஆயிரம் டன் ஒதுக்கீடு இருக்கிறது. அதே நேரத்திலே கேரளா, மேற்கு வங்காளம் மாநிலங்களுக்கு 1½ லட்சம் டன், 2 லட்சம் டன் வரை கொடுக்கின்றார்கள். இப்போது இருக்கின்ற சூழ்நிலையின் அடிப்படையிலே நமக்குத் தரப்படுகின்ற ஒதுக்கீட்டிற்கு ஒரு லட்சம் டன் அதிகரித்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசு உதவும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. எம். பி. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, 1984-85, 1985-86 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் மத்திய தொகுப்பில் 3 கோடி டன் அளவுக்கு உணவு கொட்டி வைத்திருப்பதாகவும், சரியான கிடங்கு இல்லை என்றும் அது கெட்டுவருவதாகவும், வெளிநாடுகளுக்கு அனுப்பலாமா என்றும், ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.இ.பி. ஸ்கீம்களுக்கு ஒதுக்குவதாகவும் இருக்கின்றது என்கின்றார்கள். அப்படி இருக்கும்போது, 12 மாதங்களுக்கு 12 லட்சம் நமக்குக் கொடுப்பதிலே மத்திய அரசுக்கு என்ன சங்கடம் இருக்கின்றது? இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாதாடியிருக்கின்றார்களா? அதற்கு விளக்கம் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியிலுள்ள உறுப்பினர் அவர்களுக்கு நான் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசுக்கு மாநில அரசு தொடர்ந்து கடிதம் மூலமாகவும் நேரடியாகவும் தொடர்பு கொண்டு வற்புறுத்திக்கொண்டு வருகிறது. ஓரளவுக்கு போதுமான அளவுக்கு கையிருப்பு இருக்கின்றது. உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல அவர்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கின்றார்களோ இல்லையோ அது வேறு விஷயம். நாம் நம்முடைய தேவைக்கு ஏற்ப மத்திய அரசைக் கேட்கிறோம். ஒரு லட்சம் டன் அரிசியை தரமான அரிசியை நிச்சயமாக தமிழக அரசுக்குத் தரவேண்டும் என்று தொடர்ந்து வற்புறுத்துவேன்.

## நெல் கொள்முதல் நிலையங்கள்

*196 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1985, செப்டம்பரில், தஞ்சாவூர் மாவட்டத்தில், தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால், திறக்கப்பட்ட நெல் கொள்முதல் நிலையங்கள் எத்தனை?

(இ) அவற்றின் மூலம், எதிர்பார்த்த அளவுக்கு, நெல் கொள்முதல் ஆகவில்லை என்பது உண்மையா?

(ஈ) ஆம் எனில், அதற்குரிய காரணங்கள் யாவை?

(உ) அது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** (அ) 1985ஆம் ஆண்டு சுமார் 109 நெல் கொள்முதல் நிலையங்கள் நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் தஞ்சை மாவட்டத்திலே திறக்கப்பட்டன.

(இ) ஆம்.

(ஈ) ஏறத்தாழ இந்த மாதத்தின் நெல் மையங்களிலே சுமார் 3,434 டன் நெல் கொள்முதலாகியிருக்கிறது.

(உ) கொள்முதல் விலைகளுக்கு மேலாக 1—10—1985 முதல் சுமார் 20 ரூபாய் ஊக்குவிப்புத் தொகையாக ஒரு குவிண்டாலுக்கு வழங்கப்பட்டது. அதற்குப் பின்னாலே 1—11—1985 முதல் சுமார் 35 ரூபாய் என்று அதிகமாக ஆக்கி விவசாயப் பெருமக்களுக்கு ஒரு குவிண்டாலுக்கு வழங்கப்பட்டு வந்தது. இதுவரையில் ஏறத்தாழ 7 லட்சம் டன் அளவுக்கு தஞ்சையிலே கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது.

(முற்பகல் 10-20)

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக அங்கே வாங்கப்படுகிற நெல்லுக்கு இப்போது குவிண்டாலுக்கு 35 ரூபாய் அதிகமாகத் தந்தாலும், அந்த விலை கட்டுப்படியாகவில்லை என்று விவசாயிகள் கருதுவதையும், அதன் காரணமாகத்தான் அங்கே நெல் கொள்முதல் போதிய அளவுக்கு ஆகவில்லை என்பதையும் அரசு உணருமா? அதுமட்டுமல்லாமல், நெல் கொள்முதல் நிலையங்களைப் பரவலாக வைக்காமல், சில இடங்களில் வைப்பதால், நீண்ட தூரம் வந்து நெல்லைத் தர வேண்டிய அவசியம் இருப்பதால், விவசாயிகள் நெல்லைக் கொண்டு வந்து தருவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். அதனால் அந்தக் கடைகளைப் பரவலாக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மட்டும் சுமார் 545 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. விவசாயப் பெருமக்களின் நலன் கருதி, தொலைவு, பாதை, ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு எங்கேயாவது புதிதாகக் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட வேண்டுமென்று வேண்டுகோள் வந்தால், அவையும் உடனுக்குடன் கவனிக்கப்பட்டு, சமீபத்தில் இந்த



எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அடுத்து, நெல்லுக்கு வழங்கப்படுகிற விலை போதுமானதாக இல்லை என்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்யும் பொறுப்பு தமிழக அரசுக்குக் கிடையாது. மத்திய அரசுதான் விலை நிர்ணயம் செய்கிறது. மத்திய அரசு நெல்லுக்கு நிர்ணயம் செய்துள்ள விலையைக் காட்டிலும் தமிழகத்திலே, விவசாயத் துறையின் மூலமாக 35 ரூபாய் கூடுதலாகத் தந்து கொண்டிருக்கிறோம். நெல்லின் விலையை அதிகரித்து நிர்ணயிக்க வேண்டுமென்று மத்திய அரசையும், அதற்காக இருக்கிற விலை நிர்ணயக் குழுவையும் தமிழக அரசு வலியுறுத்தி இருக்கிறது. தொடர்ந்து வலியுறுத்தும். தமிழக அரசு கொடுக்கும் 35 ரூபாயையும் பணமாகத் தரக்கூடாது என்று ரிசர்வ் வங்கி ஆட்சேபணை செய்கிறது. அதனால்தான் இடுபொருள் மானியமாக தமிழக அரசின் சார்பிலே, விவசாயத் துறை சார்பிலே கொடுக்கிறார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் அளிக்கின்றபோது 109 மையங்களிலே நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக நெல் வாங்கப்படுகிறது என்று சொன்னதாக நினைவு. அதற்குப் பிறகு 545 நிலையங்கள் என்று சொல்லுகிறார்கள். இதில் எது சரி?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** தலைவரவர்களே, 1985-லே மட்டும் திறக்கப்பட்டது 109. இப்போது மொத்தம் இருக்கிற கொள்முதல் நிலையங்கள் 545.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** கொள்முதல் நிலையங்களுக்கு விவசாயிகள் நெல்லைக் கொண்டு வரும்போது, அங்கே இருக்கும் ஊழியர்கள் ஈரமிருக்கிறது என்று குறை சொல்லி, அவற்றைத் திருப்பி விடுவதும், அதுமட்டுமல்லாமல் ஒரு மூட்டைக்கு இந்த அளவுக்குப் பணம் தர வேண்டுமென்று விவசாயிகளை நிர்ப்பந்தப்படுத்துவதும் இருப்பதால், விவசாயிகள் தொல்லைக்கு ஆளாகிறார்கள் என்பதை அரசு உணருமா? அப்படிப்பட்ட தொல்லைகளைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** மழைக் காலங்களில் ஈரப்பதம் இருக்கும்போது, சுமார் 20 சதவிகிதம் வரைக்கும் விவசாயப் பெருமக்களின் நலன் கருதி நேரடிக் கொள்முதல் நிலையங்களில் உள்ள ஊழியர்கள் நெல்லை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அரசு சொல்லி, அதற்குரிய வகையிலே விவசாயப் பெருமக்களுக்கு உதவுகிறது. இப்போது அந்தப் பிரச்சினை கிடையாது. ஏனென்றால் மழையோ ஈரப்பசையோ இருக்கும் பிரச்சினை இப்போது கிடையாது. மழைக் காலங்களில்தான் அந்தப் பிரச்சினை,

அதற்குரிய ஆணைகளை அந்தக் காலங்களில் அரசு இடுகிறது. சாதாரண காலங்களில் நெல் கொண்டுவரும்போது, பணியாளர்கள் இவ்வளவு தரவேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல, எந்தவிதமான குற்றச்சாட்டும் வரவில்லை. எங்கேயாவது சில இடங்களில் அப்படி இருந்து, அது மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கவனத்திற்கு வந்தால், அதைச் சொன்னால், உரிய நடவடிக்கைகள் அவர்கள்மீது எடுக்கப்படும்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, கொள்முதல் நிலையங்களுக்கு விற்பனைக்காக எடுத்துச் செல்லப்படும் நெல்லை அளக்கின்ற தொழிலாளர்கள், அதிலிருந்து 2 கிலோ, 3 கிலோ நெல்லைத் தனியாக எடுத்து வைத்துக்கொள்கிறார்கள் என்றும், குறைந்தது ஒரு மூட்டைக்கு 2 ரூபாய் கொடுத்தால்தான் அந்த நெல்லைக் கொடுக்கிறார்கள் என்றும் புகார்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வந்திருக்கிறது. அது அரசுக்கு வந்திருக்கிறதா? புகார்கள் கிடைத்திருந்தால், அப்படி இனி நடக்காமல் இருக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(முற்பகல் 10-25)

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** நேரடிக் கொள்முதல் முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட பிறகு, நானும் உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையரும், தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்றும் உள்ள அதிகாரிகளும், அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினரையும் அழைத்து நேரில் சென்று நேரடிக் கொள்முதல் நிலையங்களிலே உள்ள நிலைமைகளை, விவரங்களைக் கேட்டறிந்தோம். அங்கே வந்திருந்த விவசாயப் பெருங்குடி மக்களிடம் இதுபற்றி கேட்டோம். அவர்களும் இதுகுறித்து மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறார்கள். விலை போதவில்லை என்பது வேறு பிரச்சினை. அதுபற்றி மத்திய அரசோடு வாதாடிக் கொண்டிருக்கின்றோம். தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டிருக்கின்றோம். ஆனால் கொள்முதல் நிலையங்களில் பணியாளர்களாக இருந்தாலும் சரி, அங்கேயுள்ள விலையாக இருந்தாலும் சரி, உடனடியாகப் பணம் தருவதைப் பொறுத்தவரையிலும் சரி, எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. அங்கேயுள்ள விவசாயிகள் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறார்கள். எந்தவிதமான குற்றச்சாட்டும் இதுவரை அரசுக்கு வரவில்லை. அப்படி எங்கேயாவது ஒரு கடையிலே பிரச்சினை இருக்கிறது என்றால், அதைக்குறித்து குறிப்பிட்டுச் சொன்னால், உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.



## வெளி மாநில பரிசுச்சீட்டுகள்.

* 197. வினா—**திரு. எல். ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

தமிழகத்தில், வெளி மாநில பரிசுச்சீட்டுக்களின் மீது விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியை, இரத்து செய்யும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** இல்லை.

**திரு. ஜேப்பியார் :** அமைச்சர் அவர்கள் இல்லையென்று கூறினார்கள். ஆனால் அண்மையில் பட்ஜெட்டில் 20 பெர்சென்டைக் குறைத்திருக்கிறார்கள். அதை முழு அளவில், இப்பொழுது இல்லையென்றாலும் கூட, எதிர்காலத்திலாவது ரத்து செய்ய இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** 17—3—1986 அன்று தாக்கல் செய்யப்பட்ட நிதி நிலை அறிக்கையில் 20 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாக விற்பனை வரி குறைக்கப்பட்டுள்ளது. ஆகவே அதை நீக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை. அரசின் வருவாயைப் பெருக்குவதற்காகத்தான் அந்த வரி விதிக்கப்பட்டது. ஆண்டு ஒன்றுக்கு 20 கோடி ரூபாய் வருவாய் வரும் என்று எண்ணி அது விதிக்கப்பட்டது. வரி ஏய்ப்பவர்களால், குறிப்பாக அண்டை மாநிலங்களில் பரிசுச்சீட்டுகள் வெளியிடப்படுவதால் வரி ஏய்ப்பு செய்யப்பட்டது. இப்பொழுது கர்நாடகா மற்றும் கேரளா போன்ற மாநிலங்களில் வரி விதிப்பு செய்யப்பட்டிருக்கிறது. எனவே இனிமேல் இதிலிருந்து அதிகமாக வருவாய் வருமென்று அரசு எண்ணுகிறது. ஆகவே வரியை அறவே நீக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** இப்பொழுது 10 சதவிகிதமாக வரி இருந்தாலும் மற்ற மாநிலங்களை விட இது அதிகமாக இருக்கிறது. இப்படி வரி விதிப்பின் மூலமாக அரசுக்கு வருகின்ற வருவாயைவிட அந்த வரியே இல்லாமல் இருந்திருந்தால், அதிகமாக லாட்டரிச் சீட்டுகள் விற்பனையாவதன் மூலமாக வருகின்ற வருவாய் அதிகமாக வரும் என்பதை அரசு அறியுமா? எனவே அந்த அடிப்படையில் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** கேரளம் மற்றும் கர்நாடகாவில் 1985—86 நிதி நிலை அறிக்கையில் 10 சதவிகிதம் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே லாட்டரிச் சீட்டுக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற வரி விதிப்பை எடுத்து

விடுவதன் மூலம் எப்படி அரசுக்கு வருவாய் அதிகமாக வரும் என்பதுபற்றி எனக்குத் தெரியவில்லை என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### கூடுதல் வரி.

* 198. வினா—திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) காகிதம், காகிதப் பொருட்கள், பெட்ரோலியப் பண்டங்கள், வனஸ்பதி, சிமெண்ட் போன்றவை மீது, கூடுதல் வரி விதிக்கும் அதிகாரத்தை மாநில அரசிடமிருந்து, மத்திய அரசு எடுத்துக்கொள்ள வேண்டி, மாநில அரசின் கருத்தைக் கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், இது குறித்து மாநில அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** (அ) இப்பொருட்கள் மீது தற்போது மாநில அரசால் விதிக்கப்பட்டுவரும் விற்பனை வரிக்குப் பதிலாக கூடுதல் ஆயத்தீர்வை விதிக்க மத்திய அரசு கருதி வருகிறது.

(இ) இக்கருத்திற்கு மாநில அரசு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** காகிதம், காகிதப் பொருட்கள், பெட்ரோலியப் பண்டங்கள், வனஸ்பதி, சிமெண்ட் போன்றவை மீது, கூடுதல் வரி விதிக்கும் அல்லது நீக்குகின்ற அதிகாரத்தை, மாநில அரசிடமிருந்து மத்திய அரசு எடுத்துக்கொள்ளக் கூடாது என்கின்ற கருத்தை இந்த அரசு மத்திய அரசிடம் வலியுறுத்துமா ?

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** நானும் அதைத்தான் சொல்லுகிறேன். இப்படி வரிகளை விதிப்பதற்கு பதிலாக கூடுதல் ஆயத் தீர்வை விதிப்பதற்கு இந்த அரசு கடுமையாக, வன்மையாக எதிர்ப்பு தெரிவிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** தலைவர் அவர்களே, அப்படியென்றால் மத்திய அரசு இதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறது. மாநில அரசு எதிர்த்திருக்கிறது. இப்படி எதிர்த்து மாநில அரசு தீர்மானம் ஒன்றை மத்திய அரசுக்கு அனுப்ப உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** தலைவர் அவர்களே, மத்திய நிதியமைச்சர் அவர்கள் கூட்டிய கூட்டத்திலே முதலமைச்சர்கள் பலர் கலந்து கொண்டபோது, நமது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1983 ஆம் ஆண்டே, இதை நாங்கள் ஒத்துக்கொள்வதற்கில்லை என்று கடுமையாக தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் மட்டுமல்ல, இந்திரா காங்கிரஸ் ஆளும் மாநில முதல்வர்கள் கூட பலர் இதை எதிர்த்திருக்கிறார்கள். இதில் அரசியல் நோக்கமில்லை. நமக்கு இருக்கிற ஓரே ஒரு வருவாய் வாயிலே விற்பனை வரிதான். எனவே அதையும் அவர்கள் எடுத்துக்கொண்டால், மாநில வளர்ச்சித் திட்டங்களுக்கு வருவாய் இல்லாத நிலை வரும். எனவே இதற்கென்று தனியாக எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றத் தேவையில்லை என்றே தெரிவித்துக்கொள்கிறேன்.

### வேளாண்மைக் கடனுக்கு வட்டி

* 199. வினா—திரு. க. சுப்பு (திரு. அ. ப. சிவராமன் சார்பில்): மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உலக வங்கி, வேளாண்மைக்கு என்ன வட்டி விகிதத்தில், அரசுக்குக் கடன் தருகிறது ?

(இ) அரசு, என்ன வட்டி விகிதத்தில் விவசாயிகட்கு கடன் தருகிறது ?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** (அ) உலக வங்கி வேளாண்மைக்கு நேரடியாக இந்த அரசுக்குக் கடன் வழங்குவதில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

### நகைக்கடன்

* 200 வினா.—திரு. க. சுப்பு (திரு. அ. ப. சிவராமன் சார்பில்): மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கூட்டுறவுச் சங்கங்களின் மூலம், விவசாயிகளுக்குத் தங்க நகைகளின் மீது தரப்படும் கடன் தொகையினை, கூடுதலாக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** ஆம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** 16—4—1986 அன்று ஒத்திப்போடப் பட்ட வினாக்கள்.

வடகைலாசம் கூட்டுறவு சேவைச் சங்கம்.

* 159. வினா—திரு. க. சுப்பு (திரு. அ. ப. சிவராமன் சார்பில்): மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) பண்ருட்டி, வடகைலாசம் கூட்டுறவு சேவைச் சங்கத் தலைவர் மற்றும் இயக்குநர்கள்மீது தென்னாற்காடு மாவட்ட துணைப் பதிவாளர் அவர்கள் ஆய்வுசெய்து, கடுமையான குற்றம் புரிந்திருப்பதைக் கண்டு பிடித்து, இந்நிருவாக சபையை கலைக்க உத்திரவிட்டதும், அதை எதிர்த்து நிருவாக சபை தடை உத்தரவு பெற்று தொடர்ந்து நிருவாகத்தில் இருப்பதும் அரசு அறியுமா?

(இ) இந்த நிருவாக சபை பெற்றுள்ள தடை உத்தரவை இரத்து செய்ய, அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) உயர்நீதி மன்றத்தால் இடப்பட்ட நிரந்தர தடையுத்திரவை நீக்கக்கோரி மேல்முறையீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. தமிழ்நாடு ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டம் எண் 6/1985-ன்படி, 28—9—1985 அன்று வடகைலாசம் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கத்தில் தனி அலுவலர் நியமிக்கப்பட்டு அதன் மூலம் சங்கத்தின் நிர்வாகக் குழு பதவிக்காலம் முடிக்கப்பட்டுவிட்டது.

கூட்டுறவுத் துறை அமைச்சர்கள் மாநாடு.

* 160. வினா—திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 30—10—1985 அன்று, புதுடில்லியில் நடைபெற்ற கூட்டுறவுத் துறை அமைச்சர்கள் மாநாட்டில், விவசாயிகளிடமிருந்து கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய கடனை, வசூலிக்கும் வழிமுறைகள் எவையேனும் வகுக்கப்பட்டனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: (அ) மற்றும் (இ) விவர அறிக்கை @ அவையில் வைக்கப்பட்டுள்ளது.

---

@ 494 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது



திரு. ஆர். டி. சீத்தாபதி: தலைவர் அவர்களே, கூட்டுறவு மூலமாக 1,600 கோடி ரூபாய் வரவேண்டியிருக்கிறது என்ற விபரத்தைக் கூறியுள்ளார்கள். இதை மத்திய அரசு எப்படி வசூல் செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. அப்படி ஏதாவது அறிவுரைகள் அரசுக்கு வந்திருக்கின்றனவா என்று அமைச்சர் அவர்களிடத்திலிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தியா முழுவதும் 1,600 கோடி ரூபாய்க்கு மேல் கூட்டுறவுக் கடன் நிலுவை இருப்பதாக மாநிலக் கூட்டுறவு அமைச்சர்கள் மாநாட்டில் சொல்லப்பட்டது. இதில் வேண்டுமென்றே கடனைச் செலுத்தாதவர்கள் மீது ஒரு கண்ணோட்டமும், வசதி படைத்தவர்கள் கட்டாமல் இருப்பது பற்றி வேறு விதமாகவும், தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வசூல் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும், தள்ளுபடி போன்ற வார்த்தை வரக் கூடாது என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், கூட்டுறவுக்கு எல்லாக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று அரசியல் கட்சிகள் கட்சிவேறுபாடின்றி இணைந்து சொல்கின்றன. ஆனால் தள்ளுபடி செய்கிற நேரத்தில் மத்திய அரசு பணம் தர மறுக்கிறார்கள். அந்தக் காரணத்தால், இந்தக் கடன்களுக்கு என்ன வழிவகை செய்யப்போகிறோம், நாம் எப்படி அதைச் செய்கிறோம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நாங்கள் ஒரு சில நபர்களை அடையாளம் சொல்லி அவர்கள்மீது ஜப்தி போன்ற நடவடிக்கை எடுக்கச்சொல்லியிருக்கிறோம். மற்றவர்களிடம் சுமுகமான சூழ்நிலையில் வசூல் செய்யச் சொல்லியிருக்கிறோம். அப்படி சில சமயங்களில் நெருக்கடி செய்து வசூல் செய்கிறபோது, ஒரு சில பிரச்சினைகள் எழுகின்றன. அவைகளைச் சமாளித்து, கூடியவரையில் சுமுகமான முறையில் கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்து வருகிறோம்.

திரு. எல். கணேசன்: தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன் சங்கங்களைப் பொறுத்தவரையில், தொடர்ச்சியாக பல ஆண்டுகளாக இது பிரச்சினைக்குரிய ஒன்றாக இருக்கிறது. நடவடிக்கை எடுப்பது என்பது வேறு, இரண்டு மூன்று மடங்கு, வாங்கிய அசலைவிட வட்டியாக வசூல் செய்த பிறகும், நான்கு மடங்குக்கு மேல் கட்ட வேண்டுமென்ற அளவில், அதாவது வட்டி, வட்டிக்கு மேல் வட்டி, வட்டிக்குக் குட்டி என்று அப்படியே

[1986 ஏப்ரல் 25

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 29—1—1986 அன்று ஒரு காரணம் கோரும் அறிவிப்பு (Show cause notice) கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 44 ஆவது பிரிவின்கீழ் காரணம் கோரும் அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அவர்கள் 1.5 கோடி ரூபாய் அதற்காக 1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியிருப்பதாகவும் சொல்லியிருக்கின்றார்கள். இதைத் தீவிரமாகக் கண்காணித்து வருகிறோம்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் கேட்டது, அவர்களுக்கு உரிமம் கொடுப்பதற்கு முன்பாகவே கழிவு நீரை சுமார் 40 இலட்சம் கிலோ லிட்டர் அளவுக்கு அவர்கள் வெளியேற்றியிருக்கிறார்கள். ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த பிறகுதான் அனுமதி வழங்கப்பட்டிருக்கவேண்டும். இதை முன்பே இவர்கள் செய்தபிறகுதான் உரிமம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். நான் அதைத்தான் கேட்டேன்.

அடுத்ததாக, 29—1—1986 அன்று தொழிற்சாலைக்குக் காரணம் கோரும் அறிவிப்பு கொடுத்ததாகச் சொன்னார்கள். அதற்கும் அவர்கள், தேசிய சர்க்கரை நிறுவனத்தாரோடு தொடர்பு கொண்டு 1986-87-ல் ரூ. 1½ கோடி ஒதுக்கியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-40)

ஆக ஒவ்வொரு முறை நாங்கள் இதுபோன்ற கேள்விகளைக் கேட்கும் போது, அரசுத் தரப்பில் இதுபோன்ற பதில்களைத்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மாசுக் கட்டுப்பாடு வாரியம் எந்த அளவில் செயல்படுகிறது என்று தெரியவில்லை. இதுபோன்ற கேள்வியைக் கேட்கும்போதுதான், அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையைத் தருகிறார்கள். ஆம்பூர், வாணியம்பாடி போன்ற இடங்களில் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் விளக்கம் கூறாமல், வினாவாகக் கேட்க வேண்டும்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** 2½ கோடி ரூபாய்க்கு சுத்திகரிப்பு ஆலையை ஏற்படுத்த இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதை எந்த அளவுக்குச் சொல்லக்கூடிய குறைபாடுகளை எல்லாம் மாசுக்கட்டுப்பாடு வாரியம்





வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாசுக்கட்டுப்பாடு வாரியம் நல்ல முறையில் செயல்படவேண்டும். இதுபோன்ற தொழிற்சாலைகள் மீது தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, இப்போது சொல்லக்கூடிய குறைபாடுகளை எல்லாம் மாசுக் கட்டுப்பாடு வாரியம் கடுமையாக கவனித்து நடவடிக்கை எடுப்பதற்காகக் கொண்டு வந்திருக்கிறோம். பல தொழிற்சாலைகளுக்கு அதன் 44-வது ஷரத்தின் கீழ் 'ஷோ காஸ் நோட்டீஸ்' கொடுக்கப்பட்டிருக்கிறது. சில தொழிற்சாலைகளை மூட வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. இப்போது இருக்கக்கூடிய குறை எல்லாம் எவ்வளவு தீவிரமாக நடவடிக்கை எடுப்பது என்பதுபற்றித்தான். தாட்சண்யம் இல்லாமல் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. பல சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை கொண்டு வந்து கொடுத்திருக்கிறார்கள். பல தொழிற் சங்கங்களின் தலைவர்களும் என்னிடம் கோரிக்கை கொண்டு வந்து கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் அவர்களுக்கு தாட்சண்யம் காட்டுவதாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டம் கொண்டுவந்து 3 ஆண்டுகள் ஆகின்றன. இந்தச் சட்டம் 1974 ஆம் ஆண்டே கொண்டு வந்திருக்க வேண்டிய சட்டம். ஆனால் 1974-ல் இந்தச் சட்டம் கொண்டுவரப்படவில்லை. இது தள்ளிவைக்கப்பட்டது. அதற்குப் பிறகு பல ஆண்டுகள் தள்ளிவைக்கப்பட்டது. இங்கே சட்டம் கொண்டு வருகிறோமென்று சொன்னார்கள். மத்திய அரசின் சட்டத்தை இங்கே கொண்டு வர வேண்டுமென்று அப்போது 1974-ல் தாக்கல் செய்தார்கள். அப்போது அந்தச் சட்டம் தேவையில்லை, வேறு ஒரு சட்டத்தை மாநில ரீதியாகக் கொண்டு வருகிறோம் என்று இந்த அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்தது. அதற்குப் பிறகு அந்தச் சட்டம் வரவில்லை. எனவே பல முறை வற்புறுத்தியதற்குப் பிறகும் வரவில்லை. 1981-ல் தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். பிறகு மத்திய அரசுடன் தொடர்புகொண்டு, மத்திய அரசு என்ன சட்டம் கொண்டு வந்திருந்ததோ அந்தச் சட்டம் அப்படியே ஒரு ரிசலூஷன் மூலமாக சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் கொண்டுவரப்பட்டது. 1981 ஆம் ஆண்டுக்குப் பிறகு அந்தச் சட்டத்தின் ஷரத்துக்களைப் பயன்படுத்தி இங்கே கொண்டு வந்திருக்கிறோம். We are involving the penal provisions in this Act only after 1981. அதற்குப் பிறகுதான் அந்தச் சட்டத்—

இன்டரஸ்ட், பீனல் இன்ட்ரஸ்ட், காம்பவுண்ட் இன்ட்ரஸ்ட் என்று விவசாயி கள் வாங்கிய கடனைப் போல 2, 3 மடங்கு செலுத்திய பிறகும், 4 மடங்கு செலுத்த வேண்டுமென்று தண்டம் வசூலிப்பதை போல வாங்குகிற நெருக்கடி இருப்பதால், இந்தப் பிரச்சினை இமுபறியாக இருக்கிறது. ஆகவே அவர் களுடன் சுமுக உடன்பாட்டுக்கு சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேசி பிரச்சினை இல்லாத நிலையை உருவாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-35)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல் நான்கு மடங்கு, ஐந்து மடங்கு இருப்பதாகத் தகவல் இல்லை. இந்த அரசால் கூடுதல் வட்டி தள்ளுபடி செய்யப்படும் என்று முன்பு அறிவித்து, அதற்காக ரூபாய் பத்து கோடி அளவுக்கு ஒதுக்கீடு செய்திருந்தோம். ஆனால் அதை விவசாயிகள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. காரணம், விவசாயிகளிடம் "உங்களின் அனைத்துக் கடன்களும் அசல், வட்டி உள்பட தள்ளுபடியாகிவிடும், எனவே கட்ட வேண்டாம்" என்று சிலர் சொன்னதால், அனைத்து விவசாயிகளும் கடனைக் கட்ட முன்வரவில்லை. எனவே ஏறத்தாழ ரூ. 3 கோடி அளவுக்குத்தான் விவசாயிகள் பயன்படுத்திக்கொண்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்தில் எந்த எந்த மாவட்டத்தில் எவ்வளவு தொகை தரப்பட வேண்டும்? அதில் அசல் எவ்வளவு, வட்டி எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனித்தனியாக மாவட்ட வாரியாக தற்சமயம் தகவல் இல்லை. மொத்தமாக நமக்கு இப்போது நிலுவையாக ரூ. 84.64 கோடி அளவுக்கு கடன் நிலுவை இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். கணேசன் : தலைவர் அவர்களே, இந்த நிலுவையில் வட்டி எவ்வளவு, அசல் எவ்வளவு? (interest how much? principal how much?) என்று பகுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் விவரமாக, மற்றும் மாவட்ட வாரியாகவும்கூட சொல்ல முடியும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(1) நெல்லிக்குப்பம், E.I.D. பாரி கம்பெனியிலிருந்து வெளியாகும் கழிவு நீர் கெடிலம் நதியில் கலப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்து.

திரு. எல். ஜெயச்சந்திரன் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"தென்னாற்காடு மாவட்டத்தில் நெல்லிக் குப்பத்தில் உள்ள பாரி கம்பெனியிலிருந்து வெளியாகும் கழிவு நீர் கெடிலம் நதியில் கலப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்து."

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எல். ஜெயச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் எரி சாராயத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் ஏறத்தாழ 40 இலட்சம் கிலோ லிட்டர் கெடிலம் ஆற்றில் கலக்கிறது. அவ்வாறு வெளியேற்றுவதற்கு அவர்கள் ஒப்புதல் கேட்டு அனுமதியை சில நிபந்தனைகளுக்குட்படுத்திக் கொடுத்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

பொதுவாக ஒரு தொழிற்சாலைக்கு அனுமதி கொடுக்கும்போது, என்ன என்ன நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றனவோ அந்த அந்த நிபந்தனைகளை அவர்கள் பூர்த்தி செய்திருக்கிறார்கள் என்று பார்த்து பிறகுதான் அனுமதி கொடுப்பார்கள். ஆனால் இந்தத் தொழிற்சாலைக்கு அதுபோன்ற நிபந் தனைகளைப் பூர்த்தி செய்தபின் அனுமதி கொடுக்கப்பட்டதாகத் தெரிய வில்லை. எனவே அவற்றின்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

@ 494—496 ஆம் பக்கங்களில் இணைப்பு —II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## தெல்லிக்குப்பம் E.I.D பாரி கம்பெனியிலிருந்து வெளியாகும் கழிவு நீர் கெடிலம் நதியில் கலப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்து

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1986 ஏப்ரல் 25

இங்கே கொண்டு வந்திருக்கிறோம். அந்த அடிப்படையில் நீங்கள் சொல்லக் கூடிய தொழிற்சாலை ஏற்கெனவே இருந்த தொழிற்சாலை. It is already existing ஏற்கெனவே இருந்த தொழிற்சாலைக்கு, இந்தக் குறைகளை எல்லாம் சரிசெய்தால்தான், ஆரம்பிக்க முடியும் என்று சொல்லியிருக்கிறோம். அந்தத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு நாம் 'பெர்மிஷன்' கொடுப்பது கிடையாது. அவர்களுக்கு என்ன சொல்கிறோம் என்றால், அங்கு இவ்வளவு பிரச்சினைகள் இருக்கின்றன; அவைகளை நடைமுறையாகச் சரி செய்யவில்லை என்றால் அரசு நடவடிக்கை எடுக்குமென்று சொல்லியிருக்கிறோம். ஆகவே இதை சாதாரண விஷயமாகக் கருத முடியாது.

We have already started the process of law. We have invoked section 44 of the Act. On 29th January 1986 show cause notice கொடுத்தாகிவிட்டது. அடுத்தது, அவர்கள் நிறைவேற்றவில்லையென்றால், நாம் கோர்ட்டுக்குப் போக வேண்டியதுதான். அவர்கள் நிபந்தனைகளின்படி நடக்கவில்லை என்றால், கோர்ட்டுக்குப் போக வேண்டியதுதான். ஆகவே மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்ல விரும்புகிறேன். அரசின் வேகம் துரிதமாக இருக்கிற காரணத்தால், பல பிரச்சினைகள் வந்து கொண்டிருக்கின்றன. அவைகளை அரசு சமாளித்து, நடவடிக்கைகள் எடுப்பதிலே திட்டவட்டமாக நாம் இருக்கிறோம். தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கிறோம். இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், அது சரியான வகையிலே சுத்திகரிப்பதற்காக 1.5 கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதை அவர்கள் செய்யவில்லை என்றால், அவர்களுக்கு இன்னும் ஆறு மாதம் அவகாசம் கொடுக்க முடியும். நிபந்தனைகளின்படி அவர்கள் நடக்கவில்லை என்றால், நிர்தாட்சண்யமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(2) 22 வகை கைத்தறி துணி ரகங்களை ஆலைகளும், விசைத்தறிகளும் தயாரிக்கக்கூடாது என்ற சட்டத்தை அமுல்படுத்தக் கூடாது என்று சென்னை உயர்நீதி மன்றம் தடை விதித்திருப்பதால் நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.**

**திரு. சி. இராமலிங்கம் :** தலைவரவர்களே, தமிழகத்தில் கிட்டத்தட்ட 5.55 லட்சம் நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்காக மத்திய அரசு சில ரகங்களை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறது. அது தவிர விசைத் தறியிலே



1986 ஏப்ரல் 25] [திரு. சி. இராமலிங்கம்]

வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிற விசைத் தறியாளர்களுக்கும் தடை விதித்திருக்கிறார்கள். அதுபற்றி சென்னை உயர்நீதிமன்றத்தில் தடையை நீக்க மத்திய அரசு சார்பில் எதிர் வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டதாக அறிக்கை . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் முதலில் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் படிக்க வேண்டும். அவர்கள் படித்து, அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதற்குப் பிறகு, உறுப்பினர் அவர்கள் பேச வேண்டும். அமைச்சர் அவர்கள் சொன்னதற்குப் பிறகுதான் உறுப்பினர் அவர்கள் விளக்கம் கேட்க வேண்டும்.

**திரு. சி. இராமலிங்கம் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :

"22 வகை கைத்தறி துணி ரகங்களை ஆலைகளும், விசைத்தறிகளும் தயாரிக்கக் கூடாது என்ற சட்டத்தை அமல்படுத்தக்கூடாது என்று, சென்னை உயர் நீதிமன்றம் தடை விதித்திருப்பதால், நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து."

***மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, ஒரு விளக்கமான அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-45)

**திரு சி. இராமலிங்கம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்போது தடை உத்தரவை சிலர் வாங்கியிருக்கிறார்கள். விசைத் தறியாளர் சங்கம் வைத்திருப்பவர்கள் யார் என்று பார்த்தால், அதன் தலைவராகத் தகப்பனாரும் செயலாளராக மகனும் இருந்து கொண்டு தடை உத்தரவை வாங்கியிருக்கிறார்கள். இதன் காரணமாக கைத்தறி நெசவாளர்களான எங்களுக்கு மிகவும் பாதகம் ஏற்படுகிறது. இந்தத் தடையை நீக்க வேண்டுமென்று சென்னை உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசின் மூலம் எதிர் வாக்குமூலத்தை தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது என்று அறிக்கையில்

@ 487–498 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சொல்லப்பட்டிருக்கிறது. இதைக் குறித்து மத்திய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா? 31—3—1986 முதல் 22 இரகங்களை கைத்தறிக்கென ஒதுக்கீடு செய்து மத்திய அரசு அறிவித்துள்ள திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளதாகவும் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே கைத்தறித் துணி ஒதுக்கீடு சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட கைத்தறித் துணிகளுக்கான ரகங்களைத் தயாரிக்காதிருக்க அதற்கு ஏதாவது பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். கைத்தறித் துணி ஒதுக்கீடு சட்டத்தை எதிர்த்து . . .

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் ஒரு கேள்வி அல்லது 2 கேள்வி வேண்டுமானால் கேட்கலாம். அவர் 2, 3 கேள்விகள் கேட்கிறார். நான் 2 கேள்விகளுக்கு மட்டும் பதில் அளிக்கலாமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** 2, 3 கேள்விகள் கேட்டார் என்பது சரியல்ல. பல கேள்விகளைக் கேட்டிருக்கிறார். தாங்கள் இப்போது பதில் அளிக்கலாம்.

**மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, 31-3-1986 வரை ஏற்கனவே பம்பாய் துணிநூல் ஆணையாளர் அவர்களால் கைத்தறித் துணிக்கு என்று பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட தடைச் சட்டத்தை மீறி விசைத் தறிகளும் நூற்பாலைகளும் நெய்கிற துணியை 1—1—1986 முதல் 3 மாத காலம் வரை அனுமதிக்கலாம் என்று அண்மையில் கொண்டு வரப்பட்ட 1985ஆம் ஆண்டு கைத்தறித் துணி ஒதுக்கீடு சட்டத்தில் இடமிருக்கிறது. மாநில அரசைப் பொறுத்த வரையில், சென்னை உயர்நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட தடையை நீக்கக் கோரி, அரசு வழக்கறிஞருக்கு அறிவுரை கொடுக்கப்பட்டிருக்கிறது, எதிர் வாக்குமூலம் தாக்கல் செய்யவும் அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. இராமலிங்கம் :** தலைவர் அவர்களே, கைத்தறித் துணிகள் ஒதுக்கீடு சட்டத்தை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தடையை 11—9—1984-ல் நீக்கிவிட்டதாக அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. சென்னை உயர்நீதிமன்றத்தின் தடை நீக்க உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தடை உத்தரவு வாங்கப்பட்டிருக்கிறதா? 1985 ஆம் ஆண்டு கைத்தறி ஒதுக்கீடு சட்டம் கைத்தறித்



[illegible] உற்பத்தி செய்யும் [illegible] பாதுகாப்பதற்குப் போதுமானது [illegible] என்று அறிய விரும்புவதோடு, மாண்புமிகு [illegible] இந்த பல விளக்கத்தைத் தருவதற்கு அனுமதி அளிக்க [illegible] கேட்டுக்கொள்கிறேன். 1949, 1950, 1951, 1952 ஆகிய ஆண்டுகளில் நெசவாளர்கள் எல்லாம் விசைத் தறியின் காரணமாகப் பாதிக்கப்பட்டு . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் விரைவில் சுருக்கமாகக் கேட்டு முடிக்க வேண்டும்.

**திரு. சி. இராமலிங்கம் :** பேரறிஞர் அண்ணா அவர்களால் திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டின்போது கரை போட்ட வேட்டி சேலைகளை கைத்தறிக்கே ஒதுக்க வேண்டும் என்று அப்போது ஒரு கோரிக்கை வைத்தார்கள். அன்றைக்கு சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இங்கே உள்ள சட்ட மன்றத்தில் ஒரு மனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி டெல்லிக்கு அனுப்பினார்கள். அது தங்களுக்கும் தெரியும். மீண்டும் 1968-ஆம் ஆண்டில் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் வரலாற்றைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் வினா மூலம் விளக்கம் பெறலாம். மாண்புமிகு உறுப்பினர் வரலாற்றையே சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** இந்தச் சட்டம் குறித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால், அதன் சாதக பாதகங்களைப்பற்றி அதிகமாக விவாதிக்காமல் வினாவை மட்டும் கேட்கும்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. இராமலிங்கம் :** தலைவர் அவர்களே, நெசவாளர்களின் இன்னலைப் போக்குவதற்காகத்தான் நான் இங்கே உறுப்பினராக வந்திருக்கிறேன். எனவேதான் அவர்களின் இன்னலை இங்கே எடுத்துச் சொல்லுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களும், மூதறிஞர் இராஜாஜி அவர்களும் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** கேள்வியைக் கேட்க வேண்டும்.

**திரு. சி. இராமலிங்கம்:** மறைந்த அண்ணா அவர்களின் திட்டம் தான் இதற்கு முன்னோடித் திட்டம். அதைச் சொல்லித்தான் கேட்க வேண்டும். அந்த இன்னல்கள் காரணமாக இராமநாதபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற

## 22 வகை கைத்தறி துணி ரகங்களை ஆலைகளும் விசைத்தறிகளும் தயாரிக்கக்கூடாது என்ற சட்டத்தை அமுல்படுத்தக்கூடாது என்று சென்னை உயர்நீதிமன்றம் தடை விதித்திருப்பதால் நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து



இடங்களில் இருந்த நெசவாளர்கள் எல்லாம் பிச்சை எடுத்துக் கொண்டு ஊர் ஊராகச் சென்று திரிந்தார்கள். அந்த நிலைமை மீண்டும் வரக்கூடாது என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கேள்வியைக் கேட்காமல் வரலாற்றைச் சொல்லிக்கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்? இதற்குப் பிறகு துணைத் தலைவர் தேர்தல், அவருக்குப் பாராட்டு. அடுத்து, கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம் எல்லாம் இருக்கிறது. அதற்கு நேரம் வேண்டாமா? சீக்கிரம் முடிக்க வேண்டும்.

**திரு சி. இராமலிங்கம்:** இந்த நிலைமையைப் போக்க மத்திய அரசு சட்டம் கொண்டு வந்திருக்கிறது. அந்தச் சட்டத்தைக் காப்பாற்ற தம் மாநில அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா? எடுக்கப் போகிறதா? தமிழ் நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்களை மட்டுமல்ல, இந்த நாட்டில் உள்ள 30 லட்சம் கைத்தறி நெசவாளர்களுக்கும் தமிழக அரசுதான் முன்னோடியாகச் செயல்பட வேண்டும் என்று இந்தியாவில் உள்ள அனைவருமே எதிர்பார்க்கிறார்கள். எனவே அந்த வகையில் தமிழக அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்:** நான் ஏற்கனவே விளக்க அறிக்கையில் குறிப்பிட்ட மாதிரி, மைய அரசின் சார்பில் எதிர் வாக்குமூலம், அந்தத் தடையை நீக்க தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. மாநில அரசும் எதிர் வாக்குமூலம் தாக்கல் செய்யவிருக்கிறது. 31—3—1986-க்கு முன்பு பஞ்சாய் துணிநூல் ஆணையாளர் கைத்தறிக்கு என்று ஒதுக்கப்பட்ட தடை விதிகள் 31—3—1986-உடன் முடிவடைந்துவிடும். ஆகவே உச்ச நீதிமன்றத்தில் தடை ஏதுமில்லை. அண்மையில் கொண்டுவரப்பட்ட 1985ஆம் ஆண்டு கைத்தறி துணி ஒதுக்கீடு தடைச் சட்டம் போதுமானதுதானா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். அந்தத் தடைச் சட்டத்தின்கீழ் உற்பத்தியாளர்களை மாத்திரம் தண்டிக்க விதிகளில் இடமிருக்கிறது. அந்தத் தடையை மீறி தயாரித்த துணியை விற்பனை செய்பவர்கள் மீதும், அந்தத் துணியை விற்பனை செய்வதற்காக தேக்கி வைப்பவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநில அரசு மைய அரசுக்கு எழுதியிருக்கிறது.

### 3. மேலவைத் துணைத் தலைவர் தேர்தல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்றைய நிகழ்ச்சி நிரலில் காணும் அடுத்த அலுவல் துணைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதாகும்.



தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 5-வது விதியைச் சேர்ந்த (4) துணை விதியின் கீழ், இப்பதவிக்கு முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளவர் பெயரையும், அவரின் பெயரை முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களையும் முதற்கண் இந்த அவையில் நான் படிக்க வேண்டும்.

அவர்கள்—

நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்—திரு. ஜி. சுவாமிநாதன்.
அதை முன்மொழிந்தவர்—மாண்புமிகு திரு இராம. வீரப்பன்.
அதை வழிமொழிந்தவர்—திரு சி. ரா. லெட்சுமிகாந்தன்.
நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்—திரு ஜி. சுவாமிநாதன்.
அதை முன்மொழிந்தவர்—திரு எஸ். இராகவானந்தம்.
அதை வழிமொழிந்தவர்—திரு ஜேப்பியார்.

தேர்தலுக்கு ஓர் உறுப்பினர் பெயர் மட்டுமே முன்மொழியப்பட்டுள்ளதால், திரு ஜி. சுவாமிநாதன் அவர்கள் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக நான் அறிவிக்கிறேன். அவருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த மேலவையினுடைய துணைத் தலைவராக மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியளிக்கக் கூடிய ஒன்றாகும். மாண்புமிகு துணைத் தலைவர் திரு ஜி. சுவாமிநாதன் அவர்கள் இந்த அவையிலே பல தடவை உறுப்பினராகும் தகுதியைப் பெற்று, அவர்கள் சிறப்பான பணிகளை மிகச் செம்மையாக ஆற்றி, இந்த அவையிலுள்ள உறுப்பினர்கள் அத்தனை பேருடைய பாராட்டுதலையும், போற்றுதலையும் பெற்று, நல்ல நம்பிக்கைக்கும், நன்மதிப்பிற்கும் உரியவராவார்கள் என்பதை அவையினர் அத்தனை பேரும் நன்கு உணர்வார்கள். ஒருமனதாக மாண்புமிகு துணைத் தலைவர் திரு ஜி. சுவாமிநாதன் அவர்கள் தேர்தெடுக்கப்பட்டதற்கு இந்த அவையில் உள்ள அத்தனை கட்சிகளும் ஒத்துழைப்பு நல்கியதற்காகவும், உறுதுணையாக இருந்ததற்காகவும், அத்தனை கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் ஆளும் கட்சியின் சார்பாக நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் மக்களுடைய நம்பிக்கையைப் பெற்று, பட்டதாரி தொகுதியின் மூலமாக இந்த அவையில் இடம் பெற்று பணியாற்றும் வாய்ப்பை பல முறை பெற்றிருக்கிறார்கள். ஆகவே இந்த அவையிலே பங்கு பெற்று பணியாற்றுவதற்கேற்ற நல்ல தகுதியும், திறமையும், அனுபவமும்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 ஏப்ரல் 25]

(முற்பகல் 10-55)

அறிவும் திறமையும், [illegible] [illegible] இந்த அவையை [illegible] அவர் [illegible] வைத்த கருத்துக்களை [illegible] நன்கு அறிவார்கள். எந்த ஒரு [illegible] இருந்தாலும், அந்தப் பாச பிணையின் எல்லாப் பக்கங்களையும் நன்கு ஆராய்ந்து அதனுடைய அகல, உயர, ஆழத் தன்மைகளை நன்கு புரிந்து, அவற்றில் சாதக பாதகங்களையும் எடுத்துத் தெளிவாக [illegible] இந்த அவைக்கு நல்ல உறுதுணை புரிகிற வகையில் அமைந்தவராவார். அவர் இந்த அவையிலே எதிர்த் தரப்பிலேயிருந்து பேசிய காலமும் உண்டு. ஆளும் தரப்பிலே பேச வருகிற நிலைமைகளும் உண்டு. அவர் எந்த நிலைமையிலே இருந்தாலும், ஆரவாரத்திற்கு இடமில்லாமல், உணர்ச்சி வயப்படாமல் நிதானமாக ஆனால் அழுத்தந்திருத்தமாக தாம் கொண்ட கருத்துக்களைத் தெரிவிப்பதிலே தெளிவுபடைத்தவராக விளங்கி வருகிறார் என்பதை நாம் நன்கு அறிவோம். அந்த வகையிலே அவர்களுடைய பணி மிகச் சிறப்பான முறையில் இந்த அவையில் ஆற்றப்பட்டு வந்தது. அவர்கள் இந்த அவையினுடைய துணைத் தலைவராக இருந்து அவர்கள் ஆற்றி வந்த பணிகளை இந்த அவை நன்கு அறியும். தொடர்ந்து மேலும் துணைத் தலைவராக ஆகின்ற அந்த வாய்ப்பை அவர்கள் பெற்று, மீண்டும் தங்களுக்குத் துணையாக இருக்கத்தக்க அளவுக்கு அவர்கள் துணைத் தலைவர் பதவி ஏற்றிருப்பது எல்லோருக்கும் பெருமகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒன்றாகும். இந்த அவையில் பேசப்படுகிற, வாதாடப்படுகின்ற பல்வேறு கருத்துக்களுக்கு உறுதுணையாக இருக்கின்ற வகையில் அவர்கள் அவ்வப்போது தான் அந்தந்தத் துறைகளிலே அறிந்திருக்கின்றதை அந்தந்த நேரத்திலே எடுத்துச் சொல்கின்ற ஆற்றலையும், அந்தக் கருத்துக்களை மிகச் சிறப்பாக எடுத்துச் சொல்கின்ற ஆற்றலையும், சில நேரங்களிலே நகைச்சுவையாகக்கூட எடுத்துச் சொல்கின்ற சிறந்த பாங்கையும் அவர்கள் பெற்றிருக்கின்றார்கள். அந்த வகையிலே இந்த அவை அவரால் பல நன்மைகளைப் பெற்றிருக்கின்றது என்பதை நாம் நன்கு உணர்வோம். அவர் துணைத் தலைவராக இருந்து இந்த அவைக்கு எந்த அளவுக்கு பெருமையும் புகழையும் சேர்க்க வேண்டுமோ அந்த வகையில் பெருமையையும் புகழையும் சேர்ப்பதிலே அவர்கள் முழு அளவுக்கு வெற்றிகளையும் பெற்றிருக்கின்றார்கள். ஆக இந்த அவையிலே சாதாரணமாகச் சொல்கிறபோது, வழக்கறிஞராக இருந்து வாதாடுகின்ற நிலைமைக்கும், கல்லூரிப் பேராசிரியராக இருந்து கருத்துக்களை வழங்குவதற்கும், அரசியல் மேடைகளில் சொற்பொழிவு மூலமாக பொதுமக்களுக்குக் கருத்துக்களை விளங்க வைப்பதற்கும், சட்ட



1986 ஏப்ரல் 25] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மன்றத்தில் வாதாடுவதன் மூலமாக கருத்துக்களை விளங்க வைப்பதற்கும் வேறுபாடுகள் உண்டு. அந்த வகையிலே சட்டமன்றத்தில் வாதாடுவதற்கு ஏற்ற பெருமையையும் அவர்கள் பெற்றிருக்கின்றார்கள். அதையும் மிகச் சிறப்புற வைக்கின்ற பெருமையையும் அவர்கள் பெற்றிருக்கின்றார்கள். அவர்கள் துணைத் தலைவர் பதவியிலே இருந்து பணியாற்றுவதற்குரிய தன்மைகளை சிறப்பாகப் பெற்றிருக்கின்றார்கள். அவர்கள் மீண்டும் இந்த அவையினுடைய துணைத் தலைவர் பதவியைப் பெற்று இந்த அவையினுடைய பெருமையையும் புகழையும் காத்து இந்த அவை என்றென்றும் பெருமையும் புகழையும் பெற்றிருக்கின்ற அளவுக்கு இந்த அவையை நடத்திச் செல்வதற்கான அளவுக்கு முயற்சிகளை மேற்கொண்டிருப்பதற்கு மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். அந்த வகையிலே தங்களுக்கும் துணையாக இருக்கும் துணைத்தலைவராக இருந்து இந்த அவையினுடைய ஒத்துழைப்பையும் தங்களுடைய முழு ஆதரவையும் தந்து, எந்த நோக்கத்திற்காக இந்த அவை அமைக்கப்பட்டிருக்கின்றதோ அந்த நோக்கத்தைச் சிறப்பாக நிறைவேற்ற வேண்டும். அதற்கு வேண்டிய எல்லா ஒத்துழைப்பையும் தருவோம். குறிப்பாக ஆளுங்கட்சி தரப்பில் முழு ஒத்துழைப்பையும் தருவோம் என்று சொல்லி, துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

*டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இன்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர், அன்பிற்குரிய திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் பாராட்டி வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அவரைக் குறித்து நான் இன்றைக்கு அதிகமாகப் பேசத் தேவையில்லை. காரணம் என்னவென்றால், ஓய்வு பெற்றவர்களுக்கு இந்த அவை சில நாட்களுக்கு முன்பு பாராட்டுரை வழங்கியபோது, அவருக்கும் எனக்கும் உள்ள கலைப்பட்ட நட்புறவு பற்றியும் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட அவருடைய நேர்மையைப்பற்றியும் நான் எடுத்துக் கூறியிருக்கின்றேன். அவர் மீண்டும் இந்த அவையிலே துணைத் தலைவர் பொறுப்பு ஏற்று இந்த அவையை சிறப்பாக நடத்திச் செல்வார்கள் என்ற நம்பிக்கையோடு நான் அவர்களை வாழ்த்துகிறேன். இந்த நோக்கில் நான் ஒரு மனக்குறையைச் சொல்லாமல் இருக்க முடியாது. நேர்மையாளர் இந்தத் துணைத் தலைவர் பதவிக்கு எதிர்க் கட்சியின் சார்பில் ஒருவரை நிறுத்தலாமா என்று நாங்கள் யோசித்துக் கொண்டிருந்தோம். ஆசிரியர் பகுதியிலே ஒருவரை நிறுத்தலாமா, கட்சி சார்பிலே ஒருவரை நிறுத்தலாமா என்று யோசித்துக்கொண்டிருந்தோம். ஆனால் அந்த முடிவு [illegible] நோக்கில் அவையின் முன்னவர் [illegible]

விளைந்தாலும், உரலிலே வந்துதான் மசிய வேண்டுமென்பது பழமொழி. தஞ்சையிலே பிறந்தாலும், கொங்கு நாட்டிலே பிறந்தாலும், வேறு எங்கு பிறந்தாலும், சென்னையம்பதியில் வந்துதான் பதவி ஏற்கவேண்டுமென்ற நிலை இருக்கிறது. நான் சென்னைவாசி என்ற முறையில், சென்னையைத் தன்னகமாகக் கொண்டுவிட்ட கலைஞர் அவர்களும், திரு. சுவாமிநாதன் அவர்களும் என்னை ஏன் மறக்க வேண்டும்? சென்னைக்குப் பெருமை தேடித் தந்தவர்கள் தமிழகம் எங்கும் இருக்கிறார்கள். திரு. சுவாமிநாதன் அவர்கள் 3 முறை பட்டதாரித் தொகுதியில் போட்டியிட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார். எந்தத் தொகுதியாக இருந்தாலும், ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, இரண்டாம் முறை நிற்கும்போது மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கும். வோட்டர்கள் சொல்லுவார்கள், "அப்போதோ பார்த்தோம், பிறகு காணவில்லை" என்று. 1-1/2 லட்சம் வோட்டர்கள் இருந்தால் எப்படி தினம் போய் பார்க்க முடியும்?

(முற்பகல் 11-05)

படித்தவர்கள், பட்டதாரிகள் தொகுதி மூலமாக அவர் மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். சிறப்பு மிக்க சோழ நாட்டிலிருந்து அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால், மேலிட வர்க்கத்தில் அவருக்கு எவ்வளவு பெரிய தொடர்பு இருக்கிறது என்பதை இது காட்டுகிறது. இந்த முறை நியமனத்தின் மூலமாக துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். ஆளும் கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒப்பற்ற தலைவரான மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவரை துணைத் தலைவராக அமர்த்திவிட்டதன் மூலம், அவர் பரிபூரணமான அனுபவம் பெற்றவர் என்பதால், எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. நேற்றும் நேற்று முன் தினமும் நான் அதிக நேரம் அவையில் அமர்ந்து அவையை நடத்தியதில் எனக்கு அலுப்பு ஏற்பட்டது. நான் அதிகமாக உட்கார வைக்கும் மாற்றுத் தலைவர் திரு. இராமலிங்கம் நேற்று கிடைக்கவில்லை. திரு. மிசா கணேசனை அமர வைத்தேன். அவரை உட்கார வைத்து அந்தந்த நேரத்தில் அவர் மணி அடித்து அவையை நடத்தியது குறித்து மகிழ்ச்சியடைந்தேன். எதிர்க் கட்சி உறுப்பினராக அவர் இருந்தாலும், நான் சொன்னதை கண்டிப்பாகக் கடைப்பிடித்து அவையை நடத்தினார். அதே போல் திரு. சாதிக் பாட்சா அமர்ந்திருந்து அவையை நடத்தும்போது, ஒழுங்காக நான் சொன்னதைக் கடைப்பிடித்தார். இன்றைக்கு தகுதியுள்ள ஒருவர் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு என்னுடைய மனப்பூர்வமான பாராட்டுக்கள். நான் இன்னும் 4 வருடம் பதவியில் இருக்கலாம். ஆனால் துணைத் தலைவர் அவர்கள் இன்னும்



ஆறு வருடம் துணைத் தலைவராக இருக்கலாம். எனக்கு முன்பு அவர் வந்தார் என்று சொல்லமாட்டேன். 1952-லேயே நான் ஒரு முறை வந்தேன். துணைத் தலைவராகவும் அவருக்கு முன்பே வந்து விட்டேன். எனக்குப் பின்பும் அவர் துணைத் தலைவராக இருப்பார். ஆகவே அவருக்கு மீண்டும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நான் எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன். நான் இல்லாத நேரத்தில் தலைமை வகிப்பவருக்கு ஆளும் கட்சியினரும் எதிர் தரப்பினரும் ஒத்துழைப்பு தர வேண்டும். கலைஞர் முதல்வராக இருந்த நேரத்தில், அடிக்கடி ஒன்றைச் சொல்வார். இந்த அவைக்கு வந்தால் அமைதி ஏற்படுகிறது என்று அவையின் மேன்மையை, பெருமையைச் சொல்வார். இப்போதும் அவர் எதிர்க் கட்சி வரிசையில் வருகிறார் என்று கேள்விப்பட்டவுடன், தவறாக சிலர் மதிப்பிட்டது உண்டு. நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். காரணம் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களையே அவர் கட்டுப்படுத்தி வைத்திருப்பது பெரிய விஷயம் அல்லவா? (சிரிப்பு) நாம் எல்லோரும் ஒரே குடும்பமாக எண்ணி, இந்த அவையின் கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற உணர்வை வெளிப்படுத்துகிறேன். கலைஞர் ஒரு முறை பேசும்போது ஒன்றைச் சொன்னார். அப்போதே அது குறித்து நான் விளக்கினால், அவர் தவறாக எண்ணலாம் என்பதால் நான் ஒன்றும் சொல்லவில்லை. திரு. இராஜகோபாலாச்சாரியார், திரு. பிரகாசம், டாக்டர் பொகாது உஸ்மான், திவான் பகதூர் பாஷ்யம் ஐயங்கார், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, சகோதரி சுப்புலட்சுமி அம்மாள் போன்றவர்கள் எல்லாம் இங்கே உறுப்பினர்களாக அமர்ந்திருக்கிறார்கள். கலைஞர் ஆதரவோடு துணைத் தலைவராக நான் வந்த சமயத்தில் முதியவர்கள் அவையில் அமரும் ஒரே இளைஞனாக வந்தேன். இப்போது இளைஞர்கள் மத்தியில் அமர்ந்திருக்கும் ஒரே முதியவனாக நான் இருக்கிறேன். அந்தப் பெரியவர்கள் எல்லாம் அமர்ந்திருந்ததை எண்ணி நாம் ஒவ்வொருவருக்கும் மெய் சிலிர்க்க வேண்டும். அவர்கள் இருந்த இடத்தில் நாம் அமர்ந்திருக்கிறோம். அவர்கள் குரல் கொடுத்த இடத்தில் அமர்ந்திருந்து நாம் குரல் கொடுக்கிறோம். அவர்களுடைய பண்பாட்டையும் உணர்வையும் நாமும் கட்டிக் காத்து அதே உணர்வோடு பணியாற்றுவோம் என்று சொல்லி, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்களுக்கு முன்னாலே நான் வராவிட்டாலும், தலைவர் ஓய்வு பெற்ற பிறகும், இரண்டு ஆண்டுகள் நான் இருக்கிற வாய்ப்பு இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1986 ஏப்ரல் 25

"இங்கே போட்டியின்றி துணைத் தலைவரைத் தேர்ந்தெடுக்க ஒத்துழைக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள். அந்த அளவில் இந்த அவையி லேயே மரபை உயர்த்த வேண்டும் என்றும் இத்தகைய மேன்மையை மேலும் வளர்க்க வேண்டும் என்றும் ஒரே நோக்கத்தோடு போட்டியில் யாரும் கலப்பதில்லை, யாரும் போட்டியிடவில்லை என்ற உறுதியை நான் முன்னவர் அவர்களுக்குத் தெரிவித்தேன்.

(முற்பகல் 11-00)

அவர்களும் கொஞ்சம் பரந்த மனப்பான்மையோடு, அவை முன்னவர் முன் மொழிந்து, எதிர்க்கட்சித் தலைவர் வழி மொழிந்தார் என்ற நிலையை உருவாக்கியிருக்கலாம். நேற்று 12 மணிவரை நான் இங்கேதான் இருந்தேன். என்னிடம் கையெழுத்து பெற்றிருக்கலாம். காங்கிரஸ் கட்சித் தலைவரிடம் பெற்றிருக்கலாம். பட்டதாரி-ஆசிரியர்கள் முற்போக்குக் கூட்டணி உறுப்பினரிடம் கையெழுத்து வாங்கியது தவறு என்று சொல்லவில்லை. எங்களிடமும் பெற்றிருக்கலாம். அந்தப் பரந்த மனப்பான்மையோடு, இந்த அவை நடக்க வேண்டுமென்ற ஆசையோடு இதைக் குறிப்பிடுகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் துணைத் தலைவர் திரு. சுவாமிநாதன் அவர்களைப் பாராட்டியிருக்கிறார்கள். பாராட்டைப் பெறுகிறவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர், பாராட்டை ஆரம்பித்தவர் தஞ்சை மாவட்டத்துக்குச் சொந்தக்காரர். வழி மொழிகிறவன் நான் என்ற அளவில், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றாலும், பிறந்த மண்ணின் நினைவு போகவில்லை; அந்த உணர்வோடு திரு. சுவாமிநாதன் அவர்களை வாழ்த்தி, அமைகிறேன்.

* திரு. எம். பி. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, மீண்டும் இந்த அவையின் துணைத் தலைவராக மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை நான் பாராட்டுகிறேன். பாராட்டு தெரிவித்த நிதி அமைச்சர் அவர்களும், வழிமொழிந்து (?) பாராட்டிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், பாராட்டப்பட இருக்கின்ற திரு. சுவாமிநாதன் அவர்களும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லி, மிக பெருமைப்பட்டுக்கொண்டார்கள், நானும் மகிழ்ச்சியடைகிறேன். தமிழ் நாட்டிலே இருந்து தஞ்சைக்கு மந்திரிகள். அதற்கும் மேலே போக வேண்டாம் என்பதால் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். திரு. சுவாமிநாதன் அவர்கள் பற்றிச் சொல்லிய கருத்துக்களோடு நானும் காங்கிரஸ் கட்சிச் சார்பிலே இணைத்துக் கொள்கிறேன். இந்த அவையிலே நல்ல மரபுகள் கடைபிடிக்கப்பட்டு வந்தி



1986 ஏப்ரல் 25] [திரு. எம். பி. சுப்பிரமணியம்]

ருக்கின்றன. பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இருந்தாலும், விவாதங்கள் நடக்கும்போது, கட்சிகளை மறந்து, கருத்துக்களை மையமாக வைத்து, உயர்ந்த விவாதங்கள் நடக்க உதவிகரமாக இருந்திருக்கிறார்கள். தொடர்ந்து மாண்புமிகு தலைவரவர்களும், துணைத் தலைவர் அவர்களும் நிச்சயமாக அப்படி தங்கள் பணிகளை ஆற்றுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. அந்த அளவுக்கு நாங்களும் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே அதற்கு உறுதுணையாக இருப்போம் என்று சொல்லி, மீண்டும் மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. மயில்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒருமனதாகத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக நான் சார்ந்துள்ள அணியின் சார்பிலே நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையிலே நீண்டகாலமாக அனுபவம் பெற்றவர்கள் அவர்கள். எங்களைப் போன்றவர்கள் அவரிடம் சென்றால், நல்ல ஆலோசனைகளையும், இந்த அவையிலே எந்த அளவுக்கு வாதாட வேண்டுமென்றும், எந்த நல்ல கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்றும் மிகத் தெளிவாக எங்களைப் போன்றவர்களுக்கு நல்ல அறிவுரைகளை வழங்கக் கூடியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு இந்த அவையிலே கிட்டத்தட்ட 18 ஆண்டுகளாக உறுப்பினராக இருந்துகொண்டிருக்கிறார்கள். அவருக்குத் துணையாக, அவரைப் போன்று, இந்த அவையிலே இருந்தவர்கள் குறைவாகத்தான் இருக்கிறார்கள். நீண்ட அனுபவம் பெற்றவரை துணைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துள்ளதால், இந்த அவையின் மதிப்பையும், மரியாதையையும் அது உயர்த்துகிறது. அவரும் இந்த அவையின் மதிப்பை உயர்த்த நிச்சயமாகச் செயல்படுவார்கள் என்று சொல்லி, அவரை வாழ்த்தி, அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: துணைத் தலைவர் அவர்களைப் போட்டியின்றி தேர்ந்தெடுத்ததிலே, உங்கள் எல்லோருடனும் இணைந்து கொண்டு, நானும் மகிழ்ச்சியடைகிறேன். பிரதான எதிர்க் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகமும், அதற்கு அடுத்த வரிசையில் உள்ள காங்கிரஸ் கட்சியும், ஆசிரியர்-பட்டதாரி தொகுதி உறுப்பினர்கள் கூட்டணியும் இதிலே போட்டியிடாமல், ஒத்துழைத்து, அவர் போட்டியின்றி வருவதற்கு காரணமாக இருந்தது (?) உண்மையிலேயே தனியாகக் குறிப்பிட்டு, பாராட்டக்கூடிய ஒன்றாகும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், இந்த அவையினுடைய எதிர்க் கட்சித் தலைவர், கருணாநிதியின் பெருமையைப் பற்றிப் பேசினார்கள். நானும் அதை அப்படியே விட்டுவிட்டால் நன்றாக [illegible] சொல்கிறேன். [illegible]

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1986 ஏப்ரல் 25

1952-லேயே தாங்கள் உறுப்பினராக வந்த நேரத்திலும் நான் உங்களுடைய கட்சியிலேதான் இருந்தேன். அப்போது பல நேரங்களில் பெரியவர் கட்டிக்காராக வேள்ளையிலே நடக்கிற நடவடிக்கைகளைப் பற்றிச் சொல்லக் கேட்கிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், தாங்கள் வயதானவர்கள் என்கிற உணர்வு எங்களுக்கு இன்னமும் இல்லை.

(முறுப்புகள் 11-10)

அடிக்கடி உங்களுக்கு வயதாகவிட்டது என்று நினைக்க சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அண்மையில் உங்களுக்கு 80-வது ஆண்டு முடிந்து 81-வது வயது பிறந்த தினவிழா, ஜூன் 26-ம் நாள் நடைபெற இருக்கிறது. அதிகம் நாள்காண்டுகள் இருக்கத்தான் போகிறார்கள் என்று கவலைப்படத் தேவையில்லை. 4 ஆண்டு முடிந்துபோன பிறகு, மீண்டும் 6 ஆண்டுக் காலத் திற்கு தாங்கள் தலைவராக நம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏற்பாடுகளை நிச்சயம் செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு உங்கள் பதவி முடிந்த பின்னும் கூட, மீண்டும் தாங்கள் ஆறாண்டுக் காலம் பதவியில் இருப்பீர்கள் என்பதை நம்பிக்கையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். பாராட்டிப் பேசுகிறபோது, இரண்டு நாட்களுக்கு முன்புதான் பதவி முடிவுறும்போது பாராட்டினோம், மீண்டும் இப்போது துணைத் தலைவ ராகத் தேர்ந்தெடுக்கப்படும்போது மீண்டும் எல்லாவற்றையும் திருப்பிச் சொல்கிற தேவையில்லையென்று சொல்லி என்னைப் பாராட்டினார்கள். குறிப்பாக என்ன சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லிப் பாராட்டினார்கள். அதிலே நான் இன்னொன்றையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையைப் பொறுத்தவரையில், அவர்கள் சொன்னதைப்போல, 1968 ஆம் ஆண்டில் உறுப்பினராக நான் வந்தபோது, முதன் முதலில் நான் இங்கே வந்தபோது, திரு. மாணிக்கவேலு நாயக்கர் அவர்கள் தலைவராக இருந் தார்கள். முதலமைச்சராக அறிஞர் அண்ணா அவர்கள் இருந்தார்கள். டாக்டர் ஏ. எல். முதலியார், திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார், திரு. கிருஷ்ண சாமி நாயுடு போன்ற பெரியவர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள். 1968 ஆம் ஆண்டு உறுப்பினராக வந்தபோது அப்போது உறுப்பினராக வாங்கிய வாய்ப்பு கிடைத்தது என்ற மகிழ்ச்சியோடு அந்த சந்தர்ப்பத்தில் வந்தேன். அப்போது மூன்று முறை தேர்ந்தெடுக்கப்படுவேன் என்றோ, இப்போது தேர்தலில் நிற்கப் போவதில்லை என்ற பிறகும் முதலமைச்சர் அவர்களின் பரிந்துரையால் ஆளுநரால் நியமிக்கப்படுவேன் என்றோ கருதவில்லை. அப்படி நியமிக்கப்பட்ட இரண்டு, மூன்று நாட்களுக்குள் மீண்டும்



1986 ஏப்ரல் 25] [திரு. ஜி. சுவாமிநாதன்]

இந்த அவையின் துணைத் தலைவராகப் பதவி ஏற்பேன் என்றும் கருதவில்லை. அப்படிப் பதவியேற்கும்பேன் என்று சொன்னால், நன்றிக் கடப்பாட்டோடு நான் முதன் முதலில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். நான் எதிர்பாராத நிலையில் அவையின் உறுப்பினராக நியமனம் செய்து, மீண்டும் நான் எதிர்பாராத நிலையில் எனக்கு மீண்டும் துணைத் தலைவர் பொறுப்பை அளித்திருக்கிறார்கள் என்று சொன்னால், நான் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி ஆளுநர் அவர்கள் முதல்வர் அவர்களின் பரிந்துரையின் பேரில் நியமனம் செய்திருக்காவிட்டால், 18 ஆண்டுக் காலத்தோடு ஓய்வுபெற்றவர்கள் வரிசையில் சேர்ந்து சென்றிருப்பேனே தவிர, திரு. ஏ. எல். முதலியார் அவர்களைப்போல 24 ஆண்டுக்காலம் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்திருக்காது.

அப்படிப்பட்ட இந்த அவையில் துணைத் தலைவர் என்று பார்த்தால், தலைவருக்கு உதவியாக இருக்க வேண்டுமென்ற கருத்தையும் சொன்னார்கள். தலைவராக இருந்துவிடலாம், துணைத் தலைவராக இருப்பது சிரமம். நம் முடைய மாநிலத்தில் மட்டுமல்ல, பல மாநிலங்களுக்கும் சென்று பார்க்கும் வாய்ப்பு கிடைத்ததன் காரணமாகச் சொல்கிறேன், பல்வேறு மாநிலங்களில் துணைத் தலைவர் வயதானவராகவும், தலைவர் சிறியவராகவும் இருக்கும் நேரத்திலும் சரி, துணைத் தலைவர் அனுபவம் பெற்றவராகவும், தலைவர் அனுபவம் இல்லாத முறையிலும் பல்வேறு அபிப்பிராய பேதங்கள் வர வாய்ப்பு இருக்கிறது. இந்த இருவருக்குமிடையிலும் நல்ல முதிர்ச்சி, அனுபவம், பக்குவம் இருந்தால்தான் அவர்கள் சிறப்பாகப் பணியாற்ற முடியும். தலைவரை விட எனக்கு அதிகமாகத் தெரியும் என்ற நிலை இருந்தால், சேர்ந்து பணியாற்றுவது கடினமாகிவிடும். இதுபோன்ற நேரங்களில் துணைத் தலைவருக்கும் தலைவருக்கும் பிரச்சினை எழும்போது, ஒருவருக்கொருவர் ஒற்றுமையோடு பணியாற்றும் நிலைமை இருக்கிறது. மேலவையைப் பொறுத்த வரையில், உங்களோடு நீண்ட காலம் பணியாற்றுகிற முறையிலும், தலைவர் அவர்கள் துணைத் தலைவரை விட எல்லாவிதமான தகுதிகளையும் பெற்றவர், எல்லாவிதமான திறமையையும் பெற்றவர் என்று எப்போது துணைத் தலைவர் நம்புகிறாரோ அவர்தான் சிறந்த பணியாற்ற முடியும் என்ற அளவில் சிறு வயது முதற்கொண்டு, மாணவர் பிராயம் முதல், தங்களுடனேயே இணைந்து பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தமைக்காக நான் மகிழ்ச்சியாகவும் பெருமை யாகவும் இதை ஏற்றுக்கொள்கிறேன் என்று தெரிவித்துக்கொள்ள [illegible]

கிறேன். இன்னும் ஒரேயொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். மேலவையைப் பொறுத்தவரையில், அடிக்கடி நாட்டின் பல இடங்களுக்குச் செல்கிற போது பலரும் கேட்கிறார்கள்.

(முற்பகல் 11-15)

மேலவை இருக்க வேண்டுமா என்று பலரும் கேட்கிறார்கள். முன்பு எப்போதாவதுதான் இதுபோல் கேட்பார்கள். ஆனால் இப்போது அடிக்கடி இவ்வாறு கேட்கப்படுகிறது. இதற்குக் காரணம், கீழவைக்கும், மேலவைக்கும் வேறுபாடில்லாமல், கீழவை என்ன செய்து கொண்டிருக்கிறதோ அதையே மேலவையும் செய்து, கீழவையில் என்ன பேசப்படுகிறதோ அதையே மேலவையிலும் பேசி, அங்கே எவ்வளவு சூடாக விவாதம் நடைபெறுகிறதோ அதேபோல் இங்கேயும் சூடாக விவாதம் நடைபெறுகிறபோது, பொது மக்கள் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். எனவேதான் இதற்கெல்லாம் கீழவை இருக்கிறபோது, மேலவையும் தேவைதானா என்று வினா எழுப்புகிறார்கள்.

மாண்புமிகு திரு. சிற்றரசு அவர்கள் ஒரு கருத்தை அடிக்கடி சொல்வார்கள். கீழவைக்கும் மேலவைக்கும் உவமானம் சொல்கிறபோது, கீழவை என்பது கப் என்றால், மேலவை சாசர் போலாகும். கப்பில் வைத்திருக்கின்ற பாலோ காப்பியோ சூடாக இருந்தால், அந்தச் சூட்டைத் தணிக்க உதவும் சாசர் போன்று மேலவை இருக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்வார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இது மாண்புமிகு அறிஞர் அண்ணா சொல்லிய கருத்தாகும்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** அறிஞர் அண்ணா சொன்னதை மாண்புமிகு திரு. சிற்றரசு அவர்கள் அடிக்கடி எடுத்துச் சொல்வார். ஆனால் இப்போது அங்கே எவ்வளவு சூடாக விவாதம் நடைபெறுகிறதோ அதைப்போலவே இங்கேயும் பேசப்படுகிறது; அங்கே என்ன என்ன நடக்கிறதோ அதுவே இங்கேயும் நடக்கிறது. பின் எதற்காக மேலவை இருக்கிறது என்கிற வினா எழுப்பப்படுகிறது. மேலவை என்பது அரசுக்கு ஆலோசனை சொல்லக்கூடிய அவையாக இருக்கும்போது, மேலவை இயல்பாக சிறப்பாக நடப்பதற்கு முடியும் என்கிற கருத்தைச் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வாறாக மிகச் சிறப்புமிக்க பெரியவர்கள் எல்லாம் பங்கு பெற்ற இந்த மேலவையிலே இரண்டு முறை துணைத் தலைவராக இருந்து, இப்போது மூன்றாவது முறையாகவும் துணைத் தலைவராக ஆகின்ற வாய்ப்பு பெற்றதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அடுத்ததாக, ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற முறையும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டேன். இந்த முறையும் போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். அதற்காக மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும், மற்ற உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். யாரேனும், போட்டி போட்டிருந்தால், பின் போட்டியிட்டுதான் துணைத் தலைவர் ஆனார், வெற்றி அடைந்திருந்தாலும், போட்டியிட்டுத்தான் துணைத் தலைவர் ஆனார் என்றுதான் வரும். அதற்கு இடம் கொடுக்காமல், போட்டியின்றி துணைத் தலைவராக என்னைத் தேர்தெடுத்த மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவருக்கும், மற்ற உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முடிவாக ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் துணைத் தலைவராக ஆன பிறகு, உறுப்பினர் என்கிற முறையில் பேசுகிறபோது, நானும் ஒரு கட்சியைச் சார்ந்து நின்றுதான் பேச வேண்டிய அவசியம் வருகிறது. எப்படி எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் அந்தக் கட்சி சார்பாகப் பேசுகிறார்களோ அவர்கள் கட்சிக் கருத்தைச் சொல்கிறார்களோ, அதேபோல் நானும் பேசுகிற போது, நான், நான் சார்ந்திருக்கிற கட்சியின் கருத்தைத்தான் பேச முடியும். ஆனால் நானே துணைத் தலைவராக அமர்கிறபோது, — நான் அமர்ந்தாலும் சரி அல்லது மாண்புமிகு உறுப்பினர் திரு. மிசா. கணேசன் அமர்ந்தாலும் சரி — பாரபட்சமில்லாமல் அவையின் நடவடிக்கைகளைக் கண்காணித்து வருவேன். சில பேர் பேசுகிறபோது, துணைத் தலைவர் பேசுகிறபோது, தன் கருத்துக்களை கட்சி சார்பில் சொல்கிறார்கள் என்று கூட சொன்னார்கள். நான் உறுப்பினராக இருக்கிற கட்சியின் கருத்துக்களை நான் ஆதரித்துப் பேச வேண்டியது அவசியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் துணைத் தலைவராக அமர்கிறபோது அக்கடமையை நடுநிலை நின்று ஆற்றுவேன் என்று கூறிக்கொள்கிறேன்.

துணைத் தலைவராக இருப்பவருடைய நல்லெண்ணம், குறிக்கோள் என்னவென்று சொன்னால், அவர் தலைவரிடத்திலே அமர்கிறபோது 'ரெஃபரி' போல இருக்க வேண்டும். நடுவர் போல இருக்க வேண்டும். கால்பந்தாட்டம் நடைபெறுகிறபோது இரண்டு கட்சிக்காரர்களுக்கும் நடுவராக இருக்க வேண்டும். நடுவர் எதாவது ஒரு கட்சியில் சேர்ந்துவிடக் கூடாது. அதேபோல் தலைவர் அவர்களோ, துணைத் தலைவர் அவர்களோ நடுவராக இருந்து நடக்கிற நிகழ்ச்சிகள் சிறந்த முறையில் நடப்பதற்கு பங்காற்ற வேண்டும். அந்த வகையில் நானும் துணைத் தலைவர் பொறுப்பை, பாரபட்சமில்லாமல் நடத்துவேன் என்று உறுதிகூறி, நான் இங்கே போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வாய்ப்பளித்த அருப

களுக்கும், எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கும் குறிப்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-20)

## 4. அரசின் தீர்மானம்.

### கூட்டுறவுத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவரவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள கூட்டுறவுத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு * பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள கூட்டுறவுத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

திரு. எல். கணேசன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் உறுப்பினராகி என்னுடைய முதல் பேச்சை, மரபு வழிச் சொல்லைப் பயன்படுத்த வேண்டுமென்றால் கன்னிப் பேச்சைத் தொடங்கு வதற்கு முன்னால் இந்த மன்றத்தினுடைய உறுப்பினராக ஆகும் வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்தவர்களை எல்லாம் எண்ணிப்பார்த்து அவர்களுக்கு எல்லாம் நன்றி தெரிவிப்பதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். இந்தத் தொகுதியில், மிகப்பெரிய தொகுதி 3 மாவட்டங்கள், 7 நாடாளுமன்றத் தொகுதிகள், 42 சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள் — இவைகளை உள்ளிட்ட தொகுதியில் கற்றவர்கள் பலபேர் இருந்தாலும், நான்தான் வேட்பாளராகப் போட்டியிட வேண்டுமென்று முடிவெடுத்து, அந்த முடிவின்படி என்னை வேட்பாளராக நிறுத்தி, அப்படி நிறுத்தியதோடு மட்டுமல்லாமல், கழகத்தினுடைய தலைவர் என்ற பொறுப்போடு மட்டுமல்லாமல், அண்ணன் என்ற பரிவுடன் எல்லா முயற்சிகளையும் செய்து, எல்லா வகையிலும் செயல் பட்டு, ஒரு சரித்திர சாதனை என்று சொல்லும் அளவுக்கு, இதற்கு முன்னால்

* 498-530ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.





இதைப்போல் யாரும் அந்தத் தொகுதியில் வெற்றி பெற்றதில்லை. Unparalled, Unprecedented " வெற்றி என்று சொல்லத்தக்க அளவுக்கு மிகப் பெரிய வெற்றியை உருவாக்கித் தருவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்திருக்கிற கழகத் தலைவர், தமிழினத் தலைவர், அண்ணன் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் போல கழகத்தினுடைய பொதுச் செயலாளர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளும் கட்சி சார்பில் எதிரணியில் போட்டியிட்டபோது, அமைச்சர் அவர்களுடைய அதிகாரத் துஷ்பிரயோகங்கள், அதிகார வர்க்கத்தின் அச்சுறுத்தல்கள் இவை களுக்கு எல்லாம் அடிபணிந்து விடாமல், உறுதியோடு நிமிர்ந்து நின்று, பணியாற்றி, இந்த வெற்றிக்கு அரும்பாடுபட்ட அனைத்துத் தரப்பு ஆசிரியர்களுக்கும், குறிப்பாக திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் தலைமையிலே இயங்குகிற ஆசிரியர் மன்ற ஆசிரியர் பெருமக்களுக்கும், எப்பொழுதும்போல், எந்த இழப்பையும் ஏற்றுக் கொண்டு பாடுபடுகிற கழக செயல் வீரர்களுக்கும் நான் என்னுடைய நன்றி அறிதலை இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் போலவே எத்தகைய இடையூறுகளுக்கும் பணிந்துவிடாமல் துணிந்து நின்று மிகப் பெரிய அளவில் வாக்குகளை அளித்து வெற்றி பெறச் செய்த பல்வேறு வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன்.

கூட்டுறவுத் துறைக் கொள்கைக் குறிப்பில் நான் சில கருத்துக்களை, நான் சார்ந்திருக்கிற கழகத்தின் சார்பில் எடுத்துரைக்க விரும்புகிறேன். தலைவரவர்களே, கூட்டுறவு என்ற தத்துவம், லட்சியம், கொள்கை மிக உயர்ந்தது என்ற கருத்து எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்தியப் பொருளாதாரத்தில் " "Mixed Economy" "கலப்பு பொருளாதாரம்" என்ற கருத்தை வைத்து அதிலே பொதுத் துறை, தனியார் துறை இந்த இரண்டு துறைகளுக்கும் இருக்கிற பங்கைப்போல கூட்டுறவுத் துறைக்கும் இருக்க வேண்டுமென்ற கருத்தை, தத்துவத்தை வழங்கியிருக்கிறார்கள். இந்தக் கூட்டுறவுத் துறைக்கு மிகச் சிறந்த தத்துவ விளக்கம் சொல்வார்கள். நான் அந்தத் துறையிலே பயிற்சி பெற்றவன் என்ற காரணத்தாலேயும் அந்தப் பயிற்சியில் வெற்றி பெற்றவன் என்ற காரணத்தாலேயும் எனக்கு அந்தத் துறையைப்பற்றி சில முக்கியமான தன்மைகள் தெரியும். பொதுவுடைமைத் தத்துவத்திற்கும், முதலாளித்துவத் தத்துவத்திற்கும் இடையில் அருமையான தத்துவமாக இது இருக்கிறது என்று சொல்வார்கள். அந்தக் கம்யூனிசப் பொதுவுடைமையில் தனி மனிதனுடைய உரிமை

[திரு. எல். கணேசன்] [1986 ஏப்ரல் 25

நிராகரிக்கப்பட்டு சுரண்டல் ஒழிக்கப்படுகிறது. அதுபோல முதலாளித்துவத்தில் தனி மனிதனுடைய அடிப்படை உரிமை பேணிப் பாதுகாக்கப்படுகிறது. அந்த நேரத்தில் அதே சமயத்தில் சுரண்டல் அனுமதிக்கப்படுகிறது. ஆனால் இரண்டு முறைகளிலும் அமைப்புகளிலும் இருக்கிற குறைகளை நீக்கிவிட்டு நன்மைகளை மட்டுமே கொடுக்கிற நல்ல கொள்கை என்ற கருத்தை ஏற்றுக்கொள்வார்கள். அந்தத் துறை ஆங்கிலேயர் காலத்தில் இந்தியாவில் முதன் முதல் கொண்டுவரப்பட்டதற்கு அடிப்படைக் காரணம் இந்திய விவசாயிகளை, உழவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதுவே. அப்போது அவர்கள் தனியாரிடம் வட்டிக்கு வாங்கினார்கள். வட்டிக்காரர்களிடம் கடன் வாங்கி அந்தக் கடனை திருப்பிச் செலுத்தமுடியாமலே கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலே மரிக்கின்ற அந்தக் கொடிய நிலையைப் போக்க வேண்டுமென்பதற்காக எளிதான வட்டியிலே கடனைக் கொடுத்து விவசாயிகளைக் காப்பதற்காகத்தான் அந்தத் துறை இந்தியாவில் முதன்முறை உருவாக்கப்பட்டது.

(முற்பகல் 11-25)

ஆனால் அந்தத் துறை, கடன் துறையில் இன்றைக்கு எப்படி இருக்கிறது என்று எண்ணிப் பார்க்கிறபோது, கூட்டுறவுத் துறை நாளுக்கு நாள் நசிந்து வருகிறது, நாளுக்கு நாள் அதிலே கடன் அளிக்கிற திறன்—அதாவது "கிரிடிட் ரைடு ஆப் தி கோவாப்பரேட்டிவ் மூவ்மென்ட்"—கூட்டுறவு நாணயச் சங்கத் துறையில் பணியாற்றுகிற அலுவலர்களுக்குச் சம்பளம் கூட கொடுக்க முடியாது மத்திய வங்கி திணறுகிற நிலையில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட்ட முக்கிய நோக்கமே கூட நிறைவேறாமல் இன்றைக்கு நிலைமை இருக்கிறது என்பதை மிகுந்த வருத்தத்தோடு இங்கே சொல்ல விரும்புகிறேன். அதைத்தான் இந்த நேரத்தில் அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அதாவது ஒரு காலகட்டத்தில் இருக்கிற சிக்கலை அவிழ்த்து, பிரச்சினைகளுக்கு முடிவு கண்டு, அதற்குப் பின்னாலாவது நல்ல தொடக்கத்தை உருவாக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் கடன்பட்டிருக்கிற விவசாயிகள், பட்ட கடனைக் கட்ட முடியாமல் திண்டாடுகிறார்கள் என்பதுதான் உண்மை. வேண்டுமென்றே அவர்கள் கட்டவில்லை என்பது சரியல்ல. இதற்கு ஒரு பரிகாரம் எப்படியாவது கண்டாக வேண்டும். அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, ஒரு உடன்பாட்டைக் கண்டு அதற்குப் பின்னால் புதிய சிக்கல்கள் இல்லாமல் ஒரு சூழ்நிலையை உருவாக்கி விவசாயிகளைக் காப்பாற்ற—நிரந்தரமாகக் காப்பாற்ற—வழிவகை காண வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 25] [திரு. எல். கணேசன்]

நான் அறிந்த வரையில், இந்தத் துறையில்தான் வேறு எந்தத் துறையையும் விட லஞ்சம் வாங்குவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு. அப்படிக் கருதப்பட்ட காலம் ஒன்று உண்டு. காரணம் இந்தத் துறையில்தான் நான்-அபிஷியல்ஸ் அதிகம். அதிகாரப்பற்றற்றவர்கள் பலரைக் கொண்ட இயக்கம் இந்தக் கூட்டுறவுத் துறை இயக்கம். அவர்களின் கையிலே இருக்கிற துறை என்ற காரணத்தால், அப்போது அவ்வாறு கருதப்பட்டது உண்டு. ஆனால் இந்தத் துறையின் இன்றைய நிலைமை என்ன? வேறு எந்தத் துறையோடும் போட்டியிடுகின்ற அளவுக்கு இன்றையதினம் இந்தத் துறையில் முறைகேடுகள் இருக்கின்றன என்பதை மிகுந்த வருத்தத்தோடு நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் நாடு அளவில் — மேலவில் தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியம் என்று ஒரு அமைப்பு உண்டு. அந்தக் கூட்டுறவு ஒன்றியத்திற்கு பல்வேறு பணிகள் உண்டு. குறிப்பாக அந்த ஒன்றியத்தின் நோக்கம் கூட்டுறவுத் தத்துவத்தை எல்லா இடங்களிலும் பரப்புவதாகும். அதுதான் அந்த அமைப்பின் மிக முக்கியமான நோக்கம். அந்த தமிழ் நாடு கொவாப்பரேட்டிவ் யூனியன் பத்திரிகை வெளியிடுவது உண்டு. அதாவது ஜர்னல்ஸ் வெளியிடுவது உண்டு. அதைப்போலவே கொள்கை விளக்கத்தை, தத்துவத்தைப் பரப்ப வேண்டும் என்று ஆண்டுக்கொருமுறை கூட்டுறவு வாரம் என்று கொண்டாடுவது உண்டு. அப்படிக் கொண்டாடுகிற விழாக்களில் எவ்வளவு முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்பதை, மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு இந்த அவைக்கும், குறிப்பாக இந்தத் துறையின் அமைச்சர் அவர்களுக்கும் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

இந்தத் தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியம் கொள்கை விளக்கக் கையேடு என்று ஒரு ஃபேம்ப்லெட்டை வெளியிடுகிறது. அதைக்கூட கூட்டுறவுத் துறையில்தான் அச்சடிக்க வேண்டும் என்றும் முடிவு செய்தார்கள். அந்தக் கையேட்டை, மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு இங்கே நான் காட்ட இருக்கிறேன். அந்தக் கையேட்டின் விலை எப்படியும் 50 அல்லது 60 காசுக்கு மேல் போகக் கூடாது என்றும் அதற்காக அமைக்கப்பட்ட விழாக் குழுவில் அதிலும் கூட்டுறவுத் துறை பதிவாளர் அவர்களையும் உள்ளடக்கிய விழாக் குழுவில் — தீர்மானிக்கப்பட்டது. அப்படி முடிவு செய்யப்பட்ட பின்னாலே என்ன நடந்தது என்றால் அந்தக் கையேட்டை கூட்டுறவுத் துறையில் அச்சடிக்காமல் தனியாரிடம் அச்சடிக்கும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. இரண்டு லட்சம் பிரதிகள் அச்சிடப் பட வேண்டுமென்று ஆர்டர் வழங்கப்பட்டது. அதிலே என்ன வேடிக்கை என்றால், இரண்டு லட்சம் பிரதிகள் அச்சடிப்பதற்கு ஆர்டர் கொடுக்கிற

நோத்தில், அதற்காக ரூ. 2 லட்சம் முன் பணமாகக் கொடுக்கப்பட்டது. அதை விட வேடிக்கை என்னவென்றால் அந்தக் கையேட்டின் விலை 50 அல்லது 60 காசுக்கு மேல் போகக் கூடாது என்று குழுவால் நிர்ணயிக்கப்பட்டிருந்தோ அந்தக் கையேட்டின் விலை 2 ரூபாய் என்று போடப்பட்டது. அந்தக் கையேடு இதுதான் (மாண்புமிகு உறுப்பினர் அதை எடுத்து அவையில் காட்டினார்) இது எப்படியும் 2 ரூபாய் பெறாது. இதைப் பார்த்தாலே நாம் தெரிந்து கொள்ளலாம். இதைத் தெரிந்து கொள்வதற்காக மட்டும் சொல்லவில்லை. இந்த அளவுக்கு அச்சிடுவதற்கு எவ்வளவு [illegible] என்று [illegible] தனியார் நிறுவனங்களில் நான் [illegible] போய் 'கொட்டேஷன்' வாங்கி வந்திருக்கிறேன். மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு அந்தக் கையேட்டையும் கொட்டேஷனையும் என்னுடைய பேச்சின் இறுதியில் அமைச்சர் அவர்களிடம் தர இருக்கிறேன்.

(முற்பகல் 11-30)

(மாற்றுத் தலைவர் திரு. [illegible] தலைமை)

அதுமட்டுமல்ல, அதைவிட இன்னொரு [illegible] அந்த விழாவிலே நடந்திருக்கிறது. [illegible] அதிலே பணியாற்றிய [illegible] — மாநாடு [illegible] — அதுமட்டுமல்ல [illegible] கள். மாற்றுத் தலைவர் அவர்களே, [illegible] இதுதான் அந்த [illegible] யிருந்து பார்த்தால் [illegible] தெரியாது. [illegible] தான் பின்னாலே [illegible] வில்லையை பார்த்தால், 50 [illegible] கொடுத்திருக்கிறார்கள் தெரியுமா? [illegible] விலை நான்கு ரூபாய்க்கு விற்கிறபோது, இதற்கா நான்கு ரூபாய் என்று மற்றவர்கள் நினைப்பார்களே என்று கருதி, ஒன்றியமே இரண்டு ரூபாயை மானியமாக வழங்கியிருக்கிறது. இதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நானும் இந்த மன்றத்தின் உறுப்பினர் என்ற பொறுப்புணர்ச்சியோடு இப்படிப்பட்ட வில்லையைத் தயாரிக்க எவ்வளவு ஆகும் என்று 'கொட்டேஷன்' வாங்கியிருக்கிறேன். அதனுடைய நகலை அமைச்சரிடம் தருகிறேன். அந்தக் கொட்டேஷனைப் பார்க்கிறபோது, அதை 50 காசுகளுக்குத் தருவதற்கு புகழ்பெற்ற நிறுவனமே ஒப்புக்கொண்டிருக்கிறது. [illegible] பிரிண்டிங் சார்ஜுக்கு இது. இதைப் பின்னாலே அமைச்சரிடம் தருகிறேன். அதற்கு 50 காசுகள்தான் பொறும்; ஆனால் இவர்கள் கொடுத்துள்ள விலை நான்கு ரூபாய்.



இந்த விழாவிலே தந்த இன்னுமொன்று பேப்பர் பிளாக்ஸ், கூட்டுறவ சங்கங்கள், ஆங்காங்கேயுள்ள பல்வேறு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்க கடன் வழங்கும் சங்கங்கள், மற்ற சங்கங்கள் ஆகிய பல்வேறு சங்கங்கள் இந் விழாவைக் கொண்டாடுவார்கள். அப்படிக் கொண்டாட கொடியை அவ களுக்கு விற்கிறார்கள். அந்தக் கொடி 15 காசுகூட பெறாது. அந்தக் கொடிை அவர்கள் விற்றுள்ள விலை 60 காசுகள். அந்தக் கொடி இதோ ஏ வண்ணத்தில் கூட்டுறவினுடைய தத்துவத்தை விளக்குகிற 'விப்ஜியார்' கொட இதுதான். இந்தக் கொடி ஒன்று 60 காசு என்று கூட்டுறவுச் சங்கங்களுக் விற்கப்படுகிறது. இந்தக் கொடிகளை தனியாரிடம்தான் வாங்கியிருக்கிறா கள். அந்தக் கொடி எவ்வளவு பெறும் என்பதை நான் தனியாரிடமே கேட் அதற்குரிய கொட்டேஷனை வாங்கி வைத்திருக்கிறேன். ஒரே விழாவிலே இத்தனை விஷயங்களும் நடைபெற்றிருக்கின்றன என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதைவிட இன்னுமொரு வேடிக்கை. அந்த விழாவிற்குத் துணிக் கொடிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒன்றியத்தின் மூலமாக விலைக்கு விற்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கொடிகளை தனியாரிடம் வாங்கி விற்றிருக்கிறார்கள். அந்தக் கொடிக்கு 23 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்து விற்கிறார்கள். அந்த ஏழு வண்ணத்தில் பட்டை பட்டையாக உள்ள அந்தத் துணிக் கொடியினுடைய சாதாரண விலை 7 ரூபாய். சரியாகச் சொல்ல வேண்டும் என்றால் ரூபாய் 7.50. அந்தக் கொடியை இவர்கள் தனியார் நிறுவனத்திடம் எப்படிப் பெற்றார்களோ அதைப் போலவே கொடுக்கத் தயாராக உள்ள தனியார் நிறுவனத்திடம் நானும் 'கொட்டேஷன்' வாங்கி வைத்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களே, மாற்றுத் தலைவர் அவர்களே, இதனுடைய உண்மையான விலை என்ன தெரியுமா 23 ரூபாய்க்கு விற்ற இதே கொடியைத்தான் ரூபாய் 7,50-க்குக் கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அந்த விழாவின்போது 'ஸ்போர்ட்ஸ் மீட்' என்று விளையாட்டுப் போட்டிகளை நடத்துவார்கள். அந்த விளையாட்டுப் போட்டிகளை இவர்கள் விளையாட்டாகவே நடத்திவிட்டார்கள். அது என்னவென்று சொல்லுகிறேன். கூட்டுறவுத் துறையிலே உள்ள பணியாளர்களுக்காக நடத்தப்படும் அந்த விளையாட்டுகளில் பல பேர் கலந்துகொள்வார்கள். அதிலே கலந்துகொள்ளும் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் நாள் ஒன்றுக்கு சாப்பாட்டுக்கு என்று எத்தனை ரூபாய் செலவழித்திருக்கிறார்கள் தெரியுமா? 35 ரூபாய் என்று கணக்கு எழுதப்பட்டிருக்கிறது. அது சாதாரண சா[illegible] தாரண சைவ

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

(முற்பகல் 11-35)

சாப்பாடு மட்டுமல்ல, அவர்களிடம் அந்தப் பணம் கொடுக்கப்படவில்லை. இவர்களே ஒரு கல்யாண மண்டபத்திலே அதை ஏற்பாடு செய்தார்கள். நாம் எல்லாம் உலகம் பற்றி உணர்ந்தவர்கள் தான். நாம் மனச்சாட்சியோடு பார்க்க வேண்டும். சைவ சாப்பாடு திருமண மண்டபத்தில் மொத்தமாக ஏற்பாடு செய்யும்போது, எவ்வளவு செலவாகும் என்பதைப் பார்க்கலாம். மொத்தத்தில் ஒரு சாப்பாடு ரூ. 10-க்கு மேலாகவே ஆகிவிடுமா? அப்படி இருந்தாலும், ஒரு சாப்பாட்டிற்கு ரூ. 30 தான் அதிகபட்சம் ஆகும். ஆனால் இவர்கள் ரூ. 95 என்று கணக்கு எழுதி வைத்திருக்கின்றார்கள். அவர்களிடம் பணத்தைக்கூட கொடுத்துவிடவில்லை. ஆனால் சில காலத்திற்கு முன்னால் சென்னையிலே இருந்த விளையாட்டு வீரர்கள் எங்களுக்கு நீங்கள் தருகின்ற அந்தச் சாப்பாடு தேவையில்லை. "நாங்களே சாப்பாடு சாப்பிட்டுக் கொள்கிறேன். தனியாகப் பணம் கொடுங்கள்" என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆளுக்கு ரூபாய் 50 என்று தனியாக அவர்கள் பெற்றிருக்கின்றார்கள். மற்றவர்களுக்கு அந்தக் கல்யாண வீட்டிலே சாப்பாடு. அதற்கு ஆளுக்கு நாளுக்கு ரூ. 95 என்று கணக்கு எழுதியிருக்கின்றார்கள். எங்களுக்குத் தெரிந்தவரையில், அது தகவல். தவறாக இருக்குமானால், அதை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னால், திருத்திக்கொள்ளத் தயாராக இருப்பவன் நான். தவறான தகவல்களை வேண்டுமென்றே சொல்பவன் அல்ல. வேண்டுமென்றே குற்றச்சாட்டுகள் சொல்பவன் அல்ல. பொறுப்பற்ற தன்மையில் சொல்லமாட்டேன். நாங்கள் அந்த மாதிரி பள்ளியில் பயின்றவர்கள் அல்ல. எனக்குத் தெரிந்த தகவல்படி, 600 பேர்கள் என்று இருக்கின்றது. ஆனால் இவர்கள் கணக்குப்படி, 1200 பேர்கள் என்றும் அவர்கள் அதிலே பங்கேற்றதாகவும் அதற்காக செலவிட்டதாகவும் சொல்லி கணக்கு எழுதப்பட்டிருக்கின்றது. இதையும் அவையினர் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டும். சாதாரண விழாவில் இப்படி லட்சக்கணக்கான ரூபாய் அளவுக்கு முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. வலிந்து சொல்ல வேண்டுமென்று சொன்னால் ஊழல்கள் என்ற சொல் கூட போதாது. அது சாதாரண சொல். அதையும் விட கடுமையான சொல்லைப் பயன்படுத்த வேண்டும். ஒரு கூட்டுறவுத் துறை விழாவில் இவ்வளவு நடைபெற்றிருக்கின்றது.

இதைவிட இந்த கூட்டுறவுத் துறையில், கூட்டுறவுச் சங்கத்தில், எனக்குத் தெரியும், அப்படி ஒரு சாதாரண நிலவள வங்கித் தலைவராக இருந்தவர்கள், பெரிய வங்கி அளவில் தலைவராக இருந்தவர்கள், லேண்ட் டெவலப்மெண்ட் வங்கியிலே இருந்தவர்கள், பெரிய அளவிலே அதிலே விளம்பரம் கொடுத்திருக்



கின்றார்கள் என்பதற்காகக் கூட வழக்கு தொடுத்திருக்கின்றார்கள். அதையெல்லாம் இன்னும் நாம் மறந்துவிடவில்லை. அதையும் நினைவில் வைத்துக்கொண்டுதான் சொல்கிறேன். கூட்டுறவுத் துறையில் விளம்பரம் தரவேண்டும் என்று சொன்னால், அதற்கு என்று அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இருக்கின்றன. அந்த நிறுவனங்கள் மூலமாகத்தான் விளம்பரம் கொடுக்க வேண்டும். அப்படித்தான் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அதற்காக என்றே நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களை விட்டு, தனியார் நிறுவனத்திற்கு மீனா விளம்பர ஏஜென்சி என்ற அந்த நிறுவனத்திற்கு விளம்பரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பல லட்சக் கணக்கான ரூபாய் விளம்பரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது? அந்த ஏஜென்சிக்குக் கொடுக்கச் சொன்னது யார்? ஒப்புக்கொள்ளப்பட்ட நிறுவனத்தை விட்டுவிட்டு இந்த ஏஜென்சிக்கு இந்த பல லட்சக்கணக்கான ரூபாய் விளம்பரத்தைக் கொடுக்கவேண்டிய அவசியம், நிர்ப்பந்தம் எப்படி ஏற்பட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். இதைப்போலவே இன்னொரு விசித்திரமான ஒன்று. நுகர்பொருள் வாணிபம், சூப்பர் மார்க்கெட். நுகர்பொருள் துறையில், கன்சுமர்ஸ் கோவாப்பரேடிவ் மார்க்கெட்டிற்காகப் பொருள்கள் வாங்கி விற்கும் சங்கங்கள் பல்வேறு மாவட்டங்களில் இருக்கின்றன. பல்வேறு மாவட்டங்களில் கூட்டுறவுத் துறைச் சங்கங்கள் இருக்கின்றன. சூப்பர் மார்க்கெட்டுகள், சிறப்பங்காடிகள் இருக்கின்றன. அந்த சிறப்பங்காடிகள் லட்சக்கணக்கில், கோடிக் கணக்கில் பொருள்களை வாங்கி விற்பனை செய்கின்றன. இது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். ஆங்காங்குள்ள சிறப்பங்காடிகளுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கின்ற இடங்களிலேதான் பொருள்களை வாங்க வேண்டும். ஆனால் யாரிடம் பொருள்களை, துணிகளை வாங்குவது என்று இருக்கின்றது. அப்படி அங்கீகரிக்கப்பட்ட நிலையில் பல நிறுவனங்கள், மில்கள் இருக்கின்றன. அப்படி அங்கீகரிக்கப்பட்ட 14 மில்கள் இருக்கின்றன. ஆனால் நம்முடைய அமைச்சர் அவர்கள், பொறுப்பேற்றுக்கொண்டவுடன் சில நிறுவனங்களுக்கு, மில்களுக்கு

(முற்பகல் 11-40)

அங்கீகாரம் கொடுக்கின்றார்கள். அப்படிக் கொடுப்பது தவறு என்று நான் வாதிடவில்லை. 5, 5 என்று மேலும் பல நிறுவனங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. இந்தப் பண்டகசாலைகள் பண்டங்களை வாங்குகின்ற அந்த அமைப்புகளுக்கு, நிறுவனங்களுக்கு, மில்களுக்கு அங்கீகாரம். அப்படி அங்கீகாரம் கொடுக்கப்பட்டு, அவர்களிடமிருந்து வாங்கப்பட்டது ஏறத்தாழ கோடிக் கணக்கில் மதிப்பீடுள்ள துணிகளாகும். 1½ கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள துணிகள். புதிய அமைச்சர், இன்றைக்கு இருக்கிற அமைச்சர்

[திரு. எல். கணேசன்] [1986 ஏப்ரல் 25

அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால், அங்கீகாரம் அளிக்கப்பட்ட ஒரு நிறுவனம்—அந்த நிறுவனத்தின் பெயர் வி. ஆர். டெக்ஸ். வி. ஆர். டெக்ஸ் என்ற அந்த நிறுவனத்திடமிருந்து கூட்டுறவுப் பண்டக சாலைகள் துணிகளை வாங்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுகின்றன. இதிலேதான் விந்தை, வேதனை, வேடிக்கை. வி. ஆர். டெக்ஸ் என்ற அந்த நிறுவனத்திற்குச் சொந்த மில்கள் இல்லை. துணி உற்பத்தி செய்கிற ஆலைகள் இல்லை. நான் அறிந்தவரையில் அது போலியானது. போலியானது என்பதோடு, வேறு மில்களில் உற்பத்தியாகிற துணிகளை வாங்கி, அந்த முத்திரையை மாற்றி, வி. ஆர். டெக்ஸ் என்ற முத்திரையைப் போலியாகக் குத்தி, பண்டகசாலைகளுக்கு அந்தத் துணிகளை விற்பனை செய்கிற நிறுவனமாகும். அந்த நிறுவனத்திடமிருந்து அந்தத் துணிகளை வாங்க வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்துகிறது. பண்டகசாலைகள், அந்தப் பண்டகசாலைகளின் பொறுப்பிலே இருப்பவர்கள் யார்? Joint Registrar of Co-operative Societies. இன்னும் சில பண்டகசாலைகளில், Deputy Registrar of Co-operative Societies. என்ற அளவில், பதிவு பெற்ற அதிகாரிகள் Gazetted Officers இருக்கிறார்கள். Gazetted Officers are in charge of so many co-operative societies — Supermarkets. அப்படிப்பட்ட பெரிய பொறுப்பிலே இருக்கிற பண்டகசாலைகள், குறிப்பிட்ட வி. ஆர். டெக்ஸிடம்தான் வாங்க வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தும்போது, அவர்கள் நிராகரிக்கிறார்கள். மன்னிக்க வேண்டுகிறேன். நிராகரிக்கிறேன் என்று சொல்லக் கூடியவர்கள் மிகக் குறைவு. அவர்கள், அந்தத் துணிகளை வாங்குவதைத் தட்டிக் கழிக்கிறார்கள். நிராகரிக்கிறேன் என்றால், within 24 hours they will be shunted out. அவர்கள் தட்டிக் கழிக்கிறார்கள். அப்படி தட்டிக் கழித்த காரணத்தாலே பல அதிகாரிகள் மாற்றப்படுகிறார்கள். மாற்றப்பட்ட அதிகாரிகளின் பட்டியலை அருள்கூர்ந்து, மாற்றுத் தலைவர் அவர்கள் மூலமாக, இந்த அவைக்குச் சொல்லியாக வேண்டும். சென்னை சிந்தாமணியில் ஸ்பெஷல் ஆபீசர்—தனி அதிகாரியாக இருந்தவர் மாற்றப்படுகிறார். அவர் பெயர் திரு பெர்னான்டோ. அதைப்போல குடந்தையில் காவேரி சூப்பர் மார்க்கெட், அங்கே இருந்தவர் எனக்கு முன்பாக ஒரு காலத்தில், நானும் அந்தத் துறையில் பணியாற்றியவன். திரு பாலசுப்ரமணியம். He was transferred. மதுரை பாண்டியன் சூப்பர் மார்க்கெட், அதிலேயிருந்த தனி அதிகாரி மாற்றப்படுகிறார். அடுத்து, சந்திரசேகரபுரம் கூட்டுறவு ஸ்டோர்ஸ், குடந்தை. அந்தக் காலத்திலிருந்து இந்தத் துறையில் புகழ் பெ[illegible] ஸ்டோர்ஸ் அது.



1986 ஏப்ரல் 25]

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாற்றப்பட்ட அதிகாரிகள் எல்லாம் சொன்னபடி கேட்காததால் மாற்றப்படுகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படி என்றால், அவர்கள் கட்சி ஆண்ட காலத்தில் அப்படித்தான் செய்தார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. எல். கணேசன்:** நான் சொல்வதை குற்றச்சாட்டு என்று கொள்ளாவிட்டாலும், நீங்கள் பரிசீலிக்க வேண்டிய கருத்தாக எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பண்டகசாலைகள், நீங்கள் குறிப்பிட்ட அந்த நிறுவனத்திடமிருந்து அந்தத் துணிகளை வாங்க மறுத்ததற்குப் பின்னாலே அவர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்களா அல்லவா என்பதுதான் என்னுடைய கேள்வி. அதைப்போலவே இன்னொன்றையும் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். சேவா சங்கங்கள் என்று தொடர்ச்சியாக இருந்தன. விவசாய கூட்டுறவு சேவா சங்கங்கள் பல ஆண்டுகளாக இயங்கி வந்தன. அதில் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்

(முற்பகல் 11-45)

பட்ட தலைவர்கள் இருந்தார்கள். அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவைக் கலைத்து விட்டு தனி அலுவலர்களை அவசர அவசரமாக நியமிக்க உத்தர விட்டார்கள். ஆனால் அந்த உத்தரவுகளைப் போடுகிறபோது, என்ன நடைபெற்றது என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சருடைய நேரடியான குறுக்கீடு அந்த நியமனங்களில் இருந்தது என்பதற்கான ஆதாரம் என்னிடம் இருக்கிறது. ஏனென்றால் உரிய இணைப் பதிவாளருக்கு இது சம்பந்தமாக எழுதிய கடிதம் என்னிடம் இருக்கிறது. மாற்றுத் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு பெயரைச் சொல்கிறேன். வி. புருசோத்தமன், செந்தாமரை கண்ணனுக்கு பதிலாக குறிப்பிடப்பட்டவர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக, கூட்டுறவுத் துறை அமைச்சர் அறிவுரைப்படி, இணைப் பதிவாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியில் அமர்த்தப்பட்டார் என்பதற்கு அவருக்குக் கீழே இருக்கிற அதிகாரி எழுதிய கடிதத்தை ஆதாரமாக அமைச்சரிடம் கொடுக்க இருக்கிறேன்.

அதேபோல இன்னொன்று. கூட்டுறவுத் துறைப் பதிவாளருக்கு இன்னொரு மண்டல கூட்டுறவு இணைப் பதிவாளர் எழுதிய மடல். அவரும் இங்கே கோப்புகளோடுதான் வருகிறார். அப்படி அதிகாரிகள் கோப்பு களோடு வருவதை தவறு என்று நான் சொல்லவில்லை. எங்களுக்கும் அதுபற்றித் தெரியும். எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, [நானும் அவையில் உறுப்பினராக

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அவர் சொன்னது " பற்றி சொன்னார். அதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறாரா?

திரு. எல். கணேசன் : நான் சொல்ல விரும்புவது இறுதியாக முழுமையாக நீதி விசாரணை வைத்தால் உறுதியாகச் சொல்கிறேன். மதுரைக்கிளையும் "நாங்கள் அந்தக் காலத்தில் நீதி விசாரணை கேட்டோம், இந்த பதவியில் நீதிபதி மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லையென்றால், வேறு பதவியில் நீதிபதி கொண்டு விசாரிக்க வேண்டுமென்று சொன்னீர்களே," அப்படி இல்லாமல் இந்த மாநிலத்தில் உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு, அல்லது வேறு பதவியில் உச்சநீதிமன்ற நீதிபதியைக் கொண்டு நீதி விசாரணை நடத்தினால், அவர்கள் மீது நம்பிக்கை வைத்து, இந்த ஊழல்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவரத் தயாராக இருக்கிறேன், அதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : நான் கேட்டது, சேலைக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து நாங்கள் பணம் கொடுத்தோம் என்று சொன்னீர்களே, அப்படி யார் யார் பணம் பெற்றார்கள், யார் கொடுத்தார்கள், யாருக்குக் கொடுத்தார்கள் என்று உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், அதற்கு ஆதாரம் இருக்கிறதா? இரண்டாவது மேலோட்டமாக வஞ்சக்குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. * இருக்கிறது, என்றால், அமைச்சருக்கு * சொந்த ஊர், அப்படியானால் அந்த * அவருக்கும் நேரடியாக தொடர்பு இருப்பதாக அர்த்தமாகிறது. இப்படி ஆதாரம் இல்லாமல் சொல்லக்கூடாது. பணம் கொடுத்தோம் என்று சொல்கிறார்கள், யார் கொடுத்தார்கள் என்று சொல்வது அவசியம்.

திரு. எல். கணேசன் : நான் சொல்ல வருவது, ஒரு துறைக்குப் பொறுப்பேற்றிருப்பவர்கள் முழுக்க முழுக்க அமைச்சர்தான். அந்தத் துறையில் அடிமட்டத்தில் அதிகாரி தவறிழைத்தாலும், அதற்குப் பொறுப்பு அந்த அமைச்சர்தான், அந்த அமைச்சகம்தான் என்பதுதான் நான் அறிந்த வரையில். ஒரு சங்கம் புதிதாகப் பதிவு செய்யப்படுகிறது, எப்படிப் பதிவு செய்தார்கள், எப்படி அது முடியும் என்றுதான் கேட்கிறேன். (குறுக்கீடு) மன்னிக்க வேண்டுகிறேன்.

திரு. க. சுப்பு : அமைச்சர் பொறுப்பில் இருப்பது என்பது வேறு. பாயிண்ட் ஆப் ஆர்டர்தான் கேட்கிறேன். அமைச்சர் என்பவர் மீது குற்றம் சொல்லும்போது, பொறுப்பு ஏற்றுக்கொள்வது என்பது வேறு, அவரையே

---

தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





குற்றம் சொல்வது என்பது வேறு. அமைச்சர் இந்தத் தவறில் நேரடியாகப் பங்கேற்காமல் இருந்தால், உறுப்பினர் அவர்கள் அபாண்டமாகச் சொல்லக்

(முற்பகல் 11-55)

கூடாது. ஆகவே, நான் இறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், நான் குறிப்பிட்டுச் சொன்னவைகள் மீது கட்டாயம் நீதி விசாரணை அமைக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

(குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முடிப்பதற்காகத்தான் நான் காத்துக் கொண்டிருந்தேன். ஏனென்றால் அவர் இங்கே கன்னிப்பேச்சைப் பேசுகிற நேரத்தில் குறுக்கிட வேண்டாம் என்பதற்காகத்தான் நான் குறுக்கிடவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே * என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை சம்பந்தப்படுத்துவதுபோல் இருப்பதால், அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு எல். கணேசன் எழுந்தார்)

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : குற்றச்சாட்டை உறுப்பினர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். * என்று சொன்னது தவறு. எனவே அந்த * வாக்கியம் நீக்கப்படுகிறது.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா.

திரு எஸ். ஆர். இராதா : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்பை ஒரு சரியான நேரத்தில் எனக்கு அளித்ததற்காக நான் என்னுடைய நன்றியை முதலிலேயே தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறைக் கொள்கைக் குறிப்பின்மீது நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் இன்றைக்குத் தலை தூக்கி நின்றது, நீதி விசாரணை வேண்டும் என்கிற அளவுக்கு வந்திருக்கிறது. எனக்கு அது மிகப் பெரிய மகிழ்ச்சியைக் கொடுத்தது.

நீதி மீது நம்பிக்கை வைத்ததற்காக நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏனென்றால், நீதிமன்றம் அழைத்தால் வரமாட்டேன் என்று சொல்கிற நிலை போய், "யாராவது ஒரு நீதிபதியை அழையுங்கள், அதற்காக நாங்கள் விசாரணைக்கு வருகிறோம்" என்று சொல்கிற அளவுக்கு . . .

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

இருந்திருக்கிறேன். அமைச்சர்கள் அதிகாரிகளை அழைத்துப் பேசுவதை தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால் நியமனங்களைச் செய்கிற போது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் மட்டும் மிகப் பெரிய குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள், நேரடியாகக் குறுக்கிட்டதாகப் பேசினார்களே, இப்பொழுது என்ன நிலைமை என்பதற்கு ஆதாரமாக அதிகாரி கொடுத்திருக்கிற கடிதத்தினை நான் இங்கே கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, நெல்லை மாவட்டத்தில் 68 கிராம விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அவற்றிலே பல பேர் செயலாளர்களாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். குறைந்த ஊதியத்தில் அவர்கள் பணியாற்றுகிறார்கள். மத்திய வங்கியினுடைய அலுவலர்களாக தங்களை மாற்றி, தங்களுக்குச் சம்பளத்தையும் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை கொடுக்கிறார்கள். எப்படி அது நிறைவேற்றப்படுகிறது என்பதை நான் இங்கே சொல்லியாக வேண்டும். அவர்கள் தங்களுக்கு என்று தனியாக ஒரு சங்கம் தேவை என்று எண்ணி ஒரு புதிய சங்கத்தையும் பதிவு செய்கிறார்கள். நெல்லை மாவட்ட கிராம விவசாய சேவை கூட்டுறவுச் சங்கச் செயலாளர்கள் தங்களுடைய பணியை நிரந்தரமாக்கி, கூட்டுறவு மத்திய வங்கியினுடைய அலுவலர்களாக ஆக்கி, ஊதியத்தையும் கூடுதலாக ஆக்க வேண்டுமென்று கோருகிறார்கள். அது எப்படி நிறைவேற்றப்படுகிறது என்று தெரியுமா? இவர்களுக்கு என்று புதிதாக ஒரு சங்கமும் பதிவு செய்யப் பட்டது. நெல்லை மாவட்ட கிராம விவசாய சேவை கூட்டுறவுச் சங்கம் என்கிற பெயரில் புதிதாக அது பதிவு செய்யப்படுகிறது. உடனே அவர்களுக்கு மத்திய வங்கி கடன் வழங்குகிறது. இப்போது அங்கே வந்திருக்கிற சிக்கல் என்னவென்றால், ஒட்டுமொத்தமான எந்தத் தொகையும் இந்தப் பிரதிநிதிகளுக்குப் போய்ச் சேரவில்லை. அவர்கள் எதிர்பார்த்தபடி நிரந்தரமாக ஆக்கப்படவும் இல்லை, மத்திய வங்கி அலுவலர்களாக மாற்றப் படவும் இல்லை. விந்தையிலும் விந்தை என்னவென்றால், இப்பொழுது மத்திய வங்கி அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்துமாறு தாக்கீது அனுப்பியிருக்கிறது. இப்பொழுது தான் அந்தப் பிரதிநிதிகளுக்கு அதுபற்றித் தெரிய வருகிறது. இதுவரை கடனாக வழங்கப்பட்டுள்ள அந்த 10 லட்சம் ரூபாயும் எங்கே போனது? நிரந்தரம் ஆக்குகிறோம் என்றும், மத்திய வங்கி பணியாளர்களாகச் சேருங்கள் என்றும் சொன்னதற்குப் பிறகு, அவர்களுடைய பெயராலே கடன் கொடுக்கப்பட்டுள்ள இந்த 10 லட்சம் ரூபாயும் எங்கே போனது? தயவுசெய்து அமைச்சர் இதற்கு பொறுப்பாக பதில் தருவார் என்று கருதுகிறேன். சேவை கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுடைய பொதுக்குழுவில், அவர்கள்





பேரவையைக் கூட்டியிருக்கிறார்கள். General Body of the so-called fictitious organisation which they have condemned unequivocally.

(முற்பகல் 11-50)

அவர்கள் திட்டவட்டமாக மறுத்தது மட்டுமல்ல, இந்தக் கடனை தாங்கள் வாங்கவில்லையென்றும் சொல்லியிருக்கிறார்கள். அது எல்லாப் பத்திரிகை களிலும் வந்திருக்கிறது. இந்த மாமன்றத்தில் நான் மிகப் பணிவோடு, மெத்தத் தன்னடக்கத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பணம், இத்தனை இத்தனை நிகழ்ச்சிகள், பல எண்ணற்ற ஊழல்கள், முறைகேடுகள், இத்தனை லாவண்யங்களிலும் ஈடுபட்டிருப்பவர்கள், லீலாராம், தாமோதரன் போன்றவர்கள், கொடி வாங்கியதில், பேட்ஜ் வழங்கியதில், அணிக்கொடி வழங்கியதில், லீலாராம் சகோதரர் தான் என்ன விலை என்று தெரியாது, விலையிலே ஈடுபட்டிருப்பவர்கள் யார்? கிருஷ்ணமூர்த்தி என்பவர். ஆகவே இந்த ஆட்சியில் கூட்டுறவுத் துறையில் எங்கும் லஞ்சம், எதிலும் லஞ்சம், எல்லாம் லஞ்சம், எல்லாம் ஊழல், எதிலும் ஊழல், எங்கும் ஊழல். *

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு உறுப்பினர் பொறுப்பு எடுத்துக் கொண்டு பேசவேண்டும்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : மாண்புமிகு உறுப்பினர் கிட்டத்தட்ட 40 நிமிடங்களாகப் பேசுகிறார். அடுத்து, பல பேர் பேச வேண்டும். முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. எல். கணேசன் : முடித்துக்கொள்கிறேன். ஆனால் பொறுப்போடு முடிக்கிறேன். அமைச்சர் என்ன சொல்கிறாரோ .....

திரு க. சுப்பு : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் ஒரு குற்றச்சாட்டைக் கூறிக்கொண்டிருக்கிறார். குற்றச்சாட்டுக்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறாரா என்று அமைச்சர் கேட்கிறார். சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில் பணம் கொடுத்தோம் என்று சொல்கிறார்கள் என்று சொல்கிறார். பணத்தை லஞ்சமாகக் கொடுத்தாலும் ஜெயிலுக்குப் போக வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. யார் கொடுத்தார்கள் என்று சொல்லுங்கள், அவர்களுக்கும் ஒரு வழி செய்துவிடுவோம்.

திரு. எல். கணேசன் : திரு சுப்பு அவர்கள் அமைச்சருக்குத் துணையாக வந்ததற்காக நன்றி. நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். இதன்மீது ஒன்றியம் நடத்திய விழா சம்பந்தப்பட்ட இத்தனை நிகழ்ச்சிகளிலும் நான் குறிப்பிட்டுச் சொல்கிறவர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்.

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

*டாக்டர் மு. கருணாநிதி : மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுக் கூட்டத்திலே பேசுவதைப்போல கருத்துக்களைப் பேசுவது இந்த மாமன்றத்திற்கு அழகும் அல்ல; இம் மாமன்றத்தின் மரபும் அல்ல. குறிப்பிட்டு குற்றச்சாட்டுகளைச் சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் ஒரு பிரச்சினையைக் கிளப்பினார். * என்று சொல்வது மறைமுகமாக ஒருவரைத் தாக்குகிறது என்று கூறினார். நீங்களும் அதை எடுத்துவிட்டீர்கள். இப்போது நானும் * என்று பயன்படுத்தியுள்ளேன். பின்னால் அதை நீங்கள் எடுத்துவிடலாம். ஆனால், "நீதிமன்றம் அழைத்தால் வர மாட்டேன்" என்று சொல்வது மறைமுகமாகாதா? நான் செய்த செயலைத்தான் அது குறிப்பிடுகிறது. நீதிமன்றம் அழைக்கிறபோதெல்லாம் வர மாட்டேன் என்று நான் சொல்லவில்லை. என்மீதும், பொதுச்செயலாளர் திரு. அன்பழகன் மீதும், திரு. ஆசைத்தம்பி மீதும், அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் மீதும், தம்பி இந்த அவையில் உள்ள திரு. ஆர். டி. சீத்தாபதி மீதும், இன்னும் பலர் மீதும் இந்திரா காந்தியைக் கொலை செய்ய முயன்றதாகப் போடப்பட்ட வழக்கிலும்கூட—நாங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறோம். அது மாத்திரம் அல்ல. எங்கள் மீது போடப்பட்ட மான நஷ்ட வழக்கிற்கு நாங்கள் சென்றோம். வழக்கு போட்ட முதலமைச்சர்தான் வரவில்லை. ஆனால் பால் கமிஷன் வழக்கைப் பொறுத்த வரையில், மூன்று வருஷங்கள் கழித்து, எங்கள் மீது புதிதாகக் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு தொடரப்பட்ட காரணத்தால், இதை அரசியல் ரீதியாகச் சந்திக்க வேண்டுமென்கிற காரணத்தினால்தான் நாங்கள் நீதிமன்றம் செல்லவில்லை. நீதிமன்றம் செல்லாதவர்களைக் கைது செய்வதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் வேடிக்கை என்னவென்றால், என்னைக் கைது செய்யக் கூடாது என்று அவர்கள் தான் ஓர் ஆணையை வாங்கினார்கள். இந்த நாட்டிலே நடந்த விசித்திரங்களில் இதுவும் ஒன்று.

திரு. எஸ். ஆர். இராதா : மாற்றுத் தலைவர் அவர்களே, நான் பேசிக்கொண்டிருக்கும்போது எதிர்பாராதவிதமாக மாண்புமிகு உறுப்பினர் கலைஞர் அவர்கள் குறுக்கிட்டு விட்டார்கள். நான் அதற்காக வருத்தப்படுகிறேன். நான் கூறிய நீதிமன்றம் வேறு. ஆனால் அவர்கள் அவருடைய நீதிமன்றம் குறித்துக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அது ஒரு விவாதப் பிரச்சினையாக மாறியிருக்கிறது. இருந்தாலும் ஒரு கொள்கையாக நீதிமன்றத்திற்குப் போகவில்லை என்று வாதிடுவதை நான் ஏற்றுக் கொள்கிறேனா இல்லையா என்பதைவிட நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கலைஞர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர்

* அவைத் தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



அவர்கள் நீதிமன்றம் போகவில்லை என்று சொல்கிறபோது, வாடிக்கையாகக் குற்றச்சாட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் கலைஞர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1972 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து நீக்கப்பட்டதற்குப் பிறகு, தமிழ் நாட்டில் எந்த அரசியல் தலைவர்மீதும் போடப்படாத அளவுக்கு வழக்குகள் போடப்பட்டு அந்த வழக்குகள் அத்தனையும் சந்தித்து. . .

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நீதிமன்றம் செல்வதை, விவாதப் பொருளாக ஆக்குவதாக இருந்தால், நானும் பேசத் தயாராக இருக்கிறேன். இப்போதுதான் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் இந்த மன்றத்ினுடைய மரபைப்பற்றிப் பேசிச் சென்றிருக்கிறார்கள். நீதிமன்றம் போகாதவர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் தேவையில்லாமல் குறிப்பிடும் காரணத்தினால், நான் நீதிமன்றம் செல்லாததற்கான காரணத்தை விளக்குகிறேன். என் மீது மான நஷ்ட வழக்கு போடப்பட்டபோது, வழக்கிற்காக நான் நீதிமன்றம் சென்றிருந்த சமயத்தில், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் வராமல் இருந்தார் என்று கூறினேனே அல்லாமல், அவர் ஏன் வரவில்லை என்று நான் கேட்கவில்லை.

(நண்பகல் 12-00)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்களுக்கு ஒன்று சொல்கிறேன். இதற்கு முன்பு என்ன நடந்திருந்தாலும், விவாதத்தில் இருக்கிற விஷயத்தைப்பற்றிப் பேசுவதுதான் நல்லது. நடந்து போன வழக்கிற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, இன்று நீதிமன்றம்பற்றி சர்ச்சை வந்திருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொள்கைக் குறிப்பு சம்பந்தமாகப் பேசியிருந்தாலும், நீதிமன்றம் சம்பந்தப்பட்ட அந்தக் கருத்துக்களை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கலாமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டபடி, நானும் என்னுடைய அறையில் இருந்து கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். இது தேவையில்லாத விஷயம் என்பது மட்டுமல்ல, நீதிமன்றத்தில் இருக்கிற ஒரு விஷயத்தைப்பற்றி, அவையில் குறிப்பிடக் கூடாது என்ற மரபும் இருக்கிறது. ஆகவே நான் அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

[1986 ஏப்ரல் 2

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, நீதிமன்றத்தில் இருக்கிற விஷயம் எதையும் பேசவில்லை. உறுப்பினரவர்கள் பேசியது அன்பார்லிமென்டரியாக இல்லை என்பதால், அதை நீக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு காங்கிரசுக் கட்சித் தலைவர் அவர்கள் அதை ஏற்றுக் கொள்கிறார்; அவருக்குப் பக்கத்தில் இருக்கிற மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும் ஏற்றுக்கொள்கிறார். எனவே நான் அந்த வார்த்தையை நீக்கியதாகக் கருதாமல் விட்டுவிடுகிறேன். அவை கள் அவைக் குறிப்பில் இருக்கும். மாண்புமிகு திரு. இராதா அவர்களுக்குச் சொல்கிறேன், அவர்கள் கொள்கைக் குறிப்பு விஷயத்திற்கு வரவேண்டும்.

**திரு. எஸ். ஆர். இராதா :** தலைவரவர்களே, கூட்டுறவு சங்கங்களிலே இன்றைக்கு நிறைய ஊழல் நடைபெற்று இருக்கிறது என்ற குற்றச்சாட்டை வைக்கின்றபோது, இந்தப் பேச்சைக் கேட்கும்போது, எனக்கு ஏற்படுகிற வியப்பு எல்லாம் கூட்டுறவுச் சங்கத்திலே எந்த அளவுக்கு ஊழல் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு ஊழல் செய்துவிட்டு, பல்வேறு விசாரணை நடைக்கு ஆட்படாமல், தப்பித்துக்கொள்வதற்கு என்னென்ன வழி வகை என்று தேடிக் கண்டுபிடித்து அதிலிருந்து தப்பித்துக்கொண்டதற்குப் பிறகு, பேசுகிற அளவுக்கு ஒரு துணிவு வருகிறது என்று சொன்னால், அரசியலில் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இருவருக்கும் ஒரு வேண்டுகோள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அரசியல் எப்படிப் போய்க்கொண்டிருக்கிறது என்றால், "நீ ஊழல்காரன்" என்று சொல்வது, "இல்லை, இல்லை நீதான் ஊழல்" என்று சொல்வது ஆகப் போய்க்கொண்டிருக்கிறது. வெளி மாநிலத்தவர், தமிழ் நாட்டில் இருக்கிற அத்தனை கட்சிகளும் ஊழல் கட்சிகள் என்று சொல்லும் அளவுக்கு அரசியலை ஆக்கிக் கொண்டிருக்கிறோம். எனவே அந்தப் பேச்சையெல்லாம் விட்டுவிடுவது நல்லது.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, கழக உறுப்பினர் திரு. எல். கணேசன் அவர்கள் கூட்டுறவுத் துறையிலுள்ள சில குறைபாடுகளை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு தங்களுடைய அனுமதியையும் பெற்று, அவைக்கு வந்து அந்த ஆதாரங்களை தங்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் அமைச்சர் அவர்களுக்குத் தருவதாகவும் சொல்லியிருக்கிறார். ஆகவே அமைச்சர் அவர்கள் அது குறித்து விசாரணை நடத்துவதற்குக் கடமைப் பட்டவர். அது அவ்வளவுதானே தவிர, பொதுவாக "நீ ஊழல், நான் ஊழல்" என்று பேசுவது முறையல்ல. அப்படிப் பேசினால் இந்த மன்றத்தினுடைய மதிப்புத்தான் குறையும்.



1986 ஏப்ரல் 25]

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு திரு. இராதா அவர்களுக்கு மட்டும் சொல்கிறேன். அமைச்சர் அவர்கள் அதற்கு மறுப்புக் கொடுக்கும் போது, எல்லா விவரங்களையும் தனது பதிலுரையில் சொல்வார்கள். தாங்கள் உணர்ச்சியை மட்டும் காட்டினால் போதும். அதை நான் வேண்டாமென்று சொல்லவில்லை. குற்றச்சாட்டுக்களுக்கு எல்லாம் முழுவதுமாகத் தாங்களே பொறுப்பு ஏற்றுக் கொண்டு பதில் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. எஸ். ஆர். இராதா :** தலைவரவர்களே, கூட்டுறவுத் துறை ஒரு அடிப்படையான துறை. அதை ஆரம்பிக்கும்போதே சொன்னார்கள். கம்யூனிசத்திற்கும், சோஷலிசத்திற்கும், சர்வாதிகாரத்திற்கும் இடையிலே ஒரு துறையாக இது இருக்கிறது. இந்தத் துறையாவது ஒழுங்காக இருக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேதான் நான் பேசிக் கொண்டிருக்கிறேனே தவிர, இந்தத் துறையிலே மோசமான நிலைமை வரக்கூடாது என்பதற்காகத் தான் அந்தக் கருத்தை நான் சொல்கிற நேரத்தில், அந்தக் கருத்தை வைத்தாவது அரசியல்வாதிகள் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவார்களா என்பதற் காகத்தான் நான் சொல்கிறேனே தவிர, வேறல்ல. நானும் கூட்டுறவுத் துறையில் கூட்டுறவுச் சங்கத் தலைவராக இருந்திருக்கிறேன். நான் கூட்டுறவுச் சங்கத்திலே நீண்ட நாள் பணியாற்றியிருக்கிறேன். நான் கடைசிக் காலம் வரையில் கூட்டுறவுச் சங்கத்தில் ஒரு தலைவராக இருந்து, இன்றைக்கும் ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறேன். அங்குள்ள நடைமுறைகள் அத்தனையும் எங்களுக்குத் தெரியும். அங்கு என்னென்ன தவறுகள் செய்கிறார்கள் என்பதும் தெரியும். அந்தத் தவறை எப்படித் திருத்துவது என்பதும் தெரியும். ஆனால் கூட்டுறவுச் சங்கத்தில் யார் மீது வேண்டுமானாலும் எத்தனை ஆண்டுகளுக்குப் பின்னாலேயும் நடவடிக்கை எடுக்கலாம் என்று சொன்னால், அது கூட்டுறவுத் துறை ஒன்றிலே மட்டும்தான் முடியுமே தவிர, வேறு எந்தத் துறையிலும் தப்பித்துக்கொள்பவர்களுக்கு நிறைய வாய்ப்பு இருக்கும். ஆனால் இந்தத் துறையிலே தவறு செய்கிறவர்கள், ஊழல் செய்கிறவர்கள் பல பேர்கள் இருக் கிறார்கள். அவர்களைக் கண்டுபிடித்து, நீதிமன்றத்திற்கு முன்னால் நிறுத்துவதோடல்லாமல் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்; அவர்களைத் தண்டிக்க வேண்டும்; அதற்கு வழிவகை செய்ய வேண்டு மென்றுதான் நான் இந்தக் கொள்கைக் குறிப்பின்மீது என்னுடைய கருத்தாகச் சொல்ல விரும்புகிறேனே தவிர, இதை அரசியல் நோக்கத்திற்காக நான் சொல்லவில்லை. இதிலே அரசியல் வருகிறது என்று சொல்லும்போது, கோபம் வருகிறது. ஆனால் சொல்கிற நேரத்தில் கருத்தைச் சொல்கிறோமே தவிர, இதைச் சொல்லலாமா, வேண்டாமா என்று பார்த்துச் சொல்வதில்லை.

நான் தனிப்பட்ட முறையில் சொல்கிறேன். எந்தெந்த இடத்திலே அந்த அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்கள் என்று பார்த்து அவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள் என்று சொன்னால், அதற்கு நான் பொறுப்பாக இருப்பேனே தவிர, அதிகாரிகளை, தவறு செய்தவர்களைக் காப்பாற்று வதற்கு நான் நிச்சயமாகத் தயாராக இல்லை. ஆனால் அதிகாரிகள் தப்பித்துக்கொள்கிறார்கள். அரசியல்வாதிகள் தவறு செய்தால், அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறார்கள். எப்படியாவது தப்பித்துக்கொள்வதற்கு முயற்சி செய்கிறார்கள். ஆனால் அதிகாரிகள் அப்படி இல்லை கூட்டுறவுத்

(பிற்பகல் 12-05)

துறையில் இந்த ஆண்டு மட்டுமல்ல 1972 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னா லிருந்தும் கூட்டுறவுத் துறையில் தவறு செய்த அதிகாரிகள் பலர் இருக் கிறார்கள். அவர்களின் தவறுகளுக்கெல்லாம் யார் பலியாகிறார்கள் என்றால் அரசியல்வாதிகள்தான். அவர்கள் இன்றைக்கு பதவிப் பொறுப்பிற்கு முன்னாலே வருகிறபோது, மற்றவர்கள்மீது குற்றச் சாட்டுகளைச் சொல்லி "இதோ குற்றச்சாட்டு, அதோ குற்றச்சாட்டு" என்று சொல்லும்போது மக்களும், நாட்டில் இருப்பவர்களும் ஏதோ இன்றைக்கு இங்கே இருப் பவர்கள்தான் தவறு செய்துவிட்டார்கள் என்று நினைக்கிறார்கள். அப்படிப் பட்ட நிலைதான் இங்கே இருக்கிறது. கூட்டுறவுத் துறை இனியாவது ஒழுங்காகச் செயல்பட வேண்டுமென்றால், பாரதி கமிஷன் பரிந்துரைகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அரசு விரைவுபடுத்த வேண்டும். நாட்டு மக்களுக்கு பாரதி கமிஷன் அறிக்கை என்ன என்பது தெரிய வேண்டும். அதிலே சொல்லப்பட்டவை என்ன என்பது வெளியே வந்தால்தான், யார் தவறு செய்தார்கள் என்பது நாட்டு மக்களுக்குத் தெரிய வரும். 1980 ஆம் ஆண்டில் இந்த ஆட்சி கலைக்கப்பட்டபோது, கூட்டுறவுத் துறையில் ஈடுபட்டி ருந்தவர்களில் பலர்மீது பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டி ருந்தன. . . . தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற கூட்டுறவுப் பால் பண்ணை யில் பல லட்ச ரூபாய் மோசடி நடந்தது. 26 லட்ச ரூபாய் அளவுக்கு அங்கே மோசடி நடந்தது. அதன் காரணமாக அங்கே ரூ. 10 லட்சத்திற்கு சர்சார்ஜ் போட்டிருந்தார்கள். அந்த ஊழல்கள் எல்லாம் எப்படியோ மறைக்கப்பட்டன. . . .

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் அவையில் பேசும்போது, தகுந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு பேச வேண்டும். அதை மாண்புமிகு தலைவர் அவர்களிடம் காட்டி விட்டுப் பேச வேண்டும். தேவைப்பட்டால், அதை அமைச்சர் அவர்களிடம் தர வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்



திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் எந்த விதமான ஆதாரமும் இல்லாமல், அப்போது தஞ்சை மாவட்டப் பால் பண்ணையில் லட்சக் கணக்கான ரூபாய்க்கு மோசடி நடந்தது என்று எந்த விதமான ஆதாரமும் இல்லாமல் இங்கே பேசுவது அவையின் குறிப்பேட்டில் ஏறுவது சரிதானா என்று கேட்க விரும்புகிறேன். ஆதாரம் இல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசுவதை அனுமதிக்கலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவர் தன்னுடைய கருத்தையே பேசக் கூடாது என்று சொல்லலாமா?

**திரு. எல். கணேசன்:** ஆதாரம் இல்லாமல் அவர் பேசுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்றுதான் கேட்கிறோம்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டிய பொது நியதியை நாம் எல்லோரும் அறிவோம். இந்த அவையில் இருக்கிற நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் பேசும்போது இந்தப் பிரச்சினை எப்படி எழுந்தது என்பதைப் பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். கணேசன் அவர்கள் பேசும்போது தவறு நடந்ததாக அவர் கருதிய அந்தத் தவறுகளையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். தங்களிடம் ஏற்கெனவே காட்டிவிட்டு அனுமதி பெற்று பேசிவிட்டார்கள். அவர் அதோடு மட்டும் விட்டிருந்தால் அமைச்சர் அவர்கள் அதற்கெல்லாம் பதில் சொல்வதற்கு வாய்ப்பாக இருந்திருக்கும். அப்படி அவர் பதில் சொல்லுவது மாண்புமிகு உறுப்பினருக்குத் திருப்தி அளிக்கவில்லை என்றாலும், திரும்பவும் கூட அவர் பேசியிருக்கலாம். அதற்குப் பிறகும் அமைச்சர் அவர்கள் அவருக்கு பதில் அளித்திருக்கலாம். ஆனால் அவ்வாறு ஒவ்வொரு குற்றச்சாட்டையும் இங்கே அவையில் தெரிவிக் கும்போது, அதிலே அமைச்சர் அவர்கள் ஈடுபட்டார் என்று ஒவ்வொரு முறையும் தெரிவித்தார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல், மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்களின் பேச்சு இன்றைக்குக் கன்னிப் பேச்சு என்ற அடிப்படையில், குறுக்கிட வேண்டாம் என்றுதான் இருந்தோம். ஆனால் அப்படி இருக்கவிடாமல் மாண்புமிகு உறுப்பினர் பல குற்றச்சாட்டுகளைச் சொல்லி, அதிலே அமைச்சர் அவர்களைச் சம்பந்தப்படுத்திப் பேசினார். அதிகாரிகள் மாற்றப்படுவது என்பது சாதாரணமாக ரொட்டீனாக நடை பெறுகிற காரியம். மாவட்ட அளவில் இருக்கிற டி. ஆர். களானாலும் சரி, ஜே. ஆர். களானாலும் சரி, மற்ற அதிகாரிகளானாலும் சரி, அவர்கள் மாற்றப் படுகிற நிலைமை ஏற்படும்போது [illegible]

என்று தொடர ஆரம்பித்ததால்தான், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். [illegible] அவர்கள், [illegible] இருந்த காரணத்தால், [illegible] நினைக்கிறார்.

**மாண்புமிகு திரு. க. திருநாவுக்கரசு :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு [illegible] முதலமைச்சராக இருக்கின்ற [illegible] அதிகாரிகளுடைய [illegible] என்பது, [illegible] இருக்கலாம், [illegible] பற்றிச் சொல்லுகிறபோது, ஒரு போலீஸ் கம்பெனி, [illegible] ஆரம்பித்திருக்கிறார்கள். அந்தக் கம்பெனியிலிருந்து [illegible] . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** [illegible] 'செய்ய' பண்ணியிருக்கிற மாண்புமிகு [illegible] கொடுக்கிறார்கள். [illegible] உட்கார வேண்டும். திரு. எஸ். ஆர். இராதா.

(மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள்)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** [illegible] பிறகும் மாண்புமிகு உறுப்பினர் [illegible] ஆகவே உட்கார வேண்டும். திரு. எஸ். ஆர். இராதா.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு தலைவர் அவர்களே, குற்றச் சாட்டுக்களைச் சொல்லும்போது, யார் வேண்டுமானாலும் சொல்லலாம். நான் குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இருக்கிறதா, பொறுப்பேற்க தயாரா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார்கள். இந்த வார்த்தைகளை நான்தான் அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தேன். நான் ஒன்றைப் பேசுகிறேன் என்றால், அந்தக் குற்றச்சாட்டுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டு, அதற்குத் தண்டனை கொடுப்பதாக இருந்தாலும், அந்த தண்டனையையும் ஏற்றுக்கொண்டு, சிறைக்குச் செல்ல வேண்டும் என்றால் சிறைக்கும் போகத் தயாராகத்தான் நான் இருந்துகொண்டு பேசுகிறேன். பொறுப்பிலே இருந்து விலகக் கூடியவன் அல்ல நான். திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஆரம்பக் காலத்திலேயிருந்து தந்தை பெரியார் அவர்களிடமும், அண்ணா அவர்களிடமும் இருந்து வந்தவன். இடையிலே வந்து சேர்ந்து, இதற்கெல்லாம் பயந்து ஓடுபவன் அல்ல.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் விஷயத்திற்கு வரவேண்டும். இதெல்லாம் எதற்காக? இரண்டு பேரும் ஒரே மரபிலிருந்து வந்தவர்கள் என்று அடிக்கடி சொல்கிறார்கள். ஆனால் இங்கே போடு சண்டையைப் பார்த்தால், ஒரே மரபிலிருந்து வந்தவர்களாகத் தெரியவில்லையே! நான்தான் அயல் மரபாகத் தெரிகிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** நான் பொறுப்பேற்றுக் கொண்டுதான் பேசுகிறேன். பொறுப்பு இல்லாமல் நிச்சயமாகப் பேசமாட்டேன். விவாதங்களில் பேசும்போது, கூட்டுறவுச் சங்கங்களைத் திருத்த வேண்டும், கூட்டுறவு நிலையங்களைத் திருத்த வேண்டும் என்று சொல்லலாம். குற்றச்சாட்டுக்களையும் சொல்லலாம். குற்றச்சாட்டுக்களை ஏன் கூறுகிறார்கள் என்று நான் நிச்சயமாகக் கேட்கமாட்டேன். குற்றச்சாட்டையே காரணமாக்கி இவையெல்லாம் எப்படிச் செய்கிறார்கள், பெரிய தவறைச் செய்துவிட்டார்கள் என்று சொல்லுகிற போக்கினைப் புதிய ஆசிரியர் பிரதிநிதியாக வந்திருக்கிறாரே அவருக்கு வேண்டுமானால் இருக்கலாம். அவர் பேசினால் பரவாயில்லை, புதிதாக வந்தவர் பேசுகிறார் என்று எடுத்துக்கொள்ளலாம். ஆனால் எங்களுக்குக் கோபம் வருவதற்குக் காரணம்—திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே இதே குற்றச்சாட்டுக்களை நாங்கள் சொல்லிக் கொண்டிருந்தோம். இவற்றையெல்லாம் கண்டிக்க வேண்டும், தண்டிக்க வேண்டும் என்று நாங்கள் சொன்ன நேரத்தில் அவற்றைப்பற்றிக் கவலைப்படாமல் இருந்தார்கள். நானே ஒரு கூட்டுறவுச் சங்கத்திலே தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த நேரத்தில், கொட்டேஷன் வாங்க வேண்டிய நிலை வந்தபோது அங்கிருந்த கூட்டுறவு அதிகாரி ஒருவர், "கொட்டேஷன்தானே, நானே தயாரித்துத் தருகிறேன்" என்று சொன்னார். அதனாலே கொட்டேஷனைத் தயாரிக்கும் அளவிற்கு இன்றைக்குப் பயிற்சி வந்துவிட்டது. ஆகவே அதிகாரி ஒரு கொட்டேஷன் வாங்குவதும், வெளியே எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் ஒரு கொட்டேஷன் வாங்குவதும் என்ற நிலையை ஆரம்பித்து வைத்துவிட்டால், மாவட்டத்திலே எந்தப் பணியும் சரியாக நடைபெறாது. ஆகவே கூட்டுறவுப் பண்டகசாலைகளைப் பொறுத்த வரையில், நஷ்டத்திலே ஓடிக் கொண்டிருந்த எத்தனையோ சங்கங்கள் இன்றைக்கும் இலாபம் பெறக் கூடிய அளவிற்கு, தவறுகள் இல்லாத அளவிற்கு நடத்தப்படுகிறதா, இல்லையா என்பதை எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் நெஞ்சிலே கை வைத்துச் சொல்ல வேண்டும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், கும்பகோணத்தில் உள்ள சந்திரசேகரபுரம் கூட்டுறவுப் பண்டக சாலையில் நடந்த தவற்றைப் பற்றிச் சொல்லலாம். தவறு நடந்தால் நானே அமைச்சரைக் கண்டிப்பேன்.

பட்டவர்கள் நிவாரணம் தேடி எதிர்க் கட்சியில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்களையே கூட நாடலாம். ஆனால் அப்படிப்பட்ட அதிகாரிகள் மாறுதல்களுக்கெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் காரணம் என்று சொல்லுவதும், அமைச்சர் அவர்கள் ஒரு கம்பெனியை ஆரம்பித்தார் என்றும் அதிலிருந்து சில பொருள்களை வாங்க ஆர்டர் கொடுத்ததற்கு அந்த அதிகாரிகள் கீழ்ப்படிய மறுத்தார்கள் என்ற காரணத்திற்காக அமைச்சர் அவர்கள் அந்த அதிகாரிகளையெல்லாம் மாற்றினார்கள் என்று சொல்லுவதும் சரியல்ல. அவை அவைக் குறிப்பில் இருப்பதும் சரியல்ல என்பதால் அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குற்றச்சாட்டுகளைத் தாராளமாகச் சொல்லட்டும். ஆனால் அமைச்சர் அவர்களை அதில் ஈடுபடுத்தாமல் சொல்லட்டும். அதிகாரிகள்மீது தவறு சொன்னால், அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு குற்றச்சாட்டிலும் அமைச்சர் அவர்களை ஈடுபடுத்திச் சொல்லுவது சரியல்ல என்றுதான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினருக்கு இது கன்னிப்பேச்சு என்பதால் காத்துக் கொண்டிருந்தோம். அதற்காக இப்படியே பேசினால் என்ன அர்த்தம்? அதிகாரிகளின் டிரான்ஸ்பர்களையெல்லாம் அமைச்சர் அவர்களே தலையிட்டுப் போட்டார் என்பதும் அமைச்சர் சொன்ன கம்பெனியிலிருந்து அந்த ஜே. ஆர். கள் பொருள்களை வாங்கவில்லை என்ற காரணத்திற்காக அவர்கள் மாற்றப்பட்டார்கள் என்பதும் எப்படி சரியாகும்? அதுமட்டுமல்ல ரூ. 10 லட்சம் பணம் வந்தது என்று சொல்லி, அது எப்படி வந்தது * என்றும் பேசியிருக்கிறார். அதெல்லாம் குறிப்பேட்டில் இருக்க வேண்டுமா என்றுதான் கேட்கிறேன். நாங்கள் * என்கிற வார்த்தையை மட்டும் தான் நீக்கியிருக்கிறீர்கள். * அது என்று சொன்ன வாசகங்கள் எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தத் தரப்பிலிருந்து பொறுப்போடு பேசினால் இங்கே இருப்பவர்களும் பொறுப்போடு பேச இயலும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இது கூட்டுறவுத்துறைபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீதான விவாதம். இதில் உணவு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு நீண்ட பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவுத் துறை அமைச்சர் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** ஆன் ய பாயின்ட் ஆப் ஆர்டரின் பேரில்தான் கேட்கிறேன். பொது விதி என்று பேசுகிறபோது எல்லோரும் ஒரே முறையைக் கையாள வேண்டும். எதிர்த் தரப்பில் அப்படிப் பேசினால், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்களும் அதற்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படத்தான் செய்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது தவறு நடந்தது. ரூ. 20 லட்சம், ரூ. 30 லட்சம் ஊழல் என்று சொன்னதும் அவர்கள் எப்படித் துடித்து எழுகிறார்களோ அப்படித்தான் இங்கேயும் துடித்தெழுவார்கள். அப்புறம் சண்டைதான் வருகிறது. அதற்காகத்தான் சொல்கிறேன். பொது நியதியைச் சொல்லுகிறேன். அப்படி அந்தத் தரப்பில் பேசினால், இங்கேயும் அந்தப் பிரச்சினை வரத்தான் செய்யும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். கணேசன் அவர்கள் பேசும்போது அமைச்சர் மீது எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லவில்லை. அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்று சில ஆதாரங்களைச் சொல்லி அதையெல்லாம் பேசி முடித்த பிறகு, அமைச்சர் அவர்களிடம் தருகிறேன் என்று சொல்லி, குறைபாடுகளைச் சொன்னார். ஒரு இடத்தில் * என்ற வார்த்தை வந்தபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இடையிட்டு அந்த வார்த்தையை 'எக்ஸ்பஞ்ச்' செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். தாங்களும் அதை அவ்வாறே 'எக்ஸ்பஞ்ச்' செய்து விட்டீர்கள். நான் இப்போது சொன்னதையும் அவ்வாறே "எக்ஸ்பஞ்ச்' செய்துவிடுவீர்கள் என்பது எனக்குத் தெரியும். குற்றச்சாட்டுகளைச் சொல்லக்கூடாது என்று சொல்லவில்லை....

(பிற்பகல் 12-10)

ஆனால் தங்களுடைய அனுமதியோடு குற்றச்சாட்டுக்களைக் கூறலாம் என்ற காரணத்தாலே அந்த ஆதாரங்களை தங்களிடம் காட்டிவிட்டு, தாங்கள் அனுமதி தந்த பிறகு அமைச்சரிடம் கொடுப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு பதில் கூற அமைச்சர் அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் உள்ள அதிகார வர்க்கத்தினரின் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்காகத் தான் சொல்லப்படுகிறதே தவிர, அமைச்சர் மீது படிப்படியாகக் குற்றச்சாட்டுகள் சொல்லப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. இராதா பேசும்போது, தஞ்சை கூட்டுறவு சொசைட்டி என்று ஆரம்பித்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்

... நீக்கப்பட்டது.

வனென்றால் எங்களுடைய ஆட்சியில் இருப்பவர் அவர். அவருக்கு வக்காலத்து வாங்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. இதற்கு முன்பு அப்படி நடந்தது. எல்லாத் தவறுகளுக்கும் உடந்தையாக இருந்தவர்கள், பழைய நிலையிலேயே இருந்து கொண்டு, இங்கே வந்து மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்கும்போதுதான் எங்களுக்குக் கோபம் வருகிறது. ஆகவே தவறுகள் நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்கிறோம், வேறல்ல. உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். இன்றைக்கு கும்பகோணத்தில் ஒரு கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. கூட்டுறவுப் பண்டக சாலையில் இன்றைக்குத் தவறுகள் நடக்கின்றன என்றால், அங்கேயுள்ள தொழிற் சங்கம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவு பெற்ற சங்கம் என்று சொன்னால், எதிர்க் கட்சியில் உள்ளவர்களுக்குக் கோபம் வருகிறது, ஆகவே திராவிட முன்னேற்றக் கழகச் சங்கம் என்று சொல்லாமல், அந்தச் சங்கத்தை வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் அந்தச் சங்கத்தைப் பயன்படுத்திக்கொண்டு எல்லாத் தவறுகளையும் செய்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே இருக்கிற நம்முடைய தோழர்கள் ஏதாவது சொன்னால், அங்கே அதிகாரிகள் மதிப்பதில்லை.

(பிற்பகல் 12-15)

அமைச்சர் அவர்களிடத்திலே சொல்கின்ற நேரத்திலே வாய்ப்பு வருகின்ற நேரத்தில் அமைச்சர் அவர்கள் விசாரிக்கச் சொல்கின்றார். அவர்கள் விசாரித்து நடவடிக்கை எடுத்து அந்த அதிகாரிகளை மாற்றினால், உடனே யாருக்குத் தகவல் போகிறது என்று சொன்னால், அந்தச் சங்கத்திலே ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கின்ற, கொள்ளையடிப்பதற்குத் துணையாக இருந்து எல்லா கொட்டேஷனுக்கும் காசு வாங்கிக்கொண்டிருக்கின்ற ஒருவருக்குப் போகிறது. ஏன் மாற்றினார் என்று சொன்னால், சாமான்கள் வாங்குவதிலே தவறு செய்தவர்களை மாற்றக் கூடாது என்று சொன்னால், கூட்டுறவுத் துறை நியாயமாக ஒழுங்காக நேர்மையாக நடைபெறுமா? யார் சொன்னாலும் கேட்பது என்று வந்தால் எப்படி நடைபெறும் என்பதை நினைத்துப் பாருங்கள், இன்றைக்கு ஒரு மாறுதலுக்குக் காரணம் கற்பித்துக்கொண்டு ஒரு நிலைமையை உருவாக்குவோமானால், அதிகாரம் எங்கே நடைபெறும்? இன்றைக்கு கூட்டுறவுத் துறை அதிகாரிகள் என்ன செய்கின்றார்கள் என்றால், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்கின்றேன், இந்தக் கொள்கைக் குறிப்பின் மீது முடிவினை எடுக்கின்ற நேரத்திலே, நாம் ஒன்றை நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். யாராவது தவறு செய்தால், அதன்மேல் நடவடிக்கை எடுத்த உடனேயே எதிர்க் கட்சிக்கு சென்று சொல்வார்கள். "எதிர்க் கட்சி செய்தி சொல்லி அவர்கள் ஏதாவது புதிய





குற்றச்சாட்டைக் கொண்டுவந்து உங்களை மிரட்டி அவர்கள் தவறு செய்வதற்குத் தயாராக இருக்கின்றார்கள்". தவறை மறைக்க வேண்டும், தவறு இல்லாமல் நடக்க வேண்டும் என்ற நிலையிலே அவர்கள் இல்லை. அதனாலே எந்த அதிகாரியாக இருந்தாலும், பாரபட்சமற்ற முறையிலே நடக்க வேண்டும். அதுதான் நாம் நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்குச் செய்கின்ற மரியாதையும் நன்றியும் ஆகும் என்பதை நாம் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். இல்லை என்று சொன்னால், பழைய காலத்தில் ஆட்சி நடைபெற்றபோது நடந்த ஊழல்களுக்கு பாரதி கமிஷன் வந்ததுபோல, நமக்கும் ஒரு பாரதி கமிஷன் வந்து எப்படி தப்பித்துக்கொள்வது என்று பார்க்கின்ற நிலைமை வந்துவிடக் கூடாது. அதனாலேயே நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். அது என்னவென்றால், ஆட்சி மாற்றம் வருகின்ற நேரத்திலே அதிலேயிருந்து தப்பித்துவிடலாம் என்றுகூட கருதலாம். 1980 ஆம் ஆண்டு வரையிலே சில கூட்டுறவுச் சங்கங்கள் மீது நடந்த ஊழல்களுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி மாற்றப்பட்ட பிறகு கவர்னர் ஆட்சி கொஞ்ச நாள் நடந்தது. அந்தக் கொஞ்ச நாள் நடப்பதற்குள்ளேயே பல வழக்குகள் வாபஸ் வாங்கப்பெற்றன. நான் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன். 1980 ஆம் ஆண்டு அமைச்சரவை இல்லாத நேரத்திலே வாபஸ் வாங்கப்பட்ட கணக்கை எடுங்கள். அதிலேதான் லட்சக்கணக்கான ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அது எல்லாம் 3 மாத காலத்திற்குள்ளேயே நடந்திருக்கின்றது. எல்லா வழக்குகளையும் வாபஸ் வாங்கி வைத்துவிட்டு போய்விட்டிருக்கின்றார்கள். நாம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால், முன்னர் இருந்த வழக்குகள் என்னென்ன என்று நமக்கும் மறந்துவிட்டது. பல இடங்களிலே பல கொள்ளைகள் அடிக்கப்பட்டிருந்தன. அந்தக் கொள்ளைகளைக் காண முடியாமல் போய்விட்டது. காரணம் கவர்னர் ஆட்சி இருந்த காலத்திலே திராவிட முன்னேற்றக் கழகமும் காங்கிரசும் கூட்டாக இருந்து, அந்தக் கால அவகாசத்தை வைத்துக்கொண்டு அந்தத் தவறுகளையெல்லாம் அவர்கள் மறைத்துவிட்டார்கள். அதனாலே கூட்டுறவுத் துறையிலே இன்றைக்கு என்ன நிலைமை என்று சொன்னால், ஆட்சி மாறும்போது எந்தத் தவறு செய்தாலும் தப்பித்துக்கொள்ளலாம் என்ற எண்ணம் அதிகாரிகளிடத்திலே மேலோங்கி இருக்கிறது. அதனாலே அதிகாரிகள் பின்னாலே தவறு செய்தாலும் தப்பித்துக் கொள்ளலாம் என்று இருக்கின்றார்கள்.

திரு. எம். பி. சுப்பிரமணியம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றீர்கள். ஆதாரங்கள் இல்லாமல் குற்றம் சாட்டக்கூடாது என்று. 1980-லே

என்று தொடர ஆரம்பித்ததால்தான், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். [illegible] அவர்கள், அதனுடைய தலைவராகவோ அல்லது உறுப்பினராகவோ இருந்த காரணத்தால், அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் [illegible] காலம் முதலமைச்சராக இருந்தவர்கள். அவருக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அதிகாரிகளுடைய பணி மாற்றம் என்பது, எந்த அரசாக இருந்தாலும், யதார்த்தமாக, [illegible] நடைபெறுகிற காரியமாகும். அதைப் பற்றிச் சொல்லுகிறபோது, ஒரு போகமான கம்பெனி, அமைச்சர் ஆரம்பித்திருக்கிறார்கள். அந்தக் கம்பெனியிலேயிருந்து அவர்கள்....

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் 'ரெய்ஸ்' பண்ணிவிட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் [illegible] கொடுக்கிறார்கள். அது சரியல்ல. மாண்புமிகு அமைச்சர் உட்கார வேண்டும். திரு. எஸ். ஆர். இராதா.

(மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நான் [illegible] கட்டிட்ட பிறகும் மாண்புமிகு அமைச்சர் [illegible]. ஆகவே உட்கார வேண்டும். திரு. எஸ். ஆர். இராதா.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, குற்றச் சாட்டுக்களைச் சொல்லும்போது, யார் வேண்டுமானாலும் சொல்லலாம். நான் குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரம் இருக்கிறதா, பொறுப் பேற்க முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார்கள். இந்த வார்த்தைகளை நான்தான் அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தேன். நான் ஒன்றைப் பேசுகிறேன் என்றால், அந்தக் குற்றச்சாட்டுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டு, அதற்குத் தண்டனை கொடுப்பதாக இருந்தாலும், அந்த தண்ட னையையும் ஏற்றுக்கொண்டு, சிறைக்குச் செல்ல வேண்டும் என்றால் சிறைக்கும் போகத் தயாராகத்தான் நான் இருந்துகொண்டு பேசுகிறேன். பொறுப்பிலே இருந்து விலகக் கூடியவன் அல்ல நான். திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஆரம்பக் காலத்திலேயிருந்து தந்தை பெரியார் அவர்களிடமும், அண்ணா அவர்களிடமும் இருந்து வந்தவன். இடையிலே [illegible] சேர்ந்து, [illegible]



மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் விஷயத்திற்குள் வரவேண்டும். இதெல்லாம் எதற்காக? இரண்டு பேரும் ஒரே மரபிலிருந்து வந்தவர்கள் என்று அடிக்கடி சொல்கிறார்கள். ஆனால் இங்கே போடும் சண்டையைப் பார்த்தால், ஒரே மரபிலிருந்து வந்தவர்களாகத் தெரிய வில்லையே! நான்தான் அயல் மரபாகத் தெரிகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : நான் பொறுப்பேற்றுக் கொண்டுதான் பேசு கிறேன். பொறுப்பு இல்லாமல் நிச்சயமாகப் பேசமாட்டேன். விவாதங் களில் பேசும்போது, கூட்டுறவுச் சங்கங்களைத் திருத்த வேண்டும், கூட்டுறவு நிலவள வங்கிகளைத் திருத்த வேண்டும் என்று சொல்லலாம். குற்றச்சாட்டுக் களையும் சொல்லலாம். குற்றச்சாட்டுக்களை ஏன் கூறுகிறார்கள் என்று நான் நிச்சயமாகக் கேட்கமாட்டேன். குற்றச்சாட்டையே காரணமாக்கி இதையெல்லாம் எப்படிச் செய்கிறார்கள், பெரிய தவறைச் செய்துவிட்டார்கள் என்று சொல்லுகிற யோக்கியதை புதிய ஆசிரியர் பிரதிநிதியாக வந்திருக் கிறாரே அவருக்கு வேண்டுமானால் இருக்கலாம். அவர் பேசினால் பரவா யில்லை, புதிதாக வந்தவர் பேசுகிறார் என்று எடுத்துக்கொள்ளலாம். ஆனால் எங்களுக்குக் கோபம் வருவதற்குக் காரணம்—திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே இதே குற்றச்சாட்டுக்களை நாங்கள் சொல்லிக் கொண்டி ருந்தோம். இவற்றையெல்லாம் கண்டிக்க வேண்டும், தண்டிக்க வேண்டும் என்று நாங்கள் சொன்ன நேரத்தில் அவற்றைப்பற்றிக் கவலைப்படாமல் இருந்தார்கள். நானே ஒரு கூட்டுறவுச் சங்கத்திலே தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த நேரத்தில், கொட்டேஷன் வாங்க வேண்டிய நிலை வந்தபோது அங்கிருந்த கூட்டுறவு அதிகாரி ஒருவர், "கொட்டேஷன்தானே, நானே தயாரித்துத் தருகிறேன்" என்று சொன்னார். அதனாலே கொட்டே ஷனைத் தயாரிக்கும் அளவிற்கு இன்றைக்குப் பயிற்சி வந்துவிட்டது. ஆகவே அதிகாரி ஒரு கொட்டேஷன் வாங்குவதும், வெளியே எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் ஒரு கொட்டேஷன் வாங்குவதும் என்ற நிலையை ஆரம்பித்து வைத்துவிட்டால், மாவட்டத்திலே எந்தப் பணியும் சரியாக நடைபெறாது. ஆகவே கூட்டுறவுப் பண்டகசாலைகளைப் பொறுத்த வரையில், நஷ்டத்திலே ஓடிக் கொண்டிருந்த எத்தனையோ சங்கங்கள் இன்றைக்கும் இலாபம் பெறக் கூடிய அளவிற்கு, தவறுகள் இல்லாத அளவிற்கு நடத்தப்படுகிறதா, இல்லையா என்பதை எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் நெஞ்சிலே கை வைத்துச் சொல்ல வேண்டும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், கும்பகோணத்தில் உள்ள சந்திரசேகரபுரம் கூட்டுறவுப் பண்டக சாலையில் நடந்த தவற்றைப் பற்றிச் சொல்லலாம். தவறு நடந்தால் நானே அமைச்சரைக் கண்டிப்பேன்.

திரு. எல். கணேசன் : மாண்புமிகு அமைச்சர் திரு. வீராசாமி அவர்கள் குறுக்கிட்டுச் சொன்னதால். . . . என்னைப் பேச விடுங்கள் அல்லது அவர் பேசியது குறிப்பிலே இருக்கக்கூடாது. . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எல்லாவற்றையும் நீக்க முடியுமா என்ன?

திரு. எஸ். ஆர். இராதா : பல்வேறு கூட்டுறவுப் பண்டகசாலைகளைப் பொறுத்தவரையில். . . .

திரு. எல். கணேசன் : மாண்புமிகு அமைச்சர் திரு. வீராசாமி பேசியதை குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 'அன்பார்லிமெண்டரி' ஆக இருந்தால் தான் நீக்க முடியும்.

திரு. எஸ். ஆர். இராதா : கூட்டுறவுப் பண்டகசாலைகளைப் பொறுத்த வரையில், இன்றைக்கு அதற்குத் தேவையான பொருள்கள் வாங்க வேண்டுமென்றால், அதற்குச் சில நடைமுறைகள் இருக்கின்றன. . . .

(திரு. க. மீனாட்சிசுந்தரம் எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் உட்கார வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு அமைச்சரவர்கள், பெயரைச் சொல்லி, ஊழல், குற்றச்சாட்டு, 20 இலட்சம், 30 இலட்சம் என்று சொல்லி விட்டார்கள். அதற்குப் பிறகு அதை இல்லை என்று மறுக்க வேண்டும், அல்லது இருக்கிறது என்று ஒத்துக்கொள்ள வேண்டும். அதற்கு அனுமதி கொடுக்கவில்லை என்றால், அதை குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். சம்பந்தம் இல்லாத அமைச்சர் அதைச் சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். கணேசன் அவர்களுக்கு வாய்ப்பு தருகிறேன். திரு. எஸ். ஆர். இராதா . . .

திரு. எஸ். ஆர். இராதா : கூட்டுறவுப் பண்டகசாலைகளைப் பொறுத்த வரையில், இன்றைக்குப் பொருள்கள் வாங்கும்போது பல்வேறு தவறுகள் நடைபெறுவதற்கேற்ப நிர்வாகம் இருப்பதை மாற்ற வேண்டுமென்ற அடிப்படையில் . . . .

(பல உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எல்லோரும் ஒரே நேரத்தில் பேச முடியுமா என்ன? உட்கார வேண்டும்.





திரு. எல். கணேசன் : தலைவரவர்களே, மன்னிக்க வேண்டும். . .

திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் : அவர் இந்த அவையிலேயே இருக்கிறார். . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இரண்டு பேருமே சேர்ந்து பேசினால் எப்படி ? உட்கார வேண்டும்.

திரு. எல். கணேசன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. வீராசாமி அவர்கள் முழுமையாகச் சொல்லட்டும். அதற்குப் பின்னாலே எனக்கு வாய்ப்பு தரட்டும். அதற்குப் பின்னாலே முடிவு எடுக்கட்டும்.

திரு. ஜேப்பியார் : அமைச்சரவர்கள் ஊழல் பற்றிச் சொல்லுகிறார்கள். .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரு. இராதா பேசட்டும்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் எழுந்தாலே என் உருவம் மறைந்து விடுகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவர் உயரமும் மறைக்கிறது. அகலமும் மறைக்கிறது (சிரிப்பு)

திரு. எஸ். ஆர். இராதா : குறுக்கே எழுந்து நின்று, என்னுடைய பிரச்சினையையே அவர் மாற்றிவிடுகிறார். . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நாளைக்கு இடத்தை மாற்றுவது பற்றி யோசிக்கிறேன். (சிரிப்பு)

திரு. எஸ். ஆர். இராதா : பண்டகசாலைகளுக்குப் பொருள் வாங்குவதற்கு சில நடைமுறைகளை வைத்திருக்கிறார்கள். மார்க்கெட்டிங் பெடரேஷன் என்ற அடிப்படையிலும் எல்லாப் பண்டகசாலைகளுக்கும் வேண்டிய பொருள்களை வாங்கும்போது, சில தனிப்பட்ட பண்டகசாலைகளில் என்ன செய்கிறார்கள் என்றால், தனிப்பட்ட முறையில் ஆதாயம் வருவதுபோல், ஊரிலே இருக்கும் சில பிரச்சினைகளைக் கிளப்பிவிட்டு, அதிகாரிகளுக்குள்ளே சில முரண்பாடுகள் வருகின்றன.

(பிற்பகல் 12-25)

அதனாலே அமைச்சர் அவர்கள் இதிலே சம்பந்தப்பட்ட கூட்டுறவுப் பண்டகசாலை அதிகாரிகளுக்கு ஒன்றைத் தெரிவிக்க வேண்டும். கூட்டுறவுப் பண்டகசாலை என்று சொல்லும்போது, எந்தப் பொருளை வாங்குவதாக இருந்தாலும், குறிப்பிட்ட இடத்தில்தான் வாங்க வேண்டும். அப்போதுதான் எங்கேயாவது தவறுகள் நடைபெற்றால், தவறுகளைக் கட்டுப்படுத்தி குறைக்க வழி பிறக்கும். ஊரிலே இருக்கிற எந்தப் பண்டகசாலையிலிருந்து [illegible]

அமைச்சரவை இல்லாது இருந்து கவர்னர் ஆட்சி இருந்த காலத்தில், காங்கிரசும் திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்து சில குறிப்பிட்ட வழக்குகளை வாபஸ் வாங்கியதாகச் சொல்கின்றார்கள். சுட்டிக்காட்டிச் சொல்கிறார்கள். அதனுடைய விவரங்களைக் கொடுக்க வேண்டும். தவறு இருந்தால் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். விவரங்கள் இல்லாமல், தலைவர் அவர்களிடத்திலே முன் அனுமதி பெறாமல், தயவுசெய்து குற்றச் சாட்டுக்களைச் சொல்லக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் ஆதாரத்தைக் கேட்டார்கள். அப்படிப்பட்ட ஆதாரங்கள் ஏராளமாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்கிறேன். தஞ்சை மாவட்ட பால் வள கூட்டுறவுச் சங்க தலைவராக மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். கணேசன் அவர்கள் பல ஆண்டுக்காலமாக இருந்தார்கள். அதிலே பல்வேறு தவறுகள் நடைபெற்றன. இவருடைய நிர்வாகத் திறமையின்மையால், ஊழல்கள், பல தவறுகள் நடைபெற்றன. இதன் காரணமாக அந்த மாவட்டப் பால்வள கூட்டுறவுச் சங்கத்தில் ரூ. 24 லட்சம் நஷ்டம் வந்தது. அதற்குப் பிறகு பொதுமக்களால் பேசப்பட்டது, பத்திரிகையிலேகூட வந்தது.

(திரு. எல். கணேசன் எழுந்தார்.)

நான் சொல்லி முடித்துவிடுகிறேன். பிறகு சொல்லலாம். I am not yielding அதற்கு ஒரு ஸ்பெஷல் ஸ்குவாட் போட்டு தணிக்கை செய்திருக்கின்றார்கள். 10 லட்சம் ரூபாய்க்கு ஊழல் என்று சொல்லியிருக்கின்றார்கள். நான் பேசுகின்றேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஒரு அமைச்சர் பேசிக்கொண்டிருக்கின்ற நேரத்திலே மற்றொரு அமைச்சர் எழுந்திருக்கின்றார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உட்கார வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் உட்கார வேண்டும். எனக்கு நினைப்பூட்டினால் போதும். நான் சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் ஒன்று கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து இது போன்ற விஷயத்தில் ஒரு வாதம் என்று வருகின்றபோது, இந்த அவையில் எந்த அளவுக்கு அமைச்சர் அவர்களுக்கு நேரம் தேவையோ அதை எடுத்துக்கொண்டு விளக்கலாம். அந்த இலாகா பொறுப்பேற்றிருக்கின்ற அமைச்சருக்கு அந்த வாய்ப்பு இருக்கின்றது. எதிர்க் கட்சி வரிசையிலே இருப்பவர்கள் இடையிலே எழுந்து மறுப்பு தெரிவிக்க விரும்புவது



(பிற்பகல் 12-20)

இயற்கை. சம்பந்தப்பட்ட அமைச்சரவர்கள் இடையே குறுக்கிட்டு விளக்கங்கள் கேட்கலாம் அல்லது பொறுப்பிலே உள்ள அவர்கள் இறுதியில் பதில் அளிக்கலாம். சக அமைச்சர்களிடம் பதில் இருந்தால், அதை சம்பந்தப்பட்ட துறை அமைச்சரவர்களிடம் சொல்லிவிட்டால், அதைப் பயன்படுத்தி அவர் பதில் சொல்லலாம். ஒரு துறைபற்றி மற்ற அமைச்சர்கள் எல்லாம் பதில் சொல்ல ஆரம்பித்தால், எப்படி சபையை நடத்த முடியும்?

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் கேட்டதால், சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** துறை அமைச்சரை சொல்ல விட்டு விடுங்கள். அவர் துறை அமைச்சரைக் கேட்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சபையை நடத்த என்னோடு ஒத்துழைக்க வேண்டும். கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் என்ற முறையிலே தஞ்சையிலே உள்ள தவறுகளைச் சிறப்பாகத் தெரிந்துள்ளவர்கள் என்ற முறையிலே அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் . . ..

(மாண்புமிகு திரு. தா. வீராசாமி எழுந்தார்)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** தயவு செய்து மாண்புமிகு அமைச்சரவர்கள் உட்கார வேண்டும். இப்படி விவாதம் நடந்தால், சபையை எப்படி நடத்த முடியும்? கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்போது, அதைக் கேட்டு, அவரே சொல்லலாம். ஜில்லா தொடர்பாக ஒவ்வொரு அமைச்சரும் பேசினால், எப்படி சபையை நடத்துவது?

**திரு. எல். கணேசன்:** தலைவரவர்களே, என்னைப் பற்றிய பிரச்சினை எழுப்பப்பட்டிருப்பதால், எனக்குத் தாங்கள் அருள்கூர்ந்து அனுமதி அளிக்க வேண்டுகிறேன். நான் கூட்டுறவுச் சங்க . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கன்னிப் பேச்சே இவ்வளவு பெரிய விவாதத்திற்கு உரியதாக இருக்குமென்று எண்ணியிருந்தால், நானே இங்கே இருந்திருப்பேன். கன்னிப் பேச்சு 'கனி'ப் பேச்சாக இருக்குமென்று நினைத்திருந்தேன். அதிலே புள்ளி எழுந்து போய் விட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசட்டும்.

மாணவர்கள் எடுத்துக்கொள்ளலாம் என்கிற நிலை முன்பு இருந்தது. உதாரணத்திற்கு [illegible] ஒரு விலை இருக்கும். அதேபோல் [illegible] இன்னொரு விலைக்கு விற்கும். இவற்றில் [illegible] தனி அதிகாரிகள் "இரண்டு இடங்களிலும் வேறு வேறு விலை. ஆகவே இப்படி ஏற்பட்டது" என்று விளக்கம் சொல்வார்கள். ஒரே மாதிரியான [illegible] இப்படி இப்படி [illegible] அமைச்சருக்குத் தனி அதிகாரிகளும் தொடர்ந்து இருக்கிறது என்று [illegible] சொல்வார்கள். நான் இந்த சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். "[illegible] தான் மக்களிடம் [illegible] கள், [illegible] தான் [illegible] பெறுவார்கள்." இதிலே [illegible] எச்சரிக்கையாக இருக்க வேண்டியது தான். [illegible] இல்லாமல் [illegible]. அந்த நோக்கத்திற்காக கூட்டுறவு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கம் இன்றைக்கு நிறைவேறி இருக்கிறதா என்றால், இல்லை என்பதுதான் எல்லோருடைய கருத்தும். இன்றைக்கு கூட்டுறவு இயக்கம் அதன் நிலையிலிருந்து [illegible] ஆகிவிட்ட என்கிற நிலையில் மீண்டும் அதனை கூட்டுறவு இயக்கமாக ஆக்குவதற்கு தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் [illegible] பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக வந்த பிறகு [illegible] தேர்தலில் [illegible] சொல்லியிருக்கிறார். அதேபோல் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும் [illegible] யாக அதிகாரம் கொடுத்து தலைவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டோம். அதனை முறையில் இருக்கின்ற முறை [illegible] என்று சொன்னோம். [illegible] போல் மத்திய வங்கிக்கும் தலைவரை நியமிக்க வேண்டுமென்று கேட்டோம். அடுத்த ஆண்டு, அடுத்த ஆண்டு என்று சொல்லி, [illegible] பல ஆண்டுகள் ஆகியும், இன்னும் [illegible] இருக்கின்றார்கள் [illegible] பொறுப்புக்கு வரவில்லை, தலைவராகவில்லை. [illegible] மத்திய வங்கி மட்டும் தான் தலைவராகப் போட்டிருக்கிறார்கள். ஆனால் மத்திய வங்கி மட்டும் கையில் இருந்தால் தேர்தலுக்கு எத்தனை [illegible] மாணவர்கள் எடுத்துக்கொள்ளலாம் என்பதை பழைய அனுபவத்திலிருந்து நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : இன்னும் [illegible] வேண்டும் சீக்கிரம் முடிக்க வேண்டும்.

**திரு. எஸ். ஆர். இராதா** : தலைவருக்குச் சங்கடமாக இருக்கக் கூடாது என்பதால் சீக்கிரம் முடிக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : தலைவருக்குச் சங்கடமே இல்லை. நேரமின்மையால் சீக்கிரம் முடிக்குமாறு கேட்கிறேன்.





**திரு. எஸ். ஆர். இராதா** : மத்திய வங்கியைக் கட்டுப்படுத்தும் அளவுக்கு ஒரு தெளிவான நிலையை அமைச்சர் அவர்கள் உருவாக்க வேண்டும். அதே போல நகர வங்கிகள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் ஆளும் கட்சிக்குத் துணையாக இருக்கலாம். ஆனால் எந்தக் காரணத்தைக் கொண்டும் முன்பு நடைபெற்றது போல, தவறான செயல்களுக்குத் துணை போகக் கூடாது என்கிற வகையில் அவை செயல்பட வேண்டும். அந்த வகையில் இதிலே நல்ல முறையில் சீர்திருத்தம் கொண்டு வர அமைச்சர் அவர்கள் முனைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லி, வாய்ப்பளித்தமைக்கு தலைவருக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

**திரு. அ. மயில்சாமி** : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை கொள்கை விளக்கம் பற்றி சில கருத்துக்களைச் சொல்ல எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு கூட்டுறவுத் துறை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நல்லமுறையில் பணியாற்றிக்கொண்டிருக்கிறது. குறிப்பாக அது கிராமப்புற விவசாயிகளுக்கு நல்லமுறையில் சேவை செய்யக்கூடிய அமைப்பாக இருக்கிறது. அனைத்துத் தரப்பு மக்களிடையே தாங்களும் கூட்டுறவு அமைப்பிலே உறுப்பினராக ஆக வேண்டுமென்ற எண்ணம் வளர்ந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு தொழில் அமைச்சர் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார். 30 சர்க்கரை ஆலைகளை நிறுவுவதற்கான அனுமதியை மத்திய அரசிடம் கேட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அவை கூட்டுறவுத் துறையிலே தான் வர வேண்டும். கூட்டுறவுத் துறையிலே இவைகள் எல்லாம் வந்தால் தான், நாட்டிலே இடைத் தரகர்கள் வர முடியாமல், அதன் பலன் எல்லாம் மக்களைப் போய் சேரும் என்கிற எண்ணம் வளர்ந்துகொண்டிருக்கிறது.

இன்றைக்கு நாம் பார்க்கிறோம். கூட்டுறவுத் துறை சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பால்வழங்கு துறையை எடுத்துக் கொண்டால், குஜராத்தில் மிகச் சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது. அமுல் என்கிற குழந்தைகளுக்கான பால் பவுடரை இந்திய நாடு முழுவதும் விற்பனை செய்கின்ற அளவுக்கு மிகப் பெரிய அளவில் அது இயங்கி, பெருமளவு லாபத்தையும் ஈட்டிக்கொண்டிருக்கிறது. அதேமாதிரி, மராட்டிய மாநிலத்தில் சர்க்கரை

(பிற்பகல் 12-30)

ஆலைகள் கூட்டுறவுத் துறையில்தான் இயங்குகின்றன. சர்க்கரை ஆலைகளில் அந்தப் பகுதி மக்களுக்கு மிகப் பெரிய வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே தமிழகத்திலும் கூட்டுறவு

துறையில் ஆலைகள் இயக்கப்பட்டால், அனைவருக்கும் உதவியாக இருக்குமென்று கூற விரும்புகிறேன். பொதுவாக விவசாயிகளுக்குக் கடன் தருகிற துறையாகத்தான் கூட்டுறவுத் துறை இருக்கிறது. குறிப்பாக விவசாயிகளுக்கு நீண்ட கால வேளாண்மைக் கடன்கள் தருவதில்லை. இந்தக் கொள்கைக் குறிப்பில் பார்த்தால், நீண்டகாலக் கடன்கள் வழங்குவது குறித்து வருவதைப் பார்க்கலாம். 1983-84-ல் 26 கோடியாக இருந்த நீண்டகாலக் கடன் இப்போதும் அதே அளவில்தான் இருக்கிறது. கடன் தொகை அதிகரிக்கவே இல்லை. விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடன்கள் தருவதை விட நீண்டகாலக் கடன் கொடுத்தால், அது பலனுள்ளதாக இருக்கும். அதே போல் வளர்ச்சித் திட்டங்களுக்குச் செலவு குறைக்கப்பட்டிருக்கிறது. பல் வேறு கொள்கைக் குறிப்புகளில் வளர்ச்சித் திட்டங்களுக்கு செலவுத் தொகை குறைவாகவே இருக்கிறது. ஆண்டுக்காண்டு இந்தத் துறையிலும் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்குச் செலவு குறைந்துள்ளது. 1984-85-ல் 3 கோடி ரூபாயாக இருந்தது, 1986 வரை 2 ½ கோடியாகக் குறைந்திருக்கிறது. அந்த அளவுக்கு திட்டத்திற்கு முக்கியத்துவம் தரவில்லையென்று தெரிகிறது. திட்டத்திற்கும், வளர்ச்சிப் பணிகளுக்கும் மிக அதிகமாகப் பணம் தர வேண்டும். மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கும் ஆண்டுக்காண்டு கொடுக்கும் தொகை குறைந்து வருகிறது. 1984-85-ல் 10 கோடி ரூபாய் கொடுத்தது போக, இப்போது 1985-86-க்கு ரூ. 6 கோடிதான் ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படிப் பட்ட குறைபாடுகளையெல்லாம் கூட்டுறவுத் துறை நிச்சயமாகக் களைய வேண்டும். நீண்ட காலக் கடன் கொடுத்து, திட்டப் பணிகளுக்குச் செலவிடும் தொகையை அதிகரிக்க வேண்டுமென்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, கடன் வழங்குகிற முறையிலும் சில முன்னேற்றமான திட்டங்களைச் செய்ய வேண்டும். சிறிய விவசாயியானாலும் சரி, நிலமற்ற விவசாயிகளானாலும், கடன் அவர்களுக்குக் கொடுக்கும் முறையில் சிவப்பு நாடா முறையில் இல்லாமல் உடனடியாகக் கடன் தொகையை வழங்க வேண்டும். நலிந்த பிரிவினர்க்கு மிக விரைவாகக் கடன் தொகை கொடுக்க வேண்டும். நீண்ட காலக் கடன் அதிகமாகத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு வலியுறுத்தவும் நினைக்கிறேன்.

நிலவள வங்கிகளின் வசூல் தொகைபற்றி இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. 1983 லிருந்து 1986 வரை பார்த்தால், 1983-ல் 11 கோடி ரூபாய் வசூல் என்றும், 1986-ல் 5 கோடி ரூபாய் வசூல் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி வசூல் குறைந்திருப்பதற்குக் காரணம், வறட்சி என்றாலும் கூட, 1983-ல் 11 கோடி ரூபாய் என்று இருந்தது ஆண்டுக்காண்டு குறைந்திருப்பதற்குக் காரணம் தெரியவில்லை. கிராமப் புறங்களில் விவசாயக் கூட்டுறவுக் கடன்

சங்கங்கள் இயங்காமல் உள்ளன. காரணம் 3,000 ரூபாய் கடன் வாங்கிய விவசாயிகள், 10 ஆண்டுகளுக்குப் பின் 8,000 ரூபாய், 10,000 ரூபாய் என்று கட்டிய பிறகும், பாக்கித் தொகை இருப்பதாகச் சொல்கிறார்கள். திருப்பித் தருவதில் விவசாயிகளுக்குச் சங்கடம் இருக்கிறது. விவசாயிகள் கடன்பற்றி, அரசு சார்பில் திரு. மூனு ஆதி அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அவர்களும் பரிந்துரை செய்திருக்கிறார்கள். வரி பாக்கியைத் தள்ளுபடி செய்தால், கடன் தொகை நிறைய அளவில் வசூலாகும். குறித்த நேரத்தில், குறித்த முறையில் கடன் தொகையைக் கட்டாததால், மத்திய வங்கி ஓவர்டிராப்ட் கடன் கொடுக்கத் தயங்குகிறது. இதன் காரணமாக ஏற்கெனவே கடன் பாக்கியைக் கட்டியவர்கள் கூட, கடன் தொகை பெற முடியாமல் இருக்கிறார்கள். அப்படி வட்டியைக் குறைத்துக் கொடுத்தாலும், கடன் தொகை பெற்றவர்கள் உடனடியாகக் கடன் தொகையைக் கட்டிவிடும் வாய்ப்பு இருக்கிறது. 3,000 ரூபாய் வாங்கிய கடனுக்கு 10,000 ரூபாய் வரை கட்டியும்கூட கடன் தொகை குறையவில்லை. கோவைப் பகுதியில் விவசாயக் கூட்டுறவுச் சங்கம் மிகச் சிறப்பாக நடந்தது. இப்போது கூட்டுறவுச் சங்கம் இல்லாமல், பணம் கட்டியவர்களுக்கே எந்த விதமான நன்மையும் இல்லை. பணத்தைக் கட்டியவர்களுக்காவது கடன் தொகை தர அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நில வள வங்கியில் கிணறு வெட்ட ஆழப்படுத்த, 10, 12 ஆண்டுக்கு முன் கடன் வழங்கியிருக்கிறார்கள். சில கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் பொய்த்த கிணறுகளாகி விட்டன. அந்தக் கிணறுகளுக்கான கடனைத் தள்ளுபடி செய்வதாகச்

(பிற்பகல் 12-35)

சொன்னார்கள். ஆனால் தள்ளுபடி என்று பார்த்தால், ஒரு கோடியே 22 இலட்சம் ரூபாய் அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. எங்கள் பகுதியில் மாத்திரம் இந்த மாதிரி பொய்த்துப்போன கிணறுகளுக்குத் தள்ளுபடி செய்திருந்தால், அங்கே மாத்திரம் சுமார் 4 கோடி அல்லது 5 கோடி ரூபாய் தேவைப்பட்டிருக்கும். எங்கள் பகுதியில் உண்மையில் தண்ணீர் இல்லாமல் பல கிணறுகள் கடந்த 4, 5 ஆண்டுகளில் பொய்த்துப் போய் விட்டன. அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் நிச்சயமாக நிதி உதவி அளித்து கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமப்புறத்தில் இருப்பவர்களுக்கு தொழில் செய்வதற்காக — குடிசைத் தொழில் செய்வதாக இருந்தாலும் சரி — கடன் தருகிறார்கள். பொதுவாக கிராமப்புறங்களில் ஆண்டு முழுவதும் விவசாயம் கிடையாது. மூன்று, நான்கு மாதங்களுக்குத்தான் வேலை இருக்கும். இப்போது

[திரு. அ. மயில்சாமி] [1986 ஏப்ரல் 25

22 தொழில்களுக்குக் கடன் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிக பட்சம் ஒருவருக்கு 7,000 ரூபாய் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது குறைவாகத்தான் இருக்கிறது. அதை அதிகப்படுத்தினால், கிராமத்தில் உள்ளவர்கள் முதலீடு செய்து, தொழிலில் ஈடுபட்டு, ஆண்டு முழுவதும் வருமானத்தைப் பெருக்குவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

22 தொழில்கள் என்று இல்லாமல், அவரவர்களுக்குத் தெரிந்த தொழில்களுக்கும் உதவியை நிச்சயமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடனையும் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி கிராமங்களில் உற்பத்தியாகின்ற விளை பொருள்களுக்கு விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கே 13 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கேயுள்ள தனியார் தொழிற்சாலைகள் உற்பத்தியாளர்களுக்கு சரியான அளவில் விலை கொடுக்கவில்லை என்றுதான் அரசு இக் கூட்டுறவுத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தியது. ஆனால் இந்த ஆண்டு கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை ஒரு கிலோ தேயிலைக்குக் கொடுக்கிற பணம், தனியார் தொழிற்சாலைகள் கொடுப்பதைவிடக் குறைவு என்று சொல்கிறார்கள். கூட்டுறவுத் தொழிற்சாலை கிலோவுக்கு 2 ரூபாய்தான் கொடுக்கிறதென்றால், தனியார் தொழிற்சாலைகள் 2½ ரூபாய் கொடுக்கிறார்கள். மக்களுக்கு நன்மை செய்வதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் அதற்கான நிலைமைகள் இன்றைக்கு இல்லாமல் இருக்கின்றன. இதனை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 13 தொழிற்சாலைகள் என்றிருப்பதை மேலும் அதிகமாக்க வேண்டுமென்று ஒரு கருத்தும் இருக்கிறது. அதனையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி மஞ்சள் உற்பத்தி செய்கிற கூட்டுறவுச் சங்கங்கள், பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டில் இருக்கின்றன. விவசாயிகள் அவர்களிடம் தான் விற்கிறார்கள். இருந்தாலும் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குறைவாகக் கொடுக்கிறார்கள். சென்ற ஆண்டு குவிண்டாலுக்கு 400 ரூபாய் என்றிருந்தது. இந்த ஆண்டு 300 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். இந்த வேறுபாடு ஏன் என்று தெரியவில்லை. உற்பத்தி அதிகமாகிவிட்டதா என்றால், அதுவும் சென்ற ஆண்டை விடக் குறைவுதான். பின் ஏன் விலையைக் குறைத்தார்கள் என்று தெரியவில்லை. இதனை அருள்கூர்ந்து சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 25] [திரு. அ. மயில்சாமி]

இப்போது பள்ளிகளில், கல்லூரிகளில் நுகர்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அவற்றின் மூலம் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் விற்பனை செய்கிறார்கள். இச்சங்கங்கள் தொடர்பான விதிமுறைகள் நீண்ட காலத்திற்கு முன்பு ஏற்படுத்தப்பட்டவை. இவற்றை மாற்ற வேண்டும், தளர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இவற்றில் இலாபம் ஆயிரம் ரூபாய் வந்தால், அதில் 50 சதவீதத்தை 'ரிசர்வ் ஃபண்ட்' என்று வைத்து விடுகிறார்கள். இதனால் அவற்றில் அதிக ஈடுபாடில்லாமல் இருக்கிறார்கள். இலாபப் பணத்தை பள்ளி, கல்லூரிகளுக்கே பயன்படுத்த வழிவகை ஏற்படுத்தலாம் என்று சொல்ல விரும்புகிறேன். இலாபம் முழுவதும் பள்ளி, கல்லூரிகளுக்கே பயன்படுத்தக்கூடிய அளவுக்குச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்கள்தோறும் நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. அவற்றின் மூலம் இன்றியமையாப் பண்டங்களை விநியோகம் செய்து வருகிறோம். சில நேரங்களில் சில பொருள்களுக்கு அதிகமாக 'டிமாண்ட்' இருக்கிறது. இப்போது ஆயிரம் பேர் கொண்ட கிராமத்திற்கு ஒரு நியாய விலைக் கடை என்று இருக்கிறது. அவ்வாறில்லாமல் ஒவ்வொரு கிராமத்திற்கும் — அங்கு எத்தனை பேர் இருந்தாலும் — இதுபோன்ற நியாய விலைக் கடைகளை ஏற்படுத்த வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

பொதுவாக விவசாயிகள் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களையே நம்பி இருக்கின்றார்கள், கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வதுண்டு, விவசாயி கடனிலேயே பிறக்கிறான்; கடனிலேயே வாழ்கிறான்; கடனிலேயே சாகிறான் என்று சொல்வார்கள். அதுமாதிரி கூட்டுறவுத் துறை மூலம் கிடைக்கிற கடனை விவசாயிகள் சரியாகப் பயன்படுத்துகிறார்களா என்று நாம் பார்க்க வேண்டும். பல சமயங்களில் அதுமாதிரி பயன்படுத்துவதில்லை. கிணறு வெட்டுவதற்காகக் கடன் வாங்குவார்கள். பின் அப்பணம் திருமணச் செலவிற்குச் சென்றுவிடுகிறது. இதையெல்லாம் கண்காணிக்க வேண்டும் என்று

(பிற்பகல் 12-40)

கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு கூட்டுறவுக் கடன் ஏதோ சொல்கிறார்கள், கொடுக்கிறார்கள் என்று பேசப்படுகிறது. அது முறையாக, சரியாகப் போய்ச் சேருகிறதா என்பதைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவையில் உங்களுக்கெல்லாம் தெரியும், சிறப்பு அங்காடி சிந்தாமணி சூப்பர் மார்க்கெட் இருந்தது...

[1986 ஏப்ரல் 25

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : ஒரு குறிப்பு சொல்ல விரும்பு கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி அவர்கள் பேசிக் கொண் டிருக்கிறார்கள். இப்போது மணி 12.40. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் கள் திருவாளர்கள் கோலப்பா, பார்த்தசாரதி, காங்கிரசு கட்சித் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் ஆகியோர் பேச வேண்டியிருக்கிறது. பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேச வேண்டியிருக்கிறது. எனவே எல்லோரும் கொஞ்சம் குறைத்துப் பேசினால், அவையை 1-½ மணிக்குள் முடிக்க முடியும். அப்படி இல்லாமல் பேச்சை நீட்டிப் பேசினால், அவையை மறுபடியும் மாலை 4 மணிக்குக் கூட்டி இந்தப் பிரச்சினையைப்பற்றிப் பேச வேண்டியிருக்கும். உறுப்பினர்கள் முடியுமானால், இயலுமானால், தங்களுடைய பேச்சை குறைத்துப் பேசினால் அவையை 1-½ அல்லது 2 மணிக்குள் முடித் தால் நல்லது. அதற்குத் தகுந்த மாதிரி உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. மயில்சாமி** : துணைத் தலைவரவர்களே, நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ளவில்லை. . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : தங்களைச் சொல்லவில்லை. இன்னும் 3, 4 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். 1-½ அல்லது 2 மணிக்குள் முடிக்கலாம், முடியுமானால் என்றுதான் சொன்னேன். இல்லையென்றால் மாலை 4 மணிக்கு அவையைக் கூட்ட வேண்டுமென்று தெரிவித்தேன். தாங்கள் பேச வேண்டாமென்று நான் சொல்லவில்லை.

**திரு. அ. மயில்சாமி** : துணைத் தலைவரவர்களே, கோவையில் சிறப்போடு செயல்பட்டுக் கொண்டிருந்த அந்த சிறப்பு அங்காடியின் சிறப்பு இன்றைக்குக் குறைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்து. மீண்டும் அந்தச் சிறப்பை அது அடைவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்குத் தெரிந்த அளவில், சில ஆண்டுகளுக்கு முன்னால் கிராமப் பகுதிகளில் இருக்கக் கூடிய மக்கள் கூட அந்தச் சிறப்பங்காடிக்கு வருவார்கள். அங்கே எல்லாப் பொருள்களும், எல்லா நேரத்திலும் கிடைக்கும். அங்கே குறிப்பாக மருந்து விற்பனை 24 மணி நேரமும் இருந்தது. ஆனால் இப்போது அந்தச் சிறப்பங்காடி அவ்வளவு சிறப்பாக இல்லை. அது மாத்திரமல்ல, அப்போதெல்லாம் சிறப்பாக இருந்த காலத்தில் கிராமங்களிலிருந்து, 10, 12 மைல்களுக்கு அப்பாலிருந்து, அந்தச் சிறப்பங்காடியினுடைய பெயரைக் கேட்டுக்கொண்டு, கிராம மக்கள் வந்து பொருள்களை வாங்கிக்கொண்டு அவரவர் ஊர்களுக்குச் செல்வது வழக்கமாக இருந்தது. அப்படிப் [illegible]

மக்கு



1986 ஏப்ரல் 25] [திரு. அ. மயில்சாமி]

அந்த அளவுக்கு சிறப்பாக இல்லை என்று அந்தப் பகுதி மக்கள் அனைவரும் குறைபட்டுக்கொள்கிறார்கள். 24 மணி நேர மருந்து விற்பனை அங்கு இருந்தது. ஆனால் இன்றைக்கு அது இல்லாமல் இருக்கிறது. கோவை சூப்பர் மார்க்கெட் என்றால், மற்ற மாவட்டங்களில் இருக்கும் மார்க்கெட்டுகளுக்கு எல்லாம் ஒரு முன்னோடியாக இருந்தது. இன்றைக்கு அத்தகைய நிலையை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து ஏற்படுத்த வேண்டும்.

இன்றைக்கு அங்கே துணி விற்பனை குறைந்திருக்கிறது. ஏராளமான துணி ஸ்டாக் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஒருவேளை அதிகமான விற்பனை ஆகுமென்று ஸ்டாக் வைத்து விட்டார்களோ அல்லது என்ன காரணத்தாலோ அந்த நிலை ஏற்பட்டது என்று தெரியவில்லை. ஆனால் இன்றைக்கு அதிகமாக ஸ்டாக் இருக்கிறது. ஒருவேளை அடுத்த ஆண்டு விலை உயரும் என்ற காரணத்தால், ஸ்டாக் வைத்திருக்கிறார்களோ என்பது தெரிய வில்லை. ஆனால் இன்றைக்கு அது வட்டி கட்டிக் கொண்டிருக்கிறது. அந்தச் சிறப்பங் வட்டியே அதிகமாகக் கட்டும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சிறப்பங் காடியில் பல தயாரிப்புகள் இருந்தன. பனியன் தயாரிப்புக்காக திருப்பூரில் ஒரு தொழிற்சாலை வைத்திருந்தார்கள். ஆனால் இன்றைக்கு அங்கு உற்பத்தி யாகின்ற பனியன் தரமான பனியனாக இல்லை என்று சொல்லி, சரியான விற்பனை ஆகவில்லை என்று சொல்கிறார்கள். அதுமாதிரி ஆட்டோமொபைல் பிரிவும் அங்கு இருந்தது. இன்றைக்கு கோவையில் தனியார்தான் ஆட்டோமொபைல் பிரிவை மிகப் பெரிய அளவில் வளர்த்திருக் கிறார்கள். முன்பு அந்தச் சிறப்பங்காடியிலிருந்த ஆட்டோமொபைல் பிரிவில்தான் எல்லோரும் போய் வாங்கினார்கள். ஆனால் இன்றைக்கு அது மூடப்பட்டு அந்தப் பிரிவில் இருந்த டையர் போன்றவைகள் அப்படியே இருந்து அழுகி, நாற்றம் அடிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. பல லட்சம் ரூபாய் நட்டம் ஏற்படும் நிலையிலே இருக்கிறது. அங்கு சூரியகாந்தி எண்ணெய் தொழிற்சாலையும் இருந்தது. பல லட்சம் ரூபாய் மூலதனம் போட்டு அந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்தார்கள். மக்கள் அந்த எண்ணெயை தரமான எண்ணெய் என்று வாங்கினார்கள். இன்றைக்கு அதன் நிலைமை மூடப்படும் அளவுக்கு இருக்கிறது. இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து கவனித்து அந்தச் சிறப்பங்காடியை முன்பிருந்த நிலைக்கு உயர்த்த வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, அங்கு கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் சீரமைப்பு, பணியாளர்கள் விதி, அவர்களுக்குச் சம்பள உயர்வு போன்ற குறைகள் எல்லாம் இருக்கின்றன. இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், எல்லா விற்பனை நிலையங்களிலும் பணியாற்றுகிறவர்களுக்கு [illegible]

ஊதியம் இல்லை. லாபம் இருந்தால் அதிகமான ஊதியமும், லாபம் இல்லாத இடங்களில் குறைவான ஊதியமும் கொடுக்கிறார்கள். அதையெல்லாம் ஒரே மாதிரியாக மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அனைத்து ஊழியர் களுக்கும் ஒரே விதமான ஊதியத்தை அனுமதித்தால், அது சரியாக இருக்கும். அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் என்ன நிலை இருக்கிறதோ அதைப் போன்ற நிலையை அவர்களுக்கும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விற்பனை சங்கத்திற்கு எத்தனை பணியாளர்கள் வேண்டும் என்பதை முதலில் நிர்ணயம் செய்ய வேண்டும். பல விற்பனை நிலையங் களில் வேலை வாய்ப்பு நிறுவனங்களிலிருந்து கூட பணியாளர்களை நிய மிக்காமல், அவர்கள் இஷ்டத்திற்கு நியமித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிக மான ஊழியர்கள் இருக்கிற காரணத்தால், அனைவருக்கும் சரியான முறை யான ஊதியம் கொடுக்கப்படவில்லை என்ற ஒரு குறைபாடு இருக்கிறது.

இந்தத் துறையில் நீண்டகாலமாக இளநிலை ஆய்வாளர்கள் பணி யாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் 8, 10 ஆண்டுக்காலமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் நிரந்தரப்படுத்தாமல் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் நிரந்தரப்படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். நமது அரசுத் துறையில் எங்கே எடுத்தாலும், 10 (ஏ) 1 பணியாளர்கள் நிரந்தரமாக இருந்து கொண்டிருக்கி றார்கள். அதைப்பற்றி இந்த அவையில் அடிக்கடி பேசிக் கொண்டிருக் கிறோம். இந்தத் துறையில் 10 (ஏ) 1 பணியாளர்கள் இருப்பது மிக வேதனைக்குரியது. அவர்களையெல்லாம் உடனடியாக முறையாக நிரந்தரப் படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-45)

கூட்டுறவு இயக்கம் நாட்டிற்கு மிகவும் தேவை என்பதை யாரும் மறுப்ப தற்கில்லை. அதற்குத் தேவையான பயிற்சியை அளிக்கும் பயிற்சி நிலை யங்களை நாம் அதிகரிக்க வேண்டும். அங்கே நவீன விற்பனை முறைகளைப் பற்றியும் சொல்லிக் கொடுக்க வேண்டும். ஆண்டுக்கொரு முறை அதிலே பணியாற்றுகிறவர்களை எல்லாம் அழைத்துப் பயிற்சி தந்தால், சிறந்த முறையில் கூட்டுறவுத் துறை மூலம் பொது மக்களுக்குச் சேவை செய்ய முடியும்.

அடுத்து, இந்த அவையில் நான் ஓர் வேண்டுகோளை வைக்க விரும்புகி றேன். தமிழகத்தில் நிலத்தடி நீர் மிகவும் குறைந்து வருகிறது. இதன் காரணமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் 200 அல்லது 300 ஏக்கர் நிலங்களை ஒன்று சேர்த்து கூட்டுறவுப் பண்ணை என்று அமைத்து, பாசன வசதி செய்து





கொடுத்தால், நாட்டிலேயே அது ஒரு எடுத்துக்காட்டாக அமையும். சோஷலிச நாடுகளில் அப்படிச் செய்கிறார்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். எனவே இங்கேயும் கூட்டுறவுத் துறையில் 'கலெக்டிவ் ஃபார்மிங்' என்று ஆரம்பித்தால், நாட்டிற்கே அது ஒரு முன்னோடியாக இருக்கும். தமிழகத்தில் உள்ள மானாவாரி நிலங்களை எடுத்து, இந்த முயற்சியை மேற்கொண்டால், அதன் மூலம் அந்தந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகளுக்கு அது உதவுவதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, வறட்சி மாவட்டங்களான கோவை, பெரியார் போன்ற மாவட்டங் களில் இந்த ஆண்டு அதிகமான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. எனவே அங்குள்ள விவசாயிகளுக்குக் கடன் வசூலிலிருந்து விலக்களித்து அந்தக் கடன்களை எல்லாம் தள்ளி வைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அரசு விரைவில் இதில் ஒரு முடிவை மேற்கொள்ள வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரில் "மெட்ராஸ் கோவாப்பரேட்டிங் வங்கி" அரசு ஊழியர் களுக்குக் கடன் கொடுக்கிறது. தற்போது அது ரூ. 2,000 வரை கடன் கொடுக்கிறது. அதைக் சற்று அதிகப்படுத்தி ரூ. 3,000 அல்லது ரூ. 4,000 என்று கொடுத்தால், நன்றாக இருக்கும். அவர்கள் எல்லாம் சரியாகத் திருப்பிக் கட்டிவிடுகிறார்கள். அதையேகூட அலுவலகத்திலேயே பிடித்துக் கொண்டு கட்டினால், சரியாக இருக்கும், இல்லையென்றால் ஊழியர்கள் மாறுதல் ஆனால் பிரச்சினையாக இருக்கிறது. எனவே அதையும் அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இரண்டு மணிக்குள் அவை நிகழ்ச்சிகளை முடிக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 3 அல்லது 4 நிமிடங்களில் முடித்துக் கொண்டால், மற்றவர்கள் பேசவும் குறித்த நேரத்தில் அவை நடவடிக் கைகளை முடிக்கவும் உதவியாக இருக்கும்.

**திரு. அ. மயில்சாமி :** நிச்சயமாக நான் அதற்கு ஒத்துழைப்புத் தருவேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, லாக்கர் சிஸ்டத்திற்கு ஏற்கனவே ரூ. 100 வாடகை என்றிருந் ததை இப்போது ரூ. 200 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். ரூ. 10 அல்லது ரூ. 20 என்று உயர்த்தியிருந்தால், நன்றாக இருக்கும். எனவே அதையும் நியாய மான அளவுக்குக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தத் துறையில் பதவி உயர்வு என்பது மிகவும் குறைவு; ஒரு சீனியர் இன்ஸ்பெக்டர் ஆப் கோவாப்பரேட்டிவ் சொசைடி 18 ஆண்டுகள் பணியாற்றினால்தான், சி. எஸ். ஆர். ஆக பதவி உயர்வு பெற முடியும். அவர்களுக்குப் பதவி உயர்வு இருந்தால்தான், மன நிறைவோடு பணியாற்ற முடியும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையும் அருள்கூர்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய ஊரான தொண்டாமுத்தூரில் கூட்டுறவுத் துறையில் ஒரு வங்கி துவக்கப்பட்டபோது, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வந்திருந்தார்கள். இதை நான் ஏதோ ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. எதிர்காலத்தில் இப்படி நடக்கவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். நான் அதே ஊரில் இருக்கிறவன். என்னுடைய பெயர் அந்த விழாவில் சேர்க்கப்படவில்லை. அதே மாதிரி கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் உதகைக்கு வந்திருந்தார்கள். நான் கூட சென்றுவரலாம் என்றுதான் போனேன். அங்கே போய்ப் பார்த்தபோது, என்னுடைய பெயர் அதிலேயும் விடுபட்டுப் போயிருந்ததைக் கண்டேன். முன்பே குறிப்பிட்டதைப் போல் நான் இதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. எதிர்காலத்தில் இப்படி நடக்கக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன் என்பதை மட்டும் எடுத்துச் சொல்லி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. சி. ஆர். கோலப்பா : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறைபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேச வாய்ப்பு அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேசுவதற்கு முன்பாக தங்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் இன்று தாங்கள் மீண்டும் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். நல்ல அனுபவமுள்ள துணைத் தலைவரான தாங்கள் மீண்டும் இங்கே வந்திருப்பதைக் குறித்து எங்களைப் போன்றவர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நீண்ட நேரம் அவகாசம் கொடுக்கலாம் என்றுதான் விரும்பினேன். இருந்தாலும் என்னுடைய நிலைமை கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

திரு. சி. ஆர். கோலப்பா : தற்போது கூட்டுறவுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு வந்த பின்னர்தான் தமிழகத்தில் பல இடங்களில் கூட்டுறவு இயக்கங்கள் எல்லாம் சரியாக நடைபெறுகின்றன என்று நான் ஏற்கெனவே சொல்லியிருந்



தாலும், மீண்டும் ஒருமுறை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இதற்காகவே மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த போது 1968ஆம் ஆண்டில் நடைபெற்ற விழா ஒன்றிற்கு நான் சென்றிருந்தேன். அந்தக் கூட்டுறவு விழா நடைபெற்றது வட சென்னையில்.

(பிற்பகல் 12-50)

அந்தக் கூட்டுறவு சங்க விழாவிலே டாக்டர் நடேசனார் கலந்துகொண்டார். அந்த விழாவில் பேசும்போது, "இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன" என்று குறிப்பிட்டார்கள். அதை வெகுவாகப் பாராட்டி பேரறிஞர் அண்ணா அவர்கள் தனக்கே உரியமுறையில் அதைப் பெருமையாக அந்த நேரத்திலே குறிப்பிட்டார்கள். அந்த அளவிற்கு, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே, கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் மிகச் சிறப்பாக நடைப்பெற்றுக்கொண்டு வந்தன என்பதை இந்தச் சபையிலே நினைவுபடுத்த விரும்புகிறேன். இடையிலேதான் கூட்டுறவுத் துறை மிக மோசமான நிலையை அடைந்துவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இப்போது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, அதுவும் கூட்டுறவுத் துறை அமைச்சராக இப்போதுள்ளவர் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, தமிழகத்திலே பல இடங்களிலே கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவுச் சிறப்பங்காடிகள் போன்ற அமைப்புகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அது மட்டுமல்ல, இலட்சக்கணக்கான நலிந்த மக்களுக்கெல்லாம் கடன் உதவி அளித்து பொருளாதாரத் துறையில் அவர்கள் மேம்பாடு அடைய வேண்டுமென்ற நிலையை உருவாக்கிக் கொண்டு வருகிறார்கள். அதற்காக கூட்டுறவு அமைச்சரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்லாமல், தமிழகத்திலே பல இடங்களில் கூட்டுறவுத் துறையின் மூலமாகவும், கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும், சிறு தொழில் செய்து கொண்டிருப்பவர்களுக்கெல்லாம் கடன் கொடுத்து அவர்கள் நல்ல முறையிலே தொழில் செய்ய வேண்டிய எல்லா உதவிகளையும் இப்போது செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். கணேசன் அவர்கள் பேசுகின்றபோது, "விவசாயிகள் கூட மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான உதவிகளும் கிடைப்பதில்லை, அவர்கள் பல கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று கூறினார்கள்

[திரு. பி. பார்த்தசாரதி] [1986 ஏப்ரல் 25

முதலிலே மாநில வளர்ச்சிப் பணிகளுக்கான செலவுகள் என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டிருக்கின்ற திட்டப்பணிகளுக்கான செலவு 1984-85ல் ரூ 7.79 கோடியாக இருந்தது படிப்படியாகக் குறைந்து அதுவே ரூ. 5.37 கோடியாக ஆகியிருக்கின்றது. இப்படி குறைவாகக் கொடுப்பாமானால், எதிர்பார்ப்புகளுக்கும் மேலாக கூட்டுறவுப் பணிகளுக்கு நிறைய தேவை இருப்பதனால், இந்தக் குறைந்த ஒதுக்கீட்டை வைத்துக்கொண்டு கூட்டுறவுத் துறை எப்படி சிறப்பாக நடக்க முடியும் என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே இன்னும் கொஞ்சம் அதிகமான ஒதுக்கீடுகளைச் செய்தால்தான், திட்டப்பணிகளைச் சரியாகச் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதற்கான ஒதுக்கீடும் இல்லை. அந்த ஒதுக்கீடுகளைச் செய்து தந்து, இந்தத் திட்டப்பணிகளை மேலும் சிறக்கச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள்பற்றி ஆய்வு நடத்தியிருப்பதாக அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. அதிலே சிறப்பு அலுவலரை நியமனம் செய்து அவர்கள் அறிக்கை தந்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன என்றும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. என்னுடைய வேண்டுகோள், அப்படிக் கொடுக்கப்பட்ட அறிக்கை இந்த மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்குமானால், அதில் இந்த மன்றத்தின் உறுப்பினர்களுடைய கருத்துக்களை அறிந்து, அவை பற்றி ஆய்வு செய்து முடிவு எடுத்தால், அது மிகச் சிறப்பாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அந்த அறிக்கை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமா? உறுப்பினர்கள் கருத்துக்களை அறிய ஏற்பாடு செய்ய முடியுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவருடைய பதிலிலே சொல்ல வேண்டும் என்று எதிர் பார்க்கிறேன்.

அடுத்து, சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்தும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல் என்ற தலைப்பிலே படித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு உதவி செய்வதாகச் சொல்லி சென்னை, கோவை, தஞ்சை, சேலம் என்று சில மாவட்டங்களைச் சொல்லியிருக்கின்றார்கள். மற்ற மாவட்டங்களுக்கு விஸ்தரிப்புப் பற்றி ஆராயப்பட்டிருப்பதாகச் சொல்கின்றார்கள். ஆனால் அவர்கள் இருக்கின்ற பகுதி என்னுடைய தொகுதியும் அந்தப் பகுதியில் சேர்ந்தது—பிற்படுத்தப்பட்ட பகுதி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிகளையும் சேர்த்து இந்த அவையிலே அறிவித்தால், அது சிறப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 25] [திரு. பி. பார்த்தசாரதி]

இதே சமயத்தில் நான் இன்னொன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் கல்லூரிகளிலே படிக்கும்போது, ஏற்பட்ட அனுபவங்கள் காரணமாகச் சொல்கிறேன். ஏழை மாணவர்கள் படிக்கும்போதே, சம்பாதிக்க வேண்டும். உதாரணத்திற்கு ஒன்று சொல்கின்றேன். அவர்கள் படிக்கும்போது, வேலை வாய்ப்பை எதிர்பார்க்கின்றார்கள். கனரா வங்கியிலே மாதம் ரூபாய் 100 கிடைக்கின்ற மாதிரி வேலை வைத்திருக்கின்றார்கள். அதுபோல நம்முடைய பாங்கியிலும், கூட்டுறவு வங்கிகளிலும் அந்த ஏழை மாணவர்களுக்கும் அவர்கள் படிக்கின்றபோது மாலையிலே 2, 3 மணி நேரம் வேலை செய்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தந்தால், அந்த ஏழை மாணவர்களுக்கு அது மிகவும் உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் பற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: விவாதம் முடியும்வரை, அவையின் அனுமதியோடு, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. பி. பார்த்தசாரதி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 3,634 கல்லூரி, பள்ளிகளில் மட்டும் மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் நீங்கலாக எடுத்துக் கொண்டால்கூட, 4,400 பள்ளிகள் இருக்கின்றன. இந்தப் பள்ளிகளிலே இருக்கும் அனுபவத்தைச் சொல்கிறேன். தனியார் கல்லூரி, பள்ளி புக் டெப்போ என்று தனியாக வைத்துக்கொள்கிறது. நுகர்பொருள் விற்பனைக்காக பேருக்கு சொசைட்டி என்று வைத்துக்கொண்டு, புக் டெப்போவில் கிடைக்கும் லாபத்தை நிர்வாகமே எடுத்துக்கொள்கிறது. மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் இப்படி நடந்து கொண்டிருக்கிறது. அதிகாரிகள் இதைச் சேர்க்க வேண்டுமென்று சொன்னாலும், இதைச் சேர்க்க முடியாது என்று சொல்லி, பெரும் பகுதி லாபத்தை அவர்கள் தங்களுக்கு ஒதுக்கிக் கொள்கிறார்கள். என்வே எல்லாப் பள்ளிகளிலும் இந்தச் சலுகை மாணவர்களுக்குக் கிடைக்கும் விதத்திலே, அதன்மூலம் கிடைக்கும் லாபம் அந்த மாணவர்களுக்கே திரும்பச் சேரும் அளவுக்கு பயன்படும் நுகர்பொருள் கடைகள் எல்லாப் பள்ளிகள், கல்லூரிகளிலும் கண்டிப்பாக இருக்க வேண்டும். புத்தக விற்பனை அங்கேதான் நடைபெற வேண்டுமென்று சுற்றறிக்கை அனுப்பி பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு அவை பயன்பட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, கூட்டுறவுத் துறை அமைச்சராக திரு. ஆதித்தனார் அவர்கள் இருந்தார்கள். அப்போது நீர்ப்பாசனக் கூட்டுறவுப் பண்ணை என்று ஆரம்பித்தார்கள். அதிலே எவ்வளவு ஊழல்கள் ஏற்பட்டன, அதனால் விவசாய மக்கள் எந்தவிதப் பயனும் அடையாமல் நஷ்டப்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள் என்பது, நான் இந்தச் சபையிலே உறுப்பினராக இருந்த காரணத்தால், எனக்குத் தெரியும். அப்போது இதே சபையில் அப்போதிருந்த கூட்டுறவு அமைச்சர் அவர்கள் மிகவும் வருத்தத்தோடு, "நான் இந்தத் தவறுகளைச் செய்யவில்லை; கூட்டுறவு அதிகாரிகள் தான் இந்தத் தவறுகளைச் செய்திருந்தார்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது இந்த அவைக் குறிப்பிலே இருக்கிறது. அதனுடைய குறிப்பு என்னிடத்திலேகூட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அளவிற்கு கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் எப்போதும் தவறுகள் ஏற்படக் கூடிய ஸ்தானங்களாக இருந்துகொண்டு வருகின்றன. ஆனால் தற்போதுள்ள கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, இத்துறையிலே என்னென்ன தவறுகள் ஏற்படுகின்றன என்பதைக் கண்டறிந்து, அவற்றை எப்படிக் களையலாம் என்பதைப்பற்றி மிகத் தீவிரமாகச் சிந்தித்து செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக உள்ளபடியே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. நலிந்த மக்களுக்குச் செய்யும் உதவிகளைப்பற்றி இந்தக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆதி திராவிட மக்களுக்கெல்லாம் நல்ல முறையிலே விவசாயக் கடன்களைக் கொடுத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கடன் கொடுத்திருக்கிறார்கள். இப்படி பல்வேறு வகைகளில் நலிந்த மக்களுக்கெல்லாம், அவர்கள் பொருளாதாரத் துறையிலே மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்காக, இலட்சக்கணக்கான ரூபாயை அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் ஓரளவிற்கு முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் தமிழகத்திலே நலிந்த சமுதாயத்தைச் சேர்ந்த சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர் போன்றவர்களுக்காக ஏறக்குறைய 20 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் அவைகள் கடந்த பத்தாண்டுக் காலத்திற்கு முன்பிருந்தே செயல்படாமல் இருக்கின்றன. அவைகளையெல்லாம் ஒன்றாகத் திரட்டி, தமிழ் நாடு சலவைத் தொழிலாளர் கூட்டுறவு இணையம் என்ற பெயரிலே சென்னையிலே ஓர் அமைப்பை உருவாக்கி, தமிழகத்திலே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கின்ற இருபதாயிரம் உறுப்பினர்களுக்குப் பயன்படும் வகையிலே அதைச் செயல்படுத்த வேண்டும்



என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். காரணம், கூட்டுறவுச்
சங்கங்கள் மூலமாகத்தான் நலிந்த மக்களுக்கு பல நன்மைகளைச் செய்ய
முடியும். எந்த நோக்கத்தோடு கூட்டுறவுச் சங்கத்தை அமைத்தார்களோ
அந்த நோக்கத்திற்காக அவைகள் செயல்படாமல் இருந்து வருகின்றன.

(பிற்பகல் 12-55)

அது மட்டுமல்ல. சென்னையிலே, சைதாப்பேட்டை பகுதியில் தென்
சென்னை மாவட்ட சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று
இருக்கிறது. அதுவும் கடந்த ஏழு ஆண்டுக் காலமாகச் செயல்படாமல் இருந்து
வருகிறது. அதற்குக்கூட 'வாஷிங் மெஷின்கள்' இருக்கின்றன. அதற்கு 2
லட்சம் ரூபாய் சர்க்காரிலேகூட ஒதுக்கியிருக்கின்றார்கள். ஆனால் இந்த அதி
காரிகள்தான் இதற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றார்கள். மாண்புமிகு
உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் கூறியதுபோல, இந்த அதிகாரி
கள் விஷயத்திலே எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவர்கள்தான் இந்தக்
கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் நல்ல முறையிலே செயல்படாத அளவிற்கு
செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எங்களைப் போன்றவர்களை
எல்லாம் அழைத்து எந்தவிதமான யோசனையையும் கேட்பதில்லை. அவர்கள்
இஷ்டம்போல் செயல்படுகின்றார்கள். அதனால்தான் கூட்டுறவுச் சங்கங்கள்
நன்றாகச் செயல்படாமல் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
கூட்டுறவுத் துறையில் ஏறத்தாழ 20 ஆண்டுக் காலம் அனுபவம் பெற்றிருக்
கிறேன். இருந்தாலும் அந்த அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர்களை
மதிப்பதில்லை. அந்த அளவிற்கு அதிகாரிகள் இருந்துகொண்டிருக்
கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அதிகாரிகளை அழைத்துப்
பேசி, அதற்கு நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த
அளவுக்கு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு
விடைபெறுகிறேன்.

திரு பி. பார்த்தசாரதி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்
அவர்களே, கடைசியில் பொதுவாக பலிகடாக்களாக ஆக்கப்படுவது நீங்கள்
தான். காலையிலே உங்களுடைய தேர்தலிலே கூட்டுறவு நன்றாக இருந்தது.
பெருமையாகக்கூட இருந்தோம். ஆனால் இப்போது இடையிலே கூட்டுறவு
கொஞ்சம் குறைந்த காரணத்தினாலே, ஊழல் குற்றச்சாட்டுகள் மட்டுமே
சொல்லிக்கொண்டிருந்தார்கள். கொள்கை ரீதியிலே நான் பேசுகின்ற நேரத்தி
லேயாவது கொஞ்சம் அதிகமான நேரத்தைக் கொடுக்கின்ற அளவுக்கு
நிகழ்ச்சிகளை மாற்றியமைக்க வேண்டும். அதற்கு அவை உறுப்பினர்கள்
ஆதரவும் கிடைக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேரத்தை
மனதிலே வைத்துக்கொண்டு நான் என்னுடைய விமரிசனத்திற்கு வருகிறேன்.

[திரு. ப. பார்த்தசாரதி] [1986 ஏப்ரல் 25

அடுத்து, நகர்ப்புற கூட்டுறவு சங்கங்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட நூலகங்களையும், குறிப்பேடுகளையும் வழங்க தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பல்வேறு பள்ளிகளுக்கு இது கிடைக்கவில்லை. முதலாவதில் கிடைத்தது. பிறகு அது மறுக்கப்படும் நிலைமை இருக்கிறது. மீண்டும் அந்தக் குறிப்பேடுகள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மகளிர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் என்ற தலைப்பிலே கோவையிலே மட்டும் ஒரு சங்கம் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது மிக வரவேற்கத்தக்க ஒன்று. இந்த நாட்டிலே மகளிர் பகுதியை சிறப்பாக இன்னும் கவனிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. என்றைக்கு இந்த நாட்டிலே மகளிர் பொருளாதார விடுதலை பெறுகிறார்களோ அன்றைக்குத் தான் அவர்களுக்குச் சரியான சுதந்திரம் கிடைக்கும் என்பது நாம் ஏற்றுக் கொண்ட ஒன்று. குறிப்பாக விதவைகள் இட்டிலி சுட்டு விற்று வந்தார்கள். பராசக்தி வசனத்திலே அதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சுட்டிக் காட்டியிருந்தார்கள். இந்த நாட்டிலே, விதவைகளை உட்படுத்தி ஒரு சங்கம் தொடங்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் இவைகள் சிறப்பாகவும், பரவலாகவும் செயல்படும் விதத்தில் இந்தத் திட்டப் பணிகள் அமைய வேண்டுமென்ற நோக்கத்தில் இதற்கு அதிக நிதி ஒதுக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மகளிர்க்கான திட்டங்களைச் செய்வதில் அவர்களைக் கலந்துகொண்டு, இன்னும் சிறப்பாகக் கவனம் செலு வேண்டும். சமுதாயத்தில் பாதிக்கப்பட்டவர்களாக பெண்கள் இரு றார்கள். அவர்களுக்குக் கூட்டுறவு மூலமாக என்ன செய்யலாமென்று, களையும் கலந்து, சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்

அடுத்தபடியாக, பழங்குடியினர் மேம்பாடு என்று சொல்லும்பே அதற்கான நிதி ஒதுக்கீட்டைப் பார்க்கும்போது, பழங்குடியினரு கடன்கள் என்று ஒரு பகுதி இருக்கிறது. 1980-81, 1981-82 எல்லாம் வருகிறது. அதிலே பார்க்கும்போது, ஒவ்வொரு ஆண்டு கொடுத்ததிலு சதவிகிதம் கூட்டியே அடுத்த ஆண்டு கடன்களாகக் கொடுத்துள்ள கொடுக்கப்பட்டிருக்கிறது. 1984-85-லே 76.17 இலட்சம் ரூபாய் கடன வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 1985-86 ஜனவரி வரை 45.31 இலட்சம் ரூபாய்தான் வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக் கிறது. இடையிலே 3 மாதங்கள் இருக்கின்றன. 76.17 இலட்சத்திலே 10 சதவிகிதம் கூட்டினால் 83 இலட்சம் ரூபாய் ஏறக்குறைய இந்த ஆண்டில் செலவழித்திருக்க வேண்டும். ஆனால் 45 இலட்சம் ரூபாய்தான் செலவழித்



1986 ஏப்ரல் 25] [திரு. பி. பார்த்தசாரதி]

திருக்கிறார்கள். பாக்கி இருக்கும் 40 இலட்சம் ரூபாயைச் செலவழிக்கப் போகிறார்களா? அதற்குத் திட்டம் இருக்கிறதா? அல்லது 40 இலட்சம் ரூபாய் இல்லாமல், மிகக் குறைந்த தொகையைத்தான் பாக்கி இருக்கும் 3 மாதங்களில் செலவழிக்கப் போகிறார்களா என்று அறிய விரும்புகிறேன். பழங்குடியினர் மேம்பாட்டுக்காக இத்தனை ஆண்டுகளாக அதிகமாகச் செல வழித்து வந்தபோது, இந்த ஆண்டு அதைக் குறைக்கக் காரணம் என்ன? அதுபற்றி விளக்கங்கள் தந்தால் மிக நன்றாக இருக்கும்.

(பிற்பகல் 1-05)

அடுத்து, ஏற்கெனவே சொல்லப்பட்டிருப்பதைப்போல, இப்போதும் ஒன்றை அறிவித்திருக்கிறார்கள். ஓராண்டுக்குள் தேர்தல் நடத்தப்படும் என்று சொல்லியிருந்தார்கள். விரைவில் தேர்தலை நடத்தினால்தான், இங்கே சுட்டிக் காட்டப்பட்ட ஊழல்களை எல்லாம் தவிர்ப்பதற்கான வாய்ப்பு ஏற்படும். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் 'நாங்கள் கூட வர முடியவில்லை' என்றார்கள். நான் சொல்வதெல்லாம் ஜனநாயக ரீதியில் யாராவது வர வேண்டும்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

விரைவில் தேர்தல் நடத்தினால்தான் மக்களுடைய பிரதிநிதிகள் இடம் பெறு வார்கள். அதிகாரிகள் செய்வதாகச் சொல்லப்படுகின்ற தவறுகளைச் சீர் படுத்த முடியும்.

அடுத்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி குறிப்பிட்டதைப் போல, மக்கள் எல்லாம் கூட்டுறவுத் துறையிலிருந்து ஏராளமான காரியங் களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் எவ்வளவுக்கெவ்வளவு இத்துறை மூலமாக மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை அறிவித்திருப்பார் களோ அவ்வளவுக்கவ்வளவு எங்களைப் போன்றவர்கள் எல்லாம் இத்துறை யைப் பாராட்டியிருப்போம்.

அடுத்து, கூட்டுறவுத் துறையை சரிப்படுத்த இன்னின்ன திட்டங்களை மேற்கொள்ள இருக்கிறோம் என்பது பற்றியும் சொல்லியிருக்க வேண்டும். காரணம் சோஷலிசத்திற்குப் போக வேண்டுமென்றால், அதற்கு முதற் காரண மாக இருப்பது கூட்டுறவு அமைப்புதான். ஆகவே, அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லி, வாய்ப்பளித்த மைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

[1986 ஏப்ரல் 25

* **திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறைக் கொள்கைக் குறிப்பிலே நான் சில வார்த்தைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்று காலையிலிருந்து இரண்டு தரப்பிலேயிருந்தும் நடைபெற்ற விவாதம் வெகு சுவாரஸ்யமாக ஆரம்பித்து, கடைசியில் வேதனையாக முடிந்தது என்பதை இங்கே குறிப்பிடுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

கூட்டுறவுத் துறை எவ்வளவு சீர்கெட்டிருக்கிறது என்பதற்கு இரண்டு தரப்பிலேயிருந்தும் நடைபெற்ற விவாதங்களும், கருத்துக்களும் சான்றாக அமைந்திருந்தன. ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் கூட்டுறவு இயக்கம் மிக உன்னத நிலையில் இருந்துகொண்டிருந்தது. தமிழ் நாடு இந்தியாவுக்கே வழிகாட்டியாக இருந்தது என்பதை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

கூட்டுறவுத் துறை கடன் வழங்குவதிலே சிறந்திருந்தது என்பது உண்மை. ஆனால் அரசியல் தலையீடு இல்லாமல், நாணயமாக நேர்மையாக அன்றைக்கு நடந்து வந்தது. கடந்த 20 ஆண்டுகளாக அது திசை தவறி விட்டது. அதற்கு அதிகாரிகள் காரணமா, இல்லை அரசியல்வாதிகள் காரணமா என்கிற ஆராய்ச்சியில் ஈடுபடுவதை விட்டுவிட்டு, அதற்கு முக்கிய காரணம், அதனுடைய அடிப்படைக் கொள்கையை இப்போது முற்றிலுமாக மாற்றிவிட்டார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். 1967 ஆம் ஆண்டு வரை இருந்தவர்கள் அதிலே அரசியல் ஆதிக்கத்திற்கு இடமில்லாமல் இதனை வைத்திருந்தார்கள். அந்த வகையில்தான் பல சங்கங்களைப் போட்டார்கள், மாவட்டங்களிலே இருக்கிற கூட்டுறவு வங்கியையும் பராமரித்தார்கள். இன்றைக்கு அரசியல் வர்க்கத்தினருடைய ஆதிக்கத்திற்குக் கீழே கூட்டுறவு இயக்கம் வந்து விட்டது. மக்களால், மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு இயக்கமானது இன்றைக்கு ஒரு அரசுத் துறையைப் போல, ரெவின்யூ துறையைப் போல, லேபர் துறையைப் போல வந்து விட்டதால், தவறுகள் ஏராளமாக நடைபெற ஆரம்பித்துவிட்டன. 1967 ஆம் ஆண்டு வரை கூட்டுறவுத் துறை சிறப்பாக நடந்தது என்றால், அப்போது அரசியல் தலையீடு முற்றிலுமாக இல்லாமல் இருந்தது அல்லது குறைவாக இருந்தது. இன்றைக்கு அது தலைவிரிகோலமாக இருக்கிறது.

கடந்த 3, 4 ஆண்டுகளாக கடன் தவணை பாக்கிகள் ஏராளமாக இருக்கின்றன என்று சொல்கிறார்கள். தனிப்பட்டவர்கள் அல்லது சங்கங்கள் என்று பார்த்தாலும், நிறைய பாக்கி இருக்கிறது. ஆரம்பத்திலும் ஓரளவு



1986 ஏப்ரல் 25] (திரு. எம். பி. சுப்பிரமணியம்)

கடன் தவணை பாக்கி இருந்திருக்கலாம். ஆனால் இப்போது நிறைய இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். அரசு இலாக்காவைப் போல அரசே இன்றைக்கு இதனை மாற்றிவிட்டதால், கடன் வாங்குகிறவர்களுக்கும் திரும்பக் கட்ட வேண்டுமென்ற பொறுப்பு அதிகமாக இருப்பதில்லை. முன்பெல்லாம் அப்படி அல்ல. வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டினால்தான், மேற்கொண்டு கடன் கிடைக்கும் என்கிற நிலை இருந்தது. ஆனால் இப்போது அரசே சில சமயங்களில் சலுகை அளித்துக்கொண்டு வருகிற நிலையில், நிலைமை மாறிக்கொண்டிருக்கிறது. அதுபோல் அரசியல் காரணங்களுக்காக தேர்தல் காலத்தில் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை மலிவாகக் கொடுத்து விடுகிறார்கள். இப்படியெல்லாம் செய்ததன் விளைவு தான் இன்றைக்கு கூட்டுறவு இயக்கத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற தவறுகள் என்பதை நான் இங்கே திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ளக்

(பிற்பகல் 1-10)

கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசாங்கமே நியமித்த உயர்மட்டக் குழு, முனு ஆதி கமிட்டி. அவர் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு எதிரானவரோ, பாதமாகச் செயல் படுவரோ கிடையாது. அவர் சட்டமன்றப் பேரவையின் தலைவராக இருந்தவர். அவர் தலைமையில் பல கட்சிகளைச் சார்ந்தவர்கள், விவசாயப் பெருமக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் எல்லாம் சேர்ந்து தமிழ் நாடு பூராவும் பயணம் செய்து, நிலைமைகளைப் பார்த்து சில பரிந்துரைகளைச் செய்திருக்கிறார்கள். அந்த அறிக்கையை ஏற்கிறோம், ஏற்கவில்லை என்று முடிவு ஏதுவும் செய்யாமலேயே ஆண்டுக்கணக்காக இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் கொஞ்சம் சிரமமான நிலை என்னவென்றால், கடன் பாக்கியைத் தள்ளுபடி செய்வார்களா என்று விவசாயிகள் எதிர்பார்க்கிற சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இதனால் கடன் வசூலாகவில்லை. இப்படிக் காலங்கழித்து பதில் சொல்லாமல் இருக்கும் போது, ஏதோ சலுகையை நீங்கள் அளிக்கிறீர்கள் என்று நினைத்து, 10 கோடி ரூபாய் அளவுக்கு கடன் பாக்கியைத் தள்ளுபடி செய்வார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படித் தள்ளுபடி செய்தால், அசலை ஒரே தவணையில் தர வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். ஒரு காலத்தில் நகையை வைத்தாவது, நிலத்தை வைத்தாவது கடனைத் திருப்பிக் கொடுத்தார்கள். இப்போது அப்படி திருப்பிக் கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலை வந்துவிட்டது. அரசாங்கத்துக்குச் சங்கடம் இருந்தால், அவசியம் இருந்தால், தள்ளுபடி செய்வார்கள் என்ற நிலை ஏற்பட்டு விட்டது.

இப்படி ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு கூட்டுறவுச் சங்கம் அரசாங்க இலாக்காவாக, ஆளும் கட்சியின் தலையீட்டுக்கும் செல்வாக்குக்கும் இலக்காக மாறியிருக்கிறது என்ற துரதிருஷ்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவு சீர்கேடுகள் இருக்கின்றன. இதைத் திருத்த வேண்டுமென்று பல தரப்புகளிலிருந்தும் ஆலோசனை வந்தபோது, 'காம்ப்ரஹன்சிவ் லெஜிஸ்லேஷன்' வேண்டுமென்று சொன்னார்கள். இது நிறைவேறியது 1983ல், மூன்றாண்டுகள் ஆகியது. ஆனால் சட்டத்தின்படியான விதிகளைத் தயாரிக்க முடியாமல் இப்பொழுதும் ஒரு அரசாங்கம் இருக்குமா என்று தெரியவில்லை. புதிய சொத்து ஒன்றும் தயார் செய்ய வேண்டியதில்லை. ஏற்கெனவே கூட்டுறவுச் சங்கங்களுக்காக சட்டம் இருக்கிறது. அந்த விதிமுறைகளில் சில மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று ஒரு அண்டர் செகரட்டரியிடம் சொன்னால் கூட, அவர் ஒரு வாரத்தில் 'டிராப்ட்' போட்டு கொடுத்துவிடுவார். நீங்கள் அதைப் பரிசீலனை செய்யலாம். இதைச் செய்யாததற்குக் காரணம் அரசியல் நோக்கம் இருக்கிறது. விதிகளைக் கொண்டுவந்து சட்டத்தை அமுல்படுத்த அரசு தயாராக இல்லை. இது ஒரு நியாயமான காரணமாக இல்லை. அரசு சட்டத்தை மாற்ற வேண்டுமென்று நினைத்தால் மாற்றலாம். எப்படி நகரசபை, பஞ்சாயத்துத் தேர்தல்களுக்காக பல்வேறு நிலைகளை உருவாக்குவதற்காக அடிக்கடி சட்டத் திருத்தங்கள் இங்கே செய்யப்பட்டன என்பதைப் பார்க்கிறோம். ஆகவே இதையும் அதுமாதிரி பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசு இதை வெளிப்படையாகச் சொல்லாமல் நான் கருதிக்கொண்டிருப்பதால் கூட்டுறவுத் துறை சீர்கெட்டுவிட்டது. தயவு செய்து இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்படியென்றால், சர்வகட்சித் தலைவர்களைக் கலந்துபேசி, இடையூறுகளை நிவர்த்தி செய்ய முயற்சிக்கலாம். கூட்டுறவுச் சங்கம் என்பது அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இல்லாவிட்டால், நாம் எதிர்பார்க்கும் பலன் ஏற்படாது. இன்னொன்று, எனக்குத் தெரிந்த தகவலைச் சொல்கிறேன். கூட்டுறவுச் சங்கங்களுக்கு 'இன்டர்னல் ஆடிட்' நடப்பது என்ன ஆயிற்று, எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்பதுபற்றி ஒன்றுமே புரியவில்லை. டிபார்ட்மெண்ட் அட்மினிஸ்டிரேடிவ் ரிப்போர்ட் வரலாம். அதைப் பார்த்து இந்தத் துறை எப்படி இயங்குகிறது என்பதைப் பார்க்கலாம். அந்த ரிப்போர்ட்டில், 'இன்டர்னல் ஆடிட்' பரிந்துரைகளில் என்ன 'ரிமார்க்ஸ்' என்று தெரியவில்லை. எனக்குத் தெரிந்தவரையில் பொதுக் கணக்குக் குழு ஒரு சிபாரிசைச் செய்திருக்கிறது. அது என்னவென்றால், 1982-83-ம் ஆண்டுக்





கணக்குகளைப் பரிசீலித்த பிறகு

In the circumstance the Committee reiterates its earlier recommendation that all Co-operative Societies and other institutions receiving substantial financial assistance or which have received financial assistance should be subjected to supplemental audit by the Indian Audit Department also.

ஏற்கெனவே ஒரு ஆடிட் செய்திருக்கப்பட வேண்டும். கூடுதலாக மத்திய அரசு ஆடிட்டுக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு கிரைட்டீரியா இருக்கின்றது.

The Government may fix suitable monetary limits for the purpose, say, 50 lakhs and above.

இது என்ன ஆயிற்று? ஏன் இதைச் செய்யவில்லை? ஏன் இதைச் செய்யத்

(பிற்பகல் 1-15)

தயங்குகிறார்கள்? இதையெல்லாம் செய்தால், அரசுக்கு இது மிகவும் அனுகூலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்யாமல் இருப்பதால், அரசாங்கத்திற்கும், ஆளும் கட்சிக்கும் அவதூறு தான் ஏற்படுமே தவிர, நன்மை எதுவும் ஏற்படாதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இதை ஏன் அரசு செய்யக்கூடாதென்றுதான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, ஆதி திராவிடர் சமுதாயத்தினருக்கும், பழங்குடி மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்திருக்கிறார்கள். ஆனால் அவற்றில் பல சங்கங்கள் செயல்படாமலிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல 'defunct' -ஆக இருக்கின்றன. சாத்தூரில் தீப்பெட்டித் தொழில் தொடர்பாக 35 சங்கங்கள் இருக்கின்றன. என்றாலும் அவற்றில் ஆறு, ஏழு தான் செயல்படுகின்றன என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. எனவே எத்தனை கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன என்று புள்ளிவிவரங்களைச் சொல்லிப் பயனில்லை. அவற்றில் எத்தனை செயல்படுகின்றன என்று பார்க்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும்போது, ஒன்றைச் சொன்னார்கள். கிராமப்புறங்களில் விவசாயிகளுக்கு உதவி செய்கிற வகையில் காய்கறி உற்பத்தி செய்கின்ற கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பித் திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், அவை சத்துணவுக் கூடங்களுக்கு காய்கறிகளை வழங்குவதற்கு ஆளும் கட்சியைப் பயன்படுத்திக்

[எம். பி. சுப்பிரமணியம்] [1986 ஏப்ரல் 25

கொண்டிருக்கும் சிலருக்குத்தான் பயன்படுகிறதேயொழிய, நிச்சயமாக அவை விவசாயிகளுக்குப் பயனளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான், ஆளும் கட்சி மீது குறை சொல்வதாக நினைக்க வேண்டாம். கூட்டுறவுக் கூடங்களில் இச்சங்கங்கள் மூலம் விற்கப்படும் காய்கறிகளின் விலைக்கும், வெளியே விற்கப்படும் காய்கறிகளின் விலைக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. இவை விவசாயிக்கும் போய்ச் சேரவில்லை. குழந்தைகளுக்கும் மலிவான விலையில் காய்கறிகள் கிடைக்கவில்லை. கட்சியைப் பயன்படுத்திக்கொள்ளும் சிலருக்குத்தான் அது பலனளிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உண்மையில் மக்களுக்கு உதவி செய்வதற்காகத்தான் என்று சொன்னால், இதுபோன்ற கூட்டுறவுச் சங்கங்களை நகரங்களில் ஆரம்பித்திருக்கலாம். நகரங்களில்தான் நாள்தோறும் பல கோடி ரூபாய்க்கு விற்பனையாகின்றன. ஆனால் இப்போது கிராமங்களில் உள்ள இச்சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு—விவசாய உற்பத்தி செய்கிறவர்களுக்கு—எந்தவிதமான இலாபமும் நிச்சயமாக இல்லை என்பதை நன்றாக உணர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. தமிழ் நாட்டில் "Public Distribution System" எல்லா கிராமங்களிலும், நகரங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நடந்துகொண்டிருக்கின்றது. இவற்றின்மூலம் இன்றியமையாப் பண்டங்களை விநியோகம் செய்வது குறித்து பெருமையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தியாவிலேயே தமிழ் நாடுதான் இதில் முதன்மை இடத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மகிழ்ச்சிக்குரிய செய்திதான். எல்லா ஊரிலேயும் சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் சங்கங்கள் மூலமாக விநியோகிக்கப்படுகிற பண்டங்கள் நமக்கு நியாயமான முறையில், நேர்மையான முறையில், சரியான முறையில் கிடைக்கின்றனவா என்றால், இல்லை என்றே குறிப்பிட விரும்புகிறேன். சர்க்கரையாக இருந்தாலும் சரி, பாமாலின் எண்ணெயாக இருந்தாலும் சரி, அவை சரியாக, செம்மையாக விநியோகம் செய்யப்பட வில்லை. இதுபற்றி ஆய்வு செய்து இவற்றிலுள்ள குறைகளைப் போக்கு வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் நாடுதான் சிறப்பாகச் செயல்படுவதாகக் கூறி மத்திய அரசு சான்று கூறியிருந்தால், இதைவிட மற்ற மாநிலங்கள் இன்னும் மோசம் என்றுதான் சொல்ல முடியுமே தவிர, இங்கே நன்றாக இருக்கிறதென்று சொல்ல முடியாது மற்ற மாநிலங்களில் பெரிய அளவில் மோசமாக நடந்து கொண்டிருக்கிற தென்றுதான் சொல்லலாம். நிச்சயமாக நான் குறிப்பிட விரும்புகிறேன், இவை நமக்கு மகிழ்ச்சிதரத்தக்க அளவில் நடைபெறவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். தயவுசெய்து இதைப் பரிசீலனை செய்து வரும்



1986 ஏப்ரல் 25] (திரு. எம். பி. சுப்பிரமணியம்)

காலங்களில் அரசு விரும்புகிறபடி, சோஷலிச சமுதாயம் ஏற்படுகிற காலம் வருகிறபோது, எல்லா மக்களுக்கும் நியாயமான முறையில் இன்றியமையாப் பண்டங்கள் கிடைக்க வேண்டுமென்று சொன்னால், இதன்மூலமாகத்தான் முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இவை நியாயமான 'மெஷினரி'-யாக இருக்க வேண்டுமானால், இவற்றின்மீது நாம் போதிய கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளை யெல்லாம் கலைத்துவிட்டு, அவ்விடங்களில் அதிகாரிகளைப் போட்டிருக் கிறார்கள். கூட்டுறவுச் சட்டங்களில் பயிற்சி பெற்றவர்களை அதிகாரிகளாகப் போட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு அதிகாரியும் இரண்டு, மூன்று சங்கங்களைப் பார்க்கலாம் என்று போட்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் தற்காலிக மாகப் போட்டிருக்கிறார்கள். கூட்டுறவு சங்கத் தேர்தல் நடந்து, புதிய தலைவர்கள் வந்து விட்டால், இவர்கள் பிரச்சினை என்னாவது? இவர்களுக்கு நிரந்தரமாக வேலை கொடுக்கப்படுமா? அப்போது அவர்களும் ஒரு பிரச்சினையாகிவிடுவார்கள். "எங்களுக்கு நிரந்தரமாக வேலை கொடுங்கள்,

(பிற்பகல் 1-20)

கொடுங்கள்" என்று சொன்னால் அரசு என்ன செய்ய இருக்கிறது? சத்துணவு மையத்திலே லட்சக் கணக்கான பேர்களுக்கு வேலை கொடுத்து விட்டோம், என்று மகிழ்ச்சியாகச் சொல்கிறார்கள். ஆனால் நான் பத்திரிகையிலே பார்க்கிறேன். ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு, சமையல் வேலை செய்ய யார் வருவார்கள்? 100 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு வேலை செய்ய யார் வருவார்கள்? இப்போது அவர் களுடைய வேலையை நிரந்தரமாக்குங்கள், கட்டுப்படியாகக் கூடிய சம்பளத்தைக் கொடுங்கள் என்று சொன்னால், அரசு செலவு செய்யும் பணம் எல்லாம் அவர்களுடைய சம்பளத்திற்கே சரியாகப் போய்விடும். இதை யெல்லாம் முன்கூட்டியே சிந்திக்காமல், பெரிய விபரீதங்களை அரசு சந்திக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஒரு லட்சத்திற்கு மேற்பட்டவர் களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய 'மினிமம் வேஜஸ்' கொடுப்பதாக இருந்தால், மாதத்திற்கு 600 ரூபாய் 700 ரூபாய் கொடுக்க வேண்டுமென்றால்— சாதாரணமாக கடைநிலை ஊழியர் சம்பளத்தைக் கொடுக்க ஆரம்பித்து விட்டால், அரசு செலவு செய்யும் 160 கோடி ரூபாயிலே பெரும் பகுதி அவர்களுடைய சம்பளத்திற்காகச் செலவழிக்க வேண்டி வரும். இதை அரசு முன்கூட்டியே சீர்தூக்கிப் பார்த்து, சிந்தித்து, திட்டங்களை நிறை

வெற்றுவதற்குரிய நிர்வாக இயந்திரங்கள் என்ன செலவு செய்ய வேண்டும், எப்படி இருக்க வேண்டும், இன்று எப்படி இருக்கும், நாளை எப்படி இருக்கும் என்பதைச் சிந்தனை செய்யாமல் செய்ததன் விளைவுகளை இன்று அரசு சந்தித்துக் கொண்டிருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

600, 700 பேர்கள் பி.காம்., பி.ஏ. படித்தவர்கள், டிரெயினிங் ஸ்கூலில் கோவாபரேடிவ் டிரெயினிங் படித்துவிட்டு வேலைக்கு வருகிறார்கள். ஓராண்டு காலத்திற்குப் பிறகு அவர்களை வீட்டுக்குப் போ என்று அரசு சொல்ல முடியுமா? அவர்கள் போராட்டம், தர்ணா, உண்ணாவிரதம் என்று ஆரம்பித்து, அரசியல் ரீதியாக அதற்கு ஒரு முடிவு காண வேண்டுமென்ற பிரச்சினையை அரசு வளர்க்கிறதே தவிர, பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு சரியான அணுகுமுறையைக் கையாளவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அரசியல் கட்சியினுடைய தலையீடு இல்லாமல், எந்தக் காலத்திலே இந்தக் கூட்டுறவு இயக்கம் அதிலிருந்து விடுபடுமோ அன்றுதான் கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் நடக்கும் என்பதை நான் இங்கே குறிப்பிட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் பல நல்ல கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். அதே நேரத்தில் குறைகளைச் சொல்ல வேண்டிய நேரத்தில் அவைகளை எடுத்துச் சொன்னார்கள் அல்லது அவைகளை எப்படிக் களைய வேண்டுமென்பதையும் சொன்னார்கள். அந்த நல்ல கருத்துக்களை ஏற்று இந்தத் துறையில் இருக்கும் ஒருசில குறைபாடுகளை நிவர்த்தி செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு எங்களைப் பொறுத்தவரை, மிகத் தெளிவாக ஒரு அணுகுமுறையை வைத்திருக்கிறோம். மக்கள் ஆளுகின்ற வாய்ப்பை எங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதிகாரிகளை வைத்து ஆளுவதானாலும் சரி, அல்லது எந்த வகையினாலும் சரி, மக்கள் எங்களுக்கு ஆளும் வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே தவறு ஏற்படும் நேரத்தில், அதைச் சுட்டிக்காட்டும் ஒரு நல்ல வாய்ப்பினை எதிர்க் கட்சிகள் பயன்படுத்துகின்றன. குறைகளை ஆளும் கட்சிதான் பார்த்துச் சொல்ல வேண்டும்; எதிர்க் கட்சிகள் பார்த்துச் சொல்லக் கூடாது; அவர்கள் சொன்னால், நாங்கள் கேட்கமாட்டோம் என்ற வாதத்திற்குள் நான் போகவில்லை. ஆளுகின்ற பொறுப்பில் நாங்கள்





இருக்கிறோம். எதிரணியில் இருக்கிறவர்கள் இருக்கிற குறைகளை சரியான நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரும்போது, அவர்கள் மக்களுக்குச் செய்கின்ற நல்ல தொண்டு என்ற உணர்வோடுதான் நாங்கள் அணுகுவோமே தவிர, அவர்களைப் பார்த்து அதற்காக கோபப்பட வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் யாராக இருந்தாலும், அத்தனை பேரும் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற உணர்வோடுதான் இங்கே வந்திருக்கிறோம். ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கொள்கையிலே, ஒவ்வொரு வழி முறைகளை வைத்துக்கொண்டு வந்திருக்கிறோமேயொழிய. மக்களுக்கு இன்னார்தான் நன்மை செய்வார்கள், இன்னார் நன்மை செய்ய மாட்டார்கள் என்ற உணர்வோடு நாங்கள் இல்லை. இந்த அரசும் இல்லை என்பதை மட்டும் நான் இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில், இந்தத் துறை எந்த அளவுக்கு மிகச் சிறப்பாக வளர்ந்திருக்கிறது என்பதை எல்லாம் நாங்கள் இங்கே சொல்லியாக வேண்டும். காரணம் 1977-ல் மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவர் ஆட்சியை ஏற்ற நேரத்தில், மத்தியக் கூட்டுறவு வங்கி அல்லது மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் மொத்த வைப்புத் தொகை 168 கோடி ரூபாயாக இருந்தது. ஆனால் இன்றைக்கு அது 223 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், நாட்டு மக்கள் எங்களுடைய ஆட்சிக் காலத்தில் இந்தத் துறை மீது எந்த அளவுக்கு மரியாதையும், நம்பிக்கையும் வைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். எந்த அளவுக்கு வைப்புத் தொகையை அந்த வங்கிகள் பெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மட்டும் நான் இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாணயம் இல்லாமல் அவைகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று சொன்னால், இந்தத் துறை சீர்கெட்டிருக்கிறது; இந்தத் துறையிலே பணம் போட்டால், அது தங்களுக்குத் திரும்ப வராது என்ற எண்ணம் மக்கள் மத்தியிலே தோன்றி இருக்குமானால், இந்தத் துறைக்கு இவ்வளவு பெரிய ஆதரவு தந்திருக்காது என்பதை மட்டும் நான் இங்கே இருக்கிற உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். 1977-ல் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற நேரத்தில், நகர்ப்புற வங்கியோகம் 147.23 கோடியாக இருந்தது. இன்றைக்கு 1985-86-ல் அது 600 கோடியைத் தாண்டியிருக்கிறது என்று சொன்னால். இந்த நாட்டு மக்கள் நகர்வோர் அங்காடிகளை எப்படி மதிக்கிறார்கள் என்பதை மட்டும் நான் உதாரணமாகச் சொல்ல முடியும்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 1-25)

மத்திய அரசிலிருந்து வருகிறவர்களும் மற்ற மாநிலங்களிலிருந்து வருகிறவர்களும் நம்மைப் பார்த்து பெருமையோடு பேசுகிறார்கள். "ரேஷன் கடைகளை நடத்துவதைப் பொறுத்த வரையில், வேறு எந்த மாநிலத்தையும் விட இங்கேதான் நீங்கள் திறமையாக நடத்துகிறீர்கள்" என்றும் "இங்கேதான் சரியான முறையில் நடத்தப்படுகிறது" என்றும் சொல்லுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், வேறு மாநிலங்களை விட கூட்டுறவு இயக்கம் இங்கேதான் சிறப்பாக இருக்கிறது. வேறு மாநிலத்தைச் சார்ந்தவர்கள் நடத்துவதை விட இங்கே உள்ள நமது அதிகாரிகள் கூட்டுறவு இயக்கத்தைச் சிறப்பாகவும் திறமையோடும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே, 1985—86 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடனாக ரூ. 130 கோடி மட்டும் கொடுப்பதாக இருந்தோம்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, புள்ளிவிவரங்களைக் கொடுத்து ரூபாய் பெருக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். 1967 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் வருவாய் எவ்வளவு? இப்போது எவ்வளவு? 1977 ஆம் ஆண்டில் ரூபாயின் மதிப்பு என்ன? இன்றைக்கு அதன் மதிப்பு என்ன என்பதையெல்லாம் ஒப்பிட்டு, அமைச்சர் அவர்கள் சொல்லுவதற்குத் தயாரா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** ரூபாயின் மதிப்பைக் குறைப்பதற்கும் கூட்டுவதற்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்துள்ள கட்சியும் அவர்கள் ஆட்சியில் உள்ள மத்திய அரசும்தான் காரணம். என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், ஏற்கெனவே ரூ. 178 கோடி மட்டும் வைப்பு நிதியாக இருந்த நிலைமை மாறி, இன்றையதினம் ரூ. 223 கோடி அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்றால், அது தானாகக் கூடிவிடுவதில்லை. மக்கள் அந்த அளவுக்கு இந்த ஆட்சி மீதும் இந்த இயக்கத்தின் மீதும் நம்பிக்கை வைத்துக் கொண்டிருப்பதால்தான் வைப்பு நிதியில் பணம் போடுகிறார்கள். அரசுத் துறையில் ஊழல் இருந்தால், அல்லது இந்தத் துறை சீர்கேடு அடைந்துள்ளது என்று மக்கள் எண்ணினால்,





எங்களைப் பார்த்து, வைப்பு நிதியில் பணம் போடுவதற்கு பயந்திருப்பார்கள், ஆனால் அதற்கு மாறாக எங்கள் மீது நம்பிக்கை வைத்திருப்பதால்தான், அதிகமாகப் பணம் போட்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். விலைவாசி கூடியிருக்கிறது என்றும் சொல்லப்பட்டது. அப்படியே இருந்தாலும்கூட, ரூ. 147 கோடியிலிருந்து ரூ. 600 கோடி அளவுக்கு எந்தக் காரணத்தாலும் உயர முடியாது. துறை சிறப்பாகச் செயல்படுவதன் காரணமாகத்தான், இந்த அளவுக்கு உயர முடிந்தது என்பதை மீண்டும் வலியுறுத்திக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசு ஓரளவுக்கு நியாயமாக நாணயமாக நடப்பதால்தான், இந்த அளவுக்குச் சிறப்பாக வளர முடிந்திருக்கிறது என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே 1985—86 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனாக ரூ. 130 கோடி மட்டும்தான் கொடுத்தோம். இந்த ஆண்டு ரூ. 160 கோடி கடனாகக் கொடுக்க இருக்கிறோம். அதாவது எங்களுக்கு இருக்கிற சிரமங்களையெல்லாம் தாங்கிக்கொண்டு விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், இந்தத் தொகையை நாங்கள் உயர்த்தியிருக்கிறோம். அதைப் போலவே மத்திய காலக் கடனாக ரூ. 20 கோடி இந்த ஆண்டில் தர இருக்கிறோம். மேலும் நீண்டகாலக் கடனாக சென்ற ஆண்டு ரூ. 20 கோடி கொடுத்திருந்தோம். அதை மாற்றி இந்த ஆண்டு ரூ. 25 கோடியாகக் கொடுக்க இருக்கிறோம். எங்களுக்கும் நிறைய சிரமம் இருக்கிறது. வசூல் செய்வதில் சிரமம் இருக்கிறது. என்றாலும்கூட நாட்டு மக்களுக்கு நாம் நல்லது செய்ய வேண்டும் என்று எங்களின் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் செயல்பட்டு வருவதற்கு இது ஒரு சான்று என்று மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏழைகளுக்கு நகை ஈட்டுக் கடனாக ஏற்கெனவே 300 கோடி ரூபாய் அளவுக்குக் கொடுப்பதற்கு முன் வந்திருக்கிறது. மத்திய அரசினுடைய சுய நிதியிலிருந்து இந்த அளவுக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறோம் என்றால், மக்களுக்கு அதிலும் குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு சரியான நேரத்தில் உதவி செய்ய வேண்டும் என்று முயற்சி எடுத்துக் கொண்டதன் அடிப்படையில், இதைச் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எவ்வளவு செய்தாலும், மத்திய வங்கியின் கடன் நிலை மிகவும் அதிகமாக இருக்கிறது. இதற்குக் காரணம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும் போது சொன்னார்கள். அரசாங்கத்திலிருந்து சலுகையைச் சொல்ல

தான் இப்படி இருக்கிறது என்றார்கள். வாதத்திற்காக நான் அதை ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டாலும், நாங்கள் கூடுதல் வட்டி, அபராத வட்டி என்று அதிகரித்தபோது அரசியல் வாதிகள் என்ன சொன்னார்கள் தெரியுமா? "எம். ஜி. ஆர். அரசு பயந்துவிட்டது. வட்டியைத் தள்ளிவிடுவார்கள். ஆகவே கட்டாதீர்கள்" என்றார்கள். அந்த வாதம் பொதுமக்களிடம் எடுபட்டது. அதன் காரணமாகத்தான் இந்த நிலைமை ஏற்பட்டது. கூட்டுறவு இயக்கம் என்பது ஏதோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டும் சொந்தமானது அல்ல. ஒரு காலத்தில் காங்கிரஸ் ஆட்சியிலும் இந்த இயக்கம் இருந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதும் இந்த இயக்கம் இருந்தது. இப்போது நாங்கள் இந்த அரசாங்கத்தை நடத்துகிறபோதும், இந்த இயக்கம் இருக்கிறது. இப்படி அரசாங்கம் என்பது கால வெள்ளத்தில் வந்து போகிற ஒன்றாக இருக்கும் போது, கூட்டுறவு இயக்கம் என்பது இங்கே எப்போதும் இருக்கிற இயக்கமாகும். அதில் எந்த விதமான மனமாச்சர்யமும் இல்லாமல் பொதுமக்களுக்கான இயக்கம் இது என்று உணர்ந்து அரசியல் கட்சிகள் இந்த இயக்கத்தை அணுகினால்தான், நல்ல எதிர்காலம் இந்த இயக்கத்திற்கு இருக்குமே ஒழிய, இல்லையென்றால் இது பயன்படாது. இந்த இயக்கத்தைப் பொறுத்த வரையில், குற்றங்குறைகளைச் சொல்லிக் கொண்டே இருந்தால் அல்லது வேண்டாத விஷயங்களைப்பற்றி வெளியே சொல்லிக் கொண்டிருந்தால், நிச்சயமாக இந்த இயக்கம் வளருவதற்கு அது உறுதுணையாக இருக்காது என்பதைத் திட்ட வட்டமாக இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்னும் எத்தனையோ விவசாயிகள் கடனைத் திரும்பக் கொடுக்க முடியாத நிலையில் சிரமப்படுவதாகச் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக தஸ்தாவேஜுகளைக் குறைக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். அதன் காரணமாகத்தான் அதிகமான லஞ்ச லாவண்யம் அதிகரித்திருக்கிறது என்று சொல்லப்பட்டது. அதையும் குறைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டார்கள். அந்தவகையில் நாங்களும் தஸ்தாவேஜுகளைக் குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், போர்டு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறது. ஏற்கெனவே நீண்ட காலக் கடன் எவ்வளவு வசூலாகிறதோ அதே அளவுக்கு மீண்டும் கடன் கொடுக்கலாம் என்று இருந்தது. இப்போது இந்த ஆண்டில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால். நீங்கள் கடன் வசூலில்



(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

போதிய கவனம் செலுத்தவில்லை என்று சுட்டிக்காட்டி இந்த ஆண்டிலிருந்து நீங்கள் வசூல் செய்வதில் 75 சதவீதம்தான் கடன் கொடுக்கலாம் என்று சொல்லிவிட்டார்கள். அதாவது 100 ரூபாய் வசூல் செய்தால் 75 ரூபாய் தான் கொடுக்கலாம் என்று தங்கள் அறிக்கையில் போர்டு தெரிவித்திருக்கிறது.

(பிற்பகல் 1-30)

இதையெல்லாம் எங்கள் மத்தியிலே எவ்வளவு வேகமாகச் சொல்கிறார்களோ அதே உணர்வோடு மேல் மட்டத்திலே சொல்லும் நேரத்தில், இருக்கின்ற பிரச்சினைகளை சரியாகப் புரிந்துகொள்ள முடியும். பிரச்சினைகள் நமக்கு மட்டும் உள்ள பிரச்சினைகள் அல்ல. இந்தியா பூராவும் 1,600 கோடி ரூபாய் பாக்கி இருக்கிறது என்று கூட்டுறவு அமைச்சர்கள் மாநாட்டிலே சொன்னார்கள். பிரச்சினைகள் எல்லோருக்கும் இருந்தாலும், அரசியல் வாதிகளின் தலையீடு இங்கே இருப்பதால்தான், நம்மாலே எந்த வசதியும் செய்ய முடியவில்லை என்பதை உறுப்பினர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில், எடுத்துக்காட்டான துறையாக சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று கடந்த ஓராண்டுக் காலத்திலே நிறைய திருத்தங்களைச் செய்திருக்கிறோம், தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதிகாரிகளுக்கு அடைக்கலமாக எதிர்க் கட்சியினர் வந்துவிட்டார்கள். இன்றைக்கு நாங்கள் ஆளுங் கட்சியாக இருக்கலாம். அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்றால், எந்த அரசாங்கமாக இருந்தாலும் கண்டிக்க வேண்டும். தி.மு.க. அரசாங்கமாக இருந்தாலும், காங்கிரஸ் அரசாங்கமாக இருந்தாலும், தவறு செய்பவர்களைக் கண்டிக்க வேண்டும். அப்படிக் கண்டிக்கும் நேரத்தில் அதிகாரிகள் அரசியல்வாதிகளின் அடைக்கலத்திற்குள்ளே போய், அவர்கள் எழுதிக் கொடுப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொல்லுவது நல்ல ஆரோக்கியமாக இருக்காது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இந்தத் தவறுகள் எல்லாம் பொதுமக்கள் பிரதிநிதிகள் வந்தால்தான் தீரும் என்பதிலே எங்களுக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. அதிகாரிகள் தவறு செய்தால், அவர்கள் மாறுதல் ஆகி வேறு ஊருக்குப் போவார்கள். ஆனால் அரசியல்வாதிகள் தவறு செய்தால், இவர்தான் குற்றம் செய்தவர் என்று சொல்லி, பொது மக்களின் ஏச்சுக்கு ஆளாவார்கள் என்ற பயம் இருக்கும். அதிகாரிகள் அப்படியல்ல. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், ஒரு தீர்க்கமான எண்ணத்தோடுதான் இருக்கிறார்கள். இந்த ஓராண்டுக் காலத்திற்குள் தேர்தலை நடத்தியேயாக வேண்டும், பொதுமக்கள் பிரதிநிதிகள் வந்தேயாக வேண்டும். அது எந்தக் கட்சியாக இருந்தாலும் நல்லவர்களாக வர வேண்டும் என்ற உணர்வோடுதான் இருக்கிறோம் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான வாதத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே வைக்கிறார்கள். அரசாங்க அதிகாரிகள் இலாக்காவை விட்டு எங்கேயும் போக முடியாது. தவறு செய்திருந்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். அரசியல்வாதிகள் மந்திரியாக இருக்கலாம், அல்லது இல்லாமல் போகலாம். வாதத்தை திருப்பிப் பேசுகிறார் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதிகாரிகள் தவறு செய்தால், அவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது, ஏன் ஊரை விட்டு அவர்கள் போக வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லிய வாதம் சரி. அதிகாரிகள் தவறு செய்யும்போது, அவர்களை வேறு ஊருக்கு அனுப்புகிறோம், அவர்கள் தவறு செய்த ஊரில் இருப்பதில்லை. ஆனால் திரு. எம். பி. எஸ். அவர்களோ, நானோ மற்ற உறுப்பினர்களோ, ஒரு சென்ட்ரல் பேங்கின் சேர்மனாக இருந்து ஏதாவது தவறு செய்தால், அவற்றைச் சுட்டிக்காட்டி பொதுமக்கள் கேட்க முடியும். ஆனால் அதிகாரிகள் தவறு செய்யும்போது, அவர்களைத் தட்டிக் கேட்க பொதுமக்கள் தயாராக இல்லை. ஆனாலும் நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். கணேசன் பேச்சை கன்னிப் பேச்சு என்று சொன்னார்கள். அதை நான் ஏற்கமாட்டேன். ஆனால் கன்னி கழிந்த பேச்சாகத்தான் பேசிக் கொண்டிருந்தார்கள். மேலவைக்குப் புதியதாக வந்தாலும், நாடாளுமன்றத்திலே உறுப்பினராக இருந்து எதையெதை எப்படிப் பேச வேண்டும் என்பதைத் தெரிந்து வைத்திருப்பவர். இன்றைக்கு இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது பேசும்போது, அவர் "ஏற்கனவே கூட்டுறவுச் சங்கத்திலே இருந்தேன்" என்று சொன்னதால், புதிய கொள்கைகளை, புதிய அணுகுமுறையைச் சொல்லியிருந்தால், நான் உள்ளபடியே அவரைப் பாராட்டியிருப்பேன். புள்ளிவிவரத்தை வைத்துக்கொண்டு வெறும்





கூட்டுறவு யூனியனில் நடந்த விஷயங்களைப்பற்றி மட்டும் பேசினார்கள். நான்கைந்து பேரிடம் டெண்டர் கேட்டுதான் கொடுக்கிறோம். டெண்டர்களுக்கு என்று ஒரு கமிட்டி இருக்கிறது. அந்தக் கமிட்டி 'அப்ரூவல்' கொடுத்திருக்கிறது என்று சொல்கிறார்கள். குறைந்த டெண்டரை ஏற்றுக்கொண்டால், பிறகு எல்லா இடத்திலேயும் இதே பிரச்சினை வரும். அதிலேகூட சில தவறுகள் நடந்திருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இரண்டு, மூன்று தவறுகளை ஒரே நேரத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஓட்டல் விவகாரங்களைப் பார்க்கும்போது, காஞ்சி ஓட்டலிடமும் டெண்டர் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் 100 ரூபாய் என்று டெண்டர் கொடுத்த நேரத்தில், இவர்களுக்கு 90 ரூபாய் என்று விட்டிருக்கிறார்கள். இதிலே தவறு இருந்தால், நிச்சயமாக ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுப்போம் என்பதை பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கொடியைப்பற்றிச் சொன்னார்கள், கட்சிக் கொடிக்கே 12 ரூபாய், 15 ரூபாய் கொடுத்து வாங்குகிறோம். காங்கிரஸ் கட்சிக்குக் கொடிக்கு மூன்று வண்ணம்தான் வேண்டியிருக்கிறது. நான்கூட அதிகாரிகளைப் பார்த்து கண்டித்துச் சொன்னேன். இந்தக் கொடியில் ஏழு கலர்களை வைத்திருக்கிறீர்களே, ஒரு நாள் மழை பெய்தால்கூட எல்லா கலரும் போய்விடுமே, அப்படி சாயம் போய்விட்ட கொடியைப் பார்த்து இந்தக் கூட்டுறவுச் சங்கமும் இப்படித்தான் சாயம் போயிருக்கும் என்று பொது மக்கள் சொல்வார்களே என்று சொல்லி, அதிகமாகப் பணம் ஆனாலும் பரவாயில்லை, இதற்காக நல்ல துணியாகப் பார்த்து வாங்குங்கள் என்று எடுத்துச் சொன்னதின் அடிப்படையில், இந்தச் செலவு கூடியிருக்கும். இந்த டெண்டர்களைத் தரவில்லை என்பதற்காக அதிலே தவறுகள் இருக்கின்றன என்று சொல்லுவதற்குப் பதிலாக விரைவாக டெண்டர்களைத் தாருங்கள் என்று கேட்டால், நிச்சயமாகக் கொடுப்போம். நிச்சயமாக உங்களுடைய உணர்வுக்கு மரியாதை கொடுப்போம் என்று சொல்லுகிறேன்.

(பிற்பகல் 1-35)

கையேடுகளைப்பற்றி இங்கே சொல்லியிருக்கின்றார்கள். இந்தக் கையேடுகளை நாங்கள் தனியார் அச்சகத்திலே அச்சடிக்கவில்லை. சென்னையிலே கூட்டுறவு அச்சகத்திலேதான் அச்சடித்திருக்கிறோம். அந்தக் கூட்டுறவு அச்சகத்திலே பணம் இல்லை என்ற காரணத்தினால், ரூ. 2 லட்சம் அட்வான்ஸ் தொகை கொடுத்திருக்கின்றார்கள். அந்தக் கையேடுகள் விலை ரூ. 2 தான் இருக்கும் என்று நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கின்றீர்கள். அந்தக் கையேடுகள் விலை ரூ. 1.82 பைசாக்கள்தான் ஆகியிருக்கின்றது.

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கோ-ஆப்பரேடிவ் இன்ஸ்டிட்டியூஷன்களுக்கு, எல்லா இடங்களிலும் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் அதைச் செய்தோம்.

**திரு. எல். கணேசன் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எத்தனை லட்சம் பிரதிகள் அச்சடிக்கக் கொடுக்கப்பட்டன? அதிலே அச்சடிக்கப்பட்டு திரும்பப்பெறப்பட்ட பிரதிகள் எத்தனை? எத்தனை ஆயிரம் பிரதிகள் விநியோகிக்கப்பட்டன என்பதை எல்லாம் அருள்கூர்ந்து அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 2 லட்சம் பிரதிகள் அடிக்கக் கொடுத்திருக்கின்றார்கள். அதைக் கொடுக்கின்ற நேரத்தில், கூட்டுறவு வார விழா கொஞ்சம் பின்னாலே வந்த காரணத்தினாலே, எல்லா இன்ஸ்டிட்டியூஷன்களுக்கும் கொடுத்துவிட்ட பிறகு வருகின்ற வாடிக்கையாளர்களுக்குக் கொடுத்திருக்கின்றார்கள். அதனுடைய சாராம்சம் என்னவென்றால், இந்தக் கூட்டுறவுத் துறையைக் காப்பாற்றுவதா, இன்னின்ன வங்கி இன்னின்ன இயக்கங்கள் இப்படியெல்லாம் நடக்கின்றன, இந்த இயக்கங்களைக் காப்பாற்றுவதா இல்லையா என்று ஆய்ந்து பார்த்து அதிலே அவைகள் இருக்கவேண்டும் என்று சொல்லி அந்த விவரங்களைச் சேர்த்து வைத்திருக்கிறோம். எல்லா இன்ஸ்டிட்யூஷன்களுக்கும் கொடுத்திருக்கிறோம். தனிப்பட்ட முறையில் ஒன்றும் செய்யவில்லை. எத்தனை வங்கிகள் இருக்கின்றனவோ, எத்தனை இன்ஸ்டிட்டியூஷன்கள் இருக்கின்றனவோ அவைகள் எல்லாவற்றிற்கும் கொடுத்திருக்கிறோம் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஓட்டல் காஞ்சி பற்றிச் சொல்கிறேன். அந்த ஓட்டல்காரர் ரூ. 100 என்று நிர்ணயித்தார்கள். அதையெல்லாம் நாம் சரிபார்த்துத்தான் கொடுத்திருக்கிறோம். கேட்டதால் மட்டும் தனியாரிடத்திலே நாம் கொடுத்துவிட முடியாது. மூன்று, நான்கு பேர்கள் கொண்ட கமிட்டி அதற்காக இருக்கிறது. அவர்கள் ஒரு கமிட்டியாக இருந்து பார்க்கின்றார்கள். அந்தக் கமிட்டியெல்லாம் சரிபார்த்துத்தான் கொடுக்கின்றார்கள். அவர்கள் கேட்டால் போதும் என்று கொடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் உறுப்பினர் அவர்கள் அதிலே ஏதோ தவறு இருப்பதாகச்



சொல்கின்றார்கள். அப்படித் தவறு ஏதும் இருந்தால், அதற்கான டெண்டர் பற்றிய விவரங்கள் எல்லாம் இருந்து கொடுப்பார்கள் என்றால் நிச்சயமாக நாம் நடவடிக்கை எடுக்கலாம் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். எங்களுக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லமாட்டேன். தவறுகள் நடைபெறுகின்ற நேரத்தில், சுமுகமான முறையில் சொன்னால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்க, அது ஏதுவாக இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். உறுப்பினர் அவர்கள் பேசும்போது, திருநெல்வேலியில் உள்ள பிரச்சினைபற்றி எடுத்துச்சொன்னார்கள். அவர் பக்கத்திலே இருக்கின்ற உறுப்பினர் அவர்கள்கூட சொன்னார்கள். அவர்கள் சொல்லியிருப்பது நடந்தது என்று சொன்னால், அதன் மீது நடவடிக்கை எடுக்க இருக்கிறோம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் சொல்வது அசெம்பிளியிலேகூட அல்ல, கவுன்சிலிலேகூட அல்ல, ஏதாவது சொல்ல வேண்டும் என்றால், சட்ட மன்ற உறுப்பினர்கள், எம்.எல்.சி.க்கள் தவறுகள் நடக்கும்போது, என்னிடம் நேரில் சொன்னால்கூட, அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும். அதிகாரிகள் செய்திருந்தாலும் நடவடிக்கை எடுக்கிறோம். அந்த அதிகாரிகள்கூட காங்கிரஸ் அதிகாரிகளாக இருக்கின்றார்கள். திராவிட முன்னேற்றக் கழக அதிகாரிகளாக இருக்கின்றார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் வந்தவர்கள் நிறைய பேர்கள் கிடையாது. அவர்களுடைய காலத்திலே அப்பாயின்ட்மெண்ட் செய்யப் பட்டவர்கள்தான். நாங்கள் ஒருவரையும் 'அப்பாயின்ட்' செய்யவில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகள் தி.மு.க. என்றும், காங்கிரஸ் என்றும் சொல்வது எப்படி? அது எப்படிப் பொருந்தும்? அவர்கள் அரசினுடைய அதிகாரிகள்தான். கட்சியினுடைய அதிகாரிகள் என்று சொல்வது அவ்வளவு சரியாக இருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளுக்கு நான் கட்சிச் சாயம் பூசவில்லை. அவர்கள் காலத்திலே தான் உண்டாக்கப்பட்டவர்கள் என்று சொன்னேன். அவர்களுடைய காலத்திலே 900 பேர்களை உண்டாக்கியிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி அம்மாள் அவர்கள் காங்கிரஸ் காலத்தில் போடப்பட்ட அதிகாரிகள் எல்லாம் ஓய்வு பெற்றிருப்பார்கள் என்று சொல்கின்றார்கள்.

**திருமதி வி. ஜெயலட்சுமி :** எல்லோரும் என்று சொல்ல முடியாது. 'Most of them' என்று சொல்லலாம்.

**திரு. சி. இராமலிங்கம் :** காங்கிரஸ் காலத்தில் போடப்பட்டவர்கள் கற்றுத் தந்த வேலைதான் இப்போது இருந்துகொண்டிருக்கின்றது. பாரம்பரியமாக அது வருகிறது.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே. இப்போது அந்தச் சண்டையை நிறுத்திக்கொள்ளலாம். பகல்நேரம். நான் பேசி முடித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய நேரத்தில், அதிகாரிகளை மாற்றியதாகச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத் தில் திரு. பாலசுப்பிரமணியம் என்பவரை அவர்கள் அங்கே மூன்று ஆண்டு காலத்திற்கு மேல் பணியாற்றிவிட்டதால், மாற்றியிருக்கிறோம். அதுபோலவே சந்திரசேகரபுரம் பண்டக சாலையில் சுந்தரராஜ் என்பவரை அவர்கள் மூன்று ஆண்டுக்காலம் அங்கே பணியாற்றிவிட்டதால், அவர்கள் மாற்றப்பட்டிருக் கின்றார்கள். மதுரையிலே பாண்டியன் என்பவர். 1980-ல் அவர்கள் அடிக்கடி லீவ் போட்டிருந்தார்கள். உடல்நலக்குறைவு காரணமாக லீவ் போட்டிருந்ததால், அந்த நிர்வாகம் சரியாக இருக்காது என்ற அளவிலேதான் அவர்களை நாங்கள் மாற்றியிருக்கிறோம். நிர்வாகக் காரணத்திற்காக மட்டுமே நாங்கள் அதிகாரிகளை மாற்றியிருக்கிறோம். அவர்களை மாற்றுவதால் எங்களுக்கு எந்தவிதமான லாபமும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் டெக்ஸ்டைல் மில்ஸ் பற்றிச் சொன்னார்கள். 125 மில்கள் 'அப்ரூவ்' செய்யப்பட்டது பற்றி எல்லாம் சொன்னார்கள். நாங்கள் அப்படிப் பார்க்கின்ற காலத்திலே அந்த 125 மில்கள் சரியாக இருக்கின்றனவா என்று பார்த்தபோது, சந்தேகப்பட்டுத்தான் அதை நாங்கள் குறைக்க வேண்டும் என்று சொல்லி, அரசாங்கமும் அதில் முடிவெடுத்திருக்கின்றார்கள். அது எங்களுடைய கவனத்திற்கு வரவில்லை. நாம் தான் அதைப்பற்றி அரசுக்கு அனுப்பி பார்க்கச்சொல்லியிருக்கிறோம். அதுபற்றி கன்சுமர் பெடரேசன் சிபாரிசு செய்து, ஆபிசர்கள் சிபாரிசு செய்து, செக்ரெட்டரி எல்லாம் சிபாரிசு செய்த பிறகுதான் 'அப்ரூவ்' செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இப்போது 38 மில்களில்



(பிற்பகல் 1-40)

வாங்கலாமென்று வைத்திருக்கிறோம். அந்த மில்களைச் சரிபார்ப்பதைவிட, எந்த எந்த மில்களின் துணிகள் சரியாக விற்பனையாகவில்லை என்று அறிக்கை வாங்குகிறோம். அதிலே தவறு நடக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். அதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இருக்கிறது. தவறுகளை நாங்கள் குறைத்திருக்கிறோம். அப்படி தவறுகளைக் குறைக்கும்போது, அப்ரூவல் கிடைக்காத மில்காரர்கள் தவறான எண்ணத்தோடு உறுப்பினர் அவர்களிடம் சொல்லியிருக்கலாம். பல மில்காரர்களை 'அப்ரூவ்' செய்யமாட்டோம் என்று சொல்லியிருக்கிறோம். சந்திரசேகரபுரம் சொசைட்டி 45 இலட்சம் ரூபாய் நஷ்டத்தில் இருக்கிறது. காரணம், அவர்கள் டெக்ஸ்டைல் வாங்கியிருக்கிறார்கள். கடலூரில் ஸ்டோர்ஸ் 30 இலட்சம் ரூபாய் நஷ்டத்தில் இருக்கிறது. அதற்குக் காரணம் டெக்ஸ்டைல் தான். எனவே டெக்ஸ்டைல் வாங்குவதைக் கன்ட்ரோல் செய்ய வேண்டு மென்பதற்காக நாங்கள் நல்லது செய்ய, அதை நீங்கள் குறை சொல்லி யிருக்கிறீர்கள். சலுகை கிடைக்காதவர்கள், அதைக் குற்றமாகச் சொல்லும் போது, மாண்புமிகு உறுப்பினர்கள் அதுபற்றி எங்களிடம் கேட்டால் விளக்கம் சொல்ல முடியும். அது ஒன்றும் 'கான்பிடன்ஷியல்' அல்ல. யார் வேண்டு மானாலும் வருகிறார்கள். அறிக்கையைப் பார்த்து 'அப்ரூவ்' செய்கிறோம் என்பதை இந்த அவையில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு சாப்பாட்டுப் பிரச்சினையில் 600 பேர் என்று சொன்னார்கள். மொத்தம் 1,000 பேர் என்று இருக்கிறது என்று சொன்னார்கள். 950 பேர் வரைக்கும் இருக்கிறது. 60 பேர் தனியாகப் பணத்தை வாங்கியிருக்கிறார்கள். அதிலே 1,000 பேர் கலந்து கொண்டிருக்கிறார்கள். அதிலே 60 பேர் சென்னை வாசிகள் தனியாகப் பணத்தை வாங்கியிருக்கிறார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

600 என்று சொன்னார்கள். கணக்கில் ஆயிரம் என்று இருக்கிறது. அட்டென்டன்ஸ் ரிஜிஸ்டர் இருக்கிறது. ஒவ்வொரு ஏ.சி.சி.எஸ்.ல் இருந்து வருபவர்கள் சைன் செய்து, டி.ஏ. க்ளெயிம் செய்து, அதை கணக்கில் ஏற்றினால்தான் கொடுக்க முடியும். உத்தேசமாகக் கொடுக்க முடியாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, மந்திரி அப்படி, இப்படி என்று சொல்கிறார்கள். நாங்கள் 3 தலை முறைகளாகத் தொழில் செய்கிறவர்கள். எங்கள் வீட்டில் ஐ.டி. கட்டாத ஆட்களே கிடையாது. என் கடைசி மகனும், மகளும் தான் ஐ.டி. கட்டாதவர் கள். ஒரு சென்ட் நிலம் வாங்கினாலும் நீங்கள் விட்டாலும், ஐ.டி. துறை விட

மாட்டார்கள், 3 தலைமுறைகளாக நாங்கள் ஒழுங்காகத் தொழில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இது பஞ்சத்திற்காக வந்த வேலை, பரம்பரையாக வந்த வேலையில்லை என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எல். கணேசன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே பல விளக்கங்களைத் தந்தார்கள். அதற்கு ஒரு வகையிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் எழுப்பிய பிரச்சினைகளுக்கு பதில் சொல்ல சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூட்டுறவுத் துறையில் இருக்கிறார்கள். அந்தத் துறை இருக்கிறது. பிரச்சினைகளுக்கு பதிலை அதிகாரிகள் மூலம் பெற்று, இங்கே விரைவாகப் பதில் அளிக்க முடிகிறது. ஆனால் துறையோடு சம்பந்தமில்லாத, வேறொரு துறைக்குப் பொறுப் பேற்றுள்ள, எங்கள் பகுதியைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் திரு. வீராசாமி அவர்கள் என்னைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட்டார்கள். . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசி முடித்த பிறகு, உறுப்பினர் அவர்கள் பேச வாய்ப்பு தருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தஞ்சாவூர் சண்டை இங்கேயும் தீரவில்லை. சட்டப் பேரவையிலும் அதுதான், இங்கேயும் அதுதான். . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தஞ்சாவூர் பிரச்சினையைத் தீர்க்க தஞ்சாவூர்க்காரனாகிய நானே இங்கே அமர்ந்திருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவரவர்களே, காலையிலே இருந்து தஞ்சாவூர் இங்கே டாமினேட் செய்துகொண்டிருக்கிறது. காலையிலே இருந்து பார்க்கிறேன்.

The whole district of Thanjavur is dominating the Legislative Council from this morning.

திரு. ஆர். டி. சீத்தாபதி : துணைத் தலைவரவர்களே, தஞ்சாவூர் பிரச்சினைக்கு உரியதாகிவிட்டது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு அமைச்சரவர்கள், தஞ்சைக்கு அவப் பெயர் வருவதாக அதைச் சொல்ல வேண்டாம். தஞ்சாவூர்க்காரர்கள் அடித்துக்கொள்பவர்களல்ல. தஞ்சாவூர்க்காரர்கள் அறிவுபூர்வமாகச் சிந்தித்து, மற்றவர்கள் பிரச்சினையைத் தீர்க்கிறவர்கள்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தஞ்சாவூர்க் காரர்களுக்கு அறிவு இருக்கிறது என்பதை அவர் சொல்லித் தான் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். (சிரிப்பு).





திரு. க. மீனாட்சிசுந்தரம் : அமைச்சர் ஒப்புதலுக்கு நன்றி.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் சொல்லிய நேரத்தில், பாரதி கமிஷன் பற்றிச் சொன்னார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவரும் தஞ்சாவூர்க்காரர்.

(பிற்பகல் 1-45)

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மரியாதைக்குரிய திரு. எஸ். ஆர். இராதா பாரதி கமிஷன் பற்றி குறிப்பிட்டார். அதுகுறித்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தவறு செய்யும் இடங்களுக்குச் சென்று கண்காணிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதற்காகத்தான் தமிழ்நாடு பூராவும் உள்ள அத்தனை கன்ஸ்யூமர் ஸ்டோர்களில் உள்ள எஸ்.ஓ.-க்களை எல்லாம் வரச் சொல்லி கணக்குப் பார்த்தபோது, 3 ½ கோடி ரூபாய்க்கு மேல் 'டெபிசிட்' இருந்தது. முதலில் குறைந்த அளவு தான் இருக்கும் என்று நினைத்த நாங்கள் 5 ஆயிரம், 10 ஆயிரம் என்கிற முறையில் அந்தத் தொழிலில் நடை பெற்றிருக்கக் கூடிய முறைகேடுகளை எல்லாம் பார்த்து, காரணமானவர்களை 'சஸ்பெண்ட்' செய்து நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். தவறு செய்கிறவர்கள் யாராக இருந்தாலும், பாரபட்சம் பார்க்காமல் சஸ்பென்ஷன் செய்து விட்டு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். இன்னார் இவ்வளவு தவறு செய்திருக்கிறார் என்பதற்கான அறிக்கையையே தயார் செய்து வைத்திருக் கிறோம். தவறு செய்தவர் இன்னார் என்கிற அடிப்படையில், நாங்கள் யாரையும் விடுவதாக இல்லை. மேலும் எப்படி எல்லாம் அவர்களிடமிருந்து வேலை வாங்க முடியுமோ அப்படி எல்லாம் வேலை வாங்கிக் கொண்டிருக் கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிகமாக பணம் ஒதுக்க வேண்டும் என்றார்கள். அதையும் முடிந்தவரை செய்துகொண்டு தான் இருக்கிறோம். காரணம் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பார்த்தசாரதி குறிப்பிட்டதைப்போல, அது தான் நம்முடைய பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையானது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாய விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்றார்கள். விவசாய விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைப் பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம் என்பதை நான் தெரி வித்துக்கொள்கிறேன்.

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்] [1986 ஏப்ரல் 25

கொடுக்கப்படும் கடனை வசூல் செய்வதில் மட்டும் பார்த்து வசூல் பண்ண வேண்டும் என்றார்கள். கடன் கொடுத்து விட்டு, பிறகு அதனை நாட் திருப்பி வசூல் செய்கிறபோது, கடன் வாங்கியவர்கள் அதைத் திரும்பக் கட்டுகிற நிலையில் இருக்கிறார்களா என்பதைப் பற்றி கவனம் செலுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கையும் மேற்கொண்டிருக்கிறோம். அதுபோல் மார்க்கெட் விலை குறைவதற்கு ஏற்பவும் உயர்வதற்கு ஏற்பவும் நிலைமையை கவனித்து உற்பத்தியாளர்களுக்கு நன்மையளிக்கும் வகையில் தேவையான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை சிறப்பு அங்காடி பற்றிச் சொன்னார்கள். அதன் விற்பனை 32 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கிறது. தமிழகத்தில் அது இரண்டாம் இடத்தில் இருக்கிறது. அதிலே இருக்கின்ற குறைபாடுகளைப்பற்றி உறுப்பினர்கள் எழுதிக் கொடுத்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் 24 மணி நேரமும் அங்கே மருந்துக்கடை இருப்பதாகத்தான் எனக்கு ஞாபகம், நானே அங்கே 'இன்ஸ்பெக்ஷன்' பண்ணியிருக்கிறேன்.

சூரியகாந்தி எண்ணெயைப் பொறுத்தவரையில், இங்கே உறுப்பினர் குறிப்பிட்ட குறை சரிதான். எண்ணெய் எடுக்கும் அளவுக்கு அது நன்றாக இல்லாததால், சூரியகாந்தி மற்றும் பருத்திக் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுக்காமல் விட்டு விடுங்கள் என்று சொல்லி, அதன் மீது உத்தரவு போட்டிருக்கிறோம்.

அதுபோல் கூட்டுறவுப் பண்ணை அமைக்க வேண்டும் என்றார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் சிக்கல் இருந்ததால், அதை நிறுத்தியிருக்கிறார்கள். நிச்சயமாக இங்கே சொல்லிய நல்ல கருத்துக்களுக்கு உரிய மரியாதை கொடுக்கப்படும்.

வருவாய் இல்லாத வறட்சிக் காலத்தில் வசூல் வேண்டாம என்றார்கள். கடன் கொடுப்பது மட்டும் தான் நாங்கள். ஆனால் தள்ளிப் போடுவது, வசூல் செய்யாமலிருப்பது எல்லாம் நிதியமைச்சரைச் சார்ந்தது. ஆதலால் அவரிடம் இதுபற்றிச் சொல்லியிருக்கிறோம்.

சாலரி லோன் ரூ. 2 ஆயிரத்தை அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்றார்கள். ஏராளமான பேர்களுக்குக் கொடுக்க வேண்டியிருப்பதால், ரூ. 2 ஆயிரத்தை உயர்த்திக் கொடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் நடைமுறையில் முடியும் என்பதற்கான சாத்தியக் கூறு இருக்கும் பட்சத்தில்



1986 ஏப்ரல் 25] [திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எம்.எல்.ஏ.க்களுக்குக் கொடுத்துவிட்டு எம்.எல்.சி.க்களை எந்த விதத்திலும் நாங்கள் மறந்துவிடவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோலப்பா பேசிய நேரத்தில் சலவைத் தொழிலாளர் இணையம் வேண்டும் என்றார்கள். அவர்களுக்கு இருக்கும் குறையை நீக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-50)

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பார்த்தசாரதி பேசுகிற நேரத்தில், திட்டப்பணிகளுக்காக அதிக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். கூட்டுறவு சங்கங்களைப் பொறுத்தவரை டோக்கன் புரோவிஷன்களாக 1,000 ரூபாய், 1,000 ரூபாய் என்று தான் போட்டுக் கொண்டிருப்போம். ஆகையினால் புள்ளி விவரத்திலே குறை இல்லை, கூட்டிப் பார்த்தால் கணக்கில் அதிகமாக இருக்கும் என்பதைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். திட்டப் பணிகளுக்கு 13.18 கோடி ஒதுக்கியிருக்கிறோம். மற்ற தொகைகளையும் சேர்த்தால், அதிகமாகத் தான் இருக்குமே தவிர, குறைவாக இருக்காதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் கருத்து நல்ல கருத்து. திட்டப் பணிகளுக்கு அதிகமான அளவில் செலவு செய்தால்தான், புதிய திட்டங்கள் வரும். இவற்றைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஏழை மாணவர்களுக்கு புதிதாக நிறைய வேலை வாய்ப்புகள் அளிக்கும் வகையில், கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கூறினார்கள். ஆண்டுதோறும் இந்தத் துறை மூலமாக எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்துவருகிறோம், இனியும் செய்வோம் என்று கூறிக்கொள்கிறேன்.

பள்ளி, கல்லூரிகளில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் இலாபம் மாணவர்களுக்குப் போய்ச்சேர்கிற மாதிரி செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதன்மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது புதிதாக பெண்கள் மட்டுமே பணிபுரியும் கூட்டுறவு வங்கிகளை மாநிலத் தலைநகரில் ஏற்படுத்தியிருக்கிறோம். அவற்றை மாவட்ட அளவிலும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பழங்குடியினர் பிரச்சினை மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது கூட்டுறவுத் துறை சீர்கெட்டிருப்பதற்குக் காரணம் அரசாங்க அதிகாரிகள் என்று சொன்னார்கள். அதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கங்களுக்கு எல்லாம் தேர்தல்கள் வேகமாக நடந்து, பொது மக்கள் பிரதிநிதிகள் வரவேண்டும்; அவ்வாறு வந்தால்தான், இங்கே பேசப்பட்ட பிரச்சினைகள் தீரும் என்றெல்லாம் சொன்னார்கள். அதற்கான நடவடிக்கைகளை நிச்சயமாக அரசு எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்கள் நிர்வாகம் இந்த அளவுக்கு சீர்கெட்டிருப்பதற்குக் காரணம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது அவற்றின் பதவிகளைப் பிடிக்க வேண்டுமென்பதற்காக அவர்கள் செய்த செயல்கள்தான். நாங்கள் அப்படிச் செய்யாமல், உங்களுடன் கலந்துகொண்டு, புதிய சட்டங்களை, விதிகளைப் போட்டிருக்கிறோம். யாராக இருந்தாலும் நிச்சயமாகத் தவறு செய்யக்கூடாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

உயர்மட்டக் குழு அறிக்கை மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பணம் கம்மியாக இருந்தால், பரவாயில்லை, ஏறத்தாழ நூறு கோடி ரூபாய்க்கு மேல் இருப்பதால், எதைச் செய்யலாம், எதை விடலாம் என்று பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். உயர்மட்டக் குழு சொல்லியதில் கொஞ்சம் கொஞ்சமாகச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாத்தூர் தீப்பெட்டிக் கூட்டுறவுச் சங்கங்கள் சரியாக இயங்கவில்லை என்று சொன்னார்கள். அதற்குக் காரணம் மத்திய அரசின் கொள்கையில் ஏற்பட்ட மாறுதல்கள்தான். இப்பிரச்சினைகள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். புதிய கொள்கையின் காரணமாக அங்கே மிகவும் போராட்டமாகவே இருந்து கொண்டிருக்கிறது. அது என்னுடைய துறையின் கீழ் வரவில்லை. சம்பந்தப்பட்ட அமைச்சருடன் கலந்து பேசி நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



காய்கறி சங்கங்கள் பற்றிச் சொன்னார்கள். இதில் பேசிக்-ஆக தவறு நடந்திருக்கிறது. காய்கறி உற்பத்தி நிறைய இருக்கிறதாவென்று பார்த்து ஆரம்பித்திருக்க வேண்டும். ஒன்றியத்திற்கு 1, 2, 3 என்று போட்டிருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தில் காய்கறி சங்கங்களில் தேவையான அளவுக்கு காய்கறிகள் உற்பத்தியாகாத காரணத்தால், வெளியிலேதான் வாங்க வேண்டியிருக்கிறது. வியாபாரம் செய்வது போல்தான் இப்போதிருக்கிறது. தேவையான காய்கறிகளில் பாதியளவுக்குத்தான் விவசாயிகள் மத்தியில் வாங்கிக்கொண்டிருக்கிறோம். எனவே இதன் நடைமுறைகளைப் பரிசீலித்து நடைமுறையை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கங்களில்தான் பொருள்களை வாங்க வேண்டுமென்று உணவு அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்களின் யோசனைகளையெல்லாம் பரிசீலித்து இப்போதுள்ள சிக்கல்களைக் களைய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-55)

தற்போது நுகர்வோருக்கு மிகச் சிறப்பாகச் சேவை செய்து கொண்டிருக்கிறோம். மேலும் சிறப்பாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று சொன்னால் இன்னும் நல்ல கருத்துக்களை உறுப்பினர்கள் இன்னின்ன விதமாகச் செய்யுங்கள் என்று சொன்னால் நன்றாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. எஸ். அவர்கள் பல மாநிலங்களுக்குச் செல்லக்கூடிய வாய்ப்பு உள்ளவர். அவர்கள் அங்கு நல்ல கருத்துக்களைப் பார்த்து இங்கு வந்து சொன்னால், அதை கவனித்து இந்த அரசு செய்யும் என்பதை மட்டும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல் ஜே. ஏ. 900 பேர் பற்றிய பிரச்சினையைச் சொன்னார்கள். நாங்கள் அவர்களை டெம்பரரியாகப் போட்டிருக்கிறோம். காரணம் சி.எஸ்.ஆர்-ஐப் பிரித்த நேரத்தில் அது சரியாக நிர்வாகத்தில் இருக்க வேண்டுமென்ற காரணத்தால், 3 ஏ.சி.எஸ்.களுக்கு ஒரு ஜே.ஏ. டெம்பரரியாக இன்றைக்குப் போட்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரைக்கும், அதில் அரசியல் தலையீடு இல்லாமல் இருந்தால், அது சிறப்பாக இயங்கும் என்ற உணர்வு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே இருக்கிறது என்ற செய்தியைச் சொல்லிக் கொள்கிறேன். இன்றைக்கு நல்ல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். தவறுகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதற்காக நாங்கள் எப்போதும் கோபிக்கமாட்டோம். அவைகளைச் சொல்லும்

விட்டார்கள் என்று நான் நினைக்கவில்லை, என்னுடைய பெயரைக்கூட இது வரை அந்தமாதிரி விழாக்களில் போட்டதில்லை. அதனாலே அதில் கட்சி பாகுபாடு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

(திரு. எல். கணேசன் குறுக்கீடு.)

துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல விரும்புவது, ஆளும் கட்சியில் இருக்கிற என்னைக்கூட சென்னை மாவட்டத்தில் இதுவரை கூட்டுறவுத் துறையில் நடந்த விழாக்களுக்கு அழைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : உறுப்பினர் அவர்கள் இப்போது என்ன சொல்கிறார்கள்? அவர்கள் சொல்வதைப் பார்த்தால், அம்மையார் அவர்கள் பெயரையும் போடாமல் விட்டுவிடலாம் என்று சொல்கிறார்கள்.

(பிற்பகல் 2-00)

**திரு. எல். கணேசன்** : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பல்வேறு விளக்கங்களை தந்தார்கள். நான் அதற்குள் போக விரும்பவில்லை. என்னைக் குறித்து மாண்புமிகு அமைச்சர் திரு. வீராசாமி அவர்கள், இது அவருடைய துறையாக இல்லாமல் இருந்தும் கூட, அவரே முன்வந்து ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ஏதோ நான் அங்கம் வகித்த அல்லது தலைமைப் பொறுப்பு வகித்த தஞ்சை மாவட்ட பால் வழங்கு கூட்டுறவு இணையத்தில் நான் பொறுப்பு வகித்தபோது, ஊழல் நடந்தது என்று சொல்லி, அந்த ஊழலைப்பற்றிப் பொதுமக்கள் பேசுகிறார்கள் என்றெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள்.

நான் அந்தப் பதவியிலிருந்து விலகிய பிறகு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, ஒரு அதிகாரியைப் போட்டு, அதற்குப் பிறகு மறு அதிகாரியைப் போட்டு, அதற்குப் பிறகும் அடுத்த அதிகாரியைப் போட்டு எல்லா வகையிலும் முயற்சி செய்து கோவாப்பரேட்டிவ் சொசைட்டீஸ் ஆக்ட்-ன் கீழ் என்னைக் குறித்து அதிகாரிகளை நிர்பந்தித்து செக்ஷன் 65 படி ஒரு என்கொயரி நடத்தினார்கள். அதுவும் சாதாரணமாக ஜாயின்ட் ரெஜிஸ்ட்ராரால் நியமிக்கப்பட்ட அதிகாரியைக் கொண்டு 'என்கொயரி' நடத்தவில்லை. பொதுவாக டி. ஆர். அல்லது ஜே. ஆர். தான் என்கொயரி கமிஷன் அமைப்பார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரையில், அதற்கு மாறாக ரெஜிஸ்ட்ரார் ஆப் கோவாப்பரேட்டிவ் சொசைட்டீஸ் மூலமாக ஒரு டீம் ஆப் ஆபீசர்களைப் போட்டு என்னைப்பற்றி விசாரணை செய்து எப்படியாவது எனக்கு சர்ச்சார்ஜ் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று அந்த அதிகாரிகளை நிர்பந்தப்படுத்தி நோட்டீஸ் கொடுத்தார்கள். நோட்டீஸ் கொடுப்பது குறித்து எ[illegible] ஸ்ட்ரார் ஆப் கோவாப்பரேட்டிவ்



சொசைட்டீஸ் சர்க்குலர் ஒன்று இருக்கிறது. அப்படிக் கொடுப்பது என்றால் அது நீதிமன்றத்திற்குப் போகும்போது நிற்கக் கூடிய வகையில் இருந்தால்தான் சர்ச்சார்ஜ் நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது.

"To issue surcharge notice on flimsy grounds should be avoided." அப்படி விதி இருந்தும்கூட, அதை அதிகாரிகள் சுட்டிக் காட்டிய பிறகும்கூட, அதைப்பற்றி "இப்போதைக்கென்ன, அது பற்றி நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளலாம், இப்போது சர்ச்சார்ஜ் நோட்டீசை இஷ்யூ பண்ணுங்கள்" என்று சொல்லி அவர்களை நிர்ப்பந்தப்படுத்திக் கொடுத்தார்கள். அந்த சர்ச்சார்ஜ் நோட்டீஸ் வந்த பிறகு, அதிலும்கூட "ரொட்டீன் பிசினஸ் டிரான்சாக்ஷன்" என்கிற முறையில் "பால் அனுப்பப்பட்டு கெட்டுப் போனது அந்த வகையில் நீ பணம் கட்ட வேண்டியது அல்லது நீ பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்னால் வாராக் கடன் — இர்ரெக்கவரபிள் டெட்ஸ் —" இவைகளையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு சர்ச்சார்ஜ் போட்டு அது முதல் கட்டத்திலேயே டி. ஆர். அவர்களால் — குவாசி ஜுடீசியல் ஆபீசர் என்ற முறையில் —அந்த நோட்டீஸ் கைவிடப்பட்ட பிறகு, அதற்கு மேலே டிரிபியூனலுக்கு அது போய் அது அங்கேயும் தள்ளுபடி செய்யப்பட்டது.

At the very first hearing, the whole charge was dropped and, if they have got guts, they should have proceeded in Criminal Courts. அவரைப் போல் சொல்ல வேண்டுமானால் — மன்னிக்க வேண்டுகிறேன் —

* * *

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : உறுப்பினருக்கு ஒன்றை விளக்க விரும்புகிறேன். அவையில் உள்ள உறுப்பினர்களைப்பற்றி யாரும் தனிப்பட்ட முறையில் குறை சொல்லக்கூடாது என்பது விதி. அதாவது உறுப்பினர்கள் அமைச்சர்கள் மீதோ அல்லது அமைச்சர்கள் உறுப்பினர்கள் மீதோ தனிப்பட்ட முறையில் குறை சொல்லக்கூடாது என்று இருக்கிறது. ஒரு உறுப்பினர்மீது தனிப்பட்ட முறையில் ஏதேனும் குறை சொல்ல வேண்டுமென்றால், அந்தக் குறையை முன்கூட்டியே தலைவரிடம் எழுதிக் கொடுத்து, அதைத் தலைவர் உறுப்பினரிடம் காட்டி "உங்கள்மீது இத்தகைய குறை சொல்லப்பட்டிருக்கிறது" என்று சொல்லி, அவர் அதற்குப் பதில் சொல்லி அதற்கு மேல்தான் இங்கே வந்து குறையை எடுத்துச் சொல்ல வேண்டும். எனவே ஓர் உறுப்பினர் அமைச்சர் மீதோ அல்லது அமைச்சர் ஒரு உறுப்பினர் மீதோ தனிப்பட்ட முறையில் இங்கே குறையைச் சொல்லிக் கொண்டிருந்தால், அதற்குப் பிறகு அவையில் பொதுவான நிகழ்ச்சிகள் எதுவுமே நடக்க முடியாது. இன்றைக்கு அமைச்சர் உறுப்பினர்மீது குறை சொல்லிவிட்டார். குறை சொல்லிவிட்டார் என்ற காரணத்திற்காக அதை நான் அவைக் குறிப்

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

நேரத்தில் சுமுகமாக இருந்தால், கேட்பதில் எங்களுக்கும் சந்தோஷமாக இருக்கும். பின்னர் சாவகாசமாக எங்களை அதுபற்றி கேட்பதற்கும் சுமுகமான நிலை வரும். குறைகளை உறுப்பினர்கள் என்னிடம் நேராக வந்தும் சொல்லலாம். இன்ன தேதியில் அதிகாரிகளிடத்தில் குறைகளைச் சொன்னதற்கு அதை அவர்கள் சரி செய்யவில்லை என்று என்னிடம் கூறினால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும் என்பதை மட்டும் சொல்லிக்கொண்டு, உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களைச் சொன்னதன் அடிப்படையில் நிச்சயமாக சிறப்பான பணிகளை நாங்கள் செய்ய முடியும் என்பதை இந்த நேரத்தில் பணிவோடு சொல்லி இந்தக் கொள்கைக் குறிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன், நன்றி.

திருமதி வி. ஜெயலட்சுமி: துணைத் தலைவரவர்களே, பொதுவாக விவாதத்தில் 'கிளாரிபிகேஷன்' கேட்க வேண்டுமென்ற மரபு இருந்தாலும்கூட அமைச்சர் அவர்கள் தெரியும் என்று சொன்னதால் நான் அதில் தலையிடும் நிர்பந்தம் ஏற்பட்டுவிட்டது. . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: திரு. சித்தாபதி அவர்கள் சொல்கிறார்கள், மாண்புமிகு திருமதி ஜெயலட்சுமி மட்டும் எப்படிக் கேட்கலாம் என்று. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, திருமதி ஜெயலட்சுமி அவர்கள் குறுக்கிட்டார்கள். அவர்களை "கொஞ்சம் நேரம் இருங்கள், பின்னர் அனுமதிக்கிறேன்" என்று சொன்னேன். ஆகவே அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பிறகு பேசுவதற்கு அனுமதி அளித்திருக்கிறேன்.

திருமதி வி. ஜெயலட்சுமி: துணைத் தலைவரவர்களே, தீப்பெட்டி சேவை கூட்டுறவு சங்கங்கள் சரியாக இயங்கவில்லை என்று மாண்புமிகு திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னபோது, மத்திய அரசின் கொள்கையால்தான் அது சரியாக இயங்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை நான் வன்மையாக மறுக்கிறேன். மத்திய அரசு 1971 லிருந்து ஒரே 'கான்ஸ்டண்ட்' பாலிசியாக கூட்டுறவுத் துறையில் இயங்கி வருகிறது. தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அனைத்திற்கும் 1.75 மில்லியன் தீப்பெட்டிகள் உற்பத்தி செய்யும் அனைத்து தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கும் 1.60 தான் கலால் வரி. மற்ற 'ஏ' கிளாஸ், 'பி' கிளாஸ் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்குத்தான் வரி கூடுதல் என்று சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் இருக்கிற தீப்பெட்டித் தொழிற்சாலைகளாக இருந்தாலும் சரி, குடிசைத் தொழிலாக இருந்து கொண்டிருக்கிற கூட்டுறவுத் துறை தீப்பெட்டித் தொழிற்சாலைகளாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு இதனால், எந்தவிதமான பாதிப்பும் கிடையாது. ஆகவே தயவுசெய்து அமைச்சர் அவர்கள்





அவைக்குத் தவறான தகவல் கொடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசின் கொள்கையால்தான் இந்தத் நட்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. அங்குள்ள அதிகாரிகளுக்கு நிர்வாகத் திறமை இல்லாததால்தான் 36 தொழிற்சாலைகள் 'பங்ஷன்' செய்ய வேண்டிய இடத்தில் 6 தொழிற்சாலைகள் 'பங்ஷன்' செய்து கொண்டிருக்கின்றன. மீதி எல்லாம் நட்டத்தில் மூடப்பட்டுவிட்டன என்பதை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் எம்.எல்.சி.க்களை, அரசு நடத்தும் விழாக்களில் மறந்துவிடுகிறார்கள். முக்கியமான பங்ஷன் மாவட்ட அளவிலே எதுவாக இருந்தாலும், எங்களுடைய பெயரை அதிலும் குறிப்பாக கூட்டுறவுத் துறையிலே போடுவதே இல்லை. முன்னாள் எம்.எல்.ஏ.கள், அங்குள்ள ஒன்றிய செயலாளர்கள். . .

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: துணைத் தலைவரவர்களே, அக்காவுக்கும், தம்பிக்கும் இருக்கிற பிரச்சினையை நாங்கள் தனியாக முடித்துக்கொள்கிறோம். ஆகவே அது இங்கே வேண்டியதில்லை.

திருமதி வி. ஜெயலட்சுமி: துணைத் தலைவரவர்களே, அதே சமயத்தில் ஒவ்வொரு தடவையும் எங்களை வேண்டுமென்றே புறக்கணித்து வருகிறார்கள். முன்னாள் எம்.எல்.ஏ., அங்குள்ள ஒன்றியத் தலைவர்கள் பெயர் எல்லாம் இடம் பெறும்போது, எங்களுடைய பெயர் அங்கே விடப்படுகிறது. நான் குறிப்பிட்ட அதிகாரி, என்னிடம் நான் நேரடியாக அந்த விழாவுக்கு வந்து விட வேண்டுமென்று சொன்னபோது, "ஏன், நீங்கள் கொடுக்கப் போகும் பால்கோவாவையும், காரத்தையும் அங்கு வந்து சாப்பிடுவதற்காக எங்களைக் கூப்பிடுகிறீர்களா?" என்று நான் கேட்டபோது, அவர் "இல்லை, இல்லை ஏதோ தவறாக விடுபட்டுவிட்டது" என்று சொன்னார். நான் அவரிடம் நேரில் பேசும்போது, "வேண்டுமென்றுதான் எங்களுடைய பெயரைப் போடவில்லை" என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். எனவே தயவுசெய்து இனி மேலாவது. . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அம்மையார் அவர்களுக்கு ஒரு குறிப்பு சொல்ல விரும்புகிறேன். அவர்கள் ஒரு சொற்பொழிவையே ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஆர். டி. சித்தாபதி: துணைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் சொல்லியதுபோல், சென்னையில் கூட வேண்டுமென்றே விட்டு

பிலிருந்து நீக்க வேண்டுமென்றால், அது அன்-பார்லிமெண்டரியாகவோ அல்லது அப்சீனாகவோ இருந்தால்தான் நீக்க முடியும். எனவே அமைச்சர் குறையைச் சொல்லியாகிவிட்டது என்ற நிலையில், உறுப்பினர் அந்தக் குறைக்கு விளக்கம் அளிப்பதற்கான வாய்ப்பு இப்போது வழங்கப்பட்டது. ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, உறுப்பினர் அமைச்சர்மீது ஒரு குறையைச் சொல்லி, அவர் அதற்கு ஒரு விளக்கம் அளிப்பது என்றால் — இப்போதே மணி 2 ஆகிவிட்டது, பிறகு 3 அல்லது 4 மணியாகிவிடும் — எனவே இனிமேல் அதுபற்றிப் பேச வேண்டாம்.

(மாண்புமிகு அமைச்சர் திரு. நா. வீராசாமி அவர்கள் எழுந்தார்கள்)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறை சொல்லியாகிவிட்டது. இனிமேல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்வது நியாயமில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உட்கார வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர் கணேசன் எழுந்தார்.)

மாண்புமிகு உறுப்பினர் தம் இருக்கையில் அமர வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். கணேசன் அவர்கள் தனிப்பட்ட முறையில் சொன்ன கடைசி இரண்டு வரிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அவ்வளவுதான். உறுப்பினர் அவர்கள் உட்கார வேண்டும்.

**திரு. மிசா கணேசன் என்கிற ஆர். கணேசன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் பற்றி மாண்புமிகு உறுப்பினர் தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்டினார். அது எனக்குத் தெரியும். எனவே உறுப்பினர் அவர்கள் பிரச்சினைக்குள் போக வேண்டாம். அதைப்பற்றிப் பேச வேண்டாம். அவர் அமைச்சரைப்பற்றி சொன்ன கருத்துக்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

அவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 26—4—1986 அன்று காலை 10-00 மணிக்கு கூடும்.

அவை, பின்னர் ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 2-04)



## 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

207. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் 1983-ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1986) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஆணைய தாள்கள்.

145. தமிழ்நாடு கோழி வளர்ச்சிக் கழகத்தின் 1985-86 ஆண்டு நடவடிக்கைகள் பற்றிய குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

* 146. மைய-மாநில அரசு உறவுகள் குறித்து தமிழ்நாடு அரசின் கருத்துக்கள் மற்றும் நீதிபதி ஆர். எஸ். சர்க்காரியா ஆணைக் குழுவின் வினாப் பட்டியலுக்கான பதில்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

* 147. மைய-மாநில உறவுகள் குறித்த நீதிபதி ஆர். எஸ். சர்க்காரியா ஆணைக் குழு கோரியுள்ள சில குறிப்புகள் மீதான பதில் 1986 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

* 148. சமுதாய நல வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

* 149. நகராட்சி நிர்வாகமும் மாநகராட்சிகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

* 150. 1986-87 ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகமும், மாநகராட்சிகளும் செயல்திறன் பற்றிய குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

* 151. 1986-87 ஆம் ஆண்டிற்கான சமுதாய வளர்ச்சி பற்றிய செயலாக்கத் திட்டம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

* 152. 1986-87 ஆம் ஆண்டிற்கான பேரூராட்சி நிர்வாகம் பற்றிய செயலாக்கத் திட்டம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

---

* 24-4-1986 அன்று மேலவை முன் வைக்கப்பட்டது.

இணைப்பு—I

(394 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 160-க்கான விடையைக் காண்க.)

30—10—1985 அன்று புதுடில்லியில் நடைபெற்ற கூட்டுறவு அமைச்சர்கள் மாநாட்டில் கூட்டுறவுச் சங்கங்களில் தவணை கடந்த கடன் தவணை அதிகரித்துள்ளது பற்றி விவாதிக்கப்பட்டு கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

"இம்மாநாடு, கூட்டுறவுச் சங்கங்களின் தவணை கடந்த கடன் நிலுவை ரூ. 1,600 கோடிக்கும் மேலாக அதிகரித்துள்ளது குறித்து கவலை தெரிவிக்கிறது. வேண்டுமென்றே கடன்களை செலுத்தத் தவறிய அதிக கடன் தவணை நிலுவையிலுள்ளவர்களை முன்னுரிமை அடிப்படையில் இனங்கண்டு கொள்ளப்பட்டு, அவர்கள்மீது சட்டபூர்வ தொடர் நடவடிக்கை எடுத்து நிலுவையினை வசூலிக்க மாநாடு வலியுறுத்துகிறது. இவ்வாறான நடவடிக்கை கூட்டுறவுத் துறையில் கடன் வசூலில் ஒழுங்கு நிலை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையை உருவாக்கும் தற்போதுள்ள தவணை தவறிய கடன்களை வசூலிப்பதற்குகூட கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள புதிய மற்றும் தவணை தவறாத உறுப்பினர்களுக்கு புதிய உண்டாக்கப்படுதல் அவசியமென கருதுகிறது. எனவே, கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள புரிய மற்றும் தவறி தவறாத உறுப்பினர்களுக்கு புதிய கடன்கள் வழங்குவது அவசியமெனவும் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியிடமிருந்து அதற்கான மறுநிதியுதவி கிடைக்கப் பெறுவது அவசியமெனவும் கருதுகிறது."

"வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்யும்போது நிதி அமைச்சரால் அறிவிக்கப்பட்ட விரிவான பயிரீட்டுறுதித் திட்டம் எல்லோராலும் வரவேற்கப்படுகிறது. இத்திட்டம் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பயிர் சேதங்களுக்கு பயிரீட்டுறுதித் திட்டத்தின்மூலம் பாதுகாப்பு கிடைப்பினும் தொடர்ந்து பயிர் சேதங்கள் ஏற்படுவதனால் ஏற்படும், கூடிவரும் தவணை தவறிய கடன்களுக்கு நிவாரணம் அளிக்க ஊரக கடன் கணிப்பாய்வு குழுவின் (Rural Credit Survey Committee) பரிந்துரைக்கிணங்க, தேசிய அளவில் கடன் நிவாரண நிதியை ஏற்படுத்துவது மிகவும் அவசர தேவையென இம்மாநாடு கருதுகிறது."

இணைப்பு—II

[397 ஆம் பக்கத்தில் இனம் 2 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தென்னாற்காடு மாவட்டம், பண்ருட்டி வட்டம், நெல்லிக்குப்பத்திலுள்ள திருவாளர்கள் ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட் என்னும் தொழிற்சாலைக்கு (1) சர்க்கரை, (2) எரிசாராயம் மற்றும் (3) மிட்டாய்த் தொழிற்சாலைகள் ஆக மொத்தம் மூன்று தொழிற்சாலைகள் உள்ளன.



இச்சர்க்கரைத் தொழிற்சாலை மாதமொன்றுக்கு 9.6 மெட்ரிக் டன் எடையுள்ள சர்க்கரையை உற்பத்தி செய்வதோடு நாளொன்றுக்கு 4,000 கிலோ லிட்டர் அளவில் தொழிற்சாலைக் கழிவுநீரை வெளியேற்றுகிறது. எரிசாராயத் தொழிற்சாலையானது மாதமொன்றுக்கு ஆறு லட்சம் லிட்டர் எரிசாராயத்தை (ஆல்கஹாலை) உற்பத்தி செய்வதுடன், நாளொன்றுக்கு நாற்பது லட்சம் கிலோ லிட்டர் நீர்க்கப்பட்ட தொழிற்சாலைக் கழிவுநீரை வெளியேற்றுகிறது. மிட்டாய்த் தொழிற்சாலை மாதமொன்றுக்கு 400 மெட்ரிக் டன் எடையுள்ள மிட்டாயை உற்பத்தி செய்வதோடு, நாளொன்றுக்கு 5.20 லட்சம் லிட்டர் அளவுள்ள தொழிற்சாலைக் கழிவுநீரை வெளியேற்றுகிறது. இம்மூன்று தொழிற்சாலைகளும், 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26வது பிரிவின்கீழ் தங்களுடைய கழிவுநீரை வெளியேற்ற வாரியத்திடம் ஒப்புதல் கோரி விண்ணப்பித்தன. வாரியம் மேற்படி மூன்று தொழிற்சாலைகளுக்கு, தொழிற்சாலைகளின் கழிவுநீரை வெளியேற்றுமுன், வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைக்குட்பட்டு அக்கழிவுநீர் சுத்திகரிக்கப்பட வேண்டுமென்றும் நிபந்தனையின் கீழ் அனுமதி அளித்துள்ளது.

28-3-1986 அன்று தொழிற்சாலையைப் பார்வையிட்டபோது, சர்க்கரை மற்றும் மிட்டாய்த் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரானது மண்துகள்கள் நீக்கும் தொட்டியாலும், எண்ணெய் மற்றும் மசகு எண்ணெய் பிரிப்பானாலும் சுத்திகரிக்கப்பட்டுப் பக்கத்திலுள்ள நீர்ப்பாசன கால்வாயில் விடப்படுகிறது. எரிசாராயத் தொழிற்சாலைக் கழிவுநீரானது, குளிரவைக்கப்பட்டு அம்மோனியச் செய்முறை மூலம் சுத்திகரிக்கப்பட்டு நீர்த்து, நீர்ப்பாசனக் கால்வாயின் அருகேயுள்ள நிலத்தில் பாய்ச்சப்படுகிறது.

சர்க்கரை மற்றும் மிட்டாய்த் தொழிற்சாலைகளிலிருந்து நீர்ப்பாசனக் கால்வாயில் வெளிவிடப்படும் கழிவுநீரானது முடிவில் எரிசாராயத் தொழிற்சாலைக் கழிவுநீருடன் சேர்கிறது. இவ்வாறு ஒன்று சேர்ந்த கழிவுநீர், பாசனக் கால்வாயில் சென்று, கெடிலம் ஆற்றில் இறுதியாகச் சேர்கின்றது. இத்தொழிற்சாலை பார்வையிடப்பட்டபோது கெடிலம் ஆற்றில் நீர் மிகவும் குறைவாகக் காணப்பட்டது. நீரேற்று எந்திரங்கள் இல்லாத விவசாயிகள் கால்வாயில் செல்லும் தொழிற்சாலைக் கழிவுநீரைப் பாசனத்திற்காக நீருடன் கலந்த பின்னர், தங்கள் விளைநிலங்களுக்கு பயன்படுத்திக் கொண்டிருந்தனர். ஒன்று சேர்ந்த கழிவுநீரானது, கரும்பழுப்பு நிறத்தையும், உயிர் இரசாயன உயிரகத் தேவையையும், கரையாத திடப்பொருட்களையும் கொண்டுள்ளது. சுத்திகரிக்கப்படாத தொழிற்சாலைக் கழிவுநீர் நீர்நிலைகளில் வெளிவிடப்படும் போது நிறம் தோன்றுவதோடு பிராண வாயுவைக் குறைத்து நீரை

[1986 ஏப்ரல் 25

தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட வரைமுறைக்
கேற்ப கழிவுநீரை வெளியேற்றாமைக்காக 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு
மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 44 ஆவது பிரிவின்கீழ் இத்தொழிற்சாலைக்
கெதிராக ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கு முகாந்திரம் அளிக்கு
மாறு 29-1-1986 அன்றைய கடிதத்தில் வாரியம் தொழிற்சாலையைக்
கேட்டது. தொழிற்சாலையினர், தற்போதுள்ள சுத்திகரிப்பு முறையை மேம்
படுத்துவதற்காக தேசிய சர்க்கரை நிறுவனத்தாரோடு தொடர்பு கொள்
டிருப்பதாகவும் முழு அளவில் சுத்திகரிப்பு முறையில் நடைமுறைப்படுத்திட
இத்துறையைச் சார்ந்த தேசிய மற்றும் அகில உலக ஆலோசகர்களையும் கூட
நாடியிருப்பதாகவும் அறிவித்துள்ளனர்.

சுத்திகரிப்பு ஆலையை நிறுவுவதற்காக 1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை
அறிக்கையில் ரூ. 1.5 கோடி ஒதுக்கியிருப்பதாகவும் தொழிற்சாலையினர் தெரி
வித்திருக்கின்றனர்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இப்பொருள் குறித்து கண்காணித்து
வருகின்றது.

## இணைப்பு III

[401 ஆம் பக்கத்தில் இனம் 2 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### விளக்க உரை.

தமிழகத்தில் 5.56 இலட்சம் கைத்தறிகளில் 3.82 இலட்சம் கூட்டுறவுத்
துறையில் செயல்பட்டு வருகின்றது. (31—12—1985)

கைத்தறி துணியைவிட விசைத்தறி துணி விலை குறைவாக உள்ளது.
மேலும், கைத்தறியைவிட விசைத்தறிகளில் உற்பத்தி அதிகம். இதன் காரண
மாக, கைத்தறி நெசவாளர்களின் தொழில் பாதிப்பு ஏற்பட்டு அன்றாட
வாழ்க்கைப் பிரச்சனைக்கு ஆளாகின்றார்கள்.

கைத்தறியை பாதுகாக்கும் பொருட்டு, 11 வகையான துணி இரகங்களை
விசைத்தறிகளில் உற்பத்தி செய்யக்கூடாது என பம்பாய் துணி நூல்
ஆணையர் அவர்கள் 15—4—1977-ல் ஓர் அறிக்கையை வெளியிட்டு, அதனை
ஆண்டுதோறும் நீடித்து 31—3—1986 வரை நிலைநிறுத்தி வந்துள்ளார்கள்.
இதனை மீறுபவர்கள் மீது மாநில அரசு வழக்கு தொடர்ந்து செயல்பட்டு
வந்தது. எனவே, விசைத்தறி உரிமையாளர்கள் ஒன்று சேர்ந்து பல சங்கங்
களைத் தாங்களாகவே அமைத்துக்கொண்டு மேற்குறிப்பிட்டுள்ள அறிக்கையை



1986 ஏப்ரல் 25]

செயல்படுத்தக்கூடாதென உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து தடையுத்தரவு பெற்று வந்தனர். இந்த வழக்குகளில் பெரும்பாலானவை கடந்த 11—9—1984-ல் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. இதன் அடிப்படையில் அனைத்து வழக்குகளையும் தள்ளுபடி செய்ய உயர்நீதிமன்றத்தை சேர்ந்த அரசு வழக்கறிஞர் மூலம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

மேலும், கைத்தறி நெசவாளர்களின் நலன் கருதி மத்திய அரசு புதிய துணிநூல் கொள்கையின் அடிப்படையில் 22 இரகங்களை கைத்தறிக்கென ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த அறிக்கை, கடந்த 31—3—1986 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இதனை கைத்தறி நெசவாளர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர். இதனால் கைத்தறி நெசவாளர்களின் நலன் மிக்க முன்னேற்றம் அடைய வாய்ப்புகள் உள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு கடந்த 1—4—1986-ல் கோயமுத்தூர் நகரில் ஒரு தனி அலுவலகத்தை ஆரம்பித்துள்ளது. மாநில அரசும் தன் பங்கில் செயல்பட போதிய அலுவலர்களை நியமிக்க நிதி வசதியை அளிக்க மத்திய அரசைக் கோரியுள்ளது. மத்திய அரசின் அனுமதி இதுவரையிலும் வரப்பெறவில்லை.

இந்நிலையில் சேலம் மாவட்டம் கொமாரபாளையம் டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரீஸ் அசோசியேஷன் கைத்தறி ரக ஒதுக்கீடு ஆணையை செயல்படுத்தக்கூடாதென சென்னை உயர்நீதிமன்றத்தில் இடைக்கால தடையுத்திரவை கடந்த 9—4—1986-ல் பெற்றுள்ளார்கள்.

இவ்வழக்கிற்கு மத்திய அரசு துணி நூல் துறை இணை செயலாளர், கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர், சென்னை மற்றும் மண்டல துணி நூல் அலுவலக இயக்குநர், கோயமுத்தூர், அவர்களும் பிரதிவாதிகளாவார்கள்.

மத்திய அரசு அவ்வப்போது வெளியிடுகின்ற ஆணைகளை தமிழக அரசு செயல்படுத்தி வருகின்றது. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள வழக்கு குறித்தும் அரசு வழக்கறிஞருக்கு தெரிவித்து உயர்நீதிமன்றத்தில் தடையை நீக்க நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு தமிழக அரசு கோரியுள்ளது. இவ்வழக்கிற்கான எதிர் வாக்குமூலத்தை மத்திய அரசும் சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வழக்கு உயர்நீதிமன்றத்தில் தற்போது நிலுவையில் இருப்பதால் அதன் முடிவு தெரிந்த பின் அரசு செயல்படும். மேற்படி வழக்கின் போக்கினை அரசு உன்னிப்பாகவும், அக்கறையுடனும் கவனித்து வருகிறது. லட்சோப லட்சம் கைத்தறி நெசவாளர்களின் துயர் துடைத்து அவர்களின் வாழ்வு வளம் பெற எல்லா முயற்சிகளையும் தவறாது மேற்கொள்ளும்.

## இணைப்பு IV

416 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### கூட்டுறவுத் துறையின் 1986-87 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கம்.

விவசாயிகள், சிறிய கைவினைஞர்கள் மற்றும் இதர நலிவுற்ற பிரிவினர்களின் பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இதர வகை அமைப்புகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட வகையில் அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாட்டின் பொருளாதார மற்றும் சமுதாய வாழ்வில் கடந்த எண்பது ஆண்டுகளாக முக்கிய பங்கை ஆற்றி வருகின்றன.

2. **பொதுவான முன்னேற்றம்.**—ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் உணவு உற்பத்திப் பெருக்கத்தை விரைவு படுத்தல், வேலை வாய்ப்புகளைப் பெருக்குதல் மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துதல் ஆகும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் முதலாண்டில் கடன்கள் வழங்குதல், இடுபொருள்களை வழங்குதல், வேளாண்மை விளைபொருள்களை விற்பனை செய்தல், நுகர்பொருள்களை விநியோகம் செய்தல் ஆகிய துறைகளில் கூட்டுறவுச் சங்கங்கள் நிலையான முன்னேற்றத்தைத் தொடர்ந்து கண்டுள்ளன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் இறுதி ஆண்டில் எய்திய முன்னேற்றம், ஏழாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தின் முதலாண்டான 1985-86 ஆம் ஆண்டிற்கான திட்டம், இதுவரை எய்திய முன்னேற்றம், மற்றும் 1986-87 ஆம் ஆண்டிற்கான திட்டம் ஆகியவை பற்றிய விவரம் பின் வருமாறு :—

| விவரம். | 1984-85ல் முன்னேற்றம். | 1985-86க்கான திட்டம். | 1985-86ல் முன்னேற்றம் (ஜனவரி 1986 வரை | 1986-87 க்கான திட்டம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (கோடி ரூபாயில்) | | |
| 1 குறுகிய கால மற்றும் மத்திய கால வேளாண்மைக் கடன்களை வழங்குதல். | 128.15 | 155.00 | 110.03 | 180.00 |
| 2 நீண்டகால வேளாண்மைக் கடன்களை வழங்குதல். | 20.37 | 20.00 | 17.40 | 20.00 |
| 3 நகையீட்டுக் கடன்களை வழங்குதல். | 218.82 | 220.00 | 241.85 | 300.00 |
| 4 இரசாயன உரங்களை வழங்குதல். | 55.44 | 70.00 | 61.21 | 82.00 |
| 5 வேளாண்மை விளைபொருட்களை விற்பனை செய்தல். | 117.16 | 125.00 | 104.89 | 135.00 |
| 6 நுகர்பொருட்களை சில்லறை விற்பனை செய்தல். | 285.00 | 300.00 | 505.00 | 500.00 |



3 வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவு.—1984-85 ஆம் ஆண்டில் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்கு ஆன செலவு, 1985-86 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு மற்றும் திருத்திய மதிப்பீடு மற்றும் 1986-87 ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| திட்டங்களின் விவரங்கள். | 1984-85ல் செலவு. | வரவு செலவு திட்ட மதிப்பீடு 1985-86. | திருத்திய மதிப்பீடு 1985-86. | வரவு செலவு திட்ட மதிப்பீடு 1986-87. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (கோடி ரூபாயில்) | | |
| அ. மாநில திட்டப் பணிகள். 1 கடன் கூட்டுறவுச் சங்கங்கள். | 3.07 | 2.33 | 2.52 | 0.98 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 2 விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள். | 0.14 | 0.14 | 0.18 | 0.10 |
| 3 நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள். | 0.34 | 0.23 | 0.24 | 0.12 |
| 4 ஏனையக் கூட்டுறவுச் சங்கங்கள். | 0.09 | 0.07 | 0.12 | 0.03 |
| 5 கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி. | 0.03 | 0.02 | 0.02 | 0.01 |
| 6 பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம். | 0.43 | 0.40 | 0.40 | 0.41 |
| 7 உணவு (கிராம அங்காடி திட்டம்). | 3.69 | 2.90 | 3.76 | 3.72 |
| மாநிலத் திட்டப் பணிகளின் மொத்தம். | 7.79 | 6.09 | 7.24 | 5.37 |
| ஆ. மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டங்களும். தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் கிராமிய மின் வசதி கழகம் போன்ற தன்னாட்சி நிறுவனங்கள் நிதி உதவி செய்யும் திட்டங்கள். | 10.20 | 0.46 | 6.53 | 0.41 |
| திட்டப் பணிகளின் மொத்தம். | 17.99 | 6.55 | 13.77 | 5.78 |
| இ. திட்டத்தில் சேராத பணிகள். | 16.67 | 9.24 | 23.55 | 20.87 |
| பெரு மொத்தம். | 34.66 | 15.79 | 37.32 | 26.65 |



## கூட்டுறவு விவசாயக் கடனுதவி.

(குறுகிய கால, மத்தியகால மற்றும் நீண்டகாலக் கடன்கள்.)

4. **தன்னிறைவான கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குதல்.**—மாநிலத்தில் கூட்டுறவு இயக்கத்தின் மைய அமைப்பாக பிரதம விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்கள் விளங்குகின்றன. இவ்வகை சங்கங்கள் 4,655 ஆகும். இவை பயிர் செலவிற்காக குறுகிய காலக் கடன்களையும், விவசாயத்தைச் சார்ந்த துணை தொழில்களுக்காக மத்திய காலக் கடன்களையும் வழங்கி வருகின்றன. விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களைத் தன்னிறைவுள்ள சங்கங்களாக மாற்றியமைப்பதற்கான திட்டத்தின் கீழ், தன்னிறைவு அடையாத நிலையில் உள்ள 327 சங்கங்களில் 142 சங்கங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் 104 புதிய சங்கங்கள் பதியப்பட்டன. மீதியுள்ள 185 சங்கங்களையும், தன்னிறைவுள்ள சங்கங்களாக மாற்றியமைக்கும் திட்டமும் செயற்படுத்தப்பட்டு உள்ளது. தன்னிறைவுள்ளனவாக அமைக்கப்பட்ட 183 பிரதம கூட்டுறவு நில வள வங்கிகள் நில மேம்பாட்டிற்காகவும் மற்றும் இதர பல்வகைப்படுத்தப்பட்ட காரணங்களுக்காகவும் நீண்ட காலக் கடன்களை வழங்கி வருகின்றன.

5. **விவசாயிகளைக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்த்தல்.**—ஆறாம் ஐந்தாண்டு திட்ட காலத்தின் இறுதியில் 1971 ஆம் ஆண்டின் வேளாண்மைக் கணக்கெடுப்பின்படி மாநிலத்தில் இருந்த மொத்த விவசாயக் குடும்பங்களில் 85.6 சதவிகிதத்தினரும் மொத்த சிறு மற்றும் மிகச் சிறு விவசாயக் குடும்பங்களில் 83 சதவிகிதத்தினரும் விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். 1979-80 ஆம் ஆண்டின் வேளாண்மைக் கணக்கெடுப்பின்படி மாநிலத்தில், மொத்த விவசாய குடும்பங்கள் 71.51 இலட்சம் ஆகும். இதில் 61.48 இலட்சம் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகள் குடும்பங்களைச் சார்ந்ததாகும். ஏழாவது திட்ட காலத்தின் முதலாம் ஆண்டில், அதாவது 1985-86 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மொத்த விவசாயக் குடும்பங்களில் 70 சதவிகிதத்தினரையும், சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளைச் சார்ந்த விவசாயக் குடும்பங்களில் 65 சதவிகிதத்

[1986 ஏப்ரல் 25

தினையும் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதிய நிலவரப்படி இந்த இனத்தில் எய்திய முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| விவரம் | விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை (விவசாய நில உடைமைகளின்படி) | |
|---|---|---|
| | மொத்த விவசாயக் குடும்பங்கள். | சிறு மற்றும் மிகச் சிறு விவசாயக் குடும்பங்கள். |
| (1) | (2) | (3) |
| (1) மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 71.51 | 61.48 |
| (2) கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களான குடும்பங்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 49.58 | 40.51 |
| (3) உறுப்பினர்களாக்கப்பட்ட குடும்பங்களின் சதவிகிதம். | 69.3 | 65.9 |

விவசாயக் குடும்பங்களை அதிக அளவில் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**6. ஆதி திராவிடர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தல்.**—ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்தவர்களைக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாகச் சேர்க்கும் திட்டத்தின் கீழ் ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 90,000 நபர்கள் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இத் திட்டத்தின் கீழ் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினராக சேர்க்கப்படும் ஒவ்வொருவருக்கும், அவர் சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்திற்காக 100 ரூபாயை அரசு மானியமாக வழங்குகிறது. மேற்கூறிய திட்டத்தின் கீழ், ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் முதல் ஆண்டான 1985-86 ஆம் ஆண்டில், ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்த 10,000 நபர்கள் அரசின் மானிய உதவியுடன் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இதனால், இவர்கள் பயிர் செலவிற்காக குறுகிய காலக் கடன்களையும், பால் பண்ணை, கோழி வளர்ப்பு, ஆடு வளர்த்தல் போன்ற செயல்களுக்காக மத்திய காலக் கடன்களையும் பெறுகின்றனர். மேலும் சங்கங்களில் வழங்கப்படும் இதர சேவைகளையும் பெற்று அதன் மூலம் தனது வருவாயைப்



1986 ஏப்ரல் 25]

பெருக்கிக் கொள்ள முடிகிறது. 1986-87 ஆம் ஆண்டில், ஆதி திராவிட இனத்தைச் சார்ந்த மேலும் 10,000 நபர்களை அரசு மான்யம் வழங்கி கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**7. கடன் வழங்குதல்.**—தம் உறுப்பினர்களுக்குத் தேவையான விவசாயக் கடன்களை வழங்குவது விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கங்களின் பணி ஆகும். 1977-78 ஆம் ஆண்டு முதல் விவசாயிகளின் சங்கங்கள் கூட்டுறவு கடன்களை, திருப்பிச் செலுத்துவதைத் திட்டமிட்டுக் கடுமையாக தொடர்ந்து எதிர்த்து வந்தமையால், தவணை தவறிய கடன்களை வசூலிப்பது பிரச்சினையாக உள்ளது. எனினும் தவணை தவறிய கடன்களை வசூலிக்க கூட்டுறவுச் சங்கங்கள் உறுதியான முயற்சிகளைத் தொடர்ந்து எடுத்து வருகின்றன. இதன் காரணமாக கடன் வழங்குவதில் முன்னேற்றம் காணப்படுகிறது. ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் கடன் வழங்குதலில் எய்திய முன்னேற்றம் பின்வருமாறு :—

| ஆண்டு | வழங்கப்பட்ட கடன்கள். | | | |
|---|---|---|---|---|
| | குறுகிய காலப் பயிர்க் கடன்கள் | விவசாயம் மற்றும் துணைத் தொழில்களுக்காக மத்திய காலக் கடன்கள். | விவசாய காரியங்களுக்காக நீண்ட காலக் கடன்கள். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (கோடி ரூபாயில்) | | | |
| 1980–81 | 21.52 | 4.25 | 4.76 | 30.53 |
| 1981–82 | 77.20 | 9.79 | 5.52 | 92.51 |
| 1982–83 | 67.18 | 15.97 | 14.35 | 97.50 |
| 1983–84 | 75.34 | 13.22 | 15.42 | 103.98 |
| 1984–85 | 110.80 | 17.35 | 20.37 | 148.52 |

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் முதல் ஆண்டான 1985-86 ஆம் ஆண்டில் குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட கால கடன்களை வழங்குவதற்கான திட்டமும் அவற்றில் 31—1—1986 வரை எய்திய முன்னேற்றமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| விவரம். | 1985–86 திட்டம். | 31–1–86 வரை முன்னேற்றம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (கோடி | ரூபாயில்.) |
| குறுகிய காலக் கடன் | 135.00 | 101.32 |
| மத்திய காலக் கடன் | 20.00 | 8.71 |
| நீண்ட காலக் கடன் | 20.00 | 17.40 |
| | 175.00 | 127.43 |

1986-87 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடன்களை 160 கோடி ரூபாய் அளவிற்கும், மத்திய காலக் கடன்களையும் நீண்ட காலக் கடன்களையும் தலா 50 கோடி ரூபாய் அளவிற்கும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

8. சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்குக் கடன் வழங்குதல்.—வழங்கப்படும் மொத்த குறுகிய காலக் கடன்களில் இருபது சதவிகிதம் நலிந்த பிரிவினருக்குக் (அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான நிலங்களைச் சொந்தமாக வைத்து இருப்பவர்களுக்கு அல்லது குத்தகைக்குப் பயிரிடுபவர்களுக்கு) கொடுக்கப்பட வேண்டும் என்பதே தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி வகுத்துள்ள வழிமுறையாகும். மொத்தக் கடன் பட்டுவாடாவில் குறைந்தது ஐம்பது சதவிகிதத்திற்கு நலிந்த பிரிவினரின் பங்கை அகில இந்திய ரீதியில் உயர்த்தவேண்டும் என்பது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கொள்கை அளவிலான நோக்கமாகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் இறுதியில் தமிழ்நாட்டில் உள்ள விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் நலிந்த பிரிவினருக்கு வழங்கிய கடன் அளவு வருமாறு :—

| விவரம். | கடன் வழங்கப் பட்ட அளவு. | வழங்கப்பட்ட மொத்த கடன் களில் சதவிகிதம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (கோடி ரூபாயில்) | |
| 1 குறுகிய காலக் கடன்கள் | 58.23 | 53 |
| 2 மத்திய காலக் கடன்கள் | 16.17 | 93 |
| நீண்ட காலக் கடன்கள் | 13.46 | 66 |



இவ்வகையில் தேசிய வேளாண்மை வங்கி நிர்ணயித்துள்ள இலக்கைவிட கூடுதலாக அடைந்து கூட்டுறவுச் சங்கங்கள் சாதனை புரிந்துள்ளன.

ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தின் முதலாண்டில் அதாவது 1985-86-ல் குறுகிய காலக் கடன்களில் 63 சதவிகிதமும், மத்திய காலக் கடன்களில் 87 சதவிகிதமும், நீண்ட காலக் கடன்களில் 48 சதவிகிதமும் நலிந்த பிரிவினர்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டிருந்ததில், 31-1-1986 வரை குறுகிய காலக் கடன்களில் 53 சதவிகிதமும், மத்திய காலக் கடன்களில் 86 சதவிகிதமும், நீண்ட காலக் கடன்களில் 36 சதவிகிதமும் நலிந்த பிரிவினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டில், நலிந்த பிரிவினருக்கான பங்கினைக் குறுகிய காலக் கடன்களில் 66 சதவிகிதமும், மத்திய காலக் கடன்களில் 89 சதவிகிதமும், நீண்ட காலக் கடன்களில் 50 சதவிகிதமும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறாக கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் கடன்களில் கணிசமான அளவிற்கு நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பெற்று அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

9. ஆதி திராவிட வகுப்பினர்களுக்கு கடனகள் வழங்குதல்.—தற்போது வழங்கப்படும் குறுகிய காலக் கடன்களில் 5 சதவிகிதமும், மத்தியக் காலக் கடன்களில் 16 சதவிகிதமும், நீண்ட காலக் கடன்களில் 4 சதவிகிதமும் ஆதி திராவிட மற்றும் பழங்குடி வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன. 1986-87 ஆம் ஆண்டில் இவ்வகை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கடனின் அளவு குறுகிய காலக் கடன்களில் 8.8 சதவிகிதமாகவும், மத்திய காலக் கடன்களில் 18.2 சதவிகிதமாகவும், நீண்டகாலக் கடன்களில் 8.8 சதவிகிதமாகவும் உயர்த்தப்படும். விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ள ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்கள் தேவையான அளவிற்கு கடன்களைப் பெறுவதற்காக கூடுதல் பங்குத் தொகை செலுத்துவதற்கும் அரசு உதவி செய்கிறது. 1985-86 ஆம் ஆண்டில் ஆயிரம் உறுப்பினர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 250 ரூபாய் வீதம் வட்டியில்லாக் கடனாக மொத்தம் 2.50 இலட்ச ரூபாய் அரசு வழங்கியுள்ளது. 1986-87 ஆம் ஆண்டில், இவ்வகை உறுப்பினர்களில் 1,250 பேர் இத்திட்டத்தின் கீழ் உதவி பெறுவர்.

10. புன்செய் நில விவசாயத்திற்குச் சலுகை வட்டியில் கடன் வழங்குதல்.—சோளம், கம்பு, கேழ்வரகு, மற்றும் பருத்தி முதலிய மானாவாரி பயிர்களைச் சாகுபடி செய்வதில் ‘ சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கருதியும், இவர்களின் பொருளாதார நிலையைக் கருதியும்,

கூட்டுறவு வங்கி கடந்த மூன்று ஆண்டுகளாக அதன் தவணை தவறிய கடன் நிலுவையை மறுநிதி அளிக்க அனுமதிக்கக் கூடிய அளவான 60 சதவிகிதத்திற்கும் கீழ் குறைக்க இயலவில்லை. எனவே இவ்வங்கிக்குத் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி அதன் சொந்த நிதியிலிருந்து போதிய நிதி உதவி அளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இயற்கை சேதங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தள்ளிப் போடப்பட்ட நீண்ட காலக்கடன் நிலுவைகளைக் கொண்ட இரண்டாவது முடக்கப்பட்ட கணக்கின் வசூலில் 1982-83 ஆம் ஆண்டு முதல் ஏற்பட்ட குறைவில் 20.81 கோடி ரூபாய் அளவிற்கு அரசு ஈடு செய்தது. அடுத்து வரும் 1985-86 ஆம் ஆண்டிற்கு, இரண்டாம் முடக்கப்பட்ட கணக்கின் வசூலில் 6.51 கோடி ரூபாயை அரசு ஈடு செய்ய வேண்டியுள்ளது. இதில் 1 கோடி ரூபாயை தமிழ்நாடு மாநில நிலவள வங்கிக்கு அரசு ஒப்பளித்துள்ளது. மீதமுள்ள 5.51 கோடி ரூபாயை, தமிழ்நாடு மாநில நிலவள வங்கி அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையில் ஈடு செய்யும் வகையில், மாநில நிலவள வங்கிக்கு ஒப்பளிப்பு செய்யும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசின் நிதி உதவியால், 1985-86 ஆம் ஆண்டில் 45 பிரதம நிலவள வங்கிகள் வரையறையின்றி கடன் வழங்கும் தகுதியையும், 138 பிரதம நிலவள வங்கிகள் வரையறுக்கப்பட்ட அளவு கடன் வழங்கும் தகுதியையும் பெற்றுள்ளன. பிரதம நிலவள வங்கிகளின் தவணை தவறிய கடன்கள் அதிகரித்துக் கொண்டே போவது குறித்து தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தனது கடுமையான கருத்தைத் தெரிவித்துள்ளது. மேலும் பிரதம நிலவள வங்கிகளின் கடன் வசூலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருந்தாலொழிய, உலக வங்கி மேற்கொண்டு கடனளிக்கத் தயங்கும் என்றும் அது தெரிவித்துள்ளது. விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களிலும், பிரதம நிலவள வங்கிகளிலும் தவணை தவறிய கடன்களைப் பெருமளவு குறைப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

14. **கடன் வசூலைத் தள்ளி வைத்தல்.**—1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளில் மாநிலத்தில் நிலவிய வறட்சி மற்றும் வெள்ளத்தின் காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அவர்களின் துயர் துடைக்கும் வகையில் அரசு கடன் வசூலைப் பின்கண்ட வழிகளில் தள்ளிவைத்து உதவி புரிந்துள்ளது:—(i) 30.81 கோடி ரூபாய் அளவிற்கான குறுகிய காலக் கடன்கள் அடுத்த மூன்று ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படும் வகையில் மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டன; (ii) 2.20 கோடி ரூபாய் அளவிற்கான மாற்றப்பட்ட கடன்கள் அடுத்த நான்காண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படும் வகையில் தள்ளி போடப்பட்டன; (iii) நீண்ட காலக் கடன் தவணைகளின் வசூலும் 13.03 கோடி ரூபாய் அளவிற்குத் தள்ளி போடப்பட்டது; (iv) 1985-86 ஆம் ஆண்டில் 2.39 கோடி ரூபாய் அளவிற்கான குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டுள்ளன; (v) குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றுவதிலான பளுவில் 15 சதவிகிதத்தை அரசு ஏற்கிறது.



இவ்வகையில், குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டதால், பாதிக்கப்பட்ட கடன்தாரர்கள் சாகுபடிக் காரியங்களை மேற்கொள்ள புதிதாக கடன்பெறும் தகுதியைப் பெற்றனர்.

15. **விவசாயிகளின் கடன் சுமையைக் குறைத்தல்.**—விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்கும் நோக்கத்துடன் 1979-80 ஆம் ஆண்டு முதல் 1983-84 ஆம் ஆண்டு வரை வட்டி தள்ளுபடி செய்த அல்லது திருப்பித் தந்த வகையில் 42 கோடி ரூபாயும், சிறு விவசாயிகளிடம் நிலுவை நின்ற மத்திய காலக் கடனாக மாற்றியமைக்கப்பட்ட அல்லது தவணை நீடித்துத் தரப்பட்ட கடன்களை தள்ளுபடி செய்த வகையில் 57 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 99 கோடி ரூபாய் அளவிற்கு அரசு நிதியுதவி அளித்துள்ளது. 1984 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதியில் தவணை தவறி நின்ற கடன் பாக்கிகள் முழுவதையும் 1985 ஆம் ஆண்டு மார்ச்சு 31 ஆம் தேதிக்குள் திருப்பிச் செலுத்திய பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகளின் கடன்தாரர்களுக்குத் தவணை தவறிய தொகை மீதான வட்டியும் அபராத வட்டியும் அரசால் தள்ளுபடி செய்யப்பட்டன. இச்சலுகையை 93,364 கடன்தாரர்கள் 3.71 கோடி ரூபாய் அளவிற்குப் பெற்றுள்ளனர். அரசு, முதற் கட்டமாக 1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இந்தச் செலவினை ஏற்பதற்காக தமிழ்நாடு மாநில நிலவள வங்கிக்கு 1 கோடி ரூபாய் வரவினை முன்பணமாக வழங்கியுள்ளது.

16. **குறித்த காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தினால் வட்டி குறைப்பு.**—தவறாது குறுகிய காலக் கடன்களையும், மத்திய காலக் கடன் தவணைகளையும் குறிப்பிட்ட நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தும் சிறு விவசாயிகளுக்கு 2 சதவிகித வட்டி தள்ளுபடியை அரசு 1981-82 ஆம் ஆண்டிலிருந்து வழங்கி வருகிறது. விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் குறித்த காலத்தில் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு இத்திட்டம் அமைந்துள்ளது.

17. **பொய்த்த கிணறுகள் நிதியிலிருந்து உதவி.**—பிரதம கூட்டுறவு நிலவள வங்கி கடன்தாரர்களின் கிணறுகள் பொய்த்த போது, பொய்த்த கிணறுகள் நிதியிலிருந்து அவர்கள் செலுத்த வேண்டிய வட்டியிலும், அசலிலும் சிறு விவசாயிகளுக்கு 90 சதவிகித அளவிற்கும், பெரிய விவசாயிகளுக்கு 75 சதவிகித அளவிற்கும் உதவி தரப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்புகளைச் சார்ந்த சிறு விவசாயிகளுக்கு அவர்களுடைய சொந்த

இத்தகைய உறுப்பினர்களுக்கு 4 சதவிகித வட்டி விகிதத்தில் குறுகிய காலக் கடன் வழங்கும் திட்டத்தை அரசு அங்கீகரித்துள்ளது. இத்திட்டம் 1-4-1985 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன், இவ்வட்டி விகிதத்திற்கும் சிறு விவசாயிகளுக்கான சாதாரண வட்டியாகிய 11.5 சதவிகிதத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அரசு மானியமாக வழங்கும்.

11. விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கான தேசிய பெருக்கு நிதி உதவித் திட்டத்தை நிறைவேற்று வதில் கூட்டுறவுச் சங்கங்களின் ஈடுபாடு.—இத்திட்டம், 1983-84 ஆம் ஆண்டி லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய அங்கம் சிறு பாசனத் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் இணங்கண்டு கொள்ளப்பட்ட உறுப்பினர்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் அளிக்கப்படுகிறது. மானியத் துக்கான செலவினத்தை மாநில அரசும், மத்திய அரசும் 50 : 50 என்ற விகிதத்தில் ஏற்றுக் கொள்கின்றன. வர்த்தக வங்கிகள், பொதுத் நிலவள வங்கிகள், மண்டல ஊரக வங்கிகள் மற்றும் குறிப்பிட்ட சில மத்திய கூட்டுறவு வங்கிகள் போதிய கடன் வசதியை அளித்து வருகின்றன. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளால் குறிப்பிடப்படும் பகுதிகளில் தேவையான நீண்ட காலக் கடன்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கி வருகின்றன. இத்தகைய கடன்கள் இனங் கண்டுகொள்ளப்பட்ட விவசாயிகளுக்கு 10 சதவிகிதம் வட்டி விகிதத்தில் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 1983-84 ஆம் ஆண்டில் 1.17 கோடி ரூபாய் அளவிற்கும், 1984-85 ஆம் ஆண்டில் 7.53 கோடி ரூபாய் அளவிற்கும், 1985-86 ஆம் ஆண்டில் ஜனவரி மாத இறுதி வரை 5.22 கோடி ரூபாய் அளவிற்கும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

12. நீண்டகாலக் கடன்களை பல்வகை காரணங்களுக்காக வழங்குதல்.—தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் உதவியுடன் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வேளாண்மை வளர்ச்சிக்கு நீண்ட காலக் கடன் களை வழங்கி வருவதன் மூலம் மாநிலத்தை பகுதிவாரியாக மேம்படுத்து வதற்குத் தொடர்ந்து திட்டமிடப்படுகிறது. தற்பொழுது, 23.92 கோடி ரூபாய் மூலதனம் கொண்ட 102 சிறு பாசனத் திட்டங்களும், 22.81 கோடி ரூபாய் மூல தனம் கொண்ட 115 சிறு பாசனமல்லாத இதர திட்டங்களும் நிறைவேற்றப் பட்டு வருகின்றன. தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவள வங்கி, தமிழ்நாடு மின்வாரியத்திற்கு 1976-77 ஆம் ஆண்டிலிருந்து 2.49 கோடி ரூபாய் அளவிற்கு 5,212 மின்சார மோட்டார் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு அளிக்கவும் கடன் வழங்கியுள்ளது. நில அடமானத்தை வற்புறுத்தாமல் நிலவள வங்கிகள் நிலமற்றவர்களுக்குத் திட்ட ரீதியாகப் பல்வகைக் காரணங்களுக்காகக் கடன் கள் பெருமளவில் வழங்கும் பொருட்டு, அரசு 5 கோடி ரூபாய் அளவிற்கு



உத்தரவாதம் அளித்துள்ளதையொட்டி, நிலமற்றவர்களுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இவ்வகைக் கடன்கள், 31-1-1986 வரை 4.67 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டுள்ளன.

13. தவணை தவறிய கடன்கள்.—கடந்த மூன்று கூட்டுறவு ஆண்டுகளின் இறுதியிலும், 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதியிலும், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள் அளவில் இருந்த தவணை தவறிய கடன்கள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் அளவில்.

| நாள். | கேட்பு. | வசூல். | நிலுவை | கேட்பில் நிலுவையின் சதவிகிதம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (கோடி ரூபாயில்) | | |
| 1983 ஜூன் 30-ல் | 256.40 | 115.00 | 141.40 | 55.1 |
| 1984 ஜூன் 30-ல் | 277.90 | 143.47 | 134.43 | 48.4 |
| 1985 ஜூன் 30-ல் | 330.61 | 180.15 | 150.46 | 45.5 |
| 1986 ஜனவரி 31-ல் | 237.39 | 64.34 | 173.05 | 72.9 |

பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள் அளவில்.

| நாள். | கேட்பு. | வசூல். | நிலுவை. | கேட்பில் நிலுவையில் சதவிகிதம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (கோடி ரூபாயில்) | | |
| 1983 ஜூன் 30-ல் | 59.55 | 11.41 | 48.14 | 80.8 |
| 1984 ஜூன் 30-ல் | 64.75 | 16.87 | 47.88 | 73.9 |
| 1985 ஜூன் 30-ல் | 73.62 | 26.32 | 47.30 | 64.2 |
| 1986 ஜனவரி 31-ல் | 54.76 | 5.07 | 49.69 | 90.7 |

தவணை தவறிய கடன்கள் வசூலில் ஓரளவு முன்னேற்றம் இருந்தாலும் தவணை தவறிய கடன்கள் மிக அதிகமாக இருக்கும் நிலை தொடர்ந்து நீடிப்பது கவலை தருவதாக உள்ளது. தவணை தவறிய கடன்கள் வசூலில் முன்னேற்றம் ஏற்படாவிட்டால், மத்திய கூட்டுறவு வங்கிகள், வேளாண்மை காரியங்களுக்கான கடன் தேவைகளைப் பூர்த்தி செய்ய தேசிய வேளாண்மை வங்கியிடமிருந்து மறுநிதி பெற இயலாத நிலை ஏற்படும். தஞ்சாவூர் மத்திய

ஏற்படவில்லை. மீதமுள்ள நான்கு பருவங்களுக்கு 3,891 விவசாயிகளுக்கு 13.24 இலட்ச ரூபாய் அளவிற்கு இழப்பு நிதி அளிக்க வேண்டியுள்ளது. இதனை அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ள விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் நெற்பயிர் மற்றும் நிலக்கடலைப் பயிர்களுக்கு 1-4-1985 முதல் செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்கள், வர்த்தக வங்கிகள் மற்றும் மண்டல ஊரக வங்கிகள் மூலம் நெல், கோதுமை, எண்ணெய் வித்துக்கள் சிறு தானியப் பயிர்கள் மற்றும் பயறு வகைகளுக்கு வழங்கப்படும் கடன் தொகையைப் போன்று 150 சதவிகித அளவிற்குக் கட்டாயமாக ஈட்டுறுதி செய்யப்படும். ஈட்டுறுதி செய்யப்படும் தொகையில் நெல், கோதுமை மற்றும் சிறு தானியப் பயிர்களுக்கு 2 சதவிகிதமும், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பயறு வகைகளுக்கு 1 சதவிகிதமும் பிரிமியமாக செலுத்தப்பட வேண்டும். இத்திட்டத்தில் சேரும் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகள் அவர்கள் செலுத்த வேண்டிய பிரிமியத் தொகையில் 50 சதவிகிதம் மானியமாகப் பெறுவார்கள். இம்மானியத்திற்கான செலவினத்தை மாநில அரசும் மத்திய அரசும் சமமாக ஏற்கின்றன. தமிழ்நாடு பயிர் ஈட்டுறுதி நிதியில் அரசின் பங்காக 100 இலட்ச ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதிக்கு இந்திய அரசும் 100 இலட்ச ரூபாய் ஒப்பளிப்பு செய்துள்ளது. 1985 ஆம் ஆண்டு நெல் முதற்பயிர் மற்றும் மானாவாரி நிலக்கடலை பயிர்களை விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் ஈட்டுறுதி செய்யப்பட்ட விவரம் பின்வருமாறு:—

| விவரம். | விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்ட செயலாக்கம். | |
|---|---|---|
| | நெல் 1 1985 | மானாவாரி நிலக்கடலை. 1985 |
| (1) | (2) | (3) |
| வட்டாரங்களின் எண்ணிக்கை. | 140 | 54 |
| விவசாயிகளின் எண்ணிக்கை. | 44,891 | 2,964 |
| திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட நிலம் (ஏக்கரில்). | 1,17,310 | 5,831 |
| ஈட்டுறுதி செய்யப்பட்ட தொகை (இலட்சம் ரூபாயில்). | 1,541.90 | 71.06 |
| வசூலிக்கப்பட்ட பிரிமியம் (இலட்சம் ரூபாயில்). | 30.84 | 0.71 |



இத்திட்டம் 234 வட்டாரங்களில் 1985-86 இரண்டாம் நெற் பயிருக்கும் 137 வட்டாரங்களில் 1985-86 பாசன நிலக் கடலைக்கும் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

21. **கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய ஆய்வு.**—இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவு வங்கிகளின் முன்னேற்றம், பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகளை வலுவாக்குதல், கடன் வழங்கும் கூட்டுறவு நிறுவனங்கள் பின்பற்ற வேண்டிய முறைகள் ஆகியவற்றை ஆராய்ந்து தேவையான வழிமுறைகளைப் பரிந்துரை செய்வதற்காக இவ்வரசு ஒரு சிறப்பு அலுவலரை நியமனம் செய்திருந்தது. அவர்தம் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

22. **நகையீட்டுக் கடன்கள்.**—கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டதால், நிறுவன அமைப்பில்லாத தனியார் நிறுவனங்களிடமிருந்து கடன் கிடைப்பது அரிதாகியதால், ஏற்பட்டுள்ள நிதித்தேவைகள் நகையீட்டின் பேரில் அளிக்கப்படும் கடன்கள் மூலம் பூர்த்தி செய்யப்படுகின்றன. 1,513 விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும், மத்திய கூட்டுறவு வங்கிகளின் 423 கிளைகளும், 128 கூட்டுறவு நகர வங்கிகளும் அவற்றின் 12 கிளைகளுமாக 2,076 கூட்டுறவு அமைப்புகள் தற்போது நகையீட்டுக் கடன்களில் வழங்குவதில் ஈடுபட்டுள்ளன. 1984-85 ஆம் ஆண்டின் இறுதியில் 1931 கூட்டுறவு அமைப்புகளே நகையீட்டுக் கடன்கள் வழங்குவதில் ஈடுபட்டிருந்தன. 1984-85 ஆம் ஆண்டில், 11.35 இலட்சம் நபர்கள் பயனுறும் வகையில் 218.82 கோடி ரூபாய் அளவிற்கு மட்டுமே நகையீட்டுக் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. 1985-86 ஆம் ஆண்டில் (1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை) 10.84 இலட்சம் நபர்களுக்கு 241.85 கோடி ரூபாய் அளவிற்கு கூட்டுறவுச் சங்கங்கள் நகையீட்டுக் கடன்களை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. இதில், ஊரகப் பகுதிகளில் உள்ள விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் 1984-85 ஆம் ஆண்டில் 65.95 கோடி ரூபாய் அளவிற்கும், 1985-86 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் வரை 81.10 கோடி ரூபாய் அளவிற்கும் நகையீட்டுக் கடன்கள் வழங்கியுள்ளன. ஏழாவது ஐந்தாண்டு திட்டக் கால இறுதியாண்டில் 230 கோடி ரூபாய் அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் வழங்க திட்டமிடப்பட்டிருந்தபோதிலும் 1986-87 ஆம் ஆண்டில் 300.00 கோடி ரூபாய் அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும், அநேகமாக ஊரகப் பகுதிகளில், அமைந்துள்ள கூட்டுறவு அமைப்புகள் நகையீட்டுக் கடன்கள் வழங்கி வருவதன் மூலம், கூட்டுறவுகள் சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்களின் அவசர நிதி தேவைகளை பயன்விளையத்தக்க வகையில் பூர்த்தி செய்து வருகின்றன.

முதலீடு போக இணைறுக்கான மொத்த செலவும் மானியமாக தரப்படுகிறது. 1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய 2,237 பொய்த்த இணைறுகளுக்காக 1.22 கோடி ரூபாய் அளவிற்கு இந்த நிதியிலிருந்து உதவி அளிக்கப்பட்டுள்ளது. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி எல்லா மாநிலங்களிலும் பின்பற்றுவதற்காக பொய்த்த இணைறுகள் இழப்பீட்டு திட்ட மாதிரி ஒன்றை தெரிவித்துள்ளது. பொய்த்த இணைறுகள் பற்றிய கருத்து, இழப்பீட்டுத் தொகையின் அளவு, உரிமைக் கோரிக்கைகளைத் தீர்வு செய்வதற்கான நடைமுறை ஆகியவற்றில் ஒரே சீரான முறையை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் படி, இணைறுகள் பொய்த்தபோது வட்டியை சம்பந்தப்பட்ட வங்கி ஏற்க வேண்டும். ஆனால் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிலிருந்து மறுநிதி உதவியைப் பயன்படுத்தும் போது அச்செலவை சம்பந்தப்பட்ட வங்கியும், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியும் பங்கிட்டு ஏற்கும். செலவின் அசல் பகுதியை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

18. **உள் நிதி ஆதாரங்களைப் பெருக்குதல்.**—கடன் கூட்டுறவுச் சங்கங்கள் தேவையான அளவிற்குக் கடன்களை வழங்குவதற்கு ஏதுவாக அவற்றின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதில் தொடர்ந்து முன்னேற்றம் காட்டி வருகின்றன. விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், மத்திய கூட்டுறவு வங்கிகள் (சென்னை மாநகரில் உள்ளது தவிர) மற்றும் மாநில கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் மொத்த பங்கு மூலதனம் (அரசு முதலீடு நீங்கலாக) 1984–85 ஆம் ஆண்டு இறுதியில் 70.87 கோடி ரூபாயிலிருந்து 1986 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் இறுதியில் 75.15 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது. அவற்றின் மொத்த வைப்புத் தொகைகள் 1984-85 ஆம் ஆண்டு இறுதியில் 581.87 கோடி ரூபாயாக இருந்தது. 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இறுதியில் 629.07 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

19. **பங்கு மூலதனத்திற்கும், கடனீட்டுப் பத்திரங்களுக்கும் அரசு நிதி உதவி அளித்தல்.**—கடன் கூட்டுறவுச் சங்கங்கள் போதிய அளவு கடன் வாங்கும் தகுதியைப் பெறும் பொருட்டு அரசு, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் தேசிய ஊரகக் கடனுதவி (நீண்ட காலச் செயல்முறைகள்) நிதியிலிருந்து கடன் பெற்று அச்சங்கங்களின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்து வருகிறது. பிரதம கூட்டுறவு நில வள வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் உட்பட கடன் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் அரசின் மொத்த முதலீடு 1984-85 ஆம் ஆண்டின் இறுதியில் 32.98 கோடி ரூபாயாக இருந்தது. மாநில நிலவள வங்கியின் கடனீட்டுப் பத்திரங்



களிலும் அரசு முதலீடு செய்கிறது. 1985 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் முதலீடு செய்யப்பட்டு நிலுவையாக இருந்த தொகை 15.89 கோடி ரூபாயாகும். 1985-86 ஆம் ஆண்டில் இவ்வகையில் முதலீடு செய்ய திட்ட மதிப்பீடு 50.00 இலட்ச ரூபாய் என ஒதுக்கீடு செய்திருந்ததில் தமிழ்நாடு மாநில நிலவள வங்கியின் கடனீட்டுப் பத்திரங்களில் அரசு இதுவரை 40.41 இலட்ச ரூபாய் வரை முதலீடு செய்துள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில நிலவள வங்கியின் கடனீட்டுப் பத்திரங்களின் முதலீடு செய்யக் கூடுதலாக 40 இலட்ச ரூபாயை அரசின் பங்காக ஒப்பளித்துள்ளது. இதே போன்று 1986-87 ஆம் ஆண்டில் அரசின் பங்காக முதலீடு செய்ய திட்ட மதிப்பீட்டில் 50.00 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

20. **பயிர் ஈட்டுறுதித் திட்டம்.**—முன்னோடி பயிர் ஈட்டுறுதித் திட்டம் தமிழ்நாட்டில் 1979-80 நெல் 2-ம் பயிர் திட்ட காலம் முதல் நெல் 1984-85 வரை தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் நெல் மற்றும் நிலக்கடலை பயிர்களுக்காக செயல்படுத்தப்பட்டது. முன்னோடி பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் 1984-85 ஆம் ஆண்டு நெல் 2-ம் பயிர் மற்றும் 1984-85 ஆம் ஆண்டு பாசன நிலக்கடலை ஆகியவற்றின் செயலாக்கம் பின்வருமாறு:—

| விவரம். | முன்னோடி பயிர் ஈட்டுறுதித் திட்ட செயலாக்கம். | |
|---|---|---|
| | நெல் 2-ம் பயிர். 1984—85. | பாசன நிலக் கடலை. 1984—85. |
| (1) | (2) | (3) |
| வட்டாரங்களின் எண்ணிக்கை. | 76 | 27 |
| விவசாயிகளின் எண்ணிக்கை. | 5,568 | 1,470 |
| திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட நிலம் (ஏக்கரில்). | 5,091 | 1,532 |
| ஈட்டுறுதி செய்யப்பட்ட தொகை (இலட்சம் ரூபாயில்). | 106.23 | 25.79 |
| வசூலிக்கப்பட்ட பிரீமியம் (இலட்சம் ரூபாயில்). | 2.64 | 0.74 |

முன்னோடி பயிர் ஈட்டுறுதித் திட்டம் பதினான்கு பருவங்களில் 31-3-1985 வரை செயல்படுத்தப்பட்டது. இதில் 1979-80-லிருந்து 9 பருவங்களுக்கு 7,430 விவசாயிகளுக்கு 12.38 இலட்ச ரூபாய் அளவிற்கு இழப்புத் தொகை தரப்பட்டுள்ளது. ஒரு பருவத்திற்கு இழப்பு தொகை அளிக்க வேண்டிய அவசியம்

இவ்வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய பிரிவினர்கள் குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள வேளாண்மை சமுதாயத்தின் நலன்களைப் பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றி உள்ளன. இவ்வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் எய்தியுள்ள முன்னேற்றம் குறிப்பிடத் தக்கது. சவரன் ஒன்றுக்கு வழங்கப்படும் கடனின் உச்ச அளவு 1,000 ரூபாயாகும்.

23. **குறைந்த வட்டிக்குக் கடன்கள்.**—ஆண்டொன்றுக்கு 4 சதவிகிதத்தில் தொழிற் கடன்களை நலிந்த பிரிவினர்களுக்கு மத்தியக் கூட்டுறவு வங்கிகள், உழவர் பணிக் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 78 நகர கூட்டுறவு வங்கிகள் தொடர்ந்து வழங்கி வருகின்றன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, அங்கீகரித்துள்ள 22 வகையான சிறு தொழில்களை மற்றும் குடிசைத் தொழில்களில் ஏதேனும் ஒன்றை மேற்கொள்ள எல்லா வகையிலும் ஆண்டு வருவாய் ஊரகப் பகுதிகளில் 2,500 ரூபாய்க்கும் ஓரளவு நகர்ப்புறங்களில் மற்றும் நகரங்களில் 3,000 ரூபாய்க்கும் மேற்படாமல் உள்ளவர்களுக்கு இக்கடன்கள் வழங்கப்படுகின்றன. இக்கடன்கள் நபர் ஜாமீன் பேரில் ஒருவருக்கு நிரந்தர மூலதனச் செலவிற்காக 5,000 ரூபாயும், நடைமுறை மூலதனச் செலவிற்காக 2,000 ரூபாயும் ஆக மொத்தம் 7,000 ரூபாய் வரையில் வழங்கப்படுகின்றது. இத்தகைய கடன்கள் 1984-85 ஆம் ஆண்டில் 1.35 கோடி ரூபாய் அளவிற்கும், 1985-86 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் வரையில் 1.33 கோடி ரூபாய் அளவிற்கும் வழங்கப்பட்டுள்ளன. மேலே கூறிய நிறுவனங்கள் இத்தகைய கடன்களைச் சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்களுக்கு 1986-87 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து வழங்கும்.

நகர்ப்புற மக்களுக்குக் கடனுதவி.

24. **நகரங்களிலும் ஓரளவு நகர்ப்புறங்களிலும் உள்ளவர்களுக்குக் கடன்கள்.**—தமிழ் நாட்டில் 133 கூட்டுறவு நகர வங்கிகள் உள்ளன. இவ்வங்கிகள் நகரங்கள் மற்றும் ஓரளவு நகர்ப்புறங்களில் உள்ள மக்களுக்கு வங்கி வசதிகளை அளிப்பதுடன், அவர்களுக்கு 1984-85 ஆம் கூட்டுறவு ஆண்டில் 195.79 கோடி ரூபாய் அளவிற்குக் குறுகிய கால மற்றும் மத்தியக் காலக் கடன்களை வழங்கியுள்ளன. 1984-85 ஆம் கூட்டுறவு ஆண்டின் இறுதியில் இவ்வங்கிகளிடமிருந்த வைப்புத் தொகைகள் 134.90 கோடி ரூபாயாகும். குடிசைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்களுக்கு நிதி உதவி செய்யும் திட்டத்தின் கீழ் இவ்வங்கிகள் 1984-85 ஆம் கூட்டுறவு ஆண்டில் 3.20 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்கியுள்ளன. சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதின் மூலம் நியாயமான விநியோக முறையை உறுதி செய்ய வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தை வங்கிகள் நிறைவேற்றுவதற்கு ஏதுவாக, கூட்டுறவு



நகர வங்கிகள் வழங்கும் கடன்களில் 60 சதவீதம் குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்கள் உள்ளிட்ட முதன்மைப் பிரிவிற்குச் சேர வேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கி வழிமுறைகளை வகுத்துள்ளது. எனவே, குடிசைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்களுக்காக நகர கூட்டுறவு வங்கிகள் வழங்கும் கடனளவை 1986-87 ஆம ஆண்டில் 5 கோடி ரூபாய்க்குக் குறைவில்லாமல் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

25. **நலிந்த கூட்டுறவு நகர வங்கிகளை மறு சீரமைத்தல்.**—தற்போது 12 கூட்டுறவு நகர வங்கிகள், நலிந்த வங்கிகளாக இந்திய ரிசர்வ் வங்கியால் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதில், 1985-86 ஆம் ஆண்டில் 3 நலிந்த நகர கூட்டுறவு வங்கிகளுக்கு பங்கு மூலதனமாக தலா 0.50 இலட்ச ரூபாயும், ஒவ்வொரு வங்கிக்கும் கூட்டுறவு சார் பதிவாளரின் சேவைகளை இலவசமாகவும் அரசு அளித்துள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் மேலும் மூன்று நலிந்த கூட்டுறவு நகர வங்கிகளுக்கு உதவி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

26. **சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்த கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்.**—படித்த வேலையில்லாத இளைஞர்களுக்குச் சுயமாக தொழில் செய்வதற்காக நிதி உதவி அளிக்கும் பொருட்டு சென்னை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இச்சங்கங்கள் நபர் ஜாமீன் பேரிலும், கடன்களைக் கொண்டு வாங்கப்படும் இடம்பெயராச் சொத்துக்களின் இணை பிணையத்தின் பேரிலும் கடன்களை வழங்குகின்றன. இதே போன்ற சங்கங்களை இதர மாவட்டங்களிலும் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

27. **மகளிர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அமைத்தல்.**—மகளிர் நலனுக்காகவும் கூட்டுறவுச் சங்கங்கள் பணிபுரிகின்றன. விதவைகள் உட்பட நலிந்த பிரிவைச் சார்ந்த மகளிர் குடிசைத் தொழில்களை மேற்கொண்டு தம் வருவாயை அதிகரித்துக்கொள்ள ஏதுவாக, கோயம்புத்தூரில் மகளிர் கூட்டுறவுக் கடன் சங்கம் ஒன்று சமீபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் இச்சங்கத்திற்கு கூட்டுறவு சங்க முதுநிலை ஆய்வாளர் ஒருவரின் சேவை இலவசமாக அளித்ததோடு மட்டுமல்லாமல், சங்கத்தின் பங்கு மூலதனத்திற்கு 80,000 ரூபாயும் மேலாண்மை மானியமாக 6,000 ரூபாயும் அரசு ஒப்பளித்துள்ளது.

1985-86 ஆம் ஆண்டில் முற்றிலும் மகளிரைக் கொண்டு நிர்வகிக்கப்படும் மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகள் 10 துவக்க திட்டமிடப்பட்டிருந்ததில், இதுவரை 4 மகளிர் கிளைகள் துவக்கப்பட்டுள்ளன.

## பண்ணை இடுபொருட்களின் கூட்டுறவு விநியோகம்.

28. **இரசாயன உர விநியோகம்.**—விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், இரசாயன உரங்களை உறுப்பினர்களுக்குப் பயிர்க் கடன்களின் ஒரு பகுதியாகவும், உறுப்பினர்களுக்கும், உறுப்பினர் அல்லாதவர்களுக்கும் ரொக்கத்திற்கும் தொடர்ந்து விநியோகித்து வருகின்றன. 1985-86 ஆம் ஆண்டில் 70.00 கோடி ரூபாய் அளவிற்கு 2.00 இலட்சம் டன் (என்.ப்பி.கே.) இரசாயன உரங்களை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 1986 ஜனவரி மாதம் 31-ந் தேதி வரையில் கூட்டுறவுச் சங்கங்கள் 61.21 கோடி ரூபாய் மதிப்புடைய 1.58 இலட்சம் டன் (என்.ப்பி.கே.) இரசாயன உரங்களை விநியோகித்துள்ளன. 1985-86 ஆம் ஆண்டில் இதுவரை கூட்டுறவுச் சங்கங்கள் 152 கூடுதல் சில்லறை உர விற்பனை நிலையங்களை ஏற்படுத்தி, மாநிலத்திலுள்ள உர விற்பனை நிலையங்களின் எண்ணிக்கையை 5,126 ஆக உயர்த்தியுள்ளன. 1986-87 ஆம் ஆண்டில் 82 கோடி ரூபாய் மதிப்புள்ள 2.35 இலட்சம் டன் (என்.ப்பி.கே.) அளவிற்குச் சில்லறை முறையில் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

29. **உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டம்.**—விவசாயிகளுக்கு, உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், காவிரி கழிமுகப் பகுதியில், தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு நெல் வழங்கிய விவசாயிகளுக்கும், விவசாயத் துறைக்கு நெல் விதைகள் வழங்கிய விதைப் பண்ணை விவசாயிகளுக்கும், ஒரு குவிண்டால் நெல்லுக்கு 15 ரூபாய் மதிப்புடைய உரங்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அரசு வழங்கியது. இத்திட்டம் 1984 குறுவைப் பருவம் முதல் செயல்படுத்தப்பட்டது. இது 1985 சம்பா மற்றும் குறுவை பருவங்களுக்கும் 1986 சம்பா பருவத்திற்கும் நீடிக்கப்பட்டுள்ளது. 1985 சம்பா பருவம் முதல், நெல் குவிண்டால் ஒன்றுக்கு அளிக்கப்படும் மானியத்தின் அளவு 15 ரூபாயிலிருந்து 20 ரூபாய்க்கு உயர்த்தப்பட்டது. இது தவிர, இத்திட்டத்தின் கீழ் 1-11-1985 முதல் கூடுதல் இடுபொருள் மானியமாக 15 ரூபாய் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த 1985 சம்பா பருவத்தில் 4.53 கோடி ரூபாய் மதிப்புடைய உரங்களையும், 1985 குறுவை பருவத்தில் 11.16 கோடி ரூபாய் மதிப்புடைய உரங்களையும், 1986 சம்பா பருவத்தில் 15-2-1986 வரை 1.42 கோடி ரூபாய் மதிப்புடைய உரங்களையும் விநியோகம் செய்துள்ளன.

30. **விதைகள், பூச்சிகொல்லி மருந்துகள் மற்றும் வேளாண்மைக் கருவிகள் விநியோகம் செய்தல்.**—விதைப் பெருக்கத் திட்டத்தை செயல்படுத்தி வரும் குடியாத்தூர் கூட்டுறவு விவசாயப் பணிகள் சங்கமும், கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் ஐந்து கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும்



1984-85 ஆம் ஆண்டில் 64.84 இலட்சம் ரூபாய் மதிப்புடைய சான்றிதழ் பெற்ற விதைகளை உற்பத்தி செய்து விநியோகித்துள்ளன. 1985-86 ஆம் ஆண்டில் 1985 டிசம்பர் மாத இறுதி வரை 63.12 இலட்சம் ரூபாய் மதிப்புடைய சான்று செய்யப்பட்ட விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. குடியாத்தூர் கூட்டுறவு விவசாயப் பணிகள் சங்கம் பூச்சிக் கொல்லி மருந்துகள் தயாரிக்கும் பிரிவு ஒன்றை வைத்துள்ளது. இச்சங்கத்தின் பூச்சிக் கொல்லி மருந்துகளை விநியோகம் செய்வதற்காக மாநிலத்தில் உள்ள அனைத்துக் கூட்டுறவு விற்பனை சங்கங்களும் மொத்த விற்பனையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளன. 1984-85 ஆம் ஆண்டில், 205 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பூச்சிக் கொல்லி மருந்துகள் கூட்டுறவு சங்கங்களால் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டில் டிசம்பர் மாத இறுதி வரை 90 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பூச்சிக்கொல்லி மருந்துகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டுகளில் கூட்டுறவுச் சங்கங்களில் பண்ணை இடுபொருட்கள் விநியோகத்தை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் இடுபொருட்களை விநியோகம் செய்வதற்காக கீழ்க்கண்ட இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன:—

| இடுபொருட்கள், | மதிப்பு (இலட்சம் ரூபாயில்) |
|---|---|
| 1. விதைகள் | 150 |
| 2. பூச்சிக்கொல்லி மருந்துகள் | 275 |
| 3. வேளாண்மைக் கருவிகள் | 19 |

31. **அனைத்து இடுபொருட்களையும் ஒரே இடத்தில் விநியோகம் செய்வதற்காக வேளாண்மை பணிக் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் திறப்பு.**—உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்ற இடுபொருட்கள் அனைத்தையும், ஒரே இடத்தில் விநியோகம் செய்வதற்காக, தம்முடைய தலைமையிடங்கள் அல்லாத இதர கிராமங்களில் கூடுதல் விற்பனை நிலையங்களைத் திறக்க 50 விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு 1985-86 ஆம் ஆண்டில் நிதி உதவி அளித்துள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் இவ்வகையில், மேலும் 50 சங்கங்களுக்கு உதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## கூட்டுறவு விற்பனை, பதப்படுத்துதல் மற்றும் விளைபொருட்கள் சேமிப்பு.

### கூட்டுறவு விற்பனை.

32. **விவசாய விளைபொருட்களை விற்பனை செய்தல்.**—மாநிலத்தில் 114 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இருக்கின்றன. அவை, தம் உறுப்பினர்களின் விவசாய விளை பொருட்களை விற்பனை செய்வதன் வாயிலாக

அவர்கள் நியாயமான வருமானம் பெற தொடர்ந்து உதவி செய்து வருகின்றன. 1985-86 ஆம் ஆண்டில் 125 கோடி ரூபாய்க்கு விவசாய விளைபொருட்களை விற்பனை செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை விற்பனை செய்யப்பட்ட விவசாய விளைபொருட்களின் மதிப்பு 104.89 கோடி ரூபாய் ஆகும். 1986-87 ஆம் ஆண்டில் விவசாய விளைபொருட்களின் விற்பனையை 135 கோடி ரூபாய்க்கு மேலும் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவு நூற்பாலைகளுடன் கொண்டுள்ள இணைந்த ஏற்பாட்டின் கீழ், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் நூற்பாலைகளுக்கு விநியோகிப்பதற்காக 1984-85 ஆம் கூட்டுறவு ஆண்டில் 19.27 கோடி ரூபாய் அளவிற்கும் நடப்பு கூட்டுறவு ஆண்டில் டிசம்பர் மாதம் வரையில் 5.07 கோடி ரூபாய் அளவிற்கும் பருத்தியைக் கொள்முதல் செய்துள்ளது

**33. காய்கறி பயிரிடுவோருக்கு விற்பனை வசதி ஏற்பாடு செய்தல்.**—காய்கறி பயிரிடுவோருக்கு நியாயமான ஊதியம் கிடைப்பதுடன் நுகர்வோருக்குத் தரமான காய்கறிகளை நியாயமான விலைகளில் வழங்கப்படவேண்டும் என்ற நோக்குடனும், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வரும் சூழ்நிலையிலும் மாநிலத்தில் 516 காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மதிய உணவு மையங்களுக்கு விநியோகித்த பிறகு மீதமுள்ள காய்கறிகள் இச்சங்கங்களால் நகர்ப்புற மையங்களில் உள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுவதற்காக வழங்கப்படுகின்றன. காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், 1984-85 ஆம் ஆண்டில் 4 கோடி ரூபாய் அளவிற்குக் காய்கறிகளை விற்பனை செய்துள்ளன. 1985-86 ஆம் ஆண்டில் 31-12-1985 வரையில் 4.78 கோடி ரூபாய் அளவிற்கு இச்சங்கங்கள் காய்கறிகளை விற்பனை செய்துள்ளன.

**34. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களோடும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களோடும் இணைத்தல்.**—உற்பத்தியாளர்கள் தம் விளைபொருட்களை விற்பதில் ஆதாயமான வருமானம் பெறவும், நுகர்வோர் இன்றியமையாப் பொருட்களை நியாயமான விலைகளில் பெறவும், ஏதுவாக கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், ஒரு பக்கம் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களுடனும் மறு பக்கம் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுடனும் இணைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, விற்பனைச்



சங்கங்களின் கொள்முதல் காரியங்கள் கடன்தாரர்களுடன் இணைக்கப்படுகின்றன. கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் அவற்றிற்கு தேவையானவற்றை வாங்குவதில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் சேவையைப் பெரிதும் பயன்படுத்திக்கொள்கின்றன. 1984-85 ஆம் ஆண்டில் விவசாய விளைபொருட்களை விற்பனை செய்ததின் மூலமாக 72 இலட்சம் ரூபாய் அளவிற்கு உற்பத்திக் கடன்கள் வசூலிக்கப்பட்டன. இது 1986-87 ஆம் ஆண்டில் 1.79 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தப்படும்.

**35. விளைபொருளீட்டுக் கடன்கள்.**—விவசாய உறுப்பினர்கள் தங்கள் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் வரையில் காத்திருக்கும் பொருட்டு அவர்களது விளைபொருட்களின் ஈட்டின் பேரில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும் தொடர்ந்து கடன்கள் வழங்கி வருகின்றன. இவ்வகைக் கடன்கள் 1984-85 ஆம் ஆண்டில் 2.78 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பயனுள்ள செயல் வரும் ஆண்டுகளில் விரிவாக்கப்படும். 1986-87 ஆம் ஆண்டில் 3 கோடி ரூபாய் அளவிற்கு விளை பொருளீட்டுக் கடன்கள் கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்படும்.

## கூட்டுறவு பதனிடுதல்.

**36. பதனிடும் பிரிவுகளை அமைத்தல்.**—விளைபொருட்களைப் பதனிடும் வசதிகளை உறுப்பினர்களாக உள்ள உற்பத்தியாளர்களுக்குக் குறைந்த செலவில் அளிக்கும்பொருட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள், விற்பனைச் சங்கங்களுக்கு அருகிலேயே பதனிடும் பிரிவுகளை நிறுவியுள்ளன. இதற்காக அவை அரசிடமிருந்து பங்கு மூலதனமாகவும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து கடனாகவும் நிதி உதவி பெறுகின்றன. அரிசி ஆலைகள் 38-ம் பருத்தி விதை நீக்கும் ஆலைகள் 20-ம் (16 கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமானவை) கடலை உடைக்கும் அலகுகள் 17-ம், எண்ணெய் பிழியும் இயந்திரங்கள் 8-ம், எண்ணெய் ஆலை ஒன்றும், தவிட்டு எண்ணெய் ஆலை ஒன்றும், பழம் பதனிடும் பிரிவுகள் இரண்டும், காப்பிக் கொட்டை பதனிடும் ஆலை ஒன்றும் மாவள்ளிக் கிழங்கு பதனிடும் பிரிவு ஒன்றும், குளிர் பதன அறை ஒன்றும் மொத்தம் 90 பதனிடும் பிரிவுகள் உள்ளன. கிருஷ்ணகிரியில் உள்ள பருத்தி விதை நீக்கும் ஆலையும், ஈரோட்டில் உள்ள மஞ்சள் தூள் தயாரிக்கும் ஆலையும், விரைவில் உற்பத்தியைத் துவக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆரூர், மணப்பாறை மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் பருத்தி விதை நீக்கும் இயந்திரங்கள் நிறுவுவதற்கும், விருதுநகரில் துவரம் பருப்பு உடைக்கும் ஆலை நிறுவுவதற்கும், 1986-87 ஆம் ஆண்டில் நிதி உதவி அளிக்கப்படும்.

## கிடங்கு வசதி.

37. **ஊரக மற்றும் விற்பனைக் கிடங்குகள்.**—கூட்டுறவுத் துறையில் உள்ள கிடங்கு வசதிகளை மேம்படுத்துவதின் தேவையைக் கருத்தில் கொண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் அரசிடமிருந்து 40 சதவிகித மானியத்தையும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து 60 சதவிகித கடனையும் பெற்று கிராம அளவில் ஊரகக் கிடங்குகளையும், மண்டி அளவில் விற்பனைக் கிடங்குகளையும் தொடர்ந்து கட்டி வருகின்றன. இக்கிடங்குகளின் ஒரு பகுதியை அலுவலகத்திற்குப் பயன்படுத்துவதோடு, விவசாய இடுபொருட்கள், இன்றியமையாத நுகர்பொருட்கள் மற்றும் விவசாய விளைபொருட்களை சேமித்து வைத்து விற்பனை செய்வதற்குப் பயன்படுத்துகின்றன. கிடங்கு கட்ட ஆகும் செலவு உயர்ந்துள்ளதைக் கருத்தில் கொண்டு, 107 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட ஓர் ஊரகக் கிடங்கிற்கான நிதியுதவியின் அளவை 1.14 இலட்சம் ரூபாயிலிருந்து 1.28 இலட்சம் ரூபாய்க்கு 1984-85 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது. அது போலவே 500 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட ஒரு விற்பனைக் கிடங்கிற்கான நிதியுதவியின் அளவை 2 இலட்சம் ரூபாயிலிருந்து 3.25 இலட்சம் ரூபாய்க்கும், 1,000 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட விற்பனைக் கிடங்கிற்கான நிதியுதவியின் அளவை 3.40 இலட்சம் ரூபாயிலிருந்து 5.25 இலட்சம் ரூபாய்க்கும், 1985-86 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது. நகைக் கடன்கள் வழங்குவதற்காக பாதுகாப்பு வசதிகள் கொண்ட அறைகள் கட்டுவதற்கு, தேவைப்படும் கூடுதல் நிதி உதவியை 1986-87 ஆம் ஆண்டிலிருந்து கட்டப்படும் ஊரகக் கிடங்குகளுக்கு வழங்குவது குறித்து பரிசீலனையில் உள்ளது. 1986 ஜனவரி மாத முடிவில், 4.81 இலட்சம் மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 4,185 ஊரகக் கிடங்குகளும், 1.47 இலட்சம் மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 277 விற்பனை மற்றும் நுகர்வோர் கிடங்குகளும் உள்ளன. 31-3-1985-ல் 6.11 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு இருந்த மொத்த சேமிப்புக் கொள்திறன் 31-1-1986-ல் 6.28 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு உயர்ந்துள்ளது. தற்போது 0.07 இலட்சம் கொள்திறன் கொண்ட 46 ஊரகக் கிடங்குகளும், 3 விற்பனை மற்றும் நுகர்வோர் கிடங்குகளும் கட்டுமானத்தில் இருக்கின்றன. 100 ஊரகக் கிடங்குகள், இரண்டு விற்பனைக் கிடங்குகள் மற்றும் ஒரு நுகர்வோர் கிடங்கு கட்டுவதற்கான நிதி உதவி 1986-87 ஆம் ஆண்டில் அளிக்கப்படும். கூட்டுறவுச் சங்கங்களிடமிருக்கும் கிடங்குகளின் பயன்பாட்டை அதிகரிப்பதற்காகவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.



## நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்.

38. **நுகர் பொருட்கள் சில்லறை விற்பனை.**—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்பு 3039 கல்லூரி மற்றும் உயர்நிலைப்பள்ளி மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள், 301 தொழிற்சாலை மற்றும் தோட்டத் தொழிலாளர் பண்டகசாலைகள், 15 மகளிர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உட்பட 3,848 பிரதம கூட்டுறவுப் பண்டக சாலைகளையும் அவற்றின் 550 கிளைகளையும், 29 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளையும் அவற்றின் 1,686 கிளைகளையும் மாநில நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும் கொண்டுள்ளது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செய்த சில்லறை விற்பனையின் மதிப்பு 1984-85 ஆம் ஆண்டில் 285 கோடி ரூபாயிலிருந்து 1985-86 ஆம் ஆண்டில் 31-1-1986 முடிய 505 கோடி ரூபாய்க்கு உயர்ந்துள்ளது. தமிழ் நாட்டில் உள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1984-85 ஆம் ஆண்டில் செய்துள்ள சில்லறை விற்பனையின் மதிப்பு நாடு முழுவதிலும் உள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செய்துள்ள சில்லறை விற்பனையின் மதிப்பில் மூன்றில் ஒரு பங்காகும் என்பது குறிப்பிடத்தக்கது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியாண்டு இலக்கான 450 கோடி ரூபாய்க்கும் அதிகமாக தற்போதே 1986-87 ஆம் ஆண்டில் 500 கோடி ரூபாய்க்கு நுகர் பொருள் சில்லறை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

39. **கிராமங்களில் இன்றியமையாப் பொருட்கள் விற்பனை.**—இன்றியமையாப் பொருட்களை விற்பனை செய்ய, ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் ஒரு நியாய விலைக் கடை துவக்கி நடத்தும் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட வருவாய் கிராமங்களில் 11,159 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டன. குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக் கடைகளிலிருந்து இன்றியமையாப் பொருட்களை விரைவில் வாங்கிச் செல்வதற்கு ஏதுவாக ஓராயிரம் குடும்ப அட்டைகளுக்கு மேல் கொண்டிருந்த நியாய விலைக்கடைகளை இரண்டாகப் பிரிக்கப்படவேண்டும் என்ற அரசின் தீர்மானத்திற்கு இணங்க, கூடுதலாக 1437 கடைகள் ஊரகப் பகுதிகளில் திறக்கப்பட்டன. இதனால் தற்போது 12,596 நியாய விலைக் கடைகள், கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. விற்பனையாளர் சம்பளம், வாடகை மற்றும் இதர சில்லறை செலவுகளுக்காக, கிராமக் கடைகளுக்கு அரசு தொடர்ந்து மானிய உதவி வழங்கி வருகிறது. 12-4-1985-லிருந்து கிராமக் கடை விற்பனையாளர்களின் சம்பளம் 150 ரூபாயிலிருந்து 200 ரூபாய்க்கு உயர்ந்ததால், அதிகபட்சத் தொகையாக, ஒவ்வொரு முழுநேரக்கடைக்கு 3,600 ரூபாய்க்குட்பட்டும், ஒவ்வொரு பகுதி நேரக்கடைக்கு 3,400 ரூபாய்க்குட்பட்டும், ஒவ்வொரு மாற்றியமைக்கப்பட்ட கடைக்கு 804 ரூபாய்க்குட்பட்டும், அரசு

மானிய உதவி வழங்குகிறது. கிராமக் கடைகள், 1984-85 ஆம் ஆண்டில் 126.20 கோடி ரூபாய் அளவிற்கே விற்பனை செய்திருக்க, 1985-86 ஆம் ஆண்டில் 31-12-1985 வரை 151.46 கோடி ரூபாய் அளவிற்கு இன்றியமையாப் பொருட்களை விற்பனை செய்துள்ளன, இவ்வாறாக, கிராமக்கடைகளில் பொருட்களின் விற்பனை கணிசமான அளவு உயர்ந்துள்ளது.

பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவுகளுக்குப் பெரும் பங்கை அளித்து அதனைத் திறம்பட செயற்படுத்தி வருவதில், நாடு முழுவதிற்கும் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. திறமையுடன் செயற்படுத்தப்பட்டு வரும் பொது விநியோகத் திட்டம், இன்றியமையாப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதிலும், சரியான நேரத்தில் சரிய முறையில் பொதுவாக மக்களுக்கும் குறிப்பாக நலிந்த பிரிவினர்க்கும் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்வதிலும், உதவி செய்கிறது என்ற ஒருமித்த கருத்து எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எந்த ஒரு தனியார் நிறுவனமும் இதில் ஈடுபடுத்தப்படவில்லையென்பதே தமிழ்நாட்டில் உள்ள பொது விநியோகத்தின் தனித்தன்மையாகும். கிராமப்பகுதி அளவில், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் இக்கடைகளை நடத்திவரும் பொறுப்பை ஏற்றுள்ள நிறுவனங்களாகும். கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலத்தில் உள்ள கடைகளில் 75 சதவீதக் கடைகளை நடத்தி, மொத்தமுள்ள 120 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களில் 90 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்குச் சேவை செய்து வருகின்றன.

40. சிறப்பு அங்காடிகளும், சிறப்புச் சிற்றங்காடிகளும் செய்த விற்பனை.—மாநிலத்தில் தற்பொழுது கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் பிரதம கூட்டுறவு பண்டகசாலைகள் ஆகியவற்றின் 30 பல்பொருள் அங்காடிகளும் (சிறப்பு அங்காடிகள்) 191 நவீன சில்லறை அங்காடிகளும்/ பெரிய அளவிலான சில்லறை அங்காடிகளும் (சிறப்பு சிற்றங்காடிகள்) இயங்கி வருகின்றன. இந்த அங்காடிகள் 1984-85 ஆம் கூட்டுறவு ஆண்டில் 95.80 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்துள்ளன. 1985-86 ஆம் ஆண்டில் ஐந்து நவீன சில்லறை அங்காடிகள் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் ஒரு பல்பொருள் அங்காடி அமைப்பதற்கும், மூன்று பெரிய அளவிலான சில்லறை அங்காடி அமைப்பதற்கும் மத்திய அரசு நிதி உதவி ஒப்பளித்துள்ளது. 1986-87 ஆம் ஆண்டில், மேலும் ஐந்து நவீன சில்லறை அங்காடிகள் அமைக்க வரவு செலவு திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

41. சுய சேவைப் பிரிவுகளைத் திறத்தல்.—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங் கள், தனியார் வியாபாரிகளுடன் திறமையாகப் போட்டியிடும் நிலையில் தற் போது இருக்கின்றன. நுகர்வோர்கள் உரிமையுடன் பொருள்களை எடுத்து தரத்தைக் கண்டறிந்து, விலைகளை ஒப்பிட்டுப்பார்த்த பிறகு வாங்குவதையே பெரிதும் விரும்புகின்றனர். நுகர்வோரின் இந்த மனப்பாங்கினைப் பூர்த்தி செய்யத் தொடங்கப்பட்டவையே சுயசேவைப் பிரிவுகளாகும். இந்த போக்கிற் கேற்ப, மாநிலத்தில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மூலம் கவர்ச்சிகரமான நவீன சுயசேவைப் பிரிவுகள் படிப்படியாக அமைக்கப் பட்டு வருகின்றன. இந்த முயற்சிக்குக் கிடைத்த நல்லதொரு வரவேற்பின் விளைவாக நுகர்வோர் கூட்டுறவுப் பண்டக சாலைகளின் வியாபாரத்தில் முன்னேற்றம் தெரிய வருகிறது. தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய நவீன சுயசேவைப் பிரிவு ஒன்று சென்னை நகரில் புதிய கட்டிட வளாகத்தில் அக்டோபர் 1985 முதல் இயங்கி வருகிறது. இது தவிர ஒன்பது இடங்களில் சுயசேவைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் மூன்று சுயசேவைப் பிரிவுகள் விரைவில் அமைக்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

42. நலிந்த பிரிவினருக்குச் சேவை.—மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் வாழும் நலிந்த பிரிவினர் மற்றும் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் முதலி யோர் தேவைக்கேற்ப நிறுவப்பட்ட 66 சிறு கிளைகளும், மாநகரங்களிலும், நகரங்களிலும் உள்ள குடிசைப்பகுதிகளில் வாழும் மிகமிக நலிந்தோருக் கென நிறுவப்பட்ட 100 மிகச் சிறு கிளைகளும் (மக்கள் அங்காடிகள்) 1984-85 ஆம் கூட்டுறவு ஆண்டில் 11.76 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய் துள்ளன. தொழிற்சாலைத் தொழிலாளர்கள்/தோட்டத் தொழிலாளர்கள்/ கூலிகள்/குறைந்த வருவாய்ப் பிரிவினர்/பின் தங்கிய வகுப்பினர்/குடிசைப் பகுதியினர் மற்றும் ஆதி திராவிட/பழங்குடியினர் நிறைந்துள்ள இதர குடி யிருப்புப் பகுதிகளில் வாழ்வோர் ஆகியோர்களின் தேவைகளை நிறைவேற்ற 11 சிறிய அளவிலான சில்லறை அங்காடிகள் அமைக்க நிதி உதவி ஒப்பளிக்கப் பட்டது. 1985-86 ஆம் ஆண்டில் மேலும் நான்கு சிறிய அளவிலான சில்லறை அங்காடிகள் அமைப்பதற்கான நிதி உதவியை மத்திய அரசு ஒப்பளித்துள்ளது.

43. மாணவர் சமுதாயத்திற்குச் சேவை.—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங் கள் நாட்டுடைமையாக்கப்பட்ட பாட நூல்களையும், குறிப்பேடுகளையும், 1984-85 ஆம் கல்வி ஆண்டில் முறையே 9.86 கோடி ரூபாய்க்கும், 1.79 கோடி ரூபாய்க்கும் 1985-86 ஆம் கல்வி ஆண்டில் முறையே 5.33 கோடி ரூபாய்க்கும், 1.33 கோடி ரூபாய்க்கும் விநியோகித்ததின் வாயிலாக, மாணவர் சமுதாயத் திற்குத் தொடர்ந்து சேவை செய்து வருகின்றன.

44. காய்கறி விற்பனைத் திட்டத்தை மாவட்டத் தலைமையிடங்களுக்கு அப்பாலும் விரிவாக்குதல்.—உற்பத்தியாளர்களுக்குத் தகுந்த வருமானமும் நுகர்வோருக்கு நியாயமான விலையும் அமையும் பொருட்டு சென்னை மாநகரில் 1981-82 ஆம் ஆண்டில் காய்கறி விநியோகத் திட்டம் தொடங்கப்பெற்றது. நாளடைவில் இத்திட்டம் இதர மாவட்டத் தலைமையிடங்களுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் மாநில அரசு நிதி உதவி செய்ய ஒப்பளிப்பு வழங்கிய நிலையில், புதிதாகப் பிரிக்கப்பட்ட மாவட்டத் தலைமை யிடங்களான சிவகங்கை மற்றும் விருதுநகர் நீங்கலாக மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டத் தலைமையிடங்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. 1985-86 ஆம் ஆண்டில் திருப்பூர், திருவாரூர், இராஜபாளையம், பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகிய ஐந்து நகரங்களுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக ஒரு தானியங்கி மூச்சக்கர வண்டியும், 8 பெட்டிக்கடைகளும் வாங்குவதற்காக அரசு நிதி உதவி வழங்குகிறது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1983-84 ஆம் ஆண்டில் 1.70 கோடி ரூபாய் அளவிற்கும், 1984-85 ஆம் ஆண்டில் 1.75 கோடி ரூபாய் அளவிற்கும் 1-7-1985 முதல் 31-12-1985 முடிய உள்ள காலத்தில் 57.43 இலட்சம் ரூபாய்க்கும் காய்கறிகளை விநியோகித்துள்ளன.

45. தரச் சோதனை வசதிகள் அளிக்கும் திட்டத்தினை விரிவாக்குதல்.—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்பது மாவட்டத் தலைமையிடங்களில் தரச்சோதனை ஆய்வுக் கூடங்களை நிறுவியுள்ளன. இதற்கான மூலதனச் செலவில் ஒரு பங்கை அரசு நிதியுதவி மூலம் இச்சங்கங்கள் பெறுகின்றன. விற்பனை செய்யப்படுகின்ற உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய நுகர் பொருட்களின் தரம் குறித்து, இவ்வாய்வுக் கூடங்கள் சோதனை மேற்கொள்ளு கின்றன. இதனால் நுகர்வோருக்குத் தரமான பொருட்கள் கிடைப்பது உறுதி செய்யப்படுகின்றது. 1984-85 ஆம் ஆண்டில் மேலும் ஏழு தரச் சோதனை ஆய்வுக் கூடங்களுக்காக அரசு நிதி உதவி செய்ய ஒப்பளித்துள்ளது. எனவே புதிதாகப் பிரிக்கப்பட்ட மாவட்டத் தலைமை யிடங்களான சிவகங்கை மற்றும் விருதுநகர் தவிர அனைத்து மாவட்டத் தலைமையிடங்களும், இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. 1985-86 ஆம் ஆண்டில் இத்திட்டம் விருதுநகர், கும்பகோணம் மற்றும் திண்டுக்கல் ஆகிய மூன்று இடங்களுக்கு மேலும் விரிவாக்கப்பட்டிருக்கிறது. 1986-87 ஆம் ஆண்டில், மூன்று கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளுக்குத் தரச் சோதனை நிலையங்கள் அமைப்பதற்காக உதவி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

46. மகளிர் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமைத்தல்.—வறுமையில் வாடுதல் மற்றும் சுரண்டப்படுதல் ஆகிய இன்னலுறும் நிலையில் வாழும் கிராம-நகர்ப்புற ஏழை மகளிரின் வாழ்க்கை நிலையை முன்னேற்றுவதற்காக



கூட்டுறவு இயக்கம் அவர்களது துயர்துடைக்கும் பணியினை நுகர்வோர் செவ்வனே ஆற்றி வருகின்றது. இம்மகளிர்க்கென கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமைக்கப்பட்டு இவற்றின் மூலமாக உறுப்பினர்களால் தயாரிக்கப்படும் ரொட்டி, ஜாம், அப்பளம், ஊறுகாய் போன்ற பொருட்கள் அவர்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் விற்கப்படுகின்றது. இதனால் அவர்கள் தமது வாழ்க்கைக்கு ஒரு நிலையான வருவாயைப் பெற இயலும். 'கோயம்புத்தூர் மாவட்ட மகளிர் நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை' என்னும் பெயரில் இவ் வகைப் பண்டகசாலை ஒன்று 7-1-1986-ல் கோயம்புத்தூரில் பதிவு செய்யப் பட்டுள்ளது. இப்பண்டகசாலைக்கு பங்குத் தொகை, உதவி தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கு மானிய உதவி மற்றும் முதுநிலை ஆய்வாளரின் இலவசச் சேவை ஆகிய வகைகளில் ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி அரசு அளித்துள்ளது.

47. மின்சக்தி விநியோகத்தை விரிவாக்குதல்.—கிராமப்புறங்களில் மின் சக்தியைப் பரவலாக வழங்குவதற்காகவும், பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்துவதற்காகவும், ஊரக மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. கும்பகோணத்திலும், திருமயத்திலும் இயங்கி வரும் சங்கங்கள் 1985 டிசம்பர் முடிய நலிந்த பிரிவினருக்கான "ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு மின்விளக்குகள்" திட்டத்தின் கீழ் 6,576 மின் இணைப்புகள் உட்பட மொத்தம் 20,473 மின் இணைப்புகளை வழங்கியுள்ளன. இது போன்ற மூன்றாவது சங்கம் வட ஆற்காடு மாவட்டத்தில், வந்தவாசியில் 28-11-1985 அன்று ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

## நலிந்த பிரிவினருக்கான கூட்டுறவுச் சங்கங்கள்.

48. தனி வகை கூட்டுறவுச் சங்கங்கள்.—தொழிலாளர்கள், சல்வைத் தொழி லாளர்கள், முடிதிருத்துவோர், உப்பளத் தொழிலாளர்கள் மற்றும் மலை வாழ் மக்கள் போன்ற நலிந்த பிரிவினரின் நலன் கருதி தனியாகக் கூட்டுறவு சங்கங் கள் இயங்கி வருகின்றன. தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களும், வேலையற்ற பொறியியல் பட்டதாரிகளுக்கான கட்டுமானப் பணிக் கூட்டுறவுச் சங்கமும், ஒப்பந்த வேலைகளைப் பெற்றுத் தருவதன் மூலமாக அவற்றின் உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கின்றன. பிறவகைச் சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களுக்கு சேவைகளையோ, அல்லது கடன் உதவியையோ அளிக்கின்றன. மானியம், பங்கு மூலதனம், கடன் மற்றும் துறை அலுவலர் களின் இலவசச் சேவை போன்ற உதவிகள் அரசால் இச்சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றன

49. சைக்கிள் ரிக்‌ஷா ஓட்டுநர்களுக்கு அவர்களது ரிக்‌ஷாக்களில் மோட்டார் பொருத்துவதற்காக நிதியுதவி.—சைக்கிள் ரிக்‌ஷாக்களில் மோட்டார் பொருத்திக் கொள்ள உதவும் திட்டம் 1982-83 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. சைக்கிள் ரிக்‌ஷா ஓட்டுநர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் செலவில் 25 சதவிகித அளவிற்கு 1,125 ரூபாய்க்கு மிகாமல் அரசு மானியம் அளிக்கிறது. மீதி செலவை மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து கடன் பெறுவதின் மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் [illegible]. இவ்வுதவி மூலம் பெறும் மோட்டார்கள் [illegible] ரிக்‌ஷாக்களுக்கு [illegible] அளிக்கப்படுகிறது. 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளில் வட சென்னை மற்றும் தென் சென்னையில் உள்ள இரண்டு கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களில் 167 பேர்களுக்கு அரசு மானியம் 1.65 இலட்சம் ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டது. 1984-85 ஆம் ஆண்டில் திண்டுக்கல் சைக்கிள் ரிக்‌ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களில் 50 பேருக்கு சைக்கிள் ரிக்‌ஷாக்களில் மோட்டார் பொருத்துவதற்காக மேலும் ரூபாய் 50,000 மானியமாக வழங்கப்பட்டது.

50. வேலையில்லாப் பொறியியல் பட்டதாரிகளுக்கான கட்டுமானக் கூட்டுறவுச் சங்கங்கள்.—பொதுப் பணித்துறையில் கட்டுமானப் பணிகளை நிறைவேற்றுவதில் கூடிய வரையில் தனியார் ஒப்பந்த முறையைத் தவிர்ப்பதன் மூலமாக வேலையில்லாப் பொறியியல் பட்டதாரிகளுக்கும், பட்டயதாரர்களுக்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் நோக்கத்துடன் 1981-ல் சென்னையில் [illegible] பொறியியல் பட்டதாரிகள் கட்டுமானக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டது. இது போன்ற இரண்டாவது சங்கம் 1981 ஆம் ஆண்டில் மதுரையில் வேலையில்லா பட்டயதாரர்களுக்காக அமைக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் அரசு இச்சங்கத்திற்கு நிதி உதவி ஒப்பளித்துள்ளது. இந்த இரண்டு சங்கங்களும் 98.29 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 109 ஒப்பந்தப் பணிகளை ஏற்று அவற்றை நிறைவேற்றுவதற்காகத் தம் உறுப்பினர்களிடம் ஒப்படைத்துள்ளன.

51. உடல் ஊனமுற்றோருக்கு உதவி.—இம்மாநிலத்தில் மொத்தம் ஆறு உடல் ஊனமுற்றோர் நலக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. முதற்கட்டமாக சென்னையிலும், திருச்சிராப்பள்ளியிலும் உள்ள இவ்வகைச் சங்கங்கள் இரண்டிற்கு 1985-86 ஆம் ஆண்டில் நிதி உதவி வழங்கப்பட்டது. மாவட்ட சமூக நல அலுவலர்களுடன் கலந்தாலோசித்து, சங்கங்களின் உறுப்பினர்களுக்குப் பயனுள்ள வேலைகளைத் தரக் கூடியப் பணிகளை ஏற்று நடத்துவதற்கு ஏதுவாக இவை அமையும். மேலும் இரண்டு சங்கங்களுக்கு, 1986-87 ஆம் ஆண்டில் நிதி உதவி வழங்கப்படும்.



52. பழங்குடியினர் மேம்பாடு.—மாநிலத்தில் 13 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 43,694 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள் தமது [illegible] எல்லைகளில் உள்ள எல்லா பழங்குடியினர் குடும்பங்களையும் உறுப்பினர்களாக்கியுள்ளன. பழங்குடியினரின் நலிந்த பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு அரசு இச்சங்கங்களுக்குத் தொடர்ந்து தாராளமாக நிதி உதவி செய்து வருகிறது. 1984-85 ஆம் ஆண்டு வரை இச்சங்கங்கள் பயிர்த்தொழிலுக்கும் மற்றும் இதர உற்பத்தி காரியங்களுக்கும் ஆண்டொன்றுக்கு 4 சதவிகித சலுகை வட்டியில் கடன்களையும் இதர சேவைகளையும் ஒரே இடத்தில் வழங்கி வந்தன. 1-4-1985 முதல் இவ்வகைச் சங்கங்கள் பழங்குடியினர் உறுப்பினர்களுக்கு வட்டியில்லா கடன்களை வழங்கி வருகின்றன.

இதில் ஏற்படும் வட்டியிழப்பை அரசு மானியமாக வழங்கும். இச்சங்கங்கள் செய்துள்ள சேவைகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

| ஆண்டு (1) | வழங்கிய கடன்கள் (2) | கொள்முதல் செய்த விளைப் பொருள்களின் மதிப்பு (3) | வழங்கிய வேளாண் [illegible]களின் மதிப்பு (4) | வழங்கிய வேளாண் இடு பொருட்களின் மதிப்பு (5) | விநியோகித்த நுகர் பொருட்களின் மதிப்பு (6) |
|---|---|---|---|---|---|
| | (இலட்ச ரூபாயில்) | | | | |
| 1980–81 | 23.85 | 8.01 | 7.31 | 1.41 | 33.51 |
| 1981–82 | 48.46 | 7.73 | 12.17 | 2.53 | 56.46 |
| 1982–83 | 54.23 | 14.19 | 9.11 | 2.48 | 59.92 |
| 1983–84 | 69.80 | 9.38 | 13.90 | 9.23 | 77.49 |
| 1984–85 | 76.17 | 14.38 | 17.92 | 5.28 | 76.48 |
| 1985–86 ஜனவரி முடிய | 45.31 | 12.69 | 15.62 | 4.24 | 7[illegible] |

# தமிழ் நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

## செயலக வெளியீடு
## OFFICIAL REPORT

சனிக்கிழமை, 26 ஏப்ரல் 1986-தொகுதி 224 எண் 4.
Saturday, 26th April 1986-Volume 224 No. 4.

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2.00]

(239)

## பொருளடக்கம்


பக்கங்கள்

1. வினாக்கள்-விடைகள் .. .. .. 531—559

2. அரசின் தீர்மானம்—
சமுதாய நல வளர்ச்சி மற்றும் நகராட்சி நிர்வாகமும், மாநகராட்சிகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் .. 559—651

3. அறிவிப்பு—
3–5–1986 நாளைய மேலவை நிகழ்ச்சிகளில் மாற்றம் குறித்து 628

4. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 651—652


143554

. சமூகப்பணி.—தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சீரிய முறை மூகப்பணிகளையும் புரிந்து வருகின்றன. எடுத்துக்காட்டாக சிழ் இனங்களைக் குறிப்பிடலாம் :—

இரத்த வங்கிக்கு மனமுவந்து இரத்ததானம் செய்தல்.

மாநில மற்றும் மாவட்ட அளவில் கூட்டுறவுத் தொண்டர் படை துதல்,

உடல் ஊனமுற்றோர்க்குச் சக்கர நாற்காலி போன்ற துணைக் கருவி வழங்குதல்.

ஏழை மகளிருக்குத் தையல் இயந்திரங்களைக் கொடுத்தல்.

தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனை வாரியத்துக்கு நன்கொடை ங்குதல்.

இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கு நன்கொடை வழங்குதல்.

முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திற்கு நன்கொடை வழங்குதல்.

கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் பயன் த்தவும், நூலகங்கள் நடத்தவும், கூட்டுறவுச் சமுதாயக் கூடங்கள் கட்டப் டு வருகின்றன. கூட்டுறவு விருந்தினர் இல்லங்களும் கூட்டுறவு தலைமைச் ங்களால் கட்டப்பட்டு வருகின்றன. கூட்டுறவு விளையாட்டுக் குழுக்கள் ாக்கப்பட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன.

59. பொதுவாக மக்கள் அனைவரின், குறிப்பாக நலிந்தோர் /மெலிந் ாரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், அவர்கள் வாழ்க்கையை வளமுள்ள கவும் மகிழ்ச்சி தருவதாகவும் ஆக்குவதே கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு/பணி ன்றியமையாதன. இப்பெரிய பணிகள் மேலும் சிறப்படையவும், பொறுப்புள்ள ாகவும் அமையவும் அனைத்து மட்டத்திலுள்ள கூட்டுறவுத் துறை அலுவலர், ணியாளர் மற்றும் கூட்டுறவாளர்கள் இந்த நல்ல தருணத்தில் ஒரு புதிய ச்வேகத்துடன் தங்களை அர்ப்பணித்துக் கொள்கின்றனர்.

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

**சனிக்கிழமை, 1986 ஏப்ரல் 26.**

**சித்திரை 13, அட்சய—திருவள்ளுவராண்டு—2017.**

**சென்னை,** செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் **தலைவர்** (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை **கூடியது.**

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### பரிசுச் சீட்டுகள்.

* 201 **வினா.—திரு. அ. ப. சிவராமன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) தமிழக அரசு பரிசுச் சீட்டு விற்பனை, 1984-ஆம் ஆண்டில் குறைந்துள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் யாது?

(உ) பிற மாநில பரிசுச் சீட்டுகள் மூலம், 1984-ஆம் ஆண்டில் மட்டும் கிடைத்த வருவாய் எவ்வளவு?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) 1984 ஆம் ஆண்டின் பரிசுச் சீட்டு விற்பனையைவிட 1985 ஆம் ஆண்டு ஜனவரி முதல் விற்பனையில் முன்னேற்றம் உள்ளது.

(இ) எழவில்லை.

(உ) ஜனவரி 1984 முதல் டிசம்பர் 1984 முடிய வெளிமாநில பரிசுச் சீட்டுகள் விற்பனை மீது விதிக்கப்பட்ட வரி மூலம் ரூ. 93,96,040 கிடைத்துள்ளது.

**திரு. அ. ப. சிவராமன்:** பரிசுச் சீட்டின் விற்பனையை அதிகமாக்க அரசு தீட்டியுள்ள முனைப்பான திட்டங்கள் என்ன? எந்த அளவிற்கு அத்திட்டங்கள் பரிசுச் சீட்டின் விற்பனையைக் கூட்ட உதவியாக இருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாக இருக்கும், விற்பனை அதிகமாகும், அதன் மூலம் அவர்களுக்கு வருமானம் அதிகம் வரும் என்ற சூழ்நிலை இருந்தால் அந்தக் கருத்தை பரிசீலனை செய்யலாம்.

**திரு. எல். கணேசன்:** தலைவர் அவர்களே, மது, மாது, சூது இவைகள் எல்லாம் மனித இனத்தைக் கெடுக்கின்றவைகள் என்று அறநூலாசிரியர்கள் கண்டறிந்து சொன்னார்கள். ஆகவே மதுவிலக்கைக் கொண்டுவர வேண்டும், விபசாரத்தைத் தடுக்க வேண்டும், சூது நடப்பதைத் தடை செய்ய வேண்டும் என்றும் கொள்கைகளை எண்ணங்களை நிறைவேற்றலாம். அரசுக்கு நிதி ஆதாரம் வேண்டுமென்றால், வேறு வரியிலே அல்லது வரி மூலம் பெருக்கிக் கொள்ளலாம். இந்தச் சூழ்நிலையிலே சூது மனப்பான்மையைப் பரப்புகின்ற வகையில் இருக்கின்ற இந்தப் பரிசுச் சீட்டை அரசு ரத்து செய்து, வேறு வகையில் நிதி திரட்டலாம். இந்தப் பரிசுச் சீட்டு, குதிரைப் பந்தயம் போன்ற சூதாட்டங்களை மக்கள் நலனுக்காகத் தடை செய்ய அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியது 'பாலிசி மேட்டர்'. இப்போது கேள்வி நேரமே நடக்கிறது. இதைப்பற்றி விவாதமாகச் செய்ய பாலிசி மேட்டரில் விவாதம் செய்ய உறுப்பினர் அவர்களுக்கு வாய்ப்பிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றார்கள். நானும் இப்போது அனுமதிக்கிறேன். ஆனால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் இதை இப்போது நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு தலைவர் அவர்கள் கூறுவது போன்று இது கொள்கைப் பிரச்சினையாக இருந்தாலுங்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்றால், அதை அகில இந்திய ரீதியிலே ஒழிக்கின்ற அளவுக்கு நாம் முயற்சி எடுத்தால்தான், அது நல்லதாக இருக்கும். இதிலே எல்லாம் தமிழகம் எடுத்துக்காட்டாக இருந்தால் மற்ற இடங்களிலே அதை ஒழிக்கவில்லை. அப்படி ஒழிக்காததால், நமக்கு வருமானத்தில் இழப்பு ஏற்படுகின்றது. இது நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றது. மற்ற இடங்களில் ஈடுபட்டுக்கொண்டுதான் இருக்கின்றார்கள். இப்போது பம்பாய், கல்கத்தா, ஹைதராபாத், பெங்களூர் போன்ற பகுதிகளில் நடைபெறுகின்ற குதிரைப் பந்தயங்களுக்கு இங்கே 'பெட்' கட்டலாம் என்று சொல்லி, இங்கேயே அதிகமாகக் கட்டுகின்றார்கள். அதைத் தடுத்து நிறுத்த முடியாது. அதுதான் இன்றைக்கு இருக்கின்ற நிலை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, அகில இந்தியா முழுவதும் அந்தப் புத்தி



கொள்கைகளை நிலைநாட்டுவது நல்லது. பரிசுச் சீட்டை அறிஞர் அண்ணா அவர்கள்தான் கொண்டு வந்தது. அண்ணா அவர்கள் நல்ல உள்ளம் கொண்டவர் தான். முன்னர் கண்டவர் கண்டபடி பரிசுச் சீட்டுக்களை நடத்தி பல்வேறு வகைகளிலே சம்பாதித்தார்கள். அதன் காரணமாகத்தான் "கண்டவர்கள் பரிசுச் சீட்டு நடத்தக் கூடாது. பரிசுச் சீட்டின் மூலமாக வருமானம் வர அதை அரசின் மூலமாகச் செய்தால் நல்லது. அதனால் மக்கள் நலப் பணிகளுக்கு உதவ முடியும்" என்ற அளவிலேதான் எடுத்துக் கொண்டோம். பிற நாடுகளிலே இருந்ததை எடுத்துக்காட்டாகக் கொண்டு தான், அதைக் கொண்டுவந்து வைத்து. இன்றைக்கு ரூ. 15 கோடி, ரூ. 16 கோடி அளவுக்கு பரிசுச் சீட்டின் மூலமாக அரசாங்கம் நிதி பெற்று, பல்வேறு நலப்பணிகளுக்கு அதைச் செலவழிக்கிறோம். இதைப் பின்பற்றித்தான் பிற மாநிலங்கள் அந்தத் திட்டத்தை நடத்துகின்றன. அங்கு தனிப்பட்ட ஏஜென்சிகளை வைத்து அவர்களுக்கு அதை விட்டுவிட்டிருக்கின்றார்கள். ஆனால் நம் மாநிலத்திலே நாம் ஏஜென்சிகளுக்குக் கொடுக்கவில்லை. தனிப்பட்டவர்களுக்குக் கொடுப்பதன் காரணமாக பல கேடுகள் ஏற்படுகின்றன என்பதால், இவற்றில் அரசு ஈடுபட்டு, முறைப்படுத்திச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழக அரசு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 6 ஆண்டுகளுக்கு முன்னர் கடலூரில் நடந்த சிறப்புக் குழுக்களுக்கு வந்தபோது, தமிழகத்திலே லாட்டரிச் சீட்டுக்களைப் பெரிதாகவும், கவர்ச்சிகரமாகவும் அளிக்க இருக்கின்றார்கள் என்று கூறினார்கள். இதுபோன்று இரண்டு மூன்று முறைகள் பரிசுச் சீட்டு சிறிது பெரிதாகவும் கவர்ச்சியாகவும் வரும் என்றார்கள். அப்படி அச்சடித்ததாகத் தெரியவில்லை. அப்படிச் செய்ய அரசுக்கு எண்ணம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இப்போது இருக்கும் அரசு அச்சகத்தில் இவற்றை அச்சிடுவதற்கான அளவுக்கு நேரம், வசதி, வாய்ப்புகள் இல்லை. தனியார் துறையில் கொடுத்து, அவற்றை அச்சடிக்க வேண்டியிருக்கிறது. இப்போது சில காலமாக தனியார் துறையில் ஓரளவுக்குக் கவர்ச்சிகரமாக அச்சடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். தொடர்ந்து இதை நடத்துகின்ற நிலைமை இருப்பதாலும், பிற மாநிலங்களில் இருக்கிறவர்கள்கூட இங்கே, சிவகாசியிலிருந்து பெரும்பாலும் பரிசுச் சீட்டுகளை அச்சிடுவதாலும், அரசு சார்பிலே ஒரு அச்சகத்தை வைத்தால், பாதுகாப்போடு அச்சடிக்கும் சூழ்நிலை ஏற்பட்டு, அந்தப் பணி சிறப்பாக நடை

[1986 ஏப்ரல் 26

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆரம்பத்திலிருந்து 1983 ஆம் ஆண்டு வரையில் தமிழக பரிசுச் சீட்டின் விற்பனையைப் பொறுத்த வரையில் நல்ல முன்னேற்றம் இருந்தது. 1983-84-இல் பிற மாநில பரிசுச் சீட்டுக்கள் தமிழகத்திலே அதிகமாக விற்கத் தொடங்கியதாலும், அவர்கள் வழங்கும் பரிசுத் தொகையும் மிக அதிகமாக இருந்ததாலும், அதிகமான அளவிற்கு அவர்கள் கவர்ச்சியைத் தந்த காரணத்தால், அந்தப் பரிசுச் சீட்டுக்களின் விற்பனை அதிகமாகப் பரவத் தொடங்கியது. ஆகவே பிற மாநிலங்களின் பரிசுச் சீட்டுகளை நம் மாநிலத்தில் விற்பதைத் தடை செய்ய வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டோம். ஆனால் அப்படிச் செய்வதற்கு இல்லை என்று கூறி விட்டார்கள். அதற்குப் பிறகு நாம் இரண்டு மூன்று மாநிலப் பரிசுச் சீட்டுகளைத் தடை செய்த நேரத்தில், அவர்கள் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று, தடை விதித்தது சரியல்ல என்ற தீர்ப்பை வாங்கி விட்டார்கள். அதற்குப் பிறகுதான் நாம் பரிசுச் சீட்டிற்கு 20 சதவிகிதம் வரியை விதித்து, தமிழக பரிசுச் சீட்டைப் பொறுத்த வரையில், அரசே இந்த வரியைச் செலுத்தி ஒரு ரூபாய்க்கே பரிசுச் சீட்டுக்களை விற்பது என்று முடிவுக்கு வந்தோம். அதற்குப் பிறகு சிறப்பாக, செம்மையாக அதனை வெளியிடுகிற அளவிற்கு நடவடிக்கை எடுத்து கடந்த இரண்டாண்டுக் காலமாக ஓரளவிற்கு நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறோம். ஏற்கெனவே 4 சிறப்பு பரிசுச் சீட்டுக் குலுக்கல் இருந்ததை 6 சிறப்பு பரிசுச் சீட்டுக் குலுக்கல் என்று மாற்றியிருக்கிறோம். ஏற்கெனவே 10 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகை கொடுத்த நிலையை மாற்றி, சிறப்புக் குலுக்கல் மூலம் 20 இலட்சம் ரூபாய் வழங்கலாம் என்று வைத்திருக்கிறோம். மாதத்திற்கு இரண்டு முறை குலுக்கல் என்று இருந்ததை 3 முறை என்று மாற்றி, பிறகு வாரத்திற்கு ஒரு முறை என்று மாற்றி, அதற்குப் பிறகு வாரத்திற்கு இரண்டு முறை என்ற அளவிலே மாதத்திற்கு எட்டு முறை சீட்டுக் குலுக்கலாம் என்று வைத்து அதற்கு உச்சபட்சமாக ஒரு இலட்சம் ரூபாய் பரிசு வழங்கலாம் என்ற முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். அந்தப் பரிசுச் சீட்டுக்களை கவர்ச்சிகரமாக வெளியிடுகிற முயற்சி மேற்கொள்ளப்பட்டு, பரிசுச் சீட்டுக்களைத் தொடர்ந்து நடத்துகிற வகையில் நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதால், இதற்காக தனியாக ஒரு அச்சகம் வைக்கும் முயற்சி தனியாக மேற்கொள்ளப் படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ப. சிவராமன் :** 1983-84, 1985-86 ஆகிய ஆண்டுகளில் தமிழகத்திலே, பிற மாநில பரிசுச் சீட்டுக்களைக் காட்டிலும் தமிழ் நாடு பரிசுச் சீட்டின் விற்பனை குறைந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மக்களைக் கவருகிற அளவிற்கு பரிசுச் சீட்டுக்கள் இல்லாமலும், முகவர்களுக்குக் கமிஷன் தொகை குறைவாக இருப்பதும்தான் தமிழ் நாடு பரிசுச்



1986 ஏப்ரல் 26]

சீட்டுக்களின் விற்பனை குறைவாக இருப்பதற்குக் காரணம் என்று சொல்லப் படுகிறதே, அது உண்மையா? அப்படி இருக்குமானால், தமிழ் நாடு பரிசுச் சீட்டுக்களின் விற்பனையை அதிகப்படுத்த என்னென்ன வழிவகைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் கூறிய வகையில், ஓரளவிற்கு உண்மை உண்டு. கவர்ச்சிகரமானதாக சீட்டுக்களை ஆக்க வேண்டும் என்ற எண்ணத்தை முகவர்கள் தெரிவித்து வருகிறார்கள். மற்ற மாநிலங்களில் தனியாரிடம் குறைந்த அளவு விகிதத்தைப் பெற்றுக் கொண்டு பரிசுச் சீட்டுக்களைக் கொடுத்துவிடுவதால், அவர்கள் ஏஜென்சி கமிஷனை அதிகமாகத் தருவதால், அந்த மாநில பரிசுச் சீட்டுக்களை வாங்கி விற்பதிலே அதிக நாட்டம் செலுத்தி வருகிறார்கள். அவர்களுக்கு வழங்கப்படும் விகிதம் இப்போது கூடுதலாக்கப்பட்டிருக்கிறது. பரிசுகளின் எண்ணிக்கையும் இப்போது அதிகமாக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-05)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, பல்வேறு துறைகளிலே நிதி நெருக்கடி ஏற்பட்டு, அந்தத் துறைகளிலே தேவைகள் எவ்வளவோ அந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்கும் அந்த அளவுக்கு நிதி ஒதுக்க நிதி இல்லாமல் அதிகமான பற்றாக்குறை இருக்கின்றது. உதாரணத்திற்குச் சொல்வதென்றால், கல்வித் துறையில் பள்ளிக் கூடங்கள் கட்டுவதற்கு என்று ரூ. 100 கோடி அளவுக்குத் தேவை இருந்தும், ஒரு கோடி ரூபாய் தான் ஒதுக்கியிருக்கின்றார்கள். இதுபோன்று முன்னுரிமைத் திட்டங்களுக்கு உதவுகின்ற வகையிலே அந்தந்தத் துறைகளிலே சிறப்புக் குலுக்கல்கள் என்று ஏற்படுத்தி, அதன் மூலமாக நடத்திக் கொண்டால்கூட, அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும். அதற்கு வழிவகைகள் செய்ய இந்த அரசு பரிசீலனை செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த பரிசுச் சீட்டுத் திட்டத்தின் மூலம் கிடைக்கின்ற இந்தத் தொகை, மீதத் தொகைகள் இப்படிப்பட்ட பொது நலன்களுக்குத்தான் பயன்படுத்தப்படுகின்றன. எந்த அளவுக்கு அந்தந்தத் துறைகளுக்குப் பணம் ஒதுக்கப்படுகின்றது என்ற விவரங்களுக்குத் தனிக் கேள்வி போட்டால், சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று குறிப்பிட்ட துறைக்கு பரிசுச் சீட்டு குலுக்க வழிசெய்தால், அதன் மூலம் வருகின்ற வருவாய் அதிக

பெறுமென்று குறிப்பு இருக்கிறது. அரசாங்கத்தின் முழுக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு, தனியார் ஏஜெண்டுகளுக்கு அதை விடலாமா என்ற தன்மையும் இருக்கிறது. அச்சடிக்கும் உரிமையை அவர்களுக்குத் தராமல், அச்சடிப்பதை நாம் வைத்துக்கொண்டு, விளம்பரம், விற்பனை, சப்-ஏஜெண்ட் போடுவது இவற்றை அவர்களிடம் விட்டு, மொத்தத்தில் இவ்வளவு கமிஷன் என்று சொல்லி, அச்சடிப்பதை நாம் செய்ய வேண்டும், அவர்களை அச்சடிக்க விடக்கூடாது என்று சொல்லி, இப்படி ஒரு கட்டுப்பாட்டில் இதைக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும். அரசு சப்-டிரெஷரிகள் மூலமாக இவற்றை விற்பது என்றால், விற்பனையில் போதிய அக்கறை காட்டுவார்கள் என்று எதிர் பார்க்க முடியாது. ஆகவேதான் சில கட்டுப்பாடுகளின்கீழ், சில அனுமதி பெற்ற ஏஜெண்டுகள் மூலமாக விற்றால், அவர்களுக்குக் கமிஷன் வருகிறது என்ற நோக்கத்தோடு அதிகமாக அவர்கள் விற்பனை செய்வார்கள். எனவே கட்டுப்பாட்டை விடாமல் செய்யலாமா என்ற குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, வெளி மாநிலப் பரிசுச் சீட்டுகள் நம்முடைய மாநிலத்தில் ஆதிக்கம் செலுத்துவதாகவும், கவர்ச்சிகர மாகவும், அதிகம் பரிசு வழங்குவதாகவும் இருக்கின்றன. அந்த வகையில் நம்முடைய மாநிலப் பரிசுச் சீட்டுகளையும் வெளி மாநிலங்களுக்கு அனுப்பும் முயற்சியை அரசு எடுத்திருக்கிறதா? அந்த வகையில் ஒவ்வொரு மாநிலத் திற்கும் நம்முடைய மாநிலத்திலிருந்து அனுப்பும் பரிசுச் சீட்டுகள் எவ்வளவு? அதன் மூலம் நம்முடைய மாநிலத்திற்குக் கிடைத்துள்ள வருமானம் எவ்வளவு என்று மாநில வாரியாக அமைச்சரவர்கள் சொல்லு வார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால், அதனுடைய விவரங்களைச் சொல்லலாம். விவரங்கள் இருக்கின்றன, எந்தெந்த மாநிலங்களில் எவ்வளவு என்று என்ன காரணத் தாலோ அதிகமான அளவுக்கு பரிசுச் சீட்டுகள் வாங்கும் பழக்கம் தமிழகத் தில்தான் இருக்கிறது. அதனால் தமிழகத்தைச் சிறந்த மார்க்கெட்டாக அகில இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்கள் கருதுகின்றன. மொத்த டிக்கெட் களில் 50, 60 சதவிகிதம் டிக்கெட்டுகளுக்கு மார்க்கெட் இங்கேதான் இருக் கிறது. இதற்குக் காரணம், பத்திரிகைகளில் எல்லாம் ராசி பலன் போடு வதும், பெருந்தொகை விழும், கன்னி ராசிக்கு விழும் என்றெல்லாம் சொல்லு வதாலும்தான் என்று நினைக்கிறேன். இதிலே நம்பிக்கை கொண்ட மக்கள் வேறு எந்த மாநிலத்திலும் இந்த அளவுக்கு இல்லை. பத்திரிகைகளிலும் இவ்வளவு ராசி பலன்கள் வருவதில்லை. அதனுடைய அடிப்படையில் இருக்குமோ என்று எண்ண வேண்டியிருக்கிறது.



**திரு. அ. மாயவன் :** தலைவரவர்களே, தமிழகத்தில் இன்று ஏராளமான பள்ளிகளுக்கு கூரைகள் கிடையாது. நிலையான கட்டிடங்கள் கிடையாது. ஆகவே பரிசுச் சீட்டு விற்பனையில் வரும் உபரித் தொகை முழுவதையும் வேறு எந்தத் துறைக்கும் ஒதுக்காமல், இந்தப் பணிகளைச் செய்து முடிக்க, அதாவது கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க ஒதுக்கப்படுமா? 5 அல்லது 10 வருடங்கள் கிடைக்கும் உபரித் தொகை முழுவதும் இதற்காக ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவது போன்று இது ஒரு முக்கியமான துறை. இதுவே முக்கியமான துறையல்ல. இதைவிட சிறப்பான தன்மைகளில் நாம் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. இதற்கும் கவனம் செலுத்தப்படுகிறது, மற்ற வைகளுக்கும் கவனம் செலுத்தப்படுகிறது.

**திரு. பி. பார்த்தசாரதி :** தலைவரவர்களே, பிற மாநில பரிசுச் சீட்டுகள் கவர்ச்சிகரமாக இருப்பதால், நம்முடைய விற்பனை குறைவாக இருக்கிற தென்று சொல்லப்படுகிறது. எனவே பிற மாநில பரிசுச் சீட்டுகளை முறைப் படுத்தும் சட்ட திட்டங்களை உருவாக்கப் போகிறோமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, முறைப் படுத்த வேண்டுமென்று மத்திய அரசுக்குச் சொல்லியிருக்கிறோம். அப்படி முறைப்படுத்தும் வகையிலேகூட அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், அதிகபட்சமாக ரூ. 25 லட்சத்திற்குமேல் பரிசு கொடுக்கக் கூடாது என்று ஒரு முறையை வைத்தார்கள். சாதாரண குலுக்கல் சீட்டில் ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேல் பரிசு இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். ஆனால் 'ஆக்ட்' ஆக அதைக் கொண்டுவாராததால், பல மாநிலங்கள் அதை மீறிக் கொண்டிருக்கிறார்கள். அதைச் சட்டமாகக் கொண்டு வந்து நிறை வேற்ற வேண்டும், ஒரு கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர வேண்டும். எல்லா மாநிலங்களும் அந்தக் கட்டுப்பாட்டில் இருந்தால், மாநிலத்திற்கு மாநிலம் இப்படி தகராறுகள் ஏற்படாமல் இருக்கும். ஒரு மாநிலத்தின் பணத்தை இன்னொரு மாநிலம் சுரண்டாமல் இருக்கவும் அந்தந்த மாநிலத்தின் பணம் அவர்களுக்கே பயன்படும் சூழ்நிலையும் ஏற்படும். அப்படி இருக்க வேண்டு மென்பதுதான் இந்த அரசாங்கத்தின் நோக்கம். அதை மத்திய அரசுக்கு வலியுறுத்தி வருகிறோம்.

(முற்பகல் 10-15)

**திரு. காடுவெட்டி கண்ணப்பன்:** எல்லா நிலையிலேயும் இப்பொழுது கள்ளத்தனமாக வியாபாரங்கள் புழக்கத்தில் இருக்கின்றன. அதுபோல கள்ளப் பரிசுச் சீட்டுகள் அதிகமாக, தமிழகத்தைப் பொறுத்தவரையில், இருப்பதாகச் சொல்கிறார்களே, அதைத் தடுக்க, அதை விற்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** கள்ளத்தனமாக அதிகமான பரிசுச் சீட்டுகள் விற்கப்படுவதாகச் சொல்ல முடியாது. சில பல இடங்களில் அவ்வாறு இருக்கக் கூடும். அதனால்தான் தற்போது அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உரியவர்கள் மீது வழக்கு தொடுக்கப்பட்டு தண்டனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

*Industrial Tribunal, Madras.*

*202 *Q*.—Thiru K. SUBBU: Will the Hon. the Minister for Finance be pleased to state:

(*a*) whether it is a fact that the Industrial Tribunal situated within the City Civil Court Complex, Madras, is functioning without a Judge, from 31st March 1985; and

(*b*) if so, the action taken to fill up the vacancy?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** சென்னையிலுள்ள தொழில் தீர்ப்பாயத்தின் நீதிபதி (Industrial Tribunal, Madras) திரு. கே. எல். குருமூர்த்தி 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் ஓய்வு பெற்றபின் திரு. கே. இ. வரதன் தொழில் தீர்ப்பாய நீதிபதியாக அரசு ஆணை எண் 1300, தொழிலாளர் துறை, நாள் —7—85-ல் நியமிக்கப்பட்டார். மேலும் திரு. கே. இ. வரதன் தொழில் தீர்ப்பாய நீதிபதியை அரசு ஆணை எண் 1667, தொழிலாளர், நாள் 12—8—85-ல் பஞ்சாலை தொழிலாளர்களின் வழக்கின் தீர்ப்புக்காக ( Adjudication of Textile Mills ) சிறப்பு தொழில் தீர்ப்பாயமாக (Special Industrial Tribunal) நியமிக்கப் பட்டுள்ளார். இதனை அடுத்து சென்னை முதன்மை தொழிலாளர் நீதி மன்றத் தலைவராக (Presiding Officer, Principal Labour Court, Madras) பணி புரிந்து வந்த திரு. பைசி முகம்மது அவர் களை தொழில் தீர்ப்பாய நீதிபதியாக அரசு ஆணை எண். 142. தொழிலாளர், நாள் 28—1—1986-ல் நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு. க. சுப்பு:** இந்த நீதிபதியை நியமித்திருப்பதற்கு நன்றி. இது போல தமிழகம் பூராவும் உள்ள பல தொழில் கோர்ட்டுகளில் நீதிபதிகள் நியமிக்கப்படவில்லை. இதனால் நீதி வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டு பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. உயர்நீதிமன்றமும் இதில்



சம்பந்தப்பட்டிருப்பதால், நான் அரசைக் குறை கூறவில்லை. ஆகவே நிரப்பப்படாமல் இருக்கக் கூடிய இடங்களில் எல்லாம் விரைவில் நீதிபதிகளை நியமிக்க இந்த அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நீதிபதிகளை நியமிப்ப தைப் பொறுத்தவரையில், முதலில் உயர்நீதிமன்றத்தினுடைய கருத்தை அறிந்து, பிறகு பொதுத் துறையின் மூலமாக தொழிலாளர் நலத் துறைக்கு அது வந்து, பிறகு தொழிலாளர் நலத் துறை அதனை ஏற்று நியமிக்க வேண்டிய தன்மை இருப்பதால், இப்படிப்பட்ட காலதாமதம் ஏற்பட்டு விடுகிறது. இருப்பினும் காலதாமதம் குறைக்கப்பட வேண்டும் என்பது தான் தொழிலாளர் நலத் துறையினுடைய முக்கிய நோக்கம். உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல், இப்படிப்பட்ட தீர்ப்பாய நீதிமன்றங்களில் எல்லாம் நீதிபதிகள் உடனுக்குடன் நியமிக்கப்படாமல் இருப்பது என்பது வழக்குகள் தேங்குகின்ற நிலை ஏற்பட்டு, அதனால் அது தொழிலாளர் நலனுக்கு நன்மை பயப்பதாக ஆகாது. ஆகவே தான் விரைவில் நீதிபதி களை நியமிக்க வேண்டுமென்ற கருத்தை உயர்நீதிமன்றத்திற்குத் தெரிவித் திருக்கிறோம். அவர்களுடைய கருத்தை அறிந்து, அது பொதுத் துறைக்கு வந்து, பிறகு தொழிலாளர் நலத் துறைக்கு வந்து, அவர்கள் அதனை ஏற்று நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். பொதுவாகவே தொழிலாளர் நலத் துறைக்கு அதுபற்றி வந்த உடனேயே நாம் நியமித்து விடுகிறோம். முன்பு ஒருமுறை இம்மாதிரி தொழிலாளர் நலத் துறைக்கு வந்த அன்றைக்கே ஆணை பிறப்பித்து விட்டோம். அதுபோல 28—1—1986 அன்றைக்கு உயர்நீதிமன்றத்திலிருந்து கருத்து வந்த அன்றைக்கே தொழி லாளர் நலத் துறை மூலமாக நீதிபதியை நியமித்து விட்டோம். உறுப்பினர் கூறியதுபோல வழக்குகள் தேங்கியிருப்பது தொழிலாளர்களுக்கு நலன் பயக்காது என்பதால், காலதாமதம் இல்லாமல் நீதிபதிகளை நியமிக்க இந்த அரசு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** இதுவரை எத்தனை நீதிபதி பணியிடங்கள் நிரப்பப்படா மல் காலியாக இருக்கின்றன? எத்தனை நீதிபதி காலியிடங்கள் குறித்து உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது ? அங்கிருந்து எத்தனை நீதிபதி பதவிகள் குறித்து பதில் வந்திருக்கிறது என்பது போன்ற விவரங்களை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதைப்பற்றி விவரங்கள் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரமாக பதில் தருகிறேன்.

திரு. எல். கணேசன் : அமைச்சர் அவர்கள் கூறியபோது, தொழில் நீதி மன்றத்தைப் பற்றி பதில் அளித்தார்கள் என்றாலும்கூட, அங்கே மட்டும் தான் நீதிபதி பதவிகள் காலியாக இருக்கின்றன என்பதல்ல. உயர்நீதிமன்றத்தில் கூட நீதிபதி பதவிகள் காலியாக இருக்கின்றன. பல நீதிபதிகள் நியமிக்கப்படாமல் இருக்கின்றன. அதுபோல மாவட்ட அளவில் பல நீதிபதிகள் நியமிக்கப்படவில்லை. Justice delayed is Justice denied. அந்த வகையில் இப்படிப்பட்ட நீதிபதிகள் இடங்களை உடனுக்குடன் தாமதமில்லாமல் இனிமேலாவது நியமிக்க இந்த அரசு ஆவன செய்யுமா ?

(முற்பகல் 10-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு பதில் சொல்லக்கூடியவர் சட்டத் துறை அமைச்சர்தான். எழுப்பிய வினாவுக்கு அந்தத் துறை விடையை அளித்திருக்கிறது. இருந்தாலும் இந்தக் கருத்துக்கள் சட்டத் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டு கவனிக்கப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 24—4—1986 அன்று ஒத்தி போடப்பட்ட வினாக்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

ஓய்வூதியம் பெறுவோரின் நலனுக்காக தனித் துறை.

* 181. வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஓய்வூதியம் பெறுவோரின் நலனுக்காக, தனித் துறை ஒன்றை அமைக்கும்படி, மத்திய அரசு, மாநில அரசுகளைக் கேட்டுக் கொண்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், தமிழகத்தில் அது எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். உண்மை.

(இ) இதுபற்றி ஆராய்ந்து தனித் துறை இந்த மாநிலத்தில் தேவையில்லை என்று முடிவெடுக்கப்பட்டு அதற்கான பதிலும் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, ஓய்வு பெறுபவர்களின் நலன்களைக் கவனிப்பதற்காக மகாராஷ்டிர மாநிலத்தில் தனி அமைச்சரே இருக்கிறார். ஆனால் நம்முடைய மாநிலத்தில், அப்படி தனியாக ஒரு அமைச்சரைப் போடலாம் என்று மத்திய அரசு பரிந்துரை செய்தும்



ஆலோசனை சொல்லியும்கூட, தனித் துறையே தேவையில்லையென மத்திய அரசுக்கு பதில் அனுப்பப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மத்திய அரசு எந்த அடிப்படையில் இது தேவை என்று குறிப்பிட்டது, நம்முடைய அரசு எந்த அடிப்படையில் இது தேவையில்லை என்று பதில் அனுப்பியது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு ஓய்வூதியம் பெறுபவர்களுடைய நலனுக்காக, அதில் காலத் தாழ்வு ஏற்படாமல் தடுக்கவும், அதுகுறித்து ஆராய்ந்து முடிவு எடுக்கவும், விரைந்து நடவடிக்கை எடுக்கவும் பல்வேறு சாதகமான, நலம் பயக்கும் வகையில் தனித் துறையை அங்கே ஏற்படுத்தியிருப்பதாகவும், அதேபோன்று மாநிலங்களும் கடைப்பிடிக்கலாம் என்று ஆலோசனையாக—வற்புறுத்தல், கட்டாயம் இல்லாமல்—கடைப்பிடிக்கலாம் என்றும் குறிப்பு அனுப்பினார்கள். அதன் அடிப்படையில் மாநில அரசின் கருத்து கேட்கப்பட்டது. அந்த வகையில் நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், ஓய்வூதியம், பணிக்கொடை பெறுபவர்களுக்கு விரைவில் கொடுக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதுமட்டுமல்லாமல், ஓய்வு பெறும் நாளுக்கு 24 மாதங்களுக்கு முன்பே கணக்கிடுவதற்காக, அக்கவுண்டன்ட் ஜெனரல் ஒப்புதலுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டும் வருகிறது. அவர்கள் ஓய்வு பெற்றவுடனேயே இவற்றை உடனுக்குடன் கொடுத்துவிட ஆவன செய்யப்படுகின்றன. ஒரு சில நேர்வுகளில், தற்காலிக வேலை நீக்கம், மற்றபடி துறை நடவடிக்கைகள் காரணமாக அவர்களுக்கு உடனடியாக ஓய்வூதியம் தர இயலவில்லை என்பதற்காக இதில்கூட ஒரு வழிவகை செய்திருக்கிறோம். அதற்குத் தாமதம் ஏற்படும்போது, தற்காலிக ஓய்வூதியம் தரலாம் என்ற முறையைக் கொண்டுவந்து, ஒருசில பேர் அதன்படியும் ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள். அதைத் தவிர இந்த அரசைப் பொறுத்தவரையில், 'பென்ஷனர்ஸ் கிரிவன்ஸ் செல்' என்று உருவாக்கப்பட்டு, அவர்கள் ஆங்காங்கு சென்று மாவட்டங்களில் இருக்கிற நிலைமைகளைக் கண்டு ஆராய்ந்து, அதற்குத் தீர்வு கண்டுபிடிப்பதற்கும், காலத்தாழ்வு ஏற்படுகிறதா என்று கண்டு அறிந்து தலைமைக் கணக்கு அதிகாரியுடன் கலந்து இதைச் சீர்படுத்தி செம்மைப்படுத்துவதற்கும் வழிவகை செய்திருக்கிறார்கள். ஆகவே இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், தனி அமைப்பு தேவையில்லையென்று தெரிவித்திருக்கிறார்கள். மத்திய அரசைப் பொறுத்தவரையில், பென்ஷன் பெறுவோரின் எண்ணிக்கை 22 லட்சம். நம் மாநிலத்தில் அத்தகையவர்களின் எண்ணிக்கை 1.6 லட்சம் தான். எனவேதான் இங்கே தனித் துறையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்தத் துறையைக் கவனிக்க பல்வேறு அதிகாரிகள் இருந்தாலும்,

நிதித் துறையின் செயலாளர் இவர்களுக்கு மேல் இருக்கிறார். ஆகவே நிதித் துறையின் கீழ் வந்தாலும் பல்வேறு அதிகாரிகள் இதைக் கவனித்துக் கொண் டிருக்கிறார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விளக்கி யதைப்போல், பல இனங்களில் தாமதம் இல்லாவிட்டாலும், இப்போதும் கூட இவ்வளவு ஏற்பாடும் செய்ததற்குப் பிறகும்கூட, பணிக்கொடை, ஓய்வூதியம் ஆகியவை மாதந்தோறும் உரிய நேரங்களில் கிடைக்கக்கூடிய நிலையில் இல்லை. இவ்வளவு ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள் என்றாலும், முயற்சிகள் நடக்கின்றன என்றாலும், எல்லா இடங்களிலும் நடைமுறையில் சிக்கல்கள் உள்ளன. அதுபோல் ஓய்வு பெற்றால், 5,000 ரூபாய் என்று தரப்படுவதும், அமைச்சர் சொல்வதைப்போல, அந்தக் காலக் கெடுவுக்குள் தரப்படுவ தில்லை. நிறைவாகக் கிடைக்க வேண்டிய அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனால் போதிய பலன்கள் ஏற்படவில்லை. மாதந்தோறும் நல்வாழ்வுப் படி என்று தரப்படுகிறது. அதைப்பற்றி புதிய சலுகைகளைத் தர ஆய்வு செய்வதற்கும், இதற்கு என்று தனித் துறை இல்லாவிட்டாலும், நிதித் துறையின் கீழ் இதைக் கவனிக்க மேல் மட்டத்தில் தனியாக அதிகாரி கள் இருக்கிறார்களா என்றால், இல்லை. ஒருவரே எல்லாவற்றையும் பார்க்க வேண்டியிருக்கிறது. எனவே இந்த நிலைமையை மாற்றி, நல்ல சூழ்நிலையை விரைவில் ஏற்படுத்துவதற்கு தனித் துறை இல்லாவிட்டாலும், தனி அதிகாரி யாவது நியமிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-25)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தக் காலத்தாழ்வு ஏற்படக் கூடாதென்பதற்காகத்தான் அவரவர்களுக் குரிய ஓய்வூதியங்கள் அவரவர்களுக்கு உரிய முறையில் கொடுக்கப்படுவதற்கு பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொன்னேன். அதிலே இவ்வளவு ஏற்பாடுகள் செய்யப்பட்டதற்குப் பிறகும் சிலபல சிக்கல்கள் இருக் குமானால், அவற்றை நீக்குவதற்கு என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறாரோ அதுபோல் எடுக்க லாம். அவற்றைக் கவனிப்பதற்கு தனித்தனியாக இப்போது அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆகவே ஒரு துறை ஏற்படுத்தி, தனி உயர் அதிகாரி ஒருவரைப் போடுவதாலேயே இந்தக் காரணங்கள் நீங்கிவிட முடியாது என்று கருதுகிறேன். இக் குறைபாடுகள் நீங்க வேண்டுமானால், அவற்றை நீக்கு



வதற்கு எந்த வகைகளில் நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ அந்த வகைகளில் நடவடிக்கை எடுத்து, எந்த வகைகளில் செம்மைப்படுத்த முடியுமோ அந்த வகைகளில் செம்மைப்படுத்தி, அவற்றைச் செய்யலாம். பல்வேறு வேலைத் தொந்தரவுகள் காரணமாக இவற்றைக் கவனிப்பதில் சிக்கல்கள் ஏற்படு மானால், எதிர்காலத்தில் இந்த வேலையை மட்டும் கவனிப்பதற்கு எதைச் செய்ய முடியுமோ அதைச் செய்யலாம்.

திரு. எல். ஜெயச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஓய்வூதியம் 300 ரூபாய் க்கு மேல் பெறுகிறவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை மற்றவர்களுக்கு இருப்பது போன்று அலுவலகத்திற்குச் சென்று காலையிலிருந்து மாலை வரை காத் திருக்க வேண்டிய நிலை இப்போது இருந்து வருகிறது. வயதான காலத் தில் இதனால் இவர்கள் மிகவும் அல்லலுறுகிற நிலை இருந்து வருகிறது. இதை மாற்றி மாதா மாதம் வீட்டிலேயே கடைசி வரை கொடுப்பதற்கு வழி செய்ய இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இவற் றிலுள்ள நிலைமைகள் முழுவதும் எனக்குத் தெளிவாகத் தெரியவில்லை. ஆனாலும் அவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை வர வேண்டுமென்று சொல்வதற் குக் காரணமே அவர்கள் உயிரோடிருக்கிறார்களா என்று அறிந்து கொள் வதற்காகத்தான். சில சமயங்களில் அவர்களைப் போலவே சிலர் கையெழுத் துப் போட்டு அத்தொகைகளை வாங்கி விடுகிறார்கள். சில இடங்களில் சில ஆண்டுகள் கழித்துத்தான் இவற்றைக் கண்டுபிடிக்க முடிகிறது. ஏற்கெனவே அவர்களுக்கு மாதா மாதம் அவர்கள் வரவேண்டுமென்றிருந்ததை மாற்றி காசோலை மூலமாகக் கொடுக்கும் முறையை இப்போது கடைப்பிடித்து வரு கிறோம். வயதானவர்கள், வர முடியாதவர்கள் ஆகியவர்களைப் பொறுத்து மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவதுபோன்று எந்த வகைகளில் சலுகைகள் அளிக்க இயலுமோ அந்த வகைகளில் அளிக்க அரசு முயன்று செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விவரங்கள், அரசு விதிமுறைகள், ஆணைகள், ஏற் பாடுகள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னதுபோல, மிகத் தெளிவாக இருக்கின்றன. அப்படி இருந்தும்கூட, பிரச்சினைக்குக் காரணமாக இருப்பதே ஒருவர் பணியிலிருக்கும்போது அவருக்குக் காட்டுகின்ற அக்கறை, அவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றபின் அவருக்குக் காட்டப்படுவதில்லை. அவர்கள் மிகவும் உதாசீனப்படுத்தப்

படுகிறார்கள், பென்ஷன், பிராவிடண்ட் பண்ட், இராஜுவடி, குடும்ப நல நிதி முதலியவற்றையெல்லாம் அவர்கள் பெற அலுவலகங்களுக்கு வரும்போது, அவர்கள் மிகவும் அலட்சியப்படுத்தப்படுகிறார்கள்; மிகவும் காலதாமதமாகவே அவற்றைப் பெறுகிறார்கள். எனவே மூலக் கேள்வியில் குறிப்பிட்டிருப் பதைப் போல தனித் துறை இருக்குமானால் அவர்கள் பிரச்சினைகள் மீது மட்டும் கவனம் செலுத்திட ஒரு துறையும் அதிகாரிகளும் அலுவலர்களும் இருப்பார்கள். அரசு கேட்கக்கூடிய கேள்விகளுக்கு பொறுப்பேற்றுக் கொண்டு அவர்களும் பதிலளிக்கக்கூடிய கட்டாயத்திற்குள்ளாவார்கள். எனவே மூலக் கேள்வியில் உள்ள கருத்துக்களின் அடிப்படையில் அவர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க சிறப்பாகச் செய்யவும் குறைபாடுகளை நீக்கவும் முக்கியமான பிரச்சினையாகக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நட வடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஓய் ஊதியம் பெறுபவர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்ற சங்கடங் கள் ஏற்படாமலிருப்பதற்கு எந்த எந்த வகைகளில் சீர்திருத்த நடவடிக்கை கள் மேற்கொள்ள இயலுமோ அந்த அந்த வகைகளில் மேற்கொள்ளப்படும். ஓய்வூதியம் பெறுகிறவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யும் அரசு ஊழியர்கள், தாங்களும் பிற்காலத்தில் ஓய்வூதியம் பெறுவதற்கு இது மாதிரி தான் வந்து நிற்க வேண்டுமென்பதை உணர வேண்டும். தங்களுக்கும் அந்தக் கதி வரத்தான் செய்யும் என்பதை பணியாற்றுகிறவர்கள் உணர வேண்டும். செத்த பிணத்தைப் பார்த்து இனிச்சாம் பிணங்கள் அழக்கூடாது என்று பட்டினத்தார் பாடியிருக்கிறார். அதுபோல் ஓய்வு பெற்றவர்களுக்கு, இனி ஓய்வு பெறப்போகிறவர்கள் சங்கடங்களைக் கொடுக்கக்கூடாது. மாண்பு மிகு உறுப்பினர் கூறுவது போன்று சங்கடங்கள் ஏற்படாமல் இருக்க வேண்டு மானால், விதி முறைகளை தேவையான வகையில் மாற்றுவதற்குக் கவனிக்க வேண்டும். தனித் துறை ஏற்படுத்துவதால் மட்டும் அது நடைபெற்று விடாது.

(முற்பகல் 10.30)

ஆனால் ஒழுங்காகக் குறிப்பிட்ட காலத்தில், ஓய்வுபெற்ற உடனே அவர்களுக்கு ஓய்வூதியம் வருவதில்லை. ஆகவே ஒரு குறிப்பிட்ட மாத வருவாயிலே குடும்பம் நடத்திக்கொண்டு வந்தவர்களுக்கு சிலபல மாதங்கள் சம்பளம் வரா வில்லை என்றால, அந்தக் குடும்பத்தை நடத்திச் செல்வது, அதை ஈடேற்று வது கடினம்தான். அப்படிப்பட்ட சங்கடங்கள் எல்லாம் ஏற்படக்கூடாது என்றுதான் அரசு வற்புறுத்தி வருகிறது. அந்த வகையிலே இந்தத் துறை



நடவடிக்கைகள் சீர் செய்யப்பட வேண்டும், செம்மைப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவரவர்களே, ஓய்வு பெறுகிறவர்களுடைய சங்கடங்களை அத்தனை பேரும் உணர்ந்திருக்கிறோம். என்றாலும் பதவி யில் இருக்கிறவரையில் இருக்கிற மரியாதையும், பதவியை விட்டு இறங்கிய தற்குப் பின்னாலே ஏற்படும் மரியாதையும், பதவியில் இல்லாதபோதுதான் தெரிய வரும். ஆனால் அதிகாரத்தில் இருக்கும்போது, அவர்கள் பெரிய நிலையில் இருந்துகொண்டு அவர்களுக்கு அதிகமான அளவுக்கு வருமானம் வந்து, திடீரென்று ஒருநாள் அவர்கள் ஓய்வு பெறுகின்ற நேரத்தில் அடுத்த மாதத்தில் அவர்களுக்குச் சம்பளம் வருவதில்லை என்ற நிலையை மாற்றி, அவர்களுக்கு அரசாங்கம் ஓய்வூதியம் தருவதை உறுதி செய்திருக்கிறது என்ற வகையில் அடுத்த மாதம் அவர்களுக்கு ஓய்வூதியம் நிர்ணயிக்கப்படாவிட் டாலும்கூட, ஒரு டோக்கன் ஓய்வூதியத்தை, அவர்களுடைய ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை பின்னாலே எப்படி இருந்தாலும் பிடித்துக் கொள்ளலாம் என்ற முறையில் தந்து அவர்களுக்கு ஒரு உற்சாகத்தை தரும் அளவுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அக்கறை காட்டுவார்களா என்றும், எதிர்காலத்திலே சாகப் போகிறவர்களுக்காக செத்துக் கொண்டிருப்பவர்களுக்கு உதவி செய் கின்ற வகையில் அமைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பெரும் பாலான ஓய்வூதியம் பெறுகிறவர்கள் ஒழுங்கான முறையில் முறைப்படிதான் அதைப் பெற்று வருகிறார்கள். ஒரு சிலருக்குத்தான் இப்படிப்பட்ட சூழ் நிலை ஏற்படுகிறது. அவர்கள் ஓய்வு பெறும்போது சரியான தகவல்களை வைத்துக் கொண்டிருப்பதில்லை; சர்வீஸ் ரிஜிஸ்டரை சரியாக வைத்திருப்ப தில்லை. சர்வீஸ் ரிஜிஸ்டரில் சரியாகப் பதிவு செய்யாததன் காரணமாக சிலபல விளக்கங்கள் பெறாததன் காரணமாக, அக்கவுண்டன்ட்-ஜெனரல் அலு வலகத்திலிருந்து பல்வேறு வினாக்கள் எழுப்புகிறார்கள். அதிலே சிலபல சங்கடங்கள் ஏற்படுகின்றன. அந்தச் சங்கடங்கள் ஏற்படாமல் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் 24 மாதங்களுக்கு முன்பிலிருந்தே இது துவக் கப்பட வேண்டுமென்று அரசு சொல்கிறது.

மற்றொன்று சிலபேர் மீது அரசு நடவடிக்கை எடுக்கிறது. அவர்கள் மீது அரசு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கிறது. அப்போது சில குறிப்பிட்ட முக்கிய மான குற்றச்சாட்டுகளும் இருக்கின்றன. அப்படிப்பட்டவர்கள் ஓய்வு பெற்றுவிட்டால், ஓய்வூதிய விதிகளின்படி அவர்கள் ஓய்வு பெற்றதற்குப் பின்

யர்களிடமிருந்து எந்தப் பணத்தையும் வசூலிக்க முடியாது. ஆகவேதான் வர்கள் ஓய்வு பெறும்போது, அவர்களை ஓய்வுபெற விடாமல், ஓய்வூதியம் முடியாத அளவுக்கு சில காலத்திற்கு 'சஸ்பெண்டு' பண்ணி வைக்கவோ, ப்வூதியத்தை நிறுத்தி வைக்கவோ, ஒரு குறிப்பிட்ட தொகையை நிறுத்தி வக்கவோ அரசு செய்கிறது. அதையெல்லாம் வழக்கு முடிந்ததற்குப் பிறகு சய்யலாமென்றால், இக்கட்டான சூழ்நிலை வருகிறது.

இன்னும் சில பேர் வேலையில் சேர்ந்த 5 ஆண்டுகளுக்குள் வேண்டுமென் ால் தங்களுடைய வயது இதுதான் என்பதை உறுதிப் படுத்திக் கொள்ளலா மன்று அரசு சொல்கிறது. ஆனால் அவர்கள் பல்வேறு காலங்களில் வயதைக் ாட்டுகிறார்கள். அதைப்பற்றி 5 ஆண்டுக் காலத்திற்குள் சொல்லலாம் என் ாலும்கூட, அதையெல்லாம் விட்டுவிட்டு ஓய்வுபெறும் நாளிலோ அல்லது 2 ாட்களுக்கு முன்னாலேயே 'நான் 2 ஆண்டுகளுக்குப் பின்னாலே பிறந் 'தன். எனவே இன்னும் இரண்டு ஆண்டு காலத்திற்கு பதவியில் இருப்பேன்' ான்று சொல்லி இப்போது ஓய்வு பெறுவதற்கு இல்லை என்று சொல்லி, அப்படிப்பட்ட வழக்குகள் எல்லாம் வந்துவிடுகின்றன. அந்த வகைகளில் தான் சிலபல சங்கடங்கள் ஏற்படுகின்றன. பதிவு ரிஜிஸ்டர் சரியாக இல்லா தது, ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது இப்படிப்பட்டவைகளைத் தவிர பெரும்பாலானவர்களுடைய ஓய்வூதியத் தன்மைகளிலே சங்கடங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படிப்பட்ட சில சங்கடங்கள் நீக்க வேண்டுமென்ற முறையில்தான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## *District in name of Kattabomman.*

*182 *Q.—Thiru K. SUBBU :* Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether any representations have been received from the public and from the Kattabomman Cultural Society of Tamil Nadu (தமிழ்நாடு வீரபாண்டிய கட்டபொம்மன் பண்பாட்டுக் கழகம்) or naming part of Tirunelveli District, as Kattabomman District, and

(*b*) if so, the action taken by the Government thereon ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) திருநெல்வேலி மாவட்டத்தை இரண்டு மாவட்டங்களாகப் பிரித்து தூத்துக்குடியைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய மாவட்டத்திற்கு சிதம்பரனார் மாவட்டம் என்று பெயரிட அரசு ஏற்கனவே முடிவு மேற் கொண்டு விட்டதால், இக்கோரிக்கையின் பேரில், மேல் நடவடிக்கை எதுவும் தேவையில்லை என அரசு கருதுகிறது.





திரு. க. சுப்பு : தலைவரவர்களே, பெயரிடுவது ஒரு கொள்கையாக இப்போது இருக்கிறது. அதை எந்த இடத்திற்கும் வைத்துவிடுவதில்லை. வீரபாண்டிய கட்டபொம்மன், வெள்ளையனுடைய ஆதிக்கத்தை எதிர்த்து, அவனுக்கு அடிபணிய மறுத்து, வீரப் போர் புரிந்து இந்திய நாட்டின் வரலாற்றிலேயே முதல் முழக்கம் இட்டார். அவருடைய உணர்வால் உந்தப் பட்டுத்தான் விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டேன் என்று வ.உ.சி. சொல்லி யிருக்கிறார். அவருக்கு உணர்வை ஊட்டியவர் வீரபாண்டிய கட்ட பொம்மன். அவருடைய வரலாறுதான் அவருக்கு உணர்வை ஊட்டியது. இதனால் ஆத்திரம் அடைந்த வெள்ளையர்கள் வீரபாண்டிய கட்டபொம்மனை தூக்கில் போட்டுவிட்டு, பாளையக்காரர்களை அச்சுறுத்துவதற்காக, அன்று முதல் எந்தப் பாளையக்காரரும் படை அல்லது ஆயுதம் வைத்திருக்கக் கூடாது என்று தடை விதித்து, அவைகளைப் பறிமுதல் செய்தார்கள். அது மாத்திரமல்ல, பாஞ்சாலங்குறிச்சி என்ற பெயரே அரசு ஆவணங்களில் இருக்கக்கூடாது என்று அந்தப் பெயரையும் எடுத்தார்கள். இந்தியாவின் வரலாற்றிலேயே ஒரு இடத்தின் பெயர் அரசு ஆவணங்களிலே இருந்து அகற்றப்பட்டது என்று சொன்னால், அது பாஞ்சாலங்குறிச்சி ஒன்றுதான். பாஞ்சாலங்குறிச்சியின் பெயரே அரசு ஆவணங்களில் வரக் கூடாது என்று அவர்கள் விரும்பினார்கள். அந்தப் பகுதி மக்கள் மண்ணை எடுத்து குழந்தைகளுக்கு சேனை வைக்கும்போது அவர்களுக்கு வீரம் வருமென்று நம்பினார்கள். அதற்கெல்லாம் மாறாக வெள்ளையர்கள் அந்தக் காலத்தில்

(முற்பகல் 10-35)

அப்படிச் செய்தார்கள். அதற்குப் பிறகு நாம் அந்த உணர்வு வேண்டும் என்பதற்காகத்தான் அந்த இடத்திற்குப் பாஞ்சாலங்குறிச்சி என்று பெயர் வைக்க வேண்டும் என்று சொன்னோம். முன்னால் முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்தில் ஏற்கெனவே பாஞ்சாலங் குறிச்சி என்ற பெயர் எடுக்கப்பட்டுவிட்ட காரணத்தாலும், ஓட்டப்பிடாரப் தாலூக்கா என்றிருப்பதை பாஞ்சாலங்குறிச்சி என்று மாற்ற வேண்டும் என்று கேட்டதன் அடிப்படையில் அவரும் அப்படியே மாற்றப்படும் என்றும் அறிவிப்பைக் கொடுத்தார்கள். ஆனால் வழக்கமாகவே வெள்ளைக்கார னுக்குத் துதி பாடிக் கொண்டு துவிபாஷிகளாக இருந்தவர்கள் எந்த ஆட்சியிலும் அதிகாரத்தில் ஒட்டிக் கொள்கிறவர்கள் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாவைக் கேளுங்கள். சரித்திரம் சொல்வதானால் நெடுநேரம் ஆகிவிடும்.

இல்லை. ஆகவே வேறு எந்தெந்த வகைகளில் எல்லாம் கட்டபொம்மனுக்கும் பெருமை தேடித் தரமுடியுமோ அவற்றின் மூலமாகச் செய்வோம். அதன் மூலமாக நாட்டு மக்களுக்கு அவனுடைய வீர உணர்ச்சியை எந்த அளவுக்கு ஊட்ட முடியுமோ அந்த அளவுக்கு அரசு அதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது, ஈடுபடும். எனவே மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற கருத்தில் எந்த வேறுபாடும் இல்லை என்றாலும், பெயர் வைப்பதற்கு என்று சில முறைகள் இருக்கின்ற காரணத்தால், அரசு அதைக் கடைப்பிடித்து முடிவெடுக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** கட்டபொம்மனின் மரபில் வந்த ஜெகவீரபாண்டியனாருக்கு நூற்றாண்டு விழா அண்மையில் நடைபெற்றபோது, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களும் கலந்து கொண்டார்கள். அப்போது அவருடைய படத்தை அட்டையில் போட வேண்டும் என்ற எங்கள் கோரிக்கைகூட நிராகரிக்கப்பட்டது. அவருடைய படத்தை உள் பக்கத்தில் தான் போட்டார்கள். ஆனால் ராஜா சர் போன்றவர்களின் படம் அட்டையிலேயே முதல் பக்கத்தில் போடப்பட்டது. அது அவர்களின் உணர்வைக் காட்டுகிறது. அதைப்பற்றிக்கூட பரவாயில்லை. ஆனால் வாழ்ந்த இடத்தில்தான் ஒருவரின் பெயரை வைக்க வேண்டும் என்றால், பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை திண்டுக்கல் மாவட்டத்திற்கு வைத்திருக்கிறோம். அந்த நியாயத்தை ஏன் திருநெல்வேலி மாவட்டத்தில் கடைப்பிடிக்கவில்லை என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நான் அந்த வாதத்தை வைக்கவே இல்லை. என் வாதத்தில் நான் அப்படிக் குறிப்பிடவே இல்லை. வாழ்ந்த இடத்திலும் வைக்கலாம். அவர் வாழா இடத்திலும் வைக்கலாம். அவர் புகழ் பெற்ற இடத்திலும் வைக்கலாம் அல்லது மாநிலத்தில் எந்த இடத்திலும் வைக்கலாம். அவர் பிறந்த ஊரைச் சார்ந்த மாவட்டத்திற்கும் வைக்கலாம். ஆனால் எதற்கு வைப்பது என்பது சூழ்நிலையைப் பொறுத்தது. அந்தந்த இடத்திற்குத்தான் வைத்துத் தீர வேண்டும்

(முற்பகல் 10-40)

என்றல்ல. இரண்டுக்கும் வைக்கலாம். காந்தியார் போர்பந்தரிலே பிறந்தார் என்றாலும் காந்தி நகர் என்று இங்கே பெயர் வைப்பதே தவறு இல்லை. நாடு தழுவிய புகழ் பெற்றவர்களின் பெயரை, இந்திய நாடு தழுவிய



புகழ்பெற்றவர்களின் பெயரை, தமிழ் நாடு தழுவிய புகழ்பெற்றவர்களின் பெயரை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்தலாம், சொந்த ஊரிலும் பயன்படுத்தலாம், பிற இடங்களிலும் பயன்படுத்தலாம். அந்த வாதத்தை நான் எழுப்பவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களே, மொத்தம் 12 வினாக்கள் இருக்கின்றன. அதிலே நான்கு வினாக்களுக்கு மட்டும் 40 நிமிடங்கள் எடுத்தாகிவிட்டது. சம்பந்தப்பட்டவர்கள் மட்டும் துணை வினாக்களை எழுப்புவது என்று வைத்துக்கொண்டால் நல்லது. எல்லோரும் கேட்கலாம் என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு கேட்டதை விட அதிகமாக யாரும் கேட்க முடியாது, நானே கூட கேட்க முடியாது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** சிவாஜி கணேசன் நடித்த கட்டபொம்மன் படத்தை எடுத்ததற்குக் காரணமாக இருந்தவர் நாங்கள்தான் என்ற பெருமை இருக்கும்போது, அதற்குச் சமமாக யார் உருவாக முடியும்?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நான் எனக்குப் பிடித்ததையும் பார்த்துக் கொண்டிருக்கிறேன், பிடிக்காததையும் பார்க்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** முன்பு மதுரை பல்கலைக் கழகத்தைப் பற்றிய பிரச்சினை வந்தபோது, காமராஜ் பெயரை வைக்கவில்லை என்று சொன்னபோது, மதுரை—காமராஜ் பல்கலைக் கழகம் என்று பெயரிடப்பட்டு அறிவிக்கப்பட்டது. அதைப் போலவே இப்போது முடிவு எடுத்து திருநெல்வேலி மாவட்டத்தின் பெயரை மாற்றக்கூடாதா? வீரபாண்டியன் கட்டபொம்மன் பெயரை அந்த மாவட்டத்திற்கு இட்டு இனியாவது அறிவிக்கலாம் அல்லவா? அப்படி அறிவிப்பதிலே என்ன தடை இருக்கிறது? அப்படி பெயரை வைத்தால், இந்தப் பிரச்சனையை எளிதாகத் தீர்க்கலாம் அல்லவா? அது குறித்து அமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அது வேறுபல சங்கடங்களை எதிர்காலத்திலே உண்டாக்கும். இப்போது வேண்டுமானால் திரு. லெட்சுமிகாந்தனைத் திருப்திப்படுத்தலாம். பிற்காலத்திலே ஒவ்வொரு மாவட்டத்தோடும் இணை என்று வருமானால், தஞ்சை மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம் ஒவ்வொரு மாவட்டத்தோடும் இணைக்க வேண்டிய கட்டாயம் வரும். இணைப்புக்கு இணைப்பு எல்லாம் வந்துவிடும்.

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, வேண்டாம் என்று சொன்னால் நான் கேட்கவில்லை. இது ரொம்பவும் உணர்ச்சிகரமான பிரச்சினை

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இது கேள்வி நேரம். அதற்காகச் சொல்கிறேன். . .

**திரு. க. சுப்பு :** மாண்புமிகு மேலவைத் தலைவர் பதவியைவிட, மாண்புமிகு உறுப்பினர் என்ற பதவியை விட நாம் வரலாற்றில் இப்படிப்பட்ட பிரச்சினைகளோடு சம்பந்தப்பட்டவர்கள். அதனால்தான் சொல்லுகிறேன். மாண்புமிகு தலைவர் அவர்களே வேண்டாம் என்று சொன்னால், நான் மேலே கேட்பதற்குத் தயாராக இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. நான் உட்கார்ந்திருக்கிற இடம்தான் வேண்டாம் என்கிறது. இது கேள்வி நேரம். கேள்வி நேரத்தைக் கேள்வி நேரமாகத்தான் அனுமதிக்க முடியும். எனக்குப் பிடித்திருக்கிறது என்பதற்காக நான் சொற்பொழிவாற்ற விட்டுவிடலாமா

"நன்றாற்றலுள்ளுந் தவறுண்டு அவரவர்
பண்பறிந்தாற்றாக்கடை"

**திரு. க. சுப்பு :** உண்மையான தன்மையை விளக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். வெள்ளைக்காரனிடம் தொடர்ச்சியாக இருந்து பல வசதிகளை அனுபவித்து ஆண்டாண்டு காலமாகவே இப்படிப்பட்ட அதிகார வர்க்கமாகவே இருப்பவர்கள் பாஞ்சாலங்குறிச்சி என்று பெயர் வைப்பதைக் கூட எதிர்த்தார்கள். அதனாலே அன்றைக்கு அந்த முடிவு கைவிடப்பட்டது. இன்றைக்கும் அந்த இடத்திற்குக் கட்டபொம்மன் பெயர் சூட்டுவதுதான் பொருந்தமாக இருக்கும் என்று சொன்னதற்குப் பிறகும் அதிலே பல்வேறு காரணங்களை வைத்துக் கொண்டு இந்த அதிகார வர்க்கம் அதே மனப்பான்மையோடு முடியாது என்கிறார்கள். வ. உ. சிதம்பரனார் அவர்களின் பெயரை வேறு ஒரு மாவட்டத்திற்கு வைப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. அவர் சென்னையிலேயே இருந்தார். இங்கேதான் தொழிற் சங்கத் தலைவராக இருந்தார். இங்கே வைக்கலாம். எங்கே வேண்டுமானாலும் வைக்கலாம். ஆனால் கட்டபொம்மன் பெயரை வைப்பதற்குத் திருநெல்வேலி சீமையை விட்டால் வேறு இடம் பொருந்தமாக இருக்காது. அந்த அடிப்படையில்தான் அங்கே அந்தப் பெயரைச்



சூட்ட வேண்டும் என்று கேட்கிறோம். எனவே அரசு இந்த அடிப்படையின் மறுபரிசீலனை செய்ய முன்வருமா? அல்லது தொடர்ந்து இந்த அரசும் ஆங்கிலேயர் முறையைத்தான் பின்பற்றுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் வினாவைக் கேட்பதற்குப் பதிலாக நீண்ட விளக்கத்தையே இங்கே தந்திருக்கிறார்கள். கட்டபொம்மனின் வீரத்தையோ, தீரத்தையோ, புகழையோ அல்லது வேறு வீரச்செயல்கள் ஆகியவற்றையோ, இந்த அரசு என்னாளும் மறக்கவில்லை. அவருக்குப் பெருமை தேடித் தர வேண்டும் என்ற குறிப்பையும் நாம் மறக்கவில்லை. கட்டபொம்மன் வீர தீரச் செயல்களையும் பெருமைகளையும் மாண்புமிகு தலைவர் அவர்களே மிக நன்றாக உணர்வார்கள். அதுபற்றி நல்ல பல நூல்களையும் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொன்ன மாதிரி கட்டபொம்மனின் வீர தீரத்தையும் புகழையும் கருதித்தான், டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனுக்காகவே ஒரு கோட்டையே அமைத்தார்கள். அவனுடைய புகழை மீண்டும் நிலைநாட்ட வேண்டும் என்ற அடிப்படையில்தான், அது அங்கே கட்டப்பட்டது. அதைப் போலவே கட்டபொம்மன் பெயர் ஒரு போக்குவரத்து கழகத்திற்கும் வைக்கப்பட்டது. அதுவுமல்லாமல் கட்டபொம்மனுக்கு ஆண்டு தோறும் விழா நடத்தியும் வருகிறோம். இதன் காரணமாகவெல்லாம் மக்கள் அவன் பெருமையை, புகழை உணர வேண்டும் என்றுதான் இவற்றையெல்லாம் செய்திருக்கிறோம். எந்த வகையிலும் நாம் கட்டபொம்மனின் புகழைக் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் வ. உ. சிதம்பரனார் என்று சொல்லும் போது, அவருடைய பெயரை அந்த மாவட்டத்திற்கு வைக்க வேண்டும் என்று பலர் விரும்பினார்கள். அது வ. உ. சிதம்பரனார் வாழ்ந்த இடம் என்கிற காரணத்தாலும், அவர் அங்கே வழக்கறிஞராகப் பணி புரிந்த காரணத்தாலும், அவர் அங்கே பல மறியல்களில் ஈடுபட்ட காரணத்தாலும், அவர் கப்பலோட்டிய இடம் தூத்துக்குடி துறைமுகம் என்கிற காரணத்தாலும், கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் என்று அவர் பெயர் பெற்றிருக்கிற காரணத்தாலும், இந்த நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்ட அவருக்கு அந்தப் பெருமையைத் தர வேண்டும் என்று மாவட்டத்திற்குப் பெயர் வைக்க ஒப்புக்கொண்டோம். கட்டபொம்மனின் பெருமையைக் குறைப்பதற்காக அல்ல. அதை ஈடுகட்டவே முடியாது. அது வேறு. இது வேறு. எனவே வ. உ. சிதம்பரனாருக்குப் பெருமை தர வேண்டும் என்று முடிவெடுத்து அந்த மாவட்டத்திற்கு அவர் பெயர் வைக்கப்படும் என்றும் சொல்லியாகிவிட்டது. அதைப் போய் இனிமேல் மாற்றுவதற்கு

(முற்பகல் 10-45)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மினிபேருந்து என்பது இரண்டு முறைகளிலே இயக்கப்படுகின்றது, ஒன்று சாதாரண பேருந்துகள் எல்லா இடங்களிலும் நின்று எல்லா இடத்திற்கும் டிக்கெட்டு கொடுக்கப்பட்டு போகின்றது. இதில் டிரைவர், கண்டக்டர் இரண்டு பேர் களும் இருக்கின்றார்கள். இன்னொன்று, பாயின்ட் டு பாயின்ட் என்று இருக்கின்றது. அதிலே ஒரே கட்டணம்தான். டிரைவர் மட்டும் இருப்பார். மக்கள் வண்டியிலே ஏறும்போது, அவர் சீட்டுகளைக் கொடுத்துவிட்டு, கடைசியிலே கொண்டு வந்து இறக்கி விட்டுவிடுவார். இது இரண்டாவது முறை. எந்தெந்த இடத்திலே அதிகமாகத் தேவைப்படுகின்றதோ அந்த அளவுக்கு மினி பஸ்களை அங்கே அதிகமாக விடுகிறோம். அதிகமாகத் தேவை இருந்தால், பாயின்ட் டு பாயின்ட் மினி பஸ்களை விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பம்மலுக்குச் செல்லும் பேருந்துகள்.

* 206 வினா.—திரு. மு. செ. சங்கரலிங்கம்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) சென்னை, பிராட்வேயிலிருந்து பம்மலுக்குச் செல்லும் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை, தற்பொழுது புதிதாக துவங்கப்பட் டுள்ள தனியார் பல்தொழில் நுட்பப் பயிலக மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் வசதியாக, பம்மல் காவல் நிலையம் வரை, நீட்டிக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. மு. செ. சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, பம்மல் பகுதியில் உள்ள பாலிடெக்னிக்கில் கிட்டத்தட்ட 500 அல்லது 600 மாணவர்கள் படிக் கின்றார்கள். அந்த காலையிலே சிறிய பேருந்துவிட கருத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, சங்கர் நகர் என்று ஒரு பகுதி இருக்கின்றது. அதன் வழியாகத்தான் பேருந்து செல்ல வேண்டியதாக இருக்கின்றது. அங்கு குறுகிய பாதையாக இருப்பதால், சிரமமாக இருக்கிறது என்று கருதுகின்றார்கள். 27 எண் இந்தப் பகுதியில் திருநீர்மலை வரை சென்றுகொண்டிருக்கின்றது. அதை காவல் நிலையம் வரை நீடிக்கலாம் என்ற ஆலோசனை சொல்லப்பட்டிருக்கின்றது. 27 எண் பேருந்து இப்போது 12 சிங்கிள் போகின்றது. அதையும் குறைக்க வேண்டும் என்று கருத்து கூறப்பட்டிருக்கின்றது. எனவே இதைப்பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. செ. சங்கரலிங்கம்: இந்த 27 ஆம் எண் பஸ்கூட பீக் டைம்லே விடுவதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: எந்தெந்த நேரத்திலே அவசியமோ அந்த நேரத்திலே விடுவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

பண்ருட்டியில் நகர்ப்புற மனை மேம்பாட்டுத் திட்டம்.

* 207. வினா—திரு. அ. ப. சிவராமன்: மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்:—

(அ) நகர்ப்புற மனை மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை பண்ருட்டியில் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?

(உ) காலதாமதத்திற்குக் காரணமென்ன?

மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி: (அ) ஆம்.

(இ) இத்திட்டத்திற்குத் தேவையான நிலப்பரப்பை கையகப்படுத்தும் பணி தற்பொழுது நடைபெற்று வருகிறது.

(உ) நிலக் கையெடுப்பு இன்னும் முடிவுறவில்லை.

திரு. அ. ப. சிவராமன்: தலைவர் அவர்களே, இந்த நகர்ப்புற மேம் பாட்டுத் திட்டத்தின்கீழ் எவ்வளவு மனைகள் போடப்பட்டிருக்கின்றன. எந்தெந்த மனைகள் எந்தெந்த வகையிலே பிரித்துத் தரப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி : தலைவர் அவர்களே, பண்ருட்டியைப் பொறுத்தவரையில், இத்திட்டம் 19.28 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 31 லட்சம் 50 ஆயிரம் அளவில் செலவிடப்பட்டிருக்கின்றது. பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு 256 மனைகளும், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு 86 மனைகளும், இடைப்பட்ட வருமானம் உள்ளவர்களுக்கு 75 மனைகளும் உயர்ந்த வருமானம் உள்ளவர்களுக்கு 29 மனைகளும் ஒதுக்கி திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. அ. ப. சிவராமன் : இந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட அரசின் தொகை காலகெடுவுக்குள் செலவழிக்கப்படவில்லை என்று சொல்லி, அந்தத் தொகை வேறு பணிகளுக்குத் தரப்பட்டுவிட்டது என்று சொல்கின்றார்கள். அதைத் திரும்பப்பெற்று மீண்டும் இந்தப் பணிகளுக்கு ஒதுக்கி செலவழிக்க வழிவகைகள் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி : தலைவர் அவர்களே, தற்போது அந்த குறிப்பு என்னிடத்தில் இல்லை.

## Collapse of Concrete Slab Covering Well.

*208 Q.—Thiru C. R. LAKSHMIKANDHAN (on behalf of Thiru A. MAYILSAMY) : Will the Hon. the Minister for Housing be pleased to state:

(a) whether it is a fact that the side wall and a portion of the concrete slab covering a well in a Slum Clearance Board Colony, Thirumangalam, Anna Nagar, Madras, collapsed on 16th May 1985;

(b) if so, the number of persons trapped under the debris;

(c) the number among them (i) killed and (ii) injured; and

(d) whether any monetary help has been rendered to the members of the bereaved family and to the injured persons?

மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி : (அ) கிணற்றின் மீது மூடப்பட்டிருந்த கான்கிரீட் மட்டும்தான் இடிந்து விழுந்தது. ஆனால் கிணற்றின் பக்கச் சுவர் இடிந்து விழவில்லை.

(இ) 10 பேர்கள்.

(உ) (i) 14 பேர்கள் இறந்தனர்.

(iii) 4 பேர்கள் காயமடைந்தனர்.

(எ) இல்லை.



திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரிய குடியிருப்பு ஒன்றில் இந்த விபத்து நடந்திருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இறந்தவர்கள், காயம் அடைந்தவர்கள்பற்றி விவரங்களை எல்லாம் சொன்னார்கள். அவர்களுக்கு ஏதும் உதவி செய்யவில்லையா ? அவர்கள் யாரும் மனு செய்யவில்லையா ? ஏன் உதவி செய்யவில்லை? அப்படி உதவி கோரப்படாமல் இருந்தாலும், இந்தக் கேள்வியையே ஒரு கோரிக்கையாக வைத்து அவர்களுக்கு உதவி செய்யும் நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி : மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலம் இந்தக் குடிசை மாற்று வாரியக் குடியிருப்பில் நடந்த விபத்தில் இறந்த ஒருவருக்காக ரூ. 2 ஆயிரம் தருவதாக முடிவிருக்கிறது. மீதி பேர்கள் பற்றி பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆதிதிராவிடர் குடியிருப்பு.

*209. வினா—திரு. அ. ப. சிவராமன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) பண்ணுருட்டியில், ஆதிதிராவிடர் குடியிருப்புக்காக பல ஆண்டுகளுக்கு முன்பே கையகப்படுத்திய நிலத்தை, அரசு அம்மக்களுக்குப் பிரித்துத் தரவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. அருணாசலம் : (அ) மற்றும் (இ). பண்ணுருட்டி நகராட்சி எல்லைகளுக்குள் வடகைலாசம் மதுரா தண்டுப்பாளையம் கிராமத்தில் 26 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனை வழங்க நில அளவை எண். 73-1-ல் 0.66.5 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 30—3—1985-ல் பயனாளிகளுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேற்கூறிய நிலம் நகராட்சி எல்லைக்குட்பட்டதால், மனைப்பிரிவு வரைபடம் (Layout Plan) அங்கீகாரம் பெறுவதில் தவிர்க்க முடியாத காரணங்களால் வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்குவதில் கால தாமதம் ஏற்பட்டது.

சங்கடங்கள் வேண்டாம். அவரைப் பெருமைப்படுத்த வேண்டும், பெருமைப் படுத்தி வருகிறோம். இன்னும் பெருமைப்படுத்த வாய்ப்புகள் எவ்வளவோ வரும். அப்போது அவைகளையும் பயன்படுத்துவோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள் 203, 204 ஒத்திவைக்கப் படுகின்றன.

## சிறிய பேருந்துகள்.

*205. வினா.—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) சென்னை மாநகரில், பேருந்து போக்குவரத்து வசதியைப் பெருக்குவதற்காக, சிறிய பேருந்துகளை (Mini Buses) விடுவது குறித்து பல்லவன் போக்குவரத்துக் கழகம் பரிசீலித்து வருகிறது என்பது உண்மையா ?

(இ) இத்தகைய பேருந்துகளின் ஒரே மாதிரியான கட்டண விகிதத் தைக் கடைப்பிடிக்கவும், நடத்துநர்கள் இல்லாமல் பேருந்துகளை ஓட்டவும், பரிசீலிக்கப்படுகிறது என்பதும் உண்மையா?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து மற்றொரு குறிப்பிட்ட இடத் திற்கு வேறு நிறுத்தங்கள் ஏதும் இல்லாமல் ஒரே பயண கட்டணத்தில் பயணி களை ஏற்றிச் செல்லும்போது ஒரே முறை, பேருந்து இயக்க ஆரம்பிக்கும் முன்னே, பயணச் சீட்டை வழங்கிவிட்டு ஓட்டுநரே இயக்கினால் செலவும் சிக்கனமாகும். விரைவிலும் பயணிகள் செல்ல இயலும். தற்போது எழும்பூரிலிருந்து சென்ட்ராலுக்கு இத்தகைய முறையில் பேருந்து இயக்கப்படு கிறது. அண்ணாநகர் போன்ற பரந்த குடியிருப்புகள் உள்ள பகுதியின் உள்ளிலிருந்து பேருந்து நிலையத்திற்கு கொண்டு வரத்தக்கதாக மினி பேருந்து ஒரே கட்டணத்தில் இயக்கலாம் என்பது பரிசீலனையில் உள்ளது இவ்வாறு இயக்கினால் விரைவாகவும் சிக்கனமாகவும் இயக்க இயலும் என கருதப்படுகிறது.



**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விவரத்தையொட்டி, இன்னுமொன்றை அறிந்துகொள்ள விரும்புகிறேன். சில இடங்களில் குறிப்பிட்ட நேரங்களில் அதிகமான பயணிகள் பேருந்து களில் செல்லுவதில்லை, குறைவான எண்ணிக்கையில்தான் பயணிகள் செல்லு கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அது முக்கியமான நேரமாக இருக்கிறது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பெரிய பேருந்துகளை விடா விட்டாலும், சிறிய பேருந்துகளை விடுவதால் போக்குவரத்துக் கழகத்திற்கும் இழப்பு ஏற்படாமல் இருக்கும், பயணிகளுக்கும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்ததாக இருக்கும், இது குறித்து அமைச்சர் அவர்களின் கருத்து என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** காலையிலும், மாலையிலும் அதிகமான நெரிசல் இருப்பதால், பெரிய போக்குவரத்து வண்டிகளை இயக்க வேண்டி யிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் மற்ற நேரங்களில் சிறிய பேருந்து களை விடலாம் என்று யோசனை கூறுகிறார்கள். சிறிய பேருந்துகளை விட தனியாக ஆட்களை நியமிக்க வேண்டியிருக்கிறது, பெரிய வண்டி களுக்குத் தனியாக ஆட்களை நியமிக்க வேண்டியிருக்கிறது. இதனால் இழப்பு அதிகமாக இருக்கும், இழப்பு குறைவதற்கு வாய்ப்பில்லை. ஆகவே நிரந்தரமாக மினி பஸ்கள் எங்கெங்கு இயக்க முடியுமோ அங்கெங்கே யெல்லாம் இயக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** Point to Point மினி பஸ் விடும் திட்டத்தின் கீழ் ஓடுகிற பேருந்துகளுக்கு ஒரே கட்டண விகிதம் இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி Point to Point என்று சொல்லும்போது, ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து இன்னொரு குறிப்பிட்ட இடத்திற்குச் செல்லும் பயணிகளுக்கு மட்டும் பலன் கிடைக்கிறது. ஆனால் இடையிலே இறங்கக் கூடிய பயணிகளுக்குப் பலன் இல்லாமல் போகிறது. ஆகவே ஒரேவிதமான கட்டணமாக அமைக்கப்பட் டாலும், நிறுத்துகிற இடங்களை அதிகப்படுத்தி பயணிகளை இறக்குவதற்கு அனுமதி கொடுக்கும் வகையில் இந்தத் திட்டத்தை வைத்தால், பயணிகளுக்கு வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அது குறித்து அமைச்சரின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவரவர்களே, பண்ணுருட்டி தண்டுப் பாளையம் காலனியைப் பொறுத்தவரையில், நில ஆர்ஜிதம் செய்து பல ஆண்டுகள் ஆகிவிட்டது. அதன் உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை தந்தாகிவிட்டது. ஆனால் குத்தகைதாரர்களிடமிருந்து அந்த நிலங்களைப் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டது. இந்தக் கேள்வி கேட்ட பிறகு, அவசரம் அவசரமாக அதிகாரிகள் சென்று, அந்த நிலங்களைக் கையகப்படுத்தியிருக்கிறார்கள். இந்தக் காலதாமதத்திற்குக் காரணம் என்ன? காலதாமதத்திற்குக் காரணமானவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப் படுமா?

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் :** தலைவரவர்களே, பண்ருட்டி வட்டம் திருவதிகை மதுரா செட்டிப்பட்டரையில் 131 குடியிருப்புகளுக்கு சர்வே எண் 353-1 இன்னும் பிறவற்றில் 8.11 ஏக்கர் புஞ்சை நிலம் தேர்ந் தெடுத்து மாவட்ட ஆட்சியர் பரிந்துரையை அரசு பரிசீலித்து, அந்நிலத்தின் மேலே உயர் அழுத்த மின் கம்பி செல்வதால் மாற்று இடம் பார்த்து விரைவில் அனுப்பும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளார். அது கிடைக்கப்பெற்றதும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவரவர்களே, என்னுடைய கேள்வி பண்ருட்டி தண்டுபாளையம் பற்றியதாகும். மாண்புமிகு அமைச்சரவர்கள் திருவதிகை செட்டிப்பட்டரை காலனி பற்றிச் சொல்கிறார்கள். கேள்வி போட்டதற்கு முன்னாலேயே நில ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். நிலத்தின் சொந்தக்காரர்களுக்குப் பணம் கொடுத்து விட்டார்கள். அடுத்தபடியாக ஒரு முக்கியமான விஷயம். நிலத்தை ஆர்ஜிதம் செய்ததற்குப் பின்னாலே, டவுன் பிளானிங் மேப்பைப் பார்க்காமல், ஸ்கீம்ரோட்டில் மனைகளை அவசரம் அவசரமாகப் பிரித்துத் தந்ததால், அந்தப் பகுதியிலே சாலைகள் போடும் பணிகள் தடைபடலாம். இதைக் கருத்திற்கொண்டு, டவுன் பிளானிங் மேப்பைப் பார்த்து, ஸ்கீம் ரோட்டிற்கு இடம் ஒதுக்கி, சரியான இடங்களில் மனைகளைத் தர அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் :** டவுன் பிளானிங் வரைபடம் இருக் கிறது. அதன் அடிப்படையில் அந்தக் குறிப்பு அனுப்பப்பட்டவுடன் சரியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.



### எம். ஆர். பாளையம் நடுநிலைப் பள்ளி.

210. வினா—திரு. எல். கணேசன் (திரு க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஒன்றியத்தைச் சேர்ந்த எம். ஆர். பாளையத்திலிருக்கும் ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளி எப்பொழுது மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது?

(இ) அப்பள்ளிக்கு 8—10—1986 வரை, பட்டதாரி ஆசிரியர்கள் யாரும் நியமிக்கப்படவில்லை என்பது உண்மையா?

(உ) ஆம் எனில், இது குறித்து அரசு மேற்கொண்டுள்ள நடவடிக் கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் :** (அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் மண்ணச்சநல்லூர் ஒன்றியத்தை சேர்ந்த எம். ஆர். பாளையத்திலிருக்கும் ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளி 9—7—1982 முதல் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டு, நடைபெற்று வருகிறது.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. அரசின் தீர்மானம்.

### சமுதாய நல வளர்ச்சி மற்றும் நகராட்சி நிர்வாகமும், மாநகராட்சிகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள்.

* **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள சமுதாய நல வளர்ச்சி மற்றும் நகராட்சி நிர்வாகமும் மாநகராட்சிகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் @ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

---

@ 653-739 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்] [1986 ஏப்ரல் 26

கொள்கை விளக்கக் குறிப்புகள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நான் படித்ததாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்து சொன்னதற்குப் பிறகு, இறுதியில் நான் பதில் சொல்கிறேன் என்று கூறி, அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள சமுதாய நல வளர்ச்சி மற்றும் நகராட்சி நிர்வாகமும் மாநகராட்சிகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

உறுப்பினர்களுக்கு ஒரு தகவல். இன்றைக்கு 7, 8 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள், அமைச்சரோடு சேர்த்து, இன்றைக்கேனும் எல்லோரும், குறைந்தபட்சம் 10 நிமிடங்கள், அதிக பட்சம் 15 நிமிடங்கள் என்று வைத்துக்கொண்டால் நன்றாக இருக்கும். ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். யாரையும் கட்டுப்படுத்தி, தொல்லை கொடுக்க வேண்டுமென்பதில் மகிழ்ச்சியில்லை. கட்டுப்பாடு செய்வதற்கு நான் படும் கஷ்டம் எனக்குத் தான் தெரியும். அவர்கள் முகத்தை இரக்கத்தோடு பார்க்க வேண்டியிருக்கிறது. எனவே எல்லோரும் ஒத்துழைத்து, நேரத்தோடு முடித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-55)

திரு. அ. மாயவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சி மற்றும் நகராட்சி நிர்வாகமும் மாநகராட்சிகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாகச் சொல்ல வேண்டுமென்றால், மாநகராட்சி மற்றும் நகராட்சி இவைகளினுடைய நிர்வாகங்களில் சீர்கேடுகள் நிறைந்து காணப்படுகின்றன. உடனுக்குடன் காலாகாலத்தில் தேர்தல்கள் நடைபெற வேண்டிய சமயத்தில் தேர்தல் நடைபெற்றிருந்தால், இம்மாதிரி நிர்வாகச் சீர்கேடுகள் இந்த அளவுக்கு மலிந்து போயிருக்காது. தேர்தல்களை காலா காலத்தில் நடத்தாத காரணத்தால் தான், இந்த அவல நிலை ஏற்பட்டது. உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற்றாலும் கூட, சென்னை, கோவை, மதுரை போன்ற மாநகராட்சிகளுக்கு இன்னும் தேர்தல்கள் நடத்தப்படவில்லை, எப்போது நடத்தப்படும் என்பதும் தெரியவில்லை. இப்படி தேர்தலை நடத்தாமல் காலத்தை மேலும் மேலும் நீடித்துக் கொண்டே போனால், நிலைமைகள் இன்னும் மோசமாகும். குறிப்பாக சென்னை நகரில் வாழ்கின்ற குடிசை



1986 ஏப்ரல் 26] [திரு. அ. மாயவன்]

வாசிகளுடைய தேவைகள் கவனிக்கப்படாமல் போகின்ற நிலைமை ஏற்படும். மாடி வீடுகளில் வாழ்பவர்களைப் பொறுத்தவரையில், போன் வசதி இருக்கிறது, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொலைபேசியில் பேசி தங்களுக்கு இருக்கும் குறைகளை நிவர்த்தி செய்வார்கள். ஆனால் குடிசைகளில் வாழ்பவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் பகுதியில் கவுன்சிலர் இருந்தால் தான், அவர் மூலமாக தங்கள் குறைகளைத் தெரிவித்து அவைகளை நிவர்த்தி செய்ய முடியும். அந்த வகையில் இன்னும் காலதாமதப்படுத்தாமல் உடனடியாக மாநகராட்சிகளுக்கான தேர்தலை நடத்த வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தேர்தல் நடைபெற்று நகராட்சிகள் புதிதாக இயங்கத் தொடங்கியுள்ளன. இந்நிலையில் அரசு ஒன்றைச் சொல்லியிருக்கிறது. அரசிடம் போதுமான நிதி ஆதாரங்கள் இல்லையென்று சொல்லியிருக்கிறது. ஏற்கெனவே நகராட்சிகளில் இருந்தவர்கள் எல்லாம் இருந்ததை எல்லாம் சுரண்டி, துடைத்து எடுத்துவிட்டார்கள். இந்நிலையில் புதிதாகப் பொறுப்புக்கு வந்திருப்பவர்கள் நிதி இல்லாததால், மக்களுடைய அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். லோக்கல் பாடீஸ் தான் மக்களுடைய அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்ய முடியும். கழிப்பிட வசதி அளிப்பது, சுகாதார வசதி அளிப்பது, குடிதண்ணீர் வசதி அளிப்பது, போன்ற வசதிகளை எல்லாம் அவர்கள் தான் செய்து கொடுக்க முடியும். அரசே இத்தகைய வசதிகளை நேரடியாகச் செய்து கொடுக்க முடியாது. ஆனால் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான பண வசதி இந்த அமைப்புகளிடம் இல்லை. இன்றைக்கு வருவாயைப் பெருக்க வேண்டுமென்றால், சொத்து வரியை, வீட்டு வரியை அவர்கள் அதிகரிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அதற்காக தாக்கீதுகள் எல்லாம் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும் மேலும் மக்களிடத்தில் இருப்பதை எல்லாம் சுரண்ட வேண்டிய கட்டாயத்தில் அவர்கள் இன்றைய தினம் இருக்கிறார்கள். அப்படிச் செய்யும்போது, மக்களுக்கு ஆவேசம் வரத்தானே செய்யும். தேர்ந்தெடுக்கப்பட்டு புதிதாகப் பதவிக்கு வந்திருக்கும் அவர்கள் வந்த உடனேயே மேலும் மேலும் மக்களுக்கு வரியைப் போட்டு, மக்களைக் கசக்கிப் பிழிவதற்கு பதிலாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்த அரசு நிதி வசதியைச் செய்து தர வேண்டும். அதை மானியமாகத் தரலாம். அல்லது நகராட்சிகளின் நிதி நிலைமை சீரான பிறகு அவர்களிடமிருந்து திருப்பி வசூலித்துக் கொள்ளலாம் அல்லது அரசே பின்னால் அதை வேண்டாமென்று சொல்லி மானியமாகக் கருதலாம். அதற்கேற்ற ஒரு நிலையை இந்த அரசு உருவாக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்

[திரு. அ. மாயவன்] [1986 ஏப்ரல் 26

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு நாம் பார்க்கிறோம், மத்திய அரசிடமிருந்து அதிக அதிகாரம் வேண்டும், அதிக நிதி வேண்டும் என்று நம்முடைய தமிழக அரசு கேட்கிறது. எப்படி மத்திய அரசு அதிக அதிகாரம் தர வேண்டும், அதிக நிதி வேண்டும் என்று தன்னுடைய உரிமையை இந்த அரசு கேட்கிறதோ அதுபோல நகராட்சி களுக்கும் இந்த அரசு நகராட்சிகள் கேட்காமலேயே அதிக நிதி ஆதாரங்களை ஏற்படுத்தித் தர வேண்டும்.

சென்னை நகரில் நாம் ஒன்றைப் பார்க்கலாம். ஏதாவது விழாவுக்காக அல்லது எதையாவது முன்னிட்டு அமைச்சர்கள் வருகிறார்கள் என்றால், ரோடுகளை ஓரளவுக்குச் சரி பண்ணுவார்கள். அவர்கள் போய் வராத இடங் களில் அதையும் செய்ய மாட்டார்கள். மேலும் சில தெருக்களில் நாம் பார்க்கிறோம். * * * சென்னை நகரில் கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் நாம் இப்படிப்பட்ட நிலைமைகளைக் கண்கூடாகப் பார்க்கலாம்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** உறுப்பினர் * * * என்று குறிப்பிட்டார். அது இந்து மதத்தைச் சார்ந்தவர்களைப் புண்படுத்தும் என்பதால், அந்த வார்த்தைகளை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் அல்லது உறுப்பினர் திரும்பப் பெற வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** 'அன்பார்லிமெண்டரி' அல்லது 'அப்சீன்' வார்த்தைகளாக இருந்தால் மட்டுமே தான் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்று நேற்றும் குறிப்பிட்டேன். இன்னும் அதையே குறிப்பிடுகிறேன்.

(முற்பகல் 11-00)

அதற்காக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் இருக்கிறார்கள். அவர்கள் பதில் சொன்னால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. யா. சை. யூசுப் :** ஒரு மதத்தைப் பற்றிய ஓர் உணர்வாக இங்கே சுட்டிக்காட்டப்படுகிறது. அதைத் தவிர உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் அதிகாரத்திலோ, பணியிலோ நான் குறுக்கிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1986 ஏப்ரல் 26]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நேற்று வேறு ஒரு நேரில் தலைவர் அவர்கள், ஒரு அமைச்சர் அவையில் இருக்கும்போது இன்னொரு அமைச்சர் அவருக்காக பதில் சொல்ல வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார் கள். எனவே இதிலும் அதைக் கடைப்பிடிக்கும்படி சொல்லியிருக்கிறார்கள். தலைவருக்காக அவரது குறிப்பை நான் சொல்கிறேன்.

**திரு. அ. மாயவன் :** சாலையோரங்களில் மிக அசுத்தமாக இருக்கிறது, அதை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்காகத்தான் சொன் னேன். நமது கொள்கைக் குறிப்பிலேயே சொல்லப்பட்டிருக்கிறது, இது போன்ற சுகாதாரக் குறைவினால் 80 சதவிகம் நோய்கள், மலேரியா, மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் வருவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இதுபோன்ற அசுத்தங்களைச் சுத்தப்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநகராட்சியிலும், பல நகராட்சிகளிலும் தெரு விளக்குகள் சரியாக எரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சாலைகள் மேடும் பள்ளமுமாக இருக் கின்றன. நெடுஞ்சாலைகள் வேண்டுமானால் நன்றாக இருக்கின்றனவே தவிர மற்ற சாலைகள் எல்லாம் மோசமான நிலையில்தான் இருக்கின்றன. சென்னை மாநகரத்தில், தனியார் சாலைகளாக இருந்தாலும், மாநகராட்சி சாலைகளாக இருந்தாலும், சரிவரப் பராமரிக்கப்படுவதில்லை. ஆகவே நகராட்சிகளுக்கும், மாநகராட்சிக்கும் போதுமான நிதி ஒதுக்க வேண்டும். மாநகராட்சிப் பள்ளி களுக்குக் கட்டட வசதி இல்லை. அங்கே குடிநீர் வசதியே அளிக்கப்பட வில்லை. ஏராளமான பெண்கள் படிக்கிற, பணியாற்றுகிற மாநகராட்சிப் பள்ளிகளில் சரியான கழிப்பறை வசதி கிடையாது. இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மற்றவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தாமல் பேசவேண்டுமென்று அமைச்சர் சொல்கிறார். உறுப்பினர் அது போல பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. மாயவன் :** ஆகவே, சுகாதார வசதிகளை பள்ளிகளில் ஏற்படுத்தித் தர வேண்டும். மாநகராட்சிப் பள்ளிகள் 50 வருடங்களாக இருக்கின்றன. ஆனால் இதுவரை மின்சார வசதி அங்கே இல்லை. மின்வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், அங்கே பணி யாற்றும் ஆசிரியப் பெருமக்களுக்கு ஏராளமான கஷ்டங்கள் இருக்கின்றன. மாதந்தோறும் பி. எஃப். பணம் பிடிக்கிறார்கள். ஆனால் அதற்கான கணக்கு களை மாநகராட்சி நிர்வாகம் ஒவ்வொரு ஆண்டும் கொடுப்பதில்லை. ஆசிரியர்

கள் தங்களுடைய பி.எஃப். நிதியிலிருந்து கடன் தொகைக்கான விண்ணப்பம் அனுப்பினால், அவர்களுக்கு அவர்கள் பணத்திலிருந்து கடன் கொடுக்க மறுக்கப்படுகிறது. காரணம் அந்தப் பணம் வேறு செலவுகளுக்குப் பயன் படுத்தப்படுகிறது. அவர்கள் பணம் அங்கே இல்லை. ஆகவே கடன் கொடுக்க மறுக்கிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு மையங்கள் சிறப்பாக நடப்பதாக இங்கே சொன்னார்கள். அதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் சத்துணவு மையங்களுக்காக அரசாங்கம் தருகிற பணம் உண்மையாகக் குழந்தைகளுக்குப் போய்ச் சேருவ தில்லை. காரணம் என்னவென்றால், திருட்டு நடக்கிறது. அங்கே பலவித மான திருட்டுக்கள் நடக்கின்றன. என்னுடைய ஆலோசனை என்ன வென்றால், அங்குள்ள ஊழியர்களுக்குக் குறைவான ஊதியம் கொடுக்காமல், நிறைய ஊதியம் கொடுக்க வேண்டும். 150 ரூபாய் முதல் 170 ரூபாய் வரை அந்தப் பொறுப்பாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அது போதாது. சமையல்காரர்களுக்கு 30, 40 ரூபாய் கொடுக்கிறார்கள். அப்படி குறைந்த அளவு ஊதியம் கொடுப்பதால் திருட வேண்டுமென்ற எண்ணம் ஏற்படுகிறது. ஊதியத்தை உயர்த்தி, அவர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு அளிப்பதுபோல் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-05)

அதேபோல் சத்துணவுத் திட்டப் பணியைக் கண்காணிப்பதற்கு ஒரு கமிட்டி அந்தந்த வட்டாரங்களில் அமைக்கலாம். அந்தக் கமிட்டி, சத்துணவு மையங்களுக்குச் சென்று அவற்றைக் கண்காணித்து, குறைபாடுகளைக் குறிப் பிட்டுச் சொல்லலாம். இப்போது அந்த வேலைகளை அதிகாரிகள் பார்க் கிறார்கள். அவரவர்களுக்குள் 'அட்ஜஸ்ட்மெண்ட்ஸ்' நடக்கின்றன. அது வெல்லாம் நடக்காமலிருப்பதற்கு சர்வ கட்சி உறுப்பினர்கள் கொண்ட கமிட்டியைத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக்கொண்டு அமைக்க லாம். இம் மையங்கள் சரியாக நடைபெறுகின்றனவா என்று கண்காணிக்கக் கூடிய பொறுப்பை அவர்களிடம் ஒப்படைக்கலாம். ஆனால் இவர்கள் சென்று ஊழியர்களை 'சஸ்பெண்ட்' செய்ய வேண்டுமென்று நான் சொல்லவில்லை. இதுபோன்ற வேலையைக் கமிட்டிக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்ல வில்லை. வேலைகள் ஒழுங்காக நடைபெறுகின்றனவா, குழந்தைகளுக்குத் தேவையான அளவுக்கு உணவு கொடுக்கப்படுகிறதா போன்றவற்றைக் கவனித்துச் சொல்வதற்கு ஒரு கமிட்டி போட்டால், மிகச் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



அடுத்து, சென்னை மாநகராட்சியில் நேரு ஸ்டேடியும், எக்மோர் ஸ்டேடியம் என்று இருக்கின்றன. ஒன்றிற்கு நம்முடைய மறைந்த பாரதப் பிரதமரின் பெயரை வைத்திருக்கிறோம். சரி ஆனால், எக்மோர் ஸ்டேடியம் என்று ஊர் பெயரில் வைத்திருப்பது சரியாக இருக்காதென்று தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கும் ஒரு தலைவரின் பெயரையோ அல்லது விளையாட்டில் சிறந்து விளங்கிய வீரரின் பெயரையோ வைத்தால், நன்றாக இருக்கும் என்று தெரி வித்துக்கொள்கிறேன்.

அதேபோல் இந்த விளையாட்டுத் திடல்களில் விளையாட்டு விழாக்கள் நடைபெறுகிறபோது 'டோனார் டிக்கெட்டுகள்' அச்சடிக்கிறார்கள். ஆனால் அதற்கும் வரி வசூலிக்கிறார்கள். அவர்கள் விளையாட்டு விழாவிற்கு ஆகும் செலவை ஈடுகட்டுவதற்காகத்தான் அவ்வாறு டிக்கட்டுகள் அச்சடிக்கிறார்கள். அதற்கும் வரி வசூலிப்பதென்பது சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கிராமப்புறப் பெண்களுக்கு தன்னிறைவுத் திட்டம் மூலமாக வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இக்கொள்கைக் குறிப்பைப் படிக்கிறபோது, உள்ளபடியே நன்றாக இருக்கிறது. இதன் வாசகங்கள், சொற் ஜாலங்கள், ஆகியவற்றை அழகு தமிழில் சொல்லியிருக் கிறார்கள். ஆனால் உண்மையில் இந்தச் சலுகைகள் எல்லாம், திட்டங்களின் பலன்கள் எல்லாம், கிராமப்புற மக்களுக்குப் போய்ச் சேருகின்றனவா என்றால் இல்லை என்பதைக் கவலையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப்புற ஏழை மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் மோசமாக இருக்கிறது. வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கும் அவர்களை விடுவிப்பதற்கு எந்தத் திட்டமும் இல்லை. இப்போது 48.2 சதவீதம் பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பதாகவும், அவர்களை 1990-க்குள் 23 புள்ளி சொச்சம் சதவீதத்திற்குக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் என்ன கான்கிரிட்டாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிய வில்லை. கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய பெண்கள் மற்றும் விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்திருக்கக்கூடிய கூலியை எந்தக் கிராமத்திலும் யாரும் கொடுப்பதில்லை. அவர்களுக்கு இதைக் கொடுப்பதற்கு அரசு தக்க நட வடிக்கை எடுத்தால், அது மிகவும் உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். தன்னிறைவுத் திட்டத்தையும் சரியான முறையில் அமல் செய்ய முடியும்.

அடுத்து, கிராமப்புறங்களில் சாலை வசதிகள் செய்கிறார்கள். அதில் நடைபெறும் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சென்ற ஆண்டு சாலை போடுவதற்காக மண் அடித்திருப்பார்கள். இந்த ஆண்டும் அதே சாலைக்கு மண் அடிப்பதாகச் சொல்லி, அங்குமிங்கும் பள்ளம் வெட்டி நிரப்பி விட்டுப் போய்விடுவார்கள், புதிதாக இந்த ஆண்டு முழுமையாகப் போட மாட்டார்கள். ஆனால் புதிதாக எல்லாப் பகுதிகளிலும் மண் அடித்ததாகத் தெரிவித்து, பில்களை எல்லாம் போட்டு இலட்சக்கணக்கான ரூபாய்களை, ஆயிரக்கணக்கான ரூபாய்களை அதிகாரிகளிடமிருந்து பெற்று விடுவார்கள். இம்மாதிரியான ஏமாற்று வேலைகள் கிராமப்புறங்களில் நடைபெற்று வருகின்றன. இவற்றையெல்லாம் கண்காணிக்க வேண்டும். சாலை போடுவது, நீர்த்தொட்டிகள் அமைப்பது முதலிய பணிகள் நடைபெறும்போது, அவை மக்களுக்கு நன்கு விளம்பரப்படுத்தப்பட வேண்டும். ' உங்கள் ஊரில் சாலை போடுகிறோம் அதற்கு இவ்வளவு தொகையை ஒதுக்கியிருக்கிறது. ஊர் மக்கள் இதைக் கண்காணித்துக்கொள்ள வேண்டும்" என்று தெரியப்படுத்தினால், அவ்வூர் மக்கள் யார் கொள்ளையடிக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள முடியும். அதன் மூலம் கொள்ளையைத் தடுப்பதற்கும் வழி கிடைக்கும். அவர்கள் மக்கள் பிரதிநிதிகளுக்குச் சொல்வதற்கும் வாய்ப்பாக இருக்கும். . . .

**திரு. ஆர். டி. சித்தாபதி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகிற நேரத்தில் ஒட்டுமொத்தமாகச் சொல்வது எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. குறைபாடு எங்கே இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், அரசு நடவடிக்கை எடுப்பதற்கும் நன்றாக இருக்கும்; எங்களுக்கும் நன்றாக இருக்கும் என்று தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

**திரு. அ. மாயவன் :** கிட்டத்தட்ட ஏராளமான ஊர்களில் தென்னாற்காடு, வடாற்காடு மாவட்டங்களில் இருக்கின்றன. நான் தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவன். பல இடங்களில் அதுபோல் நடந்துகொண்டிருக்கின்றது. பிறகு வேண்டுமானால் அதற்குரிய ஆதாரங்களைத் தருகிறேன். நான் புதிதாக இந்த அவைக்கு வந்திருக்கிறேன்.

அடுத்து, கோவை மாநகராட்சியில் 8 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். ஆனால் அங்கு அடிப்படை சுகாதார வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு எவ்வளவு ஊழியர்கள் இருக்கிறார்கள் என்றால், 2 ஆயிரம் ஊழியர்கள்தான். 8 லட்சம் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமானால், குறைந்தபட்சம் 5 ஆயிரம் ஊழியர்களாவது வேண்டும். ஆனால்



அங்கு இருப்பது 2 ஆயிரம் ஊழியர்கள்தான். அங்குள்ள மாநகராட்சிப் பள்ளிகளிலும் இதே நிலைமைதான். ஆசிரியர்கள் பல நிறுவனங்களிடமிருந்து நாற்காலிகளை வாங்கிக்கொண்டு போய் அதைப் பயன்படுத்திய பிறகு, மீண்டும் அந்த நிறுவனங்களிடம் கொண்டுபோய் கொடுக்கிறார்கள். மாநகராட்சிப் பள்ளிகளில் பெஞ்சுகள் கூட இல்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கெல்லாம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல் மதுரை மாநகராட்சியில் டவுன் ஹாலுக்குப் போகும் ரோடு இருக்கிறது. அங்கு கவிச்சு அடிக்கும் மீன் கடைகளும், சாராயக் கடைகளும் நிறைய இருக்கின்றன. அந்தப் பக்கம் போகிறவர்கள் எல்லாம் மூக்கை கையால் பிடித்துக்கொண்டு போகக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்தக் கடைகளை எல்லாம் வேறு இடத்தில் வைத்து நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தலைவரவர்கள் ஒவ்வொரு உறுப்பினருக்கும் 10 நிமிடம் கொடுத்தால் போதுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உறுப்பினர் அவர்கள் 15 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். சீக்கிரம் முடிக்க வேண்டும்.

**திரு. அ. மாயவன் :** துணைத் தலைவரவர்களே, இன்னும் ஒரு சில நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

அடுத்து, உள்ளாட்சி மன்றங்கள்தான் தொழில் வரியை ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் ஆகியோரிடம் வசூல் செய்கின்றன. ஆனால் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் தொழில் வரியை வசூலிக்கக் கூடாது என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தொழில் வரியை உள்ளாட்சி அமைப்புகள் வசூலிப்பது காட்டுமிராண்டித்தனமானது என்று உச்ச நீதிமன்ற நீதிபதி கூறியிருக்கிறார்கள். எனவே தொழில் வரியை அரசு ஊழியர்களிடமிருந்து வசூலிக்க வேண்டாமென்றும், அதை ரத்து செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். வயிற்றுப் பிழைப்புக்காக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தொழில் செய்கிறார்கள். அவர்கள் 'பிசினஸ்' செய்யவில்லை. தொழில் செய்வதற்காக அவர்களிடம் தொழில் வரி வசூலிப்பது சரியான முறையாகாது. நான் கன்டோன்மென்ட் பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர். அங்கு யாரும் தொழில் வரி கொடுப்பதில்லை. பல நிறுவனங்களுக்கு விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள். அதுபோல் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்குத் தொழில் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு விதிவிலக்கு

இடங்கள் தேர்தலில் கிடைத்தன என்பதைப்பற்றி மட்டும் அரசியலில் பார்ப்பது என்றால், பலர் அரசியலை விட்டே ஓடியிருக்க வேண்டும். தேர்தலில் எத்தனை இடத்தில் தோற்றாலும், அரசியலை விட்டுவிடக் கூடாது என்று ஜனநாயகத்தில் இருக்கும் நம்பிக்கையில்தான் அரசியல்வாதிகள் இருக்க முடியுமே தவிர "ஒரு தேர்தலில் தோற்று விட்டோம், இனி நான் அரசியலுக்கு வரமாட்டேன்" என்று நினைப்பவன் அரசியல்வாதியாக இருக்க முடியாது. எவ்வளவு அதிகமாகத் தோற்றாலும், தொடர்ந்து தோல்வியை எல்லாம் வெற்றியாக்குகிற நிலையை மேற்கொண்டால்தான், அவன் சிறந்த அரசியல்வாதியாக வர முடியும். தோல்வியைக் கண்டு பயப்படுகிற நிலை நிச்சயமாக எங்களுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் துறையைப் பொறுத்தவரையில், பதில் சொல்லுவதற்காக மாண்புமிகு அமைச்சர் திரு. ட. உ. சண்முகம் அவர்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறார்கள் என்றாலும், இந்தத் துறையோடு சேர்ந்த எத்தனையோ குறைகளைப் பேச வேண்டும். காரணம் இந்தத் துறையோடு ஒட்டியிருக்கிற கல்வித் துறையைப் பற்றி இங்கே பல பிரச்சினைகள் எழுப்பப்படும். அதைப் போலவே இந்தத் துறையோடு ஒட்டிய டவுன் பிளானிங் பற்றிப் பேச வேண்டி வரும். இந்தத் துறையோடு ஒட்டியிருக்கிற குடிநீர் வழங்கல் துறையைப்பற்றிப் பேச வேண்டியிருக்கும். அப்படித்தான் விவசாயத் துறையும் இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறது. ஹெல்த் என்று பார்க்கிறபோது, சுகாதாரத் துறையும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறது. அதைப்போலவே மின்சாரத் துறையும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறது. புதிதாகப் போடப்படும் சத்துணவு பற்றிப் பேச வேண்டியிருப்பதால், சத்துணவுத் துறையும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறது. நான் இங்கே பொதுவாகப் பேசுகிறேன். இப்படி எல்லாத் துறை பற்றிய கொள்கைக் குறிப்பு விவாதம் வரும்போது, எல்லாத் துறையின் அதிகாரிகளும் விழிப்போடு இருப்பார்கள் என்று கருதுகிறேன். அப்படி விழிப்பாக இருந்து என்ன சொல்லுகிறார்கள் என்று கவனிக்க வேண்டும். காரணம் அரசுக்கும் அமைச்சர்களுக்கும் துணையாக இருந்து பதில் சொல்ல உதவ வேண்டியவர்கள் அந்தத் துறையைச் சார்ந்தவர்கள்தான் . . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஒவ்வொரு துறைக்கும் ஒரு அமைச்சர் இருக்கிறார். அந்தத் துறையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, அந்தத் துறையின் அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். அப்போது மற்ற துறையின் அமைச்சர்கள் இருந்தால், அவர்களும் மாண்புமிகு உறுப்பினர்களைப் போல்தான். அவர்களுக்கு ஏதாவது விவரம் தெரிந்திருந்தாலும், அந்தத் துறைக்குப் பொறுப்புள்ள அமைச்சரிடம் சொல்லி, அந்தத்





துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதுதான் முறை. பல துறைகளோடு சம்பந்தம் இருக்கலாம். ஒவ்வொரு துறையிலும் இருப்பவர்கள் எழுந்து பதில் சொன்னால், உறுப்பினர் என்ற முறையில்கூட அனுமதிக்கலாம். ஆனால் இப்போது 5, 6 உறுப்பினர்கள் பேச வேண்டும். 1 மணிக்கு அவைக் கூட்டத்தை முடிக்க வேண்டும். எல்லோரும் பேசுவது என்று வந்தால், அவகாசம் போதாது என்பதால், மரபுப்படி அந்தந்தத் துறை அமைச்சர்கள் இருந்தாலும், உரிய அமைச்சரிடம் மட்டும் விவரம் சொல்லி பதில் சொல்வதுதான் சரியான மரபு என்பதைத்தான் நான் சொன்னேன்.

(முற்பகல் 11-20)

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் மரபைச் சொல்லியதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தாங்கள் உருவாக்கிய மரபைப் பற்றி நான் பேசவில்லை. இந்தத் துறையைப் பற்றிப் பேசும்போது, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதைப்பற்றித்தான் பேசுகிறேன். பொதுவாக இந்த நகராட்சிகளில் உள்ள ஹெல்த் ஆபீசரைப் பற்றிக் குற்றச்சாட்டு சொல்லும்போது, ஹெல்த் ஆபீசர் யாருடைய கண்ட்ரோலில் இருக்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும். அதே போல டவுன் பிளானிங் பற்றி ஒரு தகராறு இருக்கிறது என்று பேசும்போது, பில்டிங் இன்ஸ்பெக்டர் மீது குற்றச்சாட்டு சொல்லுகிறபோது, அந்தக் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்லுகிற நிலை அந்தத் துறையிலே உள்ளவர்களுக்கு உண்டு.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இப்படி ஒவ்வொரு துறையைப் பற்றியும் பேசும்போது, அந்தத் துறை அமைச்சர்கள் இங்கே இருப்பார்கள். அவர்கள் குறிப்பு எடுத்துக்கொள்வார்கள். இப்படிப் பேசினால் ஒவ்வொரு துறையைப் பற்றிப் பேசும்போதும் எல்லாத் துறை அமைச்சர்களும் இருக்க வேண்டும் என்ற நிலை வரும். அந்த அமைச்சர் அதற்கு எப்படி பதில் சொல்ல முடியும்? இப்படிப்பட்ட நிலையை உருவாக்கினால், பிறகு எதிர்க் கட்சியில் உள்ளவர்கள், அந்த அமைச்சர் ஒருவர் மட்டும் இருக்கிறாரே, மற்ற அமைச்சர்கள் ஏன் வரவில்லை என்ற கேள்வி கேட்க இடம் கொடுக்கும். இது மரபல்ல. எந்தத் துறையைப் பற்றி விவாதத்திற்கு எடுத்துக் கொள்கிறோமோ அந்தத் துறை அமைச்சர்தான் பதில் சொல்வது மரபு. புது மரபுகளை உற்பத்தி செய்வது நல்லதல்ல. இது ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கே பாதகமாக வந்தால், ஆச்சரியப்படுவதற்கில்லை.

அளிக்க வேண்டும். அவர்களிடமிருந்து வரக்கூடிய நிதியை வைத்து ஒன்றும் செய்துவிட முடியாது. பெரிய செல்வந்தர்களிடமிருந்து வரி வசூல் செய்ய லாம். அவர்களிடம் வரி வசூல் செய்வதை நாங்கள் தடை செய்யவில்லை.

அடுத்து, சென்னை மாநகரை ஒட்டி இருப்பது செங்கல்பட்டு மாவட்டம். சென்னையிலிருந்து 32 கிலோ மீட்டர் வரை புறநகர்ப் பகுதி என்று சொல் கிறார்கள். செங்கல்பட்டின் ஒரு பகுதி அதுவரை இருந்தாலும், அங்கு பணி யாற்றுகிற ஆசிரியர்கள், அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படி, மற்றும் நகர ஈட்டுப் படி கொடுக்கப்படுகின்றன. செங்கல்பட்டு தாலுக்காவின் ஒரு சில பகுதிகளைச் சேர்ந்த அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகைப் படி மற்றும் நகர ஈட்டுப் படி கொடுக்கப்படுகின்றன. செங்கல்பட்டு மாவட்டத்தில் பிற பகுதிகளில் பணியாற்றும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அந்தச் சலுகைகளைப் பெறுவதற்கு வாய்ப்பில்லை. சென்னை மாநகர் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருகிறது. 5 அல்லது 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததுபோல் இப்போதில்லை. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் காஞ்சிபுரத்திலிருந்தும், செங்கல்பட்டிலிருந்தும், மதுராந்தகத்திலிருந்தும் வந்து பணியாற்றுகிறார்கள். சென்னையில் இருக்கும் விலைவாசி செங்கல்பட்டு மாவட்டம் முழுவதையும் பாதிக்கிறது. ஆகவே அந்த மாவட்டத்தில் பணி யாற்றும் அனைத்து அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட அவர்களுடைய காலத்தில் குறிப்பிட்டிருக் கிறார்கள். செங்கல்பட்டு மாவட்டம் முழுவதற்கும் நகர ஈட்டுப் படி, வீட்டு வாடகைப் படி பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பேன் என்று இந்த மாமன்றத் திலும் போவையிலும் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு மதிப் பளிக்கக் கூடிய வகையில் செங்கை மாவட்டம் முழுவதிலும் வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாநகராட்சித் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எந்தக் காரணத்தை முன்னிட்டும் தேர்தலை ஒத்திப் போடக் கூடாது. ஆளும் கட்சி அதில் தோற்றுவிடுமோ என்ற அச்சம் தேவை யில்லை. இன்னும் அந்தத் தேர்தலைத் தள்ளிப் போட்டால், சங்கடங்கள் அதிகமாகத்தான் வரும். அங்கு மக்களுடைய குறைகளைக் கவனிப்பதற்கு பிரதிநிதிகள் இல்லாமல் நிர்வாகம் ரொம்ப சீரழிந்து போய்விடும். ஆகவே அவைகளுக்கு விரைவில் தேர்தல் நடத்த வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்து, நான் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த மேலவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன். வணக்கம்.





(முற்பகல் 11-15)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. மாயவன் அவர்கள் பேசும்போது கூறிய ஒரு வார்த்தையைக் குறித்து மாண்பு மிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஆட்சேபித்திருக் கிறார்கள். ** என்று சொன்னது மத உணர்ச்சியைப் புண் படுத்தும் என்கிற காரணத்தால், அந்த வார்த்தைகளை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க ஆணையிடுகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சி மற்றும் நகராட்சி நிர்வாகமும் மாநகராட்சி களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கான வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துறைக்கு மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தாலும் இன்றைக்கு ஒரு சரித்திர சாதனை என்று சொல்லுகிற அளவுக்கு எந்த விளைவுகள் ஏற்பட்டாலும், அதைப்பற்றிக் கவலைப்படக் கூடாது என்ற அடிப்படையில், பல ஆண்டுகளாகவே நடத்தப் படாமல் இருந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்தி, இன்றைய தினம் பல்வேறு இடங்களிலும் ஜனநாயகத்தைப் புகுத்துகிற அளவுக்கு செயல் பட்டிருக்கிறார் என்பதால் அதைச் சுட்டிக்காட்டி, பாராட்டு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தேர்தல் என்றாலே யார் யார் எப்படியெல்லாம் பயந்தார்கள் என்பது எனக்குப் பழைய கால அரசியல் அனுபவம் காரணமாக நினைவில் இருக்கிறது. ஆனால் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் தேர்தல் முடிவுகள் எப்படியானாலும் சரி, உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்த வேண்டும், அங்கெல்லாம் ஜனநாயக மரபைக் காக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்தத் தேர்தலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துணிந்து நடத்தினார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிச் சுட்டிக் காட்டும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. மாயவன் அவர்கள் பேசும்போது, "பயந்து கொண்டு தேர்தலை நடத்தாமல் இருக்காதீர்கள்" என்று பழைய பாணியிலேயே பேசியிருக்கிறாரே தவிர, துணிந்து தேர்தலை நடத்தியதற்காகப் பாராட்டு தெரிவிக்கிறேன் என்று ஒரு வார்த்தையையாவது சொல்லியிருந்தால் அவரை நான் மனதாரப் பாராட்டியிருப்பேன். தேர்தல் விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் துணிந்து இந்த ஆட்சியை நாங்கள் நடத்துகிறோம் என்கிறபோது, அதை நான் பெருமையாகக் கருதுகிறேன். எத்தனை

** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,
அவையில் பேசுகின்ற குறிப்புகளுக்கு அமைச்சர்கள்தான் பொறுப்பு. அதிகாரி
களைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. அமைச்சருக்குத் தேவைப்படு
கிறது என்றால், அவர்தான் அதிகாரிகளை வரவழைத்துக் கொள்ள வேண்டும்.
அதிகாரிகள் வர வேண்டும் என்று உறுப்பினர் கேட்பது சரியானதல்ல.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மேலவைத் தலைவர் அவர்களே,
இந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் பெரும்பாலும் வந்திருக்கிறார்கள்.
உள்ளே இடம் இல்லாததால், வெளியே அமர்ந்திருக்கிறார்கள். மாண்புமிகு
உறுப்பினர் சொல்லும் கருத்துக்களை நானும் குறிப்பு எடுத்துக் கொள்ளு
கிறேன். மேலும் அவையில் பேசப்படுகிற பேச்சுக்களின் குறிப்புகள் அந்தந்த
இலாக்காக்களுக்குப் போகின்றன. அவர்கள் மேற்கொண்டு நடவடிக்கை
எடுக்க அது உதவியாக இருக்கும். ஆகவே அதிகாரிகள் வரவில்லை என்ற
வருத்தம் தேவையில்லை. அதிகாரிகள் இருக்கிறார்கள். இடம் இல்லாத
தால் சுற்றி வெளியே உட்கார்ந்திருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்
கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,
யார் குறுக்கீடும் இல்லாமல் பேச வேண்டும் என்று முயற்சி எடுத்துக்கொண்டு,
அந்த முடிவோடுதான் நான் வந்தேன். ஆனால் நீங்களே குறுக்கிட்டிருக்கிறீர்
கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அந்த மாதிரி முறையில்
உறுப்பினர் அவர்கள் பேசுவது நல்லது.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, நான் இதை
எடுத்துக் காட்டுவதற்குக் காரணம், உள்ளாட்சித் துறையிலே சம்பந்தப்பட்ட
அதிகாரிகள் இருக்கிறார்கள். இவர்கள் அத்தனை பேரும் தனித்தனியாக
இருக்கிறார்கள். எந்த ஒரு நகராட்சியானாலும் சரி, அந்த நகராட்சிக்
குள்ளே நாம் நுழைகிறோம் என்றால், தனித்தனி அதிகாரம் வைத்துக்கொண்டு
நகராட்சி நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அத்தனை
பேரும் விழிப்பாக இருக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.
எப்போதும் விழிப்பாக இருந்து அவ்வப்போது பதில் சொல்லும்போதுதான்,
சில உண்மைகள் நாட்டுக்குத் தெரியும். ஒரு நிமிடம் தவறினாலும், சின்ன
பிரச்சினைகூட பெரிய பிரச்சினையாகி தவறாகப் போய் அதை மாற்றுவதற்கு
என்ன முயற்சி எடுத்தாலும், மாற்ற முடியாமல் போகும் என்பது தேர்ந்த
அரசியல்வாதிகளுக்குத் தெரியும். என்னைப் போன்றவர்களே சில



நேரங்களில் ஏமாந்து போகிறோம். ஆகவே ஒவ்வொரு நிலையிலும் பார்க்க வேண்டும். இன்றைக்கு தேர்தலைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும் என்றால், ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். தேர்தலுக்காக, நகராட்சித் தேர்தலுக்காக வாக்காளர் பட்டியல் தயாரிப்பது என்பது நீண்ட காலமாக இருக்கிறது, வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்து இருக்கிறது. நம்முடைய காலத்திலேயும் இருக்க வேண்டுமா என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். அது தேவையில்லாத ஒன்று. வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கும் பணியைச் செய்பவர்கள் அரசுப் பணியாளர்கள். இதற்காக வெளியேயிருந்து யாரும் வந்துவிடவில்லை. ஆகவே வாக்காளர் பட்டியலை அடிப்படையாக வைத்து புதிதாகச் சேர்க்க வேண்டும் என்றால், சேர்த்துத் தயாரிக்கும் பணியை வருவாய்த் துறையிலுள்ள அதிகாரிகள் செய்யும் நிலையை சட்டத்தின் மூலமாகச் சில மாற்றங்களைச் செய்து ஏற்படுத்த வேண்டும். நகராட்சிக்கென்று தனியாக வாக்காளர் பட்டியல் இருக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்த காலம் இருந்ததை மாற்றி, புதிய காலத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய காலம் என்று சொல்லும்போது, புதிய விவரங்கள் கிடைத்தன. சென்னை மாநகராட்சிக்கு சில இடங்களில் 'ஒயர்லெஸ்' வைக்க வேண்டும் என்று குறிப்பு இங்கே வருகிறது.

(முற்பகல் 11-25)

இப்படி ஓயர்லெஸ், கம்ப்யூட்டர் வைக்க வேண்டுமென்றால் சில பேர்கள் எதிர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர் சொல்கின்றபோது, அதிலே உள்ள ஆச்சரியம் என்னவென்றால், முன்னேறிக் கொண்டிருக்கின்ற காலத்தில், எதிர்க்கின்றவர்கள் பேசுகின்ற நேரத்திலே பார்த்தால், அவர்கள் ரொம்பத தீவிரமாகவே பேசுவார்கள். ஓயர்லெஸ் வேண்டாம், கம்ப்யூட்டர் வேண்டாம் எல்லாமே மனிதனே செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டு எதிர்த்துக் கொண்டு வருகின்றார்கள். அவர்கள் வேறு ஒரு காலத்திலே, பழைய காலத்திலே இருந்து கொண்டிருக்கின்றார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு காலத்திலே அண்ணா அவர்கள் ஆட்சிக் காலத்திலே இருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டுகள் டிராக்டர் வந்தபோது போராட்டம் நடத்தினார்கள். டிராக்டரே வரக்கூடாது என்றார்கள். கடைசியிலே முற்போக்கான கருத்துக்களைச் சொன்னவர்கள், பிற்போக்கான கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். பிறகு டிராக்டர்கள் வேகமாக ஓட ஆரம்பித்த பின்னால் . . . . .

* திரு. ப. மாணிக்கம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இது கட்சி விவகாரம் என்பதற்காகச் சொல்கிறேன். அந்தச் சிந்தனை முற்போக்கானது, அல்லது பிற்போக்கானது என்பதல்ல. அப்போது வேலை வாய்ப்புப் பிரச்சினைகள் இருந்தன. டிராக்டர்கள் அந்த சந்தர்ப்பத்தில் வந்தபோது, அவை அவர்கள் வேலை வாய்ப்பைக் கெடுத்தது. மாற்று வேலை வாய்ப்புகள் இல்லாத நிலையில் அப்படி இயந்திரங்களைப் புகுத்துவது தவறு என்று சொன்னோம். இதிலே கட்சியைக் குறிப்பிட்டுப் பேசுவதை விட்டுவிட வேண்டும். இப்போதும்கூட வேலைவாய்ப்பைக் கெடுக்கக்கூடிய முறையில் இயந்திரங்களைப் பயன்படுத்துவது என்று சொன்னால், இயந்திரங்களைப் பயன்படுத்தும்போது, அது வேலை வாய்ப்பைக் கெடுக்கக்கூடிய நிலையில் இருந்தால், மாற்று வேலை வாய்ப்பு கொடுக்கக்கூடிய அளவில் இருந்தால்தான் அதை முற்போக்கு என்று சொல்ல முடியும். Technology also should be used selectively என்பார்கள். அதுபோல அது எதுவாக இருந்தாலும், எதை எந்த நோக்கில் உபயோகிக்க வேண்டும் என்று இருக்கின்றதோ அந்த நோக்கில் உபயோகப் படுத்த வேண்டும். முற்போக்கு என்ற பெயரில் கம்ப்யூட்டர்களையே அபரிமிதமாகப் பயன்படுத்தினால், இங்கே இருக்கின்ற பேக்டரிகளையெல்லாம் மூடிவிடவேண்டிய நிலைமைதான் ஏற்படும். அந்த நிலைமைகளை அங்கீகரிக்க வேண்டும் என்பதை விட்டுவிட்டு, அந்தக் கருத்துத் தோற்றத்தை முற்போக்கு என்றும் பிற்போக்கு என்றும் ஒப்பிட்டு வாதாடக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். அந்த விளக்கத்திலே, எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் மாறுபாடுகள் உள்ளவர்கள் அல்ல. வேலையை இழந்துவிட்டு முற்போக்கு வரவேண்டுமென்பதல்ல. ஏதோ ஒரு நிலைமையைச் சொல்ல வேண்டுமென்பதன் காரணமாகச் சொல்கின்றார்கள். வேலை வாய்ப்பை உறுதி செய்யவேண்டும் என்ற நோக்கிலே விஞ்ஞானத்தை எந்த அளவுக்கு வளர்க்க வேண்டுமோ அந்த அளவுக்கு வளர்க்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். விஞ்ஞானத்தை வளர்க்கக்கூடாது, வளர்க்கக்கூடாது என்ற அளவுக்கு நம் சிந்தனைகள் வரக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். ஏனென்றால் எதற்கெடுத்தாலும் கம்ப்யூட்டர் வரக்கூடாது, ஒயர்லெஸ் வரக்கூடாது என்று இப்படியே பார்த்தால், இன்னும் எத்தனை நாளுக்கு பழைய காலத்திலேயே இருக்கப் போகிறார்கள்? உதாரணத்திற்குச் சொல்கிறேன். என் விஞ்ஞான ரீதியிலே





முன்னேறுவதற்கு வழிவகைகளை வகுக்கக்கூடாது? அங்கே பார்த்தால் தலைவர் அவர்கள் மணி அடித்துக்கொண்டிருக்கின்றார்கள். இங்கே இருக்கின்ற எலெக்ட்ரானிக் கடிகாரத்திலே நாம் மணி பார்த்துக் கொண்டிருக்கிறோம். இவ்வளவு நேரம் பேச வேண்டும் என்று சொல்கின்றார்கள். இந்தப் புதிய கடியாரத்தை வைத்துக்கொண்டு பார்க்கிறோம். மூன்றாவது நிமிடத்தில் ஆரம்பித்தால், நமக்குத் தெரிகிறது, அதில் 10 நிமிடம் என்று வருகின்றபோது, நேரம் இவ்வளவு ஆகிறது என்றும் எவ்வளவு நேரம் பேசியிருக்கிறோம் என்பதும் தெரிகிறது. ஒவ்வொரு தடவையும் பேசும்போது, விவாதிக்கின்றபோது அதைப் பார்க்கின்றோம். எலெக்ட்ரானிக் கடிகாரம் ரூ. 50, ரூ. 100 என்ற விலைக்கு வருகிறது. ஒரு புதிய கடிகாரத்தை வைத்துப் பார்த்தால், எலெக்ட்ரானிக் துறை எந்த அளவுக்கு முன்னேறியிருக்கின்றது என்பதும் தெரியும்.

இங்கே பார்த்தால், இரண்டு பேர்கள் எழுதிக்கொண்டிருக்கின்றார்கள். எழுதுகிறார்கள். கருத்து மாறிமாற வருகிறது. திருத்திக்கொடுத்தால்கூட திருப்பி மாறி வருகிறது. டேப் ரெக்கார்டர் வாங்கிப் போடலாம். ஒரு டேப் ரெக்கார்டர் விலை எவ்வளவு ஆகப்போகிறது. பெரிய செலவு ஆகப் போவதில்லை. அதிலே பேசிய பேச்சு பதிவாகும். அதைப் போட்டுப் பார்த்தால், என்றைக்கும் அப்படியே இருந்துகொண்டிருக்கும். ஆனால் அந்த டேப் ரெக்கார்டரைப் போட்டால் இரண்டு ஷார்ட்ஹாண்ட் ரிப்போர்ட்டருக்கு வேலை போய்விடும். அதனாலே டேப் ரெக்கார்டரே வேண்டாம் என்று சொல்லிக்கொண்டிருந்தால், நாம் நிச்சயமாக பழைய காலத்திலே குடுமி வைத்துக்கொண்டு போன, கடுக்கண் போட்டுக்கொண்டு போன காலத்திற்குத் தான் போவோமே தவிர நிச்சயமாக மாறுகின்ற அளவுக்கு வழிவகைகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. செ. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையில், மேலவையிலே ரோபார்ட்கூட போட்டுக் கொள்ளலாமா? மனிதர்களுக்குப் பதிலாக அந்த மனித இயந்திரங்கள் இருக்கின்றனவே, அதைப் போடலாமா? அதாவது விஞ்ஞானத்தை வேண்டாம் என்பது பிற்போக்குவாதம் என்கின்றார்கள். அது சரியாக இருக்காது என்று நினைக்கிறேன். இதிலே யார் எதைச் செய்ய வேண்டும் என்று இருக்கின்றது. வேலை வாய்ப்புக்கு கம்ப்யூட்டர், ஒயர்லெஸ் போன்றவைகளைப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லும்போது இதையும் பயன்படுத்தலாம் என்பதைச் சொல்கிறேன். அதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

இன்றைக்கும் பார்க்கலாம், நகர சுத்தித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். கேவலமான தொழிலை, அசிங்கமான தொழிலை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி யார் சிந்திக்கிறார்கள்? என்ன காரணத்திற்காக அவர்கள் அந்தத் தொழிலைச் செய்ய வேண்டும்? அந்தத் தொழிலை மாற்றுவதற்கு நாம் எந்த முயற்சியை எடுத்திருக்கிறோம்? எந்த அரசியல் கட்சி அந்த முயற்சியை எடுத்திருக்கிறது? எங்கள் ஊரிலுள்ள நகர சுத்தித் தொழிலாளர்கள் போதவில்லை, இன்னும் 10 பேர் வேண்டு மென்று சொல்லுகிற நிலையிலேதான் இருக்கிறோம். அந்தத் தொழிலை ஒழிக்க வேண்டுமென்ற நிலையிலே சிந்திக்கிறவர்கள் யார் இருக்கிறார்கள்? அந்தச் சிந்தனை மூலமாகத்தான் மனிதன் உணர்ந்து, சிலவற்றை சாதிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகராட்சிகளைப் பொறுத்தவரையில், இன்றைக்கு புதிய உறுப்பினர்கள் அங்கே உட்கார்ந்திருக்கிறார்கள். புதிய உறுப்பினர்கள் உட்கார்ந்துள்ள நிலையில் மாண்புமிகு அமைச்சரவர்கள்கூட ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லி யிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நகராட்சி மன்றங்களில் பங்கு இருக்க வேண்டும், ஒன்றியங்களில் பங்கு இருக்க வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். எனக்கு ஒரு கவலை உண்டு. அதைச் சொல்லியாகவேண்டும். நகராட்சி நிர்வாகம் என்றாலும், இந்த அவை சம்பந்தப்பட்டது என்பதால் சொல்கிறேன். இந்த அவையிலே இருக்கிற எம்.எல்.சி.-க்கள் அத்தனை பேரும் பல இடங்களிலே மாவட்ட அளவில் கூட்டங்களிலே கலந்து கொள்கிறார்கள். அதிலே பார்த்தால், ஆசிரியர் தொகுதி பிரதிநிதிகளும், பட்டதாரி தொகுதி பிரதிநிதிகளும் மூன்று, நான்கு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் கலந்துகொண்டு, பேசிக் கொண்டிருக்கிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.சி. என்ற முறையில் தேவைப்பட்டால், மாவட்டத்தைச் சொன்னால், அங்கே கலந்துகொள்ளலாம்; இல்லாவிட்டால் அதையும் நாங்கள் இழந்துவிடுவோம். சாதாரணமாக

(முற்பகல் 11-35)

புதிதாக வருகிற நகராட்சி மன்றம், ஒன்றியங்களில் கூட எங்களைப் போன்று இருக்கின்ற உறுப்பினர்களின் கருத்துக்களையும் சொல்ல வாய்ப்பளிக்கும் ஒரு நிலையை உருவாக்க வேண்டும். அந்த சிந்தனையையும் கவனிக்க வேண்டும்.

இன்னொன்றையும் சொல்வேன். இன்றைக்கு நகராட்சிகளின் பொறுப்பில் இருந்த பல்வேறு பணிகளை பல்வேறு காரணங்களுக்காக எடுத்துவிட்டோம். முன்பு எல்லாப் பள்ளிகளும் நகராட்சிகளின் கையில் இருந்தன. தனியார்



மேனேஜ்மெண்ட் என்கிற அடிப்படையில் நகராட்சிகளின் கையில் அவைகள் இருந்தன. அப்போது நகராட்சியே உயர்நிலைப் பள்ளிகளை திறம்பட நடத்தும் அளவுக்கு நிலைமை இருந்தது. என்னைப் பொறுத்தவரையில், ஒரு நகராட்சி உயர்நிலைப் பள்ளியை நடத்தியதுடன், ஒவ்வொரு மாதமும் அதனுடைய முன்னேற்றத்தைப் பற்றி கருத்துப் பரிமாற்றம் செய்து விவாதம் நடத்தி நல்லமுறையில் நடத்திக்கொண்டிருந்தோம். தொடர்ந்து இரண்டு மூன்று வருடங்கள் மாநிலத்திலே முதலிடம் வகிக்கும் அளவுக்கு அது இருந்தது. ஆனால் இன்றைக்கோ அங்கே பணியாற்றும் ஆசிரியர்கள் "யாருடைய நிர்வாகத்திலும் நாங்கள் இருக்க மாட்டோம், யாரும் எங்களைக் கட்டுப்படுத்தக் கூடாது, யாருக்கும் நாங்கள் கட்டுப்பட மாட்டோம்" என்கிற சிந்தனையை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அதை நான் தனிப்பட்ட முறையில் வரவேற்கலாம். ஆனால் உள்ளபடியே இப்படிச் சொல்லும் ஆசிரியர்கள் நாளைய தினம் மாணவர்களுக்கு நல்ல முறையில் பாடங்களைச் சொல்லிக் கொடுத்தாலும், சொல்லிக் கொடுக்காவிட்டாலும், எங்களை ஒன்றும் கேட்கக் கூடாது என்றும் சொல்லலாம். ஆனால் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு பிரத்யட்சமான உதாரணம் ஒன்றைச் சொல்கிறேன். இன்றைக்கு நகராட்சிகளில் பல எதிர்க் கட்சிகளின் கையில் வந்திருக்கின்றன. அவர்களின் கையில் இருக்கின்ற நகராட்சிகளில் மட்டுமாவது நகராட்சி நிர்வாகத்தின்கீழ் பணியாற்றும் வகையில் ஆசிரியர் களுக்கு வழிவகை செய்தால், நிச்சயமாக எப்படி அவர்கள் நிர்வாகத்தில் செயல்படுகிறார்கள் என்பதை எல்லோரும் பார்க்க முடியும். அப்படிச் செய்தால், ஆசிரியர்களுக்கும் ஊக்கம் பிறக்கும். ஆசிரியர்களை வைத்துக் கொண்டு எப்படி நிர்வாகம் நடத்துகிறார்கள் என்று நாட்டு மக்கள் அவர்களைப்பற்றித் தெரிந்துகொள்கின்ற நல்ல வாய்ப்பும் உருவாகும். ஆகவே திராவிட முன்னேற்றக் கழக நகராட்சிகளில் மட்டுமாவது ஆசிரியர்களை அந்தந்த நகராட்சிகளின் நிர்வாகத்திற்கே விட்டு விடுங்கள். அந்தவகையில் இதற்கு ஒரு ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன்.

அடுத்து, நகராட்சிகளைப் பொறுத்தவரை, வருமானம் என்று பார்த்தால், சொத்து வரி மூலம் வருகிற வரிதான் பெரிய வருமானம். அதைக் கூட இன்றைக்கு உயர்த்தி உத்தரவு போட்டிருக்கிறார்களே, புதிய டாக்ஸ் ரிவிஷன் செய்து விட்டு வரியை உயர்த்தியிருக்கிறார்களே, இப்படிச் செய்து விடப்பட்டது. அப்படி ஏலம் விடுகிற நேரத்தில் நகராட்சித் தேர்தல்கள்

[1986 ஏப்ரல் 26

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அந்த ரோபார்ட் என்பது மனித இயந்திரம். அந்த இயந்திரத்தை பயன்படுத்துவது எதற்கு என்றால், மனிதன் செய்ய முடியாத காரியங்களை சாதிப்பதற்குத்தான். அதை எதற்குப் பயன் படுத்தவேண்டுமோ அதற்குத்தான் பயன்படுத்த வேண்டும். உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஆகாய விமானம் ஒன்று வெடித்து கடலில் விழுந்தபோது, அந்தக் கருப்புப் பெட்டியை எடுப்பதற்காக அந்த இயந்திரம் அனுப்பப்

(மாற்றுத் தலைவர் திருமதி வி. ஜெயலட்சுமி தலைமை)

(முற்பகல் 11-30)

பட்டது. மனிதனால் போய் கொண்டுவர முடியாத பெட்டியை, இயந்திரம் கடலுக்கு அடியே போய் கொண்டு வந்தது. அதற்கு அதைப் பயன்படுத்த வேண்டும். அதற்கு மனிதனைப் பயன்படுத்த முடியாது. எதையெதை எதற்குப் பயன்படுத்த வேண்டுமோ, அதை அதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாற்றுத் தலைவரவர்களே, விஞ்ஞானம் என்பது நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற ஒன்று. அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற நிலையை மாற்ற வேண்டுமென்பதற்காக ஓர் உதாரணம் சொல்வேன். ஒரு நோத்திலே நான் சுற்றுப் பயணம் சென்றபோது, பக்ரா நங்கல் அணைக்கட்டிலே ஒன்றைப் பார்த்தேன் . . .

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எதைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன். உள்ளாட்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு விவாதிக்கப்படுகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் கவலைப்படக் கூடாது. சென்னை மாநகராட்சியிலே ஒயர்லஸ் வரப்போகிறது என்ற அடிப்படையில், அதிலிருந்து விஞ்ஞானத்திற்கு வந்திருக்கிறேன். அவர்கள் வேறு எங்கோ பார்க்கிறார்கள். ஒயர்லஸ்-ல் பார்க்க வேண்டும். அது இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் இருக்கிறது. 'ஒயர்லஸ்'-லே பேசுவதால், அவருக்குக் கேட்கவில்லை. பண்டித நேரு அவர்கள் பக்ரா நங்கல் அணைக்கட்டைத் திறந்தபோது, சொன்னார்கள். 'நான் வணங்குகிற கோயில் இது' என்று பண்டித நேரு எழுதி வைத்தார்கள். நீங்கள் வணங்குகிற கோயில் எது என்றால், தெருவிலே



இருக்கிற கோவிலில் வணங்கிக் கொண்டிருக்கிறீர்கள். நான் நிச்சயமாக அதைத் தவறு என்று சொல்லமாட்டேன். எந்த அளவுக்கு முற்போக்கான சிந்தனை உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும் . . .

(திரு. க. மீனாட்சிசுந்தரம் எழுந்தார்)

**மாற்றுத் தலைவர் (திருமதி வி. ஜெயலட்சுமி) :** மாண்புமிகு உறுப்பினர் களுக்கு ஒன்று சொல்கிறேன். பேச வேண்டியவர்கள் இன்னும் நான்கு, ஐந்து பேர்கள் இருக்கிறார்கள். எனவே ஒவ்வொருவரும் குறுக்கிட்டுப் பேசினால், பேச வேண்டியவர்களின் நேரம் குறையும். அவர்களுக்கு மேலும் நேரம் கொடுக்க வேண்டுமென்றால் முடியாது. தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் குறுக்கிட்டுப் பேச வேண்டாம். சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, சொல்லுவார்கள். விவாதம் முடிந்த பிறகு விளக்கம் கேட்டால், நன்றாக இருக்கும்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாற்றுத் தலைவரவர்களே, நல்ல நேரத்தில் சொன்னீர்கள். ஒன்றை நீங்கள் சொல்லலாம். யார் யார் குறுக்கிட்டுப் பேசுகிறார்களோ, அவர்கள் சார்ந்துள்ள கட்சிக்கு ஒதுக்கியுள்ள நேரத்திலே அதைக் குறைத்துக் கொள்ளலாம். இப்படி குறுக்கிடுகிற நேரத்தில் சில சிந்தனைகள் வருகின்றன. அப்படிப்பட்ட சிந்தனைகள் வரும்போது, சில கருத்துக்கள் வரும். 25 ஆண்டுகளாக என்ன பேசுகிறோம்? இதே சாக்கடை, குப்பை, மின்சார விளக்கு பற்றித்தான் பேசுகிறோம். அதிலே எந்த மாற்றமும் இல்லை. முன்னேற்றத்திற்கு வழியும் இல்லை. அப்படிச் சொல்லுவதும் இல்லை. இதில் முன்னேற்றம் வர வேண்டுமென்றுதான், பண்டித நேரு அவர்கள் சொன்னதைக் குறிப்பிட்டேன். அவர் சொன்னதைக் குறிப்பிடக் காரணம், விஞ்ஞானத்தை எந்த அளவுக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான். அப்படி என்றால் மனித சக்தியே தேவையில்லையா என்றால், மனித சக்தியை எந்த அளவுக்குப் பயன்படுத்த வேண்டுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். பல்வேறு நிலைகளிலே அதைப் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறது. மனிதனைப் பட்டினி போட்டுவிட்டு, விஞ்ஞானத்தை வளர்க்க வேண்டுமென்ற கொள்கையை அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மனிதனுக்குத் தேவையான வசதிகளைச் செய்ய விஞ்ஞானத்தைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு இன்றைக்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதிலே இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கிறது.

[1986 ஏப்ரல் 26

திரு. எஸ். ஆர். இராதா : இந்த ஏலம் எடுத்தவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், நேற்று முன்தினம், அந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை திட்டமிட்டு, அவர்கள் வீட்டுக்குள் சென்று, அடித்து காயம ஏற்படுத்தி, இன்றைக்கு அவர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தேர்தல் நடந்து சில மாதங்கள் கூட ஆகவில்லை, இந்த அக்கிரமங்கள் நடந்துள்ளன. இதற்கு அமைச்சர் அவர்கள் வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சுங்காங்கேட் என்று ஒன்று நடக்கிறது. கும்பகோணத்தை எடுத்துக்கொண்டால், மாசி மகம் விழா நடக்கிறதோ இல்லையோ, அங்கே நான்கு எல்லைகளிலும் சுங்கவரி பிடிக்க ஏலம் எடுத்துவிடுகிறார்கள். சைக்கிள் வரி, வண்டி வரி என்று ரோட்டில் எந்த வண்டி போனாலும் நிறுத்தி, வரி வசூலிக்கிறார்கள். பல இடங்களில் துன்புறுத்தி வரியை வாங்குகிறார்கள். இது ஒரு பெரிய கொள்ளையாக இருக்கிறது. சில ஆயிரம் ரூபாய் கூட வருமானம் வராத நகராட்சிகளில்கூட பரம்பரையாக இந்தத் தொழில் நடக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த வரிமுறைகளை மாற்றி, அந்த வருமானத்தை வேறுமுறைகளில் ஈடுசெய்து இந்த நிலைமையை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த சுங்க வரிக்காரர்கள் சைக்கிள்காரனை அடிப்பதும், வண்டிக்காரனை அடிப்பதும் நடக்கிறது. எந்த காவல் நிலையத்திலும் அதுகுறித்து வழக்குப் பதிவு செய்வது கிடையாது. ஆகவே இந்த முறைகளை ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்கிறேன். ஒரு நகராட்சியில் சைக்கிள் வரியை அதாவது செய்தித் தாள்கள் போடும் சைக்கிள்களின் வரியை ரத்து செய்து தீர்மானம் போட்டிருக்கிறார்கள். காரணம் தேர்தல் சமயத்தில் பத்திரிகைகள் வேலை செய்தன என்று அந்த ஏஜெண்டுகளுக்குச் சலுகை காட்ட வேண்டுமென்பதற்காக அந்த சைக்கிள்களுக்கு வரி ரத்து செய்யலாம் என்று தீர்மானம் போடப்பட்டு, அது அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டது. இதுபோல் பல்வேறு தவறுகள் நடக்கின்றன. இந்தத் தவறுகளை எல்லாம் உண்மையிலே களைந்தால்தான், நகராட்சி நிர்வாகங்கள் தூய்மையாக நடக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சராக



1986 ஏப்ரல் 26]          [திரு. எஸ். ஆர். இராதா]

(முற்பகல் 11-45)

யிருந்து காரியம் செய்கிற அளவுக்கு இருக்கிற நிலைமையைவிட, நகர் மன்ற உறுப்பினராக இருந்து மக்களைத் திருப்திப்படுத்துகிற காரியம் தூய்மையான நல்ல காரியமாகும். நகர் மன்ற உறுப்பினராக இருந்து அவர்கள் சொல்கிற வேலையைச் செய்து கொடுத்தால், அப்போது அவர்கள் பாராட்டுகிற பாராட்டு இதயத்திலே படுகிற அளவுக்குள்ள பாராட்டாகும். ஆனால் அமைச்சராக இருந்து செய்யும்போது, பேப்பரில் வரும். அவ்வளவுதான்.

மாற்றுத் தலைவர் (திருமதி வி. ஜெயலட்சுமி) : மாண்புமிகு உறுப்பினர் சீக்கிரம் முடிக்கவேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா : தாய்க் குலம் உட்கார்ந்திருப்பதால் பேசிக் கொண்டிருக்கிறேன். கருணை காட்டுங்கள்.

மாற்றுத் தலைவர் (திருமதி வி. ஜெயலட்சுமி) : வேறேதாகிலுமென்றால் கருணை காட்டலாம்; இதில் என்ன செய்ய முடியும்?

திரு. எஸ். ஆர். இராதா : துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்குப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதை மிகவும் பாராட்டுகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன். நகராட்சித் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்ட வேண்டுமென்று வீட்டுவசதி வாரியத்திடமும், குடிசை மாற்று வாரியத்திடமும் வலியச்சென்று வீடு கட்டிக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்தோம், முயற்சிகள் செய்தோம். கும்பகோணம் நகராட்சியில் கூட ஆதி திராவிடர்களுக்குக் குடிசை மாற்று வாரியத்தின்மூலம் வீடு கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு, வீடுகள் கட்டுவதற்கான திட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினோம். ஆனால் அங்கே இருக்கிற ஆணையாளர் என்ன செய்கிறார் என்று சொன்னால், இந்த இடத்தை வீட்டு வசதி வாரியத்திற்கு மாற்றுவதா அல்லது குடிசை மாற்று வாரியத்திற்கு மாற்றுவதா என்பதிலேயே காலதாமதம் செய்து, எவ்வளவு தயக்கம் காட்ட முடியுமோ அவ்வளவு தயக்கம் காட்டி காலதாமதம் செய்தார். இந்த நிலைகளையெல்லாம் மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், ஒரு அரசுத் துறையிலிருந்து இன்னொரு அரசுத் துறைக்குப் போவதற்கே அதிகாரிகள் இந்த அளவுக்குக் காலதாமதம் செய்தால், அந்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், நகராட்சி நிர்வாகத்தைப்பற்றி . . .

[திரு. எஸ். ஆர். இராதா] [1986 ஏப்ரல் 26

மக்களை மேலும் கஷ்டப்படுத்தப் போகிறார்களா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மாயவன் கேட்டார். ஆனால் நகராட்சியைப் பொறுத்த வரையில், அவருக்கு எந்த அளவுக்குப் பங்கு இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்தவரையில், எனக்கு ஓரளவுக்கு அதில் பங்கு இருக்கிறது. ஏற்கெனவே பங்கு பெற்றிருந்தவன் என்ற அடிப்படையில் சொல்கிறேன். நியாயமாக வசூல் செய்யப்பட வேண்டிய அளவுக்கு எந்த நகராட்சியாக இருந்தாலும், முறையாக வசூலித்துச் செயல்பட்டால், தலைசிறந்த அளவுக்குக் கூடுதலான வருவாயைப் பெறுவதுடன் நல்ல முறையில் செயல்பட வைக்கவும் முடியும். ஆனால் வசூல் செய்கிறபோது தான், பல நகராட்சிகளைப் பொறுத்தவரையில், பாழ்பட்டுப் போய் விடுகின்றன. ஆள், கட்சி என்கிற பாகுபாடு பார்க்காமல், உள்ளபடியே எவ்வளவு மதிப்புள்ள சொத்து இருக்கிறது, எவ்வளவு வாடகை வாங்கு கிறார்கள் என்பதை எல்லாம் துல்லியமாகப் பார்த்து அதற்கேற்ப, அவர் களுக்கு வருகிற வாடகைக்கேற்ப வரி விதிக்கின்ற ஒரு நிலை உருவானால், உள்ளபடியே நான் சொல்கிறேன், நகராட்சிகளிடம் பணம் இல்லையே என்கிற குறை வரவே செய்யாது. ஆனால் உள்ளபடியே என்ன நடக்கிறது என்றால், அதிகாரத்திற்கு வந்த உடனே எல்லோருக்கும் சொத்து வரியை ஏற்றினால் நான், அங்குள்ள கவுன்சிலரை பொது மக்கள் வந்து பார்ப்பார்கள். அப்படி உயர்த்தினால்தான் மக்கள் வந்து சேர்மேனைப் பார்ப்பார்கள் காரணம் வரி உயர்த்தப்பட்ட உடன் அதுபற்றி அப்பீல் செய்வதற்கு டாக்ஸ் அப்பீல் கமிட்டி என்ற ஒன்று இருக்கிறது. வரி உயர்வைப் பற்றிச் சொல்வதும் கவுன்சிலர் தான். பிறகு அதுபற்றி அப்பீல் வந்த உடனே அந்த ஆளை அவர் அழைப்பார், அவரும் வந்து பார்ப்பார், பிறகு உயர்த்தப்பட்ட வரி விதிப்பை ரத்து செய்யுங்கள் என்று கமிட்டிக்குச் சொல்வதும் அவர்தான். இது நீண்ட காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதுபற்றி அமைச்சருக்கும் தெரியும். இந்த முறையை அவசியம் மாற்றியமைக்க முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நகராட்சிகளின் வருவாய் உயர வாய்ப்பாக இருக்கும்.

அடுத்து, நகராட்சிகளுக்குப் பெரிய வருமானம் எது என்று கேட்டால், சந்தைகள் மூலமாக வருகின்ற வருமானம். இன்றைக்கு என்ன நடக்கிறது என்றால், நகராட்சிச் சந்தைகள் அத்தனையும் ஏலம் விடப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு கும்பகோணத்தில் ஒரு நகராட்சிச் சந்தை ஏலம்



1986 ஏப்ரல் 26] [திரு. எஸ். ஆர். இராதா]

(முற்பகல் 11-40)

நிலைக்குழுவால், [illegible] ஒத்திவைக்கப்பட்ட [illegible] நகராட்சிக் கூட்டத்தில் [illegible] அப்போது உறுப்பினர்கள் சொன்னார்கள். ``நகராட்சி ஏலத்தை நடத்துவது தேவையில்லை, நகராட்சியே [illegible]'' என்று சொல்ல, அதைப் பெரும்பான்மை [illegible] தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அந்தத் தீர்மானம் அந்த நகராட்சியால் 24 மணி நேரத்திற்குள் ரத்து செய்யப்பட்டு, ஏலம் கேட்டவருக்குத் தரும் நிலை ஏற்பட்டது. நான் இதற்கு ஆட்சேபணை தெரிவித்து, பிறகு அமைச்சரிடமும் தெரிவித்தேன். நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சொன்னார்கள். ஆனால் என்ன ஆயிற்று தெரியுமா? கடைசியில் அது ஏலம் எடுத்தவன் கைக்குத்தான் போயிற்றே தவிர, தடுத்து நடவடிக்கை எடுக்கவில்லை. அப்படி ஏலம் எடுத்தவன் யார்? நான் சொல்கிறேன், அரசியல் அனுபவத்தின் காரணமாகச் சொல்கிறேன், இதுமாதிரி ஏலம் எடுப்பவர்களே அரசியல் போர்வையில் உள்ளவர்கள்தான். அவர்கள் அரசியல் போர்வையில்தான் கொள்ளையடிக்கிறார்கள். ஏற்கெனவே ஏலம் எடுத்து கொள்ளையடித்தவர்கள்தான் இப்படி அரசியல்வாதிகளாகி மீண்டும் வியாபாரம் செய்கிறார்கள். அவர்கள் கொள்ளையடித்தே பிழைக்க வேண்டுமென்று நினைப்பார்கள். ஒருவர் கூட நல்லவர் இருக்கமாட்டாரா என்று தேடிப் பார்த்தால், ஓரிருவர் கிடைக்கலாம். ஆனால் பெரும்பாலானவர்கள் ஏலம் எடுத்து தவறு செய்யும் நிலையில்தான் இருக்கிறார்கள். அப்படி நடந்த நேரத்தில் பக்கத்தில் இருக்கிற ஒரு நகராட்சியில் ஏலம் நடந்தது. ஏலத் தொகை குறைவாகப் போயிற்று. ஆனால் அங்குள்ள ஆறு அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் அதை மறு ஏலம் விடவேண்டுமென்று சொல்லி, அது தீர்மானமாக ஏற்கப்பட்டு, மறு ஏலம் விடப்பட்டு, மறு ஏலத்திற்கு விட்டார்கள். இப்போது அதிகமான ஏலத்திற்குப் போயிற்று. இதன் காரணமாக நகராட்சி நிர்வாகத்திற்கு அதிக வருமானம் கிடைத்தது. புதிய கட்டிடங்கள் கட்டி வாடகைக்கு விடப்பட்டன. கடைகள் கட்டி விடப்பட்டன. இதன் காரணமாக அங்கே ஏலம் அதிகமான தொகைக்குப் போய்விட்டது.

மாற்றுத் தலைவர் (திருமதி வி. ஜெயலட்சுமி): உறுப்பினர் 25 நிமிடங் களாகப் பேசிக்கொண்டிருக்கிறார். நான்கு பேர் பேச வேண்டும். சீக்கிரம் முடித்தால் நலமாக இருக்கும்.

[1986 ஏப்ரல் 26

மாற்றுத் தலைவர் (திருமதி வி. ஜெயலட்சுமி): முடிக்க வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா: நீங்கள் சொல்வதனால், என்னுடைய உரையை முடித்து அமைகிறேன்.

மாற்றுத் தலைவர் (திருமதி வி. ஜெயலட்சுமி): நன்றி. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். சி. சங்கரலிங்கம்.

திரு. மு. செ. சங்கரலிங்கம்: மாற்றுத் தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசுகின்ற நேரத்தில் சில கருத்துக்களைத் தெரிவிக்கலாமென்று நினைக்கிறேன்.

நகராட்சி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியதற்காக முதலில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் கூறிய கருத்தைக் கேட்டு மாற்றம் செய்துவிடக் கூடாதென்பதற்காகத்தான் திரும்பவும் பாராட்டுகிறேன். ஏற்கெனவே பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டுவிட்டார்கள். நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களின் நிலைமைகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவரே கவுன்சிலராக இருந்திருக்கிறார். அங்கெல்லாம் ஆசிரியர்கள், ஆசிரியர்களாகவே இருக்க முடியாத சூழ்நிலையால்தான், நாங்கள் மிகவும் போராடிப் பெற்ற இந்தக் கோரிக்கையை திருத்தி விடாதீர்கள் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: மாற்றுத் தலைவர் அவர்களே, நான் ஆளுங் கட்சியினர் தலைமையின்கீழ் உள்ள நகராட்சிகளைச் சொல்லவில்லை. தி.மு.க.-வினர்கீழ் வரும் நகராட்சிகளுக்கு மட்டும்தான் அவ்வாறு உத்தரவிடலாமென்று கேட்டுக்கொண்டேன்.

மாற்றுத் தலைவர் (திருமதி வி. ஜெயலட்சுமி): மாண்புமிகு உறுப்பினருக்கு ஒரு வேண்டுகோள். உறுப்பினர் அவர்கள் கூடுமான வரையிலே இதற்கு முன்னர் பேசிய உறுப்பினர்களின் பேச்சுக்களைக்குறித்து கருத்துக்களைக் கூறாமல் இருந்தார்களானால், உறுப்பினருக்கும் நேரம் கிடைக்கும், அவர்கள் சொல்ல வந்த விஷயங்களைச் சொல்வதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 26]

திரு. மு. செ. சங்கரலிங்கம்: மாற்றுத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் பற்றி அவர் பேசியதால்தான் . . .

திரு. ஆர். டி. சீத்தாபதி: மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நேற்று கூட ஒதுக்கப் பட்டிருந்த நேரத்தைவிட 1½ மணி நேரம் அதிகமாக ஆகிவிட்டது. ஆகையினால் அவை முன்னவர் அவர்கள் ஒரு முறையை வைத்துக் கொடுத்தால், நலமாக இருக்கும். அல்லது சாப்பாட்டிற்குப் பிறகு அவையை வைத்தால் கூட நல்லதுதான். இது குறித்து அவர்கள் தெரிவித்தால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாற்றுத் தலைவர் அவர்களே, நேற்று நேரம் ஆனதற்குக் காரணம், நேற்று மாண்புமிகு துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டதையொட்டி, அவருக்குப் பாராட்டுக்கள் நடந்தன. இருந்தாலும் ஒரு நடைமுறையின்மூலம் இப்போது நேரம் அதிகமாகிக் கொண்டிருப்பது தெரிகிறது. நான் யாருடைய உணர்வையும் புண்படுத்த வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. இங்கே ஒரு விவாதம் நடைபெற்று முடிந்திருக்கிறது. உறுப்பினர் பேசுகிறபோது யார் யார் குறுக்கிடலாம் என்கிற நடைமுறையை வகுத்துக்கொள்ள வேண்டும்.

சம்பந்தப்பட்ட அமைச்சர் அவையில் இருக்கிறபோது, அந்த விவாதத்தில் அவர் குறுக்கிடலாம். ஒருவேளை பொதுப் பிரச்சினையாக ஏதாவது வந்து, அதைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்று விரும்பினால் மாத்திரமே, யாராவது வேறு அமைச்சர்கள் தலையிட்டுச் சொல்லவேண்டுமே தவிர, பதிலளிப்பதற்காக எல்லா அமைச்சர்களும் எழுந்து பேசுவது என்பதோ . .

(முற்பகல் 11-50)

உறுப்பினர்கள் ஒவ்வொரு தரப்பிலே இருந்து பேசுவது என்பதோ சரியான நடைமுறையல்ல. அப்படிப்பட்ட குறுக்கீடுகளைத் தவிர்த்துக்கொள்வது நல்லது. மேலும் ஒரு விவாதத்தைப்பற்றிப் பேசும்போது, அதன் தொடர்பாகப் பேசாமல், எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் செல்லலாம் என்ற அடிப்படையை வைத்துக்கொண்டு அதற்காகவே ஒரு குறிப்பிட்ட அளவு நேரத்தை எடுத்துக்கொள்வதும் சரியல்ல. ஆகவே அருள்கூர்ந்து உறுப்பினர்கள் இந்த அவையின் நேரத்தை மனதிலே வைத்து விவாதத்தைச் சுருக்கமாகவும், இந்த அவைக்குப் பயன்படும் வகையிலும் அமைத்துக்

என்பதைக் கவனிக்காமல் என்ன கருத்து வருகிறது என்பதைக் கவனித்து
நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்பு
கிறேன்.

அடுத்து, சென்னை மாநகராட்சியில் துப்புரவுத் தொழிலாளர்கள் 15,000
ஊழியர்கள் இருக்கிறார்கள். 1931 ஆம் ஆண்டில் இருந்த சென்னை நகர
மக்கள் தொகைக்கு ஏற்ப இந்த எண்ணிக்கை சரியாக இருக்கிறது. ஆனால்
1982 ஆம் ஆண்டில் சென்னை நகர எல்லைக்குள் வாழ்வோரின் எண்ணிக்கை
72 லட்சம் என்று இங்கே அளிக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்
பிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் பார்க்கும்போது,
45,000 துப்புரவுத் தொழிலாளர்களை நாம் நியமிக்க வேண்டும். அந்த
அளவுக்கு துப்புரவுத் துறையில் ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டும். அந்த
அளவுக்கு நியமிக்க நம்மிடம் பணம் இல்லை என்ற ஒன்றை மட்டும்
சொல்லிக்கொண்டிருப்பதால்தான் சுகாதார நிலைமை சீர் கெடுகிறது.
குப்பைகள் எடுக்கப்படாமல் எங்கேயும் குப்பை இருக்கிறது. எனவே இந்த
நிலைமையைப் போக்க அதிகப்படியான ஊழியர்களை மாநகராட்சி நியமிப்
பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்து, இங்கே தரப்பட்டிருக்கிற செயல் திட்டத்தில் நெல்லை நகராட்
சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் கீழ் நெல்லை நகரில் 1,28,822 பேர்
பயன் அடைந்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நெல்லையில்
அப்படி ஒரு திட்டமே இல்லை. பாதாளச் சாக்கடைக்காக என்று பள்ளம்
தோண்டப்பட்டது உண்மை. அதன் காரணமாக அங்கே ரோடு நன்றாக
இல்லை. அங்கே பயன்படுத்துவதற்காக குழாய்கள் வைக்கப்பட்டிருக்
கின்றன. ஆனால் ஓராண்டுக் காலமாக அது செயல்பாட்டில் இல்லை.
நான்கூட தமிழ் இலக்கணம் கொஞ்சம் அறிந்திருக்கிறேன். பயன் அடைந்
தவர்கள் எண்ணிக்கை. பயன் அடைந்த மக்கள் தொகை என்றால், கண்டிப்
பாகப் பயன் பெற்றிருக்க வேண்டும். இது 44-வது பக்கத்தில் கொடுக்கப்
பட்டிருக்கிறது. அதைப் போலவே தூத்துக்குடியிலும் அந்தத் திட்டம் நடை
முறைக்கு வராமல் குழாய் மட்டும் பூமிக்கு அடியில் போடப்பட்டிருக்கிறது.
அந்தத் திட்டம் நடந்ததா இல்லையா என்றே தெரியவில்லை. இரண்டு
ஆண்டுகளாக அப்படியே இருக்கின்றது. எனவே தவறாக கொள்கைக்
குறிப்பில் போடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை



குறித்து அதிகாரிகளைக் கேட்க வேண்டும் என்பதோடு இனி இப்படிப்பட்ட தவறுகள் வாராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து, நகராட்சி ஊழியர்களுக்கு இருக்கும் வைப்பு நிதியில்—பிராவிடண்ட் பண்டில்—அவர்களிடம் பிடிக்கும் தொகை வைக்கப்படுவதில்லை. அதைப் போலவே கைத்தறிக்கு என்று கடன் அனுமதிக்கப்பட்டு அந்தக் கடன் தொகையை ஊழியர்கள் கட்டுகிறார்கள். அந்தத் தொகை ஊழியர்களிடமிருந்து பிடிக்கப்பட்டாலும்கூட, கைத்தறி நிறுவனத்திற்கு அனுப்பப்படாமல் நகராட்சி நிர்வாகமே செலவழித்துவிட்டது. இதன் காரணமாக நிறைய ஊழியர்களுக்கு திரும்பவும் கைத்தறிக்கான கடன் வசதி கிடைக்காமல் போய்விட்டது. "நீங்கள் சென்ற ஆண்டு வாங்கிய கடன் தொகையைக் கட்டவில்லை. ஆகவே இந்த ஆண்டு தர முடியாது" என்று கைத்தறி நிறுவனத்திலிருந்து திருப்பி அனுப்பிவிட்டார்கள். அப்படி நகராட்சி நிர்வாகம் அந்தப் பணத்தை தன்னுடைய மற்ற செலவுகளுக்கு எடுத்துக் கொண்டு கைத்தறி நிறுவனத்திற்கு கட்டாமல் விட்டுவிட்டதால், ஊழியர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டது. எனவே அந்தப் பணம் நேரடியாக கைத்தறி நிறுவனத்திற்கே கட்டப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் விரைவாக முடித்துக்கொண்டால் நல்லது. 15 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** துணைத் தலைவர் அவர்களே, எனவே இதுபோன்ற நிலைமைகளையெல்லாம் மாற்றியமைக்கிற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நெல்லை நகரத்தின் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு குடியிருக்க இடம் இல்லாமல் அவர்கள் ரோட்டின் மேலேயே 500 வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக அந்தப் பாதையே மக்களுக்குப் பயன்பட முடியாது இருக்கிறது. அவர்களுக்கு குடியிருப்புக்காக என்று நிலம் வாங்கி 15 ஆண்டுகளாகியும்கூட வீடுகள் கட்டப்படாமலேயே இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதன் மீதும் உரிய நடவடிக்கை விரைவாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

சொல்வது நல்லது. மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் அதிலே கொஞ்சம் கண்டிப்பாக இருந்தால், அது எல்லோருக்கும் பலன் அளிக்கின்ற வகையில் அமையும்.

திரு. மு. செ. சங்கரலிங்கம்: மாற்றுத் தலைவரவர்களே, இந்தக் கொள்கைக் குறிப்பில் நகராட்சி ஊழியர்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 50 லட்ச ரூபாய். தமிழ் நாட்டில் இருக்கும் நகராட்சிகள் 108. ஒரு நகராட்சிக்கு 50 ஆயிரம் ரூபாய்கூட வராத நேரத்தில், இந்தத் தொகையை வைத்து எப்படி ஈடுகட்ட முடியும்? எனவே அவைகளுக்கு அதிகமான தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, பல்வேறு ஊழியர்களுக்கு வீடு கட்டுகின்ற வாய்ப்பே ஏற்படாமல் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளிக்கும்போது, அதை நம்பித்தான் நாங்கள் வெளியே போகிறோம். ஆனால் கடந்த ஆண்டு நகராட்சி, மாநகராட்சிக் கொள்கைக் குறிப்பின் மீது இந்த அவையில் எழுப்பப்பட்ட பிரச்சினைக்கு—மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் எழுப்பிய பிரச்சினைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை. அந்தப் பிரச்சினை என்னவென்றால், பெசன்ட் நகரில் குடியிருப்புகளுக்கு இடையேயும், கோவில்களுக்கு இடையேயும் சுடுகாடு இருக்கிறது. அது மாற்றப்பட வேண்டும், அகற்றப்பட வேண்டுமென்று இந்த அவையில் பேசப்பட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு சடலங்கள் புதைப்பதையும், எரிப்பதையும் வெளியே இருப்பவர்கள் பார்க்காமல் இருக்கும் வகையில் சுடுகாட்டைச் சுற்றிலும் 9 அடி உயரத்தில் சுவரை உயர்த்தலாமென்று அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்று தெளிவாகத் தெரிவித்தார்கள். 'பரிசீலனை' என்றால், அது நடக்கவும் செய்யலாம் அல்லது நடக்காமலும் இருக்கலாம். வீட்டுக்கு அருகில் சுடுகாடு இருக்கிறது என்பதை ஓராண்டாகப் பரிசீலித்தால், எப்போது அங்கு சுவர் கட்டுவது? அமைச்சர் அவர்கள் இங்கே பதில் அளிக்கும்போது அதை நம்பித்தான் நாங்கள் வெளியே போகிறோம். ஓராண்டு கழித்தும் அங்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் எப்படி? அதுபோல பெசன்ட் நகரையொட்டி வீட்டுவசதி வாரியச் சாலையும், மாநகராட்சிச் சாலையும் சேருமிடத்தில் பாதை இல்லை என்று தெரிவிக்கப்பட்டபோது, பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி வருகையால் அங்கு ஒரு பாதை அமைக்கப்பட்டது. அதனால் அவர்கள் அடிக்கடி இங்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர் அங்கு வராவிட்டால், அப்படி ஒரு பாதை அமைக்கப்



பட்டிருக்காது. அது அமைக்கப்பட்ட பிறகு, அது போக்குவரத்துக்காகத்தான் அமைக்கப்பட்டது, பேருந்து செல்வதற்கு வாய்ப்புள்ள பாதை அல்ல, அது செல்வதற்குத் தகுதியான பாதை அல்ல என்று குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பேருந்து வண்டி வர வேண்டுமென்பதற்காக அந்தப் பாதை அமைக்கப்பட்டது; பிரதமர் அவர்கள் வருவதற்காக அமைக்கப்பட்டது. அவர்கள் வரவில்லை என்பதால் அதை நிறுத்திவிட்டார்கள்; அல்லது அந்தப் பாதையைச் சரியாகப் போடவில்லை. தமிழக அரசின் பல்லவன் போக்குவரத்துக் கழகம் அந்தப் பாதை போக்குவரத்துக்கு லாயக்கானதாக இல்லை என்று அறிக்கை கொடுத்திருக்கிறது. இதுபோன்ற குறைகள் ஏற்படாமல் பார்த்து அதைச் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, பெசன்ட் நகரில் வாழும் மக்களின் சார்பாகவே டெவலப்மென்ட் சார்ஜ் என்ற அடிப்படையில் கூடுதலாக ஒரு லட்சத்து 38 ஆயிரம் ரூபாய் காசோலை மூலமாக மாநகராட்சிக்குக் கொடுக்கப்பட்டு, அங்கு மின் விளக்குகள் போடப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரை அங்கு, அதுவும் பாரதப் பிரதமரின் வருகையின் காரணத்தால், ஒரே ஒரு தெருவுக்கு மட்டும் மின் விளக்கு போடப்பட்டது.

(முற்பகல் 11-55)

அதே பெசன்ட் நகரில் 1,000 பேருடைய வாக்காளர் பட்டியலில் இல்லை. அப்படி வாக்காளர் பட்டியலில் அவர்கள் பெயர் இல்லாததால், அவர்கள் இந்தியப் பிரஜையும் இல்லை, தமிழகப் பிரஜையும் இல்லை. வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்தால்தான், அவர்கள் இந்தியப் பிரஜைகளாக இருக்க முடியும். இந்தப் பிரச்சினை குறித்து சென்ற ஆண்டே பேசப்பட்டது. இப்போது ஓராண்டுக் காலமாகியும்கூட அவர்களின் பெயர் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. மாநகராட்சி ஏன் இது குறித்து நடவடிக்கை எடுக்கவில்லை என்று எனக்குப் புரியவில்லை. இது ஏற்கெனவே எழுப்பப்பட்ட பிரச்சினை. எழுப்பப்பட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்து, ஓராண்டு ஆகியும்கூட அதற்குப் பிறகும் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால், மீண்டும் இந்த ஆண்டும் அதையே இங்கே பேச வேண்டியிருக்கிறது. எனவே மீண்டும் அடுத்த ஆண்டும் அதையே பேசாமல் இருக்க—மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், கருத்துக்கள் எங்கே இருந்து வருகின்றன

[1986 ஏப்ரல் 26

(நண்பகல் 12-00)

* **திரு. மு. மாசிலாமணி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்
அவர்களே, இன்றைய தினம் நகராட்சி நிர்வாகம், மாநகராட்சி நிர்வாகம்
குறித்த கொள்கைக் குறிப்பின் மீது பேசுவதற்கான வாய்ப்பு நல்கியமைக்கு
என்னுடைய நன்றியை பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலே உள்ள பழம் பெரும் மாநகராட்சிகளில் சென்னை மாநக
ராட்சியும் ஒன்று. சென்னை மாநகராட்சியில் 12 பஞ்சாயத்துக்கள்
இணைக்கப்பட்டு, கிட்டத்தட்ட 174 சதுர கிலோமீட்டர் பரப்பளவிற்கு
பெருக்கப்பட்டுள்ளது என்று இந்தக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டுள்ளது.
சென்னை மாநகராட்சியில் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமும்
மக்கள் பெருக்கம் அதிகமாகிக் கொண்டு வருகிறது.

இந்தக் கொள்கைக் குறிப்பிலே சுடுகாடுகளைப்பற்றிக் குறிப்பிடப்பட்
டுள்ளது. மூலக்கொத்தளம், ஓட்டேரி, கிருஷ்ணாம்பேட்டை, கண்ணம்மாப்
பேட்டை, பேசின் பிரிட்ஜ் போன்ற ஐந்து பழம்பெரும் சுடுகாடுகள் இருக்
கின்றன. சுந்தரபுரம் பக்கத்திலே வீரன் தோட்டம் என்ற சுடுகாடு
எடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் அந்தப் பகுதி மக்கள் பிணங்களை
எரிக்க இடம் இல்லாமல் பெருத்த அவதிக்குள்ளாகி வருவதை கண்கூடாகப்
பார்க்கிறோம். ஆகவே வேறு இடத்திலே அந்த மக்களுக்கு வசதியாக ஒரு
சுடுகாட்டை ஏற்படுத்தித் தந்தால், நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

சுடுகாடு என்று சொல்லும்போது, அங்கே பிணங்களை எரிக்கின்றபோது,
அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்கள் கெடுபிடி செய்து அதிகமான கூலியை
யும், சுடுகாடு சம்பந்தப்பட்ட பொருள்களுக்கு விலை உயர்த்தியும் கேட்ப
தால், பல மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்று அதை
குறையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சுடுகாட்டில் பணிபுரிகிற
வர்கள் ஏழையெளிய மக்களுள் ஒருவராக இருக்கிறார்கள். இதே
கொள்கைக் குறிப்பில் மின்சாரத்தால் பிணம் எரிக்கப்படுவதற்கான
நடவடிக்கைபற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. மின்சாரத்தில் பிணங்களை
எரிக்கிறபோது, ஏற்கெனவே அந்தப் பணியைச் செய்து வருகின்ற ஏழை
யெளிய தோழர்கள் வாழ்க்கையில் பாதகம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு மாற்றுப் பணி
அளிக்க வேண்டும் என்று அவர்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 26] [திரு. மு. மாசிலாமணி]

1977-ல் சென்னையிலே இருந்த முடிதிருத்தும் கடைகள் 15,740. 1985ஆம்
ஆண்டில் கிட்டத்தட்ட 17,340 கடைகள் இருந்திருக்கின்றன. அந்தக் கடை
களுக்கு மூன்று, நான்கு சேர்கள் இருந்தால் அதிகமாகவும், இரண்டு சேர்கள்
இருந்தால் குறைவாகவும் வரி வசூலிக்கப்படுகிறது. அண்மையிலே சலவைத்
தொழிலாளர்களுக்கு இந்த அரசு வரியிலிருந்து விலக்கு அளித்திருப்பதைப்
போல, முடிதிருத்துவோர்களுக்கும் விதியைத் தளர்த்தி வரிவிலக்கு அளிக்க
வேண்டும் என்று அவர்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் கொசுத் தொல்லையால் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டி
ருக்கிறார்கள். சட்டமன்ற விடுதிகளிலும் சரி, மற்ற இடங்களிலும் சரி,
கொசுத் தொல்லையால் மக்கள் மலேரியா ஜுரம் கண்டு அவதிப்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள். கொசுத் தொல்லையால் வருகிற இந்த மலேரியா
ஜுரம் மாநகராட்சி மருந்தகத்தில் உள்ள சாதாரண டாக்டர்கள் கொடுக்
கின்ற காப்சூல்களால் ஒழிக்கப்படுகின்றது. ஆகவே அதைப் பரவலாக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எம்.பி.பி.எஸ். படித்து உயர்ந்த
டாக்டர்களால் ஒழிக்க முடியாத இந்த ஜுரம் சாதாரண மாநகராட்சி
ஊழியர்களால், அவர்கள் கொடுக்கும் மருந்துகளால் ஒழிக்கப்பட்டிருப்பதை
நான் கண்கூடாகப் பார்த்தேன். அவர்கள் கொடுக்கும் காப்சூலால் ஜுரம்
விடுபட்டிருக்கிறார்கள்.

கூவம் நதி, அடையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி கால்வாய்,
மாம்பலம் கால்வாய் ஆகிய பகுதிகளில் வாழ்கிற மக்கள் கூவம் நதியால்
ஏற்படுகிற தொல்லைகளால் வாழ முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்

(பிற்பகல் 12-05)

கிறார்கள். மற்றும் மாநகராட்சியிலே இருக்கின்ற, சென்னையிலே முடி
திருத்தும் கடைகள் இருக்கின்ற இடங்களிலே டிரெயினேஜ் சிஸ்டம் என்ற
பெயரால் மாநகராட்சி அதிகாரிகள் எல்லாம் அங்கே போய் கழிவு நீரை
வெளியில் விடக்கூடாது என்று சொல்கின்றார்கள். அப்படி இல்லை என்று
சொன்னால், உடனே வழக்குத் தொடுத்து, அவர்களுக்கு உடனடியாக
வாதாடக்கூட வாய்ப்பு அளிக்காமல், உடனே கூப்பிட்டு, 'டிரெயினேஜ்
சிஸ்டம் ஏன் இல்லை?' என்று சொல்லி, அதற்கு பதில் சொல்வதற்கு
முன்னாலேயே ரூ. 300, ரூ. 400 என்று அபராதம் விதிக்கின்றார்கள். இதைப்
பற்றி ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் பல தடவைகள் அந்த நிலைமைகளைப்
பற்றித் தெரிவித்திருக்கிறேன். வீட்டின் உரிமையாளர்கள், அந்தக் கடைகள்

[திரு. மு. மாசிலாமணி] [1986 ஏப்ரல் 26

வைத்திருக்கின்ற அந்த வீடுகளின் உரிமையாளர்கள், முதலாளிகள்—அவர்களிடம் அதைப்பற்றிச் சொன்னால், அவர்கள் "அந்தக் கடையைக் காலி செய்துவிட்டு வேறு வேலையைப் பார்" என்று சொல்கின்றார்கள். கடையிலேயே காலை 5 மணி முதல் மாலை 10 மணி வரையில் இருந்துவிட்டு வீட்டிற்குப் போகின்றார்கள். இதனால் முடிதிருத்துவோர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று. இந்த மாநகராட்சிக்கு வருமானம் ரூ. 20 கோடி வருகின்றது என்று சொல்லப்படுகிறது. அதே நேரத்திலே வீட்டினுடைய உரிமையாளர்கள் பெருவாரியான உரிமையாளர்கள் மாநகராட்சிக்குக் கொடுக்க வேண்டிய வரியைக் கட்டாமலேயே இருக்கின்றார்கள். இது நீண்ட நாள் பிரச்சினையாக இருக்கின்றது. இந்த அவையிலேயே நம்முடைய முன்னாள் அமைச்சர், திரு. குழந்தைவேலு அவர்கள் இங்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, ஒரு கருத்து சொன்னார்கள். நான் பம்பாய் மாநகரத்திற்குச் சென்று வந்தேன். அங்கே ஆண்டுதோறும் ரூ. 200 கோடிக்கு வீட்டு வரி வந்துகொண்டிருக்கின்றது. சென்னை மாநகராட்சியிலே ரூ. 20 கோடி தான் வருகிறது. இப்படி வந்தால், நாம் எப்படி சாலைகளைப் போடுவது, மக்களுக்கு வசதிகளைச் செய்து தருவது என்று கேட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். ஆகவே இப்போது நான் நம் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சட்டத்தின் மூலமாக கடுமையான நடவடிக்கை எடுத்து, செலுத்தாமல் இருக்கும் வீட்டு வரியை வசூலிக்க வேண்டும். வரி கட்டாமல் இருக்கும் உரிமையாளர்களை ரகசியமாகக் கண்காணித்து அவர்கள் வரியை உடனடியாக, ஆக்கபூர்வமாக வசூலித்தால், நாட்டிலே உள்ள மக்களுக்கு வசதிகள் செய்து தரமுடியும்.

இன்னொன்று, சென்னை மாநகரத்தில் ஒரு வீட்டில் குடியேற வேண்டுமென்று சொன்னால், சாதாரண ஏழையெளிய மக்கள், பாமர மக்கள் குறைந்தபட்சம் ரூ. 150 வீட்டு வாடகை கொடுக்க வேண்டும் என்ற நிலை இருக்கின்றது. அதுமட்டுமல்ல, ரூ. 5,000 வரையில் அட்வான்ஸ் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். இது ஒரு தொத்துநோய்போல இருக்கின்றது. அதற்கு ஒரு வரம்பை வைக்க வேண்டும். ஒரு உச்சவரம்பு நிர்ணயித்தால், நன்றாக இருக்கும். இத்தனை அடி உள்ள வீட்டிற்கு இவ்வளவுதான் கொடுக்க வேண்டும் என்று சொல்ல வேண்டும். வீட்டினுடைய உரிமையாளர்களும் ஒரு சங்கத்தை வைத்துக்கொண்டு, அவர்களும் கோர்ட்டுக்குப் போயிருக்கின்றார்கள் என்று அறிகிறேன்.



1986 ஏப்ரல் 26] [திரு. மு. மாசிலாமணி]

அப்படிப்பட்ட நிலைமையிலே, இந்தக் கொள்கைக் குறிப்பின்மீது பேசும்போது சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டிருக்கின்ற கூடங்கள் இருக்கின்ற இடங்களிலே மழை வந்தால் தண்ணீர் தேங்கி நிற்கின்றது. அங்கே கொசுத் தொல்லை இருக்கின்றது. அங்கெல்லாம் நல்ல சுகாதார வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலே, சென்னை மாநகராட்சிப் பகுதியிலே உள்ள சில இடங்களில் அம்மை நோய் பெருகிக்கொண்டிருக்கின்றது. அம்மை நோய் சுகாதார வசதிக் குறைவு காரணமாகத்தான் ஏற்படுகிறது என்று சொல்கின்றார்கள். அந்த அம்மை நோய் வரும்போது, சாதாரணமாக நம்முடைய தாய்மார்கள், பெரியவர்கள், பாட்டிமார்கள் வேப்பிலை வைத்து அந்த இடத்தை சுத்தமாக வைத்து தெய்வ நம்பிக்கையோடு செய்கின்றார்கள். அதனால் அந்த அம்மை நோய் குறைவதையும் பார்க்கிறோம். அந்த அளவில் தெய்வ நம்பிக்கையோடு செய்யும் முறையில் பரிகாரம் காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கொள்கைக் குறிப்பிலே சில நல்ல குறிப்புக்களைக் கொடுத்திருக்கின்றார்கள். இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நடைபாதைகளிலே கடைகள் வைத்திருப்பது குறித்து பிரச்சினை வந்தது. ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 6 திங்கள்களுக்கு முன்னால் எல்லா தோழமைக் கட்சித் தலைவர்களையும் வரவழைத்து, இதற்கு ஒரு வழிகாண வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அந்த நடைபாதைக் கடைகளை அகற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அவர்களும் ஒத்துழைப்பு தந்திருக்கின்றார்கள். அதன்பிறகு, காலி செய்த பிறகு "பார்த்தீர்களா, பார்த்தீர்களா, எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியில் என்ன கொடுமை நடக்கிறது? அல்லோலகல்லோலப்படுகின்றது" என்று சொல்லுகின்றார்கள். அவர்கள் இன்றையதினம் கோர்ட்டுக்குப் போயிருக்கின்றார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்ட நிலைமையிலே, திருவல்லிக்கேணி பெல்ஸ் ரோடு, அண்ணா சாலை, குளம் ரோடு இன்னும் பல பகுதிகளிலே காலியான இடங்களை எல்லாம் ஆக்கிரமித்திருக்கின்றார்கள். அந்த இடங்களிலே மெக்கானிக் ஷாப்கள் அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களையும் கண்காணித்து, நடைபாதைகளில் உள்ளவர்களையும் கண்காணித்து, பொது மக்களுக்கு நல்ல முறையிலே

(பிற்பகல் 12-10)

ஏற்பாடு செய்து தா நான் வேண்டிக் கொண்டு, இந்த அவையிலே இந்தக் கொள்கை குறிப்புகள்மீது பேசுவதற்கான வாய்ப்பு நல்கிய மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, என்னுடைய பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

* திருமதி வி. ஜெயலட்சுமி: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, சமுதாய நல வளர்ச்சி கொள்கைக் குறிப்புகளின்மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாய வளர்ச்சித்துறையானது பல்வேறு துறைகளோடு சம்பந்தப்பட்டிருந்தாலும், முக்கியமாக ஊரக வளர்ச்சித் திட்டத்திலும், ஊரக வறுமையை ஒழிப்பதிலும் மத்திய அரசும், மாநில அரசுகளும் இன்று தங்களுடைய கவனத்தை முழுமையாகச் செலுத்த வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறார்கள். 1994—95 ஆம் ஆண்டுக்குள் இந்திய நாட்டிலும் சரி, தமிழகத்திலும் சரி, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்களின் அளவை 10 சதவிகிதத்திற்கும் குறைவாகக் கொண்டுவர அயராது பாடுபட வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் திட்டங்களை வகுத்துக்கொண்டு, இப்போது செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். இதன்காரணமாகத்தான் மத்திய அரசினுடைய வரவு செலவுத் திட்டத்திலேகூட 65 சதவிகிதம் நிதி ஒதுக்கீட்டை வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். குறிப்பாக தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு 440 கோடி ரூபாய், ஊரக வேலையற்றோர் வேலை உறுதித் திட்டம்—குவாரண்டி ப்ரோக்ராம்—அதற்கு 633 கோடி ரூபாய். அதாவது ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்திற்கு 633 கோடி ரூபாய் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் 428 கோடி ரூபாய் என்று மாசிவ் நிதி, லம்ப்—சம்ப்-ஆகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், கிராமப்புறங்களில் உள்ள வறுமையை எத்தனை திட்டங்கள் போட்டாலும், நல்லமுறையில் அவற்றைச் செயலாக்கி, வறுமையை ஒழிக்க முடியவில்லை என்பதைக் கருத்திற்கொண்டு, அடுத்த வரும் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள்ளாக வறுமையைக் கணிசமான அளவுக்குக் குறைத்தாக வேண்டுமென்ற அடிப்படையில் மத்திய அரசும், மாநில அரசும் பல திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒதுக்கப்படுகிற மத்திய அரசு நிதியானாலும், மாநில அரசு நிதியானாலும் முறையாகச் சேர வேண்டிய இடத்தில் சேர்ந்து, நல்லமுறையில் திட்டங்களைச் செயல்படுத்த 384 சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் செயலாற்றும் ஏஜென்சிகளாக இங்கே இருக்கின்றன. சுமார்





15 வருட காலமாக உள்ளாட்சித் தேர்தல்கள் நடக்காமல் இருந்தாலும், சமீபத்திலே நல்ல முறையிலே, அமைதியான முறையிலே தேர்தல்கள் நடந்து, அவற்றுக்கெல்லாம் தலைவர்களும், உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள், அரசு கொடுக்கும் நிதி உதவிகளைப் பெற்று திட்டங்களை நிறைவேற்றுவார்கள். அவற்றின் பலன் கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளியவர்களுக்கு நல்ல முறையில் போய்ச் சேருகிறதா என்று பார்க்க ஓர் அமைப்பை நாம் கொண்டு வந்திருக்கிறோம். 2 நாட்களுக்கு முன்னால, இந்த அவையிலே சர்க்காரியா கமிஷனுக்கு அளிக்கப்பட்ட ரிப்போர்ட் இங்கே வைக்கப்பட்டது. அந்த ரிப்போர்ட்படி மாநிலங்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்க வேண்டும், மத்திய அரசுக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் அதிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் கொடுத்தாக வேண்டுமென்று உங்களோடு குரல் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். காரணம் என்னவென்றால், அரசியல் சாசனத்தை உருவாக்கியபோது, அன்றைக்கு இருந்த காலகட்டத்தில், அன்றைக்கு இருந்த சமுதாயச் சூழ்நிலைக்கு ஏற்ப வசதிகள் வகுக்கப்பட்டு, அரசியல் சாசனத்தில் மாநிலங்களுக்கு என்ன அதிகாரங்கள், மத்தியத்திற்கு என்ன அதிகாரங்கள் என்று வைத்திருந்தார்கள். ஆனால் இன்றைக்கு மாறிவரும் சமுதாயத்திலே, குறிப்பாக திட்டங்களை உடனுக்குடன் செயலாற்றினால்தான், திட்டங்களை யாருக்காகப் போடுகிறோமோ, அவர்கள் அதன் முழுப் பலன்களை அனுபவிக்க வேண்டுமென்றால், அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டுமென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

(பிற்பகல் 12-15)

இன்றைக்கு மற்ற மாநிலங்களைப் பொறுத்தமட்டில், 4 அடுக்கு ஆட்சி முறையை நடைமுறையில் பின்பற்றுகின்றன. மத்திய அரசு, அடுத்து மாநில அரசு, அடுத்து ஜில்லா பரிஷத் அல்லது ஜில்லா சமிதி என்று சொல்கிற மாவட்டக் கழகங்கள், அதற்குக் கீழே பஞ்சாயத்து ஒன்றியங்கள். இப்படி ஒவ்வொரு அமைப்புக்கும் தனித் தனியாக அதே சமயத்தில் பரவலாக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு திட்டங்கள் எல்லாம் நல்லமுறையில் செயல்படுத்தப்படுகின்றனவா என்று கண்காணித்து வருகிறார்கள். ஆனால் நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில், 3 அடுக்கு முறை ஆட்சி முறையைப் பின்பற்றுகிறோம். இந்த மூன்று அடுக்குமுறை ஆட்சி முறையிலே நடைமுறையில் இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களுக்கு இன்றையதினம் நாம் என்னென்ன அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறோம் என்பதைப்பற்றிச்

[திருமதி வி. ஜெயலட்சுமி] [1986 ஏப்ரல் 26

சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களில்
இருந்த அனைத்து அதிகாரங்களும் எடுக்கப்பட்டு விட்டன. இப்படி
எடுக்கப்பட்ட அனைத்து அதிகாரங்களும் அந்தந்த இலாகாக்களுக்குக்
கொடுக்கப்பட்டுள்ளன. கல்வி, மருத்துவம் போன்றவை எடுக்கப்பட்டு,
அந்தந்த இலாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. அதுபோல் ஹெல்த்
விசிட்டர் என்கிற பணியாளர்களைப் பொறுத்தவரையில், அதுகூட மருத்துவ
இலாகாவிடம் கொடுக்கப்படும் என்று சொல்லி ஒரு சட்டமுன்வடிவை இங்கே
அரசு கொண்டு வந்திருக்கிறது. இப்படி இருக்கின்ற அனைத்து அதிகாரங்
களையும் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து எடுத்துவிட்டு அந்தந்த இலாகாக்
களிடம் கொடுத்தோம் என்றால், கடைசியில் ஊராட்சி ஒன்றியங்களில்,
பஞ்சாயத்துக்களில் என்ன அதிகாரம் மிச்சம் இருக்கும் என்று நான்
கேட்டேன். அப்போது எங்கள் கட்சியின் தலைவர் திரு. எம். பி. சுப்பிர
மணியம் அவர்கள் கூட வேடிக்கையாக ஒன்றைச் சொன்னார். ஊராட்சி
ஒன்றியத் தலைவர் அனைத்து இலாகா அதிகாரிகளையும் அங்கே அழைத்து
அமர வைப்பார். அவர்கள் இன்னின்ன திட்டங்களைச் செயல்படுத்தியிருக்
கிறோம் என்று அங்கே அமர்ந்து சொல்கின்ற ஒரு மையமாக, ஒரு சென்டராக
தான் அது செயல்படும் என்று தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஆனால்
உள்ளபடியே நிலைமை வேறு. பஞ்சாயத்து ஒன்றியங்களின் மூலமாக
மட்டுமே நாம் அடிப்படைத் தேவைகளை எல்லாம் செயல்படுத்த வேண்டிய
நிலையில் இருக்கிறோம். இன்றுவரை தலைவர்கள் இல்லாமல் அதிகாரி
களால் இந்த அமைப்புகள் செயல்பட்டு வந்தன. அப்போது நல்லமுறையாக
அவை செயல்பட்டன, அல்லது செயல்படவில்லை, அல்லது அரசியல் வாதிக
ளால் அவை தவறாகப் பயன்படுத்தப்பட்டன என்பது போன்ற சர்ச்சைகளை
எல்லாம் இன்னும் இங்கே கிளப்புவதை விட்டுவிட்டு, இன்றைக்கு நாம்
கோடிக்கணக்கான ரூபாயை இந்த அமைப்புகளுக்குக் கொடுக்கும் நிலையில்,
அந்தப் பணத்தை இந்த அமைப்புகள் நல்லமுறையில் செலவிட்டு திட்டங்
களைச் செயல்படுத்துவதற்கு எல்லோரும் உறுதுணையாக இருக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசா பேசும்போது, சட்ட
மன்ற உறுப்பினர்கள் மாவட்ட வளர்ச்சிக் கூட்டங்களிலும் பஞ்சாயத்து
ஒன்றியக் கூட்டங்களிலும் கலந்துகொள்வதுபற்றி ஒன்றைக் கேட்டார்.
மாவட்ட வளர்ச்சிக் கூட்டங்களில் எம்.எல்.ஏ. க்களும் எம்.எல்.சி. க்களும்
கலந்துகொள்கிறோம். அதுபோல் பஞ்சாயத்து ஒன்றியக் கூட்டங்களிலும்
கலந்துகொள்ள வாய்ப்பளிக்க வேண்டுமென்று அவர் கேட்டார். இப்போது



1986 ஏப்ரல் 26] [திருமதி வி. ஜெயலட்சுமி]

பஞ்சாயத்து ஒன்றியக் கூட்டங்களை நடத்தும்போது, சட்டமன்றப் பேரவை
உறுப்பினர்களும் மேலவை உறுப்பினர்களும் இடம் பெறுவதற்காக மேடை
யிலேயே இடம் ஒதுக்க வேண்டுமென்ற முறையிலே அரசு உத்தரவு போட்டி
ருப்பதாக நான் அறிந்தேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிக
ளாக சட்டமன்றத்திற்கு நாம் வருகிறோம். அதுபோல மக்களால் தேர்ந்
தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்கள் செல்கி
றார்கள். இவர்கள் எல்லாம் எப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ இதே
போலத்தான் அவர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பஞ்சாயத்து
ஒன்றியத் தலைவர்களாக வருகிறார்கள். அதையொட்டி அவர்களுக்கும்
பஞ்சாயத்து ஒன்றியங்களைப் பொறுத்தவரையில், முழு அதிகாரங்களும்
இருந்தாக வேண்டும். முன்பெல்லாம் மேடையில் அவர் அமர்ந்திருக்கும்
போது அவருக்குப் பக்கத்தில் அவருக்குத் துணையாக ஒரு பி.டி.ஓ. உட்கார்ந்
திருப்பார். ஆனால் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்
களைப் பொறுத்தமட்டிலும் அவர்கள் முன் வரிசையிலே அமர்ந்துகொண்டு
மன்றத்தினுடைய நடவடிக்கைகளை கவனித்துக்கொண்டிருக்கலாம். ஆனால்
அதேசமயத்தில் அந்தப் பகுதியிலுள்ள பிரதிநிதி என்ற முறையில்
தலைவரும் யோசனையும் சொல்லலாம் என்கிற மரபுதான் இதுவரை
யிலும் இருந்து வந்தது. ஆனால் புதிதாக உள்ளாட்சி அமைப்புகள்
பதவிக்கு வந்திருக்கும் நிலையில் இந்த அரசு எடுக்கும் நிலை என்ன
என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இனிமேல்
சட்டமன்றப் பேரவை மற்றும் சட்டமன்ற மேலவை உறுப்பினர்களுக்கும்
தலைவர் அவர்கள் மேடையிலேயே இடம் கொடுக்க வேண்டுமென்று புதிதாக
ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த மன்றத்திற்கு அந்தப் பகுதி
மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர் என்கிற முறையில் அவர் தான் ஒன்றியத்
தலைவராக இருக்கலாம். அப்படி இருக்கும்போது, சட்டமன்ற உறுப்பினர்
களும் எப்படி சேர்ந்து மேடையிலே இருக்கலாம்? அப்படிச் செய்துதான்
நம்முடைய அதிகாரத்தையும் பெருமையையும் காட்ட வேண்டுமா? அப்படிச்
செய்ய வேண்டுமா? அப்படிச் செய்வதன் மூலமாக நம்முடைய அந்தஸ்து கூடி

(பிற்பகல் 12-20)

விடுமா? ஏன் இந்தப் புதிய உத்தரவைப் போட்டார்கள் என்று தெரிய
வில்லை. தயவுசெய்து அதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஐ.ஆர்.டி.பி. திட்டங்களின் மூலம் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று திட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இதற்காகத்தான் பணத்தை ஒதுக்கியிருக்கிறோம். ஆனால் இந்தப் பணம் சம்பந்தமில்லாத துறைகளுக்கு ஒதுக்கப்பட்டு செலவழிக்கப்பட்டுவிட்டது என்று ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல், என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. போன்ற திட்டங்களுக்காகவும் பணம் ஒதுக்கப்பட்டாலும், அந்தத் திட்டங்கள் மனித உழைப்பு நாட்களை உற்பத்தி செய்து, அதன் மூலம் நாட்டுக்கு நிரந்தரமான முதலீடுகளை உற்பத்தி செய்து, அதாவது பள்ளிக்கூடங்கள், சிமெண்ட் கோடவுன், உணவுக்கூட கட்டிடங்கள் போன்றவைகளுக்குச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இதைப்போல மூலதனச் சொத்துக்களுக்காக செலவு செய்யப்படுவதில் ஆட்சேபணை யாருக்கும் இருக்கப்போவதில்லை. மனித உழைப்பு நாட்களை நாம் இங்கே ஏற்கும்போது, ஏதோ மஸ்டர் ரோல் என்ற முறையில் அந்தப் பணத்தை வினியோகம் செய்துவிட்டு, நடுவில் உள்ளவர்கள் பங்கு போட்டுக் கொள்வது போன்று இல்லை. ஐ.ஆர்.டி.பி. முழுமையான வேறுபட்ட திட்டமாகும். வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள மிக ஏழைப்பட்டவர்கள் போன்றவர்களின் குடும்பங்களுக்கு வேலை கொடுத்து, அதன்மூலம் அதிகரிக்க வேண்டுமென்றும் தனிநபர் வருமானத்தைப் பெருக்குவதற்கும் உரிய நோக்கங்களுடன் கொண்டுவரப்பட்ட திட்டமாகும். ஆனால் ஆடிட்டர் ஜெனரல் ஆப் தமிழ்நாடு ரிப்போர்ட் 60-ம் பக்கத்தில் 32/16 என்ற பத்தியில் விபரமாக அதைப்பற்றிக் குறிப்பிட்டு எந்தெந்த வகைகளில் இவை ஒழுங்காகச் செலவழிக்கப்பட்டன, எந்தெந்த வகைகளில் ஒழுங்காகச் செலவழிக்கப்படவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தில் அடிப்படையில், மூலதனமாக இருக்கக் கூடிய செலவுகளுக்கு செலவு செய்வதில் ஆட்சேபணை இல்லை. பால் குளிரூட்டும் திட்டத்திற்கு ரூ. 8 லட்சமும், பெர்குலேஷன் பாண்டஸ்-க்கு பல லட்சமும் செலவிடப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** எதிர்க் கட்சித் தலைவர் பேசி, அதற்குப் பின் அமைச்சர் பதில் அளிக்க வேண்டும். சீக்கிரமாக முடித்தால் நலமாக இருக்கும்.





**திருமதி வி. ஜெயலட்சுமி :** ஐந்து நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன். சமூக நலக்காடுகள் உற்பத்திக்கு 20 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக ஏற்றிக் கொடுத்திருக்கிறோம். ஆர்.எல்.ஈ.ஜி.பி.க்காக 7.31 கோடி ரூபாய் சமூக நலக்காடுகளுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்.ஆர்.இ.பி. க்காகக் கொடுக்கப்பட்ட பணம் சமூக நலக் காடுகள் திட்டத்திற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டமானது வேலை வாய்ப்பு கொடுக்கும் திட்டம். பஞ்சாயத்து யூனியன், சமூக நலக் காடுகள் திட்டத்தின் மூலம் ஏழை மக்களுடைய மேம்பாட்டுக்காக இந்த வேலை வாய்ப்புகளைக் கொடுத்திருக்கிறது. அதே சமயத்தில் வேலைவாய்ப்பும் கிடைக்கிறது. அதோடு இதன் காரணமாக பஞ்சாயத்து யூனியனுக்கு நிரந்தரமான வருமானமும் கிடைக்கிறது. ஆனால் இந்தப் பணம் ஒழுங்காகச் செலவழிக்கப்படுகிறதா என்று அந்தந்த அதிகாரிகளைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-25)

அடுத்து, கிராம சுகாதாரம் என்ற திட்ட அடிப்படையில், கிராமப் புறங்களில் கழிப்பிடங்கள் சரியாகக் கட்டப்படவில்லை. இதன் காரணமாக கிராமப் புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் பெண்கள் தக்க கழிப்பிடங்கள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அதை நன்கு உணர்ந்து மத்திய அரசும், மாநில அரசும் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கியிருக்கின்றார்கள். அதை நல்ல முறையில் பயன்படுத்தி உரிய கழிப்பிடங்களைத் தனி நபர்களுக்குக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இப்படித் தனி நபர்களுக்குக் கட்டிக்கொடுத்திருந்தாலும் பொதுக் கழிப்பிடங்களையும் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக மேலும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இப்போது கிராமப்புறங்களில் அரசு கட்டிக்கொடுத்திருக்கும் கழிப்பிடங்களைச் சென்று பார்க்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். கழிப்பிடங்களைக் கட்டியிருக்கிறார்களே தவிர, உரிய தண்ணீர் வசதி இல்லை. ஒரு தடவை கழிப்பிடங்களுக்குச் சென்றுவிட்டு, வந்தால் அடுத்து யாரும் போக முடியாத நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே கழிப்பிடங்களில் தண்ணீர் வசதியையும் ஏற்படுத்தித்தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இதற்குக் கூடுதலாக பத்தாயிரம் அல்லது 12 ஆயிரம் ரூபாய் செலவானாலும் பரவாயில்லை. ஒரு deep bore well pump போட்டுத் தரவேண்டுமென்று [illegible]கிறேன்.

ஷியரில்'' என்ற திட்டத்தின் கீழே நல்ல விதமாக பல திட்டங்களைத் தீட்டி பெண்களுக்கு உதவ வேண்டுமென்று, பெண் குலத்தின் சார்பிலே நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நகராட்சி, மாநகராட்சி நிர்வாகத்தைப் பொறுத்தமட்டில், நான் அமைச்சர் அவர்களிடம் ஒன்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கூடிய சீக்கிரத்தில் மாநகராட்சிகளுக்குத் தேர்தலை அரசு நடத்த வேண்டும். [illegible] நகராட்சிகளில் இப்போது இருக்கிற நிலைமைகளைப் பார்த்தால், அரசு [illegible] யிருக்கிற தூவுமிங் போர்டு கட்டியுள்ள 3 அடுக்கு மாளிகை உயரமா [illegible]ல்லது அதற்குப் பக்கத்தில் குவிந்து கிடக்கும் குப்பை மேடு உயரமா என்ற [illegible]ளவுக்கு இன்று சென்னை மாநகரத்தில் எங்கு பார்த்தாலும் குப்பைகளும், கொசுக்களும், சாக்கடைகளும் நிறைந்து காட்சியளிக்கின்றன. [illegible] போன்ற பகுதிகளுக்குச் சென்று பார்த்தால் இரவு நேரத்தில் கொசுத் தொல்லையும், கழிவு நீர் பெருகிக் கிடப்பதும் மிகவும் கேவலமான நிலையில் இருக்கிறது. தம்முடைய தலைநகரமான சென்னை நகரிலேயே இப்படிப் பட்ட நிலை இருக்கிறது என்றால், மற்ற மாநகராட்சிகள் எந்த நிலையிலே இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, கூடிய சீக்கிரத்தில் மாநகராட்சி களுக்குத் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாநகராட்சிகளுக்குத் தேர்தல் நடத்தும்போது, அரசு மிகவும் பெரிய மன தோடு, நல்ல மனதோடு பெண்களுக்காக தனியாகப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எப்படி பஞ்சாயத்து யூனியன் மற்றும் நகராட்சிகளில் ஆதிதிராவிட மக்களுக்கும், பெண்களுக்கும் கூடுதலாகப் பிரதி நிதித்துவம் கொடுக்க அரசு சட்டத் திருத்தம் கொண்டு வந்ததோ, அதுபோல் மாநகராட்சிகளுக்கும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தச் சட்டம் துரதிருஷ்டமாக கோர்ட்டுக்குச் சென்றிருந்தாலுங்கூட, அது நல்ல முறையிலே அரசின் பக்கமாகத் தீர்ப்பாகியிருக்கிறது. . .

டாக்டர் மு. கருணாநிதி: துரதிருஷ்டமாகத் தீர்ப்பாகியிருக்கிறது என்று சொல்லுங்கள்.

திருமதி வி. ஜெயலட்சுமி: பெண்கள் என்ற முறையிலே அது எங்களுக்கு அதிருஷ்டம்தான். அதனால் கூடுதலான இடம் வருவதால் எங்களுக்கு அதிருஷ்டம்தான். ஆகவே மீண்டும் முடியுமானால் பெண்களுக்கும், ஆதி திராவிட மக்களுக்கும் அந்தப் பிரதிநிதித்துவம் அதிகரிக்கக்கூடிய சட்டத்தை அரசு கொண்டுவந்து மாநகராட்சிகள் நல்லமுறையிலே நடக்க தேர்தலை நடத்த வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, நகராட்சி நடத்தும் பள்ளிகளை எல்லாம் அரசின் மேற்பார்வையில் எடுத்துக் கொண்டிருக்கும்போது, மாநகராட்சிப் பள்ளிகளையும் அரசுப் பொறுப்பில் எடுக்காமல் ஏன் விட்டு வைக்கவேண்டும்?

திரு. ஆர். டி. சீத்தாபதி: துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர் களின் கவனத்திற்காகக் கொண்டுவருகிறேன். பெண்களுக்குப் பிரதிநிதித் துவம் இல்லை என்று அவர்கள் சொன்னார்கள். சென்னை மாநகரத்திலும், மற்ற இடங்களிலும் அது இல்லையென்றால், நியமிக்கின்ற உரிமை ஏற்கெனவே இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திருமதி வி. ஜெயலட்சுமி: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதற்காக நன்றி. காலமெல்லாம் பெண்கள் நியமன உறுப்பினராகவே அங்கம் வகிக்க வேண்டுமென்று நாங்கள் நினைக்கவில்லை. சரிநிகர் சமானமாக ஆண்களோடு போட்டியிட்டு நல்ல முறையிலே தேர்தலிலே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றுதான் விரும்பு கின்றோம். (குறுக்கீடு . . ) ரிசர்வேஷன் மூலமாக. முடிந்தால் ஆண்களோடு தேர்தலில் போட்டி போடுவதற்கும் தயாராக இருக்கிறோம். ஆகவே கூடிய சீக்கிரத்தில் மாநகராட்சிகளுக்குத் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

நகராட்சி, மாநகராட்சி இவைகளுக்கெல்லாம், அரசு இனிமேல் பொது சுகாதாரம், குடிநீர், மின்விளக்குப் பராமரிப்பு போன்றவைகளை மட்டும் அவர்களுடைய பொறுப்பில் விட்டுவிட்டு, அவை குறித்து மட்டும் அவர்கள் நல்ல முறையிலே செயலாற்றி, மாநகர மக்களுக்கு நல்ல விதமாகச் சேவை செய்தால் போதுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

மேலும், குறிப்பாக என்னுடைய மாவட்டத்திலுள்ள நகராட்சிகளைப் பற்றியும் நான் இங்கே சொல்லாமலிருக்க முடியாது. காலம் காலமாக வறட்சியால் பாதிக்கப்படுகிற சிவகாசி, விருதுநகர் போன்ற நகராட்சிகளில் [illegible] மக்கள் குடிநீருக்காகப் படும் கஷ்டம் சொல்லமுடியாத கஷ்டமாக இருக்கிறது. நகராட்சித் தலைவர்களுக்கெல்லாம் புதிதாகத் தலைவலி வந்திருக்கிறது. அவர்கள் எல்லாம், மக்களுக்கு எப்படி குடிநீரை சப்ளை செய்து நல்ல பெயர் வாங்கப் போகிறோமென்று கருதுகிறார்கள். அவர்களுக்கு வாட்டர் டாங்கர் லாரிகளை அரசு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி முடியாதென்றால், நகராட்சிகள் அவைகளை வாடகைக்கு எடுக்க வேண்டுமென்றாலுங்கூட, அங்கு போதுமான அளவுக்கு

[திருமதி வி. ஜெயலட்சுமி] [1986 ஏப்ரல் 26

இப்போது நகர்ப்புறங்களில் கட்டணக் கழிப்பிடங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதேபோன்று கிராமப்புறங்களிலும் செய்ய முடியுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். கிராமப்புறத்து மக்கள் பத்து பைசா, 15 பைசா கொடுத்துவிட்டு உபயோகிப்பார்களா என்றெல்லாம் பார்த்து, அதற்கு வாய்ப்பில்லாவிட்டால், ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்தாவது, இதுபோன்ற கழிப்பிடங்களை சுத்தப்படுத்த வேண்டுமென்றும், அவற்றை நல்லமுறையில் பராமரிக்க வழிவகை காண வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, பெண்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பேரூராட்சி யானாலும் சரி, நகராட்சியானாலும் சரி, ஊராட்சியானாலும் சரி. வேகமாக வளர்ந்து வருகிற சமுதாயத்திலே காலி இடங்கள் என்பதே இல்லாத நிலைமை வந்துவிட்டது. எனவே இவர்கள் கழிப்பிட வசதிக்கு ஆவன செய்ய வேண்டும்.

முன்பு சமூக நலத் துறை என்று ஒரே துறையாக இருந்தது. சமூக நல வாரியம் என்று வைத்து அதன் மூலமாகவும் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் ஆதரவற்ற பெண்களுக்கும் நிதி உதவி செய்து வந்தோம். மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, "பெண்களுக்கு உரிய பங்கைக் கொடுத்தாக வேண்டும்; அவர்கள் நல்ல முறையில் கவனிக்கப்பட்டு, நல்லமுறையில் அவர்களுக்குப் பொருளாதார மறுமலர்ச்சி, கல்வி வாய்ப்பு அளித்தல் போன்றவற்றைச் செய்ய வேண்டும்; சமுதாயத்தில் இரண்டு கண்களில் ஒன்றாக இருக்கும் பெண்கள் முழுமையாக வளர்ச்சி பெற்ற சமுதாயமாக வரவேண்டும்" என்கிற முறையில் மகளிர் மேம்பாட்டுத் துறை என்கிற முறையில் தனி இலாகாவாகவே ஆரம்பித்திருக்கிறார்கள். வேலை வாய்ப்பிற்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். தனித்தனியாகவும் பலருக்கு 2,000 ரூபாய், 3,000 ரூபாய் என்று கடன் கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு கொடுத்தும்கூட அவர்கள் அதை நல்ல முறையில் செயல்படுத்த முடியவில்லை என்று கூறப்படுகிறது.

ஐ.ஆர்.டி.பி. மூலம் அரசு இதுவரை கிராமங்களில் பலருக்கு கறவை மாடுகள் வாங்க கடன் கொடுத்திருக்கிறது. ஆனால் அவ்வளவு தொகையும் ஒழுங்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தால், இன்றையதினம் தமிழ்நாடு முழுவதுமே கறவை மாடுகள் நிறைந்த நாடாக இருக்கும். ஆனால் உண்மைக் கணக்கைப் பார்த்தால், மிகவும் குறைவாக இருக்கிறது. அந்த அளவுக்கு இதில் துஷ்பிரயோகம் நடந்திருக்கிறது. திட்டத்தின் பலன் முழுமை அடையாததற்கு தனி நபர்கள் மட்டும் காரணமல்ல. அதிகாரிகளும், அரசியல்வாதி



1986 ஏப்ரல் 26] [திருமதி வி. ஜெயலட்சுமி]

களும் அத்தனை பேரும் சேர்ந்துதான் இந்த விரும்பத் தகாத நிகழ்ச்சிகளை ஏற்படுத்திக் கொண்டு வருகிறோம் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே பெண்களுக்கு உதவி செய்கிறபோது, 20, 30 பெண்களாகச் சேர்ந்து ஒரு கூட்டுறவுச் சங்கம் போன்று அமைத்து, நல்ல திட்டங்களைத் தீட்டி, அவர்கள் மூலம் முழுமையாகச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மொத்தமாக தொகையை ஒதுக்கி, ஒரு குழுவாகச் சேர்த்து பெண்களை உறுப்பினர்களாக்கி அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டும். இப்போது தனித்தனியாகக் கடன் உதவி அளிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதற்குப் பதிலாக, இவ்வாறு செய்யலாம். அப்போதுதான் இந்தத் திட்டம் நல்ல முறையில் செயல்படும். ஒருவராக இருந்து செயல்படுவதைவிட 20 பேராக இருந்து செயல்படும்போது மிகவும் செம்மையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

எங்களுடைய பகுதி மிகவும் பின்தங்கிய மாவட்டமாகும். அங்கேயுள்ளவர்கள் தீப்பெட்டித் தொழிற்சாலைகளை நம்பிக்கொண்டிருப்பவர்கள். எனவே அங்குள்ள பெண்களுக்கு நிதி உதவியைச் செய்தால், பெண்கள் கூட்டுறவு சங்கம் அமைத்து, பெண்கள் தீப்பெட்டித் தொழிற்சாலைகூட ஆரம்பித்துக் கொள்வார்கள். அந்தத் தீப்பெட்டித் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் எல்லாம் — உள்பெட்டி, வெளிப் பெட்டி — இவைகளை அவர்கள் உட்கார்ந்துகொண்டு ஒரு கோவாப்பரேடிவ் சிஸ்டத்திலே 'குரூப் ஆஃப் பெனிஃபீஷியரிஸ்' என்ற முறையிலே அந்தத் திட்டத்தை நல்லமுறையிலே செயலாற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

அதுபோன்று திருநெல்வேலி மாவட்டத்தில் திருச்செந்தூருக்கு அருகே பூச்சிக்காடு என்ற ஊருக்கு நான் சென்றிருந்தேன். அங்கு மணற் குன்றுகளும், பனை மரங்களும் தான் இருக்கின்றன. அங்குள்ள பெண்களுக்கு எந்த விதமான வேலை வாய்ப்பும் கிடையாது. அங்குள்ள பெண்களை நான் கேட்ட போது, அவர்கள் சொன்னார்கள், "ஒரு ஓலை வாங்க வேண்டுமென்று சொன்னாலும்கூட, நூறு ஓலை 9 ரூபாய்க்கு விற்கிறார்கள்" என்று சொன்னார்கள். "எவ்வாறு அதை வாங்கிப் பிழைப்பது, அம்மா" என்று என்னிடம் சொன்னார்கள். அந்த இடத்திலே இத்தகைய திட்டங்களை அரசு முழுவதுமாகச் செயலாற்ற வேண்டுமென்று நான் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்படி "குரூப் ஆஃப் பெனிஃ

வருமானம் இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே அரசு யுத்தகால நடவடிக்கையாக, எங்கெங்கெல்லாம் வறட்சியால் குடிநீருக்காக மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்களோ அந்த இடங்களையெல்லாம் முதலில் கணக்கில் எடுத்துக்கொண்டு நல்ல வகையில் உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-35)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன நேரம் கடந்துவிட்டது.

திருமதி வி. ஜெயலட்சுமி : ஆகவே, சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் மற்ற பிற நல்ல திட்டங்களும் நல்ல வகையில் செயல்படுத்தப்பட்டு குறிப்பாக மத்திய அரசு கொடுக்கிற நிதியும் நல்ல வகையில் செலவழிக்கப்பட்டால் தற்போது வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கும் ஏழை எளிய மக்கள் உயருவதற்கு வழிவகை ஏற்படும். எனவே அரசு அதைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே மகளிர் மேம்பாட்டுக்காக நல்ல திட்டங்கள் திட்டப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட மகளிர் நல மேம்பாட்டுக்கான திட்டங்கள் செயல்படுத்தப்படும் போது, மாவட்டத்தில் உள்ள முக்கியமான மகளிரை எல்லாம் ஒரு கமிட்டியில் போட்டு அந்தத் திட்டம் முழுமையாகவும் முறையாகவும் செயல்படுகிறதா என்று பார்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

வேதனையோடு இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். என்.ஆர்.இ.பி., ஐ.ஆர்.டி.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற பல்வேறு திட்டங் களைப் போட்டு நாம் நிறைய பணத்தைச் செலவழித்து வருகிறோம். அந்தப் பணமெல்லாம் முறையாகச் செலவழிக்கப்படுகிறதா என்று சகல தரப்பிலும் உள்ளவர்களை ஒரு செயல் கமிட்டியில் போட்டு கண்காணிக்க வேண்டும். எல்லாக் கட்சியின் பிரதிநிதிகளையும் அந்தக் கமிட்டியில் போட்டு அந்தப் பணிகள் எல்லாம் முறையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். அப்போதுதான் பல குறைபாடுகள் நீங்குவதற்கு வழி ஏற்படும். இப்போது அதிகாரிகள் சரியாகச் செயல்படவில்லை என்று அரசியல் வாதிகள் தரப்பில் சொல்லப்படுவதும், அதிகாரிகளைக் கேட்டால் அரசியல் வாதிகளின் தலையீடு இருக்கிறது என்று சொல்லி, நாங்கள் என்ன செய்ய முடியும் என்று பரஸ்பரம் புகார் சொல்லுகிற அளவுக்கு இருக்கும் நிலைமை இருப்பதை மாற்றி, அனைத்து அரசியல் கட்சிப் பிரதிநிதிகளையும் கொண்ட கமிட்டி போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கமிட்டி [illegible] தவறாமல் கூட்டப்பட வேண்டும். [illegible]



நல்ல முறையில் செயல்படுத்தப்படுகின்றனவா என்று அந்தக் கமிட்டி முன்னால் பரிசீலிக்கப்பட வேண்டும். ரெவ்யூ மூலமாக இதுவரை பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று எவால்யுவேஷன் ரிப்போர்ட் தயாரிக்க வேண்டும் என்று மாநில அரசைக் கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு மேலவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள், மாநகராட்சி-நகராட்சி மன்ற நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை எடுத்துக்கூற முற்படுகிறேன்.

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் தேவை என்கிற எண்ணம் உதயமான காலகட்டத்தில், 1952 ஆம் ஆண்டு மே திங்கள் சமுதாய வளர்ச்சி ஆணையாளர் மாநாடு புது டெல்லிப் பட்டணத்தில் நடைபெற்றபோது இந்தியாவினுடைய பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள், "இந்தியாவை மீண்டும் புத்தாக்கம் செய்யும் பெருங்கடமையை நாம் மேற்கொண்டால், அந்தக் கடமையை ஒரு வித தீவிர முறையில்தான் மேற்கொள்ள வேண்டும். வெறும் புத்தகங்களோ, புள்ளி விவரங்களோ, காகிதங்களோ, வழிகாட்டும் குறிப்புகளோ, திட்டமிடுதலோ, அமைப்புகளோ போதவே போதாது.

இவற்றிற்கும் மேலான ஒரு தீவிர செயல்பாடு வேண்டும். சுடர் விட்டு எழும் தீவிரக் கனலோடு ஒரு நாடு முழுவதையும் உன்னத முயற்சியில் [illegible] சேரச் செலுத்தும் உயிர்ப்போடு செயல்பட வேண்டும். சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் இந்த வகையில் உதவுமா? ஒருவேளை இந்தத் திட்டங்களைப் பற்றி மிகவும் அதிகமாக எதிர்பார்க்கிறோமோ என்று எனக்கே தோன்றுகிறது. அப்படி அளவுக்கு மீறி உயர்த்துவதும் ஆபத்துதான். ஏனென்றால் ஒன்றினிடமிருந்து அதன் தகுதிக்கு மேல் பலன்களை எதிர்பார்த்தால் விளையும் பலன் நேர் எதிரிடையாகவே போகும். இந்தியாவைப் போல உன்னதமான குறிக்கோளைக் கொண்ட நாடு வேறு எதுவுமில்லை என்று நான் கருதுகிறேன். இப்படிச் சொல்வதால் மற்ற நாடுகளை நாம் அவமதிப்பதாக எண்ண வேண்டாம். இதே சமயத்தில் நாம் மற்றொன்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். குறிக்கோள்களுக்கும் செயலுக்குமிடையே [illegible] இடைவெளி இந்தியாவில் இருப்பதைப்போல் வேறு எந்த நாட்டிலும் பெரிதாக இருப்பதில்லை. எனவே பெரிய பெரிய இலட்சியப் பேச்சுகளை பேசிவிட்டு செயல்படும்போது, நாம் பேச்சின் சாயலைக்கூட எட்ட முடியாமல்

போவது மிகவும் ஆபத்தானது'' என்ற கருத்தை பண்டித நேரு அவர்கள சமுதாய வளர்ச்சி ஆணையாளர் மாநாட்டில 1952 ஆம் ஆண்டில் வெளியிட்டார்கள்.

(பிற்பகல் 12-40)

"நோக்கங்கள், குறிக்கோள்கள், செயல்படுத்தப்பட வேண்டும்'' என்று சீரிய உணர்வோடு நேரு அவர்கள் வெளியிட்ட கருத்தாகும் இது.

நேரு அவர்கள் 1952 இல் வெளியிட்ட இந்தக் கருத்தை 1944 ஆம் ஆண்டு, தந்தை பெரியார் அவர்கள், ஈரோட்டில் 31—10—1944 அன்று நடந்த ஈரோடு கிராம அதிகாரிகள் மாநாட்டில் உரையாற்றும்போது சொன்னார்கள் :—

"பல கிராமங்களை ஒன்றாக இணைத்து ஒரு சிறு நகரமாக ஆக்கி அதில் பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, பார்க், சினிமா, டிராமா, நடனவூர் அறை, (இது தந்தை பெரியார் அவர்களுடைய வார்த்தைகள்) வாசக சாலை, புத்தக சாலை, ரேடியோ நிலையம், நல்ல ரோடு, கால அளவோடு போக்குவரத்துள்ள பஸ் ஸ்டாண்ட், போலீஸ் ஸ்டேஷன், நன்றாய் படித்த ஒரு நிதியமைச்சர், சகல சாமான்கள் கிடைக்கத்தக்க கடைகள், சுற்றுலா காணத்தக்க சாலைகள் அடிக்கடி பற்பல அமைத்து, ஊர்கள் சுற்றி சுற்றி வரும் காரியங்கள் செய்ய வேண்டும்.

நகரத்தார்களுக்குத்தான் கிராமத்தார்கள் வாழ்கிறார்கள், வாழ வேண்டும் என்று சொல்லப்படுவதை அடியோடு மாற்ற வேண்டும். அதோடு கூடவே அந்த இடங்களில் அவற்றுக்குத் தக்கபடி இயந்திரத்தால் செய்யப்படும் சிறு தொழிற்சாலைகளை நிறுவி, வேறு ஊரில் புகாதபடி பிழைப்பை ஏற்படுத்த வேண்டும். கிராமத்தான், பட்டிக்காட்டான், குப்பைக்காட்டான் என்ற பெயர்கள் ஒரு மனிதனுக்கு ஏன் இருக்க வேண்டும்? அதுவும் பாடுபட்டு உழைக்கும் மனிதனுக்கு ஏன் இருக்க வேண்டும்? ஆதலால் இப்பிரச்சினைகள் இல்லாமல் செய்யப்படும் காரியங்கள் நடைபெற வேண்டும்.

மேல்நாடுகளில் பெரும்பாலான கிராமங்கள் நான் விரும்புகிறபடி இருக்கின்றன. அதாவது தார் ரோடு, குழாய்த் தண்ணீர், பஸ் சர்வீஸ், பள்ளிக்கூடம், விளையாட்டு மண்டபம், தொழிற்சாலை ஆகியவை இல்லாத கிராமங்கள் மேல்நாடுகளில் காண்பது மிகவும் அதிசயமானது. ரஷ்யாவில் மாத்திரம் சில இடங்களில் கிராமங்கள் காணப்படுகின்றன. அதுவும் இதற்குள் நகரமாக ஆகியிருக்கும்.'' என்று 1944-ல் சொல்லியிருக்கிறார்.



"மற்றபடி ஐரோப்பாவில் கிராமங்கள் இல்லவே இல்லை. நகரத்தார் நல்வாழ்வு வாழ்வதற்காகவே கிராமங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ற முறையில் கிராமங்கள் அங்கு இல்லை. அங்கு ஏதாவது ஒன்று இரண்டு இருந்தபோதிலும் இங்கு இருக்கக் கூடாது என்று நான் சொல்வேன்'' என்று நகரங்கள், கிராமங்கள் என்று வேறுபாடு இல்லாத அளவிற்கு நகர்ப்புறத்திலே உருவாகின்ற வளர்ச்சிகள், திட்டங்கள், ஆகியவைகள் கிராமப்புறத்திற்கும் ஏற்பட வேண்டுமென்ற சீரிய கருத்தை 1944 ஆம் ஆண்டிலேயே தந்தை பெரியார் அவர்கள் எடுத்துரைத்திருக்கிறார்கள். இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, 1952 ஆம் ஆண்டு இந்த சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் தொடங்கப்பட்டபோது, பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கருத்தையும் நான் ஏற்கெனவே இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறேன்

ஆனால் நான் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தப் பத்தாண்டுக் காலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஒன்றியங்களிலும் நகர்ப்புறங்களிலும் பொறுப்பேற்று நிர்வாகங்களை நடத்துகின்ற வாய்ப்புப் பெறாத காரணத்தால், நகரங்களே கூட கிராமங்களைவிட மோசமான சூழ்நிலையில் சீரழிந்திருக்கின்றன என்பதற்கு ஏராளமான தகவல்கள் நம்மிடம் இருக்கின்றன.

நான் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். 1985-86 ஆம் ஆண்டில் இந்த மாமன்றத்தில் வைத்த கொள்கை விளக்கக் குறிப்பு கிடைக்குமானால், அதைப் பெற்று அவர் தன் கையில் வைத்துக்கொள்வாரேயானால், அவர்களுக்கு நான் சில விவரங்களைச் சொல்ல முடியும் என்று கருதுகிறேன். இதோ என் கையில் இருப்பது 1985-86 ஆம் ஆண்டுக்கான நகராட்சி நிர்வாகமும், மாநகராட்சிகளும் என்பதற்கான கொள்கை விளக்கக் குறிப்பாகும். 1985-86 ஆம் ஆண்டுக்கும், இப்போது வைக்கப்பட்டுள்ள 1986-87 ஆம் ஆண்டுக்கும் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புக்கும் இடையிலே இந்தத் துறையிலே ஏதாவது வளர்ச்சிகள், உயர்வுகள் ஏற்பட்டிருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால், நம்முடைய அமைச்சர் அவர்கள் நகராட்சி நிர்வாகத்திலே தன்னுடைய இளமைக் காலத்திலேயே பொறுப்பேற்று திறம்பட நடத்தியவர் என்று புகழ்பெற்றவர். கடந்த ஆண்டு வைத்த கொள்கை விளக்கக் குறிப்பும், இந்த ஆண்டு வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளும் அதிகாரிகளால் [illegible] தயாரிக்கப்பட்டிருக்கின்றன

[டாக்டர் மு. கருணாநிதி] [1986 ஏப்ரல் 26

(பிற்பகல் 12-45)

அதிலே உள்ள இந்தத் தவறுகள் எல்லாம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்களுக்கு எப்படி படாமல் போய்விட்டன என்பதுதான் எனக்கு மிகமிக விந்தையாக இருக்கின்றது. இதிலே 1985-86 கொள்கை விளக்கக் குறிப்பில், 41-ம் பக்கத்தில், பொதுக் கழிப்பிடங்கள் என்ற தலைப்பில், ஒரு பாராகிராப்.

"பீஹார் மாநிலத்தில் பாட்னா நகரத்தில் ஒரு புதிய மாதிரி அமைப்பில் பொதுக்கழிப்பிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய அமைப்பில் கழிப்பிடத்தைச் சுத்தம் செய்ய மிகக்குறைந்த அளவே தண்ணீர் தேவைப் படும். அத்தகைய புதிய அமைப்புக் கழிப்பிடங்களை, சென்னையிலும் அமைக்க அரசுக்கு எழுதப்பட்டு, கீழ்க்காணும் எட்டு இடங்களில் புதிய அமைப்புக் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(1) லோன் சதுக்கம்.

(2) கிருஷ்ண பிள்ளை தெரு, பெரம்பூர்.

(3) பிராட்வே வெளியூர் பேருந்து நிலையம்.

(4) வ.உ.சி. சாலை.

(5) ஜி.என். சாலை.

(6) கிரியப்பா சாலை.

(7) கனால் சாலை.

(8) மைலாப்பூர் குளம் அருகில்.

இந்தக் கழிப்பிடங்கள் 1985-86 ஆம் ஆண்டில் கட்டப்பெறும்."

இவ்வாறு கடந்த ஆண்டு கொள்கைக் குறிப்பில் 41-ம் பக்கத்தில் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு அதே தலைப்பில் 15 ஆம் பக்கத்தைப் படித்தால், ஒரு வரிகூட மாற்றம் இல்லாமல் அப்படியே எடுத்து அச்சில் கொடுத்திருக்கின்றார்கள்.

"பீகார் மாநிலத்திலுள்ள பாட்னா நகரில் புதிய வடிவமைப்புடன் கூடிய பொது கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த வடிவமைப்பின்படி மிகக் குறைந்த அளவு நீரே தேவைப்படுகி— "—போன பக்கத்தில்...



1986 ஏப்ரல் 26] [டாக்டர் மு. கருணாநிதி]

என்று இருந்தது. இதிலே 'நீரே' தேவைப்படுகிறது என்று இருக்கிறது— "மாநகராட்சியின் பரிந்துரைக்கிணங்க பின் வரும் 8 இடங்களில் இத்தகைய பொது கழிப்பிடங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அவையாவன :

1. லோன் சதுக்கம்.

2. கிருஷ்ணபிள்ளை தெரு, பெரம்பூர்.

3. பிராட்வே வெளியூர் பேருந்து நிலையம்.

4. வ.உ.சி. சாலை.

5. ஜி.என். சாலை.

6. கிரியப்பா சாலை.

7. கால்வாய் சாலை.

8. மைலாப்பூர் குளம் அருகில்"

இது 1985-86-ல் கட்டப்படும் என்று அறிவித்து கொள்கைக் குறிப்பில் அனுமதி வழங்கியுள்ளது. அப்படியே எழுத்தாழுக்கூட அல்ல, அசலாக அதுவும் இருவுபாக ஒன்றாகவே இருக்கின்றது. இதிலே மாற்றம் இருப்பதாகத் தெரியவில்லை.

அடுத்து, துப்புரவு. இந்த 1985-86 கொள்கைக் குறிப்பில் துப்புரவு என்ற தலைப்பில் ஒரு வாசகம். "துப்புரவுப் பணியாளர்களுக்கு 896 மாட்டு வண்டிகளும் 138 லாரிகளும் ஈடுபடுத்தப்படுகின்றன. 6,685 துப்புரவு ஊழியர்கள் துப்புரவு பணியினை மேற்கொள்ளுகின்றார்கள்" என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு 896 குப்பை வண்டிகளில் குப்பைகளை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. 174 லாரிகள் குப்பை கொட்டும் இடங்களில் இக்குப்பையைக் கொண்டுபோய் கொட்டும் பணியிலே ஈடுபட்டுள்ளன. 36 லாரிகள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் துப்புரவுப் பணியாளர்கள் அதே 6685 பேர்கள்தான். 36 லாரிகள் அதிகமாக இருக்கும் போது, துப்புரவுப் பணியாளர்கள் 36-ஐ 3 ஆல் பெருக்கினால் 108 பேராவது அதிகமாக ஆக்கவேண்டியிருக்குமா இல்லையா? அதே 6685 பேர்கள் தான் இருக்கின்றார்கள். அதற்கு விளக்கம் தெரிய வேண்டும்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1986 ஏப்ரல் 26

அதற்கு அடுத்து 1985-86 கொள்கைக் குறிப்பில் விளக்குகளைப்பற்றி 4 ஆம் பக்கத்தில், 1985-86 ஆம் ஆண்டில் தெருவிளக்குகள் அமைத்தல், சோடியம் ஆவி விளக்குகள் அமைத்த கம்புகள் புதைத்தல், அதற்கு 281 லட்சம் 1985-86-ல் என்று ஒதுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து நீழ்க் காணும் சாலைகளில் சோடியம் ஆவி விளக்குகள் ஆயிரம் விளக்குகள் பொருத்த திட்டமிடப்பட்டுள்ளது:—

(பிற்பகல் 12-30)

சாந்தோம் நெடுஞ்சாலை; சர்தார் படேல் சாலை; ராஜ் பவன் சாலை; 2 மற்றும் 3 அவின்யூ, அண்ணா நகர்; எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை; திருவொற்றியூர் நெடுஞ்சாலை; பல்லவன் சாலை; சூரிய நாராயண சாலை மற்றும் மேடவாக்கம் குளம் சாலை. 658 தெரு விளக்குகள் 48 குடிசைப் பகுதிகளில் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மாநகராட்சியில் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் 1150 விளக்குகள் அமைக்கப்படும்." இது கடந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு.

இப்போது இந்த ஆண்டு, "1986-87-ல் வரவு செலவுத் திட்டத்தில் தெரு விளக்கு, சோடியம் வேப்பர் விளக்கு, புதைமின் கம்பிகளை மாற்றியமைத்தல் ஆகியவற்றிற்காக ரூ. 323-78 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1000 சோடியம் வேப்பர் விளக்குகள் பொருத்தப்பட இருக்கின்ற இடங்கள் வருமாறு"—சென்ற ஆண்டு எந்த இடங்களைக் குறிப்பிட்டார்களோ, அந்த இடங்கள்—"சாந்தோம் நெடுஞ்சாலை, சர்தார் படேல் சாலையின் ஒரு பகுதி, ராஜ்பவன் சாலை, அண்ணா நகர் அவின்யூ இரண்டு, மூன்றாம் பகுதி, எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, பல்லவன் சாலை, எஸ். என். செட்டித் தெரு—சென்ற ஆண்டு சூரிய நாராயண தெரு, இப்போது எஸ். என். செட்டித் தெரு—மேடவாக்கம் குளச்சாலை" என்று அதே எழுத்து மாறாமல் இந்த ஆண்டு அச்சடிக்கப்பட்டிருக்கிறது. "மேலும் 48 குடிசைப் பகுதிகளில் 658 மின் விளக்குகள் பொருத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளில் 1,150 விளக்குகள் பொருத்தப் படும்" என்று அதே குறிப்பு இதிலே தரப்பட்டிருக்கிறது.

மேலும், 'கல்வி' என்ற தலைப்பில், 45 ஆம் பக்கத்தில்,—பழைய புத்தகம், சென்ற ஆண்டு புத்தகத்தில் — 'ஆரம்பக் கல்வி' என்ற தலைப்பில், "சென்னை மாநகராட்சி 370 ஆரம்பக் கல்விப் பள்ளிக்கூடங்களை நிர்வகித்து வருகிறது. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 1,69,500 ஆகும். ஆசிரியர் மற்றும் மற்ற நிர்வாக ஊழியர்களின் எண்ணிக்கை 4,7...



1986 ஏப்ரல் 26] [டாக்டர் மு. கருணாநிதி]

மேற்கண்ட 370 பள்ளிக்கூடங்களில் 28 பள்ளிக்கூடங்கள் தனியார் கட்டிடங் களில் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிக்கூடங்களை நாளடைவில் மாநகராட்சியின் சொந்தக் கட்டிடங்களில் அமைக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் புதிய கட்டிடங்கள் கட்டவும், தனியார் கட்டிடங்கள், காலி மனை வாங்கவும் ரூ. 57.96 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது."—கவனிக்க வேண்டும். 1985-86 வரவு செலவுத் திட்டத்தில் புதிய கட்டிடங்கள் கட்டவும், தனியார் கட்டிடங்கள், காலி மனை வாங்கவும் ரூ. 57.96 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது இதிலே வருகிறது, 1985-86 கொள்கை விளக்கக் குறிப்பில் வருகிறது.

1986-87 கொள்கை விளக்கக் குறிப்பில், "1985-86 ஆம் ஆண்டிற்கு ரூ. 57.96 இலட்சம் அளவில் புது கட்டிடங்கள் கட்டவும், அதற்கான நிலம் வாங்கவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது" என்ற அதே தொகை, அதே நிலை, அதே கட்டிடங்கள். ஆனால் 1986-87 ஆம் ஆண்டிலும் கடந்த ஆண்டு அச்சடிக்கப்பட்ட பிரகாரம் இருக்கிறது. அதை அப்படியே மறந்துவிட்டு, அதை மீண்டும் இந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் வைத்து, இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கும் அமைச்சரவர்களின் கவனத்திற்கும் கொண்டுவருவதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். அடுத்து, கொசுக்கள், புகை கக்கும் கருவி என்று கொசுக்களை ஒழிக்க தொடர்ந்து பயன்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய உறுப்பினர்கூட அதைப் படித்துக் காட்டினார்கள். அதில், "கூவம் நதி, அடையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி கால்வாய் மற்றும் மாம்பலம் கால்வாய் ஆகியவை நகரின் அனைத்துப் பகுதிகளிலும் நீர்நிலைகளைக் கொண்டு உள்ளதுதான் கொசுத் தொல்லைக்கான மூல காரணம் ஆகும். அந்நீரில் உள்ள நீர்த்தாமரைகள் கொசுத் தொல்லைகளைப் போக்கும் திட்டங்களுக்கு எதிரியாக உள்ளன. எனினும் பூச்சிக் கொல்லி மருந்துகள் தெளித்தல், 60 புகை கக்கும் இயந்திரங்கள் உபயோகித்தல் (1984-85-ல் வாங்கி தீவிரமாகப் பயன்படுத்தப் பட்டவை) தொடர்ந்து நடைபெறும்" என்று 1985-86 கொள்கை விளக்கக் குறிப்பில் காணப்படுகிறது. இந்த ஆண்டும், 1986-87-ல் அதே "கூவம்,

(பிற்பகல் 12-55)

அடையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி கால்வாய், மற்றும் மாம்பலம் கால்வாய் மற்றும் அனைத்து நீர் நிலைகளிலும் காணப்படும் கொசுத் தொல்லைக்குக் காரணம் நீர் தாமரைகள் ஆகும். கொசுக்களை ஒழிக்கும் திட்டத்திற்கான பணிகளை ஏற்றுக்கொண்டுள்ளோம்". பூச்சிக்கொல்லி

[டாக்டர் மு. கருணாநிதி] [1986 ஏப்ரல் 26

மருந்துகளைப் பயன்படுத்தி கொசுக்களை ஒழிக்க எவ்வளவு இயந்திரங்கள் 1985-86-ல் பயன்படுத்தப்பட்டனவோ அதுவே தான் இந்த ஆண்டும். சென்ற ஆண்டு 48 ஆம் பக்கத்தில் என்ன சொல்லியிருக்கிறார்களோ அதையே இந்த ஆண்டு கொள்கைக் குறிப்பிலும் கொஞ்சம் கூட மாறாமல் அதே வார்த்தைகளை உபயோகித்து, இயந்திரங்களை வாங்கி தீவிரமாகப் பயன்படுத்தப்பட்டன என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல 'இதரப் பணிகள்' என்கிற பெயரால், 49 ஆம் பக்கத்தில் சென்ற ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், விளையாட்டுத் திடல்கள், அங்காடிகள், சமூக நலக் கூடங்கள், இடுகாடுகள், சுடுகாடுகள் போன்றவற்றைப் பராமரிக்க ஒதுக்கப்பட்ட தொகைகள் தரப்பட்டுள்ளன.

1985-86-ல் பூங்காக்கள் 88. செலவழிக்கப்பட்ட தொகை 53.68 லட்சம். இந்த ஆண்டும் பூங்காக்கள் அதே 88. செலவழிக்கப்பட்ட தொகை அதே 53.68 லட்சம்.

1985-86-ல் விளையாட்டு மைதானங்கள் 80, ஒதுக்கப்பட்ட தொகை 12.90 லட்சம் ரூபாய். இந்த ஆண்டும் அதே 80 விளையாட்டு மைதானங்கள். ஒதுக்கப்பட்ட தொகை 12.90 லட்சம் ரூபாய்.

விளையாட்டுத் திடல்கள் 1985-86-ல் 3. செலவழிக்கப்பட்ட தொகை ரூபாய் 11.98 லட்சம். இந்த ஆண்டும் விளையாட்டுத் திடல்களின் எண்ணிக்கை 3. ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை ரூபாய் 11.93 லட்சம்.

சென்ற ஆண்டு அங்காடிகளின் எண்ணிக்கை 14. செலவழிக்கப்பட்ட தொகை 8.45 லட்சம். இந்த ஆண்டும் அங்காடிகளின் எண்ணிக்கை 14. செலவழிக்கப்பட்ட தொகை 8.45 லட்சம் ரூபாய்.

சமூக நலக் கூடங்கள் சென்ற ஆண்டு 10. செலவழிக்கப்பட்ட தொகை ரூபாய் 4.33 லட்சம். இந்த ஆண்டும் அதே 10. செலவழிக்கப்பட்ட தொகை ரூபாய் 4.33 லட்சம்.

சலவை நிலையங்கள் கடந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பின்படி, 10. செலவழிக்கப்பட்ட தொகை ரூபாய் 1.44 லட்சம். இந்த ஆண்டும் கொள்கை விளக்கக் [illegible]ப்பின்படி 10. செலவழிக்கப்பட்ட தொகை ரூபாய் 1.44 லட்சம்.



1986 ஏப்ரல் 26] [டாக்டர் மு. கருணாநிதி]

இடுகாடு, சுடுகாடு சென்ற ஆண்டு 30. செலவழிக்கப்பட்ட தொகை ரூபாய் 3.75 லட்சம். இந்த ஆண்டு அதே 30. செலவழிக்கப்பட்ட தொகை ரூபாய் 3.75 லட்சம்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பைப் பார்க்கும்போது, எந்த மாற்றமும் இல்லாமல் இரண்டு வருட கொள்கை விளக்கக் குறிப்புகளிலும் ஒரே தொகை காணப்படுகிறது. அப்படியே இரண்டிலும் இருப்பது ஏதோ அதிகாரி களின் இயலாமையா என்று நான் சொல்ல மாட்டேன். சோம்பேறித் தனம் என்றும் கூற மாட்டேன். அதிகாரிகள் இவைகளை எல்லாம் யார் படிக்கப் போகிறார்கள் என்று மன்ற உறுப்பினர்களையும் என் அமைச்சரையும் கூட அலட்சியப்படுத்திவிட்டு, இப்படிப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பினைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை நான் நாட்டின் நன்மைக்காகவும், அமைச்சர் மூலமாக இந்தக் குறை பாடுகள் எல்லாம் களையப்பட வேண்டும் என்பதற்காகவும் இந்த அவையின் முன்னால் எடுத்து வைப்பதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். இந்த இரண்டு கொள்கை விளக்கக் குறிப்புகளும் அந்த வகையில் தயாரிக்கப் பட்டிருக்கின்றன, என்ன அழகில் இருக்கின்றன என்பதை எல்லாம் உணர்ந்து பார்த்து ஏற்ற நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்கள் என்கிற நம்பிக்கையில் இதனை நான் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

இன்னொன்று. கடந்த ஆண்டு இந்த நகராட்சி ஊராட்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பைப் பார்த்தால், பக்கங்கள் 74 ஆக இருந்தன. ஆனால் இந்த ஆண்டு என்ன கோபமோ தெரியவில்லை அது 47 பக்கங்களோடு அடங்கிவிட்டது. அதுபோல நகர மன்றங்களை எடுத்துக்கொண்டால், சென்ற ஆண்டு 36 பக்கங்கள் இருந்தன. இந்த ஆண்டு என்ன காரணத்தாலோ அது வும் 6, 7 பக்கங்களோடு நின்று அதுபற்றிய விவரங்களும் குறைக்கப்பட்டு விட்டன.

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

டாக்டர் மு. கருணாநிதி: இவைகள் எல்லாம், நான் முதலிலே குறிப் பிட்டதைப்போல, ஒரு பத்தாண்டுக் காலம் மக்களுடைய நேரடிப் பார்வையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தங்களுடைய பணிகளை நிறை வேற்ற முடியாமல் போனதால் ஏற்பட்ட தவறுகள். அந்தக் காரணத்தினால் தான், உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டுமென்று இங்கே அனைத்துக் கட்சிகளின் சார்பில் பலமுறை எடுத்துக் கூறப்பட்டது.

பிறகு டிசம்பர் 19 ஆம் தேதி தமிழக அரசு, 1036 என்கிற எண்ணுள்ள அரசாணையை வெளியிட்டது. அந்த அரசாணை டிசம்பர் 19, 1985 அன்று வெளியிடப்பட்ட அரசாணையாகும். முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன் துறையின் சார்பாக வெளியிடப்பட்டது. அதிலே,

"The Governor of Tamil Nadu hereby issues the following directions for the assignment of symbols to the candidates contesting in the elections to the offices of Chairmen and Councillors of Municipal Councils."

கீழ்க்காணும் கட்சி சின்னங்களில் நகராட்சித் தலைவர்களும், நகராட்சி மன்ற உறுப்பினர்களும் முனிசிபல் கவுன்சிலர்களும் போட்டியிடுவார்கள் என்று தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பாக அரசாணையை வெளியிட்டது. எல்லா அரசாணைகளுமே ஆளுநர் சார்பாகத்தான் வெளியிடப்படும். இவ்வாறு முனிசிபல் சேர்மனுக்கும், முனிசிபல் கவுன்சிலர்களுக்கும் சிம்பல்கள் உண்டு என்கிற ஓர் அரசாணையை வெளியிட்டது. அதற்குப் பிறகு, டிசம்பர் 19 ஆம் தேதி அரசாணைக்குப் பிறகு சரியாக 19 நாள் கழித்து, இன்னொரு அரசாணையை வெளியிட்டார்கள். அரசாணை எண் 63. அந்த அரசாணையில்,

"The Government now direct that the election of Chairmen of Municipal Councils be conducted on party basis and the election of Councillors of Municipal Councils on non-party basis."

19 நாட்களுக்கு முன்பு தலைவருக்கும், உறுப்பினர்களுக்கும் நகராட்சித் தலைவருக்கும் கட்சிச் சின்னங்கள் உண்டு என்று ஒரு அரசாணையைப் பிறப்பித்துவிட்டு, 19 நாட்கள் கழித்து கவுன்சிலர்களுக்கு கட்சிச் சின்னம் இல்லை என்ற கருத்தை இந்த அரசு தன்னிச்சையாக அவர்களாகவே வெளியிட்டார்கள். அதன் பின்னர் இதனுடைய விளைவுகள் என்ன ஆயிற்று என்பது அனைவருக்கும் தெரியும்.

பல இடங்களில் ஒரு கட்சியைச் சார்ந்தவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டும், அவர் கட்சியைச் சாராதவர் பல பேர்கள் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டும், இப்போது நடைபெறுகிற துணைத் தலைவர் தேர்தலில் ஏற்படுகின்ற தகராறுகள் எல்லோருக்கும் தெரியும். எந்தமாதிரி காரியங்கள் எல்லாம் நடைபெறக்கூடாதென்று எதிர்பார்த்தோமோ அந்த நிகழ்ச்சிகளெல்லாம் நடைபெறுகின்ற காட்சிகளை நாம் சந்திக்கின்றோம். தலைவர் ஒரு கட்சியின் சார்பாகவும், உறுப்பினர்கள் வேறுபல கட்சிகளின் சார்பாகவும் அமைந்திருக்கின்ற நிலைமைகள் பல்வேறு நகராட்சி மன்றங்களில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றன.



இவ்வளவு முரண்பாடுகளுக்குப் பிறகும் பிப்ரவரி 29 ஆம் தேதியோடு தேர்தல் முடிந்தது. தேர்தல் முடிவுகள் வெளிவந்த பிறகு, அரசாங்கம் பரபரப்பாகிவிட்டது. விருவிருப்பாக அறிக்கைகள் எல்லாம் வெளி வந்தன. தேர்தல் முடிவு வெளிவந்த சில நாட்களுக்கெல்லாம் மார்ச் 3 ஆம் தேதி யன்று புதிய தலைவர்கள் பதவி ஏற்பார்கள் என்று அறிவிக்கப்பட்டது. பிறகு மார்ச் 2 ஆம் தேதி எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் இந்த அறிக்கை அனுப்பப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், நகராட்சி கமிஷனர்கள், ஒன்றிய கமிஷனருக்கு 3 ஆம் தேதி காலை 10 மணிக்குப் பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெற வேண்டுமென்கிற சுற்றறிக்கையை அனுப்பினார்கள். உடனடியாக நகராட்சி கமிஷனர்கள், ஒன்றிய கமிஷனர்கள் எல்லாம் விருவிருப்பாகப் பணியாற்றி எல்லா உறுப்பினர்களுக்கும் தலைவர்களுக்கும் இந்தத் தகவல்களைத் தந்தார்கள்.

(பிற்பகல் 1-10)

வேடிக்கை என்னவென்றால், மார்ச் 2 ஆம் தேதி இப்படி உத்தரவு போகிறது. அதே மார்ச் 2 ஆம் தேதி மாலை 6 மணிக்கு இந்த அரசாங்கத்தின் D.R.D. அலுவலகத்திலிருந்து தந்தி எல்லா கமிஷனர்களுக்கும் போகிறது. அதில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால்,

"The oath of affirmation to be taken by the Chairmen of Panchayat Union Councils and Presidents and Members of Panchayats fixed on 3rd March 1986 stands postponed, since the date fixed, namely, 3rd March 1986, happens to be Ashtami. The oath of affirmation will be taken on some other date."

முதலிலே குறிப்பிட்ட 3 ஆம் தேதி அஷ்டமியாக இருந்த காரணத்தால், 3 ஆம் தேதி காலையிலே அந்தப் பதவி ஏற்பு நிகழ்ச்சிகளை வைத்துக் கொள்ளாமல், வேறு ஒரு தேதிக்கு மாற்றப்படுகிறது என்று, மார்ச் 2 ஆம் தேதி, ஒரு சுற்றறிக்கை அனுப்பிய அதே மார்ச் 2, மாலை 6 மணிக்கு "அஷ்டமி" என்று குறிப்பிட்டு ஒரு தந்தி போகிறது. அதற்குப் பிறகு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் எல்லாம், மன்ற உறுப்பினர்களுக்கு "அஷ்டமி" என்று சொல்லி, "வராதீர்கள், வராதீர்கள்" என்று செய்தி அனுப்புகிறார்கள். ஆனால் அதே மார்ச் 2 ஆம் தேதி இரவு 8 மணிக்கு D.R.D. அலுவலகத்திலிருந்து மற்றொரு தந்தி போகிறது. அதில் 3 ஆம் தேதியே பதவிப் பிரமாணம் செய்து கொள்ளலாம் என்று குறிப்பிடப்படுகிறது. இந்தக் குழப்பத்திற்கு என்ன காரணம் என்றால், 3 ஆம் தேதி காலை 12 மணியோடு தனி அதிகாரிகளுடைய பதவிக் காலம் முடிவடைகிறது. இதைக்கூடத் தெரிந்துகொள்ளாமல், முதலிலே "அஷ்டமி" என்று சொல்லி, பதவிப் பிரமாணத்தை ஒத்தி வைத்துவிட்டார்கள். தனி அதிகாரிகள் பதவிக் காலம் முடிவடைகிற

பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர்கள், தேர்தல் நடத்தியதற்குப் பாராட்டு தெரிவிக்கவில்லையே என்று குறைபட்டுக் கொண்டார்கள். பல உள்ளாட்சித் துறை அமைச்சர்கள், தேர்தல் நடத்துவதாக அறிவித்து அறிவித்து, பிறகு தேர்தல் நடக்காமல் போனாலும் கூட, இந்தத் தேர்தலை முன்னின்று கங்கணம் கட்டிக்கொண்டு நடத்தி முடித்த என்னுடைய அருமை நண்பர் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் களை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இந்தத் தேர்தல் அறிவிக்கப்பட்ட அந்தக் காலக் கட்டத்திலிருந்து தேர்தல் முடிந்து இதுவரையில் எத்தனை எத்தனை முரண்பாடான அறிக்கை கள், ஆணைகள். இவைகள் எடுத்துச் சொல்லப்படாவிட்டால், திருத்திக் கொள்ள வழி ஏற்படாது என்று, குற்றச்சாட்டாக அல்ல, இப்படிப்பட்ட நிலைமைகள், அரசாங்கத்தில் ஏதோ ஒரு நோக்கத்தோடு நடக்கலாமா என்ற வினாவை எழுப்பி, திருத்திக் கொள்ள வேண்டுமென்பதற்காக நான் இவை களை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1985-86-ல் நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் வைத்த கொள்கைக் குறிப்பில், 34 ஆம் பக்கத்தில் தெளிவாக ஒன்றைக் குறிப்பிட்டார் கள். "நகராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஒன்பது ஆண்டு களுக்குமேல் இல்லாமல் இருப்பதால், உடனடியாகத் தேர்தல்களை ஊராட்சித் தேர்தல்களுடன் சேர்த்து கட்சி சார்பற்ற முறையில், இதை அடிக்கோடிட்டுக் கொள்ள வேண்டும்—கட்சி சார்பற்ற முறையில் நடத்துவதற்காக 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டத்திலுள்ள பழைய முறைப்படி ஒதுக்கீடுகளைப் பின்பற்ற அரசு முடிவு செய்துள்ளது. இம்முடிவுகளுக்கேற்ப தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிச் சட்டம் தக்கபடி திருத்தம் செய்யப்பட்டுள்ளது. தற்போது 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நகராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு எல்லா ஏற்பாடுகளும் ஆகினால மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்று அச்சடித்து அமைச்சர் அவர்கள் நமக்கெல்லாம் தந்தார்கள்.

ஆனால் அதற்குப் பிறகு 1986 பிப்ரவரியில் உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடந்தது. இந்த அறிவிப்புக்குப் பிறகு, ஜூலை 27 ஆம் தேதி அமைச்சர் அவர்கள், செய்தியாளர்கள் பேட்டி கண்டபோது சொன்னார். என் மீண்டும் தாமதம் ஏற்படுகிறது என்று கேட்டபோது, வாக்காளர் பட்டியலை அச்சடிப் பதற்காக கூட்டுறவு அச்சகங்கள் எங்களுக்குத் துணை நிற்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். தனியார் அச்சகங்களுக்குத் தாவில்லையா என்று கேட்ட தற்கு, இந்த வாக்காளர் பட்டியலை கூட்டுறவு அச்சகங்களுக்குக் கொடுப்பது



என்பதுதான் எங்கள் கொள்கை, அந்தக் கொள்கைப்படி கூட்டுறவு அச்சகத் திற்குத் தந்திருக்கிறோம், அந்தக் கொள்கையில் நாங்கள் அழுத்தம் திருத்த மாக இருக்கிற காரணத்தால், தாமதமாகிவிட்டது என்று குறிப்பிட்டார். அதற்குப் பிறகு, பத்திரிகைகளில் வேறு செய்தி வந்தது. இந்திரா பவர் பிரஸ் என்ற தனியார் அச்சகமும், டிக் பிரஸ் என்ற தனியார் அச்சகமும், ராதா கிருஷ்ணா பவர் பிரஸ், ஜீவன் பவர் பிரஸ் என்ற தனியார் அச்சகத்திற்கும் தாப்பாட்டு அதை அச்சாகிக் கொண்டிருக்கின்றன என்ற செய்திகள் ஏடுகளில் வந்தன. இதுகுறித்து நிருபர்கள் அமைச்சரைக் கேட்டதற்கு, அது தவறாக சொல்லிவிட்டதாக ஒத்துக்கொண்டார். நான் அதைப் பாராட்டுகிறேன். அதற்குப் பிறகு செப்டம்பர் 11 ஆம் நாள் அமைச்சர் பேட்டி கொடுக்கிறார். தேர்தலை இன்னும் ஏன் நடத்தவில்லை என்று கேட்டதற்கு, காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பழனியாண்டியும், எதிர்க் கட்சித் தலைவர் திரு. உ. சுப்ரமணிய மும் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்து தேர்தலைக் கட்சி அடிப்படையில் நடத்த வேண்டுமென்று கோரிக்கை கொடுத் தார்களும், அது பரிசீலிக்கப்படுகிறது என்றும் குறிப்பிட்டார். ஆனால் மறு நாளே காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் அதற்கு மறுப்பு தெரிவித்தார்கள். நாங்கள் அப்படி முதலமைச்சரைச் சந்தித்து கேட்கவில்லை என்று அறிக்கை கொடுத்தார்கள். அதற்குப் பிறகும் நிருபர்கள் அமைச்சரைச் சந்தித்து இதுபற்றிக் கேட்டபோது, மிகச் சாமர்த்தியமாகச் சொல்கிறார் "நான் சொன் னது அப்படியே இருக்கிறது, அவர்கள் சொன்னதும் அப்படியே இருக்கிறது" என்ற பதிலை அவர்கள் வழங்கினார்கள்.

(பிற்பகல் 1-05)

பிறகு டிசம்பர் 13 ஆம் தேதி அமைச்சர் அளித்த பேட்டியில் டிசம்பர் 7 ஆம் தேதி தேர்தல் நடைபெறும் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அதற்குப் பிறகு அக்டோபர் 21 ஆம் தேதி, டிசம்பர் 7 ஆம் தேதி தேர்தல் நடத்துவதாக இருந்தோம். இப்போது எல்லாத் தேர்தல்களையும் கட்சி அடிப்படையில் நடத்தத் தீர்மானித்திருப்பதால், மேலும் கால அவகாசம் தேவைப்படுகிறது. ஜனவரியில் பட்டமன்றம் இருக்கிறது, எனவே பிப்ரவரியில் தேர்தல் நடக்கும்" என்று சொன்னார்கள். நான் கேட்பதெல்லாம், பலமுறை இந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்களைக் குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றபோதெல்லாம் விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஒத்தி வைப்புக்கு அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்படவில்லை, கட்சி சார்பில் நடத்துவதா, கட்சி சார்பற்ற முறையில் நடத்துவதா என்றெல்லாம் அப்போது கேட்கப்படவில்லை. ஆனால் பிறகு கட்சி சார்பில்தான் தேர்தல்களை நடத்தத் தீர்மானித்திருக்கிறோமென்று அக்டோபர் 1 -இல் குறிப்பிட்டார்.

சேர்மென்' என்கிற கடிதம் நேரடியாகவே கமிஷனர் ஙகக்குப் போகிறது. கமிஷனர், அவரே கையொப்பமிட்டு வாங்குகிறார். அப்படிப் போன கடிதம் அஞ்சல் வழி போனதா என்றால் இல்லை. இதோ இந்தக் கவர்தான் சென்றது

(மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவையில் அதை எடுத்துக் காட்டினார்).

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களிடம் காட்டிவிட்டுத்தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன். "பஞ்சாயத்து எலெக்ஷன்ஸ்—இம்மீடியட்—43 தெ. போட்டது", இந்தக் கவர் அஞ்சல் தலை எதும் ஒட்டப்படாமல், ஒரு ஆளிடம் தரப்பட்டு அனுப்பப்பட்டது. செயலாளரால் 17 ஆம் தேதி கையொப்பமிடப்பட்டது. பொதுவாக செயலாளர் கையொப்பமிட்ட பிறகு, இங்கேயிருந்து போஸ்ட் ஆவதற்கு எத்தனை நாளாகும் என்பது அனுபவப் பட்டவர்களுக்குத் தெரியும். ஆனால் இந்தக் கடிதம் 18 ஆம் தேதியே போகிறது. அதுவும் ஸ்டாம்பு இல்லாமல் ஒருவர் மூலமாகக் கொடுத்தனுப்பப் படுகிறது. இவ்வளவு அக்கறையோடு இந்தச் செயலில் ஈடுபடுவதற்கு என்ன காரணம் என்றால் 21 ஆம் தேதி துணைத் தலைவர் தேர்தலுக்கு முன்பே நாமினேடட் மெம்பர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்துவிட வேண்டும். அந்தக் கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்றால்

"It is also clarified that if in any Panchayat Union, after the co-option/nomination of Members has been made, the very next meeting of the Council happens to be a meeting for the election of Vice-Chairman, even at such a meeting it will be open to any co-opted/nominated Member to take his oath of affirmation before the transaction of any other business at that meeting."

அதாவது நாமினேஷன் செய்யப்பட்ட உறுப்பினர்களும் அல்லது கோ-ஆப்ட் செய்யப்பட்ட உறுப்பினர்களும் — அதாவது உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் படுகிற உறுப்பினர்களும் — அறிவிக்கப்பட்ட உடனே அடுத்து நடக்கும் ஒன்றியக் கூட்டத்தில் அந்தக் கூட்டம் துணைத் தலைவரைத் தேர்ந்தெடுக்கப் படுகிற கூட்டமாக இருந்தாலும் கூட, அந்தக் கூட்டத்தில் மற்ற பிரச்சினை களை எடுத்துக் கொள்வதற்கு முன்பாகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் அவர்கள் வாக்களிக்க முடியும். ஒன்றியத் தலைவர் சொல்லுகிறார். "அந்தக் கடிதம் எனக்கு வரவில்லை. அது கமிஷனரிடம் வந்து விட்டதால், அது என்னைப் கட்டுப்படுத்தாது" என்று சொல்லுகிறார். உடனே கமிஷனர் என்ன செய்கிறார்? 18 ஆம் தேதியே ஒரு சுற்றறிக்கை அனுப்புகிறார். "திரு சேர்மென்" என்று இருந்தாலும் இந்தக்



கடிதம் கமிஷனரிடம் தரப்பட்டதால், இது என்னைக் கட்டுப்படுத்தாது" என்று ஒன்றியத் தலைவர் சொன்ன உடனே, ஆணையர் 18 ஆம் தேதியே ஒரு சுற்றறிக்கையை அனுப்புகிறார். அதாவது 21 ஆம் தேதி துணைத் தலைவர் தேர்தலுக்கு முன்பு நாமினேஷன் செய்யப்பட்ட இந்த 4 பேர்களும் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்வார்கள் என்று சொல்லுகிறார். அதாவது

திரு. அரு. நாராயணன்

திருமதி குப்பு

திருமதி பவுனு.

"மேற்கூறியவர்கள் 21—4—1986 அன்று ஒன்றியத் துணைத் தலைவர் தேர்தலுக்கு முன்பாகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்வார்கள். இதற்கு அனைவரும் வருகை தரும்படி கேட்டுக் கொள்கிறேன்." என்று கையொப்ப மிட்டு ஆணையர் தன் பெயரைப் போட்டிருக்கிறார். அதாவது ஊராட்சி ஒன்றியம் "திருவண்ணாமலை" என்று அதிலே டைப் அடிக்கப்பட்டிருக்கிறது. அதாவது துரிஞ்சாபுரம் பஞ்சாயத்து யூனியன் ஆணையர், திருவண்ணாமலை பஞ்சாயத்து யூனியன் என்று டைப் செய்யப்பட்ட இடத்தில் கையொப்பமிட்டு அனுப்புகிறார். தவறுதலாக அடித்து விட்டார்கள். பொதுவாக என்னுடைய தனிச் செயலாளரை அழைத்து பேராசிரியருக்கு ஒரு கடிதம் டைப் செய்யச் சொன்னால், அவர் தவறிப் போய் "கருணாநிதி" என்றுதான் டைப் செய்வார்.

(பிற்பகல் 1-20)

காரணம், பழக்க தோஷம். அதே போல இந்த ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம், திருவண்ணாமலை, என்று போட்டு இந்த அறிக்கையை அனுப்பு கிறார். இன்னும் வேடிக்கை என்னவென்றால், திருத்த அறிக்கையை மறுநாள், அதாவது 18—4—1986 அன்று அனுப்பியிருக்கிறார். துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலக, 18—4—1986 தேதிய சுற்றறிக்கை எண் 18/86 என்பதில் கடைசியில், "ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், திருவண்ணாமலை" என்பதற்குப் பதிலாக "ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், துரிஞ்சாபுரம்" என்று திருத்தி வாசித்துக்கொள்ளுமாறு தெரிவித்து திருத்த அறிக்கை அனுப்பப்படுகிறது. இவ்வளவிற்கும் பிறகு தி.மு.க. வேட்பாளர்களும், அ.தி.மு.க. வேட்பாளர்களும் போட்டியிடுகிறார்கள். முதலிலேயே சொன் னேன். 24, 24 என்று. இந்த நான்கு பேரும் சேர்க்கப்படுகிறார்கள். இதனால் எண்ணிக்கை 28 ஆகிறது. அ.தி.மு.க. தரப்பில் எண்ணிக்கை 28 ஆகிறது இவருக்கு 24 பேர். ஆனால் தேர்தல் நடந்து முடிந்த பிறகு, 3 வாக்குகள் செல்லாமல் போய் தி.மு.க. 27 வாக்குகளைப் பெற்று, அ.தி.மு.க. 22 வாக்கு களைப் பெறுகிறது, இவ்வளவு முயற்சிகளுக்குப் பிறகும்,

என்று தெரிந்த பிறகு, அஷ்டமி இருந்தாலும் பரவாயில்லை என்றும், 3 ஆம் தேதியே பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளலாம் என்றும், இப்படி 3 வித மான சுற்றறிக்கைகளை இந்த அரசாங்கத்தின் தலைமைச் செயலகத்திலிருந்து, இலாக்காவிலிருந்து அதிகாரிகளின் மேற்பார்வையில் வெளியிடப்படுகின்றன. அதுவரையில் அது எப்படி அவர்களுக்குத் தெரியாமல் போனது? 3 ஆம் தேதியோடு தனி அதிகாரிகளுடைய பதவிக் காலம் முடிவடைகிறது என்பது அவர்களுக்கு எப்படித் தெரியாமல் போனது? சரி, அப்படித் தெரிந்த பிறகு அந்த 'அஷ்டமி' என்ன ஆனது? 'அஷ்டமி'யில் பதவிப் பிரமாணம் எடுக்கக் கூடாது என்று தந்தி அனுப்பிய இந்த அரசு, அதே 'அஷ்டமி'யில் பதவிப் பொறுப்பை எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லும் அளவுக்கு ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது என்றால், அது விசித்திரமாக இல்லையா?

அடுத்து, துணைத் தலைவர் தேர்தல் நடத்துவதைப் பொறுத்தவரையில், நகராட்சியிலும், ஊராட்சி ஒன்றியத்திலும், 30 நாட்கள் அவகாசத்திற்குள் தேர்தல் நடத்த வேண்டுமென்று ஏற்கெனவே இருந்தது. அரசாங்கத்தி னுடைய திடீர் ஆணையால் அதை 90 நாட்கள் என்று விஸ்தரித்து, அந்தத் தேர்தலை 90 நாட்களுக்குள் நடத்தினால் போதுமென்று ஒரு அறிக்கை போகிறது. அதோடு கலெக்டர் ஆங்காங்குள்ள நிலைமைகளுக்கு ஏற்ப 4 பேர்களையோ, 5 பேர்களையோ, 6 பேர்களையோ அல்லது 2 பேர்களையோ நியமனம் செய்வார் என்று போகிறது. அது ஏற்கெனவே சட்டமாக்கப்பட்டு, அதை எல்லாக் கட்சிகளும் கூட "ஜனநாயக முறை" அல்ல என்று எதிர்த்தும் கூட, அரசு அதை அமல்படுத்த முயன்றபோது, அதற்கு நீதிமன்றத்தில் இடைக் காலத் தடை விதிக்கப்பட்டது. அது நீதிமன்ற விஷயமானதால், அதைப்பற்றி நான் விளக்கமாகப் பேச விரும்பவில்லை. அதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. அப்படி இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருந்த காலத் தில், ஜி.ஓ. 193, தேதி 17—3—1986 என்று ஒரு அரசாணை பிறப்பிக்கப்படு கிறது. அதில், துணைத் தலைவர் தேர்தலுக்குப் பின்தான் 'நாமினேஷன்' அல்லது 'கோ-ஆப்ஷன்' என்று இருந்த விதியை விலக்கிவிட்டு, துணைத் தலைவர் தேர்தலுக்கு முன்பே நியமனம் செய்ய வழிவகை செய்யப்படுகிறது. அந்த ஆணையில்,

"In the said rules, in rule 1, the expression 'after the election of the Vice-Chairman of the Panchayat Union Council" shall be omitted."

இதன்மூலம் என்ன ஆகிறதென்றால், துணைத் தலைவர் தேர்தலுக்குப் பின் தான் 'நாமினேஷன்' அல்லது 'கோ-ஆப்ஷன்' என்ற விதி விலக்கப்படுகிறது. காரணம் துணைத் தலைவர் தேர்தலுக்கு முன்பே 4 பேர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் நியமித்து விட்டால், துணைத் தலைவர் தேர்தலுக்கு அவர்



என்ற அந்த நோக்கத்தோடு இது
களுடைய வாக்குகளைப் பெற முடியும்
என்பதற்
புறம்பானது
செய்யப்பட்ட காரியம்; இது ஜனநாயகத்திற்குப்
காகத்தான் சுட்டிக் காட்டினேன். இப்படிப்பட்ட நிலையில் நீதிமன்றம் விதித்த
இடைக்காலத் தடை உத்தரவு நீக்கப்படுகிறது. அரசு சார்பிலே வாதாடி அது
நீக்கப்படுகிறது. அப்படி நீக்கப்பட்டதும் 7 ஆம் தேதி 'ஸ்டே' நீங்குகிறது.
9 ஆம் தேதி வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரே ஆணையில்
143 பேர்களை நியமனம் செய்கிறார். அந்த மாவட்டத்திலுள்ள ஒன்றியங்
களுக்கு ஒரே ஆணையில் 143 பேர்களை நியமனம் செய்கிறார். அதில்
துரிஞ்சாபுரம் என்ற ஒன்றியத்திற்கு 4 பேர்களை நியமனம் செய்கிறார்.

(பிற்பகல் 1-15)

ஏற்கெனவே அந்த ஒன்றியத்தின் தலைவர் ஏப்ரல் மாதம் 21 ஆம் தேதி
ஒன்றியத் துணைத் தலைவர் தேர்தல் நடக்கும் என்று அறிவித்திருக்கிறார்.
அந்த ஒன்றியத்தில் அதுவரையில் உள்ள உறுப்பினர்களின் பலம், சூழ்நிலை
என்னவென்றால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவாக 23 பேர்.
சேர்மெனுடைய நிலையையும் எண்ணிக்கையையும் சேர்த்தால் 24 பேர்.
அ.தி.மு.க.-வுக்கு ஆதரவாக 24 பேர்கள். 24, 24 என்று சமமாக இருக்கிறது.
இப்படி 24, 24 என்கிற நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவருடைய நியமனம்
காரணமாக 4 பேர்களை உடனடியாக துரிஞ்சாபுரம் யூனியனில் பதவிப்
பிரமாணம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கலெக்டரின்
நியமன ஆணை மார்ச் 11 ஆம் தேதி, அது துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்
தின் தலைவருக்குக் கிடைக்கிறது. துணைத் தலைவர் தேர்தல் 21 ஆம் தேதி
என்று அறிவித்தாகிவிட்டது. நாமினேட்ட் உறுப்பினர்கள் 4 பேர்களுடைய
பதவி ஏற்பை 23 ஆம் தேதி வைத்துக்கொள்ளலாம் என்று ஒன்றியத் தலைவர்
முடிவு செய்கிறார். நான் அதன் விவரத்திற்குள்ளே இப்போது நுழைய
விரும்பவில்லை. என்ன முரண்பாடுகள் இருக்கின்றன என்பதை மட்டும்
சொல்ல விரும்புகிறேன். அதற்குள் ஊராட்சி வளர்ச்சித் துறைச் செயலா
ளர் அவர்களிடமிருந்து "மோஸ்ட் இம்மீடியேட்" என்று குறிப்பிட்ட ஒரு
கடிதம் எல்லாக் கலெக்டர்களுக்கும், எல்லாக் கமிஷனர்களுக்கும் "திரு
சேர்மன்" என்ற வகையில் அனுப்பப்படுகிறது. அது ஜி.ஓ. அல்ல, அவர் ஒரு
கடிதம் அனுப்பியிருக்கிறார். ஏப்ரல் 17 ஆம் தேதி அந்தக் கடிதத்தில் செய
லாளர் கையொப்பமிட்டிருக்கிறார். ஒரு கடிதம் செயலாளரால் கையொப்ப
மிடப்பட்டு ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் போக 1, 2 நாளா
கும். அதிலும் துரிஞ்சாபுரம் போய்ச் சேர வேண்டும் என்றால், எத்தனை
நாளாகும் என்பது நமக்கே தெரியும். ஆனால் இந்தக் கடிதமோ துரிஞ்சா
புரம் பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு 18 ஆம் தேதியே போகிறது. திரு

அதைப் போலவே கலசப்பாக்கம் ஒன்றியத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் ஒருவரை நியமன உறுப்பினராக நியமித்திருக்கிறார். அவர் பெயர்—அணியாறு கிராமம் ஆறுமுகத்தின் மகன் கண்ணாயிரம் என்பது. இதிலே விசித்திரம், வேடிக்கை என்னவென்றால், அவருடைய பெயர் வாக்காளர் பட்டியலிலேயே கிடையாது. வாக்காளர் பட்டியலில் இல்லாத ஒருவருடைய பெயரை மாவட்ட ஆட்சித் தலைவர் கலசப்பாக்கம் ஒன்றியத்தில் நாமிநேட்டெட் மெம்பராக அறிவித்திருக்கிறார். நான் ஒரு முக்கியமான வேறுபாட்டை, பாரபட்சத்தை இந்த அவையிலே எடுத்து விளக்குவது என்னுடைய ஜனநாயகக் கடமையென்று கருதுகிறேன்.

தூரிஞ்சாபுரத்தில் நாமினேட்டெட் உறுப்பினரும், கோவாப்டெட் உறுப்பினரும் துணைத் தலைவர் தேர்தலுக்கு முன்பே பதவிப் பிரமாணம் செய்து ஓட்டுப் போட வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. ஆனால் முசிறியில் நடந்தது என்ன? முசிறி யூனியனில் கோட்ட வளர்ச்சி அலுவலகத்தின் சார்பாக 'தேர்தல் அவசரம்' தலைப்பிட்டு ஓர் அறிக்கை அனுப்பப்படுகிறது. அந்த அறிக்கையில், "மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமிக்கப்பட்டவர்களை ஒன்றியப் பெருந்தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவருவது ஆணையாளரின் பொறுப்பு. இவர்கள் துணைத் தலைவர் தேர்தலில் வாக்களிக்க உரிமையுண்டு" என்று தெரிவித்திருக்கிறார்கள். கலெக்டரால் நியமனம் செய்தவர்களுக்கு துணைத் தலைவர் தேர்தலில் வாக்களிக்க உரிமை உண்டு என்று சொல்லி, அதோடு நிறுத்தியிருந்தால், பரவாயில்லை. ஆனால் கடைசி பாராவில் "ஒன்றியக் குழுவின் மூலம் நியமனம் செய்யப்பட வேண்டிய பெண், மற்றும் ஆதிதிராவிட உறுப்பினர்கள், துணைத் தலைவர், பெருந்தலைவர் தேர்தல் முடிந்த பிறகுதான் நியமனம் செய்யப்பட வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனநாயக முறையில் கலெக்டரால் நியமனம் செய்யப்படுகிற உறுப்பினர்கள் துணைத் தலைவர் தேர்தலுக்கு முன்பே பதவிப் பிரமாணம் செய்யப்பட்டு, துணைத் தலைவர் தேர்தலில் அவர்கள் வாக்களிக்க வேண்டும். ஆனால் அதைவிட மேலாக ஒன்றியத்திலே உள்ள கவுன்சிலர்கள் எல்லாம் சேர்ந்து, நான்கைந்து பேரைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்றால், ஒன்றியக் குழுவின் மூலம் நியமனம் செய்யப்பட வேண்டிய பெண் மற்றும் ஆதி திராவிட உறுப்பினர்கள், துணைத் தலைவர், பெருந்தலைவர் தேர்தல் நடந்து முடிந்த பிறகு நியமனம் செய்யப்பட வேண்டும்" என்றும் "அதற்கு முழுப் பொறுப்பு ஆணையாளரைச் சேர்ந்தது" என்றும் முசிறி கோட்டாட்சி அலுவலர் சார்பிலே ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் நகல் மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சி அவர்களுக்கு தகவலுக்காக புனித் தனுப்பப்பட்டிருக்கிறது.





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இரண்டு மணிக்கு அவையை முடிக்கலாம் என்று நினைக்கிறேன். அமைச்சர் அவர்கள் எவ்வளவு நேரம் பேசுவதாக இருக்கிறார்கள் என்பது தெரிந்தால், அதற்கேற்ப காலத்தை வகுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஒரு மணி நேரமாவது வேண்டுமென்று நினைக்கிறேன். இருந்தாலும் எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் முடித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி:** நம்முடைய அமைச்சர் அவர்கள் பேரவையில் 26-3-1986 அன்று ஒரு விளக்கம் அளித்திருக்கிறார்கள். அதாவது துணைத் தலைவர் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை நகராட்சித் தலைவருக்கு, ஒன்றியப் பெருந்தலைவருக்கு உண்டு என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் இந்த அறிவிப்பு அரசாணையாக மாறிச் சென்றதா என்றால், இல்லை. அப்படி அரசாணையாகச் செல்லாத காரணத்தால், அதிகாரிகள், "அமைச்சர் அவையிலே எதை வேண்டுமானாலும் அறிவிப்பார்கள்"—இப்படியேதான் சொன்னார்

(பிற்பகல் 1-25)

கள்—"அது அரசாணையாக இந்தக் கைக்குக் கிடைக்காத வரையில் நாங்கள் அதை அமல் படுத்த இயலாது" என்று சொன்னார்கள். ஆனால் அந்த அமைச்சர் அவர்கள் உறுதிமொழியை நம்பி விருதுநகரில் 2-4-1986-ல் துணைத் தலைவர் தேர்தல் நடைபெற்றது. இங்கே 32 கவுன்சிலர்கள். தேர்தல் அன்று இரண்டு பேர்கள் அங்கே வரவில்லை. இந்த 32 கவுன்சிலர்களில் அங்கே நகராட்சித் தேர்தல் நடைபெற்றபோதுகூட கூட்டு ஒன்று. நகராட்சித் தேர்தல் நடந்து முடிந்த பிறகு இருந்த கூட்டு ஒன்று. இப்படி இரண்டு கூட்டு. அதுவும் அமைச்சர் அவர்களுக்குக்கூட தெரியும் என்று நினைக்கிறேன். இதிலே ஜனதா கட்சி 6, தி.மு.க. 2, இந்திரா காங்கிரஸ் 7. இந்த முறையில்கூட இப்படி ஒரு கூட்டு. அது ஏற்பட்டது. அ.தி.மு.க. 14 மற்றும் சுயேச்சை போட்டி காங்கிரஸ்காரர்கள் 3, இப்படி ஒரு நிலைமை. இந்த நிலைமையிலே துணைத் தலைவர் தேர்தல் நடைபெற்றது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் பேரவையிலே கொடுத்த உறுதிமொழியை நம்பி காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர் அவர்கள் வாக்களிக்க முயன்றபோது, அங்கே இருந்த உறுப்பினர்கள் எல்லாம், யார் யார், எந்தெந்தக் கட்சி உறுப்பினர்கள் என்ற விவரங்களை, வேறுபாடுகளை நான் சொல்ல விரும்பவில்லை, அங்கே இருந்த நிலைமைகளைத்தான் சொல்ல விரும்புகிறேன்.—"தலைவருக்கு வோட்டளிக்க உரிமை இல்லை" என்று சொன்னார்கள். தலைவர் அவர்கள் "வோட்டளிக்க உரிமை இருக்கிறது" என்றார்கள். "உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையிலே தெரிவித்திருக்கின்றார்கள்"

ன்று சொன்னார்கள். ஆனால் ரெக்கார்ட் கிடையாது என்று சொல்லி ட்டார்கள். உடனே நகராட்சித் தலைவர் டைரக்டர் ஆஃப் முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன், டி.எம்.ஏ. அவர்களுக்கு டிரங்க்கால் போட்டு மேலும் கேட்டார்கள். அவர்களாலே பதில் அளிக்க முடியவில்லை என்கின்றார். அதற்குப் பிறகு தலைவர் அவர்கள் தன்னுடைய முதல் வோட்டைக்கூட போடாமல் இருந்துவிட்டார்கள். எப்படியும் நடப்பது நடக்கட்டும் என்று, தேர்தல் நடந்தது. இருவருக்கும் 15, 15 வாக்குகள் கிடைத்தன. 15, 15 வாக்குகள் என்று கிடைத்தவுடன் அவர்களே குலுக்கல் போட்டார்கள். ஜனதா கட்சிக்காரர் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால், தலைவருக்கு முதல் வோட்டு மாத்திரமல்ல, இரண்டாவது வோட்டும் உண்டு என்று அறிக்கை வந்திருக் கிறது. அறிவித்தது ஏப்ரல் 1-ம் தேதி 1986-ல் வந்தது.

"For Commissioner and Secretary to Government" to "Municipal Commissioner" "through the Chairman" என்று வந்தது. ஆடம்கான் என்ற அதிகாரி கையெழுத்திட்டிருக்கின்றார்கள்.

தலைவர் முதல் வோட்டு போடுவது மாத்திரமல்ல, சமமான நிலை வருகிற நேரத்தில் 'கேஸ்டிங் வோட்'டைப் போட தலைவருக்கு உரிமையுண்டு என்று ஏப்ரல் 1 ஆம் தேதி ஒரு அறிக்கை போகிறது. ஒருவேளை ஏப்ரல் 1-ஆம் தேதியில் முட்டாளாக்குவதற்கு இந்த அறிக்கை அனுப்பியிருப்பதாகக்கூட யாரும் கருதிவிட்டார்களோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. அங்கே சீட்டுக் குலுக்கிப்போட்டு ஜனதாக் கட்சிக்காரர் துணைத் தலைவர் ஆகி விட்டார். இல்லாவிட்டால் என்னவாகும்? அந்தத் தகவல் சரியான நேரத்தில் அனுப்பாததால், அந்த சேர்மேன் முதல் வோட்டு போட்டு 16 ஆக ஆகாமல் சீட்டுக் குலுக்குகின்ற பிரச்சினை வந்திருக்கிறது. 15, 15 என்று இருக்கும் போது காஸ்டிங் வோட்டைப் போடலாம் என்று கேட்டார்கள். இந்த அறிக்கை முன்னாலேயே அனுப்பப்பட்டிருந்தால், இந்தத் தகராறு வந்திருக்காது. இப்படி ஒரு குழப்பமான சூழ்நிலை இருந்திருக்காது. இன்றைக்கு அப்படி பல நடந்திருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டினேனே அல்லாமல் வேறல்ல.

இப்போது அம்மையார் திருமதி ஜெயலட்சுமி அவர்கள்கூட குறிப்பிட்டார் கள். சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் பஞ்சாயத்து யூனியனுக்கு அல்லது நகராட்சி மன்றங்களுக்குச் செல்வது குறித்துச் சொன்னார்கள். ஒரே இடத்தில் சமமாக அமராமல் நாற்காலி போட்டு உட்கார வேண்டும் என்று கேட்டார்கள். எனக்கு அதெல்லாம் பெரிய பிரச்சினையாகத் தெரியவில்லை. ஆனால் சில இடங்களில் ஆளுங்கட்சியைச்



சேர்ந்த சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல் நேரத்திலே உள்ளே ந்தபோது, அப்போது சரிசமமாகப் போட இயலாது என்றுதான் சில இடங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. அதன் காரணமாக சில தகராறுகள், கலவரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தேர்தல் நேரத்திலே முன் வரிசையில்

(பிற்பகல் 1-30)

அமர்ந்து, பார்வையாளராக இருக்கலாமா? அவர்களும் கமிஷனர்களுக்குப் பக்கத்தில், தலைவர்களுக்குப் பக்கத்தில் அமரக்கூடாது என்று சொல்லப்பட் டிருக்கிறது. காஞ்சிபுரம் ஒன்றியத்தில் 23 பேர் தி.மு.க. உறுப்பினர்கள்; 17 பேர் அ.தி.மு.க. உறுப்பினர்கள். தேர்தல் நடந்து, தி.மு.க. ஜெயித்திருக் கிறது. அந்த ஒன்றியத்தில் மேடையில் அமர வேண்டுமென்று சட்டமன்றப் பேரவை உறுப்பினர் சொன்னதால், தலைவரும், கமிஷனரும் அவருக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். தேர்தல் தவிர மற்ற சமயங்களில் அமரலாம் என்று . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசிய பிறகு, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு மணி நேரம் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு விருப்ப மானால், மாலை 4 மணிக்கு பதிலுரையை வைத்துக்கொள்ளலாமா என்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, பிற்பகல் 2 மணிக்குள் முடித்துக்கொள்ளலாம். அந்தக் கமிஷனரும், தலைவரும் அவருக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். "தேர்தல் நேரத்திலே நீங்கள் வந்து அமர வேண்டாம், மற்ற நேரங்களில் வந்து அமரலாம்" என்று எழுதிக் கொடுக்கிறார்கள். மறுநாள், கமிஷனர், திரு. கிருஷ்ணமூர்த்தி ஐயங்கார் சஸ்பெண்ட் செய்யப்படுகிறார். ஏன் செய்யப்பட்டார், எதற்காகச் செய்யப் பட்டார் என்று சொல்லவில்லை. மறுநாள் இப்படி நடக்கிறது. மறுநாளே திரு. கிருஷ்ணமூர்த்தி ஐயங்கார் சஸ்பெண்ட் செய்யப்படுகிறார். எனவே தான், இப்படி இடையிலே 10 ஆண்டுக்காலம் மக்களுக்குப் போய்ச் சேர வேண்டிய நன்மைகள் போய்ச் சேராமல் அல்லது செலவழிக்கப்படுகிற பணம், திட்டமிடுகிற பணம், அரசு நல்ல நோக்கத்தோடு செலவழிக்க வேண்டு மென்று எண்ணி இருந்தாலும், அறிஞர் அண்ணா அவர்கள் ஐஸ் கட்டி, பனிக்கட்டி கை மாறினால் கடைசியில் கொஞ்சம்தான் மீதம் என்று சொன்னது போல, கிராம மக்களுக்கு, நகர மக்களுக்குப் போய்ச் சேர்ந் திருக்கிறது. யாரையும் குறிப்பிட்டு, குற்றம் சாட்ட நான் விரும்பவில்லை. பொதுவாக சமுதாயப் பணியிலே அக்கறையற்றவர்கள் சில பேர் அதிகாரி

## 3. அறிவிப்பு.

### 3—5—1986—நாளைய மேலவை நிகழ்ச்சிகளில் மாற்றம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 3—5—1986 அன்று மாலை ஆளுநர் அவர்கள் விருந்து அளிக்க உள்ளார்கள். எனவே 3—5—1986 அன்று மாலையில் நடைபெறுவதாக இருந்த கூட்டம் இல்லை. அப்போது எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த சாலைகளும், பாலங்களும் மற்றும் சாலைப் போக்குவரத்து குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு கைவிடப்படு கிறது. ஏற்கெனவே அறிவித்தவாறு தொழிலாளர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புமீது விவாதம் 3—5—1986 அன்று காலையில் நடைபெறும்.

## 3. அரசின் நிர்மாணம்—தொடர்ச்சி.

### சமுதாய நல வளர்ச்சி மற்றும் நகராட்சி நிர்வாகமும் மாநகராட்சிகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள்—தொடர்ச்சி.

* மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை கொள்கை விளக்கக் குறிப்புமீது மரியாதைக்குரிய உறுப் பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களை எடுத்துச் சொன்னதற்காக தங்கள் மூலமாக அவர்களுக்கெல்லாம் நான் என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் உரையைத் துவக்குவதற்கு முன்பு, தேர்தல் நடந்து முடிந்து உள்ளாட்சித் துறையில் பல்வேறு பொறுப்புகளுக்கு வந்திருக்கின்ற அனைத் துத் தலைவர்களுக்கும், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அனைத்துத் தலைவர்களுக்கும் நான் அரசு சார்பாக வாழ்த்தையும் மகிழ்ச்சி யையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறை என்பது வளர்ச்சித் துறையும் சேர்ந்து இணைக்கப் பட்டிருக்கும் ஒரு துறை. வளர்ச்சித் துறையும் அதோடு சேர்ந்து இணைக் கப்பட்டிருக்கிற காரணத்தினால், மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து நிறைவேற்றுகின்ற சில திட்டங்களும் இந்தத் துறையின்கீழ் கொண்டு வரப் பட்டிருக்கின்றன.



ஐ.ஆர்.டி.பி., ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி. இவைகள் எல்லாம் மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து நிறைவேற்றுகின்ற வளர்ச்சித் திட்டங்களாகும். வறுமைக் கோட்டுக்குக்கீழே இருக்கிறவர்களை மேலே கொண்டு வர வேண்டும் என்பதுதான் இந்தத் திட்டங்களின் அடிப்படை நோக்கம். இந்த நோக்கத்தை அனைவரும் பாராட்டுவார்கள், வாழ்த்துவார்கள் என்று நான் நம்புகிறேன். வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறவர்களைப்பற்றி எப்படி கணக்கெடுக்கிறார்கள் என்றால், மத்திய அரசு வைத்திருக்கிற வழி முறை களை வைத்துத்தான் வறுமைக் கோட்டுக்குக்கீழே இருக்கிறவர்களை எல்லாம் கணக்கிடுகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தக் கணக்கை வைத்துத்தான் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள், எத்தனை ஆண்டுகளுக்கு இவர்களுக்குப் பணம் கொடுத்து தொழில்களை நடத்த வாய்ப்பளித்து மேலே கொண்டுவர முடியும் என்பது போன்ற முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம். இந்த முயற்சிகளில் நாம் இதுவரை வெற்றி பெற்றிருக்கிறோமா என்று கேட்டால், மத்திய அரசு கொடுத்திருக்கிற சான்றிதழே சான்று தமிழகத்தைப் பொறுத்தவரையில் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெற்றிகரமாக இதனை நிறைவேற்றி யிருக்கிறோம் என்பதற்காக பாராட்டைப் பெற்றிருக்கிறோம். குறைகள் கொஞ்சம் இருக்கலாம். இல்லையென்று சொல்லவில்லை. அதற்காக நிறை களை இங்கே குறிப்பிடாமலிருப்பது தேவையில்லை, நிறைகளையும் இங்கே சுட்டிக்காட்டியிருக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெய லட்சுமி அவர்கள் பேசும்போது, ஐ.ஆர்.டி.பி. பணத்தை எடுத்து வேறு எது எதற்கோ செலவழிக்க வேண்டாம் என்றார்கள். அதைக் கேட்ட உடன் எனக்குப் பதட்டமே வந்து விட்டது.

(மாற்றுத் தலைவர் திருமதி வி. ஜெயலட்சுமி தலைமை)

உடனே அதுபற்றி அதிகாரிகளிடம் கேட்டேன். என்.ஆர்.இ.பி. திட்டத்தில் தான் குட்டைகளை சீர்செய்வதற்காக பணம் கொடுக்கிறோம். ஐ.ஆர்.டி.பி. பணத்தை வேறு காரியங்களுக்குச் செலவு செய்ய முடியாது. ஆகவே, தவறு எதுவும் நடக்கவில்லை. மேலும் பாலைக் குளிர்படுத்துவது போன்றவற்றுக் காக எந்தப் பணத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்றும் கேட்டார்கள். அதற்காக பயன்படுத்தப்படுகிறதா என்றால், ஆம், பயன்படுத்தப்படுகிறது. காரணம் மத்திய அரசும் அதை அனுமதித்திருக்கிறது. அதில் ஒன்றும் தவ றில்லை.

ளாகவும் இருக்கிறார்கள். ஆங்காங்கு இருக்கும் அரசியல்வாதிகள்கூட
எந்தக் காரணத்தில் ஈடுபட்டாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக
இருந்தாலும், அவர்கள் சமுதாயத்திற்கு, மக்களுக்கு துரோகம் செய்யும்
நிலையிலே நடந்து கொண்டிருக்கிறார்கள். ஒன்றை மாத்திரம் சொல்லி
நான் முடிக்கிறேன். உதாரணமாக அச்சிறுப்பாக்கத்தில் என்.ஆர்.இ.பி.
ஸ்கிம்—அம்மையார் அவர்கள்கூட குறிப்பிட்டார்கள்—அது மத்திய அரசும்,
மாநில அரசும் 50 சதவிகிதம், 50 சதவிகிதம் தருகின்ற ஒரு திட்டம். இந்தத்
திட்டத்திற்கு 1985-86-ல் 4 பள்ளிக்கூடம், 10 சத்துணவுக் கூடம், ஒரு
கிடங்கு, 26 கிராவல் சாலை இவற்றை அமைப்பதற்கு காண்ட்ராக்ட் தரப்
பட்டது. இப்படிப்பட்ட வேலைகளுக்கு முன்பணம் தருவதில்லை. ஆனால்
முன்பணமாக 1,73,000 ரூபாய்—கேஷ்—தரப்பட்டது. 52,000 ரூபாய்
மதிப்புள்ள அரிசி தரப்பட்டது. 1,56,500 ரூபாய் மதிப்புள்ள சிமெண்ட்
தரப்பட்டது. ஆக மொத்தம் 3,81,500 ரூபாய் முன்பணம் தரப்பட்டது.
ஆனால் எந்தப் பணியும் நடக்கவில்லை. காண்ட்ராக்டர் அந்தப் பணத்தை
1985-86-ல் வாங்கினார். எந்தப் பணியும் நடக்கவில்லை. திராவிட
முன்னேற்றக் கழகத் தலைவர், ஒன்றியப் பொறுப்பை ஏற்றவுடன்—எந்தத்
தலைவராக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகத்தைச்
சேர்ந்த தலைவர் என்று நான் பெருமைப்பட்டுச் சொல்லவில்லை
—ஒன்றியத்தின் பெருந் தலைவர் பொறுப்பு ஏற்றவுடன் இது
குறித்து ஆணையரைப் பல முறை கேட்டார், சரியான பதில
வரவில்லை. பிறகு டி.டி.சி. கூட்டத்தில், மாவட்ட வளர்ச்சிக் குழுக்
கூட்டத்தில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர், நண்பர் மதுராந்தகம்
ஆறுமுகம், எம்.எல்.ஏ., அவர்கள் இது குறித்து பேசியிருக்கிறார். அதற்குப்
பிறகு 14—3—1986-ல்—அதாவது கடந்த ஆண்டு நடைபெற்றதாகச்
சொல்லப்பட்ட வேலைக்கு, எந்த வேலையும் நடைபெறாத சூழ்நிலையில்.
மதுராந்தகம் ஆறுமுகம் டி.டி.சி. கூட்டத்தில் சுட்டிக் காட்டிய பிறகு
கலெக்டர் நடவடிக்கை எடுக்கிறார். அதிகாரி, மாற்றப்படுகிறார். அப்படி
மாற்றப்படும்போது, அதிகாரி என்ன செய்கிறார் என்றால், எம். புக்—மெஷர்
மெண்ட் புக்—இருக்கிறதே, அதில் 20 பக்கங்களை 30—5—1985 என்று
தேதியிட்டு வாங்கிக்கொண்டு, அதைக் எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்.
என்ன செய்து தப்பித்துக்கொள்ள முயற்சிப்பாரோ, எனக்குத் தெரியாது.
மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்படிப்பட்ட நிலைமைகள் பல்வேறு இடங்
களில் நடைபெறுவதை எண்ணிப் பார்த்து நான் யாரையும் குற்றம் சாட்டச்
சொல்கிறேன் என்று எண்ணாமல், பொது நன்மைக்காக அதிகாரிகளாக



இருந்தாலும், அரசியல்வாதிகளாக இருந்தாலும், அவர்கள் எந்தக் கட்சியைச்
சார்ந்தவர்களாக இருந்தாலும், நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குறிப்பிட
விரும்புகிறேன்.

இன்னும் ஒன்று. இந்த ஆண்டு உரையில், 1986-87 ஆம் ஆண்டு
உரையில், 6 ஆம் பக்கத்தில் மயிலாடுதுறையில் தேர்தல் நிறுத்தப்பட்டு,
மீண்டும் தடை நீக்கப்பட்டுவிட்டது, தடை நீக்கப்பட்டுவிட்ட காரணத்தால்,
உடனடியாகத் தேர்தல்கள் நடத்தப்படும் என்று நம்முடைய அமைச்சரவர்கள்
குறிப்பிட்டிருக்கிறார்கள். 6 ஆம் பக்கத்தில் அது இருக்கிறது. "மயிலாடு
துறை நகராட்சியில் நகர மன்றத் தலைவர் பதவிக்கும், நகரமன்ற உறுப்
பினர் பதவிக்கும் நீதிமன்றம் விதித்த தடை நீக்கப்பட்டதும் தேர்தல்
நடத்தப்படும்" என்று கூறியிருக்கிறார்கள். தடை 2—4—1986-ல் நீக்கப்
பட்டுவிட்டது. ஆனால் நிலை என்ன தெரியுமா? அங்கேயுள்ள ஸ்பெஷல்
ஆபிசருக்கு, கவுன்சிலைக் கூட்டு என்று சொல்லி, அறிவிப்பு போயிருக்கிறது.
என் 2 ஆம் தேதி தடை நீக்கப்பட்ட பிறகு, உடனடியாகத் தேர்தலை
மயிலாடுதுறையில் அறிவித்து, தேர்தலை நடத்தினால் என்ன? ஸ்பெஷல்

(பிற்பகல் 1-35)

ஆபிசர் கவுன்சிலைக் கட்ட வேண்டுமென்று ஆலோசனை கூறப்பட வேண்டிய
அவசியம் என் ஏற்பட்டது? மன்ற உறுப்பினர்கள் அனைவரும் எடுத்துக்
காட்டியது போல, அம்மையார் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல,
ஆளும் கட்சியினரும் எடுத்துக்காட்டியதைப் போல, சென்னை, கோவை
மற்றும் மதுரை ஆகிய மூன்று மாநகராட்சிகளுக்கும் விரைவிலே தேர்தலை
நடத்த வேண்டும். நிதியமைச்சர் அவர்கள் நகராட்சிகளுக்கான தேர்தல்
நடந்து முடிந்த பிறகுகூட, பாண்டிச்சேரியில் நிருபர்களிடம் பேசும்போது,
மாநகராட்சிகளினுடைய தேர்தல் விரைவில் நடக்கும் என்று சொல்லியிருக்
கிறார்கள். அதைப் பின்பற்றி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்
நினைத்தால், விரைவில் தேர்தலை நடத்த முடியும். உள்ளாட்சித் துறை
அமைச்சர் அவர்கள் இதிலும் சட்டத்தைத் திருத்துகிறேன் என்று சொல்
லமாட்டார் என்று நினைக்கிறேன். உள்ளாட்சி அமைப்புகளுக்
கான தேர்தலை அவர் அறிவிக்கலாம், தேர்தலை நடத்தி புகழ்பெற்ற நிலை
யில் இந்த மூன்று மாநகராட்சிகளுக்கான தேர்தலையும் விரைவில் நடத்தி
புகழ் பெறுக என்று கேட்டு அமைகிறேன்.

[திரு. ப. உ. சண்முகம்] [1986 ஏப்ரல் 26

(பிற்பகல் 1-40)

எனவே, ஐ.ஆர்.டி.பி. பணத்தை எடுத்து தவறாகப் பயன்படுத்தவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். வேறு பல மாநிலங்களில் வேறுபல தவறுகள் நடந்திருக்கலாம், அதைச் சுட்டிக் காட்டுவது பொருத்தமாக இருக்காது. இந்த அரசைப் பொறுத்தவரையில், தவறு நடக்கவில்லை என்பதை உறுதியாகக் கூறுகிறேன்.

உறுப்பினர் திரு. மாயவன் அவர்கள் ஆரம்பித்துப் பேசுகிற நேரத்தில், மாநகராட்சி சீர்கெட்டிருக்கிறது என்பதைப்பற்றிச் சொன்னார். நிதி யாதாரம் இல்லை, சுரண்டிவிட்டார்கள் என்று சொன்னார். நிதி ஆதாரம் இல்லை என்பதற்கும், சுரண்டிவிட்டார்கள் என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. நிதி சுரண்டப்பட்டது என்று பொதுவாகக் குற்றச்சாட்டு சொல்லிக் கொண்டிருப்பது சரியாகாது. ஊராட்சி; நகராட்சி, மாநகராட்சிகளில் சாப்பிட்டு விட்டார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் துறைக்கு நான் பொறுப்பேற்றுக் கொண்டவுடனேயே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பி, தன்னிறைவுத் திட்டம் போன்ற வளர்ச்சித் திட்டங்களின்கீழ் என்னென்ன வேலைகள், எந்த அளவுக்கு நடந்திருக்கின்றன என்ற விபரத்தைக் கேட்டு வாங்கி வைத்துக்கொண்டு, தவறுகள் நடக்கிற இடத்தில் நடவடிக்கை எடுக்கும் முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது. இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன்.

எவாலுவேஷன் கமிட்டி போடவேண்டுமென்று திருமதி ஜெயலட்சுமி அம்மாள் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவைக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். இந்த எவாலுவேஷன் பற்றி பொதுவான நடுவர் ஏஜென்சி வைத்து எல்லா மாவட்டங்களிலும் செய்ய வேண்டுமென்று சொல்லி, மாவட்ட வாரியாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். மறு முறை இந்த மானியக் கோரிக்கை வரும்போது, அந்த 'எவாலுவேஷன் ரிப்போர்ட்' மேஜையில் வைக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் பார்த்த பிறகு குற்றங்கள், குறைகள் இருந்தால் சொல்லலாம்.

திரு. மாயவன் அவர்கள் பேசும்போது, கழிப்பறை கட்டுவதைப் பற்றிச் சொன்னார்கள். 60 கழிப்பறைகள் ஏற்கெனவே கட்டலாமா என்று யோசித்து 42 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அப்படி கட்டுவதற்கு பொதுமக்கள் விடமாட்டேன் என்கிறார்கள். இதற்கு என்ன செய்வது?



1986 ஏப்ரல் 26] [திரு. ப. உ. சண்முகம்]

எப்படியோ 30, 32 இடங்களில் கட்ட ஆரம்பித்து, விரைவில் அந்த வேலைகள் முடியும் நிலையில் இருக்கின்றன. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது, கழிப்பறைகள் பற்றியும் வேறு பலவற்றைப் பற்றியும் சொன்னார். சென்ற ஆண்டு போடப்பட்ட அதே திட்டங்கள்தான் இந்த ஆண்டும் போடப்பட்டுள்ளன, முன்னேற்றம் இல்லை என்றார்கள். இதில் தவறாகக் கூட இருக்கலாம். ஒத்துக்கொள்கிறேன். அதற்குக் காரணம் சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட சோடியம் விளக்குகள், கழிப்பறைகள் போன்ற வேலைகளை டெண்டர் 'செட்டில்' ஆகாமல் இருந்ததாலும், வெள்ளச் சேதம் ஏற்பட்டதாலும், போன வருஷம் செய்ய முடியவில்லை. அதே வேலைகளைத் தான் தொடர்ந்து நடத்துவதற்குப் போட்டிருக்கிறோமே தவிர, சென்ற ஆண்டும் போட்டு இந்த ஆண்டும் போடவில்லை. இந்த ஆண்டு அந்த வேலைகள் முடியும். கழிப்பறைகள் கட்டிக்கொண்டிருக்கிறோம். விரைவில் முடிக்கப்பட்டுவிடும்.

சென்னையைப் பொறுத்தவரையில், எவ்வளவு சுத்தமாக்க முடியுமோ அவ்வளவு சுத்தமாக்கப்படும். சொத்து வரி உயர்வு பற்றிச் சொன்னார்கள். ஐந்தாண்டுக்கு ஒரு முறை வீட்டு வரியை மாற்றும் முறை இருக்கிறது. ஆனால் கடந்த 3 ஐந்தாண்டுகளாக அதை மாற்றவில்லை. சென்னையைப் பொறுத்தவரை, இந்தத் தேக்கநிலை இருக்கிறது. காரணம் அரசு அதற்காக ஒரு ஆணை போட்டிருக்கிறது. இப்போது அந்த ஆணை விலக்கிக் கொள்ளப்படுகிறது. விரைவில் மாநகராட்சிக்கு அந்த ஆணை செல்லும். அதன் மூலம் சொத்துக்களின் வரி மாற்றி அமைக்கப்படும். இதை நகராட்சித் தலைவர்கள் தலையில் வைக்க வேண்டுமென்று சொல்லவில்லை. புதிய நகராட்சிகளின் தேவைகளுக்கு எல்லா நிதியாதாரத்தையும் அரசே கொடுப்பது என்பது முடியாது. அவர்களுடைய நிதியை அவர்களாகவே சரிக்கட்டிக் கொள்ள வேண்டுமென்றுதான் மாநகராட்சிகளுக்கும் நகராட்சி களுக்கும் சொல்லப்பட்டிருக்கிறது. இதுகுறித்து உத்தரவு விரைவில் போடப்படும். இதன் காரணமாக நிதி பற்றிய சர்ச்சை தீரும் என்று நம்பு கிறேன்.

ஆசிரியர்களின் குறைகள்பற்றி திரு. மாயவன் சொன்னார். 1—6—1986 முதல் மாநகராட்சி ஆசிரியர்கள் அரசு ஆசிரியர்களாக ஆக்கப்படுகிறார்கள். அதில் சின்ன சிக்கல் இருக்கிறது. கொஞ்சம் பொறுத்திருக்க வேண்டும். இப்போது மாநகராட்சியில் இருக்கும் ஆசிரியர்கள் "நாங்கள் அரசு ஆசிரியர்களாக மாட்டோம்" என்ற கோரிக்கையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

[1986 ஏப்ரல் 26

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினைப் பற்றி ஏற்கெனவே பேசி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். சுடுகாட்டைச் சுற்றி வீடுகளைக் கட்டியது பொதுமக்கள் இல்லை, ஹவுசிங் போர்டு கட்டியிருக்கிறது. எம்.எம்.டி.ஏ. அப்ரூவலுடன் கட்டியிருக்கிறார்கள். பொதுமக்கள் கட்டவில்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** திருத்தத்திற்கு நன்றி. சுடுகாடு இருந்த இடத்தைச்சுற்றி வீடுகள் போய்விட்டன. சுடுகாட்டை மாற்றலாம் என்று நினைத்தாலும் மக்கள் ஐந்து கிலோ, ஆறு கிலோ மீட்டர் போக வேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே மக்கள் போக முடியாதென்று தடுக்கிறார்கள். இருந்தாலும் சுகாதாரக் கேடாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். மற்றொரு இடமிருந்தால் மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அந்த இடத்தை மறைப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று

(பிற்பகல் 1.50)

கேட்டிருக்கிறோம். இந்த நேரத்தில் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். மின்சாரத்தைக் கொண்டு சடலங்களை எரிப்பதற்காக ஒரு சுடுகாட்டை சென்னையில் நிறுவ வேண்டுமென்று அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே ஒன்றை அரசு நிறுவியது. சரியாக வேலை செய்யவில்லை. பெங்களூரில் இருப்பதைப்போல ஒன்றை இங்கும் நிறுவுவதற்காக அதிகாரிகளும் சென்று பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். அதற்கு ஏற்பாடும் செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது.

அடுத்து, நெல்லையிலே தூத்துக்குடி பாதாளச் சாக்கடையைப்பற்றி உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். தூத்துக்குடி பாதாளச் சாக்கடைத் திட்டம் குறித்து விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. அதற்கான வேலை நடந்து கொண்டிருக்கிறது. அந்த வேலை வெகு சீக்கிரத்தில் முடிந்துவிடும் என்று நான் உறுதியளிக்கிறேன். அதிகாரிகள் கொடுத்திருக்கிற குறிப்பை வைத்து தான் அப்படிச் சொல்கிறேன். பாதாளச் சாக்கடைத் திட்டம் என்னுடைய இலாக்காவைச் சார்ந்ததல்ல. அது குடிநீர் வடிகால் வாரியத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது 'சூவேஜ்' அதனோடு சேர்ந்திருக்கிறது. அது என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் அது வெகு சீக்கிரத்தில் முடியுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 26] [திரு. ப. உ. சண்முகம்]

திரு. மாசிலாமணி அவர்கள் பேசும்போது, சுடுகாட்டில் பணியாற்றும் வெட்டியான்கள் கூலி அதிகம் கேட்டு தொல்லை கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது உண்மைதான். அது பற்றி அரசுக்கும் புகார் வந்திருக்கிறது. உறுப்பினரவர்கள் புகார்களை எழுதிக் கொடுத்தால், அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசும்போது, பல்வேறு ஒற்றுமைகளை எடுத்துச் சொன்னார்கள். 1985-86 மற்றும் 1986-87 புத்தகங்களிலே விரைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். நான் துவக்கத்திலேயே சொன்னேன். 1952-ல் திரு. நேரு அவர்கள் பேசியதையும், 1935-ல் தந்தை பெரியார் அவர்கள் பேசியதையும் எடுத்துச் சொன்னார்கள். அந்தச் சிறப்பான எடுத்துக்காட்டுகளுக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்; பாராட்டுகிறேன். பாட்னா நகரில் இருப்பதுபோல, இப்போது இங்கு கழிப்பறைகள் கட்டிக் கொண்டு வருகிறோம். அவைகள் வெகு சீக்கிரத்தில் சென்னை மக்களுக்குப் பயன்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது சீக்கிரத்தில் நடக்கும்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

பல்வேறு முரண்பாடுகளை உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். தேர்தல் காலத்தில் நடைபெற்ற பலவிதயான அறிக்கைகளை எடுத்துக் காட்டினார்கள். குறிப்பிட்டு வந்த எந்த அறிக்கையையும் நான் மறுக்கவில்லை; எல்லா அறிக்கைகளும் அரசு தரப்பிலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கைகள்தான், நான் அவைகளை மறுக்கவில்லை; ஏற்றுக்கொள்கிறேன். வேறு பலவற்றைச் செய்தது, நான் கெட்ட நோக்கத்தோடல்ல, மணச்சநல்லூரில் சட்டமன்ற உறுப்பினரை பார்வையாளராகக்கூட உள்ளே விடமுடியாது என்று வெளியே அனுப்பிவிட்டார்கள். சில இடங்களிலே இப்படி நடக்கிற காரணத்தாலேதான் அவசர அவசரமாக சில ஆணைகள் போட வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டதே தவிர, வேறு ஒன்றுமல்ல. தலைவருக்கு வாக்கு உண்டா, இல்லையா என்ற பிரச்சினையைப்பற்றி சட்ட மன்றப்பேரவையில் உறுப்பினர்கள் கேட்டபோதே நான் சொன்னேன். தலைவருக்கு ஓட்டுரிமை உண்டு; நேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் ஓட்டுப் போடலாமென்று சொன்னேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசும்போது கூட, விருதுநகரில் இருக்கிற தலைவர் முதல் ஓட்டுக் கூட போடவில்லை என்று சொன்னார்கள். தேர்தல் காலத்திலே இரண்டாவது ஓட்டு கிடையாது. ஒரே ஒரு ஓட்டுத்தான் உண்டு. தேர்தல் காலத்தில் இரண்டாவது ஓட்டு கிடையாது. . .

[திரு. ப. உ. சண்முகம்] [1986 ஏப்ரல் 26

? (பிற்பகல் 1-45)

அதையும் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆனால் நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை. அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கேட்கிறார்கள். நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை. நகராட்சி ஆசிரியர்களை, மாநகராட்சி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக மாற்றும் முடிவை நாங்கள் மாற்றப் போவதில்லை. முடிவாகிவிட்டது.

திரு. அ. மாயவன்: மாற்றுத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாநகராட்சி ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாவதற்குப் பயப்படுகிறார்கள் என்று கூறினார்கள். அரசு ஊழியர்களாக ஆவதற்காக அவர்கள் பயப்படவில்லை. அதை வைத்துக் கொண்டு கோயம்பத்தூருக்கும், மதுரைக்கும் வேறு பல ஊர்களுக்கும் மாற்றல் செய்து விடுவார்களோ என்கிற அச்சத்தின் காரணமாக அவ்வாறு செய்திருக்கிறார்கள். மாற்றல் இருக்காது என்ற உறுதி அரசுத் தரப்பில் அளிக்கப்படுமானால், அந்த அச்சம் ஆசிரியர்கள் மத்தியில் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்துவிட்டோம். அவ்வாறு முடிவுக்கு வந்துவிட்ட காரணத்தினாலேயே யாருக்கும் தண்டனை விதிக்கப்பட மாட்டாது என்றும் உறுதி அளிக்கிறேன். அரசு ஊழியர்களைப் பாதுகாக்கின்ற முழுப் பொறுப்பையும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதில் அவர்கள் வழுவ மாட்டார்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன். நிச்சயமாகப் பாதுகாப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மாயவன் அவர்கள் பேசுகிறபோது, மண் வெட்டிய இடத்திலேயே மீண்டும் மண் வெட்டியதாகக் காட்டி, பில் போட்டிருக்கிறார்கள் என்று கூறினார். மாண்புமிகு உறுப்பினருக்கு ஏதோ விவரம் தெரிந்திருக்கிறது. அந்த இடத்தைக் குறிப்பிட்டு எழுதிக் கொடுத்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எழுதிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 26] [திரு. ப. உ. சண்முகம்]

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசுகிறபோது, வாக் காளர் பட்டியலில் உள்ள குறைபாடுகளைப்பற்றிச் சொன்னார்கள். வாக்காளர் பட்டியல்களைப் பொறுத்தவரை, ஏற்கெனவே உள்ளாட்சி மன்றங்களுக்குத் தனியாகவும், சட்டமன்ற நாடாளுமன்றத்திற்குத் தனியாகவும் இருக் கின்றன. அரசு இப்போது, இவ்வாறு தனியாகத் தேவை இல்லை; நாடாளு மன்ற-சட்டமன்றங்களுக்காக இருக்கிற பட்டியலை அப்படியே ஏற்றுக்கொண்டு அத்துடன் 18 வயதுக்கு மேலுள்ளவர்களின் பட்டியலையும் இணைத்துக் கொள்ளலாம் என்று முடிவு எடுத்திருக்கிறோம். எனவே இனி அந்த மாற்றம் வராது என்பதை நிச்சயமாகக் கூற முடியும்.

அடுத்து, நகராட்சி நிர்வாகத்தில் எம்.எல்.சி.-க்களுக்கு இடம் வேண்டும் என்று கேட்டார்கள். இப்போதுள்ள விதியின்படி, ஊராட்சி ஒன்றியங் களுக்குப் போவதற்கு இடமில்லை. புதிதாகத் திருத்தம் கொண்டுவர இருக் கிறோம். அதிலே சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், நகராட்சி எல்லைக்குள் வாழ்கின்ற மேலவை உறுப்பினர்களும் சென்று விவாதத்தில் கலந்துகொள்ளலாம். ஆனால் வாக்களிக்க உரிமை இல்லை. திருத்தம் விரைவிலே கொண்டு வரவிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் கும்பகோணம் நகராட்சிக் கடைகளைப்பற்றித் தகவல் சொன்னார்கள். இது குறித்துப் புகார் வந்திருக்கிறது. அதற்கு விளக்கம் கேட்டிருக்கிறோம். விளக்கம் வந்தவுடன் உரிய நடவடிக்கையை நிச்சயம் எடுப்போம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்களுக்கு உறுதியளிக்கிறேன்.

பழனியில் நகரமன்ற உறுப்பினர் தாக்கப்பட்டது குறித்துச் சொன் னார்கள். அதுகுறித்து விவரம் என்னிடம் இல்லை. அதன்மீது நிச்சயமாகக் காவல் துறையினர் நடவடிக்கை எடுப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் பேசும்போது, ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியதை மீண்டும் மாற்றிவிட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்கள். அரசு ஊழியர்களாக ஆக்கியதை மாற்ற மாட் டோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பெசண்ட் நகர் சுடுகாடுபற்றிச் சொன்னார்கள். அதைச் சுற்றி வீடுகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். நான் சென்ற முறையே இதைப் பற்றிச் சொன்னேன். சுடுகாட்டைச் சுற்றி வீடுகள் வந்துவிட்டன. வீடு களுக்கு மத்தியில் சுடுகாடு இருக்கிறது என்பதைப்போல் சொல்லக்கூடாது.

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நான் அதுகூடத் தெரியாமல் பேசுவதாக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசுவது கேலிக்கு வேண்டுமானால் இருக்கலாம். ஓட்டு என்று நான் குறிப்பிடுவது, முதலிலே ஓட்டு போடுவது, பிறகு சமமாக வந்த பிறகு 'கேஸ்டிங் ஓட்', அது இரண்டாவது ஓட்டு என்பதற்காகக் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அவருக்கு ஏதும் தெரியாது என்ற அளவுக்கு நான் சொல்லவில்லை. அந்த அளவுக்கு என்னை நான் முட்டாளாக்கிக் கொள்ள விரும்பவில்லை. அவருக்கு விவரம் தெரியும் என்பது எனக்குத் தெரியும். அவர் முதலமைச்சராக இருந்தவர்; அவருக்குத் தெரியாமல் இருக்க முடியாது. அதைத்தான் நான் மீண்டும் சொல்ல வந்தேன். தேர்தல் காலத்திலே 'காஸ்டிங் ஓட்' இல்லை என்றுதான் சொல்ல வந்தேன். அவர் இரண்டாவதாகப் படித்த ஜி.ஓ.-வில் வேறு ஒரு செக்ஷனைப் போட்டு, கவுன்சில் மீட்டிங்கில் ஏதேனும் பிரச்சினை வந்து, சம ஓட்டு வந்தால், அப்போது தான் 'காஸ்டிங் ஓட்டே' தவிர, தேர்தல் காலத்திலே 'காஸ்டிங் ஓட்' இல்லை என்றுதான் நான் சொல்ல வந்தேன். தெரியாத ஒன்றைச் சொல்லியிருப்பதாக தயவுசெய்து தவறாகக் கருத வேண்டாம். இதை யொன்றும் கிண்டலாகச் சொல்லவில்லை. இதில் கிண்டல் எதுவும் கிடையாது. இது தேவையற்ற ஒன்று.

மற்றொன்று, பல இடங்களில் பல காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. 50 லட்ச ரூபாய் எதற்காக ஒதுக்கப்பட்டது என்று கேட்டார்கள். முனிசிபல் எம்பிளாயீஸ்க்காக வீட்டுவசதி வாரியத்திற்காக வீடுகள் கட்டுவதற்குக் கொடுக்கப்பட்டது. அதற்குப் பணம் போதாது என்றார்கள். சென்ற ஆண்டு 1985-86-ல் 166 பேர்கள் தான் மனு கொடுத்தார்கள். அவர்கள் அத்தனை பேர்களுக்கும் அரசு பணம் கொடுத்திருக்கிறது. எனவே மேற்கொண்டு பணம் கொடுப்பதற்கு மனுக்கள் வந்தால், அதுபற்றிப் பரிசீலிக்கலாம். அப்போது வந்த மனுக்கள் 166. அவைகளுக்குக் கடன் கொடுத்தாகிவிட்டது.

அடுத்து, மதுரை மாநகராட்சி, டவுன் ஹால் சாலையில் தற்சமயம் வியாபாரம் செய்து கொண்டிருக்கும் வியாபாரிகளுக்கு வேறு இடம் கொடுத்தாகிவிட்டது. திரு. மாயவன் அவர்கள் குறிப்பிட்ட மதுரை மாநகராட்சி மீன் சந்தைகளுக்கு மாற்று இடம் கொடுத்து, மாற்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.



(பிற்பகல் 1-55)

பணம் கட்டியும்கூட அங்கே தெரு விளக்கு எரியவில்லை என்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் இதை முதலில் கிளப்பினார்கள். அது இப்போதும் இங்கே சொல்லப்பட்டது. ஒரு தெருவுக்கு மட்டும் போடப்பட்டது என்றார்கள். அதில் நிலைமை என்னவென்றால் அந்தத் தெருவுக்கான வளர்ச்சிக்கான பணத்தைக் கட்டாமல் இருந்தார்கள். எனவே தற்போது விளக்கு போடுவது பற்றி சீக்கிரமாக மாநகராட்சி நடவடிக்கை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தாரிஞ்சாபுரத்தில் நடைபெற்ற சம்பவத்தைப்பற்றி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மிகவும் விளக்கமாகச் சொன்னார்கள். நானும் கேட்டேன். இவ்வாறு அடிக்கடி அரசாங்கம் உத்தரவு போட வேண்டிய அவசியம் ஏன் வந்தது என்றால், உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் கடைசியாக நடந்து 13, 14 ஆண்டுகளாகிவிட்டன. அதிருஷ்டவசமாகவோ அல்லது துரதிருஷ்டவசமாகவோ 1970 ஆம் ஆண்டில் நானே உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்து இந்தத் தேர்தல்களை நடத்தியிருக்கிறேன். இப்போதும அந்தத் தேர்தல்களை நடத்துகிற வாய்ப்பை நான்தான் பெற்றிருக்கிறேன். இடையில் தேர்தல்களே நடக்காமல் போனதால், அதிகாரிகளிலேயே பலர் அரசாங்க உத்தரவுகளை எல்லாம் மறந்து விட்டார்கள். ஏற்கெனவே இருக்கிற சட்டத்திலேயே சேர்மனுக்கு ஓட்டு போடுகிற அதிகாரம் உண்டு என்று இருக்கிறது. நகராட்சிகளிலும் ஒன்றியங் களிலும் இருக்கிற அரசாங்க அதிகாரிகள் சட்டத்தைச் சரியாகப் பார்த்திருந்தால், இது அவர்களுக்கே தெரிந்திருக்கும். ஆனால் அவர்கள் பார்க்கத் தவறிவிட்டார்கள் என்றுதான் கருதுகிறேன்.

இங்கே நான் ஊர் பெயரையெல்லாம் விளக்கமாகச் சொல்லிக்கொண்டிருக்க விரும்பவில்லை. ஆனால் சில நியாயங்களை மட்டும் கேட்க விரும்புகிறேன். இப்படி நடக்கலாமா என்பதைப்பற்றி மட்டும் கேட்க விரும்புகிறேன். இதைக்கூட ஏதோ அரசியல் நோக்கத்திற்காகச் சொல்லவில்லை என்பதைத் துவக்கத்திலேயே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஊர் பெயரையும் சொல்வது தவறு இல்லை என்று சொல்கிறேன். செஞ்சியில் பேரூராட்சி மன்றம் இருக்கிறது. அதற்கு ஒரு தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். துணைத் தலைவருக்கான தேர்தல் நடக்கும் என்று அறிவித்தார் அவர். அப்படித் துணைத் தலைவருக்கான தேர்தலை

அறிவித்த பிறகு தேர்தல் நடக்கிறது. தேர்தலுக்கு என்று உள்ளே போனபோது, ஒருவருக்கு அவர் ஓட்டு கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறது, வாக்குச் சீட்டில் வயது குறிப்பிடப்படவில்லை. ஆகவே ஓட்டு கொடுக்க முடியாது என்று சொல்லி, ஒருவருக்கு மட்டும் அந்த பேரூராட்சித் தலைவர் மறுத்துவிடுகிறார். இப்படி மறுத்த உடனே அவரும் சும்மா இருக்கிறார். மற்றவர்கள் ஓட்டுப்போடுகிறார்கள். சம ஓட்டு வருகிறது. வாக்குச் சீட்டை எடுக்கிறார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. கன்னியப்பன் பெயரை படிக்கிறார். அவர் வெற்றி பெற்றார் என்று சொல்லிவிட்டு, பிறகு உள்ளே மாலை போட கூட்டம் வருகிறது. அங்கத்தினர்கள் கையெழுத்துப் போட்டுவிட்டு வெளியேறு கிறார்கள். இப்படிக் கையெழுத்து போட்டதற்கு மேலே தலைவர் என்ன எழுதுகிறார்? கன்னியப்பனுக்கு 6 ஓட்டு, ஏழுமலைக்கு 7 ஓட்டு. செல்லாத ஓட்டு மூன்று. ஆகவே ஏழுமலை வெற்றி பெற்றார் என்று எழுதியிருக்கிறார். எவ்வளவு பெரிய மோசடி நடக்கிறது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவ்வளவுதான். இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். நானும் எல்லோரிடமும் விளக்கம் கேட்டு வாங்கியிருக்கிறேன். எல்லா விளக்கத்தையும் இங்கே வைத்திருக் கிறேன். அந்தத் தலைவரிடம் இன்றைக்கு அரசு விளக்கம் கேட்டிருக்கிறது. பதில் வந்த பிறகு, நிச்சயமாகச் சொல்கிறேன், உரிய நடவடிக்கை எடுக்கப் படும்.

இன்னொரு ஊராட்சி ஒன்றியம் மோகனூர். இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிறது. துணைத் தலைவர் தேர்தல் நடக்கிறது. அப்படித் தேர்தல் நடக்கும்போது, ஓட்டுக்களை எண்ணுகிறார்கள். எண்ணிய பிறகு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நின்றவருக்கு 14 ஓட்டு. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நின்றவருக்கு 13 ஓட்டு உடனே என்ன செய்கிறார்? இந்த 14, 13 ஓட்டு களையும் கையில் எடுத்துக்கொண்டு, கூட்டம் குழப்பத்தில் முடிந்து விட்டது. தேர்தலை நிறுத்திவிட்டேன் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். நான் கேட்கிறேன், இது சரிதானா? இதை எப்படி நியாயம் என்று ஒப்புக் கொள்ள முடியும். இப்படி ஒன்றல்ல இரண்டல்ல, ஏராளமான இடங்களிலிருந்து புகார்கள் வருகின்றன.





ஸ்ரீரங்கபுரத்தில் சொன்னார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் களுக்கு வாக்குப்போடும் உரிமை உண்டு என்று ஏற்கெனவே சட்ட விதியில் போட்டிருக்கிறோம். அதிலே மாற்றமில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் களின் பெயர்ப் பட்டியலை எப்போதும் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்து விட்டாரோ அதற்குப் பிறகு அவர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்தாக வேண்டும். தலைவர்தான் பதவிப் பிரமாணம் செய்ய வேண்டும் என்று சட்டத்தில் விதியில்லை. சட்டத்தில் இருக்கிற விதி என்ன சொல்லுகிறது என்றால், அடுத்த கூட்டத்தில் அவர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்வார்கள். அப்படித்தான் இருக்கிறது அந்த விதியில். அடுத்த கூட்டம் என்பது சாதாரண கூட்டமாகவும் இருக்கலாம் அல்லது ஸ்பெஷல் கூட்டமாகவும் இருக்கலாம். எப்படி இருந்தாலும் பொருந்தும் என்பதுதான் அரசாங்கத்தின் விளக்கம். இதைத் தவிர வேறு விளக்கம் சொல்லவில்லை.

(பிற்பகல் 2-00)

அடுத்த கூட்டம் 23 ஆம் தேதி. துணைத்தலைவர் தேர்தலை வைத்து விட்டு 23 ஆம் தேதி பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறேன் என்று நோட்டீஸ் அனுப்புகிறார். 18 ஆம் தேதியே மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பிவிட்டார். அப்படி இருக்கும்போது, 23 ஆம் தேதி பதவிப் பிரமாணம் என்று சொல்வதற்குக் காரணம் என்ன? அவர் ஓட்டுப்போடக்கூடாது என்பதுதானே? அதற்கு அரசாங்கத்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஓட்டுப் போடுவதற்கு, பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வதற்கு அதிகாரம் என்று விளக்கம் சொல்வதைத் தவிர, வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை.

மூன்று ஓட்டுக்கள் செல்லாதது என்று சொன்னார்கள். அவருக்கு வந்த தகவல் சரியா அல்லது எனக்கு தகவல் சரியா என்பது ஒருவேளை நீதிமன்றத்திற்குப் போனால் தெரியுமோ என்னவோ தெரியவில்லை. அந்த மூன்று ஓட்டுக்கள் அ.தி.மு.க. விற்கு விழுந்த ஓட்டுக்கள். அதை எடுத்து வைத்துக்கொண்டு செல்லாது என்று சொல்லுகிறார்.

**டாக்டர் மு. கருணாநிதி:** அந்த மூன்று ஓட்டுக்களையும் சேர்த்தாலும் 95 தான் வருகிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அதை ஒத்துக்கொள்கிறேன். இருந்தாலும் ஓட்டு எண்ணுவதற்கு முன்பே மூன்று அ.தி.மு.க. ஓட்டுக்களை எடுத்து வைத்துக்கொண்டு இந்த ஓட்டுக்கள் செல்லாது என்று கூறுகிறார்.

**டாக்டர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, 24, 24 என்ற எண்ணிக்கை இருக்கும்போது, கலெக்டரால் நியமனம் செய்யப்பட்ட நான்கு பேர் உடனடியாக பதவிப் பிரமாணம் செய்ய வேண்டும் என்று சொல்லுவது 48 ஆக. ஆக்குவதற்குத்தானே அப்படியென்றால் ஜனநாயகம் எங்கே இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவர் அவர்களே, ஜனநாயகம் இருக்கிறதா, இல்லையா என்ற வாதத்திற்குள்ளே நான் போக விரும்பவில்லை. 1958 ஆம் ஆண்டு சட்டம் போட்டபோது, எந்த நோக்கத்தோடு போட்டிருக்கிறார்களோ அதே நோக்கத்தோடுதான் நாமும் போட்டோம். இந்தச் சட்டமன்றத்திலே விவாதம் நடந்து முடிந்த பிறகு தான் போட்டோம். மூன்று ஓட்டுக்களை கையில் வைத்துக் கொண்டு, ஓட்டுக்களை எண்ணி முடிப்பதற்குள் செல்லாது என்று சொன்னால் எப்படி ? தவறுகள் நடப்பதால்தான் டி.டி.ஓ. பார்வையாளராக இருக்கலாம் என்று ஆணை பிறப்பித்தோம். 'நான் தேர்தல் அதிகாரி, நான் சொல்லுகிறேன், செல்லாது, நீ போ' என்று சொல்லி மிச்சத்தை எண்ணியிருக்கிறார்கள். அதிக ஓட்டு இருப்பதால், அந்த மூன்று ஓட்டுகளையும் செல்லா என்று சொல்லுகிறார்கள். ஓட்டு செல்லுகிறதா, இல்லையா என்பது அல்ல. வெற்றியா, தோல்வியா என்பதல்ல. செல்லுபடியாகக்கூடிய ஓட்டுக்களை எடுத்து வைத்துக்கொண்டு. துவக்கத்திலேயே செல்லாது என்று சொல்ல வேண்டிய அவசியம் என்ன ? இந்த முறை சரிதானா ? இதை நியாயம் என்று யாராவது சொன்னால், அதை நான் ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இது போன்ற தவறுகள் நிறை நடக்கின்றன.

**டாக்டர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, நாமினேட், கோவாப்ட் செய்த இருவரையும் துணைத் தலைவர் தேர்தலுக்கு முன்பே பதவிப் பிரமாணம் செய்து வைக்க வேண்டும் என்று ஓர் உத்தரவு சுரிஞ்சாபுரத்திற்குச் செல்கிறது. ஆனால் முசிறியிலே ஒன்றியக் குழுவின் மூலமாக நியமனம் செய்யப்பட வேண்டிய உறுப்பினர்கள், துணைத் தலைவர், பெருந்தலைவர் தேர்தல் நடந்து முடிந்த பிறகுதான், பதவிப் பிரமாணம் செய்யப்பட வேண்டும் என்று உத்தரவு செல்கிறது. இதிலே என்ன நியாயம் இருக்கிற



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அந்த உத்தரவை யார் போட்டிருந்தாலும், அது தவறான உத்தரவு. அது அரசின் கவனத்திற்கு வந்துபோடப்பட்ட உத்தரவல்ல. துணைத் தலைவர் தேர்தலுக்குப் பிறகு கோவாப்ட் செய்யும் உறுப்பினர்களை கோவாப்ட் செய்யலாம் என்று சட்ட விதிகளில் இருந்தது. 'பிறகு' என்பதை எடுத்துவிட்டோம். 'பிறகு' என்பதை எடுத்துவிட்டு முதலிலே சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் உத்தரவு போடவில்லை. 'பிறகு' என்பதை எடுத்துவிட்டோம் அவ்வளவுதான். அப்போது சேர்க்க வேண்டும் என்று சொல்லவில்லை.

முப்பது நாளிலிருந்து 90 நாட்களுக்குள் என்று இருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். முப்பது நாட்களுக்குள் தேர்தல் நடத்துவதை யாரும் தடுக்கவில்லை. ஆனால் 30 நாட்களில் தேர்தலை நடத்த வேண்டும் என்று விதிகளில் போடவில்லை. அந்தக் கால நீட்டிப்பை அத்தியாவசியத்தையொட்டி கொடுத்தோம். அவசர அவசரமாக தேர்தல்நடந்து முடிந்த உடனே, முப்பது நாட்களுக்குள் என்றால், அவர்கள் உட்கார்ந்து பார்க்க நேரம் இருக்காது என்பதால், அதை மட்டும் நீட்டினோம். முப்பது நாளில் தேர்தலை வைக்க வேண்டும் என்றால், தாராளமாக வைத்திருக்கலாம். அரசாங்கம் அதிலே தலையிடவில்லை, குறுக்கிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போல செங்கற்பட்டு மாவட்டத்திலே உள்ள பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியத்திலேயும் இதே நிலைதான். நான்கு பேரை பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று சொன்னார்கள். ஆனால் நான்கு பேரும் பதவிப் பிரமாணம் எடுத்தாகிவிட்டது. அவர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்ட பிறகு, ஓட்டு கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். கடைசி வரையில் அவர்களுக்கு ஓட்டு கொடுக்கவில்லை. இதை எங்கே போய்ச் சொல்வது ? நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், கோவாப்ட் செய்த உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகிய அனைத்து உறுப்பினர்களுக்கும் வாக்களிக்க உரிமை உண்டு என்று நாம் சட்டத்திலே விதி செய்துவிட்ட பிறகு, அவர்களுக்கு ஓட்டு கொடுக்கமாட்டேன் என்று சொல்லுவது எந்தவிதத்திலே நியாயம்? இந்தத் தேர்தலை நடத்தும் அதிகாரப் பொறுப்பில் தலைவர்கள் இருப்பதால்தான், இந்தத் தவறுகள் நடக்கின்றனவோ என்று அரசு அஞ்சுகிறது. இதற்குண்டான திருத்தங்களை சட்டத்திலே கொண்டுவரலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால் இதிலே கோவாப்ஷன் வருகிறது. கோவாப்ஷன் என்பது

மக்களாட்சி முறையில் ஏற்றுக்கொள்ளக் கூடியது என்பதை ஒத்துக்
கொள்வார்கள் என்று நம்புகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களையும், பெண்
களையும் கோவாப்ட் செய்ய வேண்டும் என்று போட்டோம். அரசு
நினைத்திருந்தால், யாரை வேண்டுமானாலும் போடலாம் என்று
போட்டிருக்கலாம். இருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பெண்
களுக்கும் 'கோவாப்ட்' செய்யும் உரிமையைக் கொடுத்தோம். அதற்குப்
பிறகு எத்தனை இடங்களில் 'கோவாப்ட்' செய்வதற்கு ஊராட்சி
ஒன்றியங்கள் முன் வந்திருக்கின்றன என்று நான் கேட்கிறேன். 'கோவாப்ட்'
செய்யாத இடங்கள் நிறைய இருக்கின்றன. இதற்கு ஒரு சட்டவிதி போட

(பிற்பகல் 2-05)

வேண்டியிருக்கிறது. இத்தனை நாளைக்குள் நீ 'கோ-ஆப்ட்' செய்தா
வேண்டும் என்று சட்டத்திலே இல்லை. 'கோ-ஆப்ட்' செய்யவேண்டும் என்ற
இருக்கிறதே தவிர, இத்தனை நாளைக்குள் செய்ய வேண்டும் என்று இல்லை.
90 நாளைக்குள் செய்ய வேண்டும் என்று சட்டம் போட்டால், 90 நாளைக்குள்
செய்யாவிட்டால் என்ன? அடுத்து ஒரு சட்டம் போடவேண்டியிருக்கிறது.
இப்படி எதிர்பாராதவிதத்தில் ஒவ்வொரு சட்டத்தையும் திருத்தவேண்டி
யிருக்கின்றது. திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று அவசியம் ஏற்படுகின்ற
காரணத்தினால்தான், செய்கிறோம். எங்களுக்கு என்ன பைத்தியமா
பிடித்திருக்கின்றது? இல்லை. அங்கே இருக்கின்ற உறுப்பினர்கள்
அச்சரப்பாக்கத்திலே இருக்கின்றதைப் பற்றிச் சொன்னார்கள். அப்படி
எடுத்துச்சொல்வார்கள் என்றால், நான் உறுதி அளிக்கிறேன். நிச்சயமாக
நடவடிக்கை எடுப்போம். அரசு நடவடிக்கை எடுக்கும். யாராக இருந்தாலும்
சரி, எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி. அச்சரப்பாக்கத்திலே நடந்தது
பற்றி பேரவையிலேயே சொன்னேன். மேலவையிலேயும் சொல்கிறேன்,
உறுப்பினர் வெளியே போயிருக்கின்றார்கள். நான் பேரவையிலே நடந்த
விவாதத்தைப்பற்றிச் சொல்லவில்லை. அதற்கு நேரம் இல்லை. வேண்டாம்
என்று விட்டுவிடுகிறேன். எத்திராஜ் என்ற உறுப்பினரை வெளியே போ
என்று சொல்லியிருக்கின்றார்கள். வெளியிலே போய்விட்டார்கள் அவர்கள்.
வேறுசில இடங்களில் நாற்காலி ஒன்றாகப் போட்டுக்கொண்டு உட்காருவதா
என்று சொல்லி ஒரு பிரச்சினை வந்திருக்கிறது. சாதாரணமாக சட்டமன்ற
உறுப்பினர் பற்றிச் சொல்கிறேன். நான் சட்டமன்ற உறுப்பினராக 1957-ல்
இருந்தேன். அப்போது ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களுக்கு நானும்
போவதுண்டு. அப்போதிருந்த ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களுக்குப்
போகின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தலைவரும், அதிகாரிகளும்



உட்காரும் மேடையில்தான் நாற்காலி போட்டு உட்கார வைப்பார்களே தவிர, எதிர் வரிசையிலே பஞ்சாயத்துத் தலைவர் வரிசையிலே உட்கார வைப்பது கிடையாது. கூட்டத்திற்கு வந்தபோது, அப்படி உட்கார்ந்திருக்கின்றார்கள். நானும் இருந்திருக்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: இப்போதெல்லாம் பஞ்சாயத்துத் தேர்தல், நகராட்சித் தேர்தல் நடக்கும்போது, எம்.எல்.ஏ.-க்களுக்கு அப்படி இடம் கொடுத்து உட்காரவைக்கக்கூடாது என்று கமிஷனர் சொல்லியிருக்கின்றார்.

தேர்தல் நடக்கும்போது எம்.எல்.ஏ.-க்கள் அப்படிப்பட்ட இடத்திலே உட்கார வைக்கப்படக்கூடாது என்றுதான் கமிஷனர் சொல்லியிருப்பதாகத் தகவல் இருக்கிறதே அல்லாமல் அவர்கள் வரவே கூடாது, மற்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவே கூடாது என்று யாரும் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தேர்தல் நேரத்திலே போகலாமா? இதற்கு சட்டத்திலே இடம் இல்லை. இதற்கு ஒரு தனியான சட்டம் போட வேண்டும் என்ற அவசியம் வருகிறது. நான் தெரிவித்துக்கொள்கிறேன். சட்ட விதியிலே, போகலாம் என்றும் இல்லை, போகக்கூடாது என்றும் இல்லை.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: போகலாம் என்று இருந்தால்தான், பரவாயே தவிர, இல்லை என்று இருக்கும்போது, போனால் தகராறுதான் வரும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் திறமையுள்ள வழக்கறிஞர். விதியிருந்தால்தான், உள்ளே நுழையலாம். போகக்கூடாது என்று போட வேண்டிய அவசியம் இல்லை. அப்படிச் சொல்லாமலேயே அதுதான் அர்த்தம், அது நடந்தது என்று சொல்கிறேன். சட்டவிதியை நாம் அப்படி எடுத்துக் கொள்ளவில்லை, அப்படிப் போவதைத் தடுக்க முடியாது. தடுக்கவும் கூடாது. அதைத்தான் சொன்னேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. இப்படிச் சென்று விட்டால், அங்கே போய் கீழே உட்காருவதா, மேலே உட்காருவதா என்று கேட்கின்றார்கள். இது என்ன பெரிய பிரச்சினை? இது பிரச்சினையே அல்ல. சட்டமன்ற உறுப்பினர்கள், பேரவை உறுப்பினர்களாக இருந்தாலும் மேலவை உறுப்பினர்களாக இருந்தாலும், அவர்களுக்கு ஒரு மரியாதை வேண்டும். அவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும், உட்கார வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள், பேரவை, மேலவை உறுப்பினர்கள், நாடாளு [illegible] உறுப்பினர்கள் இவர்களுக்கெல்லாம் [illegible] ஒரு மரியாதை

[திரு. ப. உ. சண்முகம்] [1986 ஏப்ரல் 26

இருக்க வேண்டும். மேலே உட்கார வேண்டும் அல்லது கீழே உட்கார வேண்டும் என்று உத்தரவு போடவில்லை. பஞ்சாயத்துத் தலைவராக இருப்பவர் கீழே உட்காருகிறார்கள். கோ-ஆப்டட் மெம்பரும் கீழே உட்காருகிறார்கள், கலெக்டரால் நியமிக்கப்பட்டவர்கள் கீழே உட்காருகிறார்கள். மேடையிலே அதிகாரிகள், பி.டி.ஓ., என்ஜினியர் எல்லாம் உட்காருகின்றார்கள். நடுவிலே சேர்மேன் உட்காருகிறார். இன்னொரு பக்கத்திலே அவருக்கு ஒரு நாற்காலி போடுவதனால், அதனுடைய மரியாதை போய்விடாது. போடத்தான் வேண்டும். அந்த அளவுக்கு மரியாதை கொடுக்கத்தான் வேண்டும். யார் சொன்னாலும், நான் ஒத்துக் கொள்வதாக இல்லை. சட்டமன்ற உறுப்பினர்கள், பேரவை, மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வந்தால், அந்த மரியாதையைக் காட்டத்தான் வேண்டும் என்பதுதான் என்னுடைய வாதம். அதிலே மாற்றம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுதான் என்னுடைய வாதம். ஏப்ரல் 1 ஆம் தேதி கடிதம் அனுப்பியதுபற்றி சொன்னார்கள். அரசாங்கம் அனுப்பி யிருக்கிறது. மயிலாடுதுறை தேர்தல் பற்றிச் சொன்னார்கள். தேர்தல்

(பிற்பகல் 2-10)

நடைபெறுவதற்குள்ளாக ஏன் கூட்டத்தைக் கூட்டுகிறீர்கள் என்று கேட்டார்கள். கூட்டத்தைக் கூட்டுவது, அங்கே இருக்கும் அஜெண்டாவை, சப்ஜெக்ட்ஸ்-ஐ முடிக்கத்தான். அதற்காகத்தான் உத்தரவை அனுப்பினோம். அதுவும் 2 ஆம் தேதிக்கு முன்பே அந்த உத்தரவைப் போட வேண்டுமென்று சொன்னேன். ஒருவேளை 2 ஆம் தேதிக்குப் பிறகு அந்த உத்திரவு போயிற்றோ என்னவோ தெரியாது. ஹைக் கோர்ட் தீர்ப்புக்குப் பிறகு, அந்த உத்தரவு போனது எனக்குத் தெரியாது. யார் கூட்டத்தை நடத்துவது என்று கேட்டார்கள். ஆர்.ஐ.எல்.-ஐ விட்டு கூட்டத்தை நடத்தச் சொல்லுங்கள் என்று சொன்னேன். "ஆர்.ஐ.எல்.ஏ. கூட்டம் நடத்துவதாக இருந்தால் நடத்தச் சொல்லுங்கள். ஒருவேளை காலதாமதம் அதிகமாக ஆகிவிட்டால் ஆர்.ஐ.எல்.ஏ.-விடமிருந்து அந்த அதிகாரத்தை எடுத்துவிட்டு, துணைத் தலைவர் தேர்தலை நடத்தச் சொல்லுங்கள்" என்று சொல்லியிருக்கிறேன். துணைத் தலைவரிடத்தில் அதிகாரத்தைக் கொடுத்துவிட்டு, ஆர்.ஐ.எல்.ஏ.-வை விலகச் சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறேனே தவிர, அதிகாரிகளை வைத்துக்கொண்டு, காரியங்களை ஆற்ற வேண்டுமென்று எண்ணவில்லை.



1986 ஏப்ரல் 26]

டாக்டர் மு. கருணாநிதி: இப்போது 28 ஆம் தேதி, மயிலாடுதுறை ஸ்பெஷல் ஆபிசர் கூட்டம் போடுவதாக அறிவித்திருக்கிறார். அந்தக் கூட்டத்தில் துணைத் தலைவர் தேர்தல் நடைபெறுகிறதா அல்லது சாதாரண அஜெண்டா உள்ள கூட்டம்தானா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மன்னித்துக்கொள்ள வேண்டும், தலைவரவர்களே, உள்ளபடியே எனக்குத் தெரியாது. நான் சொல்லி யிருக்கிறேன், துணைத் தலைவர் தேர்தலை நடத்திவிட்டு, கூட்டத்தை நடத்துங்கள் என்று. நீதிமன்றத்தில் காலதாமதம் ஆகிறதென்றால், துணைத் தலைவர் தேர்தலை நடத்துங்கள் என்று சொன்னேன். நீதி மன்றத்தில் வழக்கு முடிந்துவிட்டது. இப்போது நேரடியாக தலைவர் தேர்தலை நடத்தலாம். எப்போது அதை வைத்துக்கொள்ளலாம் என்று அதிகாரிகளோடு கலந்து கொண்டிருக்கிறேன். அதிகாரிகளோடு கலந்து பேசி எவ்வளவு சீக்கிரத்தில் வைத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் வைத்து விடலாம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நீதிமன்றத்திலே வழக்கு முடிந்து நாட்கள் பல ஆகிவிட்டன. எனவே இந்தக் காலத்திற்குள்ளாக தேர்தல் நடக்கும் என்று வாக்குறுதியை அமைச்சரவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் ஒத்துக்கொள்கிறேன். சட்ட மன்றம் நடைபெறுகிற காரணத்தாலே, இப்போது அது சரிப்பட்டு வராது. சட்டமன்றம் முடிந்த பிறகுதான், தேர்தலை வைக்க வேண்டி வரும். தேதியை விரைவிலே அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்கும். இதிலே காலதாமதம் செய்வதற்கு அரசாங்கத்திற்கு ஒன்றும் அவசியமில்லை என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். கணேசன்: துணைத் தலைவரவர்களே, மன்னிக்க வேண்டுகிறேன். தீர்ப்பு வெளியாகியது 2 ஆம் தேதி. இன்றைக்கு என்ன தேதி என்று மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரியும். இந்த இடைக்காலத்தில், அதிகாரிகள் கூட்டத்தைக் கூட்டலாமென்று எல்லாம் உத்தரவிடுகிறோம். நான் கேட்டுக்கொள்வது, சட்டமன்றம் நடக்கிறபோது தேர்தலை நடத்த வேண்டியதில்லை. ஆனால் தேர்தல் தேதியை இப்போது குறிப்பிட்டுச் சொன்னால், சட்டமன்றம் முடிந்தவுடன் தேர்தலை வைக்கலாம். தேர்தல் தேதியைச் சொல்வதற்கும், சட்டமன்றம் நடப்பதற்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான் இங்கே சொல்லிய விளக்கங்களைத் தவிர, பல்வேறு உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ள கருத்துக் களுக்கு, விடுபட்டுள்ள கருத்துக்களுக்கு தனித் தனியே நான் விளக்கம் அளிக்கவில்லையே என்று தயவுசெய்து யாரும் கருதத் தேவையில்லை. காரணம் எல்லாக் கருத்துக்களும் அரசின் கவனத்தில் எடுத்துக்கொள்ளப் படும்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில், ஊராட்சி ஒன்றியங்களில் செய்யப்பட வேண்டிய நல்லபல காரியங்களைப் பொறுத்தவரையிலும், வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறவர்களை மேல் நிலைக்குக் கொண்டு வந்து முன்னேற்றுவதைப் பொறுத்தவரையிலும், அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் சேர்ந்து முனைப்புடன் செயல்பட ஒத்துழைப்பு தர வேண்டுமென்று கேட்டு, அனைத்து உறுப்பினர்களுக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து உரையை முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

**திருமதி வி. ஜெயலட்சுமி:** அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் அளித்த போது, ஐ.ஆர்.டி.பி.-க்காக ஒதுக்கப்பட்ட தொகையை தவறாகப் பயன் படுத்தவில்லை என்றார்கள். ஆனால் அரசின் ஆடிட் ரிப்போர்ட்டின் 60-வது பக்கத்தில் மூன்றாவது பாராவில் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள்.
"To sum up. . . . ."

"IRDP funds to the extent of Rs. 15.08 lakhs were misutilised for acquisition of data processing equipment and accessories which are retained by the Statistics Department for other uses."
என்று சொல்லிவிட்டு கடைசியிலே இன்னொன்றையும் சொல்லியிருக் கிறார்கள்.

"Contrary to the guidelines, subsidy aggregating to Rs. 4.98 lakhs was given from IRDP funds for infra-structure schemes—items not admissible under this programme. There was also irregular utilisation of infra-structure assistance of Rs. 2 lakhs given for opening a chilling centre and strengthening two other chilling centres for which a maximum subsidy of Rs. 2 lakhs each was already drawn."





அதோடு இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். அமைச்சர் பதில் அளிக்கும்போது ஈவாலுயேஷன் ரிப்போர்ட் சம்பந்தமாக ஒரு கமிட்டி யினுடைய ரிப்போர்ட் அவையில் வைக்கப்படும் என்று சொன்னார்கள். அதிலுள்ள ஏஜென்சிஸ் யார் யார்? ஏற்கெனவே டாக்டர் மால்கம் ஆதிசேஷையா தலைவராக இருக்கிறார். அதற்கு எம்.ஐ.டி.எஸ். என்று பெயர். இவர்கள் மூலமாக அந்த அறிக்கை தயாரிக்கப்படுகிறதா? அவர்தான் அறிக்கை வைக்கப்போகிறாரா? இன்னொன்றையும் அறிய விரும்புகிறேன். இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தேர்தல் காலத்திலே நடந்த இல்லுமுல்லுகள் பற்றியும், துணைத் தலைவர் தேர்தல் பற்றியும் சொன்னார்கள். நானும் இந்த அவையின் உறுப்பினர் என்கிற முறையில் ஒன்றை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசியது சம்பந்தமாக விளக்கமாகக் கேளுங்கள். எதிர்க்கட்சித் தலைவர் பேசியதற்கு அவர் விளக்கம் கேட்பார்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** எக்கானமிஸ்ட்ஸ் குரூப்ஸ் என்கிற ஏஜென்சியை வைத்துத்தான், எம்.ஐ.டி.எஸ்.ஐ வைத்துத்தான் இதைச் செய்கிறோம். தனியாக அல்ல. யார் யார் என்கிற பட்டியல் என்னிடம் இல்லை. அது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. அவர்களைத்தான் செய்யச் சொல்லியிருக்கிறோம். அரசுக்குச் சாதகமாகச் செய்யும்படி சொல்லி, அவர்களைப் போட்டுச் செய்யவேண்டிய அவசியம் ஒன்றும் அரசுக்கு இல்லை. நிச்சயமாக அவர்கள் தனியார்தான். அரசுக்கு சம்பந்தமே இல்லாதவர்கள். மேலும் மத்திய அரசுக்கும் இவர்களேதான் எவால்யுவேஷன் செய்கிறார்கள் என்று டி.ஆர்.டி. அவர்கள் குறிப்பு எழுதிக் கொடுத்திருக் கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போதாவது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி.எஸ். அவர்கள் இதை ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

ஐ.ஆர்.டி.பி.-யிலிருந்து இன்பிராஸ்ட்ரக்சருக்குப் பணம் கொடுக்கலா மென்று மத்திய அரசே ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆடிட் ரிப்போர்ட்டில் சொல்லியிருப்பதைப்பற்றியும் சொல்கிறேன். பாலைக் குளிரச் செய்வதற்கான இயந்திரத்திற்கும் பணம் கொடுக்கலாம், சப்சிடி கொடுக்கலாம் என்றுதான்

[திரு. ப. உ. சண்முகம்] [1986 ஏப்ரல் 26

(பிற்பகல் 2-20)

வந்திருக்கிறது. அப்படி வந்திருப்பதைப்பற்றி நான் விசாரிக்கிறேன். முழுத் தகவல் என்னிடத்தில் இல்லை. கொடுக்கலாம் என்று மத்திய அரசு ஒரு மாநாட்டில் முடிவு செய்திருக்கிறது.

திரு. சி. ஆர். கோலப்பா : துணைத் தலைவர் அவர்களே, ஒன்று, நான் உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் விவாதத்தில் பேசவே இல்லை. என்ன கேட்கப்போகின்றார்கள்? கேட்பதாக இருந்தால், தனியாக எழுதிக் கொடுக்கலாம்.

திரு. அ. மாயவன் : ஆசிரியர்களிடமிருந்தும் அரசு ஊழியர்களிடமிருந்தும் 'புரொபஷன் டாக்ஸ்' இப்போது வசூலிக்கப்படுகிறது. இந்த வருமானம் நகராட்சி மன்றங்களுக்குத்தான் செல்கின்றது. ஆகவே ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் இந்த பிரொபஷன் டாக்ஸிலிருந்து விதிவிலக்கு கொடுப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : புதுப் பிரச்சினையைக் கிளப்புகிறார்கள். முன்பு பேசியதற்குத்தான் விளக்கம் கேட்கலாம். (குறுக்கீடு) இதைப்பற்றிப் பேசினார்களா?

திரு. அ. மாயவன் : பேசினேன். இது சம்பந்தமான அறிவிப்பு ஏதாவது வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இப்போது இருக்கிற நிலையில் இந்த வரியை ரத்து செய்வதாக இல்லை.

திரு. எம். சுப்ரமணியம் : வறுமை ஒழிப்புத் திட்டம், ஊரக வளர்ச்சித் திட்டம் குறித்து எவாலுவேஷன் வேண்டுமென்று கேட்டபோது, மிகப் பெரிய பொருளாதார நிபுணர் டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்களைத் தலைவராகக் கொண்ட 'மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெவலப்மென்ட் ஸ்டடீஸ்' என்ற அமைப்புக்குக் கொடுக்கக்கூடாது என்று அரசாங்கத்திற்குக் கருத்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அவர்களைப் பயன்படுத்திக் கொள்வார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.



1986 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : என்னிடம் விபரம் இல்லை. இந்திய அரசாங்கத்துக்கு அத்தகைய அமைப்புதான் இதுபோன்ற வேலைகளைச் செய்கிறது. அத்தகைய எக்காமைனேட்டிவ் குரூப்படம்தான் தருகிறோம், அதில் யார் இருக்கிறார்கள், யார் இல்லை என்று தெரியவில்லை.

அதிகாரிகளைப்பற்றிச் சொன்னார்கள். தவறு செய்யும் அதிகாரிகளை மூடி மறைக்கமாட்டோம். அரசு தவறு செய்தால், அதைச் சுட்டிக்காட்டினால், அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்று, மேலவை மீண்டும் 28—4—1986 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 2-22)

4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

208. வருவாய்த் துறையின் 13—4—1986 ஆம் நாளிட்ட எஸ்.ஆர்.ஓ.எ.—2522/1960 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 2—12—1985 ஆம் நாளிட்ட 1082 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

* 153. மருத்துவம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

* 154. மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

* 155. இந்திய முறை மருத்துவம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1986-87 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

[1986 ஏப்ரல் 26

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** துணைத் தலைவரவர்களே, இந்த அவையினுடைய மரபு, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசிய பிறகு, அதற்கு பதிலுரைப்பது மாண்புமிகு அமைச்சரவர்கள். அமைச்சரவர்களுக்கு பதிலளிப்பது எதிர்க் கட்சித் தலைவர். அப்படி இல்லாமல், அந்தந்தக் கட்சிகளின் உறுப்பினர்கள் பேச ஆரம்பித்தால், அதைப்போல இந்தப் பக்கமும் உறுப்பினர்கள் அமைச்சர்களுக்கு ஆதரவாகப் பேச ஆரம்பிக்க வழி வகுக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அமைச்சரவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது, யாரும் விளக்கம் கேட்கலாம். ஆகவே அவர் விளக்கம் கேட்கிறார். அப்படிக் கேட்கும்போது, அமைச்சர் அதற்கு அனுமதிக்கவில்லை என்று சொல்லுவதற்கு அமைச்சருக்கு உரிமை இருக்கிறது. நான் மணியடித்து, ஒருவர் பேச இருக்கிறார், அதாவது திரு. சீத்தாபதி பேச இருக்கிறார் என்று சொன்னால் அதற்கு அமைச்சர் அவர்கள் அமர்ந்தால், திரு. சீத்தாபதியை நான் அனுமதிப்பேன். அமைச்சர் அமராமல், 'not-yielding' என்று சொன்னால், உறுப்பினரை உட்காரச் சொல்வேன். அதுதான் என்னுடைய கடமை. இதற்கு முன்னாலேயே சொன்னேன், யாராவது உறுப்பினர் விளக்கம் கேட்டால், அமைச்சரவர்கள் பதில் சொல்லலாம்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சீத்தாபதியும், திரு. எஸ். ஆர். இராதாவும் எழுந்து நின்றார்கள்.)

இப்போது யாருக்காக அமைச்சர் அமர்ந்திருக்கிறார் என்று தெரியாது. இரண்டு பேர் நின்றுகொண்டிருக்கிறார்கள். திரு. இராதா அவர்களும் நின்றுகொண்டிருக்கிறார்கள்; திரு. சீத்தாபதி அவர்களும் நின்றுகொண்டிருக்கிறார்கள். யாருக்காக அமைச்சர் அமர்ந்திருக்கிறார் என்று தெரியவில்லை. சட்டசபை சம்பிரதாயப்படி ஒருவர்தான் நிற்கலாம்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் கொடுத்த ரூலிங்படிதான் கேட்கிறேன். நான் வேறு எதுவும் கேட்கவில்லை. உங்கள் உத்திரவுதான் எங்களுக்கு மேலான உத்திரவு. அமைச்சரை அமருங்கள் என்று சொல்ல தங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆகையாலே, அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் கேட்கிறேன்.



1986 ஏப்ரல் 26]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் பேசும்போது, உறுப்பினர்கள் குறுக்கிட்டு, விளக்கம் கேட்பதற்கு அனுமதிப்பது இயல்பு. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எழுந்து கேட்கிறார்கள். அமைச்சர், அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்று அமருகிறார்கள். இன்னொரு உறுப்பினர் எழுந்து கேட்கிறார். அதற்கும் அமைச்சர் அனுமதிக்கிறார். அமைச்சர் அனுமதிக்கும்போது நான் என்ன செய்ய முடியும்? நான் அனுமதிக்கத் தயாராக இல்லை என்று அமைச்சரிடம் சொல்ல முடியாது. நான் குறிப்பாகச் சொல்லலாம். ஒருவர் பேசும்போது குறுக்கிடாதீர்கள், இடையூறு செய்யாதீர்கள், என்று அமைச்சராக இருந்தாலும், உறுப்பினராக இருந்தாலும் சொல்லலாம். ஆனால் உறுப்பினர் எழுந்து பேசும்போது, அவர் அமர்ந்துகொண்டு, அதைக் கேட்கிறேன் என்று சொல்லும்போது, நான் கேட்கக்கூடாது என்று எப்படிச் சொல்ல முடியும்?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பேசுகிறபோது, குறிப்பாக எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கிறவர்கள் சில சந்தேகங்களை எழுப்புவது மரபாக இருக்கிறது. அப்படி எதிர்க் கட்சித் தலைவர் கேட்கிறார், இல்லை என்றால் பக்கத்திலே இருக்கிற துணைத் தலைவர் கேட்கிறார் அல்லது இவர்கள் இருவரையும் விட்டுவிட்டு, பின்னாலே இருக்கிற உறுப்பினர்களிலே ஒருவர் கேட்கிறார் என்றால், அதை அமைச்சரவர்கள் ஏற்றுக்கொண்டால் பதில் அளிக்கலாம்; இல்லை என்றால் அவர்கள் மறுத்துவிடலாம் என்ற உரிமை அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. குறிப்பாக ஆளுந்தரப்பிலிருந்து அமைச்சரிடம் கேட்டு நெருக்கிடும் அவசியம் அடிக்கடி நிகழாது என்பது மரபு. ஆகவே நேரத்தை நாம் வீணாக எடுத்துக் கொண்டிருக்க வேண்டாம்.

(பிற்பகல் 2-15)

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** பொதுவாக கொள்கைக் குறிப்பின் மீது விவாதம் நடைபெறும்போது, பேசுகிற உறுப்பினர்களை விளக்கம் கேட்க அனுமதிப்பதுதான் மரபு. எல்லோரும் விளக்கம் கேட்டுக்கொண்டிருந்தால், அதற்கு முடிவே கிடையாது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்த பிறகு ஏற்கெனவே பேசிய உறுப்பினர்கள் விளக்கம் கேட்கலாம். ஆனால் அமைச்சர் பேசிக் கொண்டிருக்கும்போது யாராவது விளக்கம் கேட்டாலும், அதற்கு விளக்கம் கொடுக்கக் கூடாது என்று நான் சொல்ல முடியாது.

கிராமப்புறங்களில் தக்க வேலைவாய்ப்பு அளிக்கும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகியவை தொடர்ந்து நிறைவேற்றப்படும். சிறிய முறையில் திட்டமிடப்பட்டு, குறைபாடுகள் ஏற்படா வண்ணம் கண்காணிக்கப்பட்டு, முனைப்புடன் சிறந்த முறையில் தொடர்ந்து நிறைவேற்றப்படும். இத்திட்டங்களினால் பயன் பெறுவோர், அரசு அளிக்கும உதவியை முழுமையாகப் பயன் படுத்தி வறுமையை உதறி வளமையை அடைய வழி ஏற்படுத்திக் கொடுக்கப்படும். தனி மனிதர்களின் வாழ்வு மேம்பாட்டிற்கென இப்போது அமைந்துள்ள ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு இனி ஆழத்தோடு மட்டுமின்றி சற்று அகலமாகவும் அடித்தளமிடப்படும். அதாவது தனி மனித கோட்பாட்டோடு, தேவைப்படும்போதெல்லாம், பல பகுதிகளுக்கு அல்லது பலருக்கு மொத்தமாக உதவி அளிக்கப்பட்டு, இத்திட்டத்தின் திறமை மேம்படுத்தப்படும். வேளாண்மை மற்றும் கிராமப்புற முன்னேற்றத்திற்கு ஏற்ற வகையிலும் அதன் மூலம் சிறுதொழில் மேம்பாடு ஏற்படும் வகையில், இத்திட்டங்கள் ஒருங்கிணைக்கப்படும். வேளாண்மை மற்றும் விவசாய வேலை அல்லாத இதர வேளாண்மை தொடர்பான கிராமப்புற தொழில்களையும் முன்னேற்றித்தான் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்கியாகவேண்டும். வேலைவாய்ப்பு அளிக்கும திட்டங்களின் முழுப்பலனையும் பெற வேண்டுமென்றால், மக்களின் அறிவுத் திறமையைக் குறிப்பிடத் தக்க வகையில் முன்னேற்ற சிறிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வாழ்க்கைக்கு, கல்வி உதவுகின்ற வகையிலும், புதுப்புது அறிவுத்திறமைகளை மக்கள் அடைகின்ற வகையிலும் அந்த முயற்சிகள் அமைய வேண்டும்.

இவ்வாறாக உணவு, வேலைவாய்ப்பு, உற்பத்திப் பெருக்கம் ஆகிய மூன்றும் தான் தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியவைகளாக உள்ளன. இத்தகைய முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்றால் வேளாண்மையை அதிகரித்தல், வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல், உற்பத்தித் திறனையும், உற்பத்தி செய்யப்படுபவைகளின் தரத்தினையும் மேம்படுத்துதல், தொழில்களில் தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல், குறைந்த முதலீடும் நிறைந்த உழைப்பும், தேவையான தொழில்களை மேம்படுத்துதல், முதலீடு செய்யும்போது அதிகமாகத் தேவைப்படும் தொழில் இனங்களுக்கு முன்னுரிமை அளித்தல், வாழ்க்கை தரத்தை உயர்த்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், ஆகியவைகளை நாம் கவனத்தில்—கருத்தில்—கொள்ள வேண்டும்.





சுருக்கமாகச் சொன்னால், இனிவரும் ஆண்டுகளில் ஊரக வளர்ச்சித் துறையின் பாபெரும் கொள்கைகளும் குறிக்கோள்களும் கீழ்க்கண்டவாறு அமையும் :—

(அ) கிராமப்புறங்களின் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களைத் தேர்ந்தெடுத்து அரசு மான்யம் மற்றும் வங்கிக் கடன்களோடு இணைந்த உதவிகளை மொத்தமாக அளித்து—வறுமைக் கோடுகளை அழித்து—அக் கோடுகளின் கேடுகளில் இருந்து விடுவித்தல்.

(ஆ) நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு மட்டுமின்றி, வேலை இல்லாதோர்க்கும், போதிய அளவு வேலை இல்லாதவர்க்கும்—ஆண்களுக்கு மட்டுமின்றி பெண்களுக்கும் போதிய வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்—சமுதாயப் பணிகள் மூலம் ஏற்படுத்திக் கொடுத்தல்.

(இ) கிராம சமுதாய அமைப்பைப் பலப்படுத்தும் வகையில், நிரந்தரமான உறுதியான சமுதாயச் சொத்துக்களை உருவாக்குதல், அதன் மூலம் கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்தி, கிராமப்புற ஏழைகளின் வருவாயைச் சீராக உயர்த்துதல்.

(ஈ) மாற்று எரிபொருளைக் கண்டுபிடித்து அதை மேம்படுத்த இந்திய நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் முயற்சியான சாண எரிவாயு அமைப்புகளை தனிப்பட்ட இல்லங்களில் மட்டுமின்றி சமுதாயம் முழுவதும் பயன்படுத்தும் வகையில் சமுதாய எரிவாயு அமைப்புகளையும் புகையில்லா அடுப்புகளையும் நிறுவுதல்.

(உ) நீர்ப்பாசன வசதிக்காக கிணறுகள் தோண்டுதல், தற்போதுள்ள கிணறுகளைப் பழுதுபார்த்தல், நீர் இறைக்கும் எந்திரங்கள் நிறுவுதல், மண்வள மேம்பாடு போன்றவற்றிற்கு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மானியத்தோடு கூடிய கடன் வசதி அளித்தல்.

(ஊ) இந்தியா முழுமையிலும் நிறைவேற்றப்படும் சமூகக் காடுகள் அமைக்கும் தீவிரத் திட்டத்தில் தமிழகத்தின் பங்காக—ஒவ்வொரு வட்டாரத்திலும் இயன்ற அளவு எண்ணற்ற ஹெக்டேர் நிலப்பரப்பில் சமூகக் காடுகளை வளர்த்தல்—அதாவது, இயற்கை சூழலைப் பாதுகாத்தல், அது கெட்டுவிடாதபடி சமநிலையில் வைத்திருத்தல் ஆகிய இரு நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் சமூகக் காடுகள் அமைத்தல்.

ஆகிய இவைகளே ஊரக வளர்ச்சித் துறையின் உன்னதக் குறிக்கோள்கள்.

வளர்ச்சி, சமத்துவம், சமுதாய நீதி, தன்னம்பிக்கை, தளராத திறமை, மற்றும் உற்பத்தித் திறன் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கொள்கைகளும் கோட்பாடுகளும் தொடர்ந்து இருக்கும். சமூக நீதியை நிலைநாட்ட மேற்

*156. சுற்றுப்புறத் தூய்மைக் கட்டுப்பாடு மீதான கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

157. 1986-87 ஆம் ஆண்டில் மருத்துவப் பணி மற்றும் குடும்ப நலன் பற்றிய செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

*158. 1986-87 ஆம் ஆண்டில் மருத்துவக் கல்வி பற்றிய செயல் வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

*159. 1986-87 ஆம் ஆண்டில் இந்திய முறை மருத்துவம் பற்றிய செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

*160. 1986-87 ஆம் ஆண்டில் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்து மற்றும் மருந்து பொருட்கள் கட்டுப்பாட்டு நிர்வாகம் பற்றிய செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

† 161. ஊரக வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய சாதனை அறிக்கை 1985—86 (தமிழ்).

---

* 25—4—1986 அன்று மேலவை முன் வைக்கப்பட்டது.

† 25—4—1986 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.



## இணைப்பு

559 ஆம் பக்கத்தில் இனம் 2-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### 2. சமுதாய வளர்ச்சி.

வறுமைக் கோட்டிற்குக் கீழே உழலும் மக்கள் பத்து சதவிகிதத்திற்கும் குறைவாக உள்ளனர் என்பதை 1994-95 ஆம் ஆண்டில் உறுதியோடு கூறத்தக்க வகையில், தனக்கென ஒரு தனி இலட்சியத்தைக் கொண்டது தான் "ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம்". தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஆறாவது திட்டத் தொடக்கத்தில் மொத்தம் 52.8 சதவிகித மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்தனர். ஆனால் 1984-85 ஆம் ஆண்டில்—அதாவது ஆறாவது திட்ட இறுதியில், இந்த சதவிகிதம் 39.6 ஆகக் குறைந்துவிட்டது. ஆறாவது திட்ட காலத்தில் பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களை விரிவாகவும், விரைவாகவும், முனைப்புடனும் அரசு செயல்படுத்தியதன் விளைவே இது. 1989-90 ஆம் ஆண்டுக்குள்—அதாவது ஏழாவது திட்டத்தின் இறுதிக்குள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் சதவிகிதத்தை 23 ஆகக் குறைப்பது மட்டுமே நமது இலட்சியமல்ல. எட்டாவது திட்ட இறுதிக்குள் அதாவது 1994-95 ஆம் ஆண்டுக்குள் இந்த சதவிகிதத்தைப் பத்துக்கும் கீழ் கொண்டுவர வேண்டும் என்பதே நமது மாபெரும் இலட்சியம். இந்த இரு இலட்சியங்களை நிறைவேற்ற இந்த அரசும், அரசு அல்லாத சமூக நிறுவனங்களும் பல சவால்களைச் சந்தித்தாக வேண்டும். சமுதாயத்தின் பல்தரப்பட்ட மக்கள் வாழ்வை அவர்களின் நிலைகளுக்கேற்ப பல்வேறு திட்டங்களின் மூலம்தான் அந்தச் சவால்களைச் சந்தித்தாக வேண்டும். சந்தித்து இலட்சியங்களை நிறைவேற்ற வேண்டும்.

நிலவும் வறுமையின் மீது இருமுறைத் தாக்குதல் நடத்தி அதை அறவே ஒழிப்பதுதான் நமது கொள்கை. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் சமுதாயத்தில் குறிப்பிட்ட ஒரு சில பகுதியினர் வாழ்வில் நிலவும் வறுமையை ஒழிப்பது, எமது இருமுனை வறுமை ஒழிப்புப் போரில் முதல் போர்முனை, வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்தில் ஊக்கம் காட்டி அதற்கு ஏற்ற திட்டங்களைத் தீட்டி, நிறைவேற்றுவது, வறுமை ஒழிப்புப் போரின் இரண்டாவது போர்முனை, வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கும் வேளாண்மை உற்பத்திப்பெருக்கும் முயற்சிக்கும் இடையில் உள்ள இணைப்பு இணையற்றதாக விளங்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறத் தேவையில்லை.

காள்ளப்படும் முயற்சிகள் இந்தக் கட்டுக்கோப்பிற்குள் இயங்கும். வேலை ாய்ப்பைப் பெருக்குவதிலும் வறுமையை ஒழிப்பதிலும் அதிக நாட்டம் ண்டிப்பாக காட்டப்பட வேண்டும். எனவே, உணவு தானிய உற்பத்தியில் ணிசமான முன்னேற்றம், வேலை வாய்ப்புகளை அதிகரித்தல் ஆகியவைகளை ும்—குறிப்பாக உற்பத்தித் திறனை உயர்த்துகின்ற கொள்கைகளையும் கோட் ாடுகளையும் ஏழாவது திட்டம் வலியுறுத்த வேண்டும்.

### 2. சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் மற்றும் ஊராட்சி நிர்வாகம்.

நம் மாநிலத்தில் மொத்தம் 384 சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் உள்ளன. கல்ராயன்மலை வட்டாரத்தைத் தவிர மற்ற எல்லா வட்டாரங்களிலும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் அமைக்கப்பட்டு விட்டன. நிருவாகத் திறமை மேம்பட்டு விளங்கவும், அலுவலகங்களில் ஆற்றல் அதிகரிக்கவும் வேண்டி, ஐந்து வட்டாரங்கள் 1985-86 ஆம் ஆண்டு பிரித்து அமைக்கப்பட்டன. ஒவ்வொன்றிலும் ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமான மக்கட்தொகை கொண்ட திருப்பத்தூர், குளித்தலை, ஆண்டிப்பட்டி, பாலக்கோடு மற்றும் ஊத்தங்கரை ஆகியவைகளே அந்த ஐந்து வட்டாரங்கள். இவைகளை விடுத்து, இராஜபாளையம், தளி, கடலூர், உதகமண்டலம் ஆகிய வட்டாரங்கள் ஒவ்வொன்றும் ஒன்னேகால் லட்சத்திற்கு மேலான மக்கட் தொகையைக் கொண்டுள்ளன. இவைகளும் பிரிக்கப்பட வேண்டியவைகள். இவைகளைப் பிரிக்கும் பணி படிப்படியாக நிறைவேற்றப்படும். இம்மாநிலத்தில் மொத்தம் 12,610 ஊராட்சிகள் உள்ளன.

### 3. ஊராட்சி தேர்தல்கள்.

ஊராட்சி அமைப்புகளை அமைப்பதன்மூலம்தான் மக்களை ஊராட்சி வளர்ச்சியில் முழுமையாக ஈடுபடுத்த முடியும்—அவர்களை ஈடுபாடு கொள்ளச் செய்ய முடியும் என்ற நோக்கத்தோடு 23-2-1986 அன்று ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இதற்கு முன்பு 1970 ஆம் ஆண்டு ஊராட்சித் தேர்தல்கள் நடைபெற்றன. 1970 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின்போது ஊராட்சி மற்றும் பேரூராட்சியின் உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரை ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உறுப்பினர்களாக அமைந்த ஊராட்சித் தலைவர்கள், தேர்ந்தெடுத்தனர். இதற்குப் பிறகு, ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரும் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் வகையில் 1970 ஆம் ஆண்டில் "தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1958" திருத்தி அமைக்கப்பட்டது.



23-2-1986 அன்று நடைபெற்ற தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் 3-3-1986 அன்று பதவி ஏற்று கொண்ட வரையில், ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சிகளும் முறையே 1977 மற்றும் 1979 ஆம் ஆண்டு முதல் சிறப்பு அலுவலர்களால் நிர்வாகிக்கப்பட்டு வந்தன.

தேர்தல் பணிகள் முழுவதும் அமைதியுடனும், திறமையுடனும் நடைபெற்றன. ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களை முதல் முறையாக வாக்காளர்களே நேரடியாகத் தேர்ந்தெடுத்தனர். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவருக்கான தேர்தலும் பேரூராட்சி தலைவருக்கான தேர்தலும் கட்சி அடிப்படையில் நடத்தப்பட்டன. பேரூராட்சி உறுப்பினர்களுக்கான தேர்தலும், ஊராட்சித் தலைவர்களுக்கான தேர்தலும் கட்சி சார்பற்ற அடிப்படையில் நடத்தப்பட்டன. 1-1-1986 அன்று 18 வயது நிரம்பிய இளைய சமுதாயத்தினருக்கு முதன் முறையாக வாக்குரிமை அளிக்கப்பட்டது, கடந்த தேர்தலில் குறிப்பிட்டு கூறவேண்டிய அம்சம்.

### 4. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

கிராமப் பகுதிகளை முன்னேற்ற நாம் மேற்கொள்ளும் பலவிதமான முயற்சிகளில், கிராமப் பகுதிகளை விரைவில் முன்னேற்ற வேண்டும்; அங்குள்ள வறுமையை ஒழிக்கவேண்டும் ஆகிய இரு கூறுகளுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றன. சமூக நீதியை நிலை நாட்டி, ஏழைகளின் வருவாய் அளவை உயர்த்தி விடுதல் மட்டுமே பொருளாதார வளர்ச்சியில் புதிய அத்தியாயங்களை ஏற்படுத்தி விடாது என்பது இப்போது தெரிய வந்துள்ளது. வறுமையை நேரடியாகத் தாக்கி ஒழிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்த நேரடித் தாக்குதலை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் நிறைவேற்றும் வகையில் முதன் முறையாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் உதவி, அளிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்த போதிலும் இத்திட்டத்தின் நிறைவேற்றம் சிக்கல் மிகுந்ததாக இருந்த போதிலும் இத்திட்டத்தின் வெற்றி பாராட்டப்பட வேண்டிய வகையில் அமைந்துள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், 1979-80 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியங்களில் நிறைவேற்றப்பட்டன. 1980-81 முதல், பின்வரும் இரு இலட்சியங்களை எய்துவதற்காக இத்திட்டம் எல்லா வட்டாரங்களிலும் நிறைவேற்றப்பட்டது :—

(அ) சுய வேலை வாய்ப்பு வழிகளை அமைத்துத் தந்து மேம்படுத்தி, கிராமப்புறங்களில் நிலவும் வேலை இல்லா நிலையையும், போதிய வேலையில்லா குறையையும் களைதல்.

(ஆ) கிராமப்புறங்களில் மிக்க ஏழ்மை நிலையில் உள்ள மக்களின் வாழ்க்கை நிலையை பாராட்டத் தக்க வகையில் உயர்த்துதல்.

மானியமும் வங்கிக் கடனும் இணைந்த உதவியை கிராமப் புறங்களில் மிக ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களுக்கு, ஒட்டு மொத்தமாக அளித்து, வருவாய் தரும் சொத்துக்களை அவர்கள் பெறுவதன் மூலம் மேற்கூறிய இரு இலட்சியங்களையும் அடைய ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் உதவுகிறது. இந்த உதவியில், மானியத் தொகை, மத்திய மற்றும் மாநில அரசுகள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கென தங்கள் வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யும் தொகையில் இருந்து அளிக்கப்படுகின்றன. கடன் தொகைகள் வங்கிகள் மூலம் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

ஏழைகளுக்குள் ஏழைகளாக—அதாவது பரம ஏழைகளாக உள்ள குடும்பங்களை வறுமைக் கோட்டின் பிடியில் இருந்து விடுவிப்பதை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் தனது முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருப்பதால், இத்தகைய பரம ஏழைகளைத் தேர்ந்தெடுப்பதில் அவர்களின் குடும்ப வருமானமே அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. ஐந்து நபர்கள் கொண்டதாய், ஆண்டு வருவாய் ரூ. 3,500-க்கும் மேற்படாத வருமானம் பெறும் குடும்பம் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பமாக ஆறாவது திட்டத்தில் கருதப்பட்டது. இதே கருத்தும் தான் ஏழாவது திட்டத்தின் முதல் ஆண்டில் அதாவது 1985-86 ஆம் ஆண்டும் பின்பற்றப்பட்டது.

ஆனால் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இப்போது அதாவது 1986-87 முதல் 'வறுமைக்கோடு' என்பதற்கான வரையறையை மத்திய அரசு மாற்றி அமைத்துள்ளது. 1986-87 முதல் 'வறுமைக்கோடு' என்பது என்ன என்பதற்கு மத்திய அரசு கீழ்க்காணும் புதியதோர் விளக்கத்தை அளித்துள்ளது :—

"கிராமப்புறங்களில் ஆண்டுக்கு ரூ. 6,400 வருவாய் கொண்ட குடும்பங்கள் வறுமைக்கோட்டில் வாழும் குடும்பங்களாக 'ஏழாவது திட்டத்தில்' கருதப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைப் பொறுத்தவரையில், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மூலம் அவர்களுக்கு





உதவும் போது அவர்களின் வருவாய் வரம்பினை இதில் 75 சதவிகிதம் அதாவது ரூ. 4,800 என்ற அடிப்படையில் அவர்களுக்கு உதவ வேண்டும் எனினும், ஏழைகளுக்குள் ஏழைகளாக இருக்கும் பரம ஏழைகளுக்கு முதலில் உதவுவதற்காக, ஆண்டுக்கு 3,500 ரூபாய் வருவாய் கொண்ட குடும்பங்களுக்கு முதலில் உதவி அளிக்க வேண்டும். 3,500 ரூபாய் ஆண்டு வருவாய் கொண்ட குடும்பங்கள் முழுவதும் உதவி அளிக்கப்பட்ட பின்பே, ரூ. 3,500 முதல் ரூ. 4,800 வரை ஆண்டு வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு உதவி அளிக்கப்பட வேண்டும்."

இந்த ஆண்டு, அதாவது 1986-87 முதல், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மூலம் உதவி பெறுவதற்கான வருவாய் வரம்பு உயர்த்தப்பட்டிருந்தாலும் கூட, ஏழைகளுக்குள் ஏழைகளாக உள்ள பரம ஏழைகளுக்கு முதலில் உதவிடும் கொள்கை தொடர்ந்து பின்பற்றப்படுகின்றது. எனவே, ஒவ்வொரு வட்டாரத்திலும் ஆண்டுக்கு ரூ. 3,500-க்குக் குறைவாக வருவாய் கொண்ட குடும்பங்களுக்கு முதல் முன்னுரிமை அளிக்கப்பட்டு உதவி செய்யப்படும். ரூ. 3,500 வருமானம் கொண்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் உதவி அளிக்கப்பட்ட பின்பு, ரூ. 3,500 முதல் ரூ. 4,800 வரை ஆண்டு வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு படிப்படியாக உதவி அளிக்கப்படும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வட்டாரத்திலும் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பங்களைக் கணக்கிட்டு, அவர்களுக்கு உதவுவதற்கென அமைந்த ஒட்டு மொத்தமான திட்டங்களை உள்ளடக்கி, 'வட்டாரத் திட்டம்' உருவாக்கப்பட்டுள்ளது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அதாவது 1-4-1980 முதல் 31-3-1985 முடிய ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மொத்தம் 13 இலட்சத்து 96 ஆயிரம் குடும்பங்களுக்கு உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன. இக்குடும்பங்களுக்கு உதவியாக அளிக்கப்பட்ட தொகை ரூ. 14,661 இலட்சம்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை ஒருங்கிணைப்பது, ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் முதல் குறிக்கோள். மேலும், ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் உதவிகள் அளிக்கப்பட்டும், பல்வித காரணங்களால் வறுமைக் கோட்டின் கோரப் பிடியிலிருந்து விடுபட இயலாமல் போன குடும்பங்களுக்கு மீண்டும் உதவி அளிப்பது ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் இரண்டாவது குறிக்கோள். இவ்வாறு மீண்டும் உதவி அளித்தும், முடிந்தவரை பல குடும்பங்களுக்கு முதல் முறையாக உதவி அளித்தல் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள்

அதாவது 31-3-1990-க்குள் தமிழ் நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் சதவிகிதமான 48.2ஐ, 23 சதவிகிதமாக குறைப்பதும் ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தின் குறிக்கோள்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் அதாவது 1985-86 ஆம் ஆண்டில், ஏற்கெனவே உதவி அளிக்கப்பட்ட 1 இலட்சத்து 18 ஆயிரம் குடும்பங்களுக்கும் (1980-81 மற்றும் 1981-82 ஆம் ஆண்டு உதவி அளிக்கப் பட்ட குடும்பங்கள் மற்றும் வறுமைக் கோட்டில் இருந்து விடுபட இரண்டாவ தாக உதவி பெற தகுதி உடைய குடும்பங்கள்) புதிதாக 78,279 குடும்பங் களுக்கும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உதவி வழங்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்து இருந்தது.

இதற்கென 1985-86 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மத்திய அரசு நிர்ணயித்து இருந்த ஒதுக்கீடு ரூ. 3,024.166 இலட்சம். இச்செலவை மாநில அரசும் மைய அரசும் சரிபாதியாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

1985-86 ஆம் ஆண்டு, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட சாதனை இலக்கையும் நிதி இலக்கையும், எவ்வித குறை பாடும் இன்றி தமிழ்நாடு அரசு, அடைந்து விட்டது என்பது உண்மையிலேயே மகிழ்ச்சியைத் தருவதாகும்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளின் ஆதரவோடும் ஒத்துழைப்போடும் தான் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. பொதுவாக, அளிக்கப் படும் உதவியில் அதிகபட்சமாக 33-1/3 சதவிகிதம் மானியமாக வழங்கப் படுகிறது. மீதி வங்கிகளிலிருந்து கடனாக வழங்கப்படுகிறது. எனவே ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தேவைப்படும் உதவிகளை அளிப் பதில் நிதி நிறுவனங்கள் பெரும் பங்காற்றுகின்றன.

மிகவும், பின் தங்கிய, உள் அமைந்த பகுதிகளில் ஏற்கெனவே உள்ள அடிப் படைத் தேவை வசதிகளை வலுப்படுத்தலும் அவ்வசதிகள் இல்லாத இடங் களில் அவைகளை அமைத்துக் கொடுத்தலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் குறிக்கோள்களில் ஒன்றாகும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கால்நடைகளுக்கு தக்க மருத்துவ பாதுகாப்பு அளிப்பதற்காக இயங்கும் கால்நடை மருத்துவ மனைகள் மற்றும் உறை விந்து நிலையங்களும் அமைக்கப்பட அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. 31-3-1986 வரை 31 இயங்கும் கால்நடை மருத்துவ மனைகளும், 223 உறை விந்து நிலை யங்களும் அமைக்கப்பட்டுள்ளன.



வேளாண்மைப் பகுதியைப் பொறுத்த வரையில், சிறு மற்றும் குறு வேளாண்மை விவசாயிகளுக்கு உதவும் வகையில் ஏழு மாவட்டங்களில் ஏழு நடமாடும் மண் பரிசோதனைச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பயன்பெறும் நெசவாளர் களுக்கு உதவும் நோக்கத்தோடு 21 மின்விசை தறி மையங்கள் ஏற்படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரகத் திட்டத்தின்கீழ் 1980-81 ஆம் ஆண்டு முதல் செலவிடப்பட்ட தொகை, உதவிகள் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை ஆகிய விவரங்களைக் காட்டும் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | செலவு. | வழங்கப்பட்ட கடன் தொகை. | மொத்த செலவு. | உதவி வழங்கப்பட இலக்கு நிர்ணயிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை. | உதவி வழங்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (ரூபாய் கோடியில்) | | | | |
| 1980-81 | 16.91 | 29.67 | 46.58 | 2,25,600 | 2,55,323 |
| 1981-82 | 28.10 | 47.36 | 75.46 | 2,25,600 | 2,58,225 |
| 1982-83 | 34.16 | 62.87 | 97.03 | 2,25,600 | 2,71,563 |
| 1983-84 | 33.69 | 59.75 | 93.44 | 2,26,650 | 2,77,641 |
| 1984-85 | 33.75 | 57.63 | 91.38 | 2,26,650 | 2,33,264 |
| 1985-86 | 30.24 | 58.89 | 89.13 | 1,96,239 | 1,98,257 |

1986-87 :

மத்திய அரசால் குறிப்பிட்டபடி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத் தில் 1986-87 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 2,922 லட்சம். 1986-87-ல் இரண்டு லட்சத்து எண்பத்தி ஐந்தாயிரம் குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்படும் என மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இதில் இதற்கு முன்னர் ஆறாவது 1982-83, 1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளில் உதவிகள் வழங்கப்பட்ட 2 லட்சத்து 5 ஆயிரம் குடும்பங்களும் அடங்கும்.

மேலும் மத்திய அரசு அனுப்பியுள்ள அறிவுரைகளின்படி எந்தெந்த குடும் பங்களுக்கு இரண்டாவது தடவையாக உதவி அளிக்கப்பட வேண்டும் என 1986 ஏப்ரல்-மே மாதங்களில் ஓர் விரிவான ஆய்வு நடத்தப்பட உள்ளது. இந்த ஆய்வுக்குப் பின்னர் இரண்டாவது தடவை உதவி அளிக்கப்பட தேர்ந்தெடுக் கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கையும் இதில் அடங்கும். அத்தோடு 1986-87 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் புதிதாக உதவி அளிக்கப்பட இருக்கும் 80,000 குடும்பங்களும் இதில் அடங்கும்.

## கிராமப்புற இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் (Trysem).

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஓர் நல்ல அம்சம் தான் இந்தத் திட்டம். தொழில் நுட்ப அறிவற்ற, திறமையில்லாத வறிய இளைஞர்களுக்கு பயிற்சிகள் அளித்து, அந்தப் பயிற்சிக்குப் பின்னர் தங்களைத் தாங்களே வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள வழி செய்கிறது இத்திட்டம். இத்தகைய பயிற்சிகளை அளிப்பதற்கான முழுச் செலவும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையில் இருந்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

கிராமப்புற இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் மொத்தம் 1,66,102 பேர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இவர்களில் 1,39,392 நபர்களுக்கு நல்ல வருவாய் கிட்டும் வகையில் தக்க வேலை வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. அதாவது 94,921 பேர்கள் சொந்தத்தில் தொழில் தொடங்கியுள்ளனர். 44,471 பேர் ஊதிய அடிப்படையில் வேலைத் தேடிக் கொண்டனர்.

1985-86 ஆம் ஆண்டில் 13,670 நபர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும் என்பது இலக்கு. 31-3-1986 முடிய 8,200 நபர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு விட்டன. எஞ்சிய சுமார் 6,000 பேர்களுக்கு தற்போது பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சிகள் 1986 ஜூன் இறுதியில் முடிவடையும்.

**ஆய்வுகள் :**

எந்தவொரு திட்டமானாலும் அது நிறைவேற்றப்படும் பொழுதே, அதன் நிறைபெற்ற ஆய்வு செய்யப்பட்டால்தான், அந்தத் திட்டம் சிறந்த முறையில் நிறைவேற்றப்பட்டு வருகிறதா என்பதை கண்டுகொள்ள முடியும்; கணக்கிட முடியும். திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்ட பின்பு நடத்தப்படும் ஆய்வுகள் இறந்த பின்பு செய்யப்படும் பிணப் பரிசோதனையாகத் தான் அமையுமே தவிர, திட்டம் நிறைவேற்றப்படும் பொழுது ஏற்படும் குறைபாடுகளைக் களைய உதவாது. எனவேதான் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்படும் பொழுதே, அதனை தேசிய அளவில் தக்க ஆய்வு செய்ய மத்திய அரசு முடிவு செய்தது. தமிழ் நாட்டில் இத்தகைய ஆய்வு 1985 அக்டோபர் திங்களில் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு மாதமும் ஏதாவது இரு மாவட்டங்களில் மாவட்டத்திற்கு இரண்டு வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த மதிப்பீடு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1985 அக்டோபர் மாதத்தில் தொடங்கி 1986 பிப்ரவரி முடிய 10 மாவட்டங்களில் அமைந்த 20 வட்டாரங்களில் இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.



ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்தே அதன் நிறைவேற்றம் பற்றி ஆய்வுகளை மேற்கொள்வதில் தமிழ்நாடு அரசு அதிக ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் நிறைவு இந்த ஆய்வை, கோயம்புத்தூர், அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை, மதுரை சமூகப்பணி நிலையம், சென்னை-86, மக்கள் வாழ்வியல் அமைப்பு, மதுரை காந்தி கிராமம், சுகாதார மற்றும் குடும்பநல வாழ்வு நிலைய அறக்கட்டளை, சென்னை பொருளாதார வல்லுநர் குழு ஆகியத் தனிப்பட்ட அமைப்புகள் இந்த ஆய்வுகளை நடத்த கோரப்பட்டன. இக்குறிப்பிட்ட அமைப்புகள் சென்னை பொருளாதார வல்லுநர் குழுவால் இந்த ஆய்வை நடத்த தமிழக அரசு ஆணையிட்டது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்படும் பொழுது ஏற்படும் குறைபாடுகளைக் களைந்து அத்திட்டத்தை திறம்பட நிறைவேற்றுவதற்காகவே இந்த ஆய்வுகளைச் செய்ய அரசு ஆணையிட்டது. இந்த ஆய்வுகள் வெளிப்படுத்திய கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் தக்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

## 5. கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (DWCRA):

எல்லா முன்னேற்றத் திட்டங்களிலும் கிராமப்புற பெண்கள் கடுபடுத்தப் பாரமாய் புறக்கணிக்கப்படுகின்றனர் என்றும், திட்டம் தீட்டுவோர், பெண்களின் நலன்களைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை; கண்டு கொள்வது இல்லை என தேசிய வேளாண்மைக் கமிஷன் ஓர் உண்மையை வெளிப்படுத்தியது. ஒருங்கிணைந்த ஊரகத் திட்டம் நிறைவேற்றப்படும் பொழுது நடுவில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு, இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் பெண்களின் எண்ணிக்கை மிகவும் குறைவே என்பதை உணர்த்தியது. கிராமங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களை ஒட்டுமொத்தமாக உயர்த்தும்போது, ஒருங்கிணைந்த ஊரகத் திட்டத்தின் ஓர் அங்கமாக பெண்கள் முன்னேற்றத்தில் தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமே. இதன் அடிப்படையில்தான், ஒருங்கிணைந்த ஊரகத் திட்டத்தின் ஓர் அங்கமாக "கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான முன்னேற்றத் திட்டம் (DWCRA) உருவாக்கப்பட்டது.

நல்ல சத்தான உணவையும், நல்ல கல்வியையும் குடும்பங்கள் பெறுவதற்கும் பெண்கள் சம்பாதிப்பதற்கும் நேர் தொடர்பு இருக்கத்தான் செய்கிறது. அது மட்டுமல்ல, பெண்கள் சம்பாதிக்கும் போது அவர்களுக்கென தனி மதிப்பும் குடும்பத்தில் ஏற்பட்டு விடுகிறது. எனவே நல்ல ஊதியத்தைப் பெண்கள் பெறும் வகையில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது.

பல பணி சமுதாய மையங்களை (Multi-purpose Community Centres) அமைக்கும் ஒரு திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளது. இதற்கேற்ப 1985-86 ஆம் ஆண்டில் தர்மபுரியிலும், பெரியார் மாவட்டத்திலும் தலா 4 பல பணி சமுதாய மையங்கள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காகும் செலவு ரூபாய் 13.20 இலட்சம் (அதாவது ஒரு மையத்திற்கு ரூபாய் 1.65 இலட்சம்).

1986-87 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் மொத்தம் ரூபாய் 24.75 இலட்சம் செலவில் (ஓர் மையத்திற்கு ரூபாய் 1.65 இலட்சம்) பெரியார் மாவட்டத்தில் 8 பல பணி சமுதாய மையங்கள் அமைக்கவும், தர்மபுரி மாவட்டத்தில் 7 பல பணி சமுதாய மையங்கள் அமைக்கவும் மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளது.

6. வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்காக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் உதவிடும் மாபெரும் திட்டம் :

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தோடு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உதவிடும் மாபெரும் திட்டம் தமிழ்நாட்டில் 1983-84 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. புதிதாக பாசன வசதிகளை ஏற்படுத்துதல் அல்லது ஏற்கெனவே உள்ள பாசன வசதிகளை மேம்படுத்தல், நிலங்களை சமப்படுத்தல் போன்ற நில மேம்பாட்டு வேலைகளை செய்து முடித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு மானியத்தோடு கூடிய கடன்களை சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கி வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தோடு இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மானியமாக வழங்க ஒவ்வொரு வட்டாரத்திற்கும் வழங்கப்பட்ட தொகை தலா ரூபாய் 5 இலட்சம். இத்திட்டத்திற்காகும் செலவினை மத்திய அரசும் தமிழ்நாடு அரசும் சரி பாதியாக ஏற்றுக் கொள்கின்றன.

கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்வதற்காக இத்திட்டத்தின்கீழ் மானியம் வழங்கப்படுகிறது :—

(1) சிறுபாசன கிணறுகள் மற்றும் பம்புகள் ;

(2) நில மேம்பாடு குறித்த பணிகள்.

1985-86 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் மொத்தம் ரூபாய் 11.83 கோடி உதவியாக அளிக்கப்பட்டுள்ளது. சிறு பாசனங்களை மேம்படுத்த இத்திட்டத்தின்கீழ் 1985-86 ஆம் ஆண்டில் மொத்தம் 21,002 சிறு மற்றும் குறு விவசாயிகள் உதவி பெற்றுள்ளனர். நில மேம்பாடு வகையில் 1985-86 ஆம் ஆண்டு 4,003 சிறு மற்றும் குறு விவசாயிகள் நிதி உதவி பெற்றுள்ளனர்.





1986-87 ஆம் ஆண்டுக்கென இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு :—

| பணி விவரம். (1) | 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு. (2) (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1. சிறு பாசனம் .. .. .. | 896.00 |
| 2. நில மேம்பாடு .. .. .. | 148.84 |
| மொத்தம் .. | 1,044.84 |

7. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்—நோக்கங்கள் :

மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமான தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், தமிழ்நாட்டில் 1980 அக்டோபர் மாதம் முதல் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காகும் செலவை மைய அரசும் மாநில அரசும் சரிபாதியாகப் பகிர்ந்து கொள்கின்றன.

இத்திட்டத்தின் நோக்கங்கள் வருமாறு :—

(1) கிராமப் பகுதிகளில் வேலை இன்றியும், போதிய வேலை இன்றியும் அல்லல்படும் ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் பயன்பெறும் வகையில் தக்க வேலை வாய்ப்புகளை அவர்களுக்கு அளித்தல்.

(2) கிராமங்களின் அடிப்படை வசதிகளை வலுப்படுத்தும் நோக்கத்தோடு சமுதாயத்திற்குப் பயன்படும் சொத்துக்களை உருவாக்குதல், அதன் மூலம் கிராமப் பொருளாதாரத்தை வேகமாக மேம்படுத்தி கிராமப்புற ஏழைகளின் வருவாயைச் சீராக உயர்த்துதல்.

(3) கிராம மக்களுக்கு சத்துமிக்க உணவு கிடைக்கச் செய்து அதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

இந்த அவசியத்தில் உருவானதுதான் "கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்", இது நான்கு குறிக்கோள்களைக் கொண்டது.

உழைப்பால் சமுதாயத்தில் ஓர் உன்னத நிலையைப் பெண்கள் அடைய வேண்டும் என்பது முதல் குறிக்கோள். நானும் சம்பாதிக்கிறேன் என்ற பெருமையை சமுதாயத்தில் பெண்கள் பெற வேண்டும் என்பது இரண்டாவது குறிக்கோள். நாட்டில் மட்டுமின்றி வீட்டிலும், வீட்டில் உள்ள உரிமைகளையும் ஆண்களுக்கு நிகராக பெண்கள் பெற வேண்டும் என்பது மூன்றாவது குறிக் கோள். அன்புத் தாயாகவும், நல்ல மனையாளாகவும் பெண்கள் திகழ வேண்டும் என்பது நான்காவது குறிக்கோள். இந்த நான்கு குறிக்கோள் களை எய்தி, பெண்களின் நிலையை சமுதாயத்தில் உயரச் செய்ய வேண்டும் என்பதே கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத் தின் இலட்சியம்.

குடும்பத்திற்கு நல்ல சத்து மிகுந்த உணவு கிடைக்கவும், குடும்பத்தின் பொருளாதார நிலை உயரவும், அக்குடும்பத்தைச் சார்ந்த பெண்களுக்கு வழி வகை செய்யும் வகையில், அவர்கள் சம்பாதிப்பதற்கு தக்க வாய்ப்புகளை, கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத் திட்டம், ஒரு புறம் ஏற்படுத்தித் தருகிறது. மறுபுறம், அந்தந்தப் பகுதியில் கிடைக்கும் மூலப் பொருட்களை தான் சம்பாதிப்பதற்காகப் பயன்படுத்தி அந்தப் பெண்கள் தாங்கள் சார்ந்த பகுதிகளுக்கு சேவை செய்யவும் இத்திட்டம் உதவுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 15 முதல் 20 வரை எண்ணிக்கை கொண்ட பெண்கள் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவர்களின் வாழ்வில் புதியதோர் மறுமலர்ச்சி [illegible] கிறது. ஒருவர் நலனை மற்றொருவர் பேணும் வகையில் இக்குழுக்கள் செயல்பட வேண்டும். குழு அமைக்கப்படும் பொழுதே குழுவிலிருந்து ஒரு அமைப்பாளர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவர் குழு பற்றிய வேலைகளைக் கவனித்துக் கொள்வார். இத்தகைய ஒவ்வொரு குழுவிற்கும் அளிக்கப்படும் உதவிகள் வருமாறு :—

(அ) ஒரே வேளையில் ரூபாய் 15,000 மான்யமாக வழங்கப்படுகிறது. இத்தோடு, இதே அளவு இன்னொரு தொகையை இந்திய, மாநில அரசுகளும், யூனிசெப் நிறுவனம் சேர்ந்து அளிக்கும். இந்த இரண்டு தொகைகளும் பின் வருமாறு செலவிடப்படுகிறது :—

(1) மூலப்பொருட்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகி வைகளுக்காக "சுழல் நிதி" ஏற்படுத்துதல்;



(2) குழு அமைப்பாளருக்கு மதிப்பூதியம் வழங்கப்படுதல், இத் தொகை ஓராண்டுக்கு வழங்கப்படும். மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50-க்கு மேற் படாத வகையில் வழங்கப்படும்;

(3) வருவாய் தரும் இனங்களுக்காக அடிப்படைத் தேவை வசதிகள் ஏற்படுத்துதல் (மூலதனம்);

(4) குழந்தை நலம் காக்க ஒரே வேளையில் செலவினம்;

(ஆ) குழு அமைப்பாளருக்கு பயணப்படியாக ஆண்டுக்கு ரூபாய் 200.

ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு திட்ட உதவி அலுவலர் (மகளிர் முன் னேற்றம்) நியமிக்கப்பட்டுள்ளார், இவருடைய பணியில் 10 கிராம சேவகிகள் உதவுவர்.

பொருளாதார சிறப்புக்கான எல்லா பணிகளும் "கிராம பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத் திட்டத்தின்" கீழ் மேற்கொள்ளப்படலாம். எந் தெந்தப் பணிகளைத் தேர்ந்தெடுப்பது என்பதைக் குழுவே முடிவு செய்யும். இந்த முடிவை எடுப்பதற்கு திட்ட உதவி அலுவலர் (மகளிர் முன்னேற்றம்) மற்றும் கிராம சேவகி ஆகியோர் உதவுவர்.

கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்படும் பெண்கள், ஒருங்கிணைந்த ஊரக திட்டத்தின்கீழ் பயன் பெற தேர்ந்தெடுக்கப்படுவோரைப் போலவே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இருந்தாலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் உதவி தனிப்பட்டவர்களுக்கு செல்கிறது. ஆனால் கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் உதவி பலர் இணைந்த குழுக்களுக்குச் செல்கிறது.

கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத் திட்டம், இந்தியா முழுவதிலும் இருந்த தேர்ந்தெடுக்கப்பட்ட 50 மாவட்டங்களில், 1982-83 ஆம் ஆண்டு பரிசோதனை முறையில் தொடங்கப்பட்டது. இப்பரிசோதனை முறைக்கு தமிழகத்தில் பெரியார் மற்றும் தர்மபுரி மாவட்டங்கள் தேர்ந் தெடுக்கப்பட்டு இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இறுதி வரை பெரியார் மாவட்டத்தில் 102 குழுக்களும், தர்மபுரி மாவட்டத்தில் 160 குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. 31—3—1986 வரை, இத்திட்டத்தின்கீழ் பெரியார் மாவட்டத்தில் 1,995 பெண்களும், தர்மபுரி மாவட்டத்தில் 2,866 பெண்களும் பயன் பெற்றுள்ளனர்.

முதலீடு மற்றும் மனித உழைப்பு நாட்கள் :

இத்திட்டத்தின்கீழ் இடப்பட்ட முதலீடு பற்றிய விவரங்கள் உருவாக்கப்பட்ட மனித உழைப்பு நாட்களைப்பற்றிய பட்டியல் வருமாறு :—

| ஆண்டு. (1) | | | முதலீட்டுத் தொகை. (2) (ரூபாய் கோடியில்.) | மனித உழைப்பு நாட்கள். (3) (இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| 1980–81 | .. | .. | 10.59 | 146.75 |
| 1981-82 | .. | .. | 34.54 | 448.15 |
| 1982–83 | .. | .. | 32·12 | 495.13 |
| 1983–84 | .. | .. | 35.82 | 341.29 |
| 1984–85 | .. | .. | 51.11 | 366.73 |
| 1985–86 | .. | .. | 41.00 | 252·59 |
| | மொத்தம் | | 205.18 | 2050.64 |

சமூகக் காடுகள் வளர்த்தல், ஊருணிகளைப் புதுப்பித்தல், சிறுபாசன வேலைகளை சீராக செய்து முடித்தல், குடிநீர் கிணறுகள் அமைத்தல், ஊரக சாலைகள் இடுதல், பள்ளிக் கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள், அரிசி கிடங்குகள், சிமெண்ட் கிடங்குகள், சிறு பாலங்கள், ஊராட்சி அலுவலகக் கட்டிடங்கள் ஆகியவை கட்டுதல், கால்நடைகள் நீர் குடிப்பதற்கு வசதிகள் அமைத்தல், ஆதி திராவிடர் மற்றும் மலை சாதியினருக்கு மொத்தம் மொத்தமாக வீடுகள் கட்டுதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டன.

1984-85 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் மலை சாதியினருக்காக இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 9,358 வீடுகள் கட்டப்பட்டன. 1985-86 ஆம் ஆண்டு 9,899 வீடுகள் கட்டப்பட அனுமதி வழங்கப்பட்டது. 1986 மார்ச் முடிய மொத்தம் 8,835 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய வீடுகள் 1986 ஏப்ரல் திங்கள் இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும்.

1986-87 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ், ஆதி திராவிடர் மற்றும் மலை சாதியினருக்கு ஏறத்தாழ 25 கோடி ரூபாய் செலவில் 25 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்க கருதப்பட்டுள்ளது.

**தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சமூகக் காடுகள் வளர்த்தல் :**

நம் நாட்டில் காடுகள் மிகப் பயங்கரமான அளவில் அழிக்கப்படுவதால் இயற்கைச் சூழல் கெட்டு அதன் விளைவாக ஏற்பட்டுள்ள சமூகப் பொருளாதாரச் சிக்கல்களை நாம் நேருக்கு நேர் சந்திக்க வேண்டிய நிலையில்



உள்ளோம் என 1985 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் ஐந்தாம் நாள் வானொலியில் உரையாற்றும்போது, நமது பாரதப் பிரதமர் அவர்கள் குறிப்பிட்டார்கள். விறகாகப் பயன்படும் மரங்களையும், உரமாகப் பயன்படும் செடிகளையும் ஆண்டுக்கு 5 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பில் வளர்க்கும் மாபெரும் திட்டத்தை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதின் தேவையை அவர் வலியுறுத்தினார். இத்திட்ட நிறைவேற்றம் ஒரு மக்கள் இயக்கமாக அமைய வேண்டிய அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

அவர் 1985 ஜனவரியில் வெளியிட்ட இந்தக் கொள்கை அறிவிப்பை கருத்தில் கொண்டு, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சமூகக் காடுகள் வளர்க்க ஒதுக்கீடு செய்யப்படும் தொகையை மத்திய அரசு 1985-86 முதல் 20 சதவீதம் உயர்த்தியது. 1985-86 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சமூகக் காடுகள் வளர்ப்புக்கென ஒதுக்கப்பட்ட ரூ. 7.80 கோடியில், 1986 மார்ச் 31 முடிய ரூ. 5 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 949 இலட்சம் மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டன. 1985-86 இல் ஏறத்தாழ 10,000 ஹெக்டேர் நிலப் பரப்பில் சமூகக் காடுகள் வளர்க்கப்பட்டன.

1986-87 முதல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழான சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்திற்கான ஒட்டு மொத்தமான ஒதுக்கீட்டை 20 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக மைய அரசு உயர்த்தி உள்ளது. இதைக் கணக்கில் கொண்டால் 1986-87 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் சமூகக் காடு வளர்ப்புக்கு மைய அரசு நிர்ணயித்துள்ள நிதி இலக்கு ரூ. 905.50 இலட்சம் எனக் கொள்ளலாம்.

1986-87 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் :

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1986-87 ஆம் ஆண்டுக்காக மைய அரசு நிர்ணயித்துள்ள தொகை ரூ. 4,877 இலட்சம். இந்தச் செலவை மைய அரசும் நம் மாநில அரசும் சரிபாதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். 1986-87 இல் மொத்தம் 263 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட வேண்டும் என மைய அரசு சாதனை இலக்கு நிர்ணயித்துள்ளது. மேலும் 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 47.40 இலட்சம் செலவில், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 3,950 சுகாதாரக் கழிவறைகள் கட்ட மைய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

8. ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்:

மத்திய அரசின் முழு மானியத்தோடு (100 சதவிகிதம்) கூடிய ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் 1983-84 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் நோக்கங்கள் வருமாறு:—

(அ) வேலைவாய்ப்பு இன்றி தவிக்கும் நிலமற்ற ஏழைக் குடும்பங்களில் குறைந்த பட்சம் ஒருவருக்கு ஓர் ஆண்டில் குறைந்தது நூறு நாட்கள் தக்க வேலைவாய்ப்புகள் அளித்தல்;

(ஆ) பிற்பட்ட நிலையில் உள்ள பகுதியில், நிலையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தல்.

1985-86 ஆம் ஆண்டில் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ், ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 44.95 கோடி. ஆனால், 31—3—1986 வரை ரூ. 45 கோடி செலவாகியுள்ளது. மேலும், 262.61 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பது 1985-86 ஆம் ஆண்டுக்கான சாதனை இலக்கு. இந்தச் சாதனை இலக்கை 31—3—1986-க்குள் எய்தி, 1985-86 இல் மொத்தம் 263 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

1984-85 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் மலை சாதியினர் ஆகியவர்களுக்கு 1984-85 ஆம் ஆண்டில் மொத்தம் 20,000 வீடுகள் (கூட்டம் கூட்டமாக அமைந்தவை) கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த இருவகை மக்களுக்காக 1985-86 ஆம் ஆண்டில் 11,000 வீடுகள் கட்டிக் கொடுக்க அனுமதி வழங்கப்பட்டது. இதில், 31—3—1986 வரை மொத்தம் 9,464 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. எஞ்சிய வீடுகள் 1986. ஏப்ரல் இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும்.

1986-87 ஆம் ஆண்டில், ஆதி திராவிடர் மற்றும் மலைச் சாதியினருக்கு ரூ. 35 கோடி செலவில் ஏறத்தாழ 35 ஆயிரம் வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாடு முழுவதும் சமூகக் காடுகள் வளர்க்கும் திட்டம் மாபெரும் அளவில் தீவிரமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என மாண்புமிகு தலைமை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட கொள்கை அறிவிப்பைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசு சமூகக் காடு வளர்ப்புக்கென பெருந் தொகையை ஒதுக்கியுள்ளது. ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு



உறுதித் திட்டத்தின்கீழ் சமூகக் காடுகள் வளர்ப்புக்கென மத்திய அரசு 6.92 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில் இது 20 சதவிகிதமாகும். 1985-86 ஆம் ஆண்டில் 31—3—1986 வரை 5,180 ஹெக்டேர் நிலப்பரப்பில் சமூகக் காடுகள் வளர்க்கப்பட்டன. 1985-86 இல் மட்டும் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழான சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 810 இலட்சம் மரக் கன்றுகள் வளர்க்கப்பட்டன.

கிராமப்புறங்களில் சுகாதார கழிப்பிடங்கள் கட்டும் சிறப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 47.40 இலட்சம் செலவில் 3,950 சுகாதாரக் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளது. இந்தத் தொகை 1986 பிப்ரவரியில் கிடைத்தது. எனவே 1986 ஜூன் மாதத்திற்குள் இந்த சுகாதாரக் கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்படும்.

1986-87 ஆம் ஆண்டிலும், இத் திட்டத்தின்கீழ் ரூ. 47.40 இலட்சம் செலவில் 3,950 சுகாதாரக் கழிப்பிடங்கள் கட்ட மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

1986-87 இல் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்:

ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் 1986-87 ஆம் ஆண்டுக்கான மத்திய அரசு ஒதுக்கியுள்ள மொத்த தொகை ரூ. 46.92 கோடி. 1986-87 ஆம் ஆண்டில் மொத்தம் 242 லட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட வேண்டும் என மைய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

இதுவரை, இத்திட்டத்தின் கீழான மொத்த ஒதுக்கீட்டில் 20 சதவிகிதம் சமூகக் காடுகள் வளர்ப்புக்கென மத்திய அரசு ஒதுக்கி இருந்தது. 1986-87 ஆம் ஆண்டு முதல் இது 25 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக, 1986-87 ஆம் ஆண்டில் சமூகக் காடு வளர்ப்புக்கென கிடைக்கும் தொகை ரூ. 7.31 கோடியாக அமையும்.

9. புதிய எரி சக்தி மேம்பாட்டுத் திட்டங்கள்:

மாற்று எரிசக்தி வழிமுறைகளைக் கண்டறிந்து அவைகளை மேம்படுத்த இந்தியா முழுவதும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில், கரிம வாயு மேம்பாட்டுத் திட்டமொன்றை தீட்டி, இந்தியா முழுவதும் முழுமானியம் அளித்து நிறைவேற்றி வருகிறது. மத்திய அரசின் "புதிய எரிபொருள் வாயில்கள்" துறை. இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளில் இருந்தே தமிழ் நாடு இதைத் திறம்பட நிறைவேற்றி வந்துள்ளது.

வருகிறது. ஆறாவது திட்ட காலத்தில் 21,500 சாண எரிவாயு அமைப்புகள்
நிறுவ வேண்டும் என்பது இலக்கு. இதை மிஞ்சி நாம் நிறுவியதோ 30,270
அமைப்புகள். 1984-85 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில், 10,000 சாண
எரிவாயு அமைப்புகள் அமைக்கப்பட வேண்டும் என்பது தமிழ்நாட்டிற்கு
நிர்ணயிக்கப்பட்ட இலக்கு. இதை மிகவும் மிஞ்சும் வகையில் மொத்தம் 17,549
அமைப்புகளை நிறுவி சாண எரிவாயு அமைப்பதில் அகில இந்திய அளவில்
இரண்டாவது இடத்தைத் தமிழ்நாடு பெற்றது.

1985-86-ல் நிறுவப்பட நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 13,000 சாண எரிவாயு
அமைப்புகள். இந்த இலக்கு மிஞ்சி, 1986 மார்ச் இறுதிவரை மொத்தம்
17,673 சாண எரிவாயு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

**மதிப்பீடு :**

தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட சாண எரிவாயு அமைப்புகளைப் பற்றி
மதிப்பீடு ஆய்வு செய்யும் பொறுப்பு "பெசன்ட்ராஜ் கன்சல்டன்ட் பிரைவேட்
லிமிடெட்" என்ற சென்னையைச் சார்ந்த ஓர் தனியார் நிறுவனத்திடம்
ஒப்படைக்கப்பட்டது. பழுதுபட்ட சாண எரிவாயு அமைப்புகளை சீர்
படுத்த இந்த நிறுவனம் அளித்த ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் மாவட்ட
ஆட்சித் தலைவர்களுக்கு ஊரக வளர்ச்சி இயக்குநர் தக்க அறிவுரைகள் வழங்கி
உள்ளார். தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட சாண எரிவாயு அமைப்புகளுள்
மொத்தம் 13 சதவிகித அமைப்புகள் குறைபாடுகளோடு அமைக்கப்பட்டிருப்ப
தாக மேற்கூறிய தனியார் நிறுவனத்தின் ஆய்வு வெளிப்படுத்தியது.

சாண எரிவாயு அமைப்புகளில் ஏற்படும் குறைபாடுகளைத் தீர்க்க "மூன்று
அடுக்கு நிலை" ஏற்படுத்தப்பட்டு, அக்குறைபாடுகள் தீர்க்கப்பட்டதால்,
மேற்கூறிய 13 சதவிகித குறைபாடு 0.6 சதவிகிதமாகக் குறைந்தது. சாண
எரிவாயு அமைப்புகளில் ஏற்படும் பெரிய குறைபாடுகளைக் களைய, கோயம்
புத்தூரிலும், பட்டுக்கோட்டையிலும் இரு பழுது பார்ப்பு மையங்கள்
ஏற்படுத்தப்பட்டன.

**பயிற்சி :**

சாண எரிவாயு அமைப்புகளைக் கட்டுவதில் எண்ணற்றவர்கள் திறமை
பெற்று விளங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கிராமப் புறங்களில் உள்ள
கொத்தனார்களுக்குத் தக்க பயிற்சிகள் தீவிரமாக அளிக்கப்பட்டு வருகின்றன.
1985-86 ஆம் ஆண்டு ஒரு பயிற்சிக்கு 20 கொத்தனார்கள் வீதம் 50 பயிற்சி
வகுப்புகள் நடத்தப்பட்டன.

இந்தப் பயிற்சிகள் ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்களிலும், பவானி
சாகரில் உள்ள மாநில ஊரக வளர்ச்சி நிலையத்திலும் நடத்தப்பட்டு வரு
கின்றன. இந்த பயிற்சி திட்டத்தில் நற்சேவை நிறுவனங்களும் ஈடுபடுத்தப்
பட்டு வருகின்றன.



சாண எரிவாயு அடுப்புகளை மட்டுமின்றி, புகை இல்லா அடுப்புகளையும்
பயன்படுத்துவதில் கிராம மகளிர் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பது அரசின்
ஓர் குறிக்கோள். இந்தக் குறிக்கோளை எய்த, கிராமப்புறங்களில் பெண்களுக்
கென தனி முகாம்கள் நடத்தப்படுகின்றன. 1985-86 ஆம் ஆண்டு மட்டும்
இத்தகைய 500 முகாம்கள் நடத்தப்பட்டன.

**மேம்படுத்தப்பட்ட அடுப்பு :**

விறகு பற்றாக்குறை, அதற்காக பெருமளவில் காடுகள் அழிக்கப்படுதல்
ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு, மேம்படுத்தப்பட்ட அடுப்புகள் பற்றி
செய்முறை விளக்கங்களை நாடு முழுவதும் நடத்திக்காட்ட மத்திய அரசு
ஒரு திட்டம் தீட்டி உள்ளது. இந்தத் திட்டத்தின்படி 25 சதவீதமும் அதற்கு
அதிகமாகவும் எரிசக்தியை மிச்சப்படுத்தக் கூடிய, மேம்படுத்தப்பட்ட அடுப்பு
களின் (நிலையான, மற்றும் எடுத்துச் செல்லத்தக்க அடுப்புகள்) பல மாதிரிகள்
குறித்து தமிழ் நாடு முழுவதிலும் செய்முறை விளக்கங்கள் நடத்தப்பட்டு
அந்த அடுப்புகள் தமிழ் நாடு முழுவதும் நிறுவப்பட்டன. 1985-86 இல்
மொத்தம் 85,000 அடுப்புகள் நிறுவப்பட வேண்டும் என்ற இலக்கை 31-3-1986-க்
குள் தமிழ் நாடு மிஞ்சிவிட்டது.

இத்தகைய அடுப்புகளை நிறுவுவதற்காக வகை செய்வதற்காக, தன்னிறைவு
இயக்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட அடுப்புகளைச் செய்
வதற்கும் நிறுவுவதற்கும் கிராமப் பகுதியில் உள்ள குயவர்களுக்குப் பயிற்சிகள்
அளிக்கப்பட்டு வருகின்றன. 1985-86 ஆம் ஆண்டில் இத்தகைய குயவர்
களுக்கென 50 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

**10. ஊரகத் தகவல் தொடர்பு மேம்பாட்டுத் திட்டங்கள் :**

புதிய யோசனைகளை, சிந்தனைகளை மக்களுக்குத் திறம்பட அறிவிப்
பதிலும் அந்த யோசனைகளை, சிந்தனைகளை உள்ளமைந்த கிராமப்பகுதி
மக்கள் எப்படி ஏற்றுக் கொள்கிறார்கள், எத்தகைய வரவேற்பை அவர்கள்
அளிக்கிறார்கள் என்று அறிந்து அதற்கேற்ப பின் நடவடிக்கைகள் எடுப்பதில்
நமக்குச் சில சிக்கல்கள் உள்ளன. இந்தச் சிக்கல்கள் களையப்பட்டு, வறுமை
ஒழிப்புத் திட்டங்கள், குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியம், சுகாதார வாழ்வின்
தேவை, குடிநீர் வசதி போன்றவற்றைப் பற்றிய விளக்கங்களும், செய்திகளும்
மக்களைச் சென்றடைய ஏழாவது திட்டத்தில் தீவிர முயற்சிகள் மேற்
கொள்ளப்படும். 1984-85 ஆம் ஆண்டுக்கு முன்பு 545 சமுதாயத் தொலைக்
காட்சிப் பெட்டிகள் நிறுவப்பட்டிருந்தன. 1984-85 ஆம் ஆண்டில் 1,100
சமுதாய தொலைக் காட்சிப் பெட்டிகளும், 1985-86 ஆம் ஆண்டு 3,567
சமுதாயத்தொலைக் காட்சிப் பெட்டிகளும் நிறுவப்பட்டன. இவை

1. கிராமப்புற சுகாதாரம் :

நல்ல சுகாதார சூழ்நிலை மக்களுக்கு அவசியமாகத் தேவை. மேலும் நல்ல சுகாதாரமே சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு மிகவும் அவசியமாகக் கருதப்படுகிறது. தமிழ் நாட்டில் ஏற்படும் 80 சதவிகித நோய்கள் தண்ணீர் மூலமும், மலக் கழிவு மூலமும்தான் ஏற்படுகின்றன. இந்த நோய்கள் வந்த பின்பு அவைகளை நீக்க செலவழிப்பதைக் காட்டிலும், அவை வராமல் தடுக்க ஆகும் செலவு குறைவே. எனவே, நல்ல சுகாதார வசதிகளை ஏற்படுத்து வதன் மூலம் மட்டுமே இந்த நோய்கள் ஏற்படாமல் செய்ய முடியும். திறந்த வெளியில் இயற்கைக் கடன்களைக் கழிக்கும் வழக்கம் அதில் உள்ள ஆபத்துக் களை அறியாதவாறு நடைபெற்று வருகிறது. அதிகமான இறப்புக்கு குறிப் பாக குழந்தையின் மரணத்திற்கு இந்த வழக்கமே காரணமாக அமைந்து விடுகிறது. வயிற்றுப்போக்கு, காலரா, டைபாயிட், யானைக்கால் வியாதி, குடற்புழு வியாதி, வயிற்றுழைச்சல் போன்ற வியாதிகள் திறந்த வெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் பயங்கரமான வியாதிகள் ஆகும். சுகாதார கழிப் பிடங்கள் பயன்படுத்தப்பட்டால் இந்த வியாதிகளால் ஏற்படும் மரணத்தை தவிர்ப்பதோடு இந்த வியாதிகளையும் ஒழித்துக் கட்டிவிடலாம். மனித மலத்தை சிறந்த முறையில் அப்புறப்படுத்தி செய்தால், இந்த வியாதிகளை, கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதோடு, தமிழ் நாடு முழுவதிலும் சுகாதார நிலையை மேம்படுத்தலாம். மேலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதால் ஏற்படும் பயன்களை தக்க சுகாதாரச் சூழ்நிலை இல்லாதபோது பெற முடியாது என ஆய்வுகள் கூறுகின்றன. எனவே, தக்க சுகாதார கழிப்பறைகள் இல்லாவிடில், ஆரோக்கியத்திற்கு பெரும் ஆபத்து ஏற்படுகிறது. பெண்களைப் பொறுத்த வரையில், தக்க கழிப்பறைகள் இல்லாமல், இயற்கைக் கடன்கள் கழிக்க மறைவான இடம் இல்லாத இக்கட்டான நிலையும் நிலவு கிறது.

அகில உலக குடிநீர் மற்றும் சுகாதார பத்தாண்டுத் (1981—1990) திட்டத் தின் ஒரு பகுதியாக 1982-83 முதல் படிப்படியாக நிறைவேற்றும் வகையில் ரூ. 16,94 கோடி செலவில், பெண்களுக்கான 11,366 கழிவறைகள் கட்ட தமிழ் நாடு அரசு அனுமதி அளித்துள்ளது. 1986 பிப்ரவரி மாதம் இறுதிவரை 10,952 கழிவறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இக்கழிவறைகள் அனைத் திலும் தண்ணீர் வசதி ஏற்படுத்தவும், இவைகளை பராமரிக்கவும் சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. யூனிசெப் நிறுவனம் மத்திய அரசு மற்றும் உலக வங்கி ஒத்துழைப்போடு தனிப்பட்டவர்கள் வீடுகளில் குறைந்த செலவிலான கழிப்பறை கட்டும் திட்டம் பற்றிய செயல் விளக்கத் திட்டம் 1984-85 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், தனிப்பட்டவர் கள் வீடுகளில் 920 கழிவறைகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. 31-3-1986 முடிய இதில் 904 கழிவறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.



செலவிலான 1335 கழிவறைகள் கட்டுவதற்கும் இத்திட்டத்தின்கீழ் அனுமதி வழங்கப்பட்டது. இதில் மார்ச் 1986 முடிய 700 கழிவறைகள் கட்டி முடிக் கப்பட்டன. எஞ்சியுள்ள கழிவறைகள் 1986 ஏப்ரல் இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும்.

வீடுகளில் அமைப்பதற்கென குறைந்த செலவிலான கழிப்பறைகள் கட்டு வதற்கு மாதிரி வடிவம் ஒன்று தயாரிக்கப்பட்டே இந்த கழிவறைகள் கட்டப் பட்டன. இந்த மாதிரி வடிவம் தயாரிக்கப்படும்போது சுகாதாரத்தோடு அமைந்து சுற்றுப்புறச் சூழ்நிலையை பாதிக்காதவாறு அது வடிவமைக்கப்பட் டுள்ளது. மேலும் தொழில் நுட்ப விஞ்ஞான அடிப்படையிலும் அமைந்த அது, மக்களால் ஏற்றுக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டது. அத் தோடு மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் அதன் விலையும் குறைவாக இருக்கும்படியும் எளிதில் கட்ட, பராமரிக்கவும் எளிதாக இருக்கும்படி அது வடிவமைக்கப்பட்டுள்ளது.

13. கிராமப் பணித் திட்டங்கள் :

இத்திட்டத்தின்கீழ் இணைப்புச் சாலைகளை ஊராட்சி ஒன்றியங்கள் மேம்படுத்தும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டது. வாகனங்கள் செல்லும் வகையில் மண் பரப்பிய சாலைகளை சரளைக்கல் சாலைகளாக மாற்றுதலும், மேம்படுத்தலும் ஆகிய பணிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதி பயன்படுத்தப்படுகிறது. 1986-87 ஆம் ஆண்டு முதல் இணைப்பு சாலைகளை மேம்படுத்தும் பணிகள் அனைத்தும் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் மேற் கொள்ளப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது.

பள்ளிக் கட்டிடங்கள் :

சொந்தக் கட்டிடங்கள் இல்லாத ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்காக இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை பயன்படுத்தப்படுகிறது. ஆரம்ப மற்றும் உயர் துவக்கப்பள்ளி களுக்குத் தேவையான பள்ளிக்கட்டிடங்களும் இத்திட்டத்தின்கீழ் கட்டப் படுகின்றன. 1984-85 ஆம் ஆண்டில் முடிக்கப்படாத பணிகளைச் செய்து முடிப்பதற்காக 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 146.82 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கென இத்திட்டத்தின்கீழ் 1986-87 முதல் தொகை ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியதில்லை எனவும், இனி எல்லா பள்ளிக் கட்டிடங்களையும் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டவும் அரசு முடிவு செய்துள்ளது.

அனைத்தும் கறுப்பு-வெள்ளைப் பெட்டிகள். 1986-87 ஆம் ஆண்டு முதல் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை மட்டுமே நிறுவக் கருதப்பட்டுள்ளது. இதைத்தவிர, கிராமங்களில் 'வீடியோ கேசட் பிளேயர்கள்' நிறுவவும் கருதப்பட்டுள்ளது.

சமூகக் கல்வி மானியம் :

12,823 சமூகக் கல்வி மையங்களுக்கும், 378 தகவல் நிலையங்களுக்கும் நிதி உதவிகள் அளிக்கப்படுகின்றன. 1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1. ஊரகக் குடிநீர்த் திட்டங்களைப் பராமரித்தல் :

கைப்பம்புகள் மற்றும் மின்விசைப் பம்புகளை பராமரிக்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஏனென்றால் மக்கள் ஒத்துழைப்போடு இவைகளை நன்முறையில் பராமரிக்கவும் இவைகளை நிறுவுவதில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அதிக அக்கறை செலுத்தும் வகையிலும் இந்த பராமரிப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த கைப்பம்பு மற்றும் மின்விசைப் பம்புகளை பராமரிக்கும் பணி "மூன்று அடுக்கு நிர்வாக முறையில்" நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஊராட்சி ஒன்றிய அளவில் ஒரு மெக்கானிக்-பிட்டர் உள்ளார். இளநிலைப் பொறியாளர்/உதவிப் பொறியாளர் தலைமையில் அமைந்த "நடமாடும் பம்புகள் பராமரிப்புக் குழு" மாவட்ட அளவில் இயங்கி வருகிறது. இந்த பராமரிப்புக் குழுவிற்கு வாகனங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இந்தப் பராமரிப்புப் பணிகளை நன்முறையில் மேற்பார்வையிட உதவி நிர்வாகப் பொறியாளர் தலைமையில் அமைந்த மேற்பார்வைப் பிரிவு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேரடிப் பார்வையில் இயங்கி வருகிறது. ஒவ்வொரு ஊராட்சியிலும் கைபம்பு பாதுகாப்பாளர் நியமிக்கப்பட்டு உள்ளார். பம்புகள் பழுதுபட்டால், தனக்கு அளிக்கப்பட்ட அஞ்சலட்டையில் அதைப் பற்றிய விவரங்களை எழுதி, ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு இந்த பாதுகாப்பாளர் அறிவிப்பார். பம்புகள் பெரிய அளவில் பழுதுபட்டால், அத்தகைய பழுதுகளை நடமாடும் பம்பு பராமரிப்பு குழு சீர் செய்யும்.

ஊராட்சி ஒன்றியங்களில் ஏறத்தாழ 80,000 கைப்பம்புகளும், 16,000 மின்விசைப் பம்புகளும் பராமரிக்கப்பட உள்ளன. 1984-85 ஆம் ஆண்டில் பம்புகளின் பராமரிப்பிற்கென ஒதுக்கப்பட்ட ரூ. 20.70 இலட்சம் போதுமானதாக இல்லை. எனவே திட்டத்தில் சேராத இனமாக, இத்தொகை 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 50.00 இலட்சமாக உயர்த்தப்பட்டது. 1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ. 75.00 [illegible]



தங்குதடையின்றி எப்போதும் நல்ல குடிநீர் கிடைக்க வேண்டும் என்றால், கிராமங்களில் மட்டுமின்றி பேரூராட்சிப் பகுதிகளிலும் உள்ள கைப்பம்புகள் மற்றும் மின்விசைப் பம்புகள் நன்முறையில் பராமரிக்கப்பட வேண்டும். எந்தவொரு பம்பும் 7 நாட்களுக்கு மேல் பழுதுபட்டு இருக்கக் கூடாது என அரசு ஆணை இட்டுள்ளது. கைப்பம்புகளையும், விசைப்பம்புகளையும் நன்முறையில் பராமரிக்கக் கூடுதல் நிதி தேவை. எனவே "குறைந்த பட்ச தேவைகளை நிறைவு செய்யும் திட்டத்தின் கீழ்" ஊரகக் குடிநீர்த் திட்டங்களைப் பராமரிப்பதற்காக, 10 சதவிகிதம் வரை நிதி ஒதுக்கீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. குறைந்த பட்ச தேவைகளை தீர்க்கும் திட்டத்தின் கீழ் 1985-86 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து ரூ. 1.5 கோடி, கைப்பம்புகளைப் பராமரிப்பதற்கென ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து நீர் வராமல், நீர் வற்றிப் போன பம்பு இடங்களை புதுப்பிப்பதற்கும், துருபிடித்த இரும்பு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளைத் துருப்பிடிக்காத கான்கிரீட் கலன்களில் அமைப்பதற்கும் இந்தத் தொகையைப் பயன்படுத்திக்கொள்ளலாம். பேரூராட்சிகளில் நிறுவப்பட்டுள்ள 9,000 கைப்பம்புகள் மற்றும் விசைப் பம்புகளைப் பராமரிப்பதற்கென பேரூராட்சிகளின் இயக்குநருக்கு ரூ. 50.00 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. ஊரக குடிநீர்த் திட்டத்தின் கீழான, மின்விசைப் பம்புகள் மற்றும் கைப்பம்புகளை பராமரிப்பதற்கென குறைந்த பட்சத் தேவைத் திட்டத்தின் கீழான மொத்த ஒதுக்கீட்டில் 10 சதவிகிதம் அதாவது சுமார் 3 கோடி, 1986-87 ஆம் ஆண்டு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

பழுதுபட்டப் பம்புகளைச் செப்பனிடுவதால் ஏற்படும் கால தாமதத்தைத் தவிர்ப்பதற்காக, தேவையான உதிரிப் பொருள்களை எப்போதும் தயாராக வைத்திருக்கும்படி மாவட்ட அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். 100 கைப்பம்புகளுக்கு மேற் கொண்ட வட்டாரங்களைப் பொறுத்த வரையில் கூலி அடிப்படையில் பிட்டர்களை நியமித்துக் கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பம்புகள் எங்கெங்கு அமைந்துள்ளன என்பதை எளிதில் கண்டு கொள்ளும் வகையில் ஒவ்வொரு வட்டாரத்திலும் வரை படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. பம்புகளை எளிதில் கண்டு பிடிப்பதற்காக அவைகளுக்கென தனிப்பட்ட எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பம்புகள் திறம்பட இயங்குவது பற்றி திடீர் சோதனைகள் நடத்தும்படியும் மாவட்ட அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். பம்புகள் பராமரிப்பை சீராக செய்வதற்கு உதவும் வகையில் அறிவுரைகள் அடங்கிய புத்தகத்தை களப்பணியாளர்கள் உருவாக்கி உள்ளனர்

. சிறுபாசனம் :

சிறுபாசன ஆதாரங்களைப் பாதுகாத்து பராமரிக்கும் பொறுப்பு ஊராட்சி ன்றியங்களைச் சார்ந்தது ஆகும். மொத்தம் 100 ஏக்கருக்கும் குறைவாக ள்ள நிலங்களுக்கு நீர் அளிக்கும் சிறு பாசன ஆதாரங்களை 'சுழல் முறை' Cycle System) படி ஊராட்சி ஒன்றியங்கள் பராமரித்து வருகின்றன. மாத்தம் 3,28,076 ஹெக்டேர் நிலப்பரப்புக்கு நீர் அளிக்கும் 2,37,614 சிறு ாசன குளங்களை ஊராட்சி ஒன்றியங்கள் பராமரித்து வருகின்றன. ஐந்தாண்டு மூல் திட்டத்தைப் பின்பற்றி, எல்லா சிறுபாசனக் குளங்களையும் ஊராட்சி ஒன்றியங்களே பராமரிக்கும் வகையிலான திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதற் ாக 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 55,38 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

15. 1986-87 ஆம் ஆண்டுக்கான பயிற்சித் திட்டங்கள் :

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பயிற்சித் திட்டங்கள் சிறப்பிடம் வகிக் கின்றன. தக்க பயிற்சிகள்தான், சிறந்த பணியாளர்களை உருவாக்கி நல்ல பலன்களைத் தரும் என்பதால்தான் பயிற்சித் திட்டங்களுக்கு இத்தகைய சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது. இத்துறையில் பணியாளர்களுக்கு வேண்டிய பயிற்சிகளை அளிப்பதற்காக ஊரக வளர்ச்சி இயக்குநரின்கீழ் கீழ்க்காணும் ஆறு பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன.—

(1) மாநில ஊரக வளர்ச்சி நிலையம் (தலைமை பயிற்சி நிலையம்) பவானிசாகர், பெரியார் மாவட்டம், இந்த நிலையம் விரைவில் சென்னை நகருக்கு வெளியே மாற்றப்பட உள்ளது.

(2) ஊரக விரிவாக்கப்பயிற்சி நிலையங்கள் (5 இடங்கள்)

1. சத்யவிஜயநகரம்—வட ஆற்காடு மாவட்டம்.
2. தி. கல்லுப்பட்டி—மதுரை மாவட்டம்.
3. கிருஷ்ணகிரி—தர்மபுரி மாவட்டம்.
4. பட்டுக்கோட்டை—தஞ்சாவூர் மாவட்டம்.
5. பவானிசாகர்—பெரியார் மாவட்டம்.

இந்த பயிற்சி நிலையங்கள் அனைத்திலும் பட்டறைப் பிரிவுகள் உள்ளன சுயவேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் கிராமப்புற இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு பயிற்சியை (TRYSEM) அளிப்பதில் இந்தப் பட்டறைப் பிரிவு பெரும் பங்காற்றி வருகின்றன. தி. கல்லுப்பட்டி மற்றும் சத்ய விஜய நகரம் ஆகியவற்றில் உள்ள ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில், மனை இயல் பிரிவு உள்ளது. இங்கே சமூக நலத் துறையைச் சார்ந்த பால சேவி கைகள் மற்றும் பெண் பணியாளர்கள் இங்கே பயிற்சி பெறுகின்றனர்.



பயிற்சி நிலையங்களின் தலைமை மையமாக விளங்கும் பவானிசாகர், மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிலையம் சென்னை நகருக்கு வெளியே விரைவில் மாற்றப்பட உள்ளது. இந்த நிலையத்தில் கீழ்க்காணும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

(1) வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கான பணி பயிற்சி—1 மாதம்.

(2) விரிவாக்க அலுவலர் (தொழில்) பணி பயிற்சி—1 மாதம்.

(3) ஊரக வளர்ச்சித்துறை மாவட்ட நிலை அதிகாரிகள் மற்றும் இதர அதிகாரிகளுக்கான பயிற்சி—15 நாட்கள்.

(4) ஊராட்சி, கல்வி, சமூக நலம் ஆகிய வெவ்வேறு விரிவாக்க அலு வலர்களுக்கும், ஊராட்சி நிர்வாக அலுவலர்களுக்குமான சிறப்புப் பயிற்சி— 15 நாட்கள்.

(5) இதர பயிற்சிகள்.

தி. கல்லுப்பட்டி மற்றும் சத்ய விஜய நகர ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலை யத்தில் உள்ள மனை இயல்பிரிவு பெண் பணியாளர்களுக்கு வேண்டிய பயிற்சி களை அளித்து வருகிறது.

ஒரே பணி விதிகளின்கீழ் (Single Service Rule) ) இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள், தட்டச்சர்கள் ஆகியோருக்கு 2 மாதகால பயிற்சியும், முதல் மற்றும் இரண்டாம் நிலை ஊர்நல அலுவலர்களுக்கு ஒரு மாத பயிற்சியும் எல்லா ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களிலும் நடத்தப் பட்டு வருகின்றன.

மேற்கூறிய பணி பயிற்சி வகுப்புகளைத்தவிர, "கிராமப்புற இளைஞர் களுக்கான சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ்" மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் அனுப்பும் இளைஞர்களுக்கு பல்வேறு தொழில் களில் பயிற்சி அளிக்கப்படுகின்றன. இந்தப் பயிற்சிகள் பற்றிய விவரப் கிரே கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சியின்போது பயிற்சியாளர் களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகை மற்றும் பயிற்சி நடத்த ஆகும் செலவு ஆகியவைகளை அந்தந்த மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் தங்கள் நிதியிலிருந்து ஏற்றுக்கொள்கின்றன. பயிற்சி அளிக்கப்படும் தொழிலைப் பொறுத்து இந்தப் பயிற்சி வகுப்புகள் 3 முதல் 8 மாத கால வரை நடத்தப்படுகின்றன.

(1) ஆயில் என்ஜின், மின்சார மோட்டார் செப்பனிடுதல், பராமரித்தல்.

(2) தெளிப்பான் அமைப்பு மற்றும் பயிர் பாதுகாப்பு தொழில் நுட்பம்.

(3) மாட்டுவண்டி மற்றும் பண்ணைகளுக்குத் தேவையான பொருட்களை வடிவமைத்தல்.

(4) மின்சாரம் மற்றும் வாயுமூலம் உலோகங்களைப் பற்றவைத்தல்.

(5) பம்பு வேலைகள்.

(6) மின்சார மோட்டார்களுக்கு கம்பி சுற்றுதல், மின் இணைப்பு தருதல்.

(7) கயிறு திரித்தல், பாய் முடைதல்.

(8) ஆட்டோ அமைப்பு மற்றும் ஓட்டுதல்.

(9) வானொலி, டிரான்சிஸ்டர், மற்றும் தொலைக் காட்சிப் பெட்டி செப்பனிடுதல், பராமரித்தல்.

(10) தகர வேலைகள்.

(11) சைக்கிள் பழுது பார்த்தல்.

31—12—1985 முடிய 1,110 கிராமப்புற இளைஞர்கள் "சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ்" (TRYSEM) ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றுள்ளனர்.

திருநெல்வேலியில் ஒரு ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையம் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. ஊராட்சி வளர்ச்சித் துறைப் பணியாளர்களின் தற்போதைய தேவையைக் கருத்தில் கொண்டு புதிய பயிற்சிகளை மேற்கொள்ள கொள்கை அளவில் அரசு முயற்சி செய்துள்ளது. தற்போதைய ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களை பலப்படுத்தும் நோக்கத்தோடு எல்லா ஊரக விரிவாக்கப்பயிற்சி நிலையங்களிலும் உள்ள பணியாளர் அமைப்பை மாற்றி அமைக்க அரசு திட்டம் தீட்டியுள்ளது. பவானிசாகர், தி. கல்லுப்பட்டி, கிருஷ்ணகிரி அணைக்கட்டு, சத்தியவிஜய நகரம் ஆகிய இடங்களில் உள்ள நான்கு ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கென அரசு ரூ. 5 லட்சம் ஒதுக்கி உள்ளது. வட்டார வளர்ச்சி அதிகாரி நிலைக்குக் கீழ்ப்பட்ட அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்க, ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள் பயன்



படுத்தப்படும். வட்டார வளர்ச்சி அதிகாரி மற்றும் அவருடைய நிலைக்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கும் மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிலையம் பயன்படுத்தப்படும்.

**ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் :**

தமிழ்நாட்டில் மொத்தம் 364 ஒன்றிய மருந்தகங்களும், 490 ஊரக மருந்தகங்களும் இயங்கி வருகின்றன. நவீன மருத்துவம், ஆயுர்வேதம், சித்த வைத்தியம் மற்றும் யுனானி வைத்தியம் கீழான சிகிச்சைகள் இந்த மருந்தகங்கள் மூலம் கிராம மக்களுக்கு கிடைக்கின்றன.

மேற்கூறிய இரு மருந்தகங்களையும் ஊராட்சி ஒன்றியங்களே பராமரித்து வருகின்றன. ஒன்றிய மருந்தகங்களைப் பொறுத்தவரையில் ஓர் ஒன்றியத்தில் ஒரு மருந்தகத்திற்கு ஆண்டுக்கு ரூ. 5,400 என்ற விகிதத்தில் அரசு மானியம் அளித்து வருகிறது.

• மருந்தகங்கள் திறப்பதை முன்னிட்டு ஏற்படும் தொடர் செலவுகளை (Running Expenditure) அரசே ஏற்றுக் கொள்வதென்றும், இவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படும் தொகை ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலையைக் கணக்கில் கொண்டு நிர்ணயிக்கப்படவேண்டும் என்றும் அரசு முடிவு எடுத்துள்ளது.

**பேரூராட்சி நிர்வாகம்.**

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்ப காலத்தில்தான் தற்போதைய ஊராட்சி நிர்வாக முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அது வரை மாவட்டக் கழகங்களும், சமுதாய நல வட்டாரங்களும் தனித்தனி அமைப்புகளாக இயங்கி வந்தன. வளர்ச்சிப் பணிகளை சமுதாய நல வட்டாரங்கள் கவனிக்க, இதர பணிகளை மாவட்டக் கழகங்கள் கவனித்துக் கொண்டன. 1958 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இந்த இரு அமைப்புகளையும் இணைத்தது. இந்த இருவகைப் பணிகளையும் நிறைவேற்ற ஊராட்சி ஒன்றியம் என்ற ஓரே அமைப்பை ஏற்படுத்த இச்சட்டம் வழி வகுத்தது. 1981 மே மாதம் வரை ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றிய நிர்வாகம் முழுவதும் ஊரக வளர்ச்சி இயக்குநரின் கீழ் இருந்தது. ஆனால், அதற்குப் பிறகு பேரூராட்சிகளுக்கென தனியாக ஓர் இயக்ககத்தை அரசு அமைத்தது. பேரூராட்சிகளின் நிர்வாகம் சிறப்புடனும், சீராகவும் விளங்குவதற்கு தூண்டுகோலாக அமையும் வண்ணம் பேரூராட்சிகளுக்கென தனி இயக்ககம் அரசால் அமைக்கப்பட்டது.

1. பேரூராட்சிகளின் வருவாய் விவரங்கள் :

பேரூராட்சிகள் ஆற்ற வேண்டிய பணிகளை, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1958 பட்டியலிட்டுக்காட்டுகிறது. பேரூராட்சிகளால் நிறைவேற்றப்பட வேண்டுமென அரசு அறிவிக்கும் பணிகளோடு, பேரூராட்சிகள் கண்டிப்பாக மற்றும் தங்கள் விருப்பம் போல் ஆற்ற வேண்டிய பணிகளையும் இச் சட்டம் பட்டியலிட்டு உள்ளது. வீட்டு வரி, தொழில் வரி, வாகன வரி போன்ற வரிகளை அரசு நிர்ணயித்துள்ள குறைந்த பட்ச மற்றும் அதிக பட்ச வரம்புக்கு ஏற்ப, வரி விதிக்கும் அதிகாரம் பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஒரு வகைக்காக, வேளாண்மை நிலங்களின் மீதும் வரி விதிக்க பேரூராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அங்காடி கட்டணம், வண்டி நிறுத்தும் இடங்களுக்கான கட்டணம், வருவாய் தரும் இனங்களின் மீதான கட்டணம், ஆபத்து மிகுந்த தொழில்களுக்கான உரிமக் கட்டணம், சொத்துக்களை கை மாற்றும்போது விதிக்கப்படும் தீர்வை, கேளிக்கை வரியில் இருந்து கிடைக்கும் பங்குத் தொகை ஆகியவை பேரூராட்சிக்கு வருவாய் தரும் வாயில்கள் ஆகும். ஊராட்சிகள் சட்டத்தின் 115 ஆவது பிரிவின்படி வசூலிக்கப்படும் உள்ளூர் செஸ் வரியில் ஒரு பங்கு பேரூராட்சிகளுக்கு உண்டு.

தமிழ்நாட்டில் மொத்தம் 645 பேரூராட்சிகள் உள்ளன. இந்தப் பேரூராட்சிப் பகுதியில் ஏறத்தாழ ஒரு கோடி மக்கள் வாழ்கின்றனர். இந்த பேரூராட்சிகள் முதல் நிலை, இரண்டாம் நிலை, தேர்வு நிலை, நகரியங்கள் என பிரிக்கப்பட்டுள்ளன. அதன் விவரம் வருமாறு :—

| | பேரூராட்சிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1. இரண்டாம் நிலை | [illegible] |
| 2. முதல் நிலை | 237 |
| 3. தேர்வு நிலை | 262 |
| 4. நகரியங்கள் | 17 |
| | 645 |



2. பேரூராட்சிகளுக்கு அளிக்கப்படும் நிதி உதவி :

பேரூராட்சிகளுக்கென தனி இயக்ககம் தொடங்கப்படும் முன்பு, அவைகளுக்கு மிகக் குறைந்த அளவில் தான் உதவித் தொகைகள் கிடைத்து வந்தன. ஆண்டு தோறும் வடிகால்கள் அமைப்பதற்காக (திட்டத்தில் சேராதது) ரூ. 0.45 இலட்சமும், சாலைகளில் கருங்கல் பாப்புவதற்கு (திட்டத்தில் சேராதது) ரூ. 15 இலட்சமும் மட்டுமே பேரூராட்சிகளுக்கு கிடைத்து வந்தன.

பொருளாதார நிலையைப் பொறுத்த வரையில் ஊராட்சிகளைப் போலவே உன்னத நிலையில் உள்ள பேரூராட்சிகளும் உண்டு. மிகவும் குறைந்த வருவாய் கொண்ட பேரூராட்சிகளும் உண்டு. 513 பேரூராட்சிகளைப் பொறுத்த வரையில் தனிநபர் வருமானம் ரூ. 25-க்குக் கீழ்தான். 132 பேரூராட்சிகளைப் பொறுத்த வரையில் தனிநபர் வருமானம் ரூ. 50-க்கும் கீழ்தான். அவ்வப்போது அகவிலைப் படிகள் உயர்த்தப்படுவதால், பேரூராட்சிகளின் நிர்வாகச் செலவு மிக அதிகமாகி அடிப்படை வசதிகளைக் கூட தம் பகுதிகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்க இயலாத நிலையில் அவை உள்ளன.

3. தன்னிறைவுத் திட்டம் :

பேரூராட்சிப் பகுதிகள் பின்தங்கிய நிலையில் இருப்பதையும், அவைகளின் நிதி நிலை மிகக் குறைவாக இருப்பதையும் கருதி, தன்னிறைவுத் திட்டத்தை பேரூராட்சிகளிலும் அரசு நிறைவேற்றியது. அடிப்படைத் தேவைகளைத் தீர்த்துவைக்கும் இந்தத் திட்டம் முழு மானியத்தோடு 1982-83 ஆம் ஆண்டு முதல் மூன்று கட்டங்களில் நிறைவேற்றப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன :—

(1) குடிநீர் வசதி.

(2) இணைப்புச் சாலைகள்.

(3) சிறு பாலங்கள்.

(4) வடிகால்கள்.

(5) ஆதி திராவிடர் பயானப் பாதை.

(6) துணி வெளுக்கும் இடங்கள் (தோபிகானா).

(7) தெரு விளக்குகள்.

(1) ஆயில் எஞ்ஜின், மின்சார மோட்டார் செப்பனிடுதல், பராமரித்தல்.

(2) தெளிப்பான் அமைப்பு மற்றும் பயிர் பாதுகாப்பு தொழில் நுட்பம்.

(3) மாட்டுவண்டி மற்றும் பண்ணைகளுக்குத் தேவையான பொருட்களை வடிவமைத்தல்.

(4) மின்சாரம் மற்றும் வாயுமூலம் உலோகங்களைப் பற்றவைத்தல்.

(5) பம்பு வேலைகள்.

(6) மின்சார மோட்டார்களுக்கு கம்பி சுற்றுதல், மின் இணைப்பு தருதல்.

(7) விதை திரித்தல், பாய் முடைதல்.

(8) ஆட்டோ அமைப்பு மற்றும் ஓட்டுதல்.

(9) வானொலி, டிரான்சிஸ்டர், மற்றும் தொலைக் காட்சிப் பெட்டி செப்பனிடுதல், பராமரித்தல்.

(10) தகர வேலைகள்.

(11) சைக்கிள் பழுது பார்த்தல்.

31—12—1985 முடிய 1,110 கிராமப்புற இளைஞர்கள் "சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ்" (TRYSEM) ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றுள்ளனர்.

திருநெல்வேலியில் ஒரு ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையம் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. ஊராட்சி வளர்ச்சித் துறைப் பணியாளர்களின் தற்போதைய தேவையைக் கருத்தில் கொண்டு புதிய பயிற்சிகளை மேற் கொள்ள கொள்கை அளவில் அரசு முயற்சி செய்துள்ளது. தற்போதைய ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களை பலப்படுத்தும் நோக்கத்தோடு எல்லா ஊரக விரிவாக்கப்பயிற்சி நிலையங்களிலும் உள்ள பணியாளர் அமைப்பை மாற்றி அமைக்க அரசு திட்டம் தீட்டி உள்ளது. பவானிசாகர், தி. கல்லுப்பட்டி, கிருஷ்ணகிரி அணைக்கட்டு, சத்திய விஜய நகரம் ஆகிய இடங்களில் உள்ள நான்கு ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் அடிப் படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கென அரசு ரூ. 5 லட்சம் ஒதுக்கி உள்ளது. வட்டார வளர்ச்சி அதிகாரி நிலைக்குக் கீழ்ப்பட்ட அலுவலர் களுக்குப் பயிற்சி அளிக்க, ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள் பயன்



படுத்தப்படும். வட்டார வளர்ச்சி அதிகாரி மற்றும் அவருடைய நிலைக்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கும் மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிலையம் பயன் படுத்தப்படும்.

**ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் :**

தமிழ்நாட்டில் மொத்தம் 364 ஒன்றிய மருந்தகங்களும், 490 ஊரக மருந்தகங்களும் இயங்கி வருகின்றன. நவீன மருத்துவம், ஆயுர்வேதம், சித்த வைத்தியம் மற்றும் யுனானி வைத்தியம் கியூரா சிகிச்சைகள் இந்த மருந்தகங்கள் மூலம் கிராம மக்களுக்கு கிடைக்கின்றன.

மேற்கூறிய இரு மருந்தகங்களையும் ஊராட்சி ஒன்றியங்களே பராமரித்து வருகின்றன. ஒன்றிய மருந்தகங்களைப் பொறுத்தவரையில் ஓர் ஒன்றியத் தில் ஒரு மருந்தகத்திற்கு ஆண்டுக்கு ரூ. 5,400 என்ற விகிதத்தில் அரசு மானியம் அளித்து வருகிறது.

• மருந்தகங்கள் திறப்பதை முன்னிட்டு ஏற்படும் தொடர் செலவுகளை (Running Expenditure) அரசே ஏற்றுக் கொள்வதென்றும், இவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படும் தொகை ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலையைக் கணக்கில் கொண்டு நிர்ணயிக்கப்படவேண்டும் என்றும் அரசு முடிவு எடுத் துள்ளது.

## பேரூராட்சி நிர்வாகம்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்ப காலத்தில்தான் தற்போதைய ஊராட்சி நிர்வாக முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அது வரை மாவட்டக் கழகங்களும், சமுதாய நல வட்டாரங்களும் தனித்தனி அமைப்புகளாக இயங்கி வந்தன. வளர்ச்சிப் பணிகளை சமுதாய நல வட்டாரங்கள் கவனிக்க, இதர பணிகளை மாவட்டக் கழகங்கள் கவனித்துக் கொண்டன. 1958 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இந்த இரு அமைப்புகளையும் இணைத்தது. இந்த இருவகைப் பணிகளையும் நிறைவேற்ற ஊராட்சி ஒன்றியம் என்ற ஒரே அமைப்பை ஏற்படுத்த இச்சட்டம் வழி வகுத்தது. 1981 மே மாதம் வரை ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றிய நிர்வாகம் முழுவதும் ஊரக வளர்ச்சி இயக்குநரின் கீழ் இருந்தது. ஆனால், அதற்குப் பிறகு பேரூராட்சிகளுக்கென தனியாக ஓர் இயக்ககத்தை அரசு அமைத்தது. பேரூராட்சிகளின் நிர்வாகம் சிறப்புடனும், சீராகவும் விளங்குவதற்கு தூண்டுகோலாக அமையும் என்னும் பேரூராட்சிகளுக்கென தனி இயக்ககம் அரசால் அமைக்கப்பட்டது.

4. (ஆ) குடிநீர் வழங்கலில் உலக வங்கியின் உதவி:

உலக வங்கி உதவியுடன் சுமார் ரூ. 42.81 கோடி மதிப்பீட்டுள்ள 75 குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் 66 திட்டங்கள் 75 சதவிகித மானியத்தையும், 9 திட்டங்கள் முழு மானியத்தையும் பெறும்.

4. (இ) கை இறைப்பான் மற்றும் மின்விசை இறைப்பான் பராமரிப்பு:

12,492 கை இறைப்பான்களையும், 2,449 மின்விசை இறைப்பான்களையும் பேரூராட்சிகள் பராமரித்து வருகின்றன. இறைப்பான்களை பராமரிப்பதற்கும், நீர் வற்றிப்போன இறைப்பான்களுக்கு பதிலாக புதிய இறைப்பான்கள் அமைக்கவும், துரு பிடித்த இரும்பு மேல்நிலை நீர் தொட்டிகளுக்குப் பதிலாக துரு பிடிக்காத காங்கிரீட் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கும், 1982-86 ஆம் ஆண்டுகளில் அரசு ரூ. 50 இலட்சம் வழங்கி உள்ளது. 1986-87-ல் இவ்வகைகளுக்காக கூடுதலாக நிதி வழங்கப்படும்.

5. குறைந்த செலவில் நிறைந்த சுகாதாரம்:

(அ) மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட சிறு மற்றும் நடுத்தர நகர்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் (IDSMI):

இத் திட்டத்தின் கீழ் குறைந்த செலவில் நிறைந்த சுகாதார வசதிகளை அளிப்பதற்காக ஓசூர் மற்றும் கள்ளக்குறிச்சி பேரூராட்சிகள் மத்திய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதற்கென மத்திய அரசு ரூ. 27.40 இலட்சத்திற்கு அனுமதியும் வழங்கி உள்ளது. இந்தத் தொகையில் ரூ. 14.60 இலட்சத்தை மத்திய அரசும், ரூ. 12.80 இலட்சத்தை மாநில அரசும் ஏற்றுக் கொள்ளும். இத்தொகை, 739 உலர் கழிவறைகளை சுகாதார கழிப்பிடங்களாக மாற்றவும், 2,200 புதிய கழிப்பறைகள் கட்டவும் பயன்படுத்தப்படும்.

(ஆ) மக்கள் உரிமைப் பாதுகாப்புச் சட்டம், 1955—துப்புரவுப் பணியாளர்களுக்குத் தொல்லையில் இருந்து விடுதலை:

இத் திட்டத்தை 3 பேரூராட்சியில் நிறைவேற்றுவதற்காக மத்திய அரசு 40.00 இலட்ச ரூபாய்க்கு அனுமதி வழங்கி உள்ளது. இச்செலவுத் தொகையை மத்திய அரசும் நம் மாநில அரசும் சரி பாதியாக ஏற்றுக்கொள்ளும். மலக் கழிவுகளைத் துப்புரவு செய்யும் பணியாளர்களுக்கு சமூகம் விதித்த கொடுங்கோன்மையிலிருந்து அவர்கள் விடுவிக்கப்படுவார்கள். விடுவிக்கப்பட்டு வேறு பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள். இத் திட்டத்தின் கீழ், பழைய உலர் கழிவறைகள், நவீன சுகாதார கழிவறைகளாக மாற்றப்படும்.





6. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்:

1981 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது கிராமப் பகுதிகளாகக் கருதப்பட்ட பேரூராட்சிகளுக்குத் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தை விரிவுபடுத்த, தொடர்ந்து வற்புறுத்திய பின்பு மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. 1981 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 432 பேரூராட்சிகள் கிராமப் பகுதியாக கருதப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டில் 137 பேரூராட்சிப் பகுதியில் ரூ. 585.00 இலட்சம் செலவில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தை நிறைவேற்ற அரசு அனுமதி வழங்கியுள்ளது. சாலைகள் மேம்பாடு, வடிகால் திட்டங்கள், சமூகக் காடு வளர்ப்பு, கிடங்குகள், சமூகக் கூடங்கள், அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல் போன்ற சமுதாயச் சொத்துக்களை உருவாக்கும் பணிகள் இத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

7. நகரிய முன்னேற்றம்:

அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்; நகரங்களில் உள்ள பேருந்து நிலையங்கள், அங்காடி வளாகம், சந்தைகள், திறந்த வெளி திரை அரங்குகள், தெரு விளக்குகள், குழந்தைகள் மனமகிழ் மன்றங்கள், கட்டணக் கழிப்பிடங்கள் ஆகியவைகள் அமைக்கும் பணியில், மாமல்லபுரம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி நகரியங்களில் ரூ. 58.00 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

8. ஒருங்கிணைந்த நகர்ப்புற முன்னேற்ற திட்டம்:

(அ) மத்திய அரசின் பங்கு:

மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட "சிறு மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்" தலா ரூ. 80.00 இலட்சம் மதிப்பீட்டில் ஓசூர் மற்றும் கள்ளக்குறிச்சி பேரூராட்சிப் பகுதியில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அங்காடி வளாகங்கள், ஆட்டுத்தொட்டி, மற்றும் பேருந்து நிலையங்கள் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வருகின்றன.

தன்னிறைவுத் திட்டத்தின் மூன்று கட்டங்கள் பற்றிய விவரம் வருமாறு:—

(i) முதல் கட்டம் (1982-83):

முதற் கட்டத்தில் ஒரு பேரூராட்சிக்கு ரூ. 3.42 இலட்சம் என்ற விகிதத்தில் மொத்தம் 146 பேரூராட்சிகளில் ரூ. 5.00 கோடி செலவில் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இதில் முடிக்கப்படாத வேலைகளைச் செய்து முடிப்பதற்காகவும் கண்ட்ரோல் விலை அல்லாத சிமெண்ட் வாங்கப் பட்டதால் ஏற்பட்ட செலவை ஈடுகட்டவும் கூடுதல் நிதியாக ரூ. 101.32 இலட்சம் அரசு வழங்கியது.

(ii) இரண்டாம் கட்டம் (1983-84):

ஒரு பேரூராட்சிக்கு ரூபாய் இரண்டரை இலட்சம் விகிதத்தில் 200 பேரூராட்சியில் மொத்தம் ரூ. 5 கோடி செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. இதில் முடிக்கப்படாத வேலைகளைச் செய்து முடிக்க ரூ. 64.78 இலட்சம் கூடுதல் நிதியை அரசு வழங்கியுள்ளது.

(iii) மூன்றாவது கட்டம் (1984-85):

ஒரு பேரூராட்சிக்கு ரூ. 2.92 இலட்சம் செலவில், 277 பேரூராட்சியில் மொத்தம் ரூ. 800.00 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் நிறைவேற்றப் பட்டது.

(iv) புதிதாக அமைக்கப்பட்ட பேரூராட்சிகள் (1985-86).

1985-86 ஆம் ஆண்டு புதிதாக அமைக்கப்பட்ட 29 பேரூராட்சியில் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்காக ரூ. 84.68 இலட்சத்திற்கு அரசு அனுமதி அளித்தது





மொத்தம் உள்ள எல்லா பேரூராட்சிகளிலும் சேர்ந்து தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதைப் பற்றிய சாதனைப் பட்டியல் வருமாறு:—

1982-83 முதல் 1984-85 வரை மூன்று கட்டங்களாக பேரூராட்சியில் நிறைவேற்றப்பட்ட தன்னிறைவுத் திட்டத்தின் வெற்றி பற்றிய புள்ளி விவரங்கள்:

| வரிசை எண். | மேற்கொள்ளப் பட்ட பணி. | ஏற்படுத்தப்பட்ட சாதனை. (பணியின் எண்ணிக்கை) | செலவிடப் பட்ட நிதி. (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | குடிநீர் வழங்குதல் | 1,341 | 286.11 |
| 2 | இணைப்புச் சாலைகள் .. | 4,502 | 557.23 |
| 3 | சிறு பாலங்கள் .. | 2,469 | 238.60 |
| 4 | வடிகால்கள் .. | 5,418 | 952.32 |
| 5 | ஆதி திராவிடர் மயானப் பாதை | 184 | 18.26 |
| 6 | துணி வெளுக்கும் இடங்கள் (தோபி கானா) | 34 | 16.89 |
| 7 | தெரு விளக்குகள் .. .. | 297 | 2.19 |
| | | 14,245 | 2,071.50 |

பேரூராட்சிகளுக்கென தனி இயக்ககம் அமைக்கப்பட்டபின்பு ஏற்பட்ட குறிப்பிடத்தக்க சாதனைகள் வருமாறு:—

1. (அ) ஊரக குடிநீர் வழங்குதல்:

1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் 432 பேரூராட்சிகள் கிராமப் பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. எனவே கிராம ஊராட்சிகளைப்போல இப் பகுதிகளையும் கருதிய அரசு, மூழு மானியத்தோடு கூடிய, ஊரக குடிநீர்த் திட்டத்தை இப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தியது.

(ஆ) மாநில அரசின் பங்கு :

இத்திட்டத்தின்கீழ் மாநில அரசின் பங்கான 35 பேரூராட்சியில் சந்தைகள் மேம்பாடு, பேருந்து நிலையம், அங்காடி வளாகங்கள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன :—

| வரிசை எண். | திட்டம். | வேலைகளின் எண்ணிக்கை. | மதிப்பீட்டுச் செலவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) (ரூபாய் இலட்சத்தில்) |
| 1. | பேருந்து நிலையங்கள் .. | 16 | 156.40 |
| 2. | சந்தை மற்றும் அங்காடி வளாகங்கள் கட்டுதல். | 13 | 51.76 |
| 3. | கட்டணக் கழிப்பிடங்கள் .. | 21 | 11.65 |
| | மொத்தம் .. | 50 | 219.81 |

9. ஆதிதிராவிடர் குடியிருப்பு மேம்பாடுகள் :

ஆதிதிராவிடர் பகுதி ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், சாலை வசதி, குடிநீர் வசதி, வடிகால் வசதி, தெரு விளக்கு போன்றவை ஏற்படுத்தப்பட ரூ. 10.00 இலட்சத்திற்கு அரசு அனுமதி வழங்கி உள்ளது. இத்தொகை 1985-86 ஆம் ஆண்டில், ஒரு குடியிருப்புக்கு ரூ. 2 இலட்சம் வீதம் 5 குடியிருப்புகளில் செலவிடப்படும்.

10. ஒருங்கிணைந்த நகர்ப்புற முன்னேற்றத் திட்டம் :

(ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அடங்கியது).

(அ) மாநில அரசின் பங்கு :

இத்திட்டத்தின்கீழ் பயன்பெற 32 பேரூராட்சிகளை நகர் மற்றும் ஊரமைப்பு வாரியம் தேர்ந்தெடுத்துள்ளது. ஒரு பேரூராட்சிக்கு ரூ. 20 இலட்சம் வீதம் வழங்கப்பட்டு, பேருந்து நிலையம், சந்தைகள் போன்றவை ஏழாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் கட்டப்படும்.

(ஆ) மைய அரசின் பங்கு :

இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசின் பங்காக நகர் மற்றும் ஊரமைப்பு வாரியம் தேர்ந்தெடுத்த 8 பேரூராட்சிகள் அடங்கிய பகுதியில் 5 திட்டங்கள் நிறைவேற்றப்படும். ஒரு திட்டத்திற்கு ரூ. 80.00 இலட்சம் வீதம் இத்திட்டம் ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் நிறைவேற்றப்படும்.



நகராட்சி நிர்வாகம்.

கொள்கை விளக்கக் குறிப்பு.

கோரிக்கை எண் 28.

1986 87.

98 நகராட்சிகளும், 8 நகரியங்களும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் நிர்வாகத்தின்கீழ் இயங்கி வருகின்றன. அவைகளின் விவரம் பின்வருமாறு :—

| வரிசை எண். | நகராட்சியின் நிலை. | நகராட்சிகளின் எண்ணிக்கை. | நகரியங்களின் எண்ணிக்கை. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | சிறப்பு நிலை | 8 | .. | 8 |
| 2. | தேர்வு நிலை | 11 | 5 | 16 |
| 3. | முதல் நிலை | 35 | 1 | 36 |
| 4. | இரண்டாம் நிலை | 31 | 2 | 33 |
| 5. | மூன்றாம் நிலை | 13 | .. | 13 |
| | மொத்தம் .. | 98 | 8 | 106 |

அண்மைக் காலமாக, நகரங்கள் பல்வகையில் வளர்ச்சியடைந்து வருவதால் கிராமங்களிலிருந்து பெருமளவில் மக்கள் நகரங்களுக்கு குடிபெயர்ந்து வருவது ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதன் விளைவாக நகர்ப் புறங்களில் ஏற்படும் பிரச்சினைகளும் அதிகரித்து உள்ளன. இப்பிரச்சினைகளைத் தீர்த்து, பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை, இன்றியமையா வசதிகளைச் செய்து தரும் பணி பெருமளவில் அதிகரிப்பது தவிர்க்க இயலாததாகும்.

நகர்ப்புறங்களில் மக்கட்தொகை பெருமளவில் பெருகி வருவது என்பதனை கீழ்க்காணும் குறிப்புகள் தெளிவாக்குகின்றன.

| | | |
|---|---|---|
| மக்கட்தொகை | 1961 கணக்கின்படி | 45,11,165 |
| மக்கட்தொகை | 1971 கணக்கின்படி | 57,13,328 |
| மக்கட்தொகை | 1981 கணக்கின்படி | 74,36,961 |
| மக்கட்தொகை | 1985 (உத்தேச மைய ஆண்டு மக்கட் தொகை) | 81,26,414 |

[1986 ஏப்ரல் 26

கடந்த சில ஆண்டுகளில் பொருட்களின் விலை ஏற்றத்தினாலும், பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதில் ஏற்றமும், அரசு ஊழியர்களுக்கு இணையாக சம்பள விகிதங்களை திருத்தி அமைத்தாலும், மேலும் அகவிலைப்படி உயர்வினாலும் ஏறக்குறைய அனைத்து நகராட்சி நிதி நிலைமைகளும் பற்றாக் குறையாகவே உள்ளது. இதன் விளைவாக அநேக நகராட்சிகளில் மக்களுக்கு தேவையான இன்றியமையாத அடிப்படை வசதிகளை அளிக்க இயலாத நிலைமையில் உள்ளன. இந்நிலைமையை சமாளிக்க அரசு மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அதிகரிக்கும் பொருட்டு பல்வேறு திட்டங்களை தீட்டியும், நகராட்சி நிதி நிலைமையை பெருக்க வருவாய் தர தக்க இனங்களின் கீழ் பல திட்டங்களை அறிமுகப்படுத்தியும், நகராட்சிகளின் நிர்வாக செயல் திறனை மேம்படுத்தி வருகிறது.

ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் அரசு ரூ. 3,505,64 இலட்சத்தில் கீழ்க் காணும் திட்டங்களை நிறைவேற்ற நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 1985-86 மற்றும் 1986-87 நிதி ஆண்டுகளில் ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்துள்ள விவரங்கள் பின்வருமாறு :—



றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடும், செலவினமும், மற்றும் ஏழாவது ஐந்தா... ட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விவரமும், மற்றும் 1985-86 & 1986-87 ஆகிய நிதி ண்டுகளில் அரசின் நிதி உதவி விவரங்களும் பின்வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்)

| பகுதி தலைப்பின் விபரம். | ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு. | ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செல வினம். | ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு. | நிதி ஒதுக்கீடு. 1985—86. | நிதி ஒதுக்கீடு. 1986-87. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| பகுதி. 1. நகர மேம்பாடு | | | | | |
| 1. நகராட்சி ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளி கட்டிடங்கள் கட்ட நிதி உதவி. | 84.87 | 84.87 | 100.00 | 20.00 | 20.00 |
| 2. நகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி கட்டிடங்கள் கட்ட நிதி உதவி. | 60.00 | 60.00 | 50.00 | 10.00 | 10.00 |
| 3. தனியார் தெருக்களை அபிவிருத்தி செய்யும் சுழல் நிதி திட்டம். | 25.00 | 25.00 | 50.00 | .. | .. |
| 4. நகராட்சி குடிசை பகுதிகளில் தொலைக் காட்சி பெட்டிகள் அமைத்தல். | .. | .. | 20.00 | 2.00 | 2.00 |
| 5. தன்னிறைவு திட்டம் | 1,347.50 | 1,366.49 | 1,500.00 | 500.00 | 0.01 |
| 6. தமிழ்நாடு நகர்ப்புற பயிற்சி நிலையத்திற்கு நிதி உதவி வழங்குதல். | 5.00 | 7.17 | .. | .. | 0.01 |

| பகுதி தலைப்பின் விபரம். | ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு. | ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவினம். | ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு. | நிதி ஒதுக்கீடு. 1985–86. | நிதி ஒதுக்கீடு. 1986–87. |
|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 7. நகராட்சி ஊழியர்களுக்கு வீடு கட்ட முன் பணம் வழங்குதல். | 50.00 | 14.00 | 220.00 | 50.00 | 50.00 |
| 8. விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம். | 300.00 | 300.00 | 250.00 | 40.00 | 40.00 |
| 9. தமிழ்நாடு நகராட்சி நிதி உதவிக் கழகத்திற்கு நிதி உதவி. | .. | .. | 100.00 | .. | 0.01 |
| 10. பொது சுகாதார லாரிகள் வாங்குதல். | .. | .. | .. | 99.65 | 0.01 |
| பகுதி 2. திட்டம் 1986–87-ஆம் ஆண்டு. | | | | | |
| 1. பிற்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம். | 50,00 | 50,00 | 50.00 | .. | 10.00 |
| 2. மண்டல நகராட்சி நிர்வாக இயக்கக கட்டிடங்கள் கட்டுவதற்கு நிதி உதவி. | 8.00 | 8.00 | .. | 5.00 | 5.00 |
| 3. வடிகால்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு. | .. | .. | 50.00 | .. | 15.00 |
| 4. நகராட்சி மருந்தகங்களை அபிவிருத்தி செய்தல். | .. | .. | [illegible]0.00 | .. | 11.00 |
| 5. தாய்சேய் நல விடுதிகளின் முன்னேற்றத்திற்கு நிதி உதவி. | .. | .. | 50.00 | .. | 10.00 |
| 6. நகராட்சி துப்புரவு தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுத்தல். | .. | .. | 150.00 | .. | ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினர் நலத் துறைக்கு பிரேரணைகள் அனுப்பப்பட்டுள்ளது. |
| புதிய திட்டங்கள் : | | | | | |
| 1. நலிவுற்ற நகராட்சிகளுக்கு அகவிலைப்படி அளிப்பதன் காரணமாக ஏற்படும் நிதி பளுவை சரிகட்ட மான்யம் வழங்குதல். | .. | .. | 160.00 | .. | .. |
| 2. நகரசுத்தி தொழிலாளர் எண்ணிக்கையை அதிகரித்தல். | .. | .. | 200.00 | .. | .. |
| மொத்தம் .. | 1,930.37 | 1,915.53 | 3,000.00 | 726.65 | 173.04 |

நிதி பற்றாக்குறையினாலும், அநேக நகராட்சிகளில் நிதி வசதிக்கான ஆதாரங்கள் பெருகாமலிருப்பதாலும், நகராட்சிகள் பழைய கழிவுகளை அகற்றும் வண்டிகளுக்குப் பதிலாக புதிய லாரிகள் மற்றும் வண்டிகள் வாங்க முடியாமலிருக்கின்றன. இதனால் அநேக நகராட்சிகளில் துப்புரவுப் பணி சீர் கேடு அடைந்து மக்களின் **கண்டனத்துக்கு உள்ளாகின்றன.** நகர்ப்புற சுகாதாரத்தைச் சீராக வைக்கும் பொருட்டு துப்புரவு லாரிகள் வாங்க நிதியுதவி அளிக்க அரசு முன்வந்துள்ளது. இதற்காக, நடப்பு நிதியாண்டில் ரூ. 1,000 அடையாள ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### இயற்கை சீற்றத்தால் ஏற்பட்ட இழப்புகளுக்கு அரசின் உதவி வெள்ள நிவாரணம்.

1985 நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பழுதடைந்த சாலைகள், கட்டிடங்கள், குடிநீர் விநியோக உபகரணங்கள் ஆகியவற்றை பழுதுபார்த்து, புதுப்பிக்க 1985-86-ல் அரசால் ரூ. 234.92 இலட்சங்கள் வழங்கப்பட்டது. அத்தொகையில் 734 சாலைப்பணிகள், 131 கட்டிடப் பணிகள், 44 குடிநீர் விநியோகப் பணிகள் ஆகியவை செங்கற்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகள் மற்றும் வட ஆற்காடு மாட்டத்திலுள்ள **திருவத்திபுரம் ஆகிய** 28 நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டது.

### வறட்சி நிவாரணம்:

வறட்சி நிவாரணத்தின் கீழ் 1985-86-ல் ரூ. 62.80 இலட்சங்கள் 11 நகராட்சிகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்கவும் புதிய ஆழ்துளை குழாய்கள் அமைக்கவும், தற்போதுள்ள ஆழ்துளை குழாய்களை ஆழப் படுத்தவும், ஊரணிகளுக்கு பழுது பார்த்தல், தூர் எடுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காகவும் அரசால் வழங்கப்பட்டது.

### தன்னிறைவு திட்டம்:

பல நகராட்சிகளின் நிதிநிலைமை மிகவும் பற்றாக்குறையாக உள்ளதன் காரணமாக நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்க இயலாத நிலையினை அறிந்து அரசு இதன் பொருட்டு தன்னிறைவு திட்டம் என ஒரு புதிய திட்டத்தினை அறிமுகப்



படுத்தியது. படிப்படியாக ஆண்டுதோறும் இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள 98 நகராட்சிகள் மற்றும் 8 நகரியங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் அரசு வழங்கிய நிதி உதவி பின்வருமாறு :

| கட்டம் ஆண்டு. | | பயனடைந்த நகராட்சி எண்ணிக்கை. | மேற்கொள்ளப் பட்ட வேலை களின் எண்ணிக்கை. | அரசு வழங்கிய தொகை (ரூபாய் இலட் சத்தில்). |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| 1. | 1982–83 .. | 20 | 1,492 | 500.00 |
| 2. | 1983–84 .. | 31 | 1,738 | 500.00 |
| 3. | 1984–85 .. | 30 | 1,560 | 500.00 |
| 4. | 1985–86 .. | 25 | 1,166 | 347.50 |
| | | 106 | 5,956 | 1,847.50 |

நடப்பு ஆண்டில் மூன்றாம் மற்றும் இறுதி தவணைத் தொகையாகிய ரூ. 152.50 இலட்சத்தை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது..

நகர்ப்புறங்களில் உள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டிய தேவையை ஒப்பிடுகையில் இத்திட்டத்தின் கீழ் அரசு வழங்கும் நிதி உதவி குறைவு. எனவே, இத்திட்டத்தை மீண்டும் இரண்டாவது முறையாக அனைத்து நகராட்சிகளும் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. இத் திட்டத்திற்கென அரசு ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 1,500 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### பஞ்சாயத்துக்களை மூன்றாம் நிலை நகராட்சியாக உருவாக்குதல்.

லல நகர பஞ்சாயத்துக்கள் மூன்றாம் நிலை நகராட்சிகளாக உருவாக்க ு நிர்ணயித்துள்ள நிதி அளவினை எட்டியுள்ளன. எனினும், அரசு தேர்ந் ுக்கப்பட்ட மன்ற தலைவர்கள் பொறுப்பேற்றதும் இதனை பரிசீலனை ய்யலாம் என தீர்மானித்தது தற்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட றங்கள் அமைக்கப்பட்டதால் தகுதியுடைய நகர பஞ்சாயத்துக்களை ன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கும் திட்டத்தினை அரசு ரிசீலனை செய்ய உள்ளது.

| பகுதி தலைப்பின் விபரம். | ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு. | ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செல வினம். | ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு. | நிதி ஒதுக்கீடு: 1985–86. | நிதி ஒதுக்கீடு: 1986–87. |
|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| பகுதி 2. சாலைகள் மற்றும் பாலங்கள் : | | | | | |
| நகராட்சி சாலைகள் மற்றும் பாலங்கள் கட்ட நிதி உதவி வழங்கல். | 150.00 | 150.00 | 250.00 | 55.75 | 55.00 |
| மத்திய அரசு ஆதரவுடன் செயல்படுத்தும் திட்டங்கள் : | | | | | |
| 1. மத்திய அரசின், நகர்புற குடிசை பகுதிகளின் சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டத்திற்கு நிதி உதவி வழங்கல். | 102.06 | 102.06 | 200.00 | 57.00 | 57.00 |
| 2. குறைந்த செலவிலான கழிவறை கட்டும் திட்டம் (4 நகராட்சிகளில் மத்திய அரசு செயல்படுத்தும் திட்டம்) | 54.77 | 54.77 | 55.64 | 55.64 | 0.01 |
| .. | 156,83 | 156.83 | 255.64 | 112.64 | 57.01 |
| **சுருக்கம்.** | | | | | |
| 1. பகுதி 1 நகர்புற மேம்பாடு | 1930.37 | 1915.53 | 3,000.00 | 726.65 | 173.04 |
| 2. பகுதி 2–சாலைகள் மற்றும் பாலங்கள். | 150.00 | 150.00 | 250.00 | 55.75 | 55.00 |
| 3. பகுதி 3 மத்திய அரசு ஆதரவுடன் செயல்படுத்தும் திட்டங்கள். | 156.83 | 156.83 | 254.64 | 112.64 | 57.01 |
| | 2,237.20 | 2,222.36 | 3.505.64 | 895.04 | 285.05 |

**நகராட்சி தேர்தல்கள் :**

மொத்தம் உள்ள 98 நகராட்சிகளில் 97 நகராட்சிகளில் நகர்மன்ற தலைவர் பதவிக்கும் நகர்மன்ற உறுப்பினர் பதவிக்கும் தேர்தல்கள் அரசால் நடத்தப்பட்டன. மயிலாடுதுறை நகராட்சியைப் பொறுத்தவரையில் நகர மன்ற தலைவர் பதவிக்கும் வார்டு எண் 1 க்கும் நீதிமன்றம் விதித்த தடையால் தேர்தல்கள் நடைபெறவில்லை. மேலும் சீர்காழி நகராட்சியில் வார்டு எண் 1லும் மேலப்பாளையம் நகராட்சியில் வார்டு எண் 22லும் சேலம் நகராட்சியில் வார்டு எண் 13லும் தேவகோட்டை நகராட்சியில் வார்டு எண் 12லும் தேர்தலுக்கு வேட்பு மனுதாக்கல் செய்த வேட்பாளர்கள் ஒரு சிலர் மரணமடைந்ததன் காரணமாக தேர்தல் மேற்கொண்ட வார்டுகளில் ஒத்தி வைக்கப்பட்டது.

மயிலாடுதுறை நகராட்சியில் நகர்மன்ற தலைவர் பதவிக்கும் நகர்மன்ற உறுப்பினர் பதவிக்கும் நீதி மன்றம் விதித்த தடை நீக்கப்பட்டதும் தேர்தல் நடத்தப்படும். வேட்பாளர்கள் மரணமடைந்ததன் காரணமாக ஒத்தி வைக்கப்பட்ட நகர்மன்ற உறுப்பினர்களுக்காக தேர்தல் புதிதாக நடத்தப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றங்கள் அந்நகரப் புறங்களில் எல்லா வகை அபிவிருத்திகளையும் மேற்கொள்ளவும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நகர மேம்பாட்டு தலைப்பின்கீழ் உள்ள அனைத்து திட்டங்களையும் நல்ல முறையில் செயல் படுத்தவும் அரசுக்கு உறுதுணையாக இருப்பார்கள் என நம்ப படுகிறது.

**நகராட்சிகளில் ஐந்தாண்டுக்கு ஒருமுறை சொத்துவரி முறைப் படுத்துதல்.**

இதுவரை, நகராட்சிகளில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை சொத்து வரி திருத்தம் செய்வது தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றம் வரும் வரை ஒத்தி வைக்கப்பட்டது. தற்பொழுது அரசாணை எண். 280, ந. நி. மற்றும் கு. வ. துறை, நாள் 3—3—1986-ல் சொத்துவரி திருத்தம் செய்வதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. சொத்து வரி திருத்தம் வெகுநாட்களாக நிலுவையாக உள்ளது. தற்சமயம் இதனை எடுத்துக் கொள்வதால் நகராட்சிகளின் வருமானம் கணிசமான அளவுக்கு உயரக்கூடும். அதே சமயம் வெவ்வேறு சமயங்களில் செய்யப்பட்ட சொத்துவரி விதிப்புகளில் உள்ள வேறுபாடுகளும் களையக்கூடும். அதனால் சொத்துவரி திருத்தம் வெகு விரைவில் எடுத்துக்கொள்ளப்பட்டு 1—10—86 முதல் அமுல்படுத்தப்படும். இதனால் நகராட்சிகளின் வருமானத்தில் கூடுதலாக 30 சதவீதம் வருமானம் கிடைக்கும்



என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் பொது மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கவும், நகராட்சிகளின் நிதி நிலைமையை மேம் படுத்தவும் இயலும்.

**சென்னை மாநகராட்சி.**

**முன்னுரை.**

இந்தியாவின் பழம்பெரும் மாநகராட்சிகளுள் ஒன்றான சென்னை மாநகராட்சி கிழக்கிந்திய கம்பெனியால் பிறப்பிக்கப்பட்ட சட்டத்தின் கீழ் 29—9—1688ல் நிறுவப்பட்டது. 1792 ஆம் ஆண்டு பாராளுமன்ற சட்டம் சென்னை மாநகராட்சிக்கு சென்னையில் வரிகள் வசூலிக்கும் அதிகாரத்தினை வழங்கியது. 1919 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட (அவ்வப்போது திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது) சென்னை மாநகராட்சி சட்டம் தற்பொழுது செயல்பட்டு வருகிறது.

**மக்கட்தொகை மற்றும் பரப்பளவு.**

1978 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட 12 பஞ்சாயத்துக்கள் இணைக்கப்பட்டதன் மூலம் சென்னை மாநகராட்சியின் பரப்பளவு 174 சதுர கிலோ மீட்டராக பெருகியுள்ளது :—

1. கொடுங்கையூர்.
2. வில்லிவாக்கம்.
3. கொளத்தூர்.
4. எருக்கஞ்சேரி.
5. விருகம்பாக்கம்.
6. சாலி கிராமம்.
7. கோடம்பாக்கம்.
8. வேளச்சேரி.
9. திருவான்மியூர்.
10. கனகம் தரமணி.
11. கோயம்பேடு.
12. திருமங்கலம்.

1961-ல் 17.2 இலட்சங்களாக இருந்த சென்னை மாநகராட்சியின் மக்கட்தொகை 1981-ல் 34 இலட்சங்களாக அதிகரித்துள்ளது. தற்பொழுதுள்ள ஜனத்தொகை ஏறத்தாழ 36 இலட்சங்களாகும். சென்னை நகருக்கு ஒவ்வொரு நாளும் வந்து போகும் ஜனத் தொகை 4 முதல் 5 இலட்சங்களாகும்.

நிர்வாகம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றம் 1—12—1973-ல் கலைக்கப்பட்டு தனி அதிகாரி நியமிக்கப்பட்டார். அவர் மன்றம் நிலைக்குழுக்களின் அதிகாரங்களை நிர்வகித்து வருகிறார். சென்னை மாநகராட்சியின் தலைமை நிர்வாக அதிகாரி ஆணையர் ஆவார்.

நிதிநிலை.

தனி அதிகாரி—மன்றம் மற்றும் நிதி நிலைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு 1986-87 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டம் பற்றிய விவரங்கள் வருமாறு

| (1) | வரவு. (2) | செலவு. (3) | பற்றாக்குறை (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சங்களில்.) | | |
| 1. பொது நிதி | 4,422.92 | 4,433.74 | (—)10.82 |
| 2. மூலதன நிதி.. | 895.00 | 2,597.08 | * |

முந்தைய ஆண்டுகளிலிருந்து நடைபெற்றுவரும் திட்டங்களும் சேர்த்து,

வரவு-செலவுத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்.

பொது நிதி.

1986-87 ஆம் ஆண்டின் உத்தேச வருமானம் ரூ. 44.23 கோடியாகும். 1985-86 ஆம் ஆண்டின் வருமானம் திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி ரூ. 39.61 கோடி. ரூ. 4.62 கோடி அதிக வருமானம் கீழ்க்கண்ட இனங்களின் வரவு மூலமாக எதிர்பார்க்கப்படுகிறது.

| | (ரூபாய் இலட்சங்களில்.) |
|---|---|
| 1. சொத்து வரி | 146.42 |
| 2. இதர வரிகள் | 51.50 |
| 3. விற்பனை வரியின் மீதான கூடுதல் உபரி வரி | 25.00 |
| 4. கேளிக்கை வரி | 25.00 |
| 5. சொத்து மாற்றத்தின் மீதான தீர்வை | 5.00 |
| 6. இதர இனங்கள் | 209.43 |

1986-87 ஆம் ஆண்டின் செலவினம் ரூ. 44.34 கோடியாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டின் செலவு ரூ. 41.86 கோடியாகும். 1986-87 ஆம் ஆண்டின் பற்றாக்குறை ரூ. 0.11 கோடியாகும். மாநகராட்சி சொத்துவரியை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதோடு



அதன் வருமானத்தைப் பெருக்கிட கடைகள், சந்தைகள், கட்டிடங்கள் வாடகையை அதிகரிப்பதோடு விளம்பர வரியையும் அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

பல ஆண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்டு மாத்தீர்வையை அதிகரிக்கப் பரிந்துரைந்து அரசு ஆணைக்காக இம் மாநகராட்சி அரசுக் கோரிக்கை விடுத்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சத்துணவுத் திட்டம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சத்துணவுத் திட்டம், சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் 15-9-1982 முதல் செயல்படுத்தப்படுகிறது. 1.70 இலட்சம் மொத்தம் மாணவ-மாணவிகளுள் 1,00,256 குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்க, சத்துணவு தயாரிக்கும் பொருட்டு 336 சத்துணவு கூடங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

இச்சத்துணவுத் திட்டம் 15-9-1984 முதல் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவ-மாணவிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

சத்துணவு மையங்களில் பணியாற்றும் அமைப்பாளர்கள், சமையலர் மற்றும் உதவியாளர்கள், தற்போது பயன்பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை போன்ற தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

| (1) | வயது வரம்பு. 5 முதல் 9. (2) | 10 முதல் 15. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| 1. மொத்த சத்துணவு .. மையங்கள் | 330 | 35 | 365 |
| 2. பயன்பெறும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை. | 82,392 | 33,780 | 1,16,172 |
| 3. அமைப்பாளர்கள் .. | 330 | 35 | 365 |
| 4. சமையலர்கள் .. | 379 | 54 | 433. |
| 5. உதவியாளர்கள் .. | 379 | 54 | 433 |
| 6. 500-க்கும் மேற்பட்டவருக்கு உணவு தயார் செய்வதற்கான சமையல் கூடங்களின் எண்ணிக்கை. | 48 | 19 | 67 |
| 7. 500-க்கும் கீழ் உள்ளவர்களுக்கு உணவு தயார் செய்வதற்கான சமையல் கூடங்களின் எண்ணிக்கை. | 282 | 16 | 298 |

## போக்குவரத்து (சாலை பணிகள்):

சென்னை மாநகராட்சியால் 1,570 கி.மீ. சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் 268 கி.மீ. பேருந்து சாலைகளாகவும், 1,302 கி.மீ. ஏனைய சாலைகளாகவும் உள்ளன. பொதுவாக இச்சாலைகள் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையாவது புதுப்பிக்கப்பட வேண்டும். அதற்கு ஐந்தில் ஒரு பங்கு சாலைகளை ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்க தற்போதைய விலைவாசியைக் கருத்தில் கொண்டு சுமார் ரூ. 13.75 கோடி நிதி தேவைப்படுகிறது. ஆனால் கடந்த நான்கு ஆண்டுகளில் சராசரியாக மாநகராட்சி சாலைகளுக்காக ரூ. 6.00 கோடி மட்டும் செலவழித்து வருகிறது. போக்குவரத்தினால் சாதாரணமாக ஏற்படும் சீர்கேடுகளைத் தவிர, புயல், மழை போன்ற இயற்கை சீற்றங்களினாலும் சாலைகள் ஆண்டுதோறும் மிகவும் பாதிக்கப்படுகின்றன.

1978 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சியில், 11 நகர பஞ்சாயத்துகளும் ஒரு கிராமப் பஞ்சாயத்தும் இணைக்கப்பட்டன. இங்குள்ள பல சாலைகள் மிகவும் மோசமான மண் சாலைகளாகவே இருந்ததால் இதற்கெனத் தனி கவனம் செலுத்தப்பட்டு கடந்த ஆண்டில் ரூ. 175.00 இலட்சம் இச்சாலைகளுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டு, பல சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இப்பஞ்சாயத்துக்களில் சாலை புதுப்பிப்பதற்கு 1978 முதல் 1984-85 வரை ரூ. 317 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

அரசு, நடப்பு ஆண்டில் இதர சாலைகள் மேம்பாட்டிற்கு ரூ. 234.00 இலட்சங்களும், பேருந்து வழித்தட சாலைகள் மேம்பாட்டிற்கு ரூ. 131.50 இலட்சங்களும் வழங்கி உள்ளது. 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட சாலைகளைச் செப்பனிடுவதற்காக ரூ. 300.00 இலட்சங்கள் (இதர சாலைகள்) மற்றும் ரூ. 574.00 இலட்சங்கள் (பேருந்து வழித் தடச்சாலைகள்) அரசு மாநகராட்சிக்கு வழங்கி உள்ளது. ரூ. 35.50 இலட்சங்கள் பேருந்து வழித்தடச் சாலைகளில் நடைபாதைகள் அமைப்பதற்காக, அரசு வழங்கி உள்ளது. சாலைகளுக்காகச் செலவிடப்படும் நிதியைத் தவிர, நடைபாதைகள் சீரமைப்பதற்காகவும், குண்டு குழிகளைச் சீர்செய்வதற்காகவும் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 2.00 கோடி வரை செலவழிக்கப்படுகிறது.

பஞ்சாயத்துக்களிடமிருந்து சேர்த்துக்கொள்ளப்பட்ட சாலைகளை மட்டும் ஐந்தாண்டுக்கு ஒரு முறை புதுப்பிக்கவும், வருடந்தோறும் பராமரிக்கவும், ஆண்டொன்றுக்கு ரூ. 67.50 இலட்சம் செலவு செய்ய வேண்டியுள்ளது.



பேருந்து உட்புற சாலை மற்றும் இதர சாலைகளையும், குடிசைப் பகுதியிலுள்ள சாலைகளையும் பராமரிக்க 1986-87-ம் ஆண்டிற்கு ரூ. 601.19 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பேருந்து வழித்தடச் சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள்:

1986-87 ஆம் ஆண்டில் 34 பேருந்து வழித்தடச் சாலைகளை மேம்படுத்த ரூ. 258.19 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கீழ் குறிப்பிட்டுள்ள முக்கியமான பேருந்து வழித்தடச் சாலைகள் 1986-87 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட உள்ளன:—

1. கொன்னூர் நெடுஞ்சாலை.
2. இராஜாஜி சாலை.
3. தங்கசாலை.
4. டெய்லர்ஸ் சாலை.
5. வேப்பேரி நெடுஞ்சாலை.
6. தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை.
7. சிமிட்ரி சாலை.
8. வட டெர்மினல் சாலை (கோபதி நாராயண தெருவிலிருந்து).
9. வில்லேஜ் சாலை.
10. காவல் ஆணையர் அலுவலக சாலை.
11. பீட்டர்ஸ் சாலை.

மேலும் 654 உட்புறச் சாலைகளும் ரூ. 275 இலட்சம் செலவில் 1986-87-ல் புதுப்பிக்கப்பட உள்ளன. சிமிக்ஸ் தொழில் நுட்பத்தின்மூலம் சாலைகளை மேம்பாடுதல் செய்தல் சென்னையில் முதன்முதலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் ஒரே சீராகவும் சாலைகள் செப்பனிடுவதால் மேலும் மேலும் உயராமலும் சாலை பராமரிக்க இயலும்.

## முந்தைய பஞ்சாயத்து சாலைகள்:

சென்னை மாநகருடன் 1978-ல் இணைக்கப்பட்ட 12 பஞ்சாயத்துக்களில் உள்ள சாலைகள் பெரும்பாலும் மண்சாலைகளாகவே உள்ளன. இவற்றிற்கு தனி கவனம் செலுத்தப்படுகிறது. 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 70 இலட்சம் செலவில் 216 சாலைகள் அமைக்கப்பட உள்ளன.

தனியார் தெருக்களில் சாலை, தெரு விளக்கு மற்றும் வடிகால் ஆகியவை அமைப்பதற்காகும் செலவில் 25 சதவிகிதம் தொகையை முன்பணமாக பெறாமலேயே இப்பணிகளை நிறைவேற்றவும், இப்பணிகளை நிறைவேற்றி முடித்த பின் இதற்கான செலவுகளை இத்தெருக்களிலுள்ள வீட்டுச் சொந்தக்காரர்களிடமிருந்து சொத்து வரி தவணைகளுடன் 10 ஆண்டுகளில் வசூலிக்கவும் அனுமதி வழங்குமாறு அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 5.00 கோடி நிதி உதவியை வழங்குமாறு கேட்டுள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**குடிசைப் பகுதிகள் :**

தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டபின், குடிசைப் பகுதிகள் அகற்றவும், குடிசை வாழ் மக்களை குடியேற்றுவதற்கும் பொருத்தமான பல பகுதிகளை குறிக்கப்பட்டன. நகரில் மூன்றில் ஒரு பகுதியினர் குடிசைகளில் வாழ்கின்றனர். இவர்களது எண்ணிக்கை சுமார் 13 இலட்சமாகும். இவர்கள் நகரில் சுமார் 1,700 குடிசைப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். சென்னை நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 1-ன் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 52 குடிசைப் பகுதிகளும், திட்டம் 2-ன் கீழ் 65 குடிசைப் பகுதிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட குடிசைப் பகுதிகளை சிறந்த முறையில் பராமரிப்பதற்கு மாநகராட்சி சிறப்பாக நிதி ஒதுக்கியுள்ளது. உதாரணமாக, குடிசைப் பகுதிகளில் துப்புரவு சாலைகளை பராமரித்தல், தெரு விளக்குகளமைத்தல் ஆகியவற்றிற்காக 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சுமார் ரூ. 100.00 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1986-87 ஆம் வருடத்திலும் அதே தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

**பொதுக்கழிப்பிடங்கள் :**

சென்னை நகரில் 8,943 இருக்கைகளுடன் கூடிய 894 பொது கழிப்பிடங்களை மாநகராட்சி பராமரித்து வருகின்றது. இவற்றில் 99 கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மீதியுள்ள 795-ம் பொதுக் கழிப்பிடங்கள் இந்த 795 பொதுக் கழிப்பிடங்களில் 1,112 துப்புரவுப் பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். கட்டணம் வசூலிக்கப்படும் பொதுக் கழிப்பிடங்கள் மூலமாக சென்னை மாநகராட்சிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 4.96 இலட்சம் வருவாய் கிடைக்கின்றது. பொதுக் கழிப்பிடங்களை பராமரிப்பதற்கு மாநகராட்சிக்கு ஆண்டொன்றிற்காகும் செலவு ரூ. 41.00 இலட்சமாகும்.

அநேகமாக எல்லா பொதுக் கழிப்பிடங்களிலும் தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளன.



பீகார் மாநிலத்திலுள்ள பாட்னா நகரில் புதிய வடிவமைப்புடன் கூடிய பொது கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த வடிவமைப்பின்படி மிகக் குறைந்த அளவு நீரே தேவைப்படுகின்றது. மாநகராட்சியின் பரிந்துரைக்கிணங்க பின்வரும் 8 இடங்களில் இத்தகைய பொது கழிப்பிடங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

அவையாவன :

1. லோன் சதுக்கம்.
2. கிருஷ்ணா பிள்ளை தெரு, பெரம்பூர்.
3. பிராட்வே வெளியூர் பேருந்து நிலையம்.
4. வ.உ.சி. சாலை.
5. ஜி. என். சாலை.
6. ரியப்பா சாலை.
7. கால்வாய் சாலை.
8. மைலாப்பூர் குளம் அருகில்.

ஏற்கனவே உள்ள கழிப்பிடங்களை சீர் அமைக்கவும், புதிய பல இடங்களில் கழிப்பிடங்கள் கட்டுவதற்காகவும் அரசு ரூ. 100.00 இலட்சம் அளித்துள்ளது. இதற்கான ஆக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றது.

நகரம் முழுமையும் இணைக்கும்படியான மழை நீர் வடிகால் அமைப்பு சென்னையில் இல்லை. ஒவ்வொரு ஆண்டும் மழை காலங்களில் தாழ்வான பகுதிகளில் மழை நீர் பல நாட்கள் தேங்கி விடுகின்றது. இதனால் மக்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். தற்போதுள்ள மழை நீர் வடிகால்களின் மொத்த நீளம் 454.20 கி. மீட்டராகும். இது நகரிலுள்ள சாலைகளின் மொத்த நீளத்தில் நான்கில் ஒரு பகுதியாகும்.

ஏற்கனவே 1985-86-ல் ஒதுக்கப்பட்ட ரூ. 289.00 இலட்சங்கள் தவிர, தற்போதுள்ள மழை நீர் வடிகால்களை பழுது பார்க்க புதிய கால்வாய்கள் அமைக்க அரசு ரூ. 435 இலட்சம் வழங்கியுள்ளது.

6.3 கி.மீ. நீளமுள்ள மழைநீர் வடிகால்கள் ரூ. 84.00 இலட்சங்கள் செலவழிக்கப்பட்டு பழுது பார்க்கப்படும். 38.5 கி.மீ. நீளமுள்ள புதிய மழைநீர் வடிகால்கள் நகரில் பல பகுதிகளில் குறிப்பாக, மழைநீர் தங்கும் இடங்களில்

**சாலை பராமரிப்பு :**

சாலைகளைப் புதுப்பிப்பதுடன், சாலைகளின் நடைபாதைகள் போடுதல், பராமரிப்பு, சாலைகளில் தோண்டியவற்றை சீர்செய்தல் ஆகியவற்றிற்கு ரூ. 118 இலட்சம் 1986-87 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பாலங்கள் :**

கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய் ஆகியவற்றின் மீது கட்டப்பட்டுள்ள பாலங்கள் மிகவும் குறுகலாக இருப்பதினால் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுகின்றன. அவ்வாறே, போக்குவரத்து நெரிசல்களை தவிர்ப்பதற்காக சில இருப்புப் பாதையை கடக்குமிடங்களில் சுரங்கப் பாதை அமைக்க வேண்டியுள்ளது. பாலங்களை அகலப்படுத்துவதற்கு அரசின் அனுமதி கோரப்பட்டது. ரிசர்வ் வங்கி அருகிலுள்ள சுரங்கப் பாதையை பெரும் அளவில் பழுது பார்ப்பதற்கும் பக்கிங்காம் கால்வாய் மீது முண்டகக்கண்ணி அம்மன் கோவில் தெருவிலுள்ள பழைய பாலத்தை இடித்துக் கட்டுவதற்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பணிகளுக்கு அனுமதிக்கப்பட்ட தொகை முறையே ரூபாய் 23.00 இலட்சம், ரூ. 35.00 இலட்சமாகும்.

ரிசர்வ் வங்கி அருகிலுள்ள சுரங்கப்பாதையை பழுதுபார்க்கும் பணி மாநில அரசின் நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணி துறையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இதற்காக ரூ. 40.00 இலட்சம் வைப்புத்தொகையாக வழங்கப் பட்டுள்ளது. ரூ. 23.00 இலட்சங்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும், தற்போதைய மதிப்பீட்டுச் செலவு ரூ. 50.00 இலட்சத்திற்கும் அதிகமாகிவிடும் என கூறப்படுகின்றது. இந்தக் கூடுதல் தொகையை வழங்கு மாறு அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசின் அனுமதியை எதிர்பார்த்து நெடுஞ்சாலை துறையினிடம் மாநகராட்சி ரூ. 40.00 இலட்சம் செலுத்தியுள்ளது.

முண்டகக்கண்ணி அம்மன் கோவில் தெருவிலுள்ள பாலத்தைக் கட்டும் பணி துவங்கியுள்ளது. இதுவரையில் ரூ. 17.96 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் நடந்து வருகிறது. மேலும், 1985-ம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமடைந்துள்ள பாலங்கள், கால்வாய்கள், துணைவழிகள் முதலியவைகளை செப்பனிடவும், மேம்படுத்தவும் 19 பணிகள்



ரூ. 85.32 லட்சம் அளவில் எடுத்துக்கொள்ளப்பட்டன. இதற்கான தொகையை 1985-86-ல் அரசு மான்யமாக அறிவித்து உள்ளது. பழுது பார்க்க எடுக்கப் பட்ட முக்கியமான பாலங்களாவன :

**பாலங்கள் :—**

1. திரு.வி.க. பாலம்,
2. மன்ரோ பாலம்,
3. பென்னி பாலம்,
4. ஆண்டர்சன் பாலம்,
5. காமராஜர் பாலம்,
6. டாக்டர் நாயர் பாலம்,
7. காந்தி இர்வின் பாலம்,
8. ஆமில்டன் பாலம்,

**தரைப்பாலங்கள் :—**

1. சூளை தரைப்பாலம்,
2. மடுவாங்கரை தரைப்பாலம்,
3. ஆலந்தூர் தரைப்பாலம்,

**சுரங்கப்பாதை :**

1. பொம்பூர் சுரங்கப்பாதை,

1985-86 ஆண்டில் மணிகார் சத்திரம் அருகில் ஓர் சுரங்கப் பாதையும், ஓட்டேரி ஓடை அருகே ஒரு பாலமும் அமைக்க அரசு ரூ. 15.00 லட்சம் வழங்கியுள்ளது.

**தனியார் தெருக்கள் :**

சென்னை மாநகராட்சியில் 1,543 தனியார் தெருக்கள் உள்ளன. அரசாணை எண். 1822, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை, 27-11-1980 தேதி ஆணையின்படி இத்தெருக்களிலுள்ள வீட்டுச் சொந்தக்காரர்கள், சாலைகள், தெருவிளக்குகள், வடிகால்கள் ஆகியவைகள் அமைப்பதற்கு ஆகும் செலவில் 25 சதவிகிதம் தொகையை செலுத்திய பின்னரே இத்தகைய வசதிகள் அவர்களுக்கு செய்து கொடுக்கப்படும். இப்பணிகளை நிறைவேற்றியபின் மீதமுள்ள 75 சதவிகிதம் தொகை சுலபமான தவணை களில் வசூலிக்கப்படும்.

கட்டப்படும். புதிய மழைநீர் வடிகால்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள இடங்களும் அவற்றின் மதிப்பீடும் கீழே தரப்பட்டுள்ளன :

| வரிசை எண். (1) | பகுதி (2) | மதிப்பீடு (ரூ. இலட்சங்களில்) (3) |
|---|---|---|
| 1. | விருகம்பாக்கம் | 35.00 |
| 2. | அரும்பாக்கம் | 27.00 |
| 3. | திருவான்மியூர் | 37.78 |
| 4. | சாஸ்திரி நகர், பெசன்ட் நகர் | 39.12 |
| 5. | சைதாப்பேட்டை | 21.30 |
| 6. | சாலிகிராமம் | 41.3[illegible] |
| 7. | கொளத்தூர் | 41.63 |
| 8. | பெரியார் நகர், பாரதி நகர் அயனாவரம் வசந்த காலனி, அண்ணா நகர், மற்றும் புளியந்தோப்பு | 89.39 |
| 9. | வில்லிவாக்கம் | 2[illegible] |

**துப்புரவு :**

சென்னை நகரில் 1,650 கி.மீ. நீளமுள்ள சாலைகளும் 1,700 குடிசைப் பகுதிகளும் உள்ளன. இப்பகுதிகளில் மாநகராட்சி துப்புரவு பணிகளை செய்து வருகின்றது. தினமும் சுமார் 1,800 டன் குப்பைகள் சேருகின்றன. கொடுங்கையூர், கோயம்பேடு, நேசப்பாக்கம் ஆகிய இடங்களிலுள்ள மூன்று குப்பை கொட்டும் இடங்களில் இக்குப்பைகள் கொட்டப்படுகின்றன. 9 கால்நடை நிலையங்களும் 796 குப்பை வண்டிகளும் குப்பைகளை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. 174 லாரிகள் குப்பை கொட்டுமிடங்களில் இக்குப்பைகளை கொண்டு கொட்டும் பணியில் ஈடுபட்டுள்ளன. 6,635 துப்புரவுப் பணியாளர்கள் இப்பணியினை கவனித்து வருகின்றனர். மேலும் துரிதமாக, குப்பை கூளங்களை சேமித்து வைத்த இடங்களிலிருந்து அவைகளை கடைசியாக கொட்டுமிடங்களுக்கு அகற்றுவதற்காக மாநகராட்சி லாரிகளைத் தவிர தமிழ் நாடு பொருள் போக்குவரத்து கழக லாரிகளையும் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது. மேலும் துப்புரவு பணிகளுக்காக லாரிகள் புதிதாக வாங்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்படும்.

குப்பைகளை சேகரித்து எடுத்துச் செல்லுவதற்கு தேவையான லாரிகளின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படுகின்றன. மேலும் இப்பணியை சீரிய முறையில் செய்ய, திறம் வாய்ந்த "மெக்கானிக்கல் ஸ்வீப்பர்". 'ஹைட்ரோரான் சோல்லுன் டிப்பர்' போன்ற சாதனங்களை ரூ. 21.00 இலட்சம் மதிப்பில் பயன் பயன்படுத்தப்படும். நெரிசல் அதிகமான இடங்களில் 'டம்பர்கள்' போன்ற [illegible] நிறுவப்படும்.





**திடக்கழிவு மேலாளுகை :**

1985-86 ஆம் ஆண்டுக்கு கழிவு மேலாளுகை திட்டத்திற்கு ரூ. 32.04 இலட்சம் அரசு உதவியளித்துள்ளது. மேற்கண்ட ஆண்டில் வழங்கிய நிதி உதவியுடன் இதுவரை இத்திட்டத்திற்கு அரசு ரூ. 157.04 இலட்சம் நிதி உதவி அளித்துள்ளது. இந்த தொகை (1) கை வண்டிகள், (2) குப்பைதொட்டிகள், (3) குறைந்த அளவு அகலமுள்ள வண்டிகள், (4) புல்டோசர், (5) குப்பை கொட்டும் நிலையங்கள் கட்டுதல், (6) லோடர் மற்றும் (7) டிப்பர் முதலியவைகளை வாங்குவதற்கு செலவழிக்கப்படும்.

திடக்கழிவு மேலாளுகை மற்றும் மாநகராட்சிப் பணிகளில் தரத்தினை உயர்த்துதல்பற்றி ஆலோசனை வழங்குவதற்காக ஆலோசனைக் குழுமம் நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுமத்தில் ஏற்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் நகராட்சிப் பணிகளின் தரத்தை உயர்த்துவதற்குத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஆலோசனைக் குழுமத்திற்காக ரூ. 4.13 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**தெரு விளக்குகள் :**

சென்னை நகரத்தில் தெரு விளக்குகள் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சென்னை நகர எல்லையில் மட்டும் 44,606 தெரு விளக்குகள் உள்ளன. மேலும் சென்னை மாநகராட்சி எல்லையில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள 12 பஞ்சாயத்து பகுதிகளில் 7,454 தெரு விளக்குகள் உள்ளன. தெரு விளக்குகளின் விவரம் பின்வருமாறு :

| | |
|---|---|
| சோடியம் ஆவி விளக்குகள் | 3,799 |
| மெர்குரி ஆவி விளக்குகள் | 2,122 |
| குழல் விளக்குகள் | 37,057 |
| பிசு ஒளி விளக்குகள் மற்றும் இதர விளக்குகள் | 1,628 |
| நகருடன் இணைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்துப் பகுதிகளில் உள்ள விளக்குகள் | 7,454 |
| மொத்தம் | 52,060 |

முன்னாள் பஞ்சாயத்து பகுதிகளிலுள்ள 7,454 விளக்குகளில் 6,478 விளக்குகள் தமிழ் நாடு மின்வாரிய மின் இணைப்பில் இருந்து, தமிழ் நாடு மின்வாரியம் பராமரித்து வருகிறது. மேற்கண்ட விளக்குகளுக்கு உண்டான

செலவு, மின்சார பயனீட்டளவு சென்னை மாநகராட்சியால் செலுத்தப்படுகின்றன. ஏற்கனவே மேற்படி 12 பஞ்சாயத்துகளில் 976 தெருவிளக்குகள் சென்னை மாநகராட்சியின் தரத்திற்கேற்ப மாறுதல் செய்யப்பட்டு மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

புதை மின்கம்பிகள், நாட்பட்ட நிலையிலும் பழுதான நிலையிலும் அடிக்கடி தெரு விளக்குகள் பழுதடைந்து விடுவதைத் தடுத்திட பழைய புதை மின்கம்பிகள் வடங்கள், புதிய புதைமின் கம்பிகளாக படிப்படியாக மாற்றப் பட்டு வருகின்றன.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட பகுதிகளுக்கும் தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரியப் பகுதிகளுக்கும் தெரு விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

அதிக வெளிச்சம் கொடுப்பதினாலும் மின் சக்தி மிச்சமாவதினாலும் போக்குவரத்து நெரிசல் உள்ள தெருக்களுக்கு சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன. இதுவரை கிட்டத் தட்ட 3,700 சோடியம் ஆவி விளக்குகள் மேற்கண்ட நெரிசல் பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ளன. தெரு விளக்குகள் சென்னை நகரத்தில் போக்குவரத்து சந்திப்பிடங்கள் அருகாமையிலும் பொருத்தப்பட்டு வருகின்றன.

1986-87-ல், வரவு-செலவு திட்டத்தில் தெரு விளக்கு, சோடியம் வேப்பர் விளக்கு, புதைமின் கம்பிகளை மாற்றியமைத்தல் ஆகியவற்றிற்காக ரூ. 323.78 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1,000 சோடியம் வேப்பர் விளக்குகள் பொருத்தப்பட இருக்கின்ற முக்கிய இடங்கள் வருமாறு :—

1. சாந்தோம் நெடுஞ்சாலை.
2. சர்தார் பட்டேல் சாலையில் ஒரு பகுதி.
3. ராஜ்பவன் சாலை.
4. அண்ணா நகர் அவின்யூ-இரண்டு, மூன்றாம் பகுதி.
5. எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை.
6. திருவொற்றியூர் நெடுஞ்சாலை.
7. பல்லவன் சாலை.
8. எஸ். என். செட்டி தெரு.
9. மேடவாக்கம் குளச்சாலை.

மேலும் 48 குடிசைப்பகுதிகளில் 658 மின் விளக்குகள் பொருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளில் 1,150 விளக்குகள் பொருத்தப்படும்.





**கட்டிடங்கள் கட்டுதல் :**

மாநகர பள்ளிகள், மகப்பேறு நிலையங்கள், மாநகர அலுவலகங்கள், சலவைத்துறை, இடுகாடு, சுடுகாடு, கழிவறைகள், அங்காடிகள், ஆகியவை களுக்கான கட்டிடங்கள் ஒவ்வொரு வருடமும் கட்டப்படுகின்றன. அடையாறில் மகளிர் தங்கும் விடுதி மற்றும் நவீன கட்டணக்கழிப்பிடங்கள் போன்ற முக்கிய மான வேலைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அரசு வழங்கும் நிதியிலிருந்தும் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மூலமாகவும் இவ்வேலைகள் மேற் கொள்ளப்படுகின்றன. ரூ. 216.54 இலட்சம் செலவில் 1986-87 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் கட்டிட வேலைகளை மேற்கொள்ள திட்டமிடப் பட்டுள்ளது :— 10

1. பள்ளிக் கட்டிடங்கள் (விஞ்ஞானக் கூடங்கள் சேர்த்து) 4
2. மருந்தகக் கட்டிடங்கள் 6
3. அங்காடிகள் 1
4. மகளிர் தங்கும் விடுதி 4
5. அலுவலகக் கட்டிடங்கள் 3
6. பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள் 2
7. சலவைத் துறைகள் 5
8. இடுகாடு, சுடுகாடு

**கல்வி :**

சென்னை நகரில் ஆரம்பக் கல்வி அளிப்பது மாநகராட்சியின் பொறுப் பாகும். தவிர, உயர்நிலை, மேல்நிலைக் கல்வியும் சென்னை மாநகராட்சியால் அளிக்கப்பட்டு வருகிறது.

**ஆரம்பக் கல்வி :**

சென்னை மாநகராட்சி 369 ஆரம்பக் கல்விப் பள்ளிக்கூடங்களை நிர்வகித்து வருகிறது. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 1,56,500 ஆகும். ஆசிரியர் மற்றும் மற்ற நிர்வாக ஊழியர்களின் எண்ணிக்கை 4,792. மேற்கண்ட 369 பள்ளிக் கூடங்களில் 28 பள்ளிக் கூடங்கள் தனியார் கட்டிடம் களில் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிக்கூடங்களை நாளடைவில் மாநகராட்சியின் சொந்தக் கட்டிடங்களில் அமைக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. 1985-86 ஆண்டிற்கு ரூ. 57.96 இலட்சம் அளவில் புது கட்டிடங்கள் கட்டவும் அதற்கான நிலம் வாங்கவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**உயர்நிலை, மேல்நிலைக் கல்வி :**

சென்னை மாநகராட்சி 25 உயர்நிலை, 10 மேல்நிலைப் பள்ளிக் கூடங்களை நிர்வகித்து வருகிறது. எல்லாப் பள்ளிக் கூடங்களும் மாநகராட்சியின் சொந்தக் கட்டிடங்களில் உள்ளன. இவற்றில் பயிலும் மாணவ, மாணவிகளின்

...எண்ணிக்கை 33,250. ஆசிரியர் மற்றும் இதர ஊழியர்களின் எண்ணிக்கை ...,529 ஆகும்.

...பரிசுத் திட்டங்கள் :

மாநகராட்சிப் பள்ளிக்கூட மாணவர்களை அதிக மதிப்பெண்கள் பெற ஊக்குவிக்கும் பொருட்டு ஒரு பரிசுத் திட்டம் நடைமுறையில் உள்ளது.

பத்தாம் வகுப்பு ஆசிரியர்களின் செயல்திறனை சிறப்பிக்கவும் ரொக்கப் பரிசு வழங்கப்படுகிறது.

மேற்கண்ட பரிசு வழங்குவதற்கு ரூபாய் 38,450 ஒதுக்கப்பட்டுள்ளது.

பொது சுகாதாரம் :

மற்ற அலுவல்களுடன், சுகாதாரம் பராமரிப்பு, தொற்றுநோய் தடுப்பு, பிறப்பு-இறப்பு புள்ளி விவரங்கள் சேகரித்தல், மகப்பேறு நிலையங்கள் அமைத்தல், மற்றும் குடும்பநலத்திட்ட நிலையங்கள் அமைத்தல் போன்ற வேலைகளையும் மாநகராட்சி நிறைவேற்றி வருகிறது.

கீழ்காணும் மருந்தகங்கள், மகப்பேறு நிலையங்கள், போன்றவைகள் ...ன்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன :—

| | |
|---|---|
| 1. மருந்தகங்கள் | 49 |
| 2. மகப்பேறு நிலையங்கள் | 40 |
| 3. குடும்பநல நிலையங்கள் | 34 |
| 4. குடும்பநல அறுவைசிகிச்சை நிலையங்கள். | 4 |
| 5. தொற்று நோய் மருத்துவமனை | 2 |
| 6. காசநோய் மருந்தகம் | 2 |

சுகாதார மேம்பாடுகளுக்காக 1986-87 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப் பட்டுள்ள நிதி ஒதுக்கப்பட்டுள்ளது :—

| (1) | (ரூபாய் இலட்சங்களில்) (2) |
|---|---|
| 1. மருந்துகள் | 50.00 |
| 2. கொசுத்தொல்லை ஒழிக்க பூச்சி மருந்துகள் | 15.00 |
| 3. குடும்பநலத் திட்டம் | 10.00 |
| 4. நோயாளிகள் உணவு | 1.36 |
| 5. மற்ற மருந்தகச் செலவுகள் | 4.00 |
| 6. நோய்யர்திக்கா நிலை உருவாக்கும் திட்டம் | 1.00 |



கூவம் நதி, அடையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி கால்வாய் மற்றும் மாம்பலம் கால்வாய் ஆகியவை நகரின் அனைத்துப்பகுதிகளிலும் நீர் நிலைகளைக் கொண்டு உள்ளதுதான் கொசுத் தொல்லைக்கான மூல காரணம் ஆகும். அந்நீரில் உள்ள நீர்த் தாமரைகள் கொசுத் தொல்லைகளைப் போக்கும் திட்டங்களுக்கு எதிரிகளாக உள்ளன. எனினும் பூச்சிக் கொல்லி மருந்துகள் தெளித்தல், 60 புகைக்கும் இயந்திரங்கள் உபயோகித்தல் (1985—86-ல் வாங்கி தீவிரமாக பயன்படுத்தப்பட்டவை) தொடர்ந்து நடைபெறும். மாநில சுகாதார இயக்கம் டி.டி.டி. தெளிப்பதற்குத் தேவையான மருந்தை சென்னை மாநகராட்சிக்கு அளித்துள்ளது. இதன் மூலம் குடிசை பகுதிகளிலும் தாழ்வான பகுதிகளிலும் மருந்து தெளித்தல் மேற்கொள்ளப்படும்.

1986—87 ஆம் ஆண்டிற்கான குடும்பநலத் திட்டத்தில் குறியீடு 46,300 ஆகும்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் :

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை மாநகராட்சிக்கு நகர்ப்புற வளர்ச்சியின் கீழ் ரூ. 25.00 கோடி மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது மாநில திட்டக்குழு அறிவித்த தொகையாகும். அவற்றின் விவரங்களாவன :

| (1) | (ரூபாய் இலட்சங்களில்) (2) |
|---|---|
| 1. தெரு விளக்கு அபிவிருத்தி | 277.00 |
| 2. திடக்கழிவு மேலாண்மை (சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-2) | 373.00 |
| 3. குடிசைப்பகுதிகள் அபிவிருத்தி | 50.00 |
| 4. பணிக்கப்பட்ட மானியம் | 1,300.00 |
| 5. பொது மக்களிடமிருந்து பெறப்படும் கடன்கள் | 400.00 |
| 6. மழை நீர் வடிகால்கள் | 200.00 |
| மொத்தம் | 2,600.00 |

1986—87 ஆம் ஆண்டுத் திட்டம் :

1986—87 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சியின் இலட்சப் பகுதி திட்டத்தின் கீழ் பின்வரும் 3 திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இணைப்பு



| (1) | திட்டத்தின் மொத்த மதிப்பு (2) | 1986–87 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை, (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சங்களில்) | |
| 1. துப்புரவுப்பணிகளுக்காக ரோல்-ஆன் டிப்பர்கள் மற்றும் டம்பர்கள் வாங்குதல், | 54.00 | 20.00 |
| 2. கூவம் ஆற்றின் மேல் உள்ள ஆண்டர்சன் பாலத்தை அகலப்படுத்துதல். | 70.00 | 10.00 |
| 3. நடைபாதை கடைக்காரர்களுக்காக மாநகராட்சிக்குச் சொந்தமான 36 இடங்களில் அங்காடிகள் கட்டுதல். | 157.00 | 20.00 |
| மொத்தம் | 281.00 | 50.00 |

மேற்கூறிய திட்டங்கள் பற்றிய முக்கியமான விவரங்கள் பின்வருமாறு :

**1. துப்புரவுப் பணிகளுக்காக. ரோல்-ஆன்-டிப்பர்கள் மற்றும் டம்பர்கள் வாங்குதல் :**

துப்புரவுப் பணியாளர்கள் குப்பையை கையினால் தொடுவதை தவிர்ப்பதற்காகவும், குப்பைகளை வண்டிகளில் கொண்டு செல்லும்போது வழியில் சிந்துவதைத் தடுப்பதற்காகவும் சென்னை மாநகராட்சி முதலில் ஒரு ரோல்-ஆன்-டிப்பர் வாங்கியது. இது மிகவும் பயனுள்ளதாக காணப்படுவதுடன் மிகவும் திருப்திகரமாக இயங்கி வருகிறது. எனவே, மேலும் 6 'ரோல்-ஆன்' டிப்பர்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாட்டு வண்டிகளை படிப்படியாக அகற்றி துப்புரவுப் பணியினை இயந்திரமயமாக்கும் திட்டத்தின்கீழ் 6 டம்பர்களை வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**2. ஆண்டர்சன் பாலத்தை அகலப்படுத்துதல் :**

பாந்தியன் சாலை, கமாண்டர்-இன்-சீப் சாலை, கிரீம்ஸ் சாலை, மூர்ஸ் சாலை, கல்லூரி சாலை ஆகிய சாலைகள் சந்திக்குமிடத்தில் கூவம் ஆற்றின் மேல் தற்போதுள்ள பாலம் மிகவும் குறுகலாக இருப்பதால் இப்பகுதியில்



அடிக்கடி போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுகின்றன. எனவே நடைபாதை மற்றும் சைக்கிள் செல்வதற்கான தனி வழியுடன் 4 வண்டிகள் ஒரே சமயத்தில் செல்லும் வகையில் இப்பாலத்தை அகலப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1986—87 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மொத்தம் ரூபாய் 70.00 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**3. நடைபாதை கடைக்காரர்களுக்காக மாநகராட்சிக்குச் சொந்தமான 36 இடங்களில் அங்காடிகள் கட்டுதல்.**

சென்னை பெருநகரின் பல்வேறு முக்கியமான பகுதிகளில் போதுமான பொது அங்காடிகள் இல்லாத காரணத்தினாலேயே நடைபாதைக் கடைகள் தோன்றுகின்றன. இத்தகைய நடைபாதைக் கடைகளை தவிர்ப்பதற்காக மாநகராட்சிக்குச் சொந்தமான 36 இடங்களில் சுமார் 1,000 கடைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்திற்கு மொத்தம் ரூபாய் 157 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**சென்னை மாநகராட்சியில் வயர்லஸ் கருவிகள் அமைத்தல் :**

வெள்ளம், விபத்துப் போன்ற பல சமயங்களில் பல்வேறு அலுவலர்களுடன் உடனடியாக தொடர்பு கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தின் போது பல்வேறு அலுவலர்களிடையே உடனடித் தொடர்பு கொள்ளும் வசதியில்லாதபடியினால் பல சிரமங்களை அனுபவிக்க நேர்ந்தது. சென்னை மாநகராட்சி மக்களுக்கு மிகவும் தேவையான சாலைகள், துப்புரவு, தெருவிளக்குகள், சுகாதாரம் போன்ற அன்றாட தேவைகளை கவனிக்க நவீன போக்குத் தொடர்பு வசதிகள் மிகவும் இன்றியமையாததாகும். ஆவின், பல்லவன் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு மின்சார வாரியம், போன்ற இதர நிறுவனங்கள் வயர்லஸ் தொடர்பு வசதிகளைப் பெற்றிருக்கின்றன. எனவே, நகரின் முக்கியமான பகுதிகளிலும், சோதனை வண்டிகளிலும் வயர்லஸ் கருவிகளை அமைப்பதின் மூலம் உடனடித் தொடர்பு கொள்ளும் வசதியை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூபாய் 15.00 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**கணக்குகளை கம்பயூட்டர் மயமாக்குதல் :**

சென்னை மாநகராட்சியில், ஊதியக்கணக்கு, சொத்துவரி, மற்றும் இதர கணக்குகளை கம்ப்யூட்டர் மூலம் கணக்கு வைத்தல் வளர்ச்சியில் உள்ள தொழிற்கூடங்களில் உள்ள பொருட்களை கம்ப்யூட்டர் மூலம் சரிபார்த்தல்

பின்பு எடுத்துக்கொள்ளப்படும். இதற்காகும் நிதி உதவியில் முதல் இரு பகுதிகளை உலகவங்கியும் பின்பு ஆகும் செலவினை சென்னை மாநகராட்சியும் ஏற்றுக் கொள்ளும்.

**சென்னை மாநகராட்சியின் நிர்வாக சீர்திருத்தம் :**

சென்னை மாநகராட்சியில் நிர்வாகத்தை சீர் அமைத்து பொது மக்களுக்கு துரிதமாகவும் சிறந்த முறையிலும், சேவை செய்யும் நோக்கத்துடன், சென்னை மாநகராட்சியில் ஒரே இடத்தில் அமைந்துள்ள அனைத்து பொறுப்புகளையும், அப்பகுதி அலுவலரிடமே பிரித்துக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அப்பகுதி மக்களின் அனைத்துத் தேவைகளையும் அவரே சீராக முடிக்க இயலும்.

**அரசின் நிதி உதவி :**

சென்னை மாநகரிலுள்ள, பேருந்து வழித்தடச்சாலைகளையும், மற்ற சாலைகளையும் மேம்படுத்துதல், மின் கம்பிகளை புதுப்பித்தல், புது தெரு விளக்குகள் அமைத்தல், மழை நீர் வடிகால்கள் மற்றும் பாலங்கள் கட்டுதல் மற்றும் துப்புரவுப்பணி மேம்பாட்டிற்காகவும் ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசு சென்னை மாநகராட்சிக்கு மானியமாகவும் கடனாகவும் நிதி உதவி அளித்து வருகிறது. 1986—87 ஆம் ஆண்டு மூலதனப்பணிகளுக்காக அரசு கீழ்க்குறிப்பிட்ட நிதி ஒதுக்கியுள்ளது.

| தலைப்பு. (1) | கடன் (2) | மானியம் (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சங்களில்) | | |
| 1. சென்னை நகர மேம்பாட்டு வேலைகள் (மழைநீர் வடிகால் அமைத்தல்; மின் புதைக் கம்பிகள் மாற்றி அமைத்தல்; சாலைகள் போடுதல் போன்றவற்றிற்கு உதவித் தொகை) | 250.00 | 250.00 | 500.00 |
| 2. விற்பனை வரியின் மீதான உபரி வரியில் நிதி அளிப்பது. | .. | 350.00 | 350.00 |
| 3. சென்னை நகர் வளர்ச்சித் திட்டம் 2ன் கீழ் திட்டக்கழிவு மேலாளுகைத் திட்டத்திற்கு உதவித் தொகை. | .. | 25.00 | 25.00 |
| 4. பொதுக் கழிப்பிடங்களைப் பராமரிக்க. | .. | 5.76 | 5.76 |
| மொத்தம் | 250.00 | 630.76 | 880.76 |



**இதர பணிகள்.**

(1) பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், விளையாட்டுத் திடல்கள், அங்காடிகள், சமூகக்கூடங்கள், சலவை நிலையங்கள் மற்றும் இடுகாடு, சுடுகாடு முதலியவற்றை பராமரிப்பதும் சென்னை மாநகராட்சியின் இதர பணிகளில் அடங்கும். தற்பொழுது சென்னை மாநகரில் அமைந்துள்ள அவற்றின் எண்ணிக்கை மற்றும் அவற்றைப் பராமரிக்க 1986—87-ல் ஒதுக்கியுள்ள தொகை விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

| பெயர். (1) | எண்ணிக்கை (2) | 1986-87 ஆம் ஆண்டின் செலவு மதிப்பீடு (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. பூங்காக்கள் .. | | |
| 2. விளையாட்டு மைதானங்கள் .. | 88 | 53.68 |
| 3. விளையாட்டுத் திடல்கள் .. | 80 | 12.90 |
| 4. அங்காடிகள் .. .. | 3 | 11.98 |
| 5. சமூக நலக் கூடங்கள் .. | 14 | 8.45 |
| 6. சலவை நிலையங்கள் .. | 10 | 4.33 |
| 7. இடுகாடு, சுடுகாடு .. | 10 | 1.44 |
| .. | 30 | 3.75 |

**2. அகில இந்தியா சுற்றுலா பொருட்காட்சியில் பங்கேற்றல் :**

அகில இந்தியா சுற்றுலா பொருட்காட்சியில் ஒவ்வொரு ஆண்டும் சென்னை மாநகராட்சி பங்கேற்று வருகிறது. இந்த ஆண்டும் அப்பொருட்காட்சியில் பங்கேற்றுள்ளது.

**3. அறிஞர் அண்ணா வளைவு அமைத்தல் :**

அறிஞர் அண்ணா வளைவு ஒன்று ரூ. 18.00 இலட்சங்கள் செலவில் அண்ணா நகர் நுழைவு வாயிலில் அறிஞர் அண்ணாவின் 75-வது பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இதன் கட்டிட நுட்பங்கள் அனைத்தும் மாமல்லபுரம், அரசு கட்டிடக்கலை கல்லூரியால் அமைக்கப்பட்டது.

**4. பலமாடிக்கட்டிடங்கள் அல்லி குளப்பகுதியில் கட்டுதல் :**

பலமாடிக்கட்டிடங்களை அல்லி குளப்பகுதியில் கட்டும் திட்டத்தை சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது. இதன் மொத்த மதிப்பு ரூ. 5.93 கோடியாகும். தீயினால் கடைகளை இழந்த வியாபாரிகளுக்கு இக்கட்டிடத்தில் கடைகள் அமைக்கப்படும். அரசு இதற்காக ஒப்புதல் அளித்து ரூ. 1.40 கோடி நிதி உதவியும் அளித்துள்ளது.

**5. நான்காவது ஊதியக் குழு :**

நான்காவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை சென்னை மாநகராட்சியில் செயல்படுத்தியதால் ஒவ்வொரு ஆண்டும் ரூ. 4.00 கோடி அதிக செலவாகும். பொங்கல் பரிசையும் சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு வழங்கியுள்ளது. இத்தனை செலவினங்களையும், சொத்துவரியின் மூலம் கிடைத்த அதிக வருவாயின் மூலம் ஈடு செய்யப்பட்டுள்ளது.

**6. இயற்கையின் சீற்றங்கள் :**

1985-ம் ஆண்டு நவம்பர் திங்கள் பெருமழையில் வெள்ளப் பெருக்கு உண்டானது. சென்னையில் உள்ள சாலைகள், கட்டிடங்கள், மழைநீர் வடிகால்கள், தெருவிளக்குகள் பெரிதும் பழுதடைந்தன. மாநகராட்சி தனது அனைத்து துறைகளையும் முடுக்கிவிட்டு அனைத்துப்பணிகளையும் செய்தது.

வெள்ள நிவாரணப்பணிகளுக்காகவும், பாதிக்கப்பட்ட சாலைகள் மற்றும் கட்டிடங்கள் முதலியவற்றை பழுது பார்ப்பதற்காகவும் அரசு ரூ. 15.15 கோடியை மானியமாக வழங்கியுள்ளது.

அரசு ஆணை எண் 32, வருவாய்த்துறை, நாள் 8—1—1986-ல் ரூ. 1,515.44 இலட்சங்கள் மானியமாக சென்னை மாநகராட்சிக்கு வெள்ள நிவாரணப்பணிகளுக்காகவும், நவம்பர் 1985-ல் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட சாலைகள்,



கட்டிடங்கள், மழைநீர் வடிகால்கள், பாலங்கள் முதலியவற்றை பழுது பார்ப்பதற்காகவும், அரசு வழங்கியுள்ளது. அதுபற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

| விவரம். (1) | (ரூபாய் இலட்சங்களில்) (2) |
|---|---|
| 1. இதர சாலைகள் | 300.00 |
| 2. பேருந்து வழித்தடச் சாலைகள் | 574.00 |
| 3. கட்டிடங்கள் | 40.00 |
| 4. மழைநீர் வடிகால்கள் | 435.26 |
| 5. தெரு விளக்குகள் | 75.00 |
| 6. பாலங்கள் / தரைப்பாலங்கள் | 85.32 |
| 7. குப்பைகள் அகற்றுதல் | 4.00 |
| 8. வெள்ள நிவாரணப்பணிகள் (மழை நீர் அகற்றல், உணவு பொட்டலங்கள் வழங்கல் முதலியன). | 0.86 |
| 9. பூங்காக்கள் | 1.00 |
| மொத்தம் | 1,515.44 |

சத்துணவு மையங்கள் பழுதுபார்ப்பதற்கும், குப்பைகளை அகற்றும் பணிக்காகவும், மற்றும் சுகாதாரத்திற்கும் ஒதுக்கப்பட்ட அனைத்து தொகையும் செலவிடப்பட்டுவிட்டது. சாலைகளைப் பொறுத்தவரையில் ரூ. 886.00 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. மற்றைய சாலைகளின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தெரு விளக்குகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 75.00 இலட்சங்களில் ரூ. 16.00 இலட்சங்கள் செலவிடப்பட்டுவிட்டன.

மேற்குறிப்பிட்ட பணிகளோடுகூட சென்னை மாநகராட்சி நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தி அனைத்து பணிகளையும் சரியான நேரத்தில் முடித்தது. வெள்ளத்தில் மூழ்கின மக்களுக்கு சென்னை மாநகராட்சி பள்ளிகளிலும், கல்யாண மண்டபங்களிலும் பாதுகாப்பு அளித்தது. 4 பெரிய கல்யாண மண்டபங்களிலும் வெள்ளப்பாதி பகுதிகளிலும் துயர்துடைப்பு பணிகள் தொடர்ந்து 10 நாட்களாக நடைபெற்றன. தொடர்ந்து உணவு பொட்டலங்கள், பால் வழங்கல் மற்றும் சுகாதார பணிகள் நடைபெற்றன.

14,10,651 உணவுப் பொட்டலங்கள் ரூ. 28.22 இலட்சங்கள் செலவில் வழங்கப் பட்டன. இவற்றுள் 68,610 ரொட்டிகளும் அடங்கும். வெள்ளம் பெருகின பகுதிகளிலிருந்து நீர் குழாய்கள் மூலம் வடிக்கப்பட்டது.

காலரா தடுப்பிற்காக சென்னை மாநகராட்சி மருந்தகங்களில் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. மருத்துவர்கள் சென்னை நகரம் முழுவதும் அனுப்பப்பட்டு துயர் துடைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**7. நான்கு கல்யாண மண்டபங்கள் கட்டுதல் :**

மாநகராட்சியின் வருவாயினைப் பெருக்குவதற்காக வட சென்னையில் இரண்டும் தென் சென்னையில் இரண்டுமாக மொத்தம் நான்கு கல்யாண மண்டபங்கள் ஒவ்வொன்றும் ரூ. 12 இலட்சம் செலவில் கட்ட உத்தேசிக்கப் பட்டுள்ளது. இவை வளர்ந்து வரும் நகர மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகும். இக்கல்யாண மண்டபங்கள் புதிய வசதிகளோடு கூடிய பொருட்களோடு அமைக்கப்பட்டிருக்கும்.

**8. அனுமதியின்றி நடைபாதைகளில் அங்காடி வைப்பதைத் தவிர்த்தல் :**

நடைபாதைகளில் அங்காடிகள் வைப்பதை தவிர்க்கும் பொருட்டு பெரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பெரும்பாலான நடைபாதை கடைகள் அகற்றப்பட்டுவிட்டன. தொடர்ந்து இப்பணி மேலும் நடைபெற்று வருகின்றது.

**9. மின்சார சுடுகாடு :**

மின்சார சுடுகாடு வட சென்னையில் ஒன்றும், தென் சென்னையில் ஒன்றும், ஒவ்வொன்றும் ரூ. 10.00 இலட்சங்கள் செலவில் அமைக்க உத்தேசிக் கப்பட்டுள்ளது.

**10. விளம்பரங்கள் செய்தல் :**

பொது மக்களின் ஒத்துழைப்பின்றி நகரத்தை சுத்தமாக வைத்தல் இயலாது. எனவே, மக்கள் மனதில் பொது சுகாதாரம் குறித்து விழிப் புணர்ச்சி ஊட்டுவதற்காக சென்னை மாநகராட்சி திரைப்படக் காட்சிகள் மூலமாகவும், தொலைக்காட்சிகள் மூலமாகவும், துண்டு பிரசுரங்கள் மூலமாக வும் மற்றும் மின்விளக்கு கம்பங்கள், குப்பைத் தொட்டிகள் முதலியவற்றில் சுகாதாரம் குறித்த வார்த்தைகளை எழுதுவதன் மூலமாகவும் விளம்பரப் படுத்த உத்தேசித்துள்ளது.



## முடிவுரை.

நிர்வாகத்திறமையினை அபிவிருத்தி செய்ய பல நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. மாநகராட்சியின் பராமரிப்புப்பணியினை அபிவிருத்தி செய்வதற்கும், திடக்கழிவு மேலாளுகைத் திட்டத்திற்கும் ஆலோசனைக் குழுமத்தின் பணி உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. பரிசீலனை முடி வடைந்ததும் பரிந்துரையின்படி நிர்வாகச் சீரமைப்பு மேற்கொள்ளப்படும். சொத்துவரி வருமானத்தைப் பெருக்கவும், சிறந்த முறையில் சொத்து வரி வசூல் செய்யவும், ஒரு ஆலோசனைக் குழுமம் அமைக்கப்பட்டு, ஆரம்பக் கட்டப் பரிசீலனை முடிவடைந்துள்ளது. முழுமையான பரிசீலனை விரை வில் முடிவடையும், சொத்துவரி வசூல் மாநகராட்சியின் வரவு செலவுக் கணக்கு, ஊழியர்களின் ஊதியக்கணக்கு இவைகளை 'கம்ப்யூட்டர்' மூலம் கணக்குவைக்க அரசு அனுமதியளித்துள்ளது. இதன் ஆரம்பக்கட்ட செலவை உலக வங்கி மேற்கொள்கிறது. பிறகு ஆகும் செலவை மாநக ராட்சியே மேற்கொள்ளும்.

மாநகராட்சியின் சொத்து வரி, பிற வரிகள், வருமானங்களை பெருக்க மாநகராட்சி தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. ஆனாலும் இந்த அதிகரித்துள்ள வருமானம், அதிகரித்துவரும் நிர்வாகச் செலவு, பொருட்களின் விலை உயர்வு, முதலியவற்றுக்கு ஈடு கட்ட இயலாமை யால் மாநகராட்சியின் நிதி நிலை பற்றாக்குறையாகவே உள்ளது. பராமரிப் புச்செலவு இனங்களை குறைத்துக் கொண்டு பற்றாக்குறை மிகக் குறைவான அளவிலேயே நிலை நிறுத்தப்பட்டு வருகிறது. மாநகராட்சியின் நிதி பற்றாக்குறையின் காரணமாக சாலைப் பராமரிப்பு, தெரு விளக்குப் பராமரிப்பு, துப்புரவுப் பணி ஆகிய இனங்களில் கூடுதலான ஊழியர்களை நியமிக்க முடியாத நிலை உள்ளது. பெருவாரியான மூலதனச் செலவினங் களுக்கு அரசின் நிதியுதவியையே மாநகராட்சி தொடர்ந்து நாடி வருகிறது. மாநகராட்சியின் நிதி நிலையை மேம்படுத்த அரசு ஆவன செய்து வருகிறது.

சென்னை பெருநகரின் தூய்மை, வளர்ச்சி தொடர்பான குறைகளை களைவதற்காகவும், மேம்பாட்டு பணிகளைத் தொடர்ந்து கண்காணிப்பதற் காகவும் சென்னை பெருநகர் மேம்பாட்டுக்குழு ஒன்று முதலமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுமத்தில் மாநில அரசு உயர் அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் இடம் பெற்றுள்ளனர். இந்தக் குழு மாதம் ஒரு முறை கூடி முக்கியமான தீர்மானங்களையும், சென்னை நகரின் முன்னேற்றத்திற்கான நல்ல பலதிட்டங்களைப்பற்றியும் தக்க பரிந்துரைகள் செய்யும்.

## மதுரை மாநகராட்சி.

மதுரை நகராட்சி 1—5—1971-ல் மாநகராட்சியாக் உயர்த்தப்பட்டது. 1961-ம் ஆண்டு ஜனத்தொகைக் கணக்குப்படி 4,24,810 ஆக இருந்த மக்கள் தொகை 1985-ல் 9,03,140 ஆக உயர்ந்துள்ளது. (ஆண்கள் 4,56,988—பெண்கள் 4,46,152). இதில் புதிதாக்ச் சேர்க்கப்பட்ட 13 கிராமங்களில் உள்ள மக்கள் தொகையும் அடங்கும். எனவே, மக்கள் தொகைப் பெருக்கம் கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது. மாநகராட்சியின் மொத்தப் பரப்பளவு 51.85 சதுர கிலோமீட்டர் ஆகும்.

தன்னுடைய குறைந்த வருமானத்தைக் கொண்டு, மதுரை மாநகராட்சியால் அபிவிருத்தித் திட்டங்களுக்கான செலவுகளையும் மக்களின் நலனுக்குரிய தேவைகளையும் ஈடு செய்ய இயலாமல் உள்ளது. பெரும் வளர்ச்சித் திட்டங்களை எடுத்துக் கொள்ள மாநில மற்றும் மத்திய அரசுகளின் நிதி உதவி தேவையாக உள்ளது.

### முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம்.

மதுரை நகருக்குள், அரசு முழு நிதி உதவியுடன், முதலமைச்சர் சத்துணவுத் திட்டம், மதுரை மாநகராட்சியால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### பயன் தரும் இனங்கள்.

1. சந்தைகள் மற்றும் அங்காடி மையங்கள் :

சொக்கிகுளம், பீபீகுளம் மற்றும் கிருஷ்ணாபுரம் காலனி பகுதி மக்களின் நலனுக்காக ரூ. 5 இலட்சம் செலவில், வருமான வரி அலுவலக சாலையில் உள்ள மாநகராட்சி இடத்தில் சந்தை ஒன்று கட்டுவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது.

கோரிப்பாளையம் தேவர் சிலை அருகில் ரூ. 5 இலட்சம் செலவில் கூடுதலாக அங்காடிகள் மையம் ஒன்றும் கட்டப்படும்.

2. பேருந்து நிலைய அபிவிருத்திப் பணிகள் :

ரூ. 43 இலட்சம் செலவில் அண்ணா பேருந்து நிலையத்தின் தெ[illegible] பகுதியில் தரைதளத்தில் கடைகளும், முதல் தளத்தில் தங்கும் அறைகளும் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.





### கல்வி.

(அ) ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் :

மாநகராட்சியால் தற்சமயம் 58 ஆரம்பப் பள்ளிகளும், 12 நடுநிலைப் பள்ளிகளும் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பள்ளிகளில் சுமார் 30,719 மாணவர்கள் படிக்கிறார்கள். இந்த 70 ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 21 ஆரம்பப் பள்ளிகள் வாடகைக் கட்டிடத்திலுள்ளது. பள்ளிகளின் சில வகுப்பறைகள் கீற்றுக்கூரை செட்டுகளிலும் உள்ளன. அரசு 1986-87-ம் வருட பகுதி 2 திட்டத்தின் மூலம் ஆரம்பப் பள்ளிகளுக்கு கூடுதல் இடங்கள் கட்டுவதற்கு ரூ. 10 லட்சம் ஒப்பளிப்பு செய்ய உத்தேசித்துள்ளது.

(ஆ) உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி கட்டிடங்கள் கட்டுதல் :

பெரும்பாலான மாநகராட்சிப்பள்ளிகள், மிகப் பழமையான கட்டிடங்களில் உள்ளன. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாநகராட்சி நிதியிலிருந்து ரூ. 15 இலட்சம் செலவில் கூடுதலான கட்டிடங்கள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### பொது சுகாதாரம்.

(அ) மகப்பேறு மனைகள் மற்றும் மருந்தகங்கள் :

வில்லாபுரம், பெத்தானியாபுரம், கீரைத்துறை மற்றும் புதூர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலனுக்காக, அப்பகுதிகளில் மகப்பேறு மனைகள் கட்டுவதற்கு பிரேரணைகள் உள்ளன.

(ஆ) மின்மயானம் அமைத்தல் :

அரசு பொதுப்பணித்துறை வசம் ரூ. 25 லட்சம் செலவில் மின்மயானம் கட்டும் பணி ஒப்படைக்கப்பட்டு, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. இப்பணிக்காக அரசு ரூ. 10 லட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

## மாநகராட்சிப் பணிகள்.

1986-87-ம் ஆண்டில் மாநகராட்சியால் செய்யப்படவிருக்கும் குடிநீர் விநியோகப் பணிகள் விபரம் பின்வருமாறு :—

1. பாதுகாக்கப்பட்ட குடிநீர் மெயின் பதித்தல் :

நகரின் வெவ்வேறு பகுதிகளில் ரூ. 7.50 லட்சம் மதிப்பில் 10,000 மீட்டர் நீளத்திற்கு குடிநீர் விநியோக மெயின்கள் 1986-87-ம் ஆண்டில் பதிக்கப்படும்.

2. கிணற்று நீர் மெயின்கள் பதித்தல் :

ரூ. 6 லட்சம் செலவில் 12,000 மீட்டர் நீளத்திற்கு கிணற்று நீர் விநியோக மெயின்கள் பதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. ஆழ் குழாய்க்கிணறுகள் அமைத்தல் :

எட்டு அங்குல ஆழ்குழாய்க் கிணறு 20-ம் மற்றும் ஆறு அங்குல ஆழ்குழாய்க் கிணறு 30-ம் ரூ. 19.50 லட்சம் மதிப்பில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4. பொதுக் குழாய்மேடை கட்டுதல் :

இவ்வாண்டில் (1986-87) 500 பொதுக் குழாய்மேடைகள் கட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### வடிகால்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன :—

1. இஸ்மாயில்புரம் சாக்கடைத் திட்டம் :

உப-பகுதி 1-ல் 25 மீட்டர் நீளத்திற்கு தீவி ஆர்ஜிதம் மற்றும் உப பகுதி 2-ல் 560 மீட்டர் நீளத்திற்கு பனையூர் வாய்க்கால் மற்றும் குறுகலான தெருக்களில் மெயின் அமைத்தல் ஆகியவை தவிர ஏனைய பணிகள் பெரும்பாலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் முடிக்கப்பட்டு உள்ளது. ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. அவனியாபுரம் சாக்கடைத் திட்டம் :—

உப்பங்கழி (Lagoons) கட்டுதல் மற்றும் பம்ப்செட் நிறுவுதல் ஆகிய பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் இவ்வாண்டிற்குள் முடிக்கப்படும்.

சேர்க்கப்பட்ட மற்றும் விடுபட்ட பகுதிகளில் சாக்கடை திட்டத்தின் மூலம் கழிவுநீர் சம்பந்தப்பட்ட பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

நகரின் பல்வேறு பகுதிகளில் ரூ. 7.31 கோடி செலவில் கூடுதலான மழைநீர் வடிகால் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வேலைக்குரிய ஆய்வுப்பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### சாக்கடை.

மாநகராட்சியால் 1986-87 ஆண்டில் பின்வரும் சாக்கடைப் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

1. இருபது லட்சம் செலவில் 10,000 மீட்டர் நீளத்திற்கு திறவை சாக்கடை கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

2. நகரின் விடுபட்ட பகுதிகளில் ரூ. 3 லட்சம் மதிப்பில் 1,500 மீட்டர் நீளத்திற்கு பாதாளச் சாக்கடை கட்டும் பணியும் மேற்கொள்ளப்படும்.

### மின்சாரம்.

மாநகராட்சி மின் விநியோக உரிமையுள்ள பகுதிகளில் தற்சமயம் மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் தெரு விளக்குகளின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | |
|---|---|
| 1. சோடியம் ஆவி விளக்குகள் | 1,151 |
| 2. மெர்குரி ஆவி விளக்குகள் | 1,85 |
| 3. குழல் விளக்குகள் | 12,45 |
| 4. மற்ற விளக்குகள் | 1,3[illegible] |
| மொத்தம் .. | 16,761 |

இது தவிர, 3,926 தெரு விளக்குகள் அருகில் உள்ள இணைக்கப்பட்ட பகுதிகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

நகரின் முக்கியமான பகுதிகளின் பிரகாசத்தை மேம்படுத்த மேற்கொண்டு ரூ. 18 லட்சம் மதிப்பீட்டுத் தொகையில் 50 சோடியம் ஆவி விளக்குகள் 500 மெர்க்குரி ஆவி விளக்குகள், 400 குழல் விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

## சாலைகள் மற்றும் பாலங்கள்.

**சாலைகள் :**

மதுரை மாநகராட்சியால் தற்சமயம் 474.635 கிலோ மீட்டர் நீளத்திற்குரிய சாலைகள் பின்வருமாறு பராமரிக்கப்பட்டு வருகிறது :—

| | |
|---|---|
| 1. சிமிண்ட் கான்கிரீட் சாலைகள் | 4.190 கி.மீ. |
| 2. தார்ச் சாலைகள் | 238.364 கி.மீ. |
| 3. டபிள்யு.பி.எம். சாலைகள் | 83.276 கி.மீ. |
| 4. செம்மண் சாலைகள் | 55.616 கி.மீ. |
| 5. கல்தளம் பதிக்கப்பட்டுள்ள சந்துகள் | 51.739 கி.மீ. |
| 6. கல்தளம் சிமின்ட் சதுரம் பதித்துள்ள பாதசாரிகளின் நடைமேடை | 41.450 கி.மீ. |

மொத்தம் பராமரிக்கப்பட்டு வருகிற 474.635 கிலோ மீட்டர் சாலையில் மெட்டல் ரோடு மற்றும் செம்மண் சாலைகளில் 25 சதம் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. நகர்ப் பகுதியில் உள்ள தார்ச்சாலைகள் 1980-ம் வருடம் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடந்த சமயம் செப்பனிடப்பட்டுள்ளன. மேற்படி சாலைகளைப் புதுப்பிக்கும் பணிகள் 1986-87-ல் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1986-87-ம் ஆண்டிற்கு சாலை வேலைக்குரிய மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 50 லட்சமாகும். அரசு 1986-87-ம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ. 10 லட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசித்துள்ளது.

**பாலங்கள் :**

அரசினர் மீனாட்சி கலைக் கல்லூரியின் இரண்டு பகுதிகளையும் இணைக்கும் நடைபாதை மேம்பாலம் கட்டும் வேலை, பொதுப்பணித் துறை வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வேலைக்கு மதிப்பீட்டின்படி செலவு ரூ. 1.94 லட்சம் பொதுப்பணித் துறைக்கு செலுத்தப்பட்டுள்ளது.

## குடிநீர் மற்றும் வடிகால்.

### மதுரை வட பகுதி குடிநீர் விநியோகத் திட்டம்.

மதிப்பீட்டுத் தொகை ரூ. 96.50 லட்சம்.

ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ. 15.9 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி வேலைகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

குடிநீர் வழங்கல்.—1985-ம் ஆண்டில், மதுரை நகரானது 9.03 லட்சம் மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. அவர்களுக்கு வைகை நதி மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது. தற்போது மதுரை மக்களுக்கு சராசரியாக ஒரு நாளைக்கு 450 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப் படுகிறது. இது தற்போதைய ஒரு நாள் குடிநீர் தேவையான 900 லட்சம் லிட்டர் தேவையில் 50 சதவீதம் பூர்த்தி செய்யும். 900 லட்சம் லிட்டர் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு தற்போதுள்ள நீர் வழங்கும் திட்டத்தில் மேலும் 450 லட்சம் லிட்டர் அதிகமாகத் தேவைப்படுகிறது. மேற்படி குறைவான 450 லட்சம் லிட்டர் பூர்த்தி செய்திட ஒரு விரிவாக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் நிறைவேற்ற ரூ. 32.52 கோடி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மதிப்பீட்டுத் தொகையில் 80 சதவிகிதம் உலக வங்கியில் இருந்து 8.5 சதவிகித வட்டி மற்றும் 25 வருடங்களில் திருப்பிக் கட்டப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் கடன் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கடன் தொகையை 5 வருடங்கள் கழித்து திருப்பிக் கட்ட ஆரம்பிக்கப்படும். மதிப்பீட்டின் எஞ்சிய 20 சதவிகிதம் மாநில அரசால் மான்யமாக வழங்கப்படும். இத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகவும், ஏற்கெனவே உள்ள பழைய மற்றும் புதிய முறைகளுக்கு செயல் முறை மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு மாற்று முறைகளை நீண்ட கால அடிப்படையில் மேற்கொள்ளவும் உள்ளது.

மேற்படி திட்டத்தை நிறைவேற்ற உலக வங்கி கடன் வசதி பெறலாம் என்று குடிநீர் வடிகால் வாரியம் தெரிவித்துள்ள பிரேரணையின் மீது அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

உலக வங்கியால் சிபாரிசு செய்யப்பட்ட நிதி உதவி அளிக்கும் மாதிரித் திட்டம், தண்ணீர் விநியோக விலைவிகிதத்தை உயர்த்துதல், மேற்படி திட்டத்தை செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு ஆலோசனைகளை 31—3—1983 தேதிய ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 483 நீர். ஆணை மூலம் ஏற்றுக் கொண்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

குடிநீர் வழங்கும் திட்டத்தின் உப விதிகளை மாநகராட்சி மன்றம் தனது 25—1—1984 தேதிய 491 நிர். தீர்மானத்தில் அங்கீகரித்துள்ளது.

தற்சமயம் பூர்வாங்கப்பணிகளைக் கவனிப்பதற்கு 1—1—1986 முதல் தனியாக ஒரு கணக்குப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மின் விநியோகத்தை மேம்படுத்த மேற்கொண்டு 20 டிரான்ஸ்பார்மர்கள் நிறுவவும், ஏற்கெனவே உள்ள 25 டிரான்ஸ்பார்மர்களின் கொள்ளளவை உயர்த்தவும் உத்தேசம் செய்யப்பட்டுள்ளது. மேலும் ஏற்கெனவே இருக்கும் மேல்போக்கி மின் கடத்தி (over head line) மற்றும் பழைய பாதாள கேபிள்கள் ஆகியவற்றை மாற்றம் செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்திற்கு எதிர்பார்க்கும் செலவு ரூ. 36 லட்சமாகும். ஏற்கெனவே உள்ள தெரு விளக்குகளைப் பாராமரிப்பதற்கு ரூ. 12 லட்சம் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

### கோவை மாநகராட்சி.

1986-87-ம் ஆண்டிற்கான கோவை மாநகராட்சியின் பல்வேறு திட்டங்களின் கொள்கை விளக்கக் குறிப்பு :

(1) முன்னுரை :

1981-ம் ஆண்டு கோவை மாநகராட்சி சட்டத்தின்படி கோவை நகராட்சியானது 1—5—1981 முதல் மாநகராட்சியாக உயர்த்தப்பட்டது.

(2) ஆட்சி எல்லை :

இம்மாநகராட்சியானது, கோவை வருவாய் கிராமம் முழுவதும் அடங்கியதுடன், தெலுங்குபாளையம், இராமநாதபுரம், கிருஷ்ணராயபுரம், சங்கனூர், அனுப்பர்பாளையம், புலியகுளம், குமாரபாளையம், சௌரிபாளையம், கணபதி ஆகிய வருவாய் கிராமங்களின் பகுதிகளையும் உள்ளடங்கியுள்ளதாகும்.

கூடுதலாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு முன்னர், கோவை நகரம் நகராட்சியாக இருந்தபொழுது, அதன் பரப்பு 23.5 சதுர கிலோ மீட்டர் ஆகும்.

கீழ்க்கண்ட பகுதிகள் 1—12—1978 முதல் முன்னாள் கோவை நகராட்சியுடன் சேர்க்கப்பட்டது :—

(1) சிங்காநல்லூர் நகராட்சி (முழுவதும்).
(2) குமாரப்பாளையம் பேரூராட்சி (முழுவதும்).
(3) தெலுங்குபாளையம் பேரூராட்சி (முழுவதும்).
(4) சங்கனூர் பேரூராட்சி (முழுவதும்).
(5) கோயம்புத்தூர் ஊரக நகராட்சி.
(6) வெள்ளக்கிணறு பேரூராட்சி (ஒரு பகுதி மட்டும்).
(7) கணபதி பேரூராட்சி (முழுவதும்).



இவ்விதமாக நகராட்சியின் எல்லை 23.5 சதுர கிலோ மீட்டரிலிருந்து 105.60 சதுர கிலோ மீட்டர்களாக அதிகரிக்கப்பட்டது.

(3) மக்கள் தொகை :

1971-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி பரப்பளவு அதிகரிப்பிற்கு முன்னர் மக்கள் தொகை 3,58,083 ஆக இருந்தது.

1981-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மாநகராட்சியின் மக்கள் தொகை 7,04,514 ஆகும்.

(4) நிர்வாகம் :

மாநகராட்சி தனி அதிகாரியினுடைய ஆட்சிக்குட்பட்டு ஆணையாளர் அவர்களின் நிர்வாக செயல்பாட்டின்கீழ் உள்ளது.

(5) நிதி :

புதிய பகுதிகளின் சேர்க்கையால் 4 மடங்கு பரப்பளவும் மற்றும் மக்கள் தொகையும் அதிகரித்த போதிலும் அதற்கேற்றவாறு நிதி வரவு பெருகவில்லை. இருப்பினும் இத்தகைய குறைந்த நிதி நிலையிலும் 1986-87-ம் ஆண்டில் கீழ்க்கண்ட நிர்வாக துறைகளில் மாநகராட்சி, நகர வளர்ச்சிக்கு பல்வேறு திட்டங்களை உருவாக்கி உள்ளது.

(6) முதலமைச்சரின் கல்வி-சத்துணவுத் திட்டம் :

முதலமைச்சரின் சத்துணவுத் திட்டமானது, 1982-ம் ஆண்டில் இருந்து 2 வயது முதல் 4 வயதிற்குள் இருக்கும் குழந்தைகளுக்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. தினசரி இத்திட்டத்தின்கீழ் 27,218 குழந்தைகள் பயன்பெறுகிறார்கள். இம்மாநகராட்சியில் 396 சத்துணவு மையங்கள் உள்ளன. இந்த மையங்கள் இதற்கென மாநகராட்சியால் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களில் நடைபெறுகின்றன. இது தவிர இம்மையங்களினால் 928 முதியவர்களும் பயனடைகிறார்கள்.

இதுபோல் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் 5 வயது முதல் 9 வயது முடிய, மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் 10 வயது முதல் 14 வயதுவரை உள்ள மாணவர்கள் பயன் அடைகின்றனர். நகராட்சி இயக்குநர் அவர்களின் நிர்வாகத்தின்கீழ் இத்திட்டம் நடைபெறுகிறது. இத்திட்டத்தினால் 35,957 பள்ளி மாணவர்கள் பயன் பெறுகிறார்கள். இத்திட்டத்திற்காக மாநகராட்சியால் 95 மையக் கூடங்கள் கட்டப்பட்டு அதில் செயல்பட்டு வருகிறது.

(7) சாலைகள் :

கீழ்க்கண்ட வகைகளில் மாநகராட்சி 450.108 கிலோ மீட்டர் நீள சாலைகளைப் பராமரித்து வருகிறது :—

| | கி. மீ. |
|---|---|
| 1. சி.சி. ரோடுகள் உட்பட பி.டி. சர்பேஸ் ரோடுகள் மற்றும் சந்துகள் | 387.227 |
| 2. கல்ரோடுகள் | 55,563 |
| 3. மண்ரோடுகள் மற்றும் கல்பதிக்காத ரோடுகள் | 7.318 |
| மொத்தம் .. | 450.108 |

1986-87-ம் ஆண்டில் 100 கிலோ மீட்டர் நீளமுள்ள ரோடுகளை கல்ரோடுகளாகவும் தார் ரோடுகளாகவும் அமைத்து பராமரித்து வர திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 1986-87 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் ரூ. 180.00 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. சாலைகளை பராமரிக்க மேலும் அதிகத் தொகை தேவையாக இருப்பினும், குறிப்பாக புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளில் பராமரிப்பு தேவைகள் அதிகமாக இருப்பினும், நிதி பற்றாக்குறையால் அதிகத் தொகை ஒதுக்கீடு செய்ய இயலாத நிலை உள்ளது.

மாநில 1986-87-ம் இரண்டாம் பகுதி திட்டத்தின்படி புதிதாக சேர்க்கப்பட்ட பேரூராட்சி பகுதிகளில் சாலைகள் அமைக்கும் பணிக்காக ரூ. 5.00 லட்சங்கள் கடனாக வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

தனியார் வீட்டு மனைப்பகுதிகளில் சாலைகள் மற்றும் சாக்கடைப் பணிகளின் வளர்ச்சிக்காக மாநகராட்சியால் அமைக்கப்பட்ட சுழல் நிதி, 1986-87-ம் நிதி ஆண்டிலும் தொடர்ந்து அமுல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின்கீழ் சாதாரண காலங்களிலும், மழைக் காலங்களிலும் சாக்கடை பராமரிப்பு வசதி செய்வதோடு, ஆண்டுதோறும் சராசரி 15 கி.மீ. நீளமுள்ள சாலை அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது.

(8) கல்வி (ஆரம்பக் கல்வி) :

இம்மாநகராட்சி, வெவ்வேறு பகுதிகளில் தொடர்ந்து 63 ஆரம்பப் பள்ளிகள் மற்றும் 14 உயர் ஆரம்பப்பள்ளிகள் ஆகியவற்றை நடத்தி வருகிறது. இப்பள்ளிகளில் 42,090 மாணவ மாணவிகள் படித்து வருகிறார்கள். 1986-87 ஆம் கல்வி ஆண்டில் கூடுதலாக மாணவர்கள் சேருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பள்ளிகளில் 1,331 ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள்.



(2) 77 ஆரம்ப மற்றும் உயர் ஆரம்பப் பள்ளிகளில் 28 பள்ளிகளில் போதுமான இடவசதி இல்லை. 28 பள்ளிகளுக்கும் 207 கூடுதல் வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. அரசு நிதி உதவி கிடைப்பதால்தான் இக்கூடுதல் இடவசதி செய்ய முடியும். இருப்பினும், கூடுதல் இட வசதிக்காகவும், இருக்கும் கட்டிடங்களை பராமரிப்பதற்காகவும் 1986-87 மாநகராட்சி வரவுசெலவு திட்டத்தில் ரூ. 6 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

(3) கல்வி வரி, அரசு மான்யம் மற்றும் பொது நிதியில் இருந்து பெறும் தொகை ஆகியவற்றில் இருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய் 123,45 லட்சத்திலிருந்து, ஆசிரியர் மற்றும் பள்ளிகளில் பணியாற்றும் ஊழியர்களின் சம்பளம் மற்றும் இதர படிகளுக்காகவும் மற்றும் சாதாரண செலவினங்களுக்காகவும், வரவுசெலவு திட்டத்தில் ரூ. 191.50 லட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆரம்பக்கல்வி நிதி கணக்கு ரூ. 191.50 லட்சம் பற்றாக்குறை தொகை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பற்றாக்குறை தொகை ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அரசு ஆணை எண் 648, நாள் 31—3—1973-ன்படி அரசு பற்றாக்குறை மான்யம் அனுமதித்த பின்னர் சரிக்கட்டப்படும்.

(9) கல்வி—உயர்நிலை மற்றும் மேல்நிலை :

இம்மாநகராட்சி 9 மேல்நிலைப்பள்ளிகள், 13 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் ஒரு காது கேளாதோர் மற்றும் ஊமையர்பள்ளி ஆகியவற்றை நிர்வகிக்கிறது. மேல் நிலைப்பள்ளிகளில் 12,184 மாணவ, மாணவிகளும் உயர்நிலைப்பள்ளிகளில் 6,127 மாணவ, மாணவிகளும் கல்வி பயின்று வருகின்றனர். ஊமையர் மற்றும் காது கேளாதோர் பள்ளியில் 200 மாணவிகளைக் கொண்ட ஒரு விடுதியை மாநகராட்சி நிர்வகித்து வருகிறது.

கோவை மாநகராட்சி பள்ளிகளில் 749 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். வரும் கல்வி ஆண்டில் கீழ்க்கண்ட நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

(1) மரக்கார நஞ்சப்ப கவுண்டர் வீதி நடுநிலைப்பள்ளி.

(2) மசக்காளிபாளையம் நடுநிலைப்பள்ளி.

(2) மூன்று உயர்நிலைப்பள்ளிகளில் 24 கூடுதல் வகுப்பறைகளைக் கட்டுவதற்கும் மற்றும் எஸ்.ஆர்.பி. அம்மணி அம்மாள் மகளிர் உயர்நிலைப்பள்ளியிலும் இராமகிருஷ்ணாபுரம் மகளிர் மேல் நிலைப்பள்ளியிலும் அறிவியல் கூடங்களை கட்டுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 16.50 லட்சம். நிதி நிலையை அனுசரித்து இப்பணிகள் மேற்கொள்ளப்படும். இப்பணிகளுக்காகவும், இருக்கும் பள்ளிக் கட்டிடங்களின் பராமரிப்பிற்காகவும் 1986-87 வரவு செலவுத் திட்டத்தின்கீழ் ரூ. 4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவசிய மேற்படின் 1986-87 திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் அதிகத் தொகை ஒதுக்கப்படும்.

(3) மாநகராட்சிக்கு பிரிட்டிஷ் ஒலிபரப்பு நிறுவனம், தேசிய கல்விக் கழக ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் மூலமாக இரண்டு கம்ப்யூட்டர்களை நன்கொடையாக அளித்துள்ளது. ஆர். எஸ். புரம் ஆண்கள் மேல் நிலைப் பள்ளிக்கு இக்கம்ப்யூட்டர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றின் மதிப்பு ரூ. 2 லட்சம் ஆகும். இந்தக் கம்ப்யூட்டர்கள் 9—10-ம் வகுப்பு மாணவர்கள் மற்றும் +2 வகுப்பு மாணவர்கள் ஆகியோருக்கு பெரிதும் பயன்படுகின்றன.

நடப்புக் கல்வி ஆண்டில் ரூ. 367.81 லட்சங்கள் உயர்நிலை, மேல்நிலை மற்றும் காது கேளாதோர் பள்ளிகளுக்காக கட்டிடப் பணிகளைத் தவிர, செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

10. குடிநீர் விநியோகம் :

கோவையிலிருந்து 80 கிலோ மீட்டர் தொலைவில் கேரள மாநிலத்தில் உள்ள சிறுவாணி ஆற்றிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் 1934 ஆம் ஆண்டு முதல் கோவைக்கு விநியோகம் செய்யப்படுகிறது. 1982, ஜூலை மாதம் வரை நாள் ஒன்றுக்கு அதிகபட்ச அளவு 340 லட்சம் லிட்டர் குடிநீர் மட்டுமே முன்பிருந்த கோவை நகரத்திற்கு வழங்கப்பட்டது. தற்பொழுது, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரூ. 21.85 கோடி செலவில் நாள் ஒன்றுக்கு 630 லட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தேவையை அனுசரித்து நாள் ஒன்றுக்கு 1,014 லட்சம் லிட்டர் வரை அதிகரிக்கக்கூடிய நிலை உள்ளது. தற்பொழுது நீர்த்தேக்கத்தில் இருந்து எவ்வித இடையூறுமில்லாமல் ஜூன் 1986 இறுதிவரை நாள் ஒன்றுக்கு 630 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்படும். எதிர் பார்க்கப்படும் மழையால் நீர்த்தேக்க அபிவிருத்தி இருக்கக் கூடும். ஒரு வேளை மழை பெய்யாது மோசமான நிலை ஏற்பட்டாலும் கூட மேலும் ஒரு மாதத்திற்கு நீர்த்தேக்கத்தில் உள்ள நீர் இறைக்கப்பட்டு பருவ மழை பெய்யும் வரை நகரத்திற்கு வழங்க இயலும். குடிநீர் சுமார் 500 கி.மீ. நீளமுள்ள குழாய்கள் மூலமாக விநியோகம் செய்யப்படுகிறது. குடிநீர் கிடைக்காத, தேவைப்படும் பகுதிகளில் மாநகராட்சி லாரிகள் மூலமாக விநியோகிக்கப்படுகிறது. மாநகராட்சியின் எல்லைக்குள் தற்போது 34,000 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புக் குழாய்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 784 பொதுக் குடிநீர்க் குழாய்களும் அமைக்கப்பட்டுள்ளன. சிறுவாணி குடிநீர் விநியோகம், ஸ்டீல் டேங்குகள் மூலமாக மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. அல்லது எங்கெங்கு சாத்தியமோ அந்த இடங்களில் தற்காலிக பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் அளிக்கப்படுகிறது. கணபதி, சிங்காநல்லூர், பீளமேடு, ஒண்டிப் புதூர் வரதராஜபுரம், பாப்பநாயக்கன்புதூர், வேங்கட்டாபுரம், வேலாண்டிபாளையம், இரத்தினபுரி, குமாரபாளையம் பகுதிகளில் வீட்டுக் குடிநீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்ட பகுதிகளில் மின்சார மோட்டார் பம்பு செட்டுகள் பொருத்தப்பட்ட 250 ஆழ் குழாய் கிணறுகளும், திறந்த கிணறுகளும் உள்ளன. இவைகளில் போதுமான தண்ணீர் உள்ளது.

சிறுவாணித் திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகத்தை அமுல்படுத்த, மாநகராட்சிக்கு கீழ்க்கண்டவாறு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகக் கடன் | ரூ. 5,00,00,000 |
| அரசுக் கடன் | ரூ. 14,17,00,000 |
| மொத்தம் | ரூ. 19,17,00,000 |

மேற்கண்ட திட்டத்தை நிறைவேற்ற, தமிழ்நாடு குடிநீர் விநியோக வாரியத்தால் தொகை நேரடியாகப் பெறப்பட்டது. இப்பணிகளுடன், பராமரிப்பிற்காகவும் குடிநீர் விநியோக வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய கடனுக்காகவும் உடனடியாக திட்டத்தை நிறைவேற்ற ரூ. 119.27 லட்சம் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அரசு மற்றொரு திட்டத்தின் கீழ் ரூ. 4,110.54 லட்ச செலவில் பவானி ஆற்றிலிருந்து குடிநீர் விநியோகம் செய்ய நிதி அளித்துள்ளது. உலக வங்கித் திட்டத்தின் கீழ் பெறப்படும் இத்தொகையில் ரூ. 17.80 கோடி கோவைக்கு உரியது. இது சம்பந்தமாக தொடக்க ஆய்வுப் பணி நடைபெற்

றது. இப்புதிய திட்டம், பெருகி வரும் மக்கள் தொகையின் குடிநீர் தேவையை நிறைவு படுத்த சிறுவாணி குடிநீர் விநியோகத் திட்டத்திற்கு பேருதவியாக இருக்கும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இரு திட்டங்களுடன், அரசு மற்றும் ஆயுள் ஈப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட கடன் உதவியால் தமிழ்நாடு குடிநீர் வாரியம், குடிநீர் விநியோகத் திட்டத்தை சிங்காநல்லூர், கவுண்டம் பாளையம் மற்றும் சேர்க்கப்பட்ட மாநகராட்சி பகுதிகளுக்கு செயல் படுத்துகிறது.

11. வடிகால் திட்டம்.

கோவை மாநகராட்சி பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதில் சிறுவாணித் திட்டம் முன்னோடியாகத் திகழ்கிறது. நகருக்கு புதை சாக கடைத் திட்டம் தேவைப்படுகிறது. இதற்கு கீழ்க்கண்ட பணிகள் நிறை வேற்றப்படுகின்றன.

கோயம்புத்தூருக்கு 1979 ஆம் ஆண்டில் கழிவு நீர் அகற்றும் சாக்கடைத் திட்டம் உருவாக்கப்பட்டது. அச்சமயத்தில் நகரின் வளர்ச்சி பெற்ற பகுதியானது, தற்போதைய நகர பரப்பளவில் 1/3 பங்காக இருந்தது. கழிவு நீரை வெளியேற்றும் திட்டம் 1954 ஆம் ஆண்டிலிருந்து, கோயமுத்தூர் நகரின் பழைய பகுதிகளான சுக்கிரவாரப்பேட்டை, உப்பிலிபாளையம், அரசு மருத்துவமனைப் பகுதி, சிதம்பரம் பூங்கா பகுதி, ஆட்சியாளர் அலுவலகத்தின் சுற்றுப்புறப் பகுதி, பெரிய கடைவீதி முதலியவற்றில் செயல் படுத்தப்பட்டுள்ளது. ஸ்தல நிர்ணய எல்லை மற்றும் திட்டத்தை அமுல் படுத்தப்படுதல் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு இப்பகுதி பிரிவு I என்று அழைக்கப்பட்டு வருகிறது.

(2) நகரின் வேகமான தொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு ரூ. 597.51 லட்ச செலவில் சாக்கடை நீரை அப்புறப்படுத்த மிகப்பெரிய சாக்கடை திட்டமொன்றினை கோவை மாநகராட்சியில் அமுல் படுத்த நிதி அனுமதித்துள்ளது. மற்றும் கோவை நகரில் பிரிவு 2, பிரிவு 3 ஆகிய பகுதிகளில் சாக்கடை நீர் அப்புறப்படுத்தப்படும் வசதிகளை அளிப் பதற்காக ஆண்டுதோறும் ரூ. 18.75 லட்சம் அனுமதித்துள்ளது.

(3) மேலும் கோவை நகரில் சாக்கடை திட்டத்தில் விடுபட்டுள்ள வட கோயமுத்தூர், இராமலிங்கம் காலனி, முருகன், மில் காலனி, எஸ்.ஆர்.பி. நகர், தபால் மற்றும் தந்தி குடியிருப்புகள், லாலி சாலை, தடாகம் சாலை,



இராபர்ட்சன் சாலை, இராயப்பபுரம், பொன்னையராஜபுரம் மற்றும் செல்வ புரம் ஆகிய பகுதிகளில் சாக்கடை நீர் அப்புறப்படுத்தும் திட்டம் சம்பந்த மாக தேவையான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகிறது. திட்டத்தில் ஏற்பட்ட மாறுதல் மற்றும் விலைவாசிகள் ஏற்றம் ஆகியவைகளை முன்னிட்டு மேலே குறிப்பிட்ட திட்டத்தை ரூ. 750 லட்சங்கள் மதிப்பீட்டில் திருத்தி யமைக்கப்பட்டுள்ளதற்கு அரசு நிர்வாக அனுமதி அளித்துள்ளது.

(4) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செய்யப்படும் உத்தேச செலவினத்துடன் கூடுதலாக மாநகராட்சியால் நேரடியாக தற்போது இருக்கக்கூடிய சாக்கடை பராமரிப்பு, புதியதாக சாக்கடை அமைத்தல் ஆகிய வற்றின் செலவுக்காக 1986—87 ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூபாய் 55 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரிவுகளின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளது :

முதற் பிரிவு :—எல்லா வேலைகளும் முடிக்கப்பட்டு, திட்டம் இயங்கி வருகிறது. இப்பிரிவில் சுக்ரவாரப்பேட்டை, . உப்பிலிபாளையம், அரசு மருத்துவமனை பகுதி. சிதம்பரம் பூங்கா பகுதி, ஆட்சியாளர் அலுவல கத்தை சுற்றியுள்ள பகுதி. பெரிய கடைவீதி ஆகியவைகள் அடங்கி யுள்ளன.

2 வது பிரிவு :—திட்டத்தின் ஒரு பகுதி முடிக்கப்பட்டுள்ளது. மீத முள்ள வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

3 வது பிரிவு :—குழாய் அமைப்பு வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இணைக்கப்பட்ட பகுதிகள் :

இணைக்கப்பட்ட பகுதிகளில் புதை சாக்கடைத் திட்டம் ஏதும் இல்லை. இப்பகுதிகளில் திறந்த வெளி சாக்கடைகள்கூட இல்லை. திறந்தவெளி சாக்கடை வசதி செய்ய ரூ. 600 இலட்சத்திற்கு குறையாமல் செலவு ஏற்பட லாம். நிதி பற்றாக்குறை காரணமாக, இணைக்கப்பட்ட பகுதிகளில் திறந்தவெளி சாக்கடை திட்டம் பல நிலைகளில் அமுல்படுத்த முடியும்.

5. 1—7—1979 லிருந்து சிறுவாணி திட்டத்திற்காக, அரசு மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஆகியவைகளிலிருந்து பெற்ற கடன்களுக்கு அசலும், வட்டியும் செலுத்தப்படவில்லை. குடிநீர் விநியோகம் மற்றும் சாக்கடை வசதி நிதிநிலை மிக மோசமாக உள்ளது. இதைப்போல்

பொதுவாக மாநகராட்சியின் குடிநீர் விநியோகம் மற்றும் சாக்கடை வசதி நிதி நிலையானது மிகவும் மோசமாக இருப்பதால் 1—1—1983 முதல் சாக்கடை வசதிக்காக பெறப்பட்ட கடன்கள் ஆண்டு தோறும் செலுத்தப் படவில்லை. இணைக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் வடிகால் வாரியம் புதிய திட்டங்களை மேற்கொண்டுள்ளன. திட்டங்கள் முழுமையாக மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட காலத்திலிருந்து ஓர் ஆண்டு காலம் வரை கடன் தவணைகளை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க அரசினை வேண்டப் பட்டுள்ளது. இதனால் மாநகராட்சி இத்திட்டத்தினால் விளையும் பயன் களை அனுபவிக்கும் நிலை ஏற்படும். பராமரிப்புச் செலவுகள் மற்றும் திருத்தியமைக்கப்பட்ட செலவு விகிதத்தின்படி எல்லாக் கடன்களையும் ஆண்டு தோறும் திருப்பிச் செலுத்தும் நிதிநிலைமை ஏற்படும்.

12. நகரமைப்பு.

மாநகராட்சி 1986-87 ஆம் ஆண்டில் பல்வேறு பொது நோக்கத் திட்டங் களுக்காக கீழ்க்கண்டவாறு நில ஆர்ஜிதம் செய்ய உத்தேசித்துள்ளது:

| | | |
|---|---|---|
| 1. | பள்ளிகள் | 3 இனங்கள். |
| 2. | சாலை மற்றும் சாலை அகலப்படுத்துதல் | 8 இனங்கள். |
| 3. | வார்டு அலுவலகங்கள் | 1 இனம். |
| 4. | இடுகாடு | 4 இனங்கள். |
| 5. | உரம் தயாரிக்குமிடம் | 1 இனம். |
| 6. | தினசரி மார்க்கெட் | 2 இனங்கள். |
| 7. | பொதுக் கழிப்பிடம் | 1 இனம். |
| 8. | சாக்கடைகள் | 1 இனம். |
| | மொத்தம் | 20 இனங்கள். |

பொது மக்களுக்கு முக்கியமான திட்டங்களாக இருந்த போதிலும் மாநகராட்சியின் மிக மோசமான நிதிநிலை காரணமாக அவைகளை நிறை வேற்ற முடியவில்லை. இருப்பினும் நிதி நிலைமை அனுசரித்து இத் திட்டங்கள் அமுல்படுத்தப்படும்.

நகர அமைப்பு திட்டம் தொடர்பான செயல்கள் உள்ளூர் நகர அமைப்பு அதிகாரியால் கவனிக்கப்படுகிறது.

13. தெரு விளக்குகள்:



1. பழைய புறநகர்ப்பகுதி.

மாநகராட்சி கீழ்க்கண்டவாறு 8,546 தெரு விளக்குகளை தொடர்ந்து பராமரித்து வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | சோடியம் வேப்பர் விளக்கு | 1,031 |
| 2. | மெர்க்குரி விளக்கு | 1,025 |
| 3. | டியூப் லைட் (குழல் விளக்கு) | 6,361 |
| 4. | இதரவகை விளக்குகள் | 129 |
| | மொத்தம் | 8,546 |

1986—87 ஆம் ஆண்டில் நகரின் முக்கிய பகுதிகளில் அதிகப்படியான விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1985—86-ல் அமைக்க உத்தேசிக்கப்பட்ட 20 டிரான்ஸ்பார்மர்கள், முழுவதும் அமைக்க முடிய வில்லை. இவைகள் 1986—87-ல் அமைக்கப்படும்.

1986—87 ஆம் ஆண்டில் மாநகராட்சி பகுதி முழுவதிலும் உள்ள தெரு விளக்குகளை பராமரிப்பதற்கு பொது வரவு செலவு திட்டத்தில் ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இணைக்கப்பட்ட பகுதிகள்:

இம்மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட பகுதிகளிலுள்ள தெரு விளக்கு கள் தமிழ்நாடு மின் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதில் 5,058 தெருவிளக்குகள் உள்ளன. இதில் 1985—86-ல் ஒதுக்கப்பட்ட 396 விளக்குகள் அடங்கும்.

விபரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | சோடியம் வேப்பர் விளக்குகள் | 6 |
| 2. | மெர்க்குரி விளக்குகள் | 57 |
| 3. | டியூப்லைட் (குழல் விளக்கு) | 4,995 |
| | மொத்தம் | 5,058 |

நடப்பு ஆண்டில் கூடுதலாக 1,000 விளக்குகளை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**14. பொது சுகாதாரம்:**

மாநகராட்சியின் வருவாயில் பெரும் பகுதி பொது சுகாதாரத்திற்கும் துப்புரவுப் பணிக்கும் செலவு செய்யப்படுகிறது. இதற்காக 1986—87 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ. 328.54 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. பொது சுகாதார துறையில், மருத்துவ அதிகாரிகள், மேற்பார்வைப் பணியாளர்கள், மற்றும் 1,708 துப்புரவுப் பணியாளர்கள் உட்பட 2,026 பணியாளர்கள் உள்ளனர். இருப்பினும், நகரத்தின் மிக அதிகமான மக்கள் தொகை மற்றும் அதிகப் பரப்பளவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கும் பொழுது நகரத்தை சுத்தமாகவும் அழகாகவும் வைத்துக் கொள்ள தற்போதுள்ள பணியாட்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. மாநகராட்சியின் மிகக் குறைந்த நிதி நிலை காரணமாக அதிகப்படியான நிதி இதற்கு ஒதுக்கப்பட முடியவில்லை.

கொசுத் தொல்லையை ஒழிப்பதற்காக ரூபாய் 16.70 லட்சம் செலவில் கொசு ஒழிப்புத் திட்டத்தைத் திருத்தி அமைக்க மக்கள் நல்வாழ்வு மற்றும் தடுப்பு மருந்துகள் இயக்குநர் மூலமாக அரசிடம் செயல் திட்டங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

முன்னர் கண்ட பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 328.54 இலட்சத்துடன், மேலும் துப்புரவுப் பணியாளர் குடியிருப்புகள், கழிவிட வசதிகள் நவீனக் கழிவிடங்கள் கட்டுதல், பொது சுகாதாரம் மற்றும் மருந்தக கட்டிடங்கள் பராமரிப்பு ஆகியவைகளுக்காக ரூ. 15 இலட்சம் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

1986—87-ல் பாப்பநாயக்கன்பாளையத்தில் ரூ. 16.00 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 'மின் தகனம்' (Electrical Crematorium) ஒன்று நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. மின் தகனத்திற்கான பர்னர் (Burner) மற்ற கருவிகள் அனைத்தும் இலவசமாக வழங்க, நகரில் உள்ள அனைத்து சுழற் சங்கங்கள் (Rotary Clubs) அன்புடன் இசைந்துள்ளனர். கட்டடத்தின் கட்டுமானச் செலவு மட்டும் ரூ. 5.90 லட்சம் ஆகும். இது மாநகராட்சி நிதியில் இருந்து செலவிடப்படும்.

மேலும் மாநிலத்திட்டம் பகுதி 2-ன் கீழ், 1985—86 ஆம் ஆண்டில் சொரியம் ... மின் தகனம் அமைக்க அரசு கடனாக ரூ. 10.00 லட்சம் வழங்க அனுமதித்துள்ளது.



**15. இதர அம்சங்கள்:**

மாநகராட்சி, மறைமுக வரிகளின் மூலமாக தன் நிதி நிலையைப் பெருக்கிக்கொள்ள, கீழ்க்கண்ட வருவாய்த் திட்டங்களை 1986—87 ஆம் ஆண்டில் செயல்படுத்த தன் சொந்த நிதியைப் பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

(1) காந்திபுரம் நகரப் பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்குமிடம், கடைகள் அமைத்தல். ரூ. 22.50 லட்சம்.

(2) சிங்காநல்லூரில் தினசரி மார்க்கட் அமைத்தல். ரூ. 3.20 லட்சம்.

(3) வரதராசபுரத்தில் திருமண மண்டபம் அமைத்தல். ரூ. 3.00 லட்சம்.

(4) ஒப்பணக்கார வீதியில் கடை மையம் அமைத்தல். ரூ. 3.00 லட்சம்.

மேலும் ரூ. 6.50 இலட்சம் செலவில் மேட்டுபாளையம் ரோடுக்கும் (மாநிலப் பெருவழி) சங்கனூர் பள்ளத்திற்கு அருகில் உள்ள கணபதி சங்கனூர் ரோடுக்கும் இடையில் ஓர் இணைப்புப் பாதை அமைப்பதற்கும், ஒரு லெவல் கிராசிங் அமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

143554
சென்னை-600 008
D
V211,32'N86
...4.3-4